உ

சனகாபுரம்

பவணந்திமுனிவர்செய்த

நன்னூல் மூலமும்

இயற்றமிழாசிரியர்

திருத்தணிகை

விசாகப்பெருமாளையரவர்க ளியற்றிய

காண்டிகையுரையும்

திருநெல்வேலி

சங்கர நமச்சிவாயப் புலவரியற்றி

திருவாவடுதுறையாதீனம்

சிவஞானசுவாமிகள் திருத்திய

விருத்தியுரையும்.

இவை

தொண்டைமண்டலம் ஆங்கிலோ வெர்னக்குலர்

கல்விச்சாலை பிரின்ஸிபல்

திருமயிலை - தெய்வசிகாமணிமுதலியாரவர்களாலும்,

திருமயிலை-வித்வான்

சண்முகம்பிள்ளை யவர்களாலும்

மேற்கோளுடன் விசேடக்குறிப்புகளும்

அமைத்துப் பரிசோதிக்கப்பட்டு

ப. மு. செல்வராஜமுதலியாரவர்களால்

தமது

சென்னை அமெரிகன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

(Copyright Reserved.)

இதன்விலை-ரூபா-உ.

1889.

பதிப்புரை

இந் நூலாசிரியர் சனகாதியர்த்தின் சன்மதிமுனிவர் குமாரர். பவணந்தி யென்னும் நாமத்தினையுடையார். அவரால் தொல்காப்பியமென்னும் இலக்கணத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் கருத்தையே தழுவிச் சூத்திரிக்கப்பட்ட இந் நன்னூலுக்கு, பாணினி சூத்திரத்திற்குப் பதஞ்சலியார் மாபாடிய மருளிச்செய்தாங்குப் பலவுரைகள் முன்னும்பின்னும் வரையப்பட் டிருப்பினும், சீகாழி மேவிய குருநமச் சிவாய-தேவன் வழிவருஉந் திப்பியகுரு மூர்த்தி-அம்பல வாண னடிமலர்ப் பத்திமை-சாமிநாததேசிகன் றண்ணருள் பெறூஉம் - பதுமத்தி னென்றும் பணிலமுத் துயிர்க்கும்- பாருகை யுடுத்த பொருவில்சீர் நெல்லைச்- சங்கர நமச்சி வாயனுந் தண்டமிழ்ப் - புலவர் பெருமான் புகன்றதோர் விருத்தி - யுரையே நந்தெனவிளங்கிக்கிடப்ப- தற் ... தா ராயிடை யொருவருமிலரோ. ... துரையிட்டார், அவ்வான்ன வுரையை ஆங்காங்குத் திருத்திப் ... கிய ஸ்ரீசிவஞான முனகுலதெய்வமெனப்படும் திராவிடபாஷியகாரராக., ... தேர்ந்த யோகிகள் என்பது வரலாற்றுமுறைமையிற் செந்தமிழியல வழூந்தமிழ்க் கவிஞரென்பார் யாவரும் உச்சிமேற் கொண்டுரைக்கும் நிதரிசனமேயாம். ஆகவே,

இன்னவுரையை இற்றைக்கு முப்பத்தைந்துவருடத்தின் முன்னர் இவற்றமிழாசிரியர் திருத்தணிகை - ஸ்ரீவிசாகப்பெருமாளையரவர்களியற்றிய காண்டிகை யுரையுடன் அவர்பாற் கல்விபயின்ற ஸ்ரீசந்திரசேகரகவிராச பண்டித ரவர்களும்; மேற்கண்ட விருத்தியுரை யொன்றுமே சித்தாந்தபானுவாகிய யாழ்ப்பாணநல்லூர்- ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும் முறையே யச்சிட் டிருப்பினும், அப்பிரதிகளிற் காண்டிகையுரையும், விருத்தியுரை முதலியவைகளும் ஒன்றோடொன்று அளவளாய்ச்சிக்குப்பட்டுக் கற்றோரும் மயக்கமுறும்படி யிருக்கின்றமையை யுணர்ந்து, கற்றோயன்றி மற்றோரும் தெள்ளிதினுணரும் வண்ணம், இப்பிரதிரூபத்தில் அவைகளுள்

ஒவ்வொன்றையும் வரையறுத்துக்காட்டியும், நூதன விவேகி சந்தியால் மயக்கமுறுதலை நோக்கி அச்சந்திகளைப் பிரித்தும், அதிலுள்ள பிழைகளைப் பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்துக் களைந்துமிருக்கின்றோம்.

இதன்றியும் விசேடித்துக் காட்டவேண்டிய அமிசங்களுக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், சிவஞானமுனிவர் முதலிய உரையாசிரியர்கள் விளக்கிய சில முக்கிய விசேடக்குறிப்புகளை ஆங்காங்கு அவ்வப்பக்கங்களினடியிற் சேர்த்தும், இயற்றமிழாசிரியர் முகவை - ஸ்ரீஇராமாநுசகவிராயரவர்கள் எழுதிப் பதித்த ஐந்தாண்டிகை யுரையிற் கொள்ளத்தக்கனவாகிய சில விசேடக் குறிப்புகளை அவ்வாறே சேர்த்தும், உரையாசிரியர் ஆங்காங்கு நிரட்டிய உதாரணச் செய்யுள்கள் சிவஞானச்செல்வர் சிந்தையினிலாவிய சிவஞானயோகிகள் சேவடித்துணையே துணையாகக் கொண்டு, எம்பாற் கிடைக்கப்பெற்ற சிந்தாமணிமுதலிய இலக்கியங்களினும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலியவற்றினும் இன்னநூலினின்றும் மேற்கோளாகக் கொள்ளப்பட்டவை யென்று அவ்வாறே அவ்வப்பக்கங்களினடியிற் குறிப்பித்தும் அச்சிட்டிருக்கின்றோம். இதுகிடக்க,

'இதுவுமது' வென்னுங் குறிப்பாகவே சிற்சில சூத்திரங்களினடியிற் கிடக்கின்றனவற்றை அவ்வச் சூத்திரப் பொருள்கேளாமாறு அஃதின்னகிளவியெனக் கூறுங் கூற்றை ஆங்காங்கு விரித்துச் சேர்த்தும், அவ்வாறே உதாரண உரைகள் பல ஒருதொடராவே பொதிந்து கிடந்தனவற்றை உரையாசிரியர் கருத்திற்கேற்பக் குறிப்பிட்டு விளக்கியு மிருக்கின்றோம்.

6 சான்றோர் செய்தநூலைச் செய்தபடியே பதிப்பிப்போர் அதனைப் பொன்னேபோற் பொதிந்து அதில் ஓரக்கரமேனும் மாறுபடாது அச்சிடுதல் கடனாகுமென்பது முறையாயினும், இவ்வாறு பிளவுபடுக்கவும், சேர்க்கவும் புக்கது சர்வகலாசாலைகளிலும், வித்யாசாலைகளிலும் கல்விகற்கும் மாணாக்கர்கள் தத்தம் சென்னை யூனிவெர்ஸிடி பரீட்சைகளுக்கு வேண்டுவனவற்றை இவைபிற்றைக் கொண்டே கற்று அவைகளிற் றேரவேண்டுமென்னும் அவாவி

...ரணத்தானும், அவ்வாறு தேர்வதற்கு இவைகள் பெருந்துணை யெனக் கொள்ளப்படும் பொருத்த முடைமையானு மென்னின் அதனை யோர் தவறெனக் கற்றோர் கொள்ளார்.

இவ்வாறு அச்சிட்டுப் பதிப்பிக்கத் தொடங்கி ஒன்றாயாண் டாயினும் மேற்கண்டவாறு உதாரணங்களாகத் தெரித்த மேற் கோள்களின் முதற்குறிப்புகளைச் சாலவு மெளிதிற்கொண் டுணர் தற்குச் சாத்தியமின்மையின் காலம் நீட்டித்ததென்க. ஆயினும், இப்பிரதி முற்றுப்பெற்றபின்னர் சில மேற்கோள்கள் விளங்கினமை யின் அவைகளைப் பின்னர் விளங்கிய மேற்கோளெனச் சேர்த் திருக்கின்றோம். அவ்வாறுசேர்த்துப் இன்னும் விளங்காதன சிலவுள வாகலின், அடுத்த பதிப்பில் எம்மாலியன்றவளாயும் விளங்குவன வெடுத்துக்காட்டுதும். அதற்குள் பேரறிவுடையோ ரெவராவது அவற்றுள் எவற்றையேனும், இதில் யாதொரு பிழை பொதுளி யிருப்பின் அவற்றையேனும், இந்நூதன பிரதியின் விருத்தியாநு கூலமாய் அமைக்கத்தகும் வேறுமாதிரியேனும் எடுத்துக்காட்டுவ ராயின் அவர்பால் அப்பேருதவிக்கு யாம் எக்காலத்தும் நன்றியறி தலை யுடையவரா யிருப்போமென வற்புறுத்துகின்றோம்.

ம. தெ., தி. ச.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.		திருத்தம்.
௬	௭	இயையு	...	இயைபு
௩௪	௨௨	நூவிற்	...	நூலிற்
௪௨	௨௨	கடவுளாகியுங்	...	கடவுளாகியும்
,,	௨௪	மலர்மி	...	மலர்மிசை
௬௬	௩௩	பக்கம்-௨0	...	பக்கம்-௨௪
௫௩	௯	டீரூடீர	...	டூரூகாது
௭௪	௧௧	வெணிணணிஞர்	...	வெண்ணிஞர்
௬	௩0	———	...	மண்யாது
௮௬	௨௯	அகரவீற்று	...	வகரவீற்று
௮௩	௬	நட அஃகு	...	நட—அஃகு
௯௪	௧௧	விளங்கச்	...	விளங்கத்
௯௫	௨௫	———	...	விபி -
௯௭	௨௬	நடந்நனன்	...	நடந்தனன்
௯௯	௨௪	உறங்கினன்	...	உறங்கிறன்
௧0௩	௧௧	ஓது	...	ஓதுது
௧0௬	௧௧	ஈறும்	...	ஈறு
௧௧௧	௪	அவ்வழி	...	அல்வழி
,,	௨௨	ஆதலின் ———	...	ஆதலின் அல்வழி வேற்றுமை யென அல்வழியை
௧௧௩	௨0	தழாத்தொடராய் ———	...	தழாத்தொடராய்உடம்படுமெய் தோன்றி முடிந்தது. இத்தொடக்கத்தனவெல்லாந் தழாத் தொடராய
௧௧௫	௧௩	———	...	உரி+நெய்=உரியநெய், யகர உயிர்மெய்தோன்றிற்று.
௧௧௭	௭	என்று	...	ஒன்று
,,	௯	யானைக்கேடு	...	யானைக்கோடு
௧௧௯	௪	எகரம்	...	உகரம்
௧௨௩	௭	கிளைகோள்	...	கிளாய்கோள்
௧௨௫	௩௧	சே. அ௩௫.	...	சே. அ௯௫.
௧௨௯	௨௮	கொற்றன்	...	குறியன்
௧௩௭	௧௮	ன்னன்	...	ன்னள்
௧௩௯	௧௪	நிலாவிரி	...	நிலவிரி
௧௪0	௨௮	அல்வழி	...	அவ்வழி
௧௪௧	௧	உரிய+உப்பு	...	உரி+உப்பு
௧௪௩	௨௬	என்னும்	...	விதியினும் என்னும்
௧௪௫	௨௩	யானை	...	யானை

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கடுஎ	௩௩	சூ. கசo.	சூ. சo.
கசுச	உஅ	வேற்பவு	மேற்பவு
கசுஎ	அ	இயல்பு	இயல்பே
கனஅ	கச	வந்தால்	வரின்—வந்தால்
,,	௩க	எய்யாதது	எய்தாதது
கஎடு	கஎ	வாவது	மாவது
,,	௩க	அவ்வழிக்	அல்வழிக்
கஎகூ	கசு	இவ்விதி	அவ்விதி
கூஅo	சு	வன்மை கு	வன்மை கு இனம் ஆக திரிபவும்
,,	அ	ஆகும்	ஆகும்-ஆகும்
ககூஎ	உடு	புணர்தல்	புணர்த்தல்
கஜகூ	கச	பொருளுடனே	பெயருடனே
௨0௩	உகூ	அவன் தாம்	அவன் தான்
உoஅ	கடு	பகரவொற்றுமே	பகரவொற்று ஒன்றுமே
உகஉ	உஎ	நம்பிக்கண்	நம்பிகண்
உஉசு	க௩	யணிவாளோ	யணியாளோ
உஉஅ	கச	நின்று,	நின்ற
உ௩க	கச	புட்டதுபோல	பட்டதுபோல
உ௩எ	க	நிலைமை	நிலையாமை
உ௩கூ	கக	ஆசிரியச்	ஆரியச்
உசக	க௩	கற்றுருணரும்	கற்றுணரும்
உசசு	௩	ரொடக்கத்து	ரொடக்கத்து இடுகுறிப் பெயரும், பொன்னன் என்றற் ரொடக்கத்து
உடுஉ	ககூ	பொதுவுமான	பொதுவுமாவன
உடுசு	ச	———	மான்வந்தாள், மான்வந்தது
உசுக	கச	என்பர்	என்ப
உசுஅ	ச	உருபு	உருபு ஏ
உஎக	௩உ	வினைமுதலாலே	வினைமுதலாயே
உஎச	க	பணத்திற்கொண்டான்	பணத்திற்குக்கொண்டான்
உஎடு	கூ	காரணத்தை	காரியத்தை
உஎஅ	௩ச	சே. கூசுரு.	சே. கூசுச.
உஎகூ	ச	நன்மை	நம்மை
உஅo	௩க	பட்டு	பாட்டு
உஅக	உடு	சூ. ககூ.	சூ. கக.
உஅஉ	க0	நிலையில்	நிலைமையில்
உஅச	௩0	சே. ருஅ.	சே. ருஅக.
உஅசு	௩உ	ஒடு	ஓடு
உஅஎ	௩௩	———	கோன்கூறய்
உகூஉ	எ	கெட்டு இகரம்	கெட்டுஅதனயல் இகரம்
உகூ௩	டு	(இறுதி)	(ஒருசார்) இறுதி
,,	௩உ	இயல்பு ஈறு	இயல்பு உம் ஈறு

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உகச	கூ	———	தான் (எ-ம்)
உகரு	உக	ஐபுரு	ஐ உருபு
உகசா	க0	அத்தன்ஸமயாம்	அத்தன்மைத்தாம்
உகஅ	கூ	வருவன	வருவனவுள
,,	உக	———	கண்ணிற்காணலாம்
உகக	கூ	———	மதுரையின்வடக்குச் சிதம்பரம்
கூ00	கூ	———	அது உம்-ஆரும் வேற்றுமையும்
கூ0ச	உஎ	சிறப்புவினை	குறிப்புவினை
கூகூஅ	கூ	பான்மையாகலின்	பான்மையவாகலின்
கூசகூ	க0	மாத்திரை	யும் மாத்திரை
கூருஎ	உ	கால	கால்த்
கூகூ0	உரு	தெரித்த	தெரிந்த
கூஎகூ	க0	ரிருவுடையார்	ரறிவுடையார்
கூஅரு	கஅ	மர	மரம்
கூகூக	உ	பாடுகோ	பாடுகோ பாடுகோ
கூகூஉ	கஅ	காலேவண்ணம்	காலேகவண்ணம்
கூகூசா	[illegible]	"ஆடுபாம்பென ... ...வல்குல்மேல்."	b‡‡ "ஆடுபாம்பென ... ...வல்குல்மேல்."
	[illegible]	b‡ பொற்கோட் ... ...போன்றே."	"பொற்கோட் ... போன்றே."
கூகூகூ	கூ	விகாரம்	அவிகாரம்
,,	,,	அவிகாரம்	விகாரம்
ச0உ	உஉ	சொல்லாவவைகளை	சொல்லாதவைகளை
ச0ரு	உஅ	———	வில் பூண்-விற்பூட்டுப்பொருள்கோளும்
சஉகூ	உஉ	பதிகம்	கட்வுள்வாழ்த்து
சஉரு	கஉ	உலகம்	பூதம்
சகூஉ	கூஉ	சே. க.	சே. உ.
சச0	கசு	உரிச்சொல்லும்	உரிச்சொல்லுள்சில

———

பின்னர்விளங்கிய மேற்கோள்கள்.

பக்கம்.	வரி.	மேற்கோள்.	நூல்முதலியன.
௬	௨௫	"எண்ணென்ப...எழுத்தென்ப"	திருக்குறள், செ. ௩௯௨.
௧௪௯	௧௮	"காவிரி ... ... கிழவோனே"	பொருநராற்றுப்படை.
,,	௨௦	"கறைமிடற் ... ... றக்கரை"	புறநானூறு.
௨௩௩	௧	"பல்சான்றீரே...பல்சான்றீரே"	,, ,,
௨௭௩	௩௩	"தூங்கு ... ... நடைய"	,, ,,
௨௭௯	௧௬	"கோட்டிற் ...... நெடுந்தேர்"	பொருநராற்றுப்படை.
௩௨௪	,,	"யாருமில்லை ... ... கள்வன்"	குறுந்தொகை செ. ௨௫.
௩௨௮	௨௮	"அம்பொருள் ... புண்ணுவாம்"	சிந்தாமணி, காந்தருவ தத்தையா ரிலம்பகம், செ. ௩௫௯.
௩௩௧	௧	"கூருமற் ... ... கடுங்கூளி"	கலித்தொகை, கடவுள் - வாழ்த்து, செ. ௧.
௩௩௨	௮	"ஐயவரொடு...தலைக்கொண்ட"	புறநானூறு
௩௯௪	௩௧	"உரற்கால்யானை ... யேற்றை"	குறுந்தொகை, செ. ௨௩௨.
௪௨௮	௪௧	"சிறியகட்பெறினே...மன்னே"	புறநானூறு.
௪௪௦	௨௦	"நனிபேதையே ... கூற்றம்"	,, ,,

சென்னை யூநிவெர்ஸிடி பரீக்ஷைகளுக்குரிய சூத்திரங்கள்.

பிரவேச பரீக்ஷைக்கு - (For Matriculation Examination.)

சூத்திரங்கள் :— ௩௭ — ௪௦, ௫௮ — ௬௦, ௬௨ — ௭௧, ௯௦ — ௯௪, ௯௯, ௧௦௦, ௧௦௨, ௧௦௭, ௧௨௨, ௧௨௬, ௧௨௮, ௧௩௧—௧௩௪, ௧௩௬ —௧௩௮, ௧௪௦ — ௧௪௫, ௧௫௨ — ௧௬௭, ௧௭௯, ௧௮௧ — ௧௮௪, ௨௦௪, ௨௦௫, ௨௦௯, ௨௧௦, ௨௧௯, ௨௨௪, ௨௨௭, ௨௩௭, ௨௩௪, ௨௪௫, ௨௪௭, ௨௫௦, ௨௫௨, ௨௫௫, ௨௫௯ — ௨௬௩, ௨௬௫ — ௨௬௭, ௨௭௦ — ௨௭௨, ௨௭௫, ௨௮௪, ௨௮௫, ௨௮௭ — ௨௮௯, ௨௯௦—௨௯௨, ௨௯௫—௩௦௧, ௩௦௩, ௩௧௯— ௩௨௩, ௩௨௫ — ௩௨௯, ௩௩௧, ௩௩௨, ௩௩௭ — ௩௪௩, ௩௪௮ — ௩௫௧, ௩௫௬, ௩௫௮, ௩௬௨ — ௩௬௬, ௩௬௯, ௩௭௨, ௩௭௪, ௩௮௨, ௩௮௩, ௪௨௦, ௪௨௨, ௪௨௩, ௪௨௫, ௪௩௫, ௪௪௨, ௪௫௬.

எப் - ஏ - பரீக்ஷைக்கு - (For F. A. Examination.)

மேலைச் சூத்திரங்களுடன் அடியில்வரும் சூத்திரங்களும்.

சூத்திரங்கள் :— ௧—௮, ௨௨, ௨௩, ௩௧, ௪௭, ௫௭, ௬௧, ௮௯, ௯௫ — ௯௭, ௧௦௩ — ௧௦௬, ௧௧௩, ௧௩௫, ௧௩௯, ௧௫௧, ௧௭௦ — ௧௭௩, ௧௭௬, ௧௮௫ — ௧௯௩, ௧௯௫, ௨௦௦, ௨௦௧, ௨௦௬, ௨௧௮, ௨௨௦, ௨௨௨, ௨௨௩, ௨௨௮, ௨௨௯, ௨௩௫, ௨௩௯, ௨௪௦ — ௨௪௩, ௨௪௬, ௨௪௮, ௨௬௯, ௨௭௩, ௨௭௪, ௨௮௬, ௨௯௩, ௨௯௪, ௩௦௨, ௩௧௦—௩௧௨, ௩௧௪—௩௧௭, ௩௨௪, ௩௩௦, ௩௩௪, ௩௪௪ — ௩௪௬, ௩௫௨, ௩௫௫, ௩௫௭, ௩௫௯, ௩௬௧, ௩௬௭, ௩௬௮, ௩௭௩, ௩௭௭ — ௩௮௦, ௩௮௪, ௩௮௫, ௩௯௫ — ௪௦௧, ௪௨௪, ௪௨௬, ௪௩௨, ௪௩௩, ௪௩௮, ௪௫௭, ௪௫௯, ௪௬௨.

பி. ஏ. பரீக்ஷைக்கு - (For B A. Examination.)

மேலைச் சூத்திரங்களுடன் மற்றைச் சூத்திரங்களும்.

உ

கடவுள் துணை.

நன்னூல் விருத்தியுரை.

சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல-விலகொளி பரப்பி யாவையும் விளக்கும்-பரிதியி னொருதா னாகி முதலீ-றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த-வற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்-மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவது-முனிவர வருளிய வருமொழியுளுங்-குணகடல் குமரி குடகம் வேங்கட-மெனு நான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலு-ளரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்-தொகைவகை விரியிற் றருகெனத் துன்னா-ரிகலற நூறி யிருநில முழுவதுந்-தனதெனக் கோலித்தன் மதிவாரணந்-திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்-கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்-திருந்திய செங்கோற் சீய கங்க-னருங்கலை விநோத னமரா பரணன்-மொழிந்தன னாக முன்னோர் நூலின்-வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்-பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்-பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி-யென்னு நாமத் திருந்தவத் தோனே.

என்பது பாயிரம். மலர்தலை யுலகிற் பலநூ லாய்ந்து-செய்வதுந் தவிர்வதும் பெறுவது முறுவதும்-உய்வது மியே னொருபொரு ளாக-நன்னெறி பிறழா நற்றவத் தோர்பெறுந்-தன்னடித் தாமரை தந்தெனையாண்ட-திருவா வடுதுறைத் தேசிக னாகிய-கருணை யங் கடலையென் கண்ணைவிட் டகலாச்-சுவாமி நாத குரவனை யநுதினம்-மனமொழி மெய்களிற் றொழுதவ னருளாற்-பொன்மலை யெனவிப் புவிபுகழ் பெருமை-மன்னிய வூற்று மலைமரு தப்பன்-முத்தமிழ்ப் புலமையும் முறையர சுரிமையும்-இத்தலத் தெய்திய விறைமக னாதலின்-நன்னூற் குரைநீ நவையறச் செய்து-பன்னூற் புலவர்முன் பகர்தியென் றியம்பலின்-நன்னா வலர்முக நகைநா ணமே என்னா லியன்றன்வ யியற்றுமிந் நூலுள், இப்பா யிரமென் னுதலிற் றோவெனின், "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்-வான்யா

றன்ன தூய்மையும்வான்யாறு - நிலம்படர்ந்தன்ன நலம்படரொழு
கமும் - திங்களன்ன கல்வியுந்திங்களொடு - ஞாயிறன்ன வாய்மை
யும்யாவது-அஃகியவன்பும் வெஃகாவுள்ளமும் - துலைநாவன்ன சம
னிலையுளப்பட - எண்வகையுறுப்பின ராகித்திண்ணிதின்-வேளாண்
வாழ்க்கையும் தாஅளாண்மையும்-உலகியலறிதலு நிலையிய தோற்ற
மும் - பொறையு நிறையும் பொச்சாப் பின்மையும் - அறிவு முருவு
மாற்றலும் புகழும் - சொற்பொருளுணர்த்துஞ் சொல்வன்மை
யுங் - கற்போர்நெஞ்சங் காமுறப்படுதலும் - இன்னோரன்னதொன்
னெறி மரபினர்-பன்னருஞ் சிறப்பி னல்லாசிரியர் - அறனேபொரு
ட்பய னின்பெனுமூன்றின்-திறனறிபனுவல் செப்புங்காலை - முன
ளர்க்கூறிய வெண்வகை யுறுப்பினுள் - ஏற்பனவுடைய ராகி
ற்படச்-சொல்லிய பொருண்மை சொல்லியாங்குணர்தலும் - சொ
ல்லியபொருளொடு சூழ்ந்துநன் குணர்தலும்-தன்னோ ரன்னோர்க்
குத் தான்பயப்படுதலும்-செய்ந்நன்றி யறிதலுந்தீச்சார் பின்மையு
மடிதடு மாற்ற மானம்பொச் சாப்புக் - கடுநோய்சீற்றங் களவே
காமம்-என்றிவை யின்மையுஞ் சென்றுவழி படுதலும்-அறத்துறை
வழாமையுங் குறிப்பறிந் தொழுகலும் - கேட்டவை நினைத்தலும்
பாடம்போற்றலும்-மீட்டவை வினவலும் விடுத்தலுமுணர்தலும்-
உடையராகி நடையறிந் தியலுநர் - நன்மாணாக்க ரென்ப மண்மி
சைத்-தொன்னூற் புலமைத் துணிபுணர்வோரே." என ஆத்திரை
யன் பேராசிரியன்கூறிய பொதுப்பாயிரத்தானே பன்னருஞ் சிறப்
பின் நல்லாசிரியனை யுணர்ந்து வழிபட்டு ஒருநூல் கேட்பான்பு
குந்த நன்மாணாக்கர்க்கு அந்நூலால் நுவலப்படும் பொருளும், அந்
நூல்கேட்டலாற் பெறப்படும் பயனும், கேட்டற்குரிய அதிகாரிக
ளாவார் இவரென்பதூஉம், இன்னது முற்றிய பின்னர் இந்நூல்
கேட்கற்பாற் றென்னுமியைபும் உணர்ந்தன்றி, நூல்கேட்டற்கண்
மனவூக்கஞ்செல்லாமையின், இன்றியமையாச்சிறப்பினவாய இந்
நான்கும் ஒருதலையாக முன்னருணர்த்தல் வேண்டும். இந்நான்கும்
உணர்ந்தவழியும் கற்றுவல்லசான்றோரல்லோராற் செய்யப்பட்ட
நூலாயின் கூறியதுகூறல் முதலாய குற்றமுடைத்தாமன்றே யெ
னவும், கற்றுவல்ல சான்றோரும் மற்றோர் கோட்பாடுபற்றிச் செய்
யின் முனைவன் நூலொடு முரணுமன்றேயெனவும், ஐயுற்றுஊக்கஞ்
செல்லாமையின், அவ்வையம்நீக்குதற்பொருட்டுஆக்கியோன்பெரு

மையும், நூற்பெருமையும், அந்நூல்வழங்குநிலனும், அதன்முத னூலும் இவையென்பது தோன்ற, ஆக்கியோன்பெயரும், வழியும், எல்லையும், நூற்பெயரும் உணர்த்தல்வேண்டுமாகலின் இவ்வெட் டும், இவ்வெட்டுடனே காலம், களன், காரணம் என்னும் மூன்றுங் கூட்டி பதினொன்றுந் தெரிப்பதே சிறப்புப்பாயிரத்தின் இலக்கண மென மேல்வகுக்கப்படும் ஆக்கியோன் பெயர்முதலியன உணர்த் துதனுதலிற்று.

(இதன்பொருள்.) மலர்தலை உலகின்-பரந்தஇடத்தையுடைய உலகத்தின்கண்ணே,மல்கு இருள் அகல-நிறைந்தகண்ணிருள்கெட, இலகு ஒளி பரப்பி - விளங்குங்கதிரை விரித்து, யாவை உம் விளக் கும், கட்பொறிக்குவிடயமாகிய உருவமனைத்தினையுங் காட்டும், பரிதியின்-சூரியனைப்போல, ஒரு தான் ஆகி - உலகுக்கெல்லாந் தானொருமுதலேயாகி, முதல் ஈறு ஒப்பு அளவு ஆசை முனிவு இக ந்து உயர்ந்த - தோற்றமும், ஒடுக்கமும், உவமையும், அளவும், விருப்பும், வெறுப்பும் ஆகிய அவற்றை இயல்பாகவே நீங்கிநிற்ற லால் தலைவனாகிய, அற்புதமூர்த்தி-ஞானமேதிருமேனியாக வுடை யான், தன் அலர்தரு தன்மையின்-தனது விரிந்த தன்மையாகிய கருணையினாலே, மனம் இருள் இரிய - உயிர்களின்மனத்திருளாகிய அவித்தைகெட,மாண் பொருள் முழுவது உம் - மாட்சிமைப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருளையும்,முனிவு அற அருளிய - விருப்புட னருளிச்செய்த, மூவறு மொழியுள் உம் - பதினெண் நிலத்து மொழிகளுள்ளும், குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான்கு எல்லையின் இருந்தமிழ் கடலுள்- இந்நான்கெல்லையினையுடைய நிலத்துமொழியாகி இயலிசை நாடக மென்று பெயர்பெற்ற பெரியதமிழென்னுங்கடலுள்,அரும்பொருள் ஐந்தை உம் - அவ்வறமுதற்பொருள் நான்கையும் உணர்தற்குக் கருவியாய், அருமையவாகிய இயற்றமிழின் பாகுபாடான எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்து பொருளையும், யாவர் உம் உணர - அவ் வியற்றமி ழுணர்தற்கு முன்னரோ உயர்ந்தோர் செய்யுளிடத்து ஆராய்ச்சி யுடையராய் அவ்வாராய்ச்சியான் வலி யோரேயன்றி எளியோருமுணர, தொகை வகை விரியின் தருக என - வழியின்நெறியாகிய நால்வகையுள் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் ஆக்கப்படும் யாப்பினாற்பாடித்தருகவென, துன்னார் இகல்

அறனறி - பகைவர்து பகைமைகெட அவரைத்துணித்து, இருநிலம் முழுவது உம் தனது எனகோலி - பெரியபூமியனைத்தினையும்தன்னுடையதாகப் பற்றிக்கொண்டு, தன் மதம் வாரணம் திசை தொறும் நிறுவிய திறல் உறு தொல் சீர்-தன்மதயானைகளையெட்டுத்திக்கினுந் திசைக்களிறுகள்போல நிறுத்தியவெற்றிமிகுந்த தன்னளவேயன்றித் தன்தாதை மூதாதை முதலியோரைத்தொட்டு வருங் கீர்த்தியினையும், கரு கழல் - பெருமைபொருந்திய வீரக்கழலினையும், வெள்குடை - வெண் கொற்றக்குடையினையும், கார்நிகர் வள்கை-மேகம்போலக் கைம்மாறு கருதாதுகொடுக்கும் கையினையும், திருந்திய செங்கோல் - கோடாத செங்கோலினையும் உடைய, சீயகங்கன்-சிங்கம்போன்ற கங்கன் - அருங்கலை விநோதன் - அரிய நூல்களை யாராய்தலை பொழுதுபோக்கும் விளையாட்டாகவுடையான், அமர் ஆபரணன் - தன்னகத்து விழுப்புண்பட அமர்செய்தலையே ஆபரணமாகவுடையான், மொழிந்தனன் ஆக - சொன்னாக, முன்னோர் நூலின்வழி ஏ - தொல்லாசிரியர் நூலின்வழியே, நன்னூல் பெயரின் வகுத்தனன் - நன்னூ லென்னும் பெயரினால் செய்தனன், பொன் மதில்சனகை - பொன்மதில் சூழ்ந்த சனகாபுரத்து ளிருக்கும், சன்மதி முனி அருள் - சன்மதிமுனிவன்பெற்ற, பன் அரும் சிறப்பின் பவணந்தி என்னும் நாமத்து - சொல்லுதற்கரியஞானவொழுக்கச் சிறப்பினையும் பவணந்தியென்னும் பெயரினையுமுடைய, இரு தவத்தோன் - பெரியதவத்தினை யுடையோன்.—என்றவாறு.

இதனுள், பவணந்தியெனவே - ஆக்கியோன் பெயரும், முன்னோர்நூலின் வழியெனவே-வழியும், நான்கெல்லையெனவே - எல்லையும், நன்னூலெனவே-நூற்பெயரும், அரும்பொரு ளைந்தெனவே - நுதலியபொருளும், அவற்றையாவரு முணரவெனவே - முன்னர் நிகண்டுகற்றுச் செய்யுளாராய்ச்சியுடையார்க்கே அவற்றை ஆராய்வுழி அவற்றின்கண் உளவாகிய செய்கை வேறுபாடுகளும், சொல்முடிவு பொருள்முடிவு வேறுபாடுகளும் இன்னவென்று துணியப்படாமையின், அவற்றைத்துணிந்து அறியவேண்டி, இவ்வியற்றமிழ்நூல்கேட்டறிதலின்கண்ணே ஊக்கஞ்செல்லுமாகலின் அவையாராய்ந்தபின்னர் இவைகேட்கற்பாற்று என்னும் யாப்பும், அவையாராய்ந்தோர் இவைகேட்டற்கு உரியாரென்னும் கேட்போரும், அவர் அப்பொருளைந்தினையும் உணர்ந்து மொழித்திறத்

தின் முட்டறுத்தலின், மொழித்திறத்தின் முட்டறுத்தல் என்னும் பயனும், சியகங்கன் மொழிந்தனனாக நன்னூற்பெயரின் வகுத்தன னெனவே - அவன்காலத்துப்பாடப்பட்டு, அவனது அவைக்களத்து அரங்கேற்றியதெனக் காலமும், களனும், சீயகங்கன் மொழிந்தமை யானும், யாவரிடத்தும் இரக்கமுடைமையானும், வகுத்தமையால் காரணமும் பெறப்பட்டன.

இனி இவற்றுள் காலமுதலியமூன்றும்நூல் செய்தார்காலத்து நிகழ்ந்தன. ஆக்கியோன் பெயர்முதலிய எட்டும் நூல்செய்தார் காலத்தும் நூல்வழங்கும காலத்தும் ஒப்பநிகழ்வன. இவைதம் முள் வேற்றுமை. கழிந்தவற்றை யுணர்த்தலால் பெரும்பயனி ன்மையின் அவையொருசாரரால் கொள்ளப்பட்டன. ஆக்கி யோன்பெயர்முதலியன ஒருதலையான் உணரவேண்டுதலின் அவை எல்லா ஆசிரியரானும் கொள்ளப்பட்டன. வடநூலார் யாப்பை ஆனந்தரியம் என்றும், நுதலியபொருளை விடயம் என்றும், கேட்போரை அதிகாரிகள் என்றும், பயனைப்பிரயோசனம் என்றும் கூறுப. அவருள் ஒருசாரார் ஆனந்தரியப்பொருள், நூலைப் பயப்பித்தற்குக்காரணமாய்க்கேட்போரை விசேடித்துநிற்றலின், வேறுகூற வேண்டா என்னும் கருத்தால் ஆனந்தரிய நீக்கிச் சம் பந்தமொன்று கூட்டி நான்கு என்பாராயினர். சம்பந்தம் என்ப தும் யாப்பு என்னும் பொதுச்சொல்லாற்கொள்ளப்படும். அது நன்னூற்பெயரின் வகுத்தன னெனவே நூற்கும், நூல்நுதலிய பொருட்கும்வகுப்பதூஉம் வகுக்கப்படுவதூஉமாகியசம்பந்தமெ ன்பதுபெறப்பட்டது, யாப்பு, இயைபு, தொடர்ச்சியென்பன வொரு பொருட்கிளவி. ஈண்டுக்கேட்டல் - பாடங்கேட்டல். அது "கேள்வி ‡விமரிசம் பாவனை" என்பதனானும், "கேட்டவைநினைத்தலும்பாட ம்போற்றலும்" என்பதனானும், "ஒருகுறிகேட்போன் இருகாற்கேட் பின்" என்பதனானும் உணர்க. இவ்வெட்டும் உணர்ந்ததற்குப்பயன் நூல்பயிலுதற்கண் ஊக்கம்உண்டாதல்; ஊக்கம்-உள்ளக்கிளர்ச்சி, இனி வாய்ப்பக்காட்டல் என்பதனானே இத்துணைச் சிறப்பிலவாய் அவ்வவற்றிற்கு இனமாய்க் காட்டப்படுவனவும் உள என்பதுபெற்

‡ விமரிசம் - சிந்தித்தல். விமரிசநம் எனினும் ஒக்கும். ஹேமசந் திரம் என்னும் வடமொழி நிகண்டில் ௨ - ம். காண்டத்தில் ௨௩௯ - ம் சுலோகத்திற் காண்க.

றும். அவை ஆக்கியோன் பெயரேயன்றி ஆக்குவித்தோன் பெயர் கூறுதலும், வழியேயன்றி அதன்வகையாகிய தொகுத்தல் முதலிய நான்கினுள் ஒன்றுமாறு கூறுதலும், தன்முதனூற்கு வழி கூறுதலும், அதுவந்த மரபுவழி கூறுதலும்; பொதுவெல்லை கூறுதலேயன்றிச் செந்தமிழ் முதலியவற்றின் சிறப்பெல்லை கூறுதலும், நூற்பெயரேயன்றிப் படலப்பெயர் ஓத்தின் பெயர் கூறுதலும், நூற்கு இயைபு கூறுதலேயன்றி நூலினுள்படல முதலியவற்றிற்கு இயைபு கூறுதலும், சம்பந்தங் காட்டுவதர் மதத்தின் நூற்கும் நுதலியபொருட்கும் கிழமைகூறுதலே யன்றி நூல்நுதலிய பொருட்கும் பயனுக்கும் கிழமைகூறுதலும், நூற்கும் நூல்செய்தோனுக்கும் கிழமைகூறுதலும், நூல்நுதலிய பொருளே யன்றிப் படலம்நுதலியதூஉம், ஓத்து நுதலியதூஉம், சூத்திர நுதலியதூஉம் கூறுதலும், கேட்போரேயன்றிக் கேட்பிப் போனைக்கூறுதலும், பயனேயன்றிப் பயனுக்குப் பயன் கூறுதலு மாம். இவ்வெட்டனுள் சீபகங்க னெனவே - ஆக்குவித்தோன் பெயரும், தொகைவகை விரியெனவே வழியின் வகையும், மாண் பொருள் முழுவதுமெனவே பயனுக்குப் பயனும் பெறப்பட்டன. ஏனைய இந்நூலுள்வந்துழி வந்துழிக்காண்க. பயனுக்குப் பயனா வது, வெண்பா-"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்-மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்-மொழித்திறத்தின் - முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து - கட்டறுத்து வீடு பெறும்." என்பதனாற் காண்க. எனவேமுதல்நூற்பொருளுணர் தற்கு முறையானே இதுகருவிநூலென்பது பெறப்பட்டது. முதல் நூலென்றது, அறமுதலிய நான்கினையும் உணர்த்துநூலெயென வறிக. எழுத்தென்றது,இயற்றமிழை. அது "எண்ணென்பவேனையெழுத்தென்ப" என்பதனானும் உணர்க. இசைத்தமிழும்நாடகத்தமிழும் இவ்வியற்றமிழ்போல் முதல்நூற்பொருளுணர்தற்குக் கருவி யன்மையின் இயற்றமிழ் ஒன்றுமே கூறினர். ஆயின்இயற்றமிழை அரும்பொருளைந்தெனக்கூறினமையின் இந்நூலுட்கூறிய பொருள் யாப்புஅணிகள்என்னும் மூன்றதிகாரங்களும் அக்காலத்துள்ளன போலும். ஈண்டுக்கேட்பிப்போர், இயற்றமிழ்வல்ல ஆசிரியர். படலம்நுதலியது, இவ்வதிகாரம்என்னுதலிற்றோவெனின்என்பது. ஓத்துநுதலியது, இவ்வோத்து என்னுதலிற்றோ வெனினென்பது.

சூத்திர முதலியது, இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் என்பது. படலத்திற்கு இயைபு, மேலே அதிகாரத்தோடு இயைபுடைத்தாயிற் றென்பது. ஓத்திற்கு இயைபு, மேலே யோத்தினோடு இயையுடைத் தாயிற் றென்பது. சூத்திரத்திற்கு இயைபு, மேலைச்சூத்திரத்தோடு இயை புடைத்தாயிற் றென்பது. இவை நான்முகத்துக் காட்டப் படுதலே யன்றிப் படல முகத்தும், ஓத்துமுகத்தும், சூத்திரமுகத் தும் காட்டப்படும். இவையெல்லாம் பாயிரமேயாம். பிறவும் இவ் வாறேகண்டுகொள்க. அற்றேல் கேட்போர் மாணக்கரும், கேட் பிப்போர் ஆசிரியரும் ஆதலால் இவ்விரண்டும் பொதுப்பாயிரத் தாற் பெறப்படுமாலோவெனின், அற்றன்று, பொதுவகையான் ஆசிரியருக்கும் மாணாக்கர்க்கும் இலக்கணம் பெறப்பட்டன. அல் லது இந்நூற்கு இன்னார் என்னும் சிறப்புவகை ஆண்டுப் பெறப் படாமையின் இஃது ஈண்டுக் காட்டப்படும். இது காட்டாக்கால் சிற்றறிவோர் பெருநூலும், பேரறிவோர் சிறுநூலும், முத்தமிழுள் ஒருநூற்குரியார் ஏனை யிரண்டுநூலும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனுள் ஒன்றற்கு உரியார் ஏனை மூன்றுநூலும் கேட்பான்புக்கு இடர்ப்பட்டு மயங்குப வாகலின், இஃதொருதலை யாற்காட்டல்வேண்டுமென்பது. இதுபற்றியன்றே பொதுவெனவும் சிறப்பெனவும் பாயிரம் இருபகுதிப்பட்டதூஉ மென்க. *" இக்கருத் தறியாத ‡ உரையாசிரியரை யுள்ளிட்டோரெல்லோரும், நூலரங் கேறும்அவைக்களத்துக் கேட்டாரைக்கேட்போரென்றும், தொகுத் தல்முதலிய வழியின் வகையினை யாப்பென்றும் கூறினர். ஆக்கி யோன்பெயர் முதலியபொருள் என்பனபோல இறந்தகாலத் தாற்கூறாது கேட்போரென எதிர்காலத்தாற் கூறியதே அஃதுரை யன்மைக்குச் சான்றுமாகலானும், காலம் களத்துள் அடங்குத லின் வேறுகூறவேண்டாமையானும், ஆக்கியோன்பெயர் முதலி யனபோல நூல்வழங்குங் காலத்தும் நிகழ்வதூஉஅன்றாகலின், அவற் றோடு ஒருங்குவைத்து எண்ணல் பொருந்தாமையானும், கேட்

---

* இதனை தொல்காப்பியச்சூத்திர விருத்தியில் பாயிரவுரையில் சிவஞானமுனிவர் கூறி யிருப்பதனாலும் நன்குணர்க. பக்கம்-கஉ.

‡ உரையாசிரியர் என்றது, இளம்பூரணரை. அவரை உள்ளிட்டோ ராவார், தொல்காப்பியத்திற்கு உரைவிரித்த சேனாவரையரும், நச்சினார்க் கினியரும் என்க.

டற்குரிய அதிகாரிகளாவாரை ஒருதலையாக உணர்த்தல்வேண்டு மாகலானும், தொகுத்தல் முதலியன வழியுளடங்குதலானும், இவை யும் ஒருதலையான் உணர்த்தற்பால தாகலானும், யாம்கூறியதே வட நூலார்க்கும் உடன்பாடாகலானும், அவருரை போலியுரை யென்க." வழியின் வகையாகிய நால்வகை யாப்பினுள் தொகைவிரி யாப்பெனவொன்று போந்ததன்றித் தொகைவகை விரியெனப் போந்ததில்லையா லோவெனின், நடுநின்றவகை பின்னின்ற விரியை நோக்கின் தொகையாகவும், முன்னின்ற தொகையை நோக்கின் விரியாகவும் அடங்குதலின், இது தொகைவிரி யாப்பென்றதன்பாற் படுமென்க. எனவே தொகைவிரியென இரண்டாய்வரினும் மரத்தி னது பராரையினின்றும் கவடு கோடு கொம்பு வளார் பலவாய் ஒன் றொடொன்று தொடர்பட் டெழுந்துநிற்றல்போல், தொகையினின் றும் ஒன்றொடொன்று தொடர்படப் பகுக்கப்பட்டுப் பலவாய் வரி னுந் தொகைவிரியாப்பேயாமென்க. இப்பாயிரம் ஒருநூற்குரித்தாக லின் சிறப்புப்பாயிரமென்க.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நன்னூலுட் கருத்துலகோ ரறியவுரை செய்கவென நரேந்திர சிங்கந்
தென்னூற்று மலைமருதப் பன்புகலப் பொருள்விளங்கச் செய்தான் பாரி
லெந்நூற்கு மெழுத்தொடுசொற் பொருளறிசங் கரநமச்சி வாய னென்னும்
பன்னூற்செந் தமிழ்ப்புலவன் சைவசிகா மணிநெல்லைப் பதியி னானே.

அகத்தியந்தொல் காப்பியமே முதலியமுன் னூல்கள்பல வாய்ந்து முப்பால், பகுத்ததிரு வள்ளுவரோ முதன்ஞான நூல்களெலாம் பகல்செய் வான்போ, லிகத்திலுரை செயவல்லசங் கரநமச்சி வாயனெனு மியற்பேர் பெற்ற, தகைப்புலவ னன்னூலுக் குரைவகுத்த தொருவியப்போ தமிழ் வல் லோரே.

முன்னூற்கு மலயமுனி தன்னூற்கும் புவியிடத்து முதியோ ரார்சொ
லெந்நூற்குந் தமிழ்க்கடலு ளினியபற்று நூற்கும்வகை யிதனாற் காட்டி
நன்னூற்கு விரித்துரைசெய் தான்றிகாந் தத்தளவு நடாத்துங் கீர்த்தித்
தென்னூற்று மலைமருதப் பன்சொலச்சங் கரநமச்சி வாயன் றானே.

இம்மூன்றும் உரைப்பாயிரம்.

பொதுப்பாயிரம்

க. முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம் - புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

இது பாயிரத்திற்கு வருஉங் காரணக்குறிகள் உணர்த்துகின்றது.

பொ-ள். பாயிரத்தின் இலக்கணங்களை முன்னுணர்ந் தல்லது நூல் களைச்செய்தலும், அவற்றை ஈதலும், ஏற்றலும் முடியாமைகருதி முன் னுரைத்தலின் முகவுரைஎன்றும், "பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுத லுனே." என்பவாகலின் மேல்வருக்கும் ஐந்து பொதுவும், பதினொரு சிறப்புமாகிய பல்வகைப் பொருளையுந் தொகுத்துச் சொல்லுதலின்பதிகம் என்றும், நூலினது பெருமைமுதலியவிளங்க அணிந் துரைத்தலின் அணிந்துரைஎன்றும், முகவுரையென்றாற்போல நூன்முகம் என்றும், நூல்நுதலிய பொருள் அல்லனவற்றை உரைத்தலின் புறவுரை என்றும், நூற்குள்ள நுதலிய பொருளல்லனவற்றை அதற்குத் தந்துரைத் தலின் தந்துரை என்றும், அணிந்துரை என்றாற் போலப் புனைந்துரை என்றும் பாயிரத்திற்குப் பெயராம். எ-று.

வி-பு. பாயிரம் என்பது வரலாறு. பாயிரங்கூறப்புகுந்தார் நிகண்டு போல அதன்பெயர் விகற்பங்களைக்கூறியது என்னையெனின், இப்பாயிரம் பதிகமாய்ப் புறவுரையாய்த் தந்துரைக்கப்படுவதேனும், நூற்கு இன்றியமை யாத அணியாய் முன்னுரைக்கப்படுவதென்பது இக்காரணக் குறிகளான் விளங்குதலினென்க.

உ. பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே.

இது மேல் பாயிரமென்றதனை வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. பாயிரம் - பாயிரமானது, பொது - பொதுப்பாயிரமும், சிறப்பு-சிறப்புப்பாயிரமும், என இரு பாற்று - என இரண்டு பிரிவை உடைத்தாகும். எ-று. ஏகாரம்-ஈற்றசை.

பொ-ள். மேற்பாயிரம் என்றது பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிர மும் என இருவகையினை உடைத்து. எ-று.

ங. நூலே நுவல்வோ னுவலுந் திறனே - கொள்வோன் கோடற் கூற்ற மைந்து மெல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

இது இருவகைப் பாயிரத்துள் பொதுப் பாயிரத்தை விரித்து உணர்த்துகின்றது.

ப-ரை. நூலி (திறன்) - நூலினதுவரலாறும், நுவல்வோன் (திறன்) - பாடஞ்சொல்லும் ஆசிரியனது வரலாறும், நுவலும் திறன் - பாடஞ்சொல்லுதலினதுவரலாறும், கொள்வோன்(திறன்) - பாடங்கேட்கும் மாணாக்கனதுவரலாறும், கோடல் கூற்று - பாடங் கேட்கையினதுவரலாறும், எல்லாம் நூற்கும் - எல்லா நூலுக்கும், ஆம் - ஆகும் ஆதலால், இவ் வைந்து வரலாற்றையும் விளங்கக்காட்டுவது, பொது பாயிரம் - பொதுப்பாயிரமாகும் எ-று.

பொ-ரை. நூலினதுவரலாறும்,ஆசிரியனது வரலாறும், அவ்வாசிரியன்நூலை மாணாக்கற்குச்சொல்லுதலின் வரலாறும், மாணாக்கனது வரலாறும், அவன்கேட்டலின் வரலாறும் என்னும் ஐந்தும் எல்லாநூற்குமாம் ஆதலின், இவ்வைந்து வரலாற்றையும் விளங்க உணர்த்துவது பொதுப் பாயிரம். எ-று.

வி-பு. திறன், கூற்று என்றது வரலாற்றையாதலின் அதனை ஏனைய வற்றுள்ளும் பிரித்துரைத்தாம். ஆம்என்பதனை எல்லாநூற்குமாம் எனக் கூட்டுக. * "ஈவோன்றன்மை யீதலியற்கை - கொள்வோன்றன்மை கோடன்மரபென - வீரிரண்டிடன்ப பொதுவின்றொகையே." என்பாரும் உளராலோவெனின்,பாயிரங்கூறுதல் நூல்கட்கு அன்றி,பிறவற்றிற்கு அன்றே, அங்ஙனமாதலின் நூல்களின்வரலாறு ஒன்றுமே கூறவேண்டும்.அதனோடு ஆசிரியன் வரலாறுமுதலிய நான்கினையும் உடன்கூறுதல் வரலாற்று முறைமையின்வாராதார் நூல்களைக்கற்பிக்கவும் கற்கவும்புகின், † "பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்-பேதை வினைமேற் கொளின்." என்றவாறேயாய் நூல்கள் அருமையும் பெருமையுங் கெட்டுப் பயன்படாவாம் என்பது கருதியென்க. அங்ஙனமாயின் நூன்முகத்துரைக்கப்படும் பாயிரங்கூறுப்பினுள் நூலைக்கூறுவது பொருந்தாதெனின், இவ்விலக் கணத்தான் அமைப்பவன் ஆசிரியன் என்றாற்போல, இவ்விலக்கணத்தான் அமைவது நூலென்றது அன்றிப்பாயிரத்துள் நூலைக்கூறியது அன்றாதலின், ஆசிரியர் தோல்காப்பியர் நூலின் இயல்பை ஓத்துறுப்பாகியமரபியலுள் கூறினாற்போல, இவ்வாசிரியர் பாயிரவுறுப்பினுள். கூறினாரென்க.

௪. நூலி னியல்பே நுவலி னோரிரு - பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய் - நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி - யையிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ - டெண்ணான் குத்தியி னோத்துப் படல - மென்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை - விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

---

* தொல்காப்பியம்; சிறப்புப்பாயிரம்.

† திருக்குறள், தே. அ௬௬.

இது மேற்கூறிய ஐந்தனுள் நூலினது வரலாறு உணர்த்துகின்றது.

ப்-ரை. நூலின் இயல்பு - நூலினது வரலாற்றை, நுவலின் - சொன்னால், ஓர் இரு பாயிரம் தோற்றி - பொதுவுஞ் சிறப்புமாகிய இருவகைப்பாயிரத்தையும்முன்னுடைத்தாகி,மும்மையின்ஒன்றாய்-முதனூல் முதலாகிய மூன்றனுள் ஒன்றாகி, நாற்பொருள் பயத்தோடு - அறமுதலாகிய நான்குபொருட் பிரயோசனத்துடனே, எழு மதம் தழுவி - உடன்படல் முதலாகிய எழுவகை மதத்தையுந்தழுவி, ஐயிரு குற்றம் உம் அகற்றி - குன்றக்கூறல் முதலாகிய பத்துக் குற்றத்தையும் ஒழித்து, அ மாட்சியோடு-சுருங்கச்சொல்லல் முதலாகிய பத்தழகுடனே, எண்ணான்கு உத்தியின் - நுதலிப்புகுதல் முதலாகிய முப்பத்திரண்டு உத்தியைக் கொண்டு, ¶ ஓத்து படலம் என்னும் உறுப்பினின்-இயல்அதிகாரம் என்னும் அவயவங்களுடனே, சூத்திரம் - சூத்திரமும், காண்டிகை - காண்டிகையுரையும், விருத்தி - விருத்தியுரையும், ஆகும் - ஆகின்ற, விகற்பம் நடை - பதின்மூன்று வேறுபாட்டு நடையையும், பெறும்-பெற்று வரும். எ-று.

பொ-ரை. மேற்கூறிய ஐந்தனுள் நூலினது வரலாற்றைச் சொல்லின் இருவகைப்பாயிரத்தையும் முன்னுடைத்தாதல் முதலாக இங்ஙனம் விகற்பித்த பதின்மூன்று விகற்ப நடைகளைப்பெறும். எ-று.

ரு. முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

இது நூலினதுவரலாற்றைத் தொகுத்துக்கூறினார். அவற்றுள் ஓரிரு பாயிரத்திற்கு வகை போந்து கிடந்தமையின் அதனையொழித்து ஏனையவற்றை வகுத்துக்கூறுவான் தொடங்கி மும்மையினொன்றாய் என்றதனை வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. முதல் - முதல்நூல், வழி - வழிநூல், சார்பு - சார்புநூல், என - என்று, நூல் - நூலானது, மூன்று ஆகும் - மூன்று பிரிவையுடைத்தாகும். எ-று.

பொ-ரை. முதல்நூல் வழிநூல் சார்புநூல்எனமூன்றுகூற்றதாம்நூல்.

¶ ஓத்து என்றது வேதம். அது அதனங்கமாகிய வியாகரணத்துக்காகி,அதனங்கமாகிய இயலுக்கானமையால்இருமடியாகுபெயரென்பர்.— இராமாநுச கவிராயர்.

சூ. சிவற்றுள், * வினையி னீங்கி விளங்கிய வறிவின் - முனைவன் கண்டது முதனூ லாகும்.

இது நூல் மூன்றனுள் முதல்நூல் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. வினையின் நீங்கி - வினையினின்று நீங்கி, விளங்கிய - பிரகாசித்த, அறிவின் - அறிவினையுடைய, முனைவன் - கடவுள், கண்டது - உயிர்களுக்கு ஆதிகாலத்திலே செய்தது, முதல் நூல் ஆகும் - முதல்நூலாகும். எ-று.

பொ-ரை. வினையின்நீக்கி விளக்கப்படும் அறிவினையுடைய உயிர்கட்கு வினையின்நீங்கி விளங்கிய அறிவினையுடைய முதல்வன் ஆதிக்கண்ணே செய்தது யாது? அது முதல்நூலாம். எ-று.

சூ. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப் - பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி - யழியா மரபினது வழிநூ லாகும்.

இது வழிநூல் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. முன்னோர் - கடவுளும் அவனருள்வழிப் பட்டோருஞ் செய்த, நூலின் - நூல்களினுடைய, முடிபு - பொருண்முடிபுகள், ஒருங்கு - முழுவதையும், ஒத்து - நிகர்த்து, பின்னோன் - வழிநூல் செய்வோன், வேண்டும் - முதனூலிருக்கவும் தான்வழிநூல்வேறே செய்தற்குக் காரணமாகவேண்டிய, விகற்பம் - வேறுபாடுகளையும், கூறி - உடன்சொல்லி, அழியாத - அழியாமல் உலகத்திலே நிலை பெற்று விளங்காநின்ற, மரபினது - குணத்தையுடையது, வழிநூல் ஆகும் - வழிநூலாகும். எ-று.

பொ-ரை. தொல்லாசிரியர் நூல்களின் பொருண்முடிபு முழுவதும் ஒத்துவழிநூல்செய்வோன் முதனூலுளதாகவும், தான் வழிநூல்செய்தற்குக் காரணமாகவேண்டிய விகற்பங்களையும் உடன்கூறி, அவ் விகற்பங்கள் உணர்வுடையோர்பலர்க்கும் ஒப்பமுடிந்தமையின், அழியாது உலகத்து நின்று நிலவும் மரபினையுடையது வழிநூலாம். எ-று.

வி-பு. பின்னோன்வேண்டும் விகற்பங்கூறலாவது, ‡ "பழையன கழிதலும் புதியன்புகுதலும் வழுவல" என்றவற்றை இறந்தது விலக்கல், எதிரதுபோற்றல் என்னும் உத்திகளான் விலக்கியும் போற்றியுங் கூறுதல் முதலியன. "முனைவன்கண்டது முதனூலாகும்" என ஒருமையாற்கூறினார், ஈண்டு முன்னோர் நூல் எனப்பன்மையாற்கூறியது, இறைவன் நூலையும் அவன் அருள்வழிப்பட்டுத் தத்தம் மரபின் வருங்குரவர்பலர் நூலையும்

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், சூ. கூசு. இதனை இவ்வாசிரியர் மேற்கோளாகக் கொண்டனர் என்க.

‡ நன்னூல், சூ. சஞ௨.

தழிஇக்கோடற்கென்க. எனவே முதல்நூல்மாத்திரையாய் நிற்பது இறைவன் நூலும், வழிநூல் மாத்திரையாய்நிற்பது இறுதிநூலும் அன்றி, இடைநிற்கும்நூல்களெல்லாம் ஒருவற்குமைந்தனாயினான் மற்றொருவற்குத்தந்தையாயினாற்போல முதல்நூலாயும் வழிநூலாயும் நிற்கும் என்பது பெற்றாம்.

அ. இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித் - திரிபுவே றுடையது புடைநூ லாகும்.

இது சார்புநூல் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. இருவர் நூற்கு உம்-முதல்நூல் வழிநூல் என்னும் இருவகை நூல்களுக்கும், ஒரு சிறை-ஒருபுடை, தொடங்கி - பொருண்முடிபு ஒத்து, வேறு - மற்றவைகளெல்லாம், திரிபு - ஒவ்வாமையை, உடையது - உடைத்தாகியது, புடை நூல் ஆகும் - சார்புநூலாகும்.

பொ-ரை. முதல்நூல் வழிநூல் என்னும் இருதிறத்து நூல்கட்கும் பொருண்முடிபு ஒருபுடையொத்து ஒழிந்தனவெல்லாம் ஒவ்வாமையுடையது சார்புநூலாம். எ-று.

வி-பு. எனவே முதனூற்கு வழிநூலாகும் சார்புநூலும் ஒருவற்கு மைந்தனும் மருமானும்போலுமென்க. ஒருநூல் தனக்கு வழி நூலைநோக்கின் முதல்நூலாகவும் முதல்நூலைநோக்கின் வழிநூலாகவும், அயல்நூலைநோக்கின் சார்புநூலாகவும் நிற்குமாயினும், இம்முத்திறத்தினுள் ஒரு திறத்தின்கண் மற்றொருதிறமின்மையின் "மும்மையினொன்றாய்" என்றார்.

கூ. நேரிசைவெண்பா.—முன்னோர் மொழிபொருளே யன்றி யவர் மொழியும் - பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கு - முன்னோரின் வேறுநூல் செய்துமெனு மேற்கோளி லென்பதற்குங் - கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

இது முன்னோர் நூலின் பொருண்முடிபு முழுவதும் ஒப்பவும் ஒருபுடை ஒப்பவும் கூறுவதன்றியும் அந்நூற் சூத்திரங்களையும் ஓரோவழி யெடுத்துக் கூறுகவென்றலின், வழிநூற்கும் சார்புநூற்கும் எய்தியதன்மேல் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. முன்னோர் - முதனூலோர், மொழி - சொன்ன, பொருளே அன்றி - பொருளைமாத்திரம் அல்லாமல், அவர் - அவரது, மொழியும் - சொல்லையும், பொன்னே போல் - பொன்னைப்போலவே, போற்றுவம் என்பதற்கு உம் - காப்பாற்றிக்கொள்வோமென்பதற்கு அடையாளமாகவும், முன்னோரின் - முன்னோர் நூலையே

சொல்லாமல் அந்நூலினின்றும், வேறு நூல் - வழிநூல் சார்பு நூல்களை,செய்தும் எனும் - செய்தோமாயினும், மேல் கோள் - ஆசிரியவசனமானது,இல் என்பதற்கு உம்-இந்தநூலினிடத்து இல்லையென்று சொல்லுங் குற்றம் ஒழிதற்காகவும், பழமை சூத்திரத்தின் கோள் - முன்னோர்சொல்லிய பொருளையல்லாமலும் அவர் சூத்திரத்தையும், கூறு - ஒரோவிடத்திலேசொல்லு. எ-று.

பொ-ள். முன்னோர் மொழிந்த பொருளேயன்றி அவர் மொழியினையும் பொன்போலப்போற்றிக் கொள்வமென்பதற்கு இலச்சினையாகவும், முன்னோர் நூலையேகூறாது அந்நூலினின்றும் வழிநூல் சார்புநூல் செய்தோமாயினும், ஆசிரியவசனங்களை ஒரோவழியெடுத்து உடன் கூறுதல் வழிநூற்கும் சார்புநூற்கும் இலக்கணமாதலின், இந்நூலகத்து ஆசிரியவசனம் இல்லையெனக் குற்றங்கூறுவராதலின், அக்குற்றம் ஒழிதற்காகவும் பழஞ்சூத்திரத்தின் கோளைக்கூறு. எ-று.

வி-பு. ஆசிரியவசன மெனினும், மேற்கோளெனினும், பழஞ்சூத்திரத்தின்கோளெனினும் ஒக்கும். முன்னர் போற்றுவம், செய்தும் என உளப்பாட்டுத் தன்மைப்பன்மை முற்றாகவும், பின்னர் கூறு என முன்னிலை யேவலொருமையாகவும் கூறினமையின், வழிநூலுஞ் சார்பு நூலுஞ் செய்வோர் பலர்குழீஇ ஒருவர்க்கொருவர் கூறுங் கூற்றாக இச்சூத்திரம் செய்யப்பட்ட தென்க.

க0. அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே.

இது நாற்பொருட் பயனென்றதனை வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. அறம் - தருமமும், பொருள் - அர்த்தமும், இன்பம்- காமமும், வீடு அடைதல் - மோட்சமடைதலும், நூல் - நூலிற் சொல்லப்படும், பயன் - பிரயோசனமாம். எ-று.

பொ-ள். அறமும், பொருளும், இன்பமும், வீடடைதலும் ஆகிய இந்நான்கும் நூல் தழுவப்படும் பயனும். எ-று.

வி-பு. வீடு என வாளாகூறாது, "வீடடைதல்" என்றார், வீடென்பது பேரின்பமாகிய சாத்தியமாதலின். நான்கும் என்னுஞ் செவ்வெண்ணின் தொகையோடு உம்மும் விகாரத்தால் தொக்கன.

கக. எழுவகை மதமே யுடன்படன் மறுத்தல் - பிறர்தம் மதமேற் கொண்டு களைவே - தாஅ னாட்டித் தனாது நிறுப்பே - யிருவர் மாறுகோ ளொருதலை துணிவே - பிறர்நூற் குற்றங் காட்டலேனைப் - பிறிதோடு படாஅன் றன்மதங் கொளலே.

இது எழுவகை மதம் என்றதனை வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. எழு வகை மதம் - எழுவகை மதமாவன, உடன் படல் - பிறர் மதத்திற்கு உடன்படலும், மறுத்தல் - பிறர் மதத்தை மறுத்தலும், பிறர் தம் மதம் மேல் கொண்டு களைவு - பிறர்மதத்திற்கு உடன்பட்டுப்பின்பு மறுத்தலும், தான் நாட்டி தனாது நிறுப்பு - தானொருபொருளை எடுத்துநாட்டி அதனைவரு மிடந்தோறும் நிறுத்துதலும், இருவர் மாறு கோள் ஒரு தலை துணிவு - இருவர் ஒனிறற்கொன்று விரோதமாகக்கொண்ட இரண்டனுள் ஒன்ற னிடத்துத்துணிதலும், பிறர் நூல் குற்றம் காட்டல் - பிறர் நூலில் இருக்கின்ற குற்றத்தைக் காட்டுதலும், பிறிதொடு படாஅன் தன் மதம் கொளல் - பிறர்மதத்திற்கு உடன் படாளுகித் தன்மதத்தையே கொள்ளுதலுமாம். எ-று.

போ-ரை. மேலெழுவகை மதமென்று சொல்லப்பட்டன இங்ஙனம் பிறர்மதத்தைஉடன்படல் முதலியவாக விதந்தனவாம். எ-று.

வி-பு. நூல் தழுவிய மதங்கள் பலவாயினுந் தலைமையற்றி மதமெனப்படுவது நூல்வழக்காமெனக. குற்றம்பத்து, அழகுபத்து, உத்தி முப்பத்திரண்டு என்பனவு மன்ன. இவ்வெழுவகை மதங்கட்கும் உதாரணம் விளங்க இந்நூலுள்வந்துழிவந்துழிக்காட்டுதும், ஆங்காங்குணர்க.

கஉ. குன்றக் கூறன் மிகைபடக் கூறல் - கூறியது கூறன் மாறுகோளக் கூறல்-வழஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்-வெற்றெனத் தொடுத்தன் மற்றென்று விரித்தல் - சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை - யென்றிவை யீரைங் குற்றநூற்கே.

இது பத்துக்குற்றம் என்றதனை வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. குன்ற கூறல் - குறித்தபொருளைக் காட்டுதற் குரிய சொற்களில் குறைவுபடச் சொல்லுதலும், மிகை பட கூறல் - அதற்குரிய மற்றொன்றற்கு கூறியது கூறல் - முன்சொன்ன ஒருபொ விலக்கல் - முற்காலத்து வழங்கிய ... கொள கூறல் - முன் த்து வழங்காமற்போனதை நீக்குதலும், எதிர்து காலத்து விழங்காமல் பிற்காலத்து வழங்கிவருகின்றதை கோள் தைத் தழுவிக்கொள்ளுதலும், முன் மொழிந்து கோடல் சொற்க ளொன்றனைச்சொல்லிப் பின்பு அதனை வேண்டுமிடந்தோறும் வழங்க துக்கொள்ளுதலும், பின்னது நிறுத்தல் - ஒருபொருளுக்குக் க யாக முன்வைத்தற்குரியது அங்கே வைத்தற்கு இடம்பெறாதாயின் அப்பொருளின் பின்னே அதனை வைத்தலும், விகற்பத்தின் முடித்தல் - விளங்குதற்பொருட்டுப் பல வேறுபாடுகளின் சிறப்புவாய்

சிறப்பாக நடந்து அங்ஙனமின்னே தேய்ந்து முடிதலும், நின்று பயன் இன்மை - சொற்கள்இருந்தும் ஒரு பிரயோசனமு மில்லாமற் போதலும், என்ற இவை - என்றுசொல்லப்பட்ட இவ்வ, நூற்கு- நூலுக்கு, ஈரைந்து குற்றம் - பத்துக்குற்றங்களாகும். எ-று.

போ-ரை. நூற்குப்பத்துக் குற்றங்களாவன குன்றக்கூறல் முதலிய இவைகளாம். எ-று.

வி-பு. நூல்கள் இக்குற்றங்கள் சாராதுவருதல் காண்க.

கரு. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்த - னவின்றோர்க் கினிமை நன்மொழிபுணர்த்த-லோசை யுடைமை யாழமுடைத் தாதல்-முறையின் வைப்பே யுலகமலை யாமை-விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த- தாகுத நூலிற் கழகெனும் பத்தே.

இது பத்தழகு என்றதனை வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. சுருங்க சொல்லல்-சொற்கள்வீணுக விரியாமற்சுருங்கி நிற்கச்சொல்லுதலும், விளங்க வைத்தல் - பொருளைச் சந்தேகத் திற்குஇடமாகா..ல் விளங்கவைத்தலும், நவின்றோர்க்கு இனிமை- வாசித்தவருக்கு இன்பத்தைத்தருதலும், நல் மொழி புணர்த் தல் - நல்லசொற்களைச் சேர்த்தலும்,ஓசை உடைமை-சந்த இன்ப முடைத்தாதலும், ஆழம் உடைத்து ஆதல் - ஆழ்ந்த கருத்தை யுடைத்தாதலும்,முறையின் வைப்பு - அதிகாரமுதலானவைகளைக் காரணகாரியமுறையாக வைத்தலும், உலகம் மலையாமை - உயர்ந் தோர்வழக்கத்தோடு மாறுகொள்ளாமையும், விழுமியது பயத்தல்- சிறப்பாகிய பொருளைத்தருதலும், விளங்கு உதாரணத்தது ஆகு தல்-விளங்கிய உதாரணத்தை யுடையதாதலும், நூலிற்கு-நூலினு க்கு- அழகு எனும் - அழகென்று சொல்லப்படும்... பத்து - பத் தாம். எ-று.

...ரை.

...சொல்வர் (1)

வி...

மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல் - விகற்பத்தின் முடித்தல் முடிந்
தது முடித்த-லுரைத்து மென்ற லுரைத்தா மென்ற-லொருதலை துணித
லெடுத்துக் காட்ட - லெடுத்த மொழியி னெய்த வைத்த - லின்ன தல்ல
திதுவென மொழித - லெஞ்சிய சொல்லி னெய்தக் கூறல் - பிறநூன்
முடிந்தது தானுடன் படுத - றன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல் -
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்த - லொன்றின முடித்த - றன்
னின முடித்த - லுய்த்துணர வைப்பென வுத்தியெண் ணான்கே.

இது முப்பதிரண்டு உத்தி என்றதனை வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. நுதலிப் புகுதல்-இதனைச் சொல்லுவேனென்று சொல்லிப் புகுதலும், ஓத்துமுறை வைப்பு - இயல்களைக் காரணகாரிய முறையால் வைத்தலும், தொகுத்துச் சுட்டல் - பலவும் தொகுத்துக் காட்டலும், வகுத்துக் காட்டல் - அப்படித் தொகுத்துக்காட்டியவைகளை வேறு வேறு விரித்துக் காட்டுதலும், முடித்துக் காட்டல்-தான் மேலோர் முடித்தவாறு முடித்துக்காட்டுதலும், முடிவு இடம் கூறல்-தான்சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியந் தோன்றுமிடத்தைச் சொல்லுதலும், தான் எடுத்து மொழிதல் - தானே பழைய சூத்திரத்தை யெடுத்துச் சொல்லுதலும், பிறன் கோள் கூறல் - தன்னூலிற் பிறனது கோட்பாட்டைச் சொல்லுதலும், சொல் பொருள் விரித்தல் - சொல்லினது பொருள் விளங்குதற்கு உருபு முதலானவைகளை விரித்துச்சொல்லுதலும், தொடர் சொல் புணர்த்தல்-ஒன்றற்கொன்று சம்பந்தமுடைய சொற்களைச் சேர்த்துவைத்தலும், இரட்டுறமொழிதல் - ஒருவாக்கியத்தில் இரண்டு பொருள்படச்சொல்லுதலும், ஏதுவின் முடித்தல்-முன் காரணம் விளங்காததாகச் சொல்லப்பட்ட ஒன்றற்குப் பின் காரணம் விளங்கக்காட்டி முடிவுசெய்தலும், ஒப்பின் முடித்தல்-ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணம் வேறொன்றற்கும் ஒத்துவருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாக முடிவுசெய்தலும், மாட்டெறிந்து ஒழுகல்-ஒன்றற்குச்சொல்லப்பட்ட இலக்கணத்தை அதனைப்பெறுதற்குரிய மற்றொன்றற்கு மாட்டிச்சொல்லி நடத்தலும், இறந்தது விலக்கல் - முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுள்ளே பிற்காலத்து வழங்காமற்போனதை நீக்குதலும், எதிரது போற்றல் - முற்காலத்து வழங்காமல் பிற்காலத்து வழங்கிவருகின்ற இலக்கணத்தைத் தழுவிக்கொள்ளுதலும், முன் மொழிந்து கோடல்-முன்னே ஒன்றனைச்சொல்லிப் பின்பு அதனை வேண்டுமிடந்தோறும் எடுத்துக்கொள்ளுதலும், பின்னது நிறுத்தல் - ஒருபொருளுக்குக் கருவியாக முன்வைத்தற்குரியது அங்கே வைத்தற்கு இடம்பெறாதாயின் அப்பொருளின் பின்னே அதனை வைத்தலும், விகற்பத்தின் முடித்தல் - விளங்குதற்பொருட்டுப் பல வேறுபாடுகளின் சிறப்புவாய்

பாட்டால் முடித்தலும், முடிந்தது முடித்தல் - சிறப்புவாய்பாட்டால் முடிந்ததைப் பொதுவாய்பாட்டால் முடித்தலும், உரைத்தும் என்றல் - பின்னே சொல்லப்படுவதை முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்லவேண்டின் இதனைப் பின்னே சொல்வோமென்பது தோன்ற அங்கே சுருக்கிச்சொல்லுதலும், உரைத்தாம் என்றல் - முன்னேஒருநிமித்தத்தினாலேசொல்லப்பட்டதைப்பின்னே சொல்லவேண்டியவிடத்து இதனை முன்னேதானே சொல்லினோமென்பதுதோன்றச் சொல்லாது விடுதலும், ஒரு தலை துணிதல் - ஒன்றற்கொன்று மாறுபாடாகக்கொண்ட இரண்டுபக்ஷத்துள் ஒருபக்ஷம் துணிதலும், எடுத்துகாட்டல் - தான்சொல்லும் இலக்கணத்திற்குத்தானே இலக்கியத்தை எடுத்துக்காட்டுதலும், எடுத்தமொழியின் எய்த வைத்தல் - தான்சொல்லும் இலக்கணத்தைத் தானெடுத்துக்காட்டிய இலக்கியத்தில் இருக்கவைத்தலும், இன்னது அல்லது இது என மொழிதல்-சந்தேகிக்க நின்றவிடத்து இப்படிப்பட்டதல்லாதது இதுவெனச் சொல்லுதலும், எஞ்சிய சொல்லின் எய்த கூறல் - சொல்லாது விடப்பட்டவற்றிற்கும் சொல்லப்பட்டதனால் இலக்கணம் பொருந்தச்சொல்லுதலும், பிற நூல் முடிந்தது தான் உடன் படுதல் - பிறநூலிலே முடிந்த முடிபைத்தான் அங்கீகரித்தலும், தன் குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல்-நூதனமாகத் தான் குறித்துவழங்கும் வழக்கத்தை பல விடங்களிலும் எடுத்துச்சொல்லுதலும், சொல்லின் முடிவின் அ பொருள் முடித்தல் - சொல்லின்முடிவிலே அதன் பொருளையு முடித்தலும், ஒன்று இனம் முடித்தல் - ஒன்றைச்சொல்லுமிடத்தில் அதற்கு இனமாகிய மற்றொன்றையும் விரியாதிருக்கவேண்டி அதனுடன் முடித்தலும், தன் இனம் முடித்தல் என்பதற்கும் பொருளதுவே, உய்த்து உணர வைப்பு - சில சூத்திரவிதிகளைக்கொண்டு ஆராய்ந்தறிய ஒரு பொருளை வைத்தலும், என் உத்தி - எனத் தந்திர உத்திகள், எண்ணான்கு - முப்பத்திரண்டாம். எ-று.

போ-ரை. முப்பத்திரண்டு உத்தியாவன நுதலிப்புகுதல் முதலியவாம், எ-று.

வி-பு. இவற்றுள் ஒன்றினமுடித்தல் தன்னின முடித்தல் என்பதோருத்தி. உய்த்துணர வைப்பு என்பதனை உத்திக்கடையாக்கி உய்த்துணரவைப்பெனுமுந்தி என்னானுங்கே எனப் பாடமோதி, அதனை இரண்டு உத்தி ஆக்கினும் அமையும். இவ்வுத்திகட்கு உதாரணம்விளங்க இந்நூலுள் வந்துழி வந்துழிக்காட்டுதும், ஆங்காங்குணர்க.

மதந்தினுள்ளும், அழகினுள்ளும் வருவன சிலவற்றை உத்தியுள்ளுங் கூறியது என்னையெனின், கொள்கைவகையால் மதமென்றும், சிறப்பு வகையால் அழகென்றும் இம்மதம் அழகுமுதலிய வெல்லாம் யுத்திநுட்

பத்து அமையும்வகையால் உத்தியென்றும் கூறப்படுமெனக. அங்ஙனமாயின் மற்றும், அழநத எல்லாவற்றையும், உத்தியின்பாற்படுத்துக் கூறாது சிலவற்றைக்கூறியது என்னையெனின் வரம்பின்றிவரும் உத்தியுடன் தலைமை பற்றிக்கூறும் முப்பத்திரண்டின் வந்தன கூறினரொன்க.

கரு. நூற்பொருள் வழக்கோடு வாய்ப்பக்காட்டி -யேற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்-தகும்வகை செலுத்துத றந்திர வுத்தி.

இது மேல் தொகுத்தும் வகுத்துங் கூறிய உத்திக்கு இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. நூல் - ஓர் இலக்கணநூலால் அறிவிக்கப்படுகின்ற, பொருள் - பொருளை, வழக்கொடு - உலகவழக்கோடும் செய்யுள் வழக்கோடும், வாய்ப்ப - பொருந்த, காட்டி - காண்பித்து, ஏற்புழி - ஏற்குமிடத்தை, அறிந்து - மற்றோரிலக்கியநூலிலும் அறிந்து, இதற்கு - இவ்விடத்திற்கு, இ வகை ஆம் என - இவ்வகையாகுமென்று நினைத்து, தகும் வகை - தக்கவகையாக, செலுத்துதல் - நடத்துவது, தந்திர உத்தி - தந்திரவுத்தியாம். எ-று.

பொ-ரை. ஓரிலக்கணநூலால் உணர்த்தப்படும்பொருளை நூல்வழக்கோடும் உலகவழக்கோடும் பொருந்தவுணர்த்தி அப்பொருளை மற்றோரிலக்கியநூற்கண்ணும் ஏற்குமிடம் அறிந்து இவ்விடத்திற்கு இஃதாமெனக் கருதி தக்கவகையாகச் செலுத்துவது தந்திர வுத்தியாம். எ-று.

வி-பு. தந்திரம் என்பது நூல். உத்தியான் அமைக்கும்பொருளை உத்தியென்றது ஆகுபெயர்.

கசு. * நேரின மணியை நிரல்பட வைத்தாங்-கோரினப்பொருளை யொருவழி வைப்ப - தோத்தென மொழிப - வுயர்மொழிப் புலவர்.

இது இருவகை யுறுப்பினுள் ஒத்துறுப்பு ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. நேர் இனம் - ஒருசாதியாயுள்ள, மணியை - மணிகளை, நிரல் பட - வரிசையாக, வைத்தால் ஆங்கு - பதித்தாற்போல, ஓர் இனம் - ஒருசாதியாயுள்ள, பொருளை - பொருள்களை, ஒரு வழி - ஒருவழிப்பட, வைப்பது - சொல்லுவது, ஒத்து என - இயலுறுப்பென்று, மொழிப-சொல்லுவார், உயர் மொழி-உயிர்க்குறுதியைத் தருகின்ற உண்மைச்சொற்களையுடைய, புலவர்-வித்துவான்கள்.

பொ-ரை. ஒரு சாதியாயுள்ள மணிகளை முறையே பதித்தாற்போல ஒருசாதியாயுள்ள பொருள்களை ஒருவழிப்படக் கூறுவது ஒத்துறுப்பாமெனச் சொல்லுவார் உயிர்க் குறுதிபயக்கும் மெய்ம்மொழிகளையுடைய புலவர். எ-று.

* தொல்காப்பியம், பொருள், செய்யுளியல், சூ. கஎக.

வி-பு. நேர்தல்-ஒன்றுபடுதல். இவ்வாறு வருதல் இந்நாலுறுப்பினுள் காண்க. ¶

கஎ. * ஒருநெறி யின்றி விரவிய பொருளாற் - பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

இது படல உறுப்புஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஒரு நெறி இன்றி - ஒருவழிப்படாமல், விரவிய பொருளால் - கலந்த பொருள்களோடு பொருந்தி, பொது மொழி - பல பொருள்களைத்தரும் பொதுச்சொற்கள், தொடரின் - ஓரோவிடத்தன்றித் தொடர்ந்துவந்தால், அது-அது, படலம் ஆகும்-படலவுறுப்பாகும். எ-று.

பொ-ரை. ஒருவழிப்படாது விராயபொருளோடு பொருந்திப் பல பொருளை யுணர்த்தும் பொதுச்சொற்கள் ஓரோவழியன்றித் தொடர்ந்து வரின் அது படல வுறுப்பாம். எ-று.

வி-பு. படல வுறுப்பினையுடைய காப்பியங்களுள் பாட்டுடைத் தலைவனது சரிதையேயன்றி மலை,கடல்,நாடு முதலிய பலபொருட்டிறங் களும்விரவி வருதலும்,பலபொருளையுணர்த்தும் பொதுச்சொற்கள் ஓரோ வழியன்றித் தொடர்ந்துவருதலும் காண்க.

கஅ. ¶ ¶ சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் - செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித் - திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

இது சூத்திரம் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஆடியின் - பெரியசரீரம் முதலானவைகளின் சாயையைத்தனக்குள்ளே செவ்வையாக அடக்கி இனிதாகக்காட்டுகின்ற கண்ணாடியைப்போல, சில் வகை எழுத்தின் - சிலவகை யெழுத்துகளால் ஆகிய சொற்களில், பல் வகை பொருளை - பலவகைப்

¶ "இந்நாலுறுப்பினுட் காண்கவெனவே, இயல் என்றது ஒருசாதிப் பொருள் கொண்டதென்பதும், படலம் என்றது பல சாதிப்பொருள் கொண்டதென்பது மாயிற்று. இயல் என்பதற்கு உதாரணம், இந்த நூலிலே எழுத்தியல் என்பதற்கு எழுத்திலக்கணமே வருதலும், பதவியல் என்பதற்குப் பதத்திலக்கணமே வருதலும், புணரியல் என்பதற்குப் புணர்ச்சியிலக்கணமே வருதலுங்காண்க." என்பர்— இராமாநுசகவிராயர்.

* தொல்காப்பியம், பொருள். செய்யுளியல், சூ. கஎ௨.

¶ ¶ "சில்வகை எழுத்து என்ற பொருளுடையால் சிறிய கண்ணாடியென்று பெறப்பட்டது." என்பர்—இராமாநுசகவிராயர்.

பட்ட பொருள்களை, செவ்வன்-செவ்வையாக, செறித்து-அடக்கி, இனிது - இனிதாக, விளக்கி-காட்டி, திட்பம்-பலபொருளினுடைய திண்மையும், நுட்பம் - அவற்றினுடைய நுண்மையும், சிறந்தன - சிறந்துவருவன, சூத்திரம் - சூத்திரங்களாகும். எ-று.

போ-ரை. சிறியகண்ணாடியிற் பெரிய சரீரமுதலியவற்றின் சாயை செவ்வாகச் செறிந்து இனிதாக விளங்கினாற்போலச் செவ்வாகச் செறிந்து இனிதாக விளங்க, சில்வகை எழுத்துக்களான் இயன்ற யாப்பின்கண் பல்வகைப்பட்ட பொருள்களைச்செவ்வாகச்செறித்துஇனிதாகவிளக்கி அப்பல பொருள் திண்மையும்,நுண்மையும் சிறந்தவருவன சூத்திரங்களாம். எ-று.

வி பு. திட்பம்-குற்றமின்மையின் அலைவற நிற்றல். இவ்வாறு வருதல் இச்சூத்திரத்துள்ளுங் காண்க.

கக. ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப் - பாய்த்துப் பருந்தின் வீழ் வன்னசூத் திரநிலை.

இது சூத்திரநிலை உணர்த்துகின்றது.

ப-ரை. ஆறு ஒழுக்கு - நடுவில்விடாது செல்லுகின்ற ஆற்று வெள்ளத்தினது செல்லுகையையும், அரி மா நோக்கம் - முன்னும் பின்னும் பார்க்கின்ற சிங்கத்தினது பார்வையையும், தவளை பாய்த்து - நடுவே இடம்விட்டுக் குதிக்கின்ற தவளையினது குதித்தலையும், பருந்தின் வீழ்வு-நெடுந்தூரத்திலிருந்து ஒன்றை வௌவிப்போதற்கு வீழ்கின்ற பருந்தினது வீழ்ச்சியையும், அன்ன - போலும், சூத்திரம் - முன்சொன்ன சூத்திரங்கள், நிலை - ஒன்றோடு ஒன்று தொடர்ந்து நிற்கும் நிலைகள். எ-று

போ-ரை. மேற்கூறிய சூத்திரங்களொன்றோடொன்று தொடர்ந்து நிற்கு நிலைகள் ஆற்றொழுக்கு முதலிய நான்கினையும் போலும். எ-று.

வி-பு. இவ்வாறு நிற்றல் இந்நூலுள் வந்துழி வந்துழிக் காட்டுதும், ஆங்காங் குணர்க.

உ0. பிண்டந் தொகைவகை குறியே செய்கை - கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

இது சூத்திரவகை உணர்த்துகின்றது.

ப-ரை. பிண்டம் - பலதிறப் பொருள்களுக்கும் பொதுவாகப் பிண்டமாக்கிச்சொல்லும் பிண்டசூத்திரமும், தொகை - அப்பல திறப்பொருள்களையும் வேறு வேறாகத் தொகுத்துச் சொல்லும் தொகைச்சூத்திரமும், வகை - அவ்வாறு தொகுத்துச் சொல்லப்பட்டவைகளை வகுத்துச்சொல்லும்வகைச்சூத்திரமும்; குறி-இவை

உயிர் இவை மெய்யென அறிபவரும் குறிச்சூத்திரமும், செய்கை-புணர்ச்சி விதியறிந்து புணர்த்தலையும் முடிப்புவிதியறிந்து முடித்தலையும் செய்யுஞ் செய்கைச் சூத்திரமும், கொண்டு இயல் புறன் அடை-இவைகளின்புறத்து அடையாகவருகின்ற புறனடைச் சூத்திரமுமாகிய, கூற்றன - ஆறு பிரிவையுடையன, சூத்திரம் - சூத்திரங்கள். எ-று.

பொ-ள். பிண்டமெனவும், தொகையெனவும், வகையெனவும், குறியெனவும்,செய்கையெனவும்,இவற்றை அலைவறக்கொண்டு இவற்றின் புறத்து அடையாய்வரும் புறனடையெனவும் கூறுங் கூற்றினையுடையவாம் மேற்கூறிய சூத்திரங்கள். எ-று.

வி-பு. இவற்றுள் பிண்டமாவன பன்னிருபாற்றதுவே என்றற்றொடக்கத்துத் தொகைபோலாது ¶ நன்கியம்புவனெழுத்தே என்றற்றொடக்கத்துப் பொதுப்பட வருவன. தொகையும் வகையும் புறனடையும் வந்துழிவந்துழிக் காட்டுதும், ஆங்காங்குணர்க. விரிவகையின்பாற்படுநவின் கூறிற்றிலனர்.

குறியாவன இவை உயிர் இவை ஒற்று இவை பெயர் இவை வினையென்றற்றொடக்கத்து அறிதல்மாத்திரையாய்வருவன. குறி என்பது அறிதலை உணர்த்திய முதனிலைத் தொழிற்பெயர்.

செய்கையாவன பதமுன் விகுதியும் பதமுமுருபும் புணரும் புணர்ச்சி விதியறிந்து அங்ஙனம் அறிதன் மாத்திரையாய் நில்லாது, அவ்வாறு வேண்டுழிப் புணர்த்தலைச்செய்தலும்,பெயர்வினைமுதலிய கொள்ளும் முடிபுவிதி அறிந்து அங்ஙனம் அறிதன்மாத்திரையாய் நில்லாது, அவ்வாறு வேண்டுழி முடித்தலைச்செய்தலும் முதலியன.

¶ "'நன்கியம்புவனெழுத்தே' என்றாற்போல்வன பிண்டச்சூத்திரம்; 'பன்னிருபாற்றதுவே' என்றாற்போல்வன தொகைச்சூத்திரம்; எண்ணிலக்கணம் முதலாகப் பிரித்தோதிய சூத்திரங்கள் வகைச்சூத்திரங்கள்; 'அம்முதலீராறாவி' எ-ம், 'வல்லெழுத்தென்பக சட தபற' எ-ம், அறிதல்அளவாய் வருஞ் சூத்திரங்கள் குறிச்சூத்திரங்கள்; 'ண ன வல்லினம் வரட் டறவும்' எ-ம், 'எழுவாயுருபு திரிபில் பெயரோ-வினைபெயர் வினாக் கொள லதன்பய னிலையே' எ-ம், 'முதலறு பெயரல தேற்பில முற்றே.' எ-ம், வருவனபோல்வன செய்கைச்சூத்திரங்கள்; 'மொழியாய்த் தொடரினும்' எ-ம், 'இதற்கிது முடிபென் று' எ-ம், 'சொற்றொறு மிற்றிதன் பெற்றி' எ-ம், 'பழையன கழிதலும்' எ-ம், வருவன போல்வன புறனடைச்சூத்திரங்கள்; இனி பிண்டம், தொகை, வகை, புறனடை என்னும் நான்கும் குறியுள்ளும் செய்கையுள்ளும் அடங்கும். அடங்கவே எல்லாச்சூத்திரங்களும் குறிச்சூத்திரம், செய்கைச்சூத்திரம் என இரண்டாயடங்குமெனவுங் காண்க." என்பர்—இராமாநுசகவிராயர்.

இப்பிண்டம் முதலிய ஆறுபெயரும் அப்பொருளை யுணர்த்தும் சூத்திரங்கட்கு ஆகுபெயராய்வந்தன. எல்லாச்சூத்திரங்களும் பிண்டம்,தொகை, வகை, புறனடை என்னும் நான்கனுள் அடங்குமன்றே ; அங்ஙனமாகக் குறியினையும், செய்கையினையும், வேறோதியது எல்லா நூலுள்ளுஞ் சொல்லப்படுவன அறிவதும் செய்வது மன்றி வேறின்மையின், பிண்டமாக்கியும் தொகுத்தும் வகுத்தும் புறத்தடை கொடுத்துங் கூறப்படுவன குறியுஞ் செய்கையுமே என்பது தோன்றற்கென்க.

இங்ஙனங் கூறவே எல்லா நூலுள்ளும் வரும் எல்லாச் சூத்திரங்களும் குறிச்சூத்திரம்,செய்கைச்சூத்திரம் என இரண்டாயடங்கு மென்பது பெற்றாம். இவ்வாறன்றி குறி யென்பதற்குப் பெயர்களை உணர்த்தும் சூத்திரமென்றும், செய்கை யென்பதற்கு எழுத்துப்புணர்ச்சியையுணர்த்தும் சூத்திரமென்றும் பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங்கூறின் ஏனை இலக்கணங்களைக் கூறுஞ் சூத்திரங்களையும் விதந்து கூறவேண்டும் ; அவையின்மையானும், பெயரும் புணர்ச்சியும் இவ்விலக்கண நூற்கன்றிப் பொதுப்பாயிரமாம் எல்லா நூற்கும் பொருந்தாமையானும் அது பொருளன்றென்க.

உக. பாடங் கருத்தே சொல்வகை சொற்பொரு - டொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்-விரிவதி காரந் துணிவு பயனோ - டாசிரிய வசனமென் றீரே ழுரையே.

இது மேல் காண்டிகையுரை விருத்தியுரை யென்றார், அவற்றையுணர்த்துவான் தொடங்கி உரையினது பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. பாடம் - பாடமும், கருத்து - கருத்துரையும், சொல்வகை-சொற்களை வகுத்து உரைத்தலும், சொல் பொருள் - பதப்பொருளும், தொகுத்து உரை - தொகுத்து உரைத்தலும், உதாரணம் - உதாரணமும், வினா-வினாவும், விடை-உத்தரமும், விசேடம் - வேண்டியவைகளைத் தந்துரைத்தலும், விரிவு-வேற்றுமைத் தொகை முதலானவைகளை விரித்துரைத்தலும், அதிகாரம் - அதிகாரத்தோடு பொருந்த உரைத்தலும், துணிவு - இதற்கு இதுவே பொருளென உரைத்தலும், பயன் - பயனையுரைத்தலும், ஆசிரிய வசனம் - ஆசிரிய வசனங் காட்டுதலும், என்ற - என்று சொல்லப்பட்ட, ஈரேழ்-பதினான்கு வகையாலும் உரைக்கப்படும்,உரை-நூலுக்கு உரை, எ-று.

போ-ரை. ¶ இப்பதினன்கு வகையான் உரைக்கப்படும் நூற்குரை.

வி-ப். இவற்றுள் விசேடமாவது சூத்திரத்து உட்பொருளீ அன்றி ஆண்டைக்கு வேண்டுவன தந்துரைத்தல். விரிவாவது வேற்றுமை முதலிய தொக்குநின்றனவற்றை விரிக்கவேண்டுழி விரித்துரைத்தல். அதிகாரமாவது எடுத்துக்கொண்ட அதிகாரம் இதுவாதலின் இச்சூத்திரத்து அதிகரித்தபொருள் இது என அவ்வதிகாரத்தோடு பொருந்த வுரைக்கவேண்டுழி உரைத்தல். துணிவாவது ஐயுறக்கிடந்துழி இதற்கிதுவே பொருளென உரைத்தல். ஏனைய பொருள் விளங்கிக்கிடந்தன. இப்பதினன்கும் இவ்வுலாயுள் வந்துழி வந்துழிக் காட்டுதும், ஆங்காங்குணர்க.

¶ "உரைசெய்தற்பொருட்டு எடுத்தெழுதிய மூலமும், 'மன்றுபறித் துண்ணேல்' என்பதை 'மண்பறித்துண்ணேல்' எனப் பாடமோதுவாரும் உளர் என்றாற்போல்வனவும் பாடவுரை என்றும்; இதன் கருத்தெனச் சுருக்கி யெழுதுமுரை கருத்துரை யென்றும்; தூன்றியக்கால் என்பது தூன்றிக்கால் என விகாரப்பட்டு நின்றாற்போலச் சொல்லுகளைக்குறித் தெழுதுமுரை சொல்வகையுரை யென்றும்; சொல்லுக்குப் பொருளெழுதுமுரை சொற்பொருளுரை யென்றும் ;— இதை பதப்பொருளுரை, பதவுரை எனவும் வழங்குவரொன்றும்; 'மதிமருட்டுஞ் சிறுநுதற் பேரமர்க்கட் செய்ய வாயைய நுண்ணிடையாய்' என்பதற்கு அறிவினைமயக்கும் சிறு நுதன் முதலிய வுறுப்புக்களையுடையாய் எனத் தொகுத்தெழுதுமுரை தொகுத்துரை யென்றும் ;—இதைப் பொழிப்புரை எனவும் வழங்குவரொன்றும்; உதாரணமெடுத் தெழுதுமுரை உதாரணவுரை யென்றும் ;— இதை மேற்கோளுரை, காட்டுரை, எடுத்துக்காட்டுரை எனவும் வழங்குவரொன்றும்; என்னுதலிற்றோவெனின் எனவும், பொதுப்பாயிரம் நால்வகைப்படுமென்பாரு முளராலோவெனின் எனவும் வினவி யெழுதுமுரை வினாவுரை யென்றும்; இது கருதிற்று எ-ம், இது கருதியென்க எ-ம், எதிர்மொழி யெழுதுமுரை விடையுரை என்றும்; சூத்திரத் துட்பொருளன்றி அங்கே வேண்டியிருந்தால் பெய்துரைப்பது விசேடவுரை யென்றும் ;— இதைப் பெய்துரை எனவும் வழங்குவரொன்றும்; வேற்றுமையுருபு முதலியன தொக்குநிற்பின் அவற்றை விரித்தெழுதுவது விரிவுரை யென்றும்; அதிகாரத்தால் வருவிக்கப்பட்டதென அதிகாரத்தோடு பொருந்தக்காட்டி எழுதுமுரை அதிகாரவுரை யென்றும்; சந்தேகப்பட நின்றவிடத்து இதற்கிதுவே பொருளெனத் துணிந்தெழுதுமுரை துணிவுரை யென்றும்; இப்படிச் சொன்னதனாலே வந்தபயன் இதுவெனக்காட்டி எழுதுமுரை பயனுரை யென்றும்; ஆசிரிய வசனங்களை எடுத்தெழுதுவது ஆசிரியவசனவுரை என்றும்:—பதினான்குவகைப்படும் உரை." என்பர்— இராமாநுசகவிராயர். ௦

௨௨. கருத்துப் பதப்பொருள் காட்டு¶ மூன்றினு - மவற்றொடு வினா விடை யாக்க லானுஞ் - சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை.

இது காண்டிகையுரை ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. கருத்து - கருத்துரையும், பதம் பொருள் - பதவுரையும், காட்டு - உதாரணமும், மூன்றினும் - ஆகிய மூன்றனையுஞ் சொல்லுதலாம், அவற்றொடு - அம்மூன்றனோடு, வினா - வினாவும், விடை - உத்தரமும், ஆக்கலானும்-ஆகிய இரண்டனையுங் கூட்டிச் சொல்லுதலானும், சூத்திரத்துள்-சூத்திரத்துளிருக்கிற, பொருள்-பொருளை, தோற்றுவ-காட்டுவன, காண்டிகை - காண்டிகையுரைகளாம் எ-று.

பொ-ரை. மேற்கூறிய பதினான்கினுள் கருத்துரையும், பதப்பொருளும், உதாரணமும் ஆகிய மூன்றனையும் உரைத்தலானும், அம்மூன்றனோடு வினாவிடை யென்னும் இரண்டனையும் கூட்டியுரைத்தலானும், சூத்திரத்துட்பொருளை விளக்குவன காண்டிகையுரைகளாம். எ-று.

௨௩. சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக் - கின்றி யமையா தியாவையும் விளங்கத் - தன்னுரை யானும் பிறநூ லானு - மைய மகல வைங் காண்டிகை யுறுப்பொடு - மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி.

இது விருத்தியுரை ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. சூத்திரத்துள்-சூத்திரத்துள்ள, பொருள் அன்றி உம் - பொருளையல்லாமலும், ஆண்டைக்கு - அவ்விடங்களுக்கு, இன்றி அமையாத யாவை உம் - இல்லாது நிறையாத எல்லாப்பொருள்களும், விளங்க-விளங்கும்படியாக, தன் உரையான் உம்-தானுரைக்கும் உரையாலும், பிற நூலான் உம்-ஆசிரிய வசனங்களாலும், ஐங் காண்டிகை உறுப்பொடு - முன்சொன்ன காண்டிகை யுரையின் அவயவமாகிய ஐந்தனாலும், ஐயம் அகல சந்தேகந்தீர, மெய்யினை-மெய்ம்மைப்பொருளை, எஞ்சாது-குறையாமல், இசைப்பது - விரித்துரைப்பது, விருத்தி - விருத்தியுரையாகும். எ-று.

பொ-ரை. காண்டிகையுரைபோல் சூத்திரத்து உட்பொருள் விளக்குதல் மாத்திரையின் நில்லாது அவ்விடங்கட்கு இன்றியமையாத பொருள்கள் யாவையும் விளங்கத் தானுரைக்கும் உரையானும், ஆசிரிய வசனங்

¶ "மூன்றினும் எனப் பிரித்தது, வினா விடை இரண்டு மின்றியும் காண்டிகையுரை வழங்கப்படும் என்பது. ஐந்து[illegible]டிவருவது ஐங்காண்டிகையுரை யென்பதுந் தெரிவித்தற்கெனக் காண்க" என்பர்—இராமாநுச கவிராயர்.

களானும், மேற்கூறிய காண்டிகையுறுப் பைந்தனோடும், ஐயந்திரச் சுருங்கி த்து மெய்மைப்பொருளை விரித்துரைப்பது விருத்தியுரையாம். எ-று.

வி-பு. ¶ சூத்திரத்து உட்பொருளன்றியும் என்றமையால், மேற்கூறிய பதினொன்று உறுப்புங்கொண்டது விருத்தியுரை யென்பதுபெறப்படும்.

உச. நேரிசைவெண்பா.—பஞ்சிதன் சொல்லாப் பனுவலிழையாகச், செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத, கையேவா யாகக் கதிரே மதியாக, மையிலா நூன்முடியு மாறு.

இது நூலென்னும்பெயர் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. இதன் சொல் - இதனது சொல், பஞ்சாக-பஞ்சாகவும், பனுவல் - செய்யுள், இழையாக - இழையாகவும், செம் சொல் புலவன் - செவ்வையாகிய சொற்களையறிந்த புலவன், சேயிழை ஆக - நூற்கின்ற பெண்ணாகவும், எஞ்சாத - குறையாத, வாய் - வாய், கையாக-கையாகவும், மதி-அறிவு, கதிர் ஆகி-கதிராகவும், மை இலாத-குற்றமில்லாத நூல்-இந்நூலானது, முடியும் ஆறு - முடியும்வழி இதுவாகும். எ-று.

பொ-ரை. இந்த நூன்முடியுமாறு இதுவாதலின் நூலென்றது உவமையாகுபெயராம். எ-று.

உடு. நேரிசைவெண்பா. — உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப், புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின், கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர், மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

இது நூலின்தன்மை உணர்த்துகின்றது.

பி-ரை. புரத்தின்-உடம்பினுள் இருக்கின்ற, உரத்தின் வளம் - அறிவின்வளத்தை, பெருக்கி - வளர்வித்து, உள்ளிய - நினைக்கப்பட்ட, தீமை வளம்-அறியாமையின் வளத்தை, முருக்கி-கெடுத்து, பொல்லாத மரத்தின் - பொல்லாத மரத்தினது, கனம் கோட்டம்-

¶ "சூத்திரத்துட் பொருளன்றியு மென்றதனால் மேலே பொதுவிலக்கணமாகச் சொல்லப்பட்ட பதினொன்குவகையுங்கொண்டு நிறப்பது விருத்தியுரை யென்பது பெறப்பட்டதென்பாருமுளர். அங்ஙனமாயின் காண்டிகைக்குச் சிறப்புவிதி சொல்லி விருத்திக்குச் சிறப்புவிதி சொல்லவந்தவர் மாட்டெறிந்து, அப்பதினொன்கும் விருத்தியாகும் எனக் கூறவேண்டும். அங்ஙனங் கூறாததினாலும், பதினொன்கென்பது பொதுவிலக்கணமாதலாலும் அஃது இச்சூத்திரக்கருத்தன்று. தன்னுரையானும் பிறநூலானும் ஐங்காண்டிகை யுறுப்பின் மேற்பட்டு வருவனவெல்லாம் விருத்தியுரை யென்பதே இதன் கருத்தெனக்காண்க." என்பர்—இராமாநுசகவிராயர்.

கனம் பொருந்திய கோணலை, நூல் - எற்றுநூலானது, தீர்க்கும்- நீக்கும், அஃதே போல் — அதுபோலவே, நூல் - கல்விநூலானது, மாந்தர் - மனிதரது, மனம் கோட்டம் - மனத்தினது கோணலை, தீர்க்கும் - நீக்கும், மாண்பு - அந்நூல்போலச் செப்பம் செய்யும் இம்மாட்சிமையாலும் நூலென்றது உவமையாகுபெயராம். எ-று.

போ-ரை. அந்நூல்போற் செப்பஞ் செய்தலானும் நூலென்றது உவமையாகுபெயராம். எ-று.

வி-பு. புரத்தினது உரத்தின்வளம் பெருச்கி உள்ளியதீமை வளமுருக்கி எனக்கூட்டுக. புரம்-உடம்பு. உரம்-நெஞ்சு. பின்பு தீமைவளம் என்றமையான் முன்பு நல்வளம் எனத்தந்துரைக்க. நல்வளம்-அறிவு. தீமைவளம்-அறியாமை.

உசு. குலனரு டெய்வங் கொள்கை மேன்மை - கலைபயி றெளிவு கட்டுரை வன்மை - நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியு - முலகிய லறிவோ - டுயர்குண மினையவு-மமைபவ னூலுரை யாசிரி யன்னே.

இது நிறுத்தமுறையானே ஆசிரியனதுவரலாறு உணர்த்துகின்றது.

ப-ரை. குலன் - நல்லசாதியும், அருள் - கருணையும், தெய்வம் கொள்கை-கடவுள் வழிபாடும், மேன்மை - மேம்பாடும், கலை பயில் தெளிவு - நூல்களிலே பழகிய தெளிவும், கட்டு உரை வன்மை - தொடுத்துச் சொல்லுகின்ற உரைவலிமையும், நிலம் மலை நிறை கோல் மலர் நிகர் - நிலத்தையும் மலையையும் துலாக்கோலையும் மலரையும் நிகர்க்கின்ற, மாட்சியும் - குணங்களும், உலகு இயல் - உலக நடையை, அறிவு - அறியுமறிவும், உயர் குணம்-உயர்வாகிய குணங்கள், இனையவும் - இவைபோல்வன பிறவும், அமைபவன் - நிறைந்திருப்பவன், நூல் உரை ஆசிரியன்-நூல்கற்பிக்கும் ஆசிரியனாவான். எ-று.

போ-ரை. இவ்வியல்பினையுடையார் கற்பிக்கும் ஆசிரியராவார்.

உஎ. தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும் - பருவ முயற்சி யளவிற் பயத்தலு - மருவிய நன்னில மாண்பா கும்மே.

இது மேற்கூறிய நிலவுவமையை விரித்துணர்த்துகின்றது.

ப-ரை. தெரிவு அரும் பெருமை உம்-பிறராலறியப்படாத உருவத்தின் பெருமையும், திண்மையும் - பெரிய பாரஞ்செய்து தன் மேலே நெருங்கினவ[ை]களாற் கலங்காத வலிமையும், பொறையும் - தன்னையுடுத்த மனி[த]ர் தோண்டுதலாதியாகிய குற்றங்களைச் செய்

யினும் பொறுக்கின்ற பொறுமையும், பருவம் முயற்சி அளவில் பயத்தல் உம்-பருவத்திலேஉழவர்செய்கின்றமுயற்சியளவிற்குத்தக அவருக்குப் பயனைத் தருதலும்,நல் நிலம் - நல்ல நிலத்தினிடத்து, மருவிய-பொருந்திய; மாண்பு ஆகும்-குணங்களாகும். எ-று.

பொ-ரை. நிலத்துமாட்சிமை இதுவாதலின் இஃது உவமையாயிற்று.

உஅ. அளக்க லாகா வளவும் பொருளும் - துளக்க லாகா நிலையுந் தோற்றமும் - வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

இது மேற்கூறிய மலையுவமையை விரித்துணர்த்துகின்றது.

ப-ரை. அளக்கல் ஆகாத அளவு உம்-அளவுசெய்யப் படாததன் வடிவத்தினளவும், (அளக்கலாகாத) பொருள் உம் - அளவுசெய்யப் படாத பலவகைப் பொருளும், துளக்கல் ஆகாத நிலையும்-எப்படிப் பட்ட வலிமை யுடையவராலும் அசைக்கப்படாத உருவத்தி னிலையும், தோற்றம் உம் - நெடுந்தூரத்தி லுள்ளாராலுங் காணப்படும் உயரச்சியும், வறப்பினும் வளம் தரும் வண்மை உம் - மழைபெய்யாமல் வறந்தகாலத்திலும் தன்னைச்சேர்ந்த உயிர்களுக்குக் குளிர்ச்சியைக்கொடுக்கிற கொடையும், மலைக்கு - மலைக்குள்ள குணங்களாகும். எ-று.

பொ-ரை. மலையினது மாட்சிமை யிதுவாதலின் இஃது உவமையாயிற்று. எ-று.

உகூ. ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலு-மெய்ந்நடு நிலையு மிகுநிறைகோற்கே.

இது மேற்கூறிய நிறையுவமையை விரித்துணர்த்துகின்றது.

ப-ரை. ஐயம்தீர பொருளை உணர்த்தல்உம்-சந்தேகந்தீர நிறுக்கப்பட்ட பண்டத்தினளவைக் காட்டலும், மெய் நடு நிலை உம் - உண்மைபெறத்தான் இரண்டு தட்டுகளுக்கும் நடுவே நிற்கையும், நிறை கோற்கு - தராசுகோலின்கண், மிகும்-குணங்களாக மிகும்.

பொ-ரை. நிறைகோலினது மாட்சிமை இதுவாதலின் இஃது உவமையாயிற்று. எ-று.

ந௦. மங்கல மாகி யின்றி யமையா-தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப் - பொழுதின் முகமலர் வுடையது பூவே.

இது மேற்கூறிய பூவின் உவமையை விரித்துணர்த்துகின்றது.

ப-ரை. மங்கலம் ஆகி-சுபச்செய்கைக் குரியதாகி,இன்றி அமையாது - யாதொருசெயினும் அலங்கரிக்குந்தானில்லாது முடியாத

தாக, யாவரும் மகிழ்ந்து மேல் கொள-கண்டோர் யாவருங் களித்து மேலாகத் தன்னைச் சூடிக்கொள்ள, மெல்கி-மெல்லியகுணமுடையதாகி, பொழுதில் முகம் மலர்வு உடையது-மலர்தற்குரிய காலத்திலே முகம் விரிதலையுடையது, பூ-பூவாகும். எ-று.

போ-ளா. மலரினது மாட்சிமை இதுவாதலின் இஃது உவமையாயிற்று. எ-று.

வி-பு. இவ்வுவமைகளினது மாட்சிமைபோலப் பொருளினது மாட்சிமையும் விரித்துரைத்துக்கொள்க.

௩௧. மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பு-மழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலுங் - கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை - முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையு-முடையோ ரிலரா சிரியரா குதலே.

இது ஆசிரியராகார் இவரென உணர்த்துகின்றது.

ப-ளா. மொழி குணம் இன்மை உம் - பாடஞ்சொல்லுங் குணமில்லாமையையும், இழிகுணம் இயல்புஉம்-இழிகுணமாகிய சுபாவத்தையும், அழுக்காறு-பிறருக்கு வருங் கல்வியைக் குறித்துக்கொள்ளும் பொறாமையையும், அவா-பொருளின்மேல் அதிகமாகவைக்கும் ஆசையையும், வஞ்சம் - மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப்பொருளைக்காட்டி வஞ்சித்தலையும், அச்சம் ஆடலும் - கேட்போருக்கு அச்சமுண்டாகப் பேசுதலையும், கழல் குடம் மடல் பனை பருத்தி குண்டிகை முடம் தெங்கு - கழற்குடமும் மடற்பனையும் பருத்திக் குண்டிகையும் முடத்தெங்கும் ஆகிய நான்கனையும், ஒப்பு என - ஒப்பென்று சொல்ல, முரண் கொள் சிந்தை உம் - மாறுபாடு கொண்டகருத்தையும், உடையோர்-தம்மிடத்திலுண்டாயவர், ஆசிரியர் ஆகுதல்-கற்பிக்கு மாசிரியராகுதல், இலர்-இலராவர். எ-று.

போ-ளா. இக்குற்றங்களையுடையோர் கற்பிக்கும் ஆசிரியராகார்.

௩௨. ¶ பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றருஞ் - செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

இது மேற்கூறிய கழற்குடம் என்னும் உவமையை விரித்துணர்த்துகின்றது.

¶ "இது உவமையாதலால் தாம் கற்பிக்கும்போது கற்றநூல் வரிசைப்படி தம்மாணுக்கரைக் கற்பிக்கப்புகாமல் பின்முன்னாகவும், முன்பின்னாகவும், விரைந்து கற்பிக்கப்புகுதல் ஆசிரியராகாதவருடைய மாறுபாட்டு நிலையெனப்பொருளுரைத்துக்கொள்க." என்பர் — இராமாநுசகவிராயர்.

ப-ரை. பெய்த முறை அன்றி-தன்னுள்ளே போட்டமுறையினு லல்லாமல், பிறழ - முன் போடப்பட்டவையும் பின்போடப்பட்ட வையும் அம்முறை பிறழ்ந்துபோக, உடன்தரும் - விரைவிலே தன் னுள்ளேகொண்ட கழற்காய்களைக் கொடுக்கின்ற, செய்தி-செய்கை யானது, கழல் பெய் குடத்தின் சீர் - கழற்காய்போட்ட குடத்தி ன்து குற்றமாம். எ-று.

பொ-ரை. கழற்பெய்த குடத்தின் குற்றம் இதுவாதலின் இஃது உவமையாயிற்று. எ-று.

௨௩. தானே தரக்கொளி னன்றித் தன்பான் மேவிக் கொளக்கோ டா விடத்தது மடற்பனை.

இது மேற்கூறிய மடற்பனை என்னும் உவமையை விரித்துணர்த்து கின்றது.

ப-ரை. தானே தர-தன்னிடத்துள்ள பழங்களைத்தர, கொளின் அன்றி-கொண்டாற் கொள்ளலாமே அல்லாமல், தன்பால் மேவி கொள - ஒருவர் தன்னிடத்து நெருங்கிவந்து பறித்துக்கொள்ள, கொடாத விடத்தது - அப்பழங்களைக் கொடாத இடத்தையுடை யது, மடல் பனை-தன்வடிவ முழுதும் மடல்விரிந்தபனை. எ-று.

பொ-ரை. மடற்பனையின் குற்றம் இதுவாதலின் இஃது உவமை யாயிற்று. எ-று.

௨௪. அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க் - கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

இது மேற்கூறிய பருத்திக்குண்டிகை என்னும் உவமையை விரித் துணர்த்துகின்றது.

ப-ரை. அரிதில் பெய்ய கொண்டு - பஞ்சைக் கொண்டபோதும் வருத்தத்தோடு சிறிதுசிறிதாக அடைப்பத் தன்னுள்ளே கொண்டு, அ பொருள் தான் பிறர்க்கு எளிது ஈவு இல்லது - கொடுக்கும் போதும் அப்பஞ்சைத் தான் பிறர்க்கு எளிதில் கொடாத குற்ற முடையது, பருத்தி குண்டிகை - பஞ்சுபேர்ட்ட குடுக்கையாகும்.

பொ-ரை. பருத்திபெய்த குண்டிகையின் குற்றம் இதுவாதலின் இஃது உவமையாயிற்று. எ-று.

௨௫. பல்வகை யுதவி வழிபடு பண்பி - னல்லோர்க் களிக்கு மது முடந் தெங்கே.

இது மேற்கூறிய முடத்தெங்கு என்னும் உவமையை விரித்துணர்த்து கின்றது.

ப-ரை. பல் வகை உதவி - நீர்விடுகை முதலாகிய பலவகை உபகாரங்களையுஞ் செய்து, வழி படு பண்பின் - தனக்கு வழிபாடு செய்யுங் குணத்தினின்றும், அல்லோர்க்கு - அல்லாத பிறருக்கு, அளிக்கும் அது - தன்னிடத்துள்ள காய்களைத் தருங் குற்றமுடையது, முடம் தெங்கு - வேலிக்கப்புறம் வளைந்த தென்னமரமாம்.

பொ-ரை. முடத்தெங்கினது குற்றம் இதுவாதலின் இஃது உவமையாயிற்று. எ-று.

வி-பு. இவ் வுவமைகளின் குற்றம்போலப் பொருளின் குற்றமும் விரித்துரைத்துக்கொள்க.

௩௬. ஈத லியல்பே யியம்புங் காலைக் - காலமு மிடனும் வாலிதி னோக்கிச் - சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி - யுரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து - விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து - கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக் - கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப.

இது நிறுத்தமுறையானேஆசிரியன்கற்பிக்குமாறுஉணர்த்துகின்றது.

ப-ரை. ஈதல் - பாடஞ்சொல்லுதலினது, இயல்பு - வரலாற்றை, இயம்பும் காலை - சொல்லும்போது, காலமும் - உரிய காலத்தையும், இடனும் - உரிய இடத்தையும், வாலிதின் - தூயனவாக, நோக்கி - பார்த்து, சிறந்த உழி இருந்து - சிறந்த இடத்து இருந்து, தன் தெய்வம் - தான் வழிபடுகடவுளை, வாழ்த்தி - வாழ்த்துதல்செய்து, உரைக்க படும் பொருள் - பாடஞ் சொல்லப்படும் பொருளை, உள்ளத்து - தன் கருத்தின்கண், அமைத்து - நிறைத்து, விரையான் - விரையானாகியும், வெகுளான் - கோபம்செய்யானாகியும், விரும்பி - இச்சித்து, முகம் மலர்ந்து - முகமலர்ச்சியை யடைந்து, கொள்வோன் - கேட்பவனது, கொள்வகை - கேட்குமறிவின்வகையை, அறிந்து - உணர்ந்து, அவன் உளம் - அவனதுமனம், கொள - ஏற்றுக்கொள்ள, கோட்டம் இல் - மாறுபாடு இல்லாத, மனத்தின் - மனத்துடனே, நூல் - நூலை, கொடுத்தல் - கொடுத்தலாகும், என்ப - என்று சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. கற்பிக்குமாறு இவ்வாறெனச் சொல்லுவர் புலவர். எ-று.

௩௭. தன்மக னாசான் மகனே மன்மகன் - பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே - யுரைகோ ளாளற் குரைப்பது நூலே.

இது நிறுத்தமுறையானே மாணாக்கனதுவரலாறுஉணர்த்துகின்றது.

ப-ரை. தீன் மகன் - தன் புதல்வனுக்கும், ஆசான் மகன் - தன் ஞாசிரியன் புதல்வனுக்கும், மன் மகன் - அரசன் புதல்வனுக்கும், பொருள் நனி கொடுப்போன் - பொருளை மிகுதியாகக் கொடுப்போனுக்கும், வழி படுவோன் - வழிபாடுசெய்வோனுக்கும், உரை கோள் ஆளற்கு - தன்னாற்சொல்லப்பட்ட உரையை விரைவிலே கற்கும் அறிவுடையோனுக்கும், உரைப்பது - சொல்லப்படுவது, நூல் - நூலாகும். எ-று.

பொ-ரை. இவ்வறுவர்க்கும் சொல்லப்படுவது நூல். எ-று.

௩அ. அன்ன மாவே மண்ணொடு கிளியே - யில்லிக் குடமா டெருமை நெய்யரி - யன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

இது மாணாக்கனது வகுப்பும் உவமையும் உணர்த்துகின்றது.

ப-ரை. அன்னம் - அன்னத்தையும், ஆ பசுவையும், (அன்னர்) - போல்வார், தலை (மாணாக்கர்) - முதன்மாணாக்கர், மண் - மண்ணையும், கிளி - கிளியையும், (அன்னர்) - போல்வார், இடை (மாணாக்கர்) - நடுமாணாக்கர், இல்லி குடம் - பொள்ளற் குடத்தையும், ஆடு - ஆட்டையும், எருமை - எருமையையும், நெய் அரி - பன்னாடையையும், (அன்னர்) - போல்வார், கடைமாணாக்கர் - கடைமாணாக்கர்.

பொ-ரை. மேற்கூறிய அறுவருள் அன்னமும் பசுவும் போல்வார் தலைமாணாக்கர்; மண்ணும் கிளியும் போல்வார் இடைமாணாக்கர்; இல்லிக் குடமும் ஆடும் எருமையும் நெய்யரியும் போல்வார் கடைமாணாக்கர். எ-று.

வி-பு. இவ்வுவமைத் திறமும் பொருட்டிறமும் விரித்து உரைத்துக் கொள்க.

௩௯. களிமடி மானி காமி கள்வன் - பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன் - றுயில்வோன் மந்தன் றொன்னூற் கஞ்சித் - தடுமா றுளத்தன் றறுகணன் பாவி - படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

இது மாணாக்கராகார் இவரென உணர்த்துகின்றது.

ப-ரை. களி - கட்குடியனும், மடி - சோம்பேறியும், மானி - அபிமானமுடையவனும், காமி - காமமுடையவனும், கள்வன் - திருடனும், பிணியன் - நோயாளியும், ஏழை - ஏழைமை யுடையவனும், பிணக்கன் - பிணக்குடையவனும், சினத்தன் - கோபமுடையவனும், துயில்வோன் - மிகத் தூங்குவோனும், மந்தன் - புத்திநுட்பம் இல்லாதவனும், தொல் நூற்கு அஞ்சி தடுமாறு உளத்தன் - பழையநூல்களைக்கண்டு அஞ்சித்தடுமாறு முள்ளத்தை

யுடையவனும், கறுகணன்-அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவனும், பாவி - பாவஞ் செய்வோனும், படிறன் - பொய் பேசுகிறவனும், இன்னோர்க்கு - ஆகிய இப்படிப்பட்ட குற்றத்தையுடையவருக்கு, நூல் - நூலை, பகரார் - சொல்லார். எ - று.

போ-ரை. இக்குற்றங்களையுடையார்க்கு நூலைச்சொல்லார் ஆசிரியர்.

சுo. கோடன் மரபே கூறுங் காலைப் - பொழுதொடு சென்று வழி படன் முனியான் - குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்-திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப் - பருகுவ னன்ன வார்வத்த னாகிச்-சித்திரப் பாவையி னத்தக வடங்கிச் - செவிவா யாக நெஞ்சுகள னாகக்-கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்-போவெனப் போதலென்மனார் புலவர்.

இது நிறுத்தமுறையானே மாணக்கர் நூலைக் கற்குமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. கோடல் மரபு - பாடங்கேட்கையினது வரலாற்றை, கூறும் காலை - சொல்லும்பொழுது, பொழுதொடு - தகுங்காலத்தில், சென்று - போய், வழி படல் - வழிபாடுசெய்தலில், முனியான் - வெறுப்பில்லாதவனாகி, குணத்தொடு - ஆசிரியன் குணத்தோடு பொருந்த, பழகி - பயின்று, அவன் குறிப்பின் - அவன் குறிப்பின் வழியிலே, சார்ந்து - சேர்ந்து, இரு என - இருவென்று சொன்னபின், இருந்து - இருந்து, சொல் என - படியென்று ஆகியும், பின், சொல்லி - [illegible] - பருகுவன் அன்ன - பசித்து முகம் [illegible]னைப்போல, ஆர்வத்தன் ஆகி - [illegible] [illegible]யனாகி, சித்திரம் பாவையின் - [illegible] அத்தகவு அடங்கி - அவ்வகைவறு குணத்[illegible] [illegible] காதானது, வாய் ஆக - வாயாகவும், நெஞ்சு - மனமானது, களன் ஆக - கொள்ளுமிடமாகவும், கேட்டவை - முன் கேட்கப்பட்டவற்றை, கேட்டு - திரும்பிக்கேட்டு, அவை - அப்பொருள்களை, விடாது - மறந்துவிடாமல், உளத்து - உளத்தின்கண், அமைத்து - நிறைத்துக்கொண்டு, போ என - போவென்றபின், போதல்-போகுதலாகும், என்மனார்-என்று சொன்னார், புலவர்-புலவரானவர்.

போ-ரை. கற்குமாறு இவ்வாறெனச் சொல்லுவர் புலவர். எ-று.

சக. நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல் - பாடம் போற் றல் கேட்டவை நினைத்த - லாசாற் சார்ந்தவை யமைவரக் கேட்ட - லம்மாண் புடையோர் தம்மொடு பயிறல் - வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை - கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

இது மாணாக்கன் அறியாமைநீங்குமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. நூல் பயில் இயல்பு - நூலைக்கற்றலி னியல்பை, நுவலின் - சொல்லினால், வழக்கு - உலகவழக்குஞ் செய்யுள்வழக்கு மாகிய இருவகை நடையையும், அறிதல் - ஆராய்ந் தறிதலும், பாடம் - கேட்டபாடத்தை, போற்றல் - பலகாற் சிந்தித்தலும், கேட்டவை - தான்கேட்ட பொருள்களை, நினைத்தல் - எண்ணுத லும், ஆசான்-ஆசிரியனை, சார்ந்து - அடுத்து, அவை - அவற்றை, அமைவு அர - குறைவுதீர, கேட்டல் - கேட்டலும், அ மாண்பு - அக்கல்வி மாட்சிமையை, உடையோர் தம்மொடு - உடையவ ரோடு, பயிறல் - பழகுதலும், வினாதல் - தான் ஐயுற்றபொருளை வினாவுதலும், வினாயவை விடுத்தல் - அவர் வினாவியவைகளுக்கு உத்தரங் கொடுத்தலும், என்ற - என்று சொல்லப்பட்ட, இவை - இச்செயல்களை, கடன் ஆக - முறையாக, கொளின் - மாணாக்கன் கொண்டால், மடம் - அறியாமையானது, நனி - மிகவும், இகக் கும் - அவனைவிட்டு நீங்கும். எ-று.

போ-ரை. இவ்வாறு நூலைப்பயின்றவர்க்கு அறியாமை மிகுதியும் போம். எ-று.

சஉ. ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற் - பெருக நூலிற் பிழை பாடிலனே.

இது மாணாக்கன் நூலை இருகாற்கேட்டலின்பயன் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒரு குறி - ஒருதரம், கேட்போன் - ஒருநூலைப் பாடங்கேட்டவன், இரு கால் - இரண்டுதரம், கேட்பின் - கேட் டானாயின், நூலில் பிழைபாடு - அந்நூலிற் பிழைபடுதல், பெருக - மிகுதியும், இலன் - இலனாவன். எ-று.

போ-ரை. ஒருகால் கேட்ட துணையானே அமையாது இருகால் கேட்பானாகில் அந்நூலின்கண் பிழைபாடு மிகுதியுமிலன். எ-று.

சங. முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

இது மாணாக்கன் நூலைமுக்காற்கேட்டலின்பயன் உணர்த்துகின்றது.

ப-ரை. காலம் - நூல்செய்தார் காலமும், களன் - நூலரங் கேற்றிய சபையும், காரணம் - நூல் செய்தற்குக் காரணமும், என்று - என்று, இ மூவகை - இம் மூன்றனையும், ஏற்றி - இவ் வெட்டினோடு கூட்டி, மொழிநர் உம் - பதினொன்றாகச் சொல்லு வாரும், உளர் - சிலருளர். எ-று.

பொ-ரை. அவ்வெட்டனோடு இம்மூன்றனையுங் கூட்டிப் பதினொன் ருகக் கூறுவாருமுளர். எ-று.

சக. முதனூல் கருத்த னளவு மிகுதி - பொருள்செய் வித்தோன் றன்மைமுத னிமித்தினு - மிடுகுறி யானு நூற் கெய்தும் பெயரே.

இது மேற்கூறியபதினொன்றனுள் நூற்பெயர்ந்த சிறப்புவிதி உணர் த்துகின்றது.

ப-ரை. முதல் நூல் - முதனூலும், கருத்தன் - செய்தவனும், அளவு - அளவும், மிகுதி - மிகுதியும், பொருள் - பொருளும், செய்வித்தோன் - செய்வித்தவனும், தன்மை - குணமும், முதல் - முதலாகிய, நிமித்தின் உம்-காரணங்களாலும், இடு குறியான் உம் - இடுகுறியாலும், நூற்கு-நூலுக்கு, பெயர்-பெயரானது, எய்தும் - வரும். எ-று.

பொ-ரை. முதனூல் முதல் தன்மையீருகக் கூறியவேழும் பிறவு மாகிய காரணங்களானும் இடுகுறியானும் நூற்குப் பெயர்வரும். எ-று.

வரலாறு. முதல் நூலால் பெயர்பெற்றன ஆசிரியப்படலம், பார தம் முதலாயின. கருத்தனுல் பெயர் பெற்றன அகத்தியம், தொல்காப் பியம் முதலாயின. அளவினால் பெயர்பெற்றன பன்னிருபடலம், நாலடி நானூறு முதலாயின. மிகுதியால் பெயர்பெற்றன களவியல் முதலாயின. பொருளால் பெயர்பெற்றன அகப்பொருள் முதலாயின. செய்வித்தோ னால் பெயர்பெற்றன சாதவாகனம் முதலாயின. தன்மையால் பெயர் பெற்றன சிந்தாமணி, நன்னூல் முதலாயின. இடுகுறியால் பெயர்பெற் றன நிகண்டு, கலைக்கோட்டுத்தண்டு முதலாயின. பிறவுமன்ன.

ரு௦. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழி பெயர்ப் பெனத்தரு நால்யாப் பிற்றன் டேன்ப.

இது வழியின் வகையாகிய நால்யாப்பினுக்குச் சிறப்புவிதி உண ர்த்துகின்றது.

ப-ரை. தொகுத்தல் - விரிந்துகிடக்கின்றவைகளைத் தொகுத் துச் சொல்லுதலும், விரித்தல் - சுருங்கிக் கிடக்கின்றவைகளை

விரித்துச் சொல்லுதலும், தொகை விரி - தொகுத்தும் விரித்துஞ் சொல்லுதலும், மொழி பெயர்ப்பு - பதினெண் மொழியுள் ஒன்றனுள் இருக்கின்ற பொருளை மற்றொன்றுள்ளே திருப்பிச்சொல்லுதலும், என தகும் - என்று சொல்லத்தகும், ஈரிரண்டு - நான்கு பிரிவையுடைத்தாகும், நூல் யாப்பு - நூல்யாப்பானது, என்ப - என்று சொல்லுவர் புலவர். எ-று.

போ-ரை. நூல் யாப்பு இந்நான்கு கூற்றதாமென்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. வெண்பா முதலிய யாப்பினோடு இவற்றிற்கு வேற்றுமை தோன்ற நூல்யாப்பு என்றார்.

ருக. தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்-றன்மா ணாக்கன் றகுமுரை காரனென் - றின்னோர் பாயிர மியம்புதல் கடனே.

இது இவ்விலக்கணங்களை யுடைய சிறப்புப்பாயிரங்கூறுதற்குறியார் இவரென உணர்த்துகின்றது.

ப-ரை. தன் ஆசிரியன்-தன்னுடைய ஆசிரியனும், தன்னொடு கற்றோன் - தன்னோடு பாடம் கேட்டவனும், தன் மாணாக்கன் - தன்னுடைய மாணாக்கனும், தகும் உரை காரன் - தன்னூலுக்குத் தகுமுரையைச் செய்தவனும், என்ற - என்று சொல்லப்பட்ட, இன்னோர் - இந்நால்வருள் ஒருவர், பாயிரம் - சிறப்புப்பாயிரத்தை, இயம்புதல் - சொல்லுதல், கடன் - முறைமையாகும். எ-று.

போ-ரை. ஒருவன் கூறிய நூற்கு இந்நால்வருள் ஒருவர் சிறப்புப் பாயிரங் கூறுதல் முறைமையாம். எ-று.

ருஉ. தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினுந்-தான்றற் புகழ்தல் றகுதி யன்றே.

இது சிறப்புப்பாயிரம் பிறர் கூறுதற்குங் காரணம் உணர்த்துகின்றது.

ப-ரை. தோன்றா - தோன்றாத நுட்பங்களெல்லாம், தோற்றி - காட்டி, துறை பல-பலதுறைப்பட்டு விரிந்த நூலை, முடிப்பின் உம் - செய்துமுடித்தாலும், தான்-தானே, தன் புகழ்தல் - தன்னைப் புகழ்ந்துகொள்ளுதல், தகுதியன்று - தகுதியன்றாம்.

போ-ரை. தோன்றாத நுட்பங்களையெல்லாந் தோற்றிப் பலதுறைப் பட்டு விரிந்தநூலைச்செய்து முடித்தானாயினும் தன்னைத்தான் புகழ்தல் தகுதியன்றாமாதலின் நூல்செய்வானது புகழாகிய சிறப்புப்பாயிரத்தை பிறர்கூறவேண்டும். எ-று.

௫௩. மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினுந் - தன்னுடை யாற்ற லுணரா ரிடையினு - மன்னிய வவையிடை வெல்லுறு பொழுதினுந் - தன்னை மறுதலை பழித்த காலையுந் - தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோற்கே.

இது தற்புகழ்ச்சியும் ஒரோவழிக்குற்றம் அன்றென்பது உணர்த்து கின்றது.

ப-ரை. மன்னுடைய மன்றத்து - அரசனது சபைக்கெழுதும், ஓலை தூக்கின் உம் - சீட்டுக்கவியிலும், தன்னுடைய ஆற்றல் உணரார் இடையின் உம் - தனது வலிமையை யறியாதா ரிடத்திலும், மன்னிய அவை இடை வெல்லுறு பொழுதின் உம் - பெரியசபை யில் வாதஞ் செய்து வெல்லும்பொழுதும், தன்னை மறுதலை பழித்த காலை உம்-தன்னை எதிரிபழித்த காலத்தும், தன்னை புகழ் தல் உம் - தன்னைத்தான் புகழ்ந்துகொள்ளலும், புலவோற்கு - புலவனுக்கு, தகும் - தகும். எ-று.

பொ-ரை. இவ்விடங்களாயின் தன்னைப் புகழ்தலுந் தகுதியாம் புல வோற்கு. எ-று.

வி-பு. புகழ்தலும் என்ற உம்மையான் இவ்விடங்களினும் தன்னைப் புகழாமையே தகுதியென்பது பெற்றாம்.

௫௪. ஆயிர முகத்தா னகன்ற தாயினும் - பாயிர மில்லது பனுவ லன்றே.

இது இருவகைப் பாயிரங்களும் நூற்கு இன்றியமையாதனஎன்பது உணர்த்துகின்றது.

ப-ரை. ஆயிரம் முகத்தான் - ஆயிரமுறுப்புக்களால், அகன்றது ஆயின் உம் - விரிந்ததாயினும், பாயிரம் இல்லது-பாயிரமில்லாதது, பனுவல அன்று - நூலன்றாகும்- எ-று.

பொ-ரை. ஆயிர முறுப்புக்களான் விரிந்த நூலாயினும் பாயிரமில் லாதது நூலன்று. எ-று.

௫௫. நேரிசைவெண்பா. — மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோ புரமு-மாடமைத்தோ ணல்லார்க் கணியும்போ - லாடிய - னைதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்-பெய்துரையா வைத்தார் பெரிது.

இது மேல் பாயிரமில்லது பனுவல் அன்றென்றார், அஃது அன்ற தற்குக் காரணம் உணர்த்துகின்றது.

ப-ரை. மாடம் கு - மாளிகைக்கு, சித்திரம் உம் - ஓவியமும், மா நகர்க்கு - பெரியபட்டணத்திற்கு, கோபுரம் உம் - சிகரியும், ஆடு - நாட்டியஞ்செய்கின்ற, அமை - மூங்கில் போன்ற, தோள் - தோள்களையுடைய, நல்லார்க்கு-மங்கையருக்கு, அணி உம் போல்-ஆபரணம்போல, நாடி - நினைத்து, ஐது - அழகிய பொருளை, உரையா நின்ற - சொல்லுகின்ற, அணிந்துரையை - இருவகைப் பாயிரங்களையும்: உரையா-உரைத்து, எ நூற்கு உம்-எவ்வகைப்பட்டபெரிய நூலுக்கும், முன் - முன்னே, பெய்து - சேர்த்து, வைத்தார் - ஆசிரியர் வைத்தார், பெரிது - மிகவும். எ-று.

பொ-ரை. அறிவுடையோர் மாடம் முதலிய மூன்றற்குஞ் சித்திர முதலிய மூன்றும்போலக் கருதி, அழகிதாகிய பொருளை உணர்த்தாநின்ற இருவகைப் பாயிரங்களையும் உரைத்து, எவ்வகைப்பட்ட பெரிய நூல்கட்கும் முன்னர்ப் பெய்துவைத்தார் பெரும்பாலும் ஆதலின், பாயிரமில்லது பனுவலன்றாம். எ-று.

பொதுப்பாயிரம், சூ. ருடு.

முற்றிற்று.

முதலாவது

எழுத்ததிகாரம்.

எழுத்ததிகாரம் - என்பது, எழுத்தினது அதிகாரத்தை யுடையது என அன்மொழித்தொகையாய் அப்படலத்திற்குக் காரணக் குறியாயிற்று. எழுத்தென்றது - அகரமுதல் னகர இறுவாய்க் கிடந்த முதலெழுத்து முப்பதும், உயிர்மெய் முதலிய சார்பெழுத்துப் பத்துமாம். அவற்றிற்கு எழுத்தென்னுங்குறி மொழி முதற் காரணம் என்னுஞ் சூத்திரத்தால் ஓதுபவாகலின், ஈண்டு எதிரதுபோற்றி ஆளப்பட்டது. அதிகாரம் - அதிகரித்தல். அஃது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று, வேந்தனிருந்துழி யிருந்து தன்னிலமுழுவதும் தன்னாணையின் நடப்பச்செய்வதுபோல, ஒரு சொல் நின்றுழி நின்று பலசூத்திரங்களும் பல ஓத்துக்களும் தன் பொருளே நுதலிவரச்செய்வது. ஒன்று சென்று நடாத்தும் தண்டத்தலைவர்போல ஓரிடத்து நின்றசொல் பல சூத்திரங்களோடும் சென்றியைந்து தன்பொருளைப் பயப்பிப்பது. இவற்றிற்கு முறையே வடநூலார் யதோத்தேசபக்கம் எனவும், காரியகாலபக்கம் எனவும் கூறுப. * இது சேனாவரையர் உரையானு முணர்க. அவற்றுள் ஈண்டு அதிகாரம்என்பது முன்னையது. அதனை உடையதுஎனவே, எழுத்தை நுதலிவரும் பல ஓத்தினது தொகுதி எழுத்ததிகாரம் என்றாராயிற்று. எழுத்தினது அதிகாரத்தையுடையது என்புழி ஆறாவது வினைமுதற்பொருண்மையின்கண் வந்த காரகம். இப் படலத்துள் விதிக்கப்படுவனவெல்லாம் கருவியும் செய்கையும் என இருவகைப்படும். அவற்றுள் கருவி - எழுத்தியல் பதவியல் என்னும் இரண்டு ஓத்தானும், செய்கை-உயிரீற்றுப் புணரியல் முதலிய

---

* "வடநூலாரும், ஓரிடத்துநின்றசொல் பலசூத்திரங்களோடு சென்றியைதலையும், ஒன்றனதிலக்கணம் பற்றிவரும் பல சூத்திரத்தொகுதியையும் அதிகாரமென்ப." எனக் கூறுவர்—சேனாவரையரும். தொல்காப்பியம், சொல். கிளவியாக்கம், சூ. க. இதனைத் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில் விரித்துக் கூறுவர் சிவஞானமுனிவரும்.—பக்கம் ௬௩.

மூன்றோத்தானுங் கூறப்படும். கருவி பொதுவும் சிறப்பும் என இரு வகைத்து. முதல் இரண்டோத்தினும். கூறப்படுவன பொதுக்கருவி உயிரீற்றுப் புணரியல் முதற்கண் புணர்ச்சி-இன்னதெனக் கூறப்படுவனவும், உருபு புணரியலின் இறுதிக்கண் சாரியைத் தோற்றங் கூறப்படுவனவும் செய்கை ஒன்றற்கே உரிய கருவியாகலின் சிறப்புக்கருவி.

முதலாவது

௧ எழுத்தியல்.

௫௬. பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த - நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே.

இது கடவுள் வணக்கமும் அதிகாரமும் உணர்த்துகின்றது.

ப-ரை. பூ- பூக்களானவை, மலி-நிறைந்த, அசோகின்-அசோக மரத்தினது, புனை-அலங்கரிக்கும், நிழல்-நிழலின்கண், அமர்ந்த - எழுந்தருளியிருந்த, நான்முகன் - நான்கு திருமுகங்களையுடைய கடவுளை, தொழுது - வணங்கி, நன்கு - நன்றாக, இயம்புவன் - சொல்லுவன், எழுத்து-எழுத்திலக்கணத்தை. எ-று.

பொ-ரை. பூக்கள் மலிந்த அசோக மரத்தினது அலங்கரிக்கும் நிழலின்கண் எழுந்தருளி யிருந்த நான்கு திருமுகங்களையுடைய கடவுளை வணங்கி நன்றாகச்சொல்லுவன் எழுத்திலக்கணத்தை. எ-று.

வி-பு. எல்லாநூலும் மங்கலமொழிமுதல் வகுத்துக் கூறவேண்டுதலின் பூமலி என்றும், எல்லாச் சமயத்தோராலும் வணங்கப்படும் படைப்பு முதலிய ஐந்தொழிற்கு முரிய எல்லாக்கடவுளாகியுங் நின்றான் ஒருவனே என்பார் அருகனை நான்முகன் என்றுங் கூறினார். இவ்வாறு வள்ளுவ நாயனாரும்.— † "மலர்மி சையேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்." — என வரையாது கூறுதல் காண்க. எழுத்து என்பது ஆகு பெயர். ஏகாரம் ஈற்றசை. எல்லாம் வல்லகடவுளை வணங்கலான் இனிது முடியும் என்பது கருதி நன்கியம்புவன் என்று புகுந்தமையின் இது நுதலிப்புகுதல் என்னும் உத்தி.

---

† திருக்குறள், ௩.

௩௭. எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை - முதலீ றிடைநிலை போலியென்ற - பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

இது அவ்வெழுத் திலக்கணம் இத்துணைத்து என்பது உணர்த்துகின்றது.

ப-ரை. எண்-எழுத்தின் எண்ணும், பெயர்-பெயரும், முறை-முறையும், பிறப்பு - பிறப்பும், உருவம்-வடிவமும், மாத்திரை-அளவும், முதல் (நிலை) - முதனிலையும், ஈறு (நிலை) - கடைநிலையும், இடை நிலை - இடைநிலையும், போலி - போலியும், பதம் - பதமும், புணர்ப்பு-புணர்ச்சியும், என-என்று, பன்னிருபாற்று - பன்னிருபகுதியினை யுடைத்தாகும், அது - அவ்வெழுத்திலக்கணம், எ-று.

போ-ரை. இப்பன்னிரு பகுதியினையும் உடைத்து அவ்வெழுத்திலக்கணம். எ-று.

வி-பு. என்ற என்பது எண்ணிடைச்சொல். இச்சூத்திரம் தொகுத்துச்சுட்டல் ¶என்னும் உத்தி. மேல்வருவனவெல்லாம் வகுத்துக்காட்டல்.

௩௮. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி - யெழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

இது பன்னிருபாற்றதுவே என்றவற்றுள் எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்தையும் ஓரியலாகவும், அதன் புறத்திலக்கணமாகிய பதம், புணர்ப்பு என்னும் இரண்டனுள் அவ்வெழுத்தானாகும் பதத்தை ஓரியலாகவும், அப்பதம் புணரும் புணர்ப்பை மூன்றியலாகவும், ஒத்துமுறைவைப்பு என்னும் உத்தியான் வைக்கப்புகுந்து, முதற்கண்வைத்த எழுத்தியலின் எழுத்தினது எண்ணினை நிறுத்தமுறையான் உணர்த்துவான் தொடங்கி, எழுத்து இன்னது என்பதூஉம் அதன்வகையும் உணர்த்துகின்றது.

ப-ரை. மொழி-சொல்லுக்கு, முதல்காரணம் ஆம் - ஆதிகாரணமாகி வருகின்ற, அணு திரள் - அணுத்திரளின் காரியமாகிய, ஒலி-ஒலியாவது, எழுத்து - எழுத்தாகும், அது - அவ்வெழுத்து, முதல் (என)-முதலெழுத்து என்றும், சார்பு என-சார்பெழுத்தென்றும், இரு வகைத்து - இரண்டுவகையினை யுடைத்தாகும். எ-று.

¶"சுட்டல்-குறித்தல். உத்தி-புத்திநுட்பம். அது இங்கே புத்திநுட்பத்தினாலே யமைக்கப்பட்ட பொருளின்மேல் நின்றது." என்பர் — இராமாநுசகவிராயர்

போ-ரை. மொழிக்கு முதற்காரணமாய் அணுத்திரளின் காரியமாய் வரும் ஒலியாவது எழுத்து. அது முதலெழுத்து என்றும் சார்பெழுத்து என்றும் இருவகையினை உடைத்து. எ-று.

வி-பு. எனவே மொழிக்கு முதற்காரணம் எழுத்தானாற்போல, எழுத்திற்கு முதற்காரணம் அணுத்திரள் என்பதுபெற்றும். ஆம்என்னும் பெயரெச்சம் ஒலி என்னும் பெயரோடு முடிந்தது. முற்கூறிய முதலியவற்றிற்கு முதற்காரணமாய் அணுத்திரளின் காரியமாய்வரும் ஒலி எழுத்தாகாமையின் 'மொழிமுதற்காரணமாமொலி' என்றார். (சிதலது நீர்வாய்ச் சிறுதுகளால் பெரும் புற்றுருவமைந்த பெற்றியதென்ன ஐம்புலப் பேருருவைந்தும் ஐந்தணுவால் இம்பரில் சமைவது யாவரு மறிதலின், அநாதிகாரணமாகிய மாயையினை ஈண்டுக் கூறாது ஆதிகாரணமாகிய செவிப்புலனும் அணுத்திரளை எழுத்திற்கு முதற்காரணம் என்றார்.) இவ்வாசிரியர்க்கு ¶ மாயை உடன்பாடன்று, அணுத்திரள் ஒன்றுமே துணிவெனின், பிறிதொடு படாஅன் றன்மதங்கோளல் என்னும் மதம்படக் கூறினார் என்றுணர்க. ஈண்டு அணு என்றது ஒலியினது நுட்பத்தை.

௫௯. ¶¶ உயிரு முடம்புமா முப்பது முதலே.

இது முதலெழுத்தின்விரி உணர்த்துகின்றது.

ப-ரை. உயிர் உம்-ஆவியும், உடம்பு உம்-மெய்யும், ஆம்-ஆகும் முப்பது உம்-முப்பதெழுத்தும், முதல்-முதலெழுத்தாகும். எ-று.

போ-ரை. உயிரும் உடம்புமாகும் முப்பதெழுத்தும் முதலெழுத்தாம். எ-று.

¶ "தமக்கு மாயையுடன்பாடுண்மையின் 'மொழிக்காரணமாம் நாதகாரியவொலி எழுத்து." எனச் சூத்திரிப்பர் இலக்கணவிளக்கநூலார்.

"அணுத்திரள் என்றது நாதம்; ஒலி என்றது அதன்காரியவொலி; அணு என்றது ஒலிநுட்பத்தை." என்பர்— இராமாநுசகவிராயர்.

¶¶ "ஊதியத்திற்கு முதற்பணம் என்றதுபோலச் சார்பெழுத்திற்கு முதலெழுத்து காரணங்காட்டி நின்றது. இதைச்சார்ந்து வருதலால் சார்பெழுத்தெனப்பட்டது. முப்பதுமுதல் என வரையாது கூறியது உரைத்தும் என்னும் உத்தி." என்பர்—இராமாநுசகவிராயர்.

முதலெழுத்தையும் ஆய்தத்தையும் உடனெண்ணி நேமிநாதத்தார் முப்பத்தொன்றென்பர். அது—

"ஆவி அகரமுத லாறிரண்டா மாய்தமிடை
மேவுங் ககரமுதன் மெய்களாம்—மூவாறுங்
கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று
நண்ணுமுதல் லெய்பாகு நன்கு."—என்பதனாலுமறிக.

கூ0. உயிர்மெய் யாய்த முயிரள போற்றள - பஃகிய இ உ ஐ ஔ மஃகான் - றனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

இது சார்பெழுத்தின்விரி உணர்த்துகின்றது.

ப-ரை. உயிர்மெய் - உயிர்மெய்யும், ஆய்தம் - ஆய்தமும், உயிர் அளபு - உயிரளபெடையும், ஒற்று அளபு - ஒற்றளபெடையும், அஃகிய இ - குற்றியலிகரமும், (அஃகிய) உ - குற்றியலுகரமும், (அஃகிய) ஐ - ஐகாரக்குறுக்கமும், (அஃகிய) ஔ - ஔகாரக்குறுக்கமும், (அஃகிய) மஃகான் - மகரக்குறுக்கமும், (அஃகிய) தனிநிலை - ஆய்தக்குறுக்கமும், பத்தும் - ஆகிய பத்தும், சார்பெழுத்து ஆகும் - சார்பெழுத்தாகும். எ-று.

பொ-ரை. இப்பத்துஞ் சார்பெழுத்தாம். எ-று.

வி-பு. அஃகுதல் - சுருங்குதல். தனிநிலை - ஆய்தம். உயிர்களோடும் மெய்களோடும் கூடியும் கூடாதும் அலிபோலத் தனிநிற்றலின் தனிநிலையெனப்படும். உயிர்மெய் - உயிரும் மெய்யும் கூடிப் பிறத்தலானும், ஆய்தம் உயிர்போல † "அற்றாலளவறிந் துண்க வஃதுடம்பு பெற்றா னெடிதுய்க்கு மாறு." — என அலகுபெற்றும், மெய்போல †† "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார் - தோன்றலிற் றோன்றாமை நன்று." — என அலகு பெறாதும், ஒருபுடை ஒத்து, அவற்றின் இடையே சார்ந்துவருதலானும், ஏனைய [illegible] முதலெழுத்தின் சிரிபுவிகாரத்தால் பிறத்தலானும், சார்பெழுத்தாயின எனக்கொள்க.) இவ்வாறன்றி உயிர்மெய் [illegible] முதலியனபோல தனித்தானும், [illegible] யானும் இயங்கும் இயல்பின்றி, ஒருமொழி [illegible] இலக்கணமாக உடைமையின் சார்பெழுத்[illegible]
இனி ஆசிரியர் தொல்காப்பியர், செய்கை ஒன்றனையும் நோக்கிச் சார்பெழுத்து மூன்று எனக் கருவிசெய்தாராகலின், இவ்வாசிரியர் செய்கை செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்துப் பத்து எனக் கருவிசெய்தார் என்பதும் உய்த்துணர்க.

கூக. உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்த - மெட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை - யாறே ழஃகு மிம்முப் பானே - ழுகா மாறு றைகான் மூன்றே - யௌகா னொன்றே மஃகான் மூன்றே - யாய்த மிரண் டொடு சார்பெழுத் துறுவிரி - யொன்றேழி மூந்நூற் றெழுபா னென்ப.

இது மேற்கூறிய சார்பெழுத்துப் பத்துக்கும் எண்ணிலக்கணம் உணர்த்துகின்றது.

---

† திருக்குறள், செ. கூசங. †† திருக்குறள், செ. உங௯.

ப-ரை. உயிர் மெய் - உயிர்மெய், இரட்டு நூறு எட்டு - இருநூற்றுப் பதினாறு, உயர் ஆய்தம் - குறுகாத ஆய்தம்,எட்டு-எட்டு, உயிர் அளபு (எடை) - உயிரளபெடை, எழு மூன்று - இருபத்தொன்று, ஒற்று அளபு எடை-ஒற்றளபெடை, ஆறு ஏழ் - நாற்பத்திரண்டு,அஃகும் இ - குற்றியலிகரம், முப்பான் ஏழ்-முப்பத்தேழு, (அஃகும்) உகரம் - குற்றியலுகரம், ஆறு ஆறு - முப்பத்தாறு, (அஃகும்) ஐ கான் - ஐகாரக்குறுக்கம், மூன்று—மூன்று, (அஃகும்) ஔகான் - ஔ காரக்குறுக்கம், ஒன்று - ஒன்று, (அஃகும்) மகரன்-மகரக் குறுக்கம், மூன்று - மூன்று, (அஃகும்) ஆய்தம்-ஆய்தக்குறுக்கம், இரண்டொடு - இரண்டுடனே, சார்பு எழுத்து - சார்பெழுத்தினது, உறு விரி - மிகுந்த விரி, ஒன்று ஒழி மூந்நூறு எழுபரின் - மூந்நூற்றறுபத்தொன்பதாம், என்ப - என்று சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு,குறுகாத ஆய்தம் எட்டு, உயிரளபெடை இருபத்தொன்று, ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, குற்றியலிகரம் முப்பத்தேழு, குற்றியலுகரம் முப்பத்தாறு. ஐகாரக்குறுக்கம் மூன்று, ஔகாரக்குறுக்கம் ஒன்று, மகரக்குறுக்கம் மூன்று, ஆய்தக்குறுக்கம் இரண்டுடனே சார்பெழுத்தினது மிகுந்தவிரி மூந்நூற்று அறுபத்தொன்பதாம் என்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. இவை இத்துணையவாதல் பிறப்பதிகாரத்துட் காண்க. இவ்வாறு உயிர்மெய் ஒழிந்தனவற்றையும் விரித்தல் தொல்நெறி என்பார் என்ப என்றார்.

கூஉ. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

இச்சூத்திர முறையானே எழுத்தின் பெயராமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. இடு குறி காரணம் பெயர் - இடுகுறிப்பெயருங் காரணப்பெயரும் ஆகிய இரண்டும், பொது சிறப்பின - பல்பொருளுக்குப் பொதுப்பெயராகியும் ஒருபொருளுக்குச் சிறப்புப்பெயராகியும் வருவனவாம். எ-று.

பொ-ரை. இடுகுறிப்பெயருங் காரணப்பெயரும் ஆகிய இரண்டும், பல்பொருட்குப் பொதுப்பெயராயும் ஒருபொருட்குச் சிறப்புப்பெயராயும் வருவனவாம். எ-று.

வி-பு. ஒருபொருளைக் குறித்தற்குக் கடவுளானும் அறிவுடையோரானும் இட்டகுறியாகிய பெயர் இடுகுறிப்பெயர். காரணத்தான் வரும் பெயர் காரணப்பெயர்.

[உ-ம்.] நீரம் என்பது இடுகுறிப்பொதுப்பெயர். யானை என்பது இடுகுறிச் சிறப்புப்பெயர். அணி என்பது காரணப் பொதுப்பெயர். முடி என்பது காரணச்சிறப்புப்பெயர்.

இனி * இரட்டுறமொழிதல் என்னும் உத்தியான், இச்சூத்திரத்திற்கு இடுகுறி யென்றும் காரணமென்றுஞ் சொல்லப்படும் இலக்கணங்களை யுடைய பெயர்கள் இடுகுறிகாரணமென்னும் இரண்டற்கும் பொதுவாயும், இடுகுறிக்கே சிறப்பாயும், காரணத்திற்கே சிறப்பாயும் வருவனவாம் என்றும் பொருளுணர்த்துக்கொள்க.

[உ-ம்.] பரம் என்பது இடுகுறிப்பெயர். பரமன் என்பது காரணப் பெயர்.

முக்கணன், அந்தணன், மறவன், முள்ளி, கறங்கு, மொழி, சொல் என்பன காரணவிடுகுறிப்பெயர்.

இவை காரணவிடுகுறியாயது என்னையெனின், இவற்றுள் முக்கணன் என்னும் பெயர் யானைமுகக்கடவுள் முதலியோர்க்கு மூன்றுகண்உளவாக லின் காரணங்கருதிய வழி மூன்றுகண்ணினையுடையோர் பலர்க்கும் சேற லானும், காரணம் கருதாதவழி இடுகுறி மாத்திரையேயாய்ப் பரமனுக்கே சேறலானுங் காரண விடுகுறியாயிற்று, எனப் பெயர்கட்கும் இவ்வாறே காண்க.

இவ்வாறே வடநூலார் இடுகுறியை ரூடி யென்றும், காரணத்தை யோகம் என்றும், காரணவிடுகுறியை யோகரூடி என்றும் வழங்குப. இவ் விலக்கணத்தான் எழுத்தினது பெயரும் பிறபெயரும் வருமாறுகாண்க.

௬௩. அம்முத லீரா றாவி கம்முதல் - மெய்ம்மூ வாறென விளம்பி னர் புலவர்.

இது ஒருசா[illegible]

ப-ரை. அ முதல் - அகர [illegible] டனையும், ஆவி (என) - ஆவியென்[illegible] மூவாறு - பதினெட்டனையும், மெய் [illegible] பினர் - சொன்னார், புலவர் - அறிவுடையோர். [illegible]

---

* "'இரட்டுறமொழிதல் என்பது - பெரியாரைப்பிழையாமை என் புழி பெரியார்என்பது ஆற்றலாற் பெரியராய வேந்தர் மேலும், தவத்தாற் பெரியராய முனிவர் மேலும் நின்றது' — என பரிமேலழகரும்; 'கால முலகம் என்புழி, உலகம் என்பது வடநூலுள் இருபொருட்கும் உரித்தாக ஓதப்பட்டமையின் இரண்டுசொல்லெனவேபடும்' - என சேனாவரையரும் கூறுவர்." என்றும்;—" இதுவே தொல்காப்பியர்க்குங் கருத்தென்றும்; வடநூலார் இதனை நாநார்த்தபதம் எனவுங் கூறுவரெனவும் கூறி, இக்கரு த்துணராத நச்சினார்க்கினியரும் 'ஒருபொரு ளிருசொற்பிரிவில வரையார்' என்னுஞ் சூத்திரத்தை 'இருபொரு ளொருசொற் பிரிவிலர்' என நலிந்து பொருள்கொண்டிடப்படுவர்."—என்றும் உரைப்பும் —பிரயோகவிவேக நூலார்.

பொ-ரை. அகரமுதல் ஔகாரம் ஈறாகக்கிடந்த பன்னிரண்டனை யும் ஆவியென்றும், ககரமுதல் னகரம் ஈறாகக்கிடந்த பதினெட்டினையும் மெய்யென்றும் நூல்களால் சொன்னார் அறிவுடையோர். எ-று.

வி-பு. கடவுளால் ஆவி மெய்யென்றமைத்த பெயர்க்காரணமும் உயிர் களான் முற்றுமுணர்தற்கு அருமையும், கடவுள் நூலுணர்ந்தோர் வழிச் செல்லும் தமது பெருமையும் தோன்ற 'விளம்பினர் புலவர்' என்றார். ஆவியும் மெய்யும் போறலின் இவ்விருவகை யெழுத்திற்கும் ஆவிமெய் யென உவமவாகுபெயராய்க் காரணப் பொதுப்பெயராயின. ஏனையவும் இவ்வாறே காண்க.

சுச. அவற்றுள், அ இ உ எ ஒக்குறி லைந்தே.

இது உயிர் மெய்களுள் குற்றெழுத்தாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. அவற்றுள் - ஆவி மெய்யென்றவற்றுள், அ இ உ எ ஒ - அ இ உ எ ஒ என்கிற, ஐந்து - ஐந்தும், குறில் - குற்றெழுத் தாம். எ-று.

பொ-ரை. ஆவி மெய் என்றவற்றுள் இவ்வைந்தும் குற்றெழுத்தாம்.

சுரு. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.

இது உயிர், மெய்களுள் நெட்டெழுத்தாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என் கிற ஏழும், நெடில் - நெட்டெழுத்தாம். எ-று.

பொ-ரை. இவ்வேழும் நெட்டெழுத்தாம். எ-று.

சுசு. அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே.

இது அவற்றுள் சுட்டெழுத்தாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. அ இ உ - அ இ உ என்கிற மூன்றும், முதல் - சொல லுக்கு முதலில், தனி - தனித்து, வரின் - சுட்டுப்பொருளைக் காட்ட வந்தால், சுட்டு - சுட்டெழுத்தாம். எ-று.

பொ-ரை. இம்மூன்றெழுத்தும் மொழிக்குப் புறத்தும் அகத்தும் முதற்கண் தனித்து சுட்டுப்பொரு ளுணர்த்தவரின் சுட்டெழுத்தாம்.

வி-பு. முதல் எனப் பொதுப்படக் கூறினமையின் புறத்தும் அகத் தும் என்பது பெற்றாம்.

[உ-ம்.] அக்கொற்றன், இக்கொற்றவி, உக்கொற்றன் (எ-ம்) அவன், இவன், உவன் (எ-ம்) வரும்.

அவன் என்பதன்கண் அகரம் அறம் என்பதன்கண் அகரம்போலப் பின் எழுத்துக்களோடு தொடர்ந்துநின்ற ஒருபொருளை உணர்த்தாது, மலையன் என்பதன்கண் பகுதிபோல வேறு நின்று சுட்டுப்பொருள் உண ர்த்தலின் ஒருவரும் இதனையும் தனிவரின் என்றார். இவ்வுரை விரு விரம் இட்டகுறியாகிட

கூஎ.¶ எ யா முதலும் ஆ ஓ வீற்றும்-ஏயிரு வழியும் வினாவா கும்மே.

இது அவற்றுள் வினாவெழுத்தாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. எ யா - எகரமும் யாவும், முதல் உம் - சொல்லுக்கு முதலிலும், ஆ ஓ - ஆகாரமும் ஓகாரமும், ஈறு உம் - சொல்லுக்கு ஈற்றிலும், ஏ - ஏகாரம், இரு வழி உம் - அவ்விரண்டிடத்திலும், (தனிவரின்) - தனித்து வினாப்பொருளைக் காட்டவந்தால், வினா ஆகும் - வினாவெழுத்தாகும். எ-று.

பொ-ரை. புறத்தும் அகத்தும் மொழிமுதற்கண் எகரமும் யாவும், ஈற்றின்கண் ஆகாரமும் ஓகாரமும், இவ்விரண்டிடத்திலும் ஏகாரமும் தனித்து வினாப்பொரு ளுணர்த்த வரின் வினாவெழுத்தாம். எ-று.

வி-பு. மேல் தனிவரின் என்றதனை ஈண்டுங் கூட்டுக. இவை புறத்தும் அகத்தும் வருதலேற்ற பெற்றிகொள்க. ஒன்றின முடித்த றன்னின முடித்தல் என்னும் உத்தியான் யா வினாவையும் உடன் கூறினார்.

[உ-ம்.] எக்கொற்றன், எவன், யாவன் என முதற்கண் வந்தன. கொற்றனா, கொற்றனோ என ஈற்றின்கண் வந்தன. ஏவன், கொற்றனே என ஈரிடத்தும் வந்தது. ஏனைப் பெயர் வினைகளோடும் ஏற்ற பெற்றி யொட்டிக்கொள்க.

கூஅ. வல்லினங் கசட தபற வெனவாறே.

இது வல்லினம் இத்தனையென்று உணர்த்துகின்றது.

ப-ரை. வல் இனம் - வல்லெழுத்துகள், க ச ட த ப ற என - க ச ட த ப ற என்று, ஆறு - ஆறும். எ-று.

பொ-ரை. இவ்வாறும் வல்லினமாம். எ-று.

கூகூ. மெல்லினம் ஙஞண நமன வெனவாறே.

இது மெல்லினம் இத்தனையென்று உணர்த்துகின்றது.

ப-ரை. மெல் இனம் - மெல்லெழுத்துகள், ங ஞ ண ந ம ன என - ங ஞ ண ந ம ன என்று, ஆறு - ஆறும். எ-று.

பொ-ரை. இவ்வாறும் மெல்லினமாம். எ-று.

எ0. இடையினம் யரல வழள வெனவாறே.

இது இடையினம் இத்தனையென்று உணர்த்துகின்றது.

ப-ரை. இடை இனம் - இடையெழுத்துகள், ய ர ல வ ழ ள என - ய ர ல வ ழ ள என்று, ஆறு - ஆறும். எ-று.

பொ-ரை. இவ்வாறும் இடையினமாம். எ-று.

எக. ஐஔ இஉச் செறிய முதலெழுத் - திவ்விரண் டோரின மாய் வரன் முறையே.

இது இனவெழுத்துக்களை உணர்த்துகின்றது.

¶ எய்யாமுதலும் எனப் பாடங்கூறுவர்—இராமாநுசகவிராயர்.

ப-ரை. ஐ ஔ - இனமில்லாத ஐகார ஔகாரங்கள், இ உ - ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களை, சேறிய - தமக்கும் இனமாகப்பொருந்த, முதல் எழுத்து - முதலெழுத்துகளானவை, இவ்விரண்டு-இரண்டிரண்டு, ஓர் இனம் ஆய்-ஓரினமாகி, வரல் - வருதல், முறை - முறையாதலால் அவை இன வெழுத்தென்றும் பெயர்பெறும். எ-று.

பொ-ரை. இனமில்லாத ஐகார ஔகாரங்கள் ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப்பொருந்த முதலெழுத்துகள் இவ்விரண்டு ஓரினமாய் வருதல் முறையாதலால் அவை இனவெழுத்தென்றும் பெயரவாம். எ-று.

எஉ. தான முயற்சி யளவு பொருள்வடி-வானவொன் றாதியோர் புடையொப் பினமே.

இது மேல் இனமென்றதற்குக் காரணம் உணர்த்துகின்றது.

ப-ரை. தானம் - பிறப்பிடமும், முயற்சி - தொழிலும், அளவு-மாத்திரையும், பொருள் - பொருளும், வடிவு - உருவமும், ஆன - ஆகிய இவற்றுள், ஒன்று ஆதி - ஒன்றுமுதலாக, ஓர் புடை ஒப்பு, ஒருபுடை ஒத்தலால், இனம் - இனமாம். எ-று.

பொ-ரை. தானம் முதலிய இவற்றுள் ஒன்றுமுதலாக ஒருபுடை ஒத்தலால் இனமாம். எ-று.

வி-பு. தானம் - உரமுதலியன. முயற்சி - இதழ் முயற்சி முதலியன. அளவு - மாத்திரை. பொருள் - பாலன் விருத்தனானாற்போல குறிலினது விகாரமே நெடிலாதலின் இரண்டற்கும் பொருளொன்றென்று முதல் நூலால் நியமிக்கப்பட்டபொருள். வடிவு - ஒலிவடிவு, வரிவடிவு. இவற்றுள் ஒன்றும் பலவும் ஒத்து இனமாய்வருதல் கண்டுகொள்க.

சார்பெழுத்திற்கு பெயர் கூறாது ஒழிந்தார் ஆய்தம் தனிநிலையாதலானும், ஏனைச் சார்பெழுத்திற்குச் சுட்டுவினா என்று விதந்தோதினவை ஒழிந்த முதலெழுத்தின் பேயரே பெயராய் அடங்குதலானுமென்க. இச் சூத்திரம் ஏதுவின்முடித்தல் என்னும் உத்தி.

எங. சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முத - னடத்த றானே முறையா கும்மே.

இது நிறுத்தமுறையானே முறையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. சிறப்பின் உம் - சிறப்பினாலும், இனத்தின் உம்-இனத்தினாலும், செறிந்து - பொருந்தி, ஈண்டு - இவ்வுலகத்தில், அ முதல்-அகரமுதலாக, நடத்தல் தானே - வழங்குதலே, முறை ஆகும் - எழுத்துகளது முறையாம். எ-று.

பொ-ரை. சிறப்பினானும் இனத்தினானும் பொருந்தி இவ்வுலகத்து அகரமுதலாக வழங்குதலானே எழுத்தினது முறையாம். எ-று.

வி-பு. குறிலினது விகாரமே நெடிலாதலால் குறில் முன்னிற்றலின் சிறப்பின்' என்றும், நெடில் இனமாய்ப் பின்னிற்றலின் இனத்தின் என்றும், நாதமாத்திரையாய் எல்லாவெழுத்திற்குங் காரணமாய் முன்னிற்றலின் அம்முதல் என்றும், எல்லாவெழுத்திற்கும் வைத்த முறைக்காரணம் உயிர்களான் முற்றுமுணர்தலாகாமையின் நடந்தறனே என்றும் கூறினர்.

இவ்வாறு உலகத்தும் பிறப்பொத்தல் பற்றியே யினமென்று வழங்குப வாகலின், ஈண்டு இனத்தினும் என்றதற்குப் பிறகாரணங்களும் உள வேனும் பெரும்பான்மையும் பிறப்பொத்தலே இனமென்று கொள்க. அங்ஙனமாயின் நெடுங்கணக்கினுள் அகரமுதல் னகரவிறுவாய்க்கிடக்கை முறையாதற்குக் காரணமும் ஒருவாறு காட்டுதும்.

§ ["அகரமுதலிய பன்னீருயிருந் தனித்தியங்கு மாற்றலுடைமை யானும், ககரமுதலிய பதினெட்டு மெய்யும் அகரத்தோடு கூடியல்லது இயங்குமாற்றல் இன்மையானும், அச்சிறப்புஞ் சிறப்பின்மையு நோக்கி உயிர் முன்னும் மெய் பின்னுமாக வைக்கப்பட்டன. இனி உயிர்களுள் அ இ உ என்பன முறையே அங்காந்து கூறுமுயற்சியானும், அவ்வங்காப் போடு அண்பல்லடி நாவிளிம்புறக் கூறுமுயற்சியானும், அவ்வங்காப்போடு இதழ்குவித்துக்கூறு முயற்சியானும் பிறத்தலான், அப்பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன; ஆகார ஈகார ஊகாரங்கள் அகரமுதலியவற்றிற்கு இனமாதலின் அவற்றைச் சார வைக்கப்பட்டன."

"இனி எகரமாவது அகரக்கூறும் இகரக்கூறும் தம்மு ளொத்திசைத்து நரமடங்கல்போல் நிற்ப தொன்றாகலானும், ஒகரமாவது அகரக்கூறும் உகரக்கூறும் தம்மு ளொத்திசைத்து அவ்வாறு நிற்பதொன்றாகலானும், அவை அவற்றின்பின் முறையே வைக்கப்பட்டன. ஏகார ஓகாரங்கள் இனமாதலின், அவற்றின்பின் முறையே வைக்கப்பட்டன. அகரமும் யகரமும் இகரமும் தம்மு ளொத்திசைத்து நிற்பதொன்றாகலின் எகர ஏகாரங்களின் பின்னர் ஐகாரமும், அகரமும் வகரமும் உகரமும் தம்மு ளொத்திசைத்து நிற்பதொன்றாகலின், ஒகர ஓகாரங்களின் பின்னர் ஔகாரமும் வைக்கப்பட்டன."

"இவ்வாறுதல் பற்றி ஏ ஓ ஐ ஔ என்னும் நான்கினையும் வடநூலார் சந்தியக்கர மென்பர். கையடனார் நரமடங்கல் போலென்று உவமையுங் கூறினர். இக்கருத்தேபற்றி ஆசிரியர் ‡ "அம்முனிகரம் யகரமென்றிவை யெய்திடை யொத்திசைக்கு மவ்வோ டுவ்வு மவ்வு மௌவோரன்ன." என்றார். இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியரும் * "அகர விகர மைகார மாகும்." ** "அகர வுகர மௌகார மாகும்." எனக்கூறி ஐ என்னும்

---

§ இவ்வுரை தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் விரித்தார்— சிவஞானமுனிவர்.

‡ நன்னூல், சூ. ௧௨௫.

* தொல்காப்பியம், எழு. மொழிமரபு, சூ. ௨௧.

** ஷை ஷை ஷை சூ. ௨௨.

நெட்டெழுத்தின் வடிவு புலப்படுதற்கு அகர இகரங்களையன்றி யிடையே யகரமும் ஒத்திசைக்குமென்பார்." அவ்ற்

*" அகரத் திம்பர் யகரப் புள்ளியு மையெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்." என்றும், மெய்பெற என்ற இலேசானே ஒள என்னும் நெட்டெழுத்தின் வடிவு புலப்படுதற்கு அகர உகரங்களை யன்றி அவற் றிடையே வகரமும் ஒத்திசைக்குமென்றும், இம்பர் உம்பர் என்றாற்போல் வன காலவகை இடவகைகளான் மயங்குமாகலின், இஃதிறில் முதற்க ணிற்பதியாதோ, இறுதிக்க ணிற்பதியாதோ என்னும் ஐயம் நீக்குதற்கு ** " இகரமும் யகரமு மிறுதி விரவும்." என்றுங் கூறினார். மொழிந்த பொருளொடொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்றுமுடித்தல் என்னும் உத்தியான் எகர ஏகாரங்கள் ஒகர ஓகாரங்கள் அவ்வாறாதலுங் கொள்ளவைத்தார்."

மாபாடியத்துள் ஊகாரத்தின் பின்னின்ற வடவெழுத்து நான் குயிர்க்கு மிடையே ரகர லகரக் கூறுக ளொத்து நிற்குமென்ற ஆசிரியர் பதஞ்சலியார்க்கு ஐ ஔ என்புழியும் இடையே யகர வகரக்கூறுகள் விரவிநிற்குமென்பது உடம்பாடாதல் பெற்றாம். எகரமுதலியவற்றுள் அகரக்கூறுகுறைவும் இகர உகரக்கூறுகள் மிகுதியுமாமெனவும் உணர்க. இதுவும் மாபாடியத்திற் கண்டது. ஈண்டுக் கூறியவாற்றானே அகரம் உயிரெழுத்துகளினுங் கலந்து நிற்குமாறறிக."

¶ இனி மெய்களுள் "வலியானை முன்வைத்து மெலியானைப் பின் வைத்தன் மரபாகலின் அச்சிறப்பு நோக்கி வல்லெழுத்துகள் முன்னும், அவ்வவற்றிற் கினமொத்த மெல்லெழுத்துகள் அவ்வவற்றின் பின்னுமாக வைக்கப்பட்டன. அவ்விரண்டும்நோக்கியல்லது இடைநிகரனவா யொலித்

---

* தொல்காப்பியம், எழு. மொழிமரபு, சூ. உரு.

** ஷை ஷை ஷை சூ. உடு.

¶ " உயிருள் - குறிலினது விகாரமே நெடிலாதலால் குறில்முன் நிற் பதினாலும், மெய்யுள்-வலியோர் மெலியோர்க்கு முன்னிற்றல்போல வல் லெழுத்துமுன்னிற்பதினாலுஞ் சிறப்பினும் என்றும், நெடிலும்-மெல்லெழு த்தும் இனமாகி அவற்றின் பின்னிற்றலால் இனத்தினும் என்றும், குறி லினுள் அகரமானது, சைதந்நியமாத்திரமாய்த் தனித்தும், எல்லா உயிர் கட்குங் காரணமாகி யவற்றொடு கலந்தும், அவற்றின் முன்னிற்கும் ஆதி பகவனேபோல நாதமாத்திரையாய்த் தனித்தும், எல்லா வெழுத்திற்குங் காரணமாய் அவற்றின் முன்னிற்றலால் அஃதுதல்என்றும், எல்லாவெழுத் திற்கும், வைத்த முறைக்காரணம், உயிர்களானே முற்றும் உணரலாகாமை யால் நடந்ததனே என்றுங் கூறினர். ஆயினும், மெய்களுள் - முதல்நா முதலண்ணமுறப் பிறக்குஞ் சிறப்புப்பற்றிக் ககரமுதல்என்றும், வலி மெலி யுணர்ந்தலல்லது இடைமையுணரலாகாமையால் அச்சிறப்பின்மை பற்றி யவற்றின்பின் இடையெழுத்தாறும், னகரம் வீடுபெறுதற்குரிய ஆண் மகனை யுணர்த்தலால் அச்சிறப்புநோக்கி இறுதியிலும், அதற்கு இனமாயி னும் றகரம் வல்லெழுத்தாதலால் அதன்முன்னும் வைக்கப்பட்டனவென வுய்த்துணர்ந்துகொள்க. முறையிலக்கணம் முற்றிற்று." என்பர்— இரா மாநுசகவிராயர்.

தல் அறியப்படாமையின் அதுபற்றி இடையெழுத்துகள் அவ்விரு கூற்றிற்கும் பின்வைக்கப்பட்டன."

"ஒருவாற்றா னொத்தலும் ஒருவாற்றான் வேறுதலும் உடைமைபற்றியன்றே இனமென்று வழங்கப்படுவது. அவற்றுள் இடையெழுத்தாறும் இடப்பிறப்பான் ஒத்தலும் முயற்சிப்பிறப்பான் வேறுதலும் உடைமையின் இடைக்கணமென வோரினமாயின. உயிர்க்கணம் வலிகணம் மென்கணம் என்பவற்றிற்கும் இஃதொக்கும்."

"இனிக் ககரங்களும் சகரங்களும் டணக்களும் தநக்களும் பமக்களும் அடிநாவண்ணம் இடைநாவண்ணம் நுனிநாவண்ணம் அண்பல்லடி இதழ் என்னும் இவற்றின் முயற்சியாற் பிறத்தலான் அப்பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன."

"யரலவக்கள் நான்கும் முறையே அடியண்ணமும் இடையண்ணமும் அண்பல்முதலும் இதழும் என்னும் இவற்றின் முயற்சியாற் பிறத்தலான் அப்பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன."

"ழகர றகர னகரங்கள் மூன்றும் தமிழெழுத்தென்பதறிவித்தற்கு இறுதிக்கண் வைக்கப்பட்டன. அவற்றுள்ளும் ழகரம் இடையெழுத்தாகலின் அதுபற்றி இடையெழுத்தோடு சார்த்தி யவற்றிறுதிக்கண் வைக்கப்பட்டது."

"வடமொழியின் லகரம் ளகரமாகவும் உச்சரிக்கப் படுவதன்றி தனியே ஓரெழுத்தன்மையின் அச்சிறப்பின்மைபற்றி இடையெழுத்தாகிய ளகரம் ழகரத்திற்குப் பின்வைக்கப்பட்டது."

"இவ்வாறேஉயிருள்ளும் எகர ஒகரங்கள் ஒருவாற்றாற் சிறப்பெழுத்தாயினும் பிராகிருதமொழியிற் பயின்று வருதலானும், சாமவேதமுடையாருள் ஒருசாரார் இசைபற்றிக் குறுஉக்குறிபோலக்கொண் டோதுபவாகலானும் இறுதிக்கண் வையாது முறைபற்றி ஏகார ஓகாரங்களின்முன் வைக்கப்பட்டன."]

—ஆகையான் முறையாமாறு இவையென உய்த்துணர்ந்துகொள்க. இவ்வாறு உலகத்தும் பிறப்பொத்தல் பற்றியே இனமென்று வழங்குபவாகலின் ஈண்டு இனத்தினும் என்றதற்குப் பிறகாரணங்களுமுளவேனும் பெரும்பான்மையும் பிறப்பொத்தலே இனமென்றுகொள்க.

௭௪. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப - வெழுமணுத் திரளுரங் கண்ட முச்சி - மூக்குற் றிதழ்நாப் பல்லணத் - தொழிலின் வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

இது நிறுத்தமுறையானே பிறப்பாமாறு உணர்த்துவான் தொடங்கி அதன் பொதுவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. நிறை - ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி நிறைந்த, உயிர் - உயிரினது, முயற்சியின் - முயற்சியால், உள் - உள்ளேநின்ற, வளி - காற்றானது, துரப்ப - எழுப்ப, எழும் - எழுகின்ற, அணு திரள் - செவிப்புலனாம் அணுக்கூட்டம், உரம் - மார்பும், கண்டம் - கழுத்தும், உச்சி - தலையும், மூக்கு -

நாசியும் ஆகிய நான்கிடத்தையும், உற்று - பொருந்தி, இதழ் - உதடும், நா - நாக்கும், பல் - பல்லும், அண்ணம் - மேல்வாயும், ஆகிய நான்கனுடைய, தொழிலின் - முயற்சிகளால், வெவ்வேறு - வெவ்வேறு எழுத்து - எழுத்தாகிய, ஒலி ஆய் - ஓசைகளாய், வரல் - தோன்றுதல், பிறப்பு - அவற்றின் பிறப்பாம். எ-று.

பொ-ள். ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு வேண்டுங்காரணங்களி னொருவாற்றானுங் குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால் உள் நின்று எழுப்பவெழுஞ் செவிப்புலனாம் அணுத்திரள் உரமுதலிய நான்கி டத்தையும் பொருந்தி, இதழ் முதலிய நான்கன்தொழில்களால் வெவ்வே றெழுத்தாகிய வொலிகளாய்த் தோன்றுதல் அவற்றின் பிறப்பாம். எ-று.

எரு. அவ்வழி, ஆவி யிடைமை யிடமிட றாகு - மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

இது முதலெழுத்துகட்கு இடம் வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. அ வழி - முன்சொன்னவழியாற் பிறக்குமிடத்து, ஆவி - உயிரெழுத்துகளுக்கும், இடைமை - இடையினத்திற்கும், இடம் - இடம், மிடறு ஆகும் - கழுத்தாகும், மென்மை - மெல்லி னம், மூக்கு - நாசியை, மேவும் - இடமாகப்பொருந்தும், வன்மை - வல்லினம், உரம் - மார்பை, பெறும் - இடமாகப்பெறும். எ-று.

பொ-ள். மேற்கூறிய நெறியாற் பிறக்குங்கால் ஆவி இடையினம் என்னும் இருவகை எழுத்தினுக்கு இடம் மிடறாம். மெல்லினம் மூக்கை இடமாகப்பொருந்தும். வல்லினம் நெஞ்சை இடமாகப் பெறும். எ-று.

எசு. அவற்றுள், முயற்சியுள் அஆ வங்காப் புடைய.

இது முதலெழுத்துள் அகர ஆகாரங்கட்கு முயற்சிவகையால் பிறப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. அவற்றுள் - மேலிடம்வகுத்த முதலெழுத்துகளுள், அ ஆ - அ ஆ இரண்டும், முயற்சியுள் - நால்வகை முயற்சியுள், அங்காப்பு உடைய - அண்ணத்தின் றொழிலாகிய அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும். எ-று.

பொ-ள். மேலிடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துகளுள் அகர ஆகாரங்கள் நால்வகை முயற்சியுள் அண்ணத்தின் றொழிலாகிய அங்காத் தலை யுடையனவாய்ப் பிறக்கும். எ-று.

எஎ. இஈஎஏஐ யங் காப்போ - டண்பல் முதனா விளிம்புற வருமே.

இது இ ஈ முதலியவைகட்கு முயற்சிவகையால் பிறப்பு உணர்த்து கின்றது.

ப-ரை. இ ஈ எ ஏ ஐ - இ ஈ எ ஏ ஐ ஐந்தும், அங்காப்போடு - அங்காப்புடனே, அண்பல் - அண்பல்லை, நா முதல் - நாக்கடியினது, விளிம்பு - ஓரமானது, உற - பொருந்த, வரும் - பிறக்கும். எ-று.

போ-ரை. இவ்வைந்தெழுத்தும் அங்காப்புடனே அண்பல்லை அடி நாவிளிம்பு பொருந்திப்பிறக்கும். எ-று.

எஅ. உஊ ஒஓ ஔவிதழ் குவிவே.

இது உ ஊ முதலியவைகட்கு முயற்சி வகையாற் பிறப்பு உணர்த்து கின்றது.

ப-ரை. உ ஊ ஒ ஓ ஔ - உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற் கேதுவாகிய முயற்சி, இதழ் குவிவு - உதடுகளின் குவிதலாம். எ-று.

போ-ரை. இவ்வைந்தெழுத்தும் பிறத்தற்கேதுவாகிய முயற்சி யிதழ் குவிவாம். எ-று.

எகூ. கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை-நுனிநா வண்ண முறமுறை வருமே.

இது கஙமுதலியவைகட்குமுயற்சிவகையால்பிறப்புஉணர்த்துகின்றது.

ப-ரை. க ங - கவ்வும் ஙவ்வும், நா முதல் - நாக்கினடி, அண்ணம் (முதல்) - மேல்வாயடியையும், சஞ - சவ்வும் ஞவ்வும், (நா) இடை - நாக்கினடு, (அண்ணம் இடை)-மேல்வாய்நடுவையும், டண - டவ்வும் ணவ்வும், (நா) நுனி - நாக்கின்கடை, (அண்ணம் நுனி) - மேல்வாய்க்கடையையும், உற - பொருந்த, முறை - இம்முறையே, வரும் - பிறக்கும். எ-று.

போ-ரை. கவ்வும் ஙவ்வும் முதல்நா முதலண்ணத்தையும், சவ்வும் ஞவ்வும் இடைநா இடை யண்ணத்தையும், டவ்வும் ணவ்வும் நுனிநாநுனி யண்ணத்தையும் பொருந்த இம்முறையே பிறக்கும். எ-று.

அ௦. அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.

இது த ந க்களுக்கு முயற்சி வகையால் பிறப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. அண் பல் - அண்பல்லினது, அடி - அடியை, நா முடி - நாக்குநுனி, உற - பொருந்த, த ந - தவ்வும் நவ்வும், வரும் - பிறக்கும். எ-று.

போ-ரை. அண்பல்லடியை நாநுனி பொருந்தத் தவ்வும் நவ்வும் பிறக்கும். எ-று.

அக. மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.

இது ப ம க்களுக்கு முயற்சிவகையால் பிறப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. மீ (இதழ்) - மேலுதடும், கீழ் இதழ் - கீழுதடும், உற - பொருந்த, ப ம - பவ்வும் மவ்வும், பிறக்கும் - பிறக்கும். எ-று.

போ-ரை. மேலிதழுங் கீழிதழும் பொருந்தப் பவ்வும் மவ்வும் பிறக்கும். எ-று.

அஉ. அடிநா வடியண முறயத் தோன்றும்.

இது யகரத்திற்கு முயற்சிவகையால் பிறப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. நா அடி - நாக்கினடியானது, அண்ணம் அடி - மேல்வாயடியை, உற - பொருந்த, ய - யகரமானது, தோன்றும் - பிறக்கும். எ-று.

பொ-ரை. அடிநா அடியண்ணத்தைப் பொருந்த யகரம்பிறக்கும்.

அ௬. அண்ண நுனிநா வருட ரழவரும்.

இது ர ழ க்களுக்கு முயற்சிவகையால் பிறப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. அண்ண (நுனி) - மேல்வாய்க்கடையை, நா நுனி - நாக்குநுனியானது, வருட - தடவ, ர ழ - ரவ்வும் ழவ்வும், வரும் - பிறக்கும். எ-று

பொ-ரை. அண்ணத்தை நுனிநாத்தடவ ரவ்வும் ழவ்வும் பிறக்கும்.

அ௭. அண்பல் முதலு மண்ணமு முறையி-னாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும் - லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

இது லகரளகரங்களுக்கு முயற்சிவகையால் பிறப்புஉணர்த்துகின்றது.

ப-ரை. அண் பல் முதல் - அண் பல்லடியை, நா விளிம்பு - நாவோரமானது, வீங்கி - தடித்து, ஒற்ற - நெருங்க, லகாரம் (ஆய்) - லகாரமாகியும், அண்ணம் - மேல்வாயை, (நா விளிம்பு) - நாவோரமானது, வருட - தடவ, ளகாரம் ஆய் - ளகாரமாகியும், இரண்டு உம் - இரண்டெழுத்துகளும், முறை - இம்முறையே, பிறக்கும் - பிறக்கும். எ-று.

பொ-ரை. அண்பல் முதலை நாவிளிம்பு வீங்கியொற்ற லகாரமாகியும், அண்ணத்தை நாவிளிம்புவீங்கிவருட ளகாரமாகியும் இவ்விரண்டெழுத்தும்பிறக்கும். எ-று.

அ௮. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

இது வகரத்திற்கு முயற்சிவகையால் பிறப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. மேல் பல் - மேற்பல்லானது, இதழ் - கீழுதட்டை, உற - பொருந்த, வ - வகரமானது, மேவிடும் - பிறக்கும. எ-று.

பொ-ரை. மேற்பல் கீழிதழைப்பொருந்த வகரம் பிறக்கும். எ-று.

அ௯. அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.

இது ற ன க்களுக்கு முயற்சிவகையால் பிறப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. அண்ணம் - மேல்வாயை, நா நுனி - நாக்குநுனி, நனி உறின் - மிகப்பொருந்தின், ற ன - றவ்வும் னவ்வும், வரும் - பிறக்கும். எ-று.

போ-ரை. அண்ணத்தை நுனிநாமிகப் பொருந்தின் றவ்வும் னவ்வும் பிறக்கும். எ-று.

அஎ. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி - சார்பெழுத் தேனவுந் தம்முதலனைய.

இது சார்பெழுத்துகட்கு இடமுயற்சிவகையால் பிறப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. ஆய்தம் கு - ஆய்தம் பிறத்தற்கு, இடம் - இடமானது, தலை - தலையாம், முயற்சி - தொழிலானது, அங்கா - வாயைத்திறத்தலாம், சார்பு எழுத்து ஏன உம் - ஆய்தம் நீங்கலாகியமற்றைச் சார்பெழுத்துகளும், தம் முதல் அனைய - தம்முதலெழுத்துகளோடொப்பனவாய்ப்பிறக்கும். எ—று.

போ-ரை. ஆய்தம் பிறத்தற்கிடம் தலை, முயற்சி அங்காத்தலாம்; ஒழிந்த சார்பெழுத்துகளும் இடமுயற்சிகள் தம் முதலெழுத்துகளோடொப்பனவாய்ப் பிறக்கும். எ-று.

வி-பு. சார்பிற் சார்பாகிய ஆய்தக்குறுக்கமும் அதன் முதல்போற் பிறக்குமென்பார் எதிரதுதழீஇ ஏனவும் என்றார்.

அஅ. எடுத்தல் படுத்த னலித லுழப்பிற் - றிரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

இது மேற்கூறிய பிறப்பிற்கு ஓர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. (பலவெழுத்திற்குப்பிறப்பு ஒன்றுகச்சொல்லப்பட்டாலும்) எடுத்தல் - எடுத்தலும், படுத்தல் - படுத்தலும், நலிதல் - நலிதலுமாகிய, உழப்பின் - எழுத்திற்குரிய ஒலிமுயற்சியால், திரிபு உம் - ஒன்றற்கொன்று பிறப்புவேறுபாடுகளும், தம் தம் இல் - அவ்வவற்றின்கண், சிறிது - சிறிது சிறிது, உள ஆகும் - உள்ளனவாம்.

போ-ரை. பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றுகச் சொல்லப்பட்டனவேனும் எடுத்தல் படுத்தல் நலிதல் என்னும் எழுத்திற்குரிய ஒலிமுயற்சியான் ஒன்றற்கொன்று பிறப்பு வேறுபாடுகளும் அவ்வவற்றின்கண் சிறிது சிறிதுளவாம். எ-று.

அகூ. புள்ளிவிட் டவ்வோடு முன்னுரு வாகியு - மேனை யுயிரோ டுருவு திரிந்து - முயிரள வாயதன் வடிவொழித் திருவயிற் - பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்.

இது மேற்பிறப் புணர்த்திய சார்பெழுத்திற்குச் சார்ந்து வருமாறு ஓர் பிறப்பாதலின், பிறப்பதிகாரத்துள் அடக்கியுணர்த்துவான் தொடங்கி அவற்றுள் உயிர்மெய் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. புள்ளி விட்டு - மெய் புள்ளியை விட்டு, அ ஒடு - அகரத்தோடுகூடியவழி, முன் உருவு ஆகி உம்-அவ்விட்டவுருவே யுருவாகியும், ஏனை உயிர் ஒடு - அதுநீங்கலாகிய வுயிர்களோடு கூடியவழி, உருவு திரிந்து உம் - உருவுவேறுபட்டும், உயிர் அளவு ஆய் - தன்மாத்திரை தோன்றாது உயிர் மாத்திரையே மாத்திரையாய், அதன் வடிவு ஒழித்து - தன்வரிவடிவின் விகாரவடிவேவடிவாய் உயிர்வடிவையொழித்து, இருவயின் பெயரொடு உம்-உயிரும் மெய்யும் ஆகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய்யென்னும் பெயருடனே, ஒற்று முன் ஆய் - ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, உயிர்மெய் - உயிர்மெய்யெழுத்து, வரும் - பிறக்கும்.

பொ-ரை. மெய் புள்ளியைவிட்டு அகரத்தோடு கூடியவழி விட்டவுருவே யுருவாகியும், ஒழிந்த உயிர்களோடு கூடியவழி உருவு வேறுபட்டும் தன்மாத்திரை தோன்றாது, உயிர்மாத்திரையே மாத்திரையாய்த் தன்வரிவடிவினது விகாரவடிவே வடிவாய் உயிர்வடிவையொழித்து, மெய்யுயிரென்னும் பெயராகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர் மெய் யென்னும் பெயருடனே ஒற்றொலிமுன்னும் உயிரொலி பின்னுமாகி வரும் உயிர் மெய் யெழுத்து. எ-று.

வி-பு. உருவு திரிதல் புள்ளி பெறுவன புள்ளி பெற்றும், மேலுங் கீழும் விலங்குபெறுவன விலங்குபெற்றும், கோடுபெறுவன கோடுபெற்றும், புள்ளியுங் கோடும் உடன்பெறுவன உடன்பெற்றும் வருவனவாம். அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாகவெழுதுவர்.

ஒழிந்து என்றும், ஒற்றுமுன்னாய் என்றும் வந்த சினைவினை இருவயிற் பெயரொடும்வரும் என்னும் முதல்வினையோடு முடிந்தன. நூதி முதலியவற்றில் நீட்டிய வரிவடிவும் ஒலிவடிவும்போலப் பயன்றிரிந் ஒற்றுமைக்குறித்து கண்டு அவ்விருதிறனும் விரவிக் கூறினர். இவ்விலக்கணத்தான் ஒவ்வொரு மெய்யிற் பன்னீருயிருங் கூட்டிப் பன்னிரு பதினெட்டு இருநூற்றொருபத்தாறாய் வருமாறு வழங்கும் வரிவடிவுள்ளும் ஒலிவடிவுள்ளுங் காண்க.

௯௦. * குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி - யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

இது முற்றாய்தம் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஆய்தம் புள்ளி - புள்ளிவடிவினதாகிய ஆய்தம், குறியதன் முன்னர் - குற்றெழுத்தின்முன்னதாய், உயிரொடு புணர்ந்த - உயிரொடுகூடிய, வல் ஆறன் மிசைத்து - வல்லெழுத் தாறனுள் ஒன்றன்மேலதாய்வரும். எ-று.

* தொல்காப்பியம், எழு. மொழிமரபு, ரு, ரு.

பொ-ள். புள்ளிவடிவினதாய ஆய்தம் குற்றெழுத்தின் முன்னதாய் உயிரோடுகூடிய வல்லெழுத்து ஆறன்மேலதாய் வரும், எ-று.

வி-பு. உயிர்வருக்கத்து இறுதிக்கண் தந்த ஆய்தவடிவைப் பிற்கால ந்து வேறுபடவமைத்து வழங்குவர் ஆதலின், தொல்லைவடிவு தோன்ற ஆய்தப்புள்ளி என்றார்.

[உ-ம்.] எஃகு, கஃசு, இருபஃது, அஃகடிய, அஃகான், மஃகான் எனவரும்.

தனிக்குறி லென்று வரைந்தோதாமையின் "விலஃஃகி வீங்கிரு ளோட்டுமேமாத - நிலஃஃகுமுத்தினினம்." எனவும் வரும். பிறவுமன்ன.

இச்சூத்திரம் மேற்கோளாதலால் தானெடுத்துமொழிதல் என்னும் உத்தி. வல்லினவகையான் இயல்பாகவந்த ஆய்தம் ஆறனோடு புணர்ச்சி விகாரத்தான்வரும் ஆய்தமும், செய்யுள் விகாரத்தான் வரும் ஆய்தமும் கூடி எட்டாய் வருமாறுகாண்க.

கூக. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடி - லளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

இது உயிரளபெடை வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. இசை கெடின் - பாட்டிலோசைகுறையின், மொழி - அவ்வோசை குறைந்தசொல்லுக்கு, முதல் - முதலிலாகிலும், இடை - நடுவிலாகிலும், கடை - இறுதியிலாகிலும், நிலை - நின்ற, நெடில் - நெட்டெழுத்தேழுளொன்று, அளபு எழும் - அவ்வோசையை நிறைக்கத் தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கும், அவற்று - அவற்றின் பின், அவற்று இனம் குறில் - அதற்கு இனமாகிய குற்றெழுத்துகள், குறி - அளபெடுத்தமையை அறிதற்குவரிவடிவில் அறிகுறியாய் வரும். எ-று.

பொ-ள். செய்யுட்கண் இசைகுன்றின் மொழிமுதலினும், இடையினும், கடையினும் நின்ற நெட்டெழுத்தேழும் அவ்விசைநிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். அவ்வாறு அளபெடுத்தன அறித ற்கு அவற்றின்பின் அவற்றிற் கினமாகிய குற்றெழுத்துகள் வரிவடிவின் கண் அறிகுறியாய் வரும். எ-று.

[உ-ம்.] "ஆஅவளிய வலவன்றன் பார்ப்பினோ - டிரீஇரையுங்கொண் டீரளைப்பள்ளியுட் - டூஉந்திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோண், மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதா லோஒ வுழக்குந் துயர்." எ-ம்,

† உறஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச் - செறஅஅய் வாழிய நெஞ்சு." எ-ம்,

---

† திருக்குறள், சே. க௨௦௦.

† "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு-நல்ல படாஅ பறை." எ-ம் வரும்.

சேறஅஅய் வாழி என்புழி நான்குமாத்திரையாயும், ஏனைய மூன்று மாத்திரையாயும் அலகுபெற்றுச் செய்யுளிசை நிறைத்து மூவிடத்தும் வந்த வாறுகாண்க. பிறவுமன்ன,

இனி இசைகெடினென்று பொதுப்படக் கூறினமையால்,

†† "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே - எடுப்ப தூஉ மெல்லா மழை." எனக் குறில் நெடிலாய் அளபெழுந்து அலகு பெற்றும் பெறாதும் இன்னிசை நிறைப்ப வருவனவும்,

‡ "உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்-வரனசைஇ யின்னு முளேன்." என அளபெழுந்து அலகுபெற்றும் பெறாதும் சொல்லிசை நிறைப்பவருவனவும்,

‡‡ "வீழப்படுவார் கெழீஇயிலர்தாம் வீழ்வார் -வீழப்படாஅ ரெனின்." என்பதனுள் கெழீஇயிலர் என அளபெழுந்து அலகுபெறாது சொல்லிசை நிறைப்பவருவனவுங் கொள்க.

எழுத்துப்பலவாயின ஒலிவேற்றுமையானன்றே? அங்ஙனமாதலின், நெடிலது விகாரமாய் ஓரொலியாய்ப் பிறப்பதே அளபெடையென்பார் நெடிலளபெழும் என்றும்,அவற்றவற் றினக்குறில் குறியே என்றுங் கூறினார்.

§ [ஆசிரியர் தொல்காப்பியரும் நீரும் நீருஞ் சேர்ந்தாற்போல நெட்டெழுத்தோடு குற்றெழுத் தொத்துநின்று நீண்டிசைப்பதே அளபெடை யென்பார்,

* "குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு-நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே." என்றார். இங்ஙனம் ஒலிபற்றிக்கூறும் வகையால் இருவர்க்குங்கருத் தொன்றேயாயினும் குறியே என்றது இவ்விரண்டுமேற் கோளிலொன்று துணிதலான் ஒருதலை துணிதல் என்னும் உத்தியும், அம் மதமும் படவந்ததென்க.

இப்பெற்றியறியாதார் நெடிலும் குறிலும் விரலும் விரலும் சேரநின் றாற்போல இணைந்துநின்று அளபெடுக்குமெனத் தமக்குவேண்டியவாறே கூறுப.

"நெடிலுங் குறிலும் அவ்வாறு நின்று அளபெழுமென்றல் பொருந் தாமைக்கு எழுத்தேடைஎன்னாது அளபேடைஎன்னுங் குறியீடேசான்றாத லறிக. அற்றேல் ஓரெழுத்தினையே இரண்டுமாத்திரையும் ஒருமாத்திரையு மாகப்பிரித்து அசைத்ததனால் சீர்செய்து தளையறுத்தல் பொருந்தாதென் னில்,—அற்றன்று, எழுத்துவகையானென்னாது "மாத்திரை வகையாற்

---

† திருக்குறள், சே, ௧௧௧௫.   †† திருக்குறள், சே, ௧௫.

‡ ஷை ஷை ௧௨௬௩.   ‡‡ ஷை ஷை ௧௧௯௪.

§ தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, பக்கம் ௧அ, ௧௯,

* தொல்காப்பியம், எழு. மொழிமரபு, ௬, அ.

றனைத்தும் கெட்டாங்கில - யாப்பழி யூமையென் றனைபெற - வேண்டும்."
எனக் கூறுபவாகலின், எழுத்திற்கு மாத்திரை கோடலும், அசைத்தலும்,
சீர்செய்தலும், தளையறுத்தலும், ஓசைபற்றி யல்லது எழுத்துப்பற்றி யல்ல
வென்க.]

இதனுள் செப்பலோசை முதலிய ஓசைகுன்றுமிடத்து நெட்டெழுத
தேழும் மொழி முதலிடைகடைகளினின்று அளபெடுக்குங்கால் ஔகா
ரம் மொழியிடைகடைகளின் வரப்பெறுமையின், அவ்விடங்களின் அஃ
தொழிய நின்று அளபெடுக்கும் அளபெடைபத்தொன்பதோடு இன்னிசை
நிறைப்பவும் சொல்லிசை நிறைப்பவும் அளபெடுக்கும் அளபெடை இரண்
டுங்கூடி உயிரளபெடை எழு மூன்றாய் வருமாறு காண்க.

கூ௨. ஙஞண நமன வயலள வாய்த - மளபாங் குறிலிணை குறிற்கீ
ழிடைக்கடை - மிகலே யவற்றின் குறியாம் வேறே.

இது ஒற்றளபெடை வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. (இசை கெடின்) - பாட்டிலோசைகுறையின், குறில்
இணை (கீழ்) - குறிலிணையின்கீழாவது, குறில் கீழ் - குறிற்கீழா
வது, இடை - சொல்லுக்குநடுவிலாகிலும், கடை - சொல்லுக்குக்
கடையிலாகிலும், ங ஞ ண ந ம ன வ ய ல ள - ஙம்முதலிய இப்
பத்தொன்றேனும், ஆய்தம் - ஆய்தமேனும், அளபு மிகல் ஆம் -
அவ்வோசையை நிறைக்கத்தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கும்,
அவற்றின் வேறு குறி ஆம் - அப்படியளபெடுத்தமையை யறிதற்கு
அவற்றின்பின் அவ்வெழுத்துகளேவரிவடிவில் அறிகுறியாய்வரும்.

பொ-ரை. செய்யுட்கண் இசைகுன்றில் குறிலிணைக்கீழும் குறிற்கீழு
மாய் மொழி இடையினும் ஈற்றினும் நின்ற இப்பத்து ஒற்றும், ஆய்தமும்,
அவ்வோசை நிறைக்கத் தம்மாத்திரையின் மிக்கொலிக்கும்; அவ்வாறு
அளபெடுத்தன அறிதற்கு அவற்றின்பின் அவ்வெழுத்துகளேவரிவடிவின்
கண் வேறு அறிகுறியாய்வரும். எ-று.

வி-பு. †"ஒருமொழியொழிதன் னினங்கொளற்குரித்தே." என்பத
னால் மேல் இசைகெடின் என்றதனை இவ்வளபெடைக்கும் வருவித்துக்
கொள்க. மாத்திரை நிறைத்தற்கன்றி அறிகுறிமாத்திரையாய் வருமென்று
கோடற்கு வேறே யென்றார்.

[உ-ம்.] "இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக் - கலங்ங்கு
நெஞ்சமிலை காண்." எ-ம்,

"எங்ங் கிறைவ னுளனென்பாய் மனனேயா - னெங்ங் கெனத் திரி
வா ரின்." எ-ம்,

"கலங்ங் கொண்ட கன்மார்பர்"; "மடங்ங் கலந்த மனனேகளத்து
விடங்ங் கலந்தானைவேண்டு." எ-ம்,

"அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து - நங்ங்களங் கறுப்பா
ரம்." எ-ம்:— ஙகரம் குறிலிணைக்கீழும் குறிற்கீழும் மொழிக்கு இடையி
னும் கடையினும் முறையே அளபெழுந்தது.

---

† நன்னூல், சூ. ௩௫௮.

"கள்ளன் கருவிளை கார்முல்லை கூறொய்று-பேசன்ன் பொறிகணங்கு பேர்ழ்வா யிலவஞ்பூ - மின்னனுனைழமருங்குன் மேசகு சாயலா-ளென்ன் பிறமகளா மாறு" என ணகரமும் னகரமும் குறிற்கீழ் மொழி ஈற்றின் அளபெழுந்தன.

"எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்-வெஃஃகு வார்க் கில்லை வீடு." என ஆய்தம் குறிற்கீழ் மொழிக்கு இடையின் அளபெழுந்தது. பிறவு மன்ன.

ஆய்தம் ஒற்றெடும் ஒருபுடை யொத்துவருதலின் ஈண்டுத் தந் துரைத்தார். ஙகரம் விதியீறாய் வருதலின் அதனை விலக்காது ஆய்தம் ஒரு மொழிக்கண்ணும் தொடர்மொழிக்கண்ணும் விதித்த முதலெழுத்துகளிரு மருங்கு நின்றெழுப்ப,இருசிறகெழுப்ப வெழும் உடலதுபோல் இடையெ ழுந் தொலிப்பதன்றி, ஒருவாற்றானும் ஈறாய்வருந் தன்மையதன்றாகலின், அஃகடிய முதலியவற்றின் கண் திரிந்த ஆய்தம் அஃகான் முதலியவற்றின் கண்-தோன்றிய ஆய்தம்போலத் தொடர்மொழிக்கண் இடைநிலை யாய தன்றி விதியீறன்றென்று அதனுண்மைதுணிந்து அதனை இறுதிக்கண்வில க்கி, ஒற்றளபெடை நாற்பத்திரண்டென்று மேலுரைத்வாறு இங்ஙனம் வருதல் காண்க.

கூங. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமு - மசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.

இது குற்றியலிகரம் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. யகரம் வர - யகரத்தைமுதலிலே யுடையசொல்வர, குறள் உ - குற்றியுலுகரம், திரி - திரிந்த, இகரம் உம் - இகரமும், அசை சொல் - அசைச்சொல்லாகிய, மியாவின் - மியாவென்பதின் மகரத்தின்மேலிருக்கிற, இகரம் உம் - இகரமும், குறிய - குற்றியலிகரங்களாம். எ-று.

பொ-ரை. யகரம் வருமொழிக்கு முதலாகிவர நிலைமொழிக்கீறாகி நின்ற குற்றிய லுகரம் திரிந்த இகரமும், மியாவென்னும் அசைச்சொல் லின்கண் இகரமும் குற்றியலிகரங்களாம், எ-று.

வி-பு. எனவே இங்ஙனம் வருமாயின் இவ்வெழுத்தின் தொடர்பாற் குறுகுமென்பது பெற்றாம்,

[உ-ம்.] நாகியாது, எஃகியாது, வரகியாது, நோக்கியாது, தூங்கி யாது, அல்கியாது எ-ம்; கேண்மியா, சென்மியா எ-ம் வரும். பிறவு மன்ன.

பொதுப்படக் கூறியவற்றுள் விலக்குவனவற்றைவிலக்கிக்கொள்ளப் படுங் குற்றியலுகரம் முப்பத்தாறானும், அசைச்சொல் மியாவினானும் குற் றியலிகரம் முப்பத்தேழாய் வருமாறுகாண்க.

கூச. ¶ நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத் தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகர - மஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

இது இடமும் பற்றுக்கோடுஞ் சார்ந்து குற்றியலுகரம் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ளா. நெடிலோடு - தனிநெடிலேழுடனே, ஆய்தம் - ஆய்த மொன்றும், உயிர் - சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய உயிர்பதினொன்றும், வலி - வல்லெழுத்தாறும், மெலி - மெல்லெழுத்தாறும், இடை-வல்லெழுத்துகளோடு தொடராதவகரம் நீங்கிய இடையெழுத்தைந்தும் ஆகிய முப்பத்தாறனு ளொன்றால், தொடர்-ஈற்றுக்கு அயலெழுத்தாகத்தொடரப்பட்டு, மொழி - இறுதி - சொல்லினிறுதியில், வன்மை - வல்லெழுத்துக ளுள் யாதாயினுமொன்றன்மேல், ஊர் - ஏறிவருகின்ற, உகரம் - உகரமானது, அஃகும் - தன்மாத்திரையிற் குறுகும், பிற - பிற வெழுத்துக ளொன்றும் பலவும், மேல் தொடர உம்-குறுகுதற்கும் மொழி நிறைதற்குங்காரணமாக மேலேதொடரவும், பெறும் - தனி நெடிலொழிந்த ஐந்துதொடரும் பெறும். எ-று:

போ-ளா. தனிநெடி லேழுடனே ஆய்தமொன்றும், மொழியிடை யீறுகளின் வரப்பெறாத ஔகாரமொழித்தொழிந்த உயிர் பதினொன்றும், வல்லெழுத்தாறும், மெல்லெழுத்தாறும், வல்லெழுத்துகளோடு தொட

¶ "தனிநெடிலுடனே ஆய்தம் உயிர் வலி மெலி இடை என்னும் ஐந்தெழுத்தையும் தொடர்ந்தமொழியின் இறுதியிலே நின்றவல்லொற்றை நடத்திய உகரமானது குறுகும். இங்கே இறுதியெழுத்திற்கு அயலெழுத் தாகச்சொன்ன தனிநெடிலொழிந்த ஐந்தெழுத்துமல்லாமல் பிற எழுத்து களும் மேலேதொடர்ந்து வரவும் பெறு மெனவும்; நாகு, காசு, காடு, காது, காபு, காறு என நெடிற்றொடர்க்கும்; எஃகு, கஃசு, கஃடு, இருபஃது, அஃபு, சுஃறு என ஆய்தந்தொடர்க்கும்; வரகு, பலாசு, முருடு, எருது, துரபு, கயிறு என உயிர்த்தொடர்க்கும்; சுக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று என வன்றொடர்க்கும்; சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று என மென்றொடர்க்கும்; ஆய்கு, ஆய்சு, ஆய்து, சால்பு என இடைத் தொடர்க்கும் உதாரணமுங்காட்டி, இடையொற்றுகள் ஆறைபுந்தொட ராது ஆதலால் இதனுள் நான்கே வருமெனக்காண்க எனவும்; ஆயின் முப் பத்தாறென்ற தென்னையெனின், ஒருமதங்குறைந்த யானைமுகக்கடவுளை மும்மதந்தன் என்றாற்போல இலக்கணை என்னும் விதிபற்றிக் கூறினு ரென்க." எனவும் விரிப்பர்.-- இராமாநுசகவிராயர்.

ராத வகரம் ஒழித்தொழிந்த இடையெழுத்தைந்தும் ஆகிய முப்பத்தா றெழுத்தினுள் யாதானுமொன்று ஈற்றுக்கு அயலெழுத்தாய்த் தொடரப் பட்டு, மொழியிறுதிக்கண்வல்லெழுத்துகளுள் யாதானுமொன்று பற்றுக் கோடாக அதனையூர்ந்துவரின், அவ்வுகரம் தன்மாத்திரையிற் குறுகும். அது தன்மாத்திரையிற் குறுகுதற்கும் மொழி நிரம்புதற்குங் காரணம் இவ் வோரெழுத்துத் தொடர்தல் மாத்திரையின் அமையாது, பிற வெழுத்துக் களுள் ஒன்றும் பலவும் மேலே தொடரவும் பெறும். எ-று.

வி-பு. நெடிலை ஒடுக்கொடுத்துப் பிரித்தார்தனிநெடில்ஆதலின். உயிர் என்றது குற்றுயிர், நெட்டுயிர் இரண்டனையும். தொடர் என்னும் வினைத் தொகை வன்மையூநகரம் என்னும் செயப்படுபொருளோடு முடிந்தது. பிற என்றது பகாப்பதமேழும் பகுபதமொன்பது மென்று வரையறுத்து அவற்றின் இங்ஙனம் ஈற்றயலும் ஈறுமாகக்கூறிய இரண்டும் ஒழித்து ஒழிந்த ஏழுமைந்துமாய எழுத்துக்களை. தொடரவும் என்ற உம்மை இறந்ததுதழீஇ நின்றது. பெறுமே என்றது தனிநெடிலொழிந்த ஐந்து தொடரும் வன்மையூருகரம் குறுகுதற்கும் மொழிநிரம்புதற்கும் மேற் றொடர்தலும் இன்றியமையாமையின்.

[உ-ம்.] நாகு, எஃகு, வரகு, பலாசு, கோக்கு, தூங்கு; அல்கு என வரும். பிறவுமன்ன.

இனி யிங்ஙனம்'பிறமேற்றொடரவும்பெறுமே'யெனக்கூறுதொழியின் இவ்வைவகையெழுத்தும் ஈற்றெழுத்துங்கூடியே ஒருமொழியாய் நிற்கு மெனவும்பட்டு, அது, இது என்றற்றொடக்கத்தனவும் குற்றியலுகரமா வான் செல்லுமெனவும், ஆய்தமும், தனிமெய்யும் மொழிக்கு முதலாமென வும், தனிநெடிலை ஒடுக்கொடுத்து விதக்கவேண்டா வெனவும், ஆசிரியர் தொல்காப்பியர் * "நெட்டெழுத்திம்பருந் தொடர்மொழியீற்றுங் - குற் றியலுகரம் வல்லாறூர்ந்தே." எனத் தொகுத்துக் கூறியவாறே கூறாது, எல்லாவெழுத்தையுங் கூறுவார் அவற்றையே ஆய்தமுதல் ஐந்தாக வகு த்து, தனிநெடிலோடு ஆறாகக்குற்றுகரத்தை அறுவகையான்வழங்குதற்கு இலக்கணந்தோன்றக் கூறினமையின், அவ்வாறு எடுத்தாளுதற்பொருட்டு எல்லாவெழுத்தையுங் குறியீடாகவிதந்த ஆய்தமுதலிய ஐந்தனுளொன்று ஈற்றயலினின்று இறுதி வன்மை யூருகரத்தைத் தொடர்தலேயன்றி, பிற மேற் றொடர்தலும் குறுகுதற் கேது வன்றெனவும் பொருள்படுமாறறிக. இச்சூத்திரப்பொருள் முன்மொழிந்துகோடல் என்னும் உத்தி. இனி இவ் வாறன் பகுதித்தொடரும் இடமாதலின் இவ்விடவேற்றுமையால் குற்றிய லுகரம் முப்பத்தாறென்று மேற்கூறியவாறே வருமாறுகாண்க. § இவ் வாறு கொள்ளாது ஆசிரியர் ஈற்றயலினின்ற எழுத்தை இடமாகக் கொண்டாற்போல ஈற்றயலினின்ற அசையை யிடமாகக் கொண்டு, அவற்றுள் அது, இது முதலிய முற்றுகரத்தை நீக்குதற்குக் குற்றெழுத் துத் தனியேவரும் அசையொன்றனையும் ஒழித்து ஏனையேழசையினையும்

---

* தொல்காப்பியம், எழு. மொழிமரபு, சூ ௩.

§ தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, பக்கம் ௨௨.

"நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை - யொற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென் - றேழ்குற்றுகரக்கிடனெனமொழிப." எனக்கூறி னரு மோராலோவெனின், அவ்வாறு ஏழிடமெனக்கோடலென்பார்க்கு பிண்ணாக்கு, சுண்ணாம்பு, பட்டாங்கு, விளையாட்டு, இறும்பூது முதலியன வும், ஆய்தத்தொடர்ந்தனவும், நெட்டொற்றிறுதி நெடிலிறுதிக்குற்றுகர முதலியனவும், குற்றொற்றிறுதிக் குற்றுகரமுமாயடங்கு மேனும், போவது, வருவது, ஒன்பது முதலியன அடங்காமையறிக. நெடில்முதலாயின ஈற் றயலினிற்றல் வேண்டுமெனை யாப்புறவின்மையின், முதற்கணிற்பினும், ஈற்றுகரம் அவற்றிறுதியாதலமையு மெனக்கொண்டு, போவது முதலி யனவும் நெடிலிறுதி முதலியவாயடங்குமென்பார்க்கும் அங்ஙனம்பாகு படுத்துக்கூறுவிசெய்ததனாற் போதப்பயனின்றென்பதாம். இது பிறநூற் குற்றங்காட்டல் என்னும் மதம். இனிமொழிந்தபொருளோடொன்ற அவ் வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்னும் உத்தியான் நுந்தைஎன்னும் முறைப்பெயர்மருங்கின் ஒற்றிய நகரமிசை உகரமூர்ந்து மொழிமுதற்கணிற்பினும் குற்றியலுகரமாமெனவும், அவ்வுகரம் சேந்துக் கணை, சுக்குக்கோடெனப்புணர்மொழியிடைப்படினும்தன் அரைமாத்திரை யிற் குறுகுமெனவுங்கொள்க.

௯௫. ‡ தற்சுட் டளபொழி யைம்மூ வழியு-நையு மௌவு முதலற் றாகும்.

இது ஐகார ஔகாரக்குறுக்கங்கள் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஐ-ஐகாரம், தன் சுட்டு அளபு-தன்னைக்குறித்துத் தன் பெயர் சொல்லுமளவிற்குறுகாது, ஒழி - ஒழிந்த, மூவழியும் - சொல்லுக்குமுதலிடை கடைகளிலேயெங்கேனின்றாலும், நையும்- தன்மாத்திரையிற்குறுகும், ஔவும் - ஔகாரமும், முதல்-சொல் லுக்குமுதலில், அற்று ஆகும்-தன்மாத்திரையிற்குறுகும். எ-று.

போரை. ஐகாரந்தன்னைக்கருதித்தன்பெயர் கூறுமளவிற்குறுகாது, ஒழிந்த மொழி முதலிடைகடை யென்று மூன்றிடத்தும் முன்னும்பின்னு மிருமருங்கு மாய எழுத்தின்றொடர்பால் தன்மாத்திரையிற்குறுகும். ஔ காரம் தன்பெயர்கூறுமளவிற் குறுகாது, ஒழிந்த மொழிமுதற் கண் பின் வருமெழுத்தின் தொடர்பால் தன்மாத்திரையிற் குறுகும். எ-று.

---

‡ தற்சுட்டு - தன்னைக்குறித்துத் தன்பெயர் சொல்லுகையிலும், அளபு - அளபெடையிலும், ஒழி - ஒழிந்த, ஐ - ஐகாரம், மூவழி - மொழி முதலிடைகடையென்னு மூவிடங்களிலும், நையும் - தன்னிரண்டு மாத்தி ரையிற் குறுகும் எனப்பொருள் விரிப்பர்.—இலக்கணவிளக்கநாலர்.

வி-பு. சுட்டளபென்பது வினைத்தொகை. அளபென்றார் எழுத்தின் சாரியை தொடரினும் குறுகுமென்பது கருதி. எனவே ஓரெழுத்தொருமொழியாய் நிலைமொழி வருமொழியாய்த் தொடராது, தனித்து ஒரோவிடங்களின் வரின் ¶ தன்மாத்திரை குறுகாதென்பதூஉம் பெற்றாம்.

[உ-ம்.] ஐப்பசி, மைப்புறம் (எ-ம்.), வலையன் (எ-ம்.), துவளை (எ-ம்.), மௌவல் (எ-ம்.) வரும்.

இனி § "அளபெடை தனியிரண் டல்வழி யையௌ - வுளதாமொன் றரை தனிமையு மாகும்." எனக்கூறினாரும் உளராலோவெனின், தனி வியல்பாய இரண்டுமாத்திரையி னின்றுங் குறுகுதலில்லனவற்றை யொழிப்பார் ஏகாரத்தான்மூன்றுமாத்திரையும், நான்குமாத்திரையுமாய்மிக்கொலிக்கும் அளபெடையையொழிக்கவேண்டாமையின் அது பொருந்தாதென்க. இதுமறுத்தல்என்னும்மதம். ஏனையஉடன்படல். இடவகையான்ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஔகாரக்குறுக்கம் ஒன்றும்வருமாறுகாண்க. இனி ஐகாரக்குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரைமாத்திரையாயும், ஏனையிடங்களின் ஒருமாத்திரையாயும், ஔகாரக் குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாயும் குறுகுமென்பது உய்த்துணர்ந்துகொள்க.

அவ்வாறுஉய்த்துணர்ந்துகொள்ளாக்கால் ‡ "வைகலும்வைகல்வரக்கண்டு மஃதுணரார் - வைகலும்வைகலை வைகுமென் றின்புறுவர் - வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல்வைகுதல் - வைகலை வைத்துணராதார்." (எ-ம்.), † "கைவேல்க ளிற்றொடுபோக்கி வருபவன் - மெய்வேல் பறியா நகும்." (எ-ம்.), †† "ஔவியநெஞ்சத்தா னாக்கமுஞ்செவ்வியான் - கேடு நினைக்கப் படும்." (எ-ம்.) வரும் இலக்கியங்கட்கு இலக்கணமின்றாய் முடியுமென்க.

௬௬. ண ன முன்னும் வஃகான் மிசையுமக்குறுகும்.

இது மகரக்குறுக்கம் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ணன - ணகர னகரங்களிலொன்று நின்றுதொடர, முன்னும் - அதன்முன்னின்றாலும், வஃகான் - வகரம்வந்துதொடர, மிசையும் - அதன்பின் நின்றாலும், ம - மகரம், குறுகும் - தன் மாத்திரையிற் குறையும். எ - று.

¶ இது அருத்தாபத்தியாற் பெறப்பட்டதென்பர்.—இராமாநுச கவிராயர்.

§ ஐகாரம் மொழிமுதற்கட்குறுகாதெனவும், ஔகாரக்குறுக்கமொன்றில்லை எனவும், எழுத்தின் குறுக்கமாவது ஒலியின்மெலிதாக உச்சரித்தல் எனவும், இதனைவடநூலாரும் இலகூச்சாரணம்என்பர்எனவும்விரிப்பர்.—சிவஞானமுனிவர்.—தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, பக்கம் - உ०.

‡ நாலடியார், செ. ௩௬௬.

† திருக்குறள், செ. எஎச. †† ௸ ௸ ௧௬௬.

போ-ரை. ணகார னகாரங்களின் ஒன்று நின்று தொடர்ந்திடவதன் முன்வரினும், வகாரம்வந்து தொடர்ந்திட அதன்மேல் நிற்பினும் மகரம் தன்னரை மாத்திரையிற் குறுகும். எ-று.

வி-பு [உ-ம்] "பசுப்போல்வார் முற்பட்டாற் பற்பட்டான்றோர் முசுப்போல முள்காந்திருப்பர் – பசுத்தான் - வெருளினுமெல்லாம் வெருளுமஃதன்றி - மருளினு மெல்லாமருண்ம்." (எ ம்.), "திசையறிமீகாமனும் போன்ம்." (எ-ம்.), தரும்வளவன். (எ-ம்.) வரும். இனி ணகர னகரங்களின் முன்வந்த மகரம் செய்யுமென்னும் வரைப்பாட்டு முற்றீற்ற தென்பதூஉம், அவ்வீற்றயல் உகரங்கெட, அவ்வுகரமூர்ந்த ளகர லகரங்களீற்று மகரத்தோடு மயங்காமையின், மயங்குதற்குரிய ணகர னகரமாய்த் திரிந்தன ஈண்டுநின்ற ணகா னகர மென்பதூஉம், இவற்றுளொன்றுடன் ஈறொற்றாய் மயங்கின் மகரங்குறுகு மென்பதூஉம், இவற்றின்முன் குறுகுதல்செய்யுட்கண்ணதென்பதூஉம், காணும், கூனும் என இயல்பாகின்ற ணகர னகரங்கண்முன் இவ்வாறு வந்து மகரங்குறுகா தென்பதூஉம், பிறவும் மேல்வருஞ்சூத்திரங்களெல்லாவற்றையும் வேண்டிப்பிருந்தின் வீழ்வாய்நின்ற இச்சூத்திரத்துய்த் துணர்ந்துகொள்க. இஃது உய்த்துணர்வைப்பு என்னும் உத்தி.

கூஎ. ல ளவீற் றியைபினா மாய்த மஃகும்.

இது ஆய்தக்குறுக்கம் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ல ள ஈற்று இயைபின்-லகார ளகார விற்றுப்புணர்ச்சியினால், ஆம் - ஆகின்ற, ஆய்தம் - குறில்வழிலளத்தவ்வணையின் ஆய்தமாகவும் பெறூஉமல்வழியானே என்னுமாய்தம், அஃகும்-தன்னரைமாத்திரையிற்குறுகும். எ - று.

போ-ரை, லகார ளகார வீற்றுப்புணர்ச்சியினால் வரும் "குறில்வழி லளத்தவ்வணையினாய்த - மாகவும் பெறூஉம்" என்ற ஆய்தம் இருமருங்குமாய எழுத்தின் றொடர்பால் தன்னரைமாத்திரையிற் குறுகும். எ-று.

வி-பு. [உ-ம்.] கஃறீது, முஃடீது எனவரும். இது முடிவிடங்கூறல் என்னும் உத்தி. இவ்வாய்தம் குறுகாதெனக் காண்டல் விரோதங்கூறுவாருமுளர்.

கூஅ. தோல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்- டெய்து மெகா மொகாமெய் புள்ளி.

இது நிறுத்தமுறையானே உருவமாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. எல்லா எழுத்தும் - எல்லா எழுத்துகளும், தொல்லை வடிவின - பல்வேறுவகைப்பட எழுதிவழங்கும் பழையவடிவினையுடையவாம், ஆண்டு - அவ்வடிவையுடையவாய் வழங்குமிடத்து, எகரம் - எகரமும், ஒகரம் - ஒகரமும், மெய் - மெய்களும், புள்ளி - புள்ளியை, எய்தும் - பெறும். எ - று.

போ-ரை. எல்லாவெழுத்தும் பல்வேறுவகைப் பட்டுவரைந்து வழங்கும் பழையவடிவினையுடையவாம். அவ்வடிவினவாய் வழங்குமிடத்துத் தனித்தும் உடம்பூர்ந்தும்வரும் எகரமும் ஒகரமும் தனிமெய்களும் இயல்பாயபுள்ளியைப் பிற்காலத்து ஒழித்தவரைந்த ஏகார ஓகாரங்களோடும் உயிர்மெய்களோடும் ஐயப்பட வழங்கும் வழக்கினையுடையவன்றித் தனியப்படும் தொல்லைவடிவினது உஉப்பாய புள்ளியைப்பெறும். எ-று.

வாலாறு. எ் எ ஒ் ஒ கெ் கெ கொ் கொ க் க எனவரும் பிறவுமன்ன.

கூகூ மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே-குறிலோ டையௌக் குறுக்க மொற்றள - பளையோற் றிஉக் குறுக்க மாய்தங் - கால்குறள் மஃகா னாய்த மாத்திரை.

இது நிறுத்த முறையானே மாத்திரையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. மாத்திரை - ஒலிக்குமளவு, உயிர்அளபு - உயிரளபெடைக்கு, மூன்று(ஆம்)-மூன்றாகும், நெடில்-நெட்டெழுத்திற்கு, இரண்டாம் - இரண்டாகும், குறில் - குற்றெழுத்திற்கும், ஐ (குறுக்கம்) - ஐகாரக்குறுக்கத்திற்கும், ஔ குறுக்கம்-ஔகாரக் குறுக்கத்திற்கும், ஒற்று அளபு-ஒற்றளபெடைக்கும், ஒன்று(ஆம்) தனித்தனியொன்றாகும், ஒற்று - மெய்யெழுத்திற்கும், இ (குறுக்கம்) - குற்றியலிகரத்திற்கும், உ குறுக்கம் - குற்றியலுகரத்திற்கும், குறள் மஃகான் - மகரக்குறுக்கத்திற்கும்,(குறள்) ஆய்தம்-ஆய்தக்குறுக்கத்திற்கும், கால்(ஆம்) - தனித்தனிகாலாகும். எ-று.

போ-ரை. உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றும். நெடிலுக்குமாத்திரை இரண்டாம். குறிலுக்கும்,ஐகாரக்குறுக்கத்திற்கும்,ஔகாரக்குறுக்கத்திற்கும், ஒற்றளபெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்றும். ஒற்றிற்கும் குற்றியலிகரத்திற்கும், குற்றியலுகரத்திற்கும், ஆய்தத்திற்கும் தனித்தனிமாத்திரை அரையாம். மகரக்குறுக்கத்திற்கும், ஆய்தக்குறுக்கத்திற்கும் தனித்தனி மாத்திரை காலாம். எ-று.

வி-பு. உயிர்மெய்க்களவு கூறுதொழிந்தார், மேலுயிரளபா யென்றுரைத்தலின். இஃது உரைத்தாம் என்னும் உத்தி. உயிரளபெடைநான்குமாத்திரையவாதலும், ஐகார ஔகாரக்குறுக்கங்கள் ஒன்றரை மாத்திரையவாதலும், ஆரிடத்துள்ளும் அவைபோல்வனவற்றுள்ளும் மருகிவந்த செய்யுள் வழுவமைதியாய் முடிதலின், அவற்றையொழித்து எல்லார்க்கும் ஒப்ப

முடிந்து பயின்றுவருவன மூன்றுமாத்திரையும், ஒருமாத்திரையுமேயாக லின் "மூன்றுயிரளபாம்" என்றும், "ஒன்றேகுறிலோ டையெளக்குறுக்கம்" என்றும் கூறினர். குற்றியலுகரம் புணர்மொழியிடைப்படின் குறுகி கால் மாத்திரைபெறுதல் உரையிற் கோடல் என்பதனாற் கொள்க.

கoo. இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.

இது எழுத்தொலி யெழுச்சி பலவற்றையு மளந்து கோடற்குக்கூறிய ஒருமாத்திரை யென்னுங்காலசங்கையினை உணர்த்துகின்றது.

ப-ரை. மாந்தர்-மனிதருடைய, இயல்பு-இயல்பாக, எழும்-உண்டாகின்ற, இமை - கண்ணிமைப்பொழுதும், நொடி - விரனொடிப்பொழுதும், மாத்திரை - ஒருமாத்திரை யென்னும் வரையறைப்பொழுதாம். எ - று.

பொ-ரை. மாந்தருடைய இயல்பாகவெழும் இமைப்பொழுதும், நொடிப்பொழுதும் ஒருமாத்திரையென்னும் வரையறைப் பொழுதாம்.

வி-ப. இமையென்றது இமைத்தலை. நொடியென்றது நொடித்தலை. இவையிரண்டும் ஆகுபெயராய்க் காலத்தையுணர்த்துகின்றன. இயல்பெழும் என்னும் பெயரெச்சம் இமை நொடி, என்னும் பெயர்களோடு முடிந்தது. எழுத்தொலி முதலியவற்றை இயல்புகெடுத்து ஒருவன் வேண்டிய வாறே யெழுப்பினும் அவ்வாறெழா நிற்கும். இமையும் நொடியும் இயல்பு கெடுத்தெழுப்பவேண்டினு மவ்வாறெழாது இயல்பாகவே யெழாநிற்கும். ஆதலின் இயல்பெழும் எனவும், மேலைச்சூத்திரத் தெழுத்தொலிகளை வேண்டியவாறே யெழுப்பாது இவ்வளவானளந் தெழுப்புகவெனவுங் கூறினர். பின்னர் நிறுத்தல் என்னும் உத்தியான் இவ்வளவு கருவியிற் கூறப்பட்டது.

¶ கoக. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலு-மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்.

இது தலைப்பாய்த்தா யொன்றிடை யிட்டுநின்ற மேலதற்கோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. ஆவியும் - முதலுஞ்சார்புமாகிய உயிரெழுத்துகளுங், ஒற்றும்- அவ்விருவகைமெய்யெழுத்துகளும், அளவு இறந்து-முன் சொன்ன அளவைக்கடந்து, ஒலித்தலும் - அதிகமாக ஒலித்தலையும், மேவும் - பொருந்தும், இசை - இராகமும், விளி - அழைத்தலும், பண்டம் மாற்று - பண்டமாற்றிலும், ஆதியின் - முதலானவைகளிடத்து. எ - று,

---

¶ இச்சூத்திரம் இயல்பெழும் என்னுஞ் சூத்திரத்தைத்தழுவாமல் மூன்றுயிரளபு என்னுஞ் சூத்திரத்தைத்தழுவுதலின் தலைப்பாய்த்து என்பர். — இராமாநுசகவிராயர்.

போ-ரை. முதல் சார்பனைத்துமாய ஆவியும் ஒற்றும் மேற்கூறிய அளவிறந்து மிக்கொலித்தலையும் பொருந்தும் இசை, விளி, பண்டமாற்று முதலியவற்றின்கண். எ - று.

வி-பு. அளபெடையின்றமையா நாவல், குறிப்பிசை, முறையீடு, புலம்பலுங் கொள்க. இசையின் அளவிறந்திசைக்குங்கால் ஆவி பன்னிரண்டு மாத்திரையீறாகவும், ஒற்று பதினொருமாத்திரையீறாகவும் இசைக்குமென்றார் இசைநூலார். இது பிறநூன் முடிந்தது தானுடன்படுதல் என்னும் உத்தி. ஏனையவற்றின் அளவிறந்திசைத்தல் உலக நடைபிறழாது இசைப்பதேவரையறையென்க. நாவலென்பது செற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் தெளிப்பதோர்சொல். "காவலுழவர் களத்தகத்துப் போரேறி - நாவலோ * ஓஒ வென்றிசைக்கு நாளோதை - மாவலவன் - கொல்யானைமேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே - நல்யானைக் கோக்கிள்ளி நாடு" என்பதனாலறிக. "கஃஃஃறென்னுங் கல்லதரத்தம்." "சுஃஃஃறென்னுந் தண்டோட்டுப்பெண்ணை." என்பன குறிப்பிசை. ஏனையபொருடோன்றிக் கிடத்தலின் அளவிறந்திசைத்தல் வந்தவாறுகாண்க.

௧௦௨. பன்னீருயிருங் க ச த ந ப ம வ ய - ஞ ங வீரைந் துயிர்மெய்யுமொழிமுதல்.

இது நிறுத்த முறையானே மொழிக்குமுதலாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. பன்னீர் உயிரும் - பன்னிரண்டுயிரெழுத்துகளும், க ச த ந ப ம வ ய ஞ ங - ககரமுதல் ஙகரமீறாகச்சொல்லப்பட்ட, ஈர் ஐந்து - பத்து, உயிர் - உயிரேறிய, மெய்யும் - மெய்யெழுத்துகளும், மொழி - சொல்லுக்கு, முதல் - முதலாகும். எ - று.

போ-ரை. பன்னிரண்டுயிரும் உயிரூர்ந்த இப்பத்து மெய்யும் மொழிக்குமுதலாம். எ - று.

வி-பு. [உ-ம்.] அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம், எ-ம்; களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, ஙனம், எ - ம் வரும். பிறவுமன்ன. உயிர்போல்தனித்து முதலாந்தன்மையவல்லவாதலின் உயிர்மெய்யென்றார். இஃது இன்னதல்ல திதுவெனமொழிதல் என்னும் உத்தி.

௧௦௩. உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.

இது பொதுவிதியுள் வகரத்துக்கு சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. உ ஊ ஒ ஓ அலவொடு - உ ஊ ஒ ஓ என்கிற நான்குமல்லாத எட்டுயிர்களோடும், வ - வகரமெய்யானது, முதல் - சொல்லுக்குமுதலாகும். எ - று.

---

* 'இசைவிளிபண்டமாற்றாதியனவற்றை இயற்கையளபெடை' என்றும், 'இயற்கையாவது பொருட்குப்பின் றோன்றாது உடனிகழுந் தன்மை' யென்றும் கூறினர் பிரயோகவிவேகநூலார். ஈண்டு அலகுபெறுமையை 'சீருந்தளையுஞ் சிதையிற்சிறிய இ, உ அளபொடு ஒருமறிவாரலகுபெறும்மை.' என்பதனானுமுணர்க.

பொ-ரை. இந்நான்கு மல்லாத எட்டுயிரோடும் வகரம் மொழிக்கு முதலாம். எ - று.

[உ-ம்] வளி, வாளி, விளி, வீளி, வெளி, வேளை, வைகல், வௌவு எனவரும்.

கoச. ஆ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்.

இது யகரத்துக்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. அ ஆ உ ஊ ஓ ஔ (ஒடு) - அ ஆ உ ஊ ஓ ஔ என்கிற ஆறுயிரோடும், ய - யகரமெய், முதல் - சொல்லுக்கு முதலாகும். எ - று.

பொ-ரை. இவ்வாறுயிரோடும் யகரம் மொழிக்குமுதலாம். எ - று.

வி-பு. [உ-ம்] யவனர், யானை, யுகம், யூகி, யோகம், யௌவனம், எனவரும். மேலே ஒடுவை வருவித்துக்கொள்க.

கoரு. அ ஆ எ ஒ வ்வோ டாகு ஞம்முதல்.

இது ஞகரத்துக்குச்சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. அ ஆ எ ஒ ஒடு - அ ஆ எ ஒ என்கின்ற நான்குயிரோடும், ஞ - ஞகரமெய், முதலாகும் - சொல்லுக்கு முதலாகும். எ - று.

பொ-ரை. இந்நான்குயிரோடும் ஞகரமொழிக்கு முதலாம். எ - று.

[உ - ம்] ஞமலி, ஞாலம், ஞெகிழ், ஞொள்கிற்று எனவரும்.

கoசா. சுட்டியாவெகா வினவழி யவ்வை-யொட்டிஙவ்வு முதலாகும்மே.

இது ஙகாரத்துக்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. சுட்டு - மூன்றுசுட்டும், யா(வினா) - யாவினவும், எகரவினா - எகரவினாவும் ஆகிய ஐந்தனுடைய, வழி - பின்பு, அவ்வை - அகரத்தை, ஒட்டி - சேர்ந்து, ங உம் - ஙகரமெய்யும், முதல் ஆகும் - சொல்லுக்குமுதலாகும். எ - று.

பொ-ரை. மூன்றுசுட்டும் யாவினவும் எகரவினவுமாய இடைச்சொற்களின்பின் அகரத்தையொட்டி ஙவ்வும் மொழிக்கு முதலாம். எ - று.

வி-பு. [உ-ம்] அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் எனவரும். இவற்றை அந்து, இந்து என்றாற்போல ஒருமொழிகளென்றாலென்னையெனின், அஞ்ஞான்று, எஞ்ஞான்று என்பனபோலப் பிளவுபட்டிடையேமெல்லொற்றுமிக்குவருதலின்தொடர்மொழிகளேயாமென்க:

னன்மென்பது. இடத்தினையும் தன்மையினையும் உணர்த்தும் பல்பொருளொருசொல்லாய் வரினும், தனித்துவரும் தன்மையதன்றி முடகன்கோனூன்றி வந்தாற்போல், சுட்டுவினாவாகிய இடைச்சொற்களை முன்னிட்டு வருதலான் வழியென்றும், ஏனையமெய்கள்போலமுதலாகாமையின் அவ்வோடென்றது 'ஒட்டி'யென்றும், ஒருவாற்றான்முதலாதலின் இழிவுசிறப்பாக 'வவ்வு'மென்றுங்கூறினர். இங்ஙனங்கூறலான்ஙகரம்மொழிக்குமுதலாகாதென்பார்க்குஉடன்படலுமறுத்தலுமாய் பிறர்தம்மதமேற்கொண்டுகளைவேம் என்னு மதம்படக் கூறினாரென்றுணர்க. இனி முதலாமென்ற சூத்திரமெய்யுள் வகாமுதலிய நான்கினையும் விதந்துகூறவே, ஒழிந்த ஆறு மெய்யும் பன்னிரண்டுயிரோடு முதலாமென்பது அருத்தாபத்தியாற் பெறும். இனி *"சகரக்கிளவியுமவற்றோரற்றே-அ ஐ ஔவென்னு மூன்றலங் கடையே." என்பது முதலாக இன்னோரன்ன சிலவெழுத்துகளை மொழிக்குமுதலாகாவென ஆசிரியர் தொல்காப்பியர் விலக்கினாரா லோவெனின், இவ்வடமொழிகளும், திசைச்சொற்களும் அக்காலத்து இவ்வாறுதமிழின் கட்பயின்று வாராமை பற்றியென்க.

௧0௭. ஆவி ஞண நமனயரல வழள மெய் - சாயு முகரநாலாறு மீறே.

இது கிறுத்தமுறையானே மொழிக்கீறுமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஆவி - தனித்தும் மெய்யோடும்வரும் பன்னிரண்டு உயிர்களும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய் - இப்பதினொரு மெய்களும், சாயும் உகரம்-குற்றியலுகரமாகிய, நாலாறும் - இருபத்துநான்கெழுத்தும், ஈறு - மொழிக்கீறுகும்- எ - று.

பொ-ரை. தனித்தும் ஒற்றோடும் வரும் ஆவிமுதலாகஇங்ஙனங்கூறிய இருபத்துநான்கெழுத்தும் மொழிக்கீறும். எ - று.

வி-பு. [உ - ம்.] ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனவும்; சுட்டும் வினாவும் உவமவுருபடியுமாயஓரெழுத்தொருமொழியாம்இடைச்சொல்லாகிய அ இ உ எ ஒ எ-ம்; விள, பிலா, கரி, தூஇ, கடு, மநூஉ, சே, தை, கோ எ-ம்; உரிஞ்,மண்,பொருந்,மாம்,பொன், வேய்,வேர்,வேல், தெவ்,வீழ்,வாள், அஃது, எ-ம் வரும். காட்டாதொழிந்தன வருஞ்சூத்திரத்தாற் காண்க. குற்றுகரமும் உயிராய் அடங்குமேனும் புணர்ச்சிவேறுபாடுதோன்றவேறெடுத்தோதினரென்க.

௧0அ. குற்றுயி ரளபினீறு மேகா-மெய்யோ டேலாதொந்நவ்வோ டாமௌ - ககாவகாமோ டாகுமென்ப.

இது குற்றுயிர்க்கெய்திய தன்மேற்சிறப்புவிதியும்,எகரத்திற்கெய்தியதொருமருங்குவிலக்கலும், ஒகரத்திற்கும்,ஔகாரத்திற்கும் எய்தியவற்றுள் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம் - மொழி மரபு - சூ. ௨௬.

ப-ரை. குற்று உயிர்-அ இ உ எ ஒ என்கிற குற்றுயிரானவை அளபின் - அளபெடையிலே, ஈறும் - வரிவடிவில் அறிகுறியாக த்தனித்து ஈறுகும், எகரம் - எகரமானது, மெய்யொடு ஏலாது - மெய்யொடீறுகாது, ஒ-ஒகரமானது, நவ்வொடு ஆம் - நகரமெய் யொன்றுடன்ஈறுகும், ஔ - ஔகாரமானது, ககர வகரமோடு ஆகும் - ககரவகரமாகிய இரண்டுமெய்யுடனு மீறுகும், என்ப - என்றுசொல்லுவர் புலவர். எ - று.

பொ-ள். குற்றுயிர்அளபெடையின்கண்வரிவடிவின்அறிகுறியாய்த் தனித்தீறும். எகரம் மெய்யோடீறுகா. ஒகரம் நகரமொன்றுடனீறும். ஔகாரம் ககர வகரங்கள் இரண்டுடனும் ஈறுமென்று சொல்லுவர் புலவர் எ-று.

வி-பு. [உ-ம்] ஆஅ வளியவலவன் எ-ம், நொ எ-ம், கௌ, வெள எ-ம் வரும். நெடில் அளபெடுப்புழி வரிவடிவின் அறிகுறியாய்வருங்குற்று யிர் நெடிலோடு தொடர்ந்து உடன்படுமெய்யுடனீறுந்தன்மையதன்றிதனி த்து நிற்றலின் 'குற்றுயிரளபினீறும்' என்றார். தானே ஈறுதலன்றி குற்றுயி ரளபினும் ஈறுமெனஉம்மைகொடாதொழிந்தார். உயிர்கழிந்த உடம்பைப் 'படுமகன் கிடக்கைகாணூஉ' என்றாற்போல, அறிகுறிமாத்திரையாய்நின் றதனை இங்ஙனங்குற்றுயிர் என்றதன்றி அஃதோரெழுத்தன்றாதலின், எகர ஒகர ஔகாரங்களைவிதந்தோதவே, ஏனையுயிர்கள் தமக்கேற்றமெய்களோடு ஈறுமென்பது பெற்றாம். முதலுஞ்சார்புமாய்வகுத்து விரித்துக்கொண்ட எல்லாவெழுத்தும் உயிரும்,மெய்யும்,ஆய்தமுமாயடங்கலின்,முதலு மீறுமா காத ஆய்தத்தை யொழித்து, ஒழிந்த உயிரும்மெய்யுமாய இரண்டனையும் உயிர்முதல். மெய்முதல் உயிரீறுமெய்யீறெனவகுத்துக்கொண்டார்மேல் வரும்புணர்ச்சி விதி அடங்குதற் பொருட்டெனக்கொள்க.

கoகூ. நின்ற நெறியே யுயிர் மெய்முத லீறே.

இது உயிர்மெய்யெழுத்தினது முதலும் ஈறும் ஆமாறு உணர்த்து கின்றது.

ப-ரை. நின்ற நேறியே- மெய்முன்னும் உயிர்பின்னுமாகவொலி த்துநின்றவழியே, உயிர் மெய் - உயிர்மெய்க்கு, முதல் - மெய் முதலாகும், ஈறு - உயிரீறுகும். எ - று.

பொ-ள். உயிர்மெய்யினது முதல்யாது அதன்ஈறுயாதெனின் ஒற்று முன்னும் உயிர்பின்னுமாய் ஒலித்துநின்றநெறியே மெய்யதன்முதலாம் உயிரதனீறும். எ-று.

வி-பு. எனவேஉயிரும்,ஒற்றும்,ஆய்தமுதலியவொன்பதுசார்பெழுத்து களும் ஓரெழுத்தாகலின், அவற்றிற்குமுதலும் ஈறும்அவையேயாமென்பது அருத்தாபத்தியாற்கூறினர். இஃது எஞ்சியசொல்லினெய்தக்கூறல் என.

னும் உத்தி. இத்தொடக்கத்தனவல்லன சொல்லின் முடிவினப்பொருள் முடித்தல்என்னும்உத்தி.முன்னர்மொழிக்குமுதலீறென்றவற்றுள்ளும்,பின்னர் இடைநிலைபோலிபதம்புணர்பென்பவற்றுள்ளும்உயிர்மெய்யைப்பிரித்து,தனிமெய்யுந் தனியுயிரும் போலவைத்து இலக்கணங்கூறலின்,மொழிக்குமுதலும் ஈறுங் கூறுதலன்றி,எழுத்திற்குமுதலும் ஈறுங்கூறினறென்றுணர்க. இச்சூத்திரம் சிங்கநோக்கம். அற்றன்றி ஆற்றொழுக்காய் முன்னின்ற மொழிமுதலீறுரைக்குஞ் சூத்திரங்களையே தொடர்ந்த தென்பாரு முளர். பின்'இம்முன் கவ்வாம்'என்றும்,'இயல்பினும்விதியினுநின்றவுயிர்முன் கசதப மிகும்'என்றும்,உயிர்மெய்யின்உயிரையும்மெய்யையும் வேறு பிரித்தோதுவது இலக்கணமன்றாய்முடியுமாதலின்அதுபொருந்தாதென்க. எண்ணதிகாரத்துள் உயிர்மெய்யை ஒரெழுத்தாகவெண்ணினார்ஈண்டு இரண்டாகவைத்து இலக்கணங் கூறுவதென்னையெனின், அப்பொடு பெய்த உப்புபோல உயிரொடு புணர்த்தியமெய்தன்னளவு தோன்றாது ஒன்றாய் நிற்றலின், ஒன்றுமாய், ஒற்று முன்னும் உயிர்பின்னுமாய் ஒலித்துநின்ற நெறியான் இரண்டுமாய் நிற்றலினென்றுணர்க. இவ்வாற்றான் உயிர்மெய் யென்னுஞ்சொல் மாத்திரைவகையான் உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகவும், ஒலிவகையான் உம்மைத்தொகை யாகவும் கொள்ளப்படும்.

கக௦. கசதப வொழித்தவீ ரேழன் கூட்ட - மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட் - டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை - மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.

இது நிறுத்தமுறையானே மொழிக்குஇடைநிலையாமாறு உணர்த்துதல்,உயிருடன் உயிர்மயங்கலும்,மெய்யுடன் மெய்மயக்கலும், இவ்விரண்டும் மாறிமயங்கலும்என மூன்றாகவகுக்கப்படும்.இவற்றுள் உயிருடன் உயிர் மயங்குந்தன்மை யின்மையின், அதனையொழித்து ஏனை இரண்டனையும் உணர்த்துகின்றது.

ப-ரை. க ச த ப்-கசதபவென்னுநான்கையும், ஒழித்த-நீங்கிய, ஈரேழன் கூட்டம்-பதினான்குமெய்களும் பிறமெய்களோடு கூடுங் கூட்டம், மெய்மயக்கு (ஆகும்)-வேற்றுநிலை மெய்மயக்கமாகும், ர ழ -ரழவென்னு மிரண்டனையும், ஒழித்து-நீக்கி, ஈரெட்டு-மற்றப்பதினாறு மெய்களுந், (கூட்டம்) - தம்மொடு கூடுங் கூட்டம், உடன் நிலை (மெய் மயக்கு) ஆகும் - உடனிலை மெய்மயக்கமாகும்,இ இருபால் மயக்கும்-இவ்விருவகை மயக்கமும்,மொழி-ஒருமொழிக்குந்தொடர்மொழிக்கும், இடை - நடுவில், மேவும்-வரும், உயிர் மெய் - உயிருடன்மெய்யும் மெய்யுடன் உயிரும்,

மயக்கு - மாறிமயக்கு மயக்கத்திற்கு, அளவு இன்று-அளவில்லை வேண்டியவாறே மயங்கும். எ - று.

பொ-ள. மெய்பதினெட்டனுள் க ச த ப என்னும் நான்கையும் ஒழித்தபதினான்குமெய்யும் பிறமெய்களோடு கூடுங்கூட்டம் வேற்று நிலை மெய்ம்மயக்கமாம். ரகாரழகாரமென்னும் இரண்டனையும் ஒழித்தொழிந்த பதினாறுமெய்யும் தம்மோடுமயங்குங் கூட்டம் உடனிலைமெய்மயக்கமாம். இவ்விரண்டு பகுதி மயக்கமும் மொழிக்கிடையேவரும். இவ்வாறுமெய்யுடன் மெய்மயங்குதலன்றி, உயிருடன்மெய்யும், மெய்யுடன் உயிரும் மாறிஉயிரும்மெய்யும் மயங்கும்மயக்கத்திற்குவரையறையின்று.வேண்டிய வாறேமயங்கும். எ - று.

வி-பு. கூட்டமெனினும் மயக்க மெனினும்ஒக்கும். உடனிலையென்பதனால் பிறமெய்யென்பது பெற்றும். மொழி என்றது ஒருமொழி தொடர்மொழி என்னும்இரண்டனையும். உயிரும்மெய்யும்மயங்குதற்கிடம்விதந்து கூறாது பொதுப்படக்கூறினர் மொழியினும்உயிர் மெய்யென்னும் ஒரெழுத்தினும்வருதலின். இச்சூத்திரத்தான் மெய்யுடன்மெய் மயங்குங்கால் க ச த ப என்னும் நான்கும் தம்மொடுதாமே மயங்குமெனவும், ர ழ என்னும் இரண்டும் தம்மொடுபிறவே மயங்கு மெனவும், ஒழிந்தபன்னிரண்டு மெய்யும் தம்மொடுதாமும் பிறவும் மயங்குமெனவும் பெற்றும். உயிரும் மெய்யும் மயங்குதற்கு [உ-ம்] அல், வில் எ-ம், கா எ-ம் மொழிக்கண் மயங்கின. க என எழுத்தின்மயங்கின. மெய்யுடன்மெய்மயங்குதற்கு உதாரணம் மேல்வருஞ் சிறப்புச்சூத்திரங்களிற் காண்க. இவ்விடைநிலையை ஒருமொழி தொடர்மொழி யென்னுமிரண்டினுங்கொள்ளாது ஒருமொழிக்கேயெனக் கொள்வாருமுள்ர். எவ்விடத்தவரினும்இரண்டெழுத்துஇணங்கிப்பொருந்தும் பொருத்தவாயை இடைநிலையென்றேதலானும், இணங்காதனவரின் விகாரப்படுதலானும் அதுநூற்கருத்தன்றெனக. இனி உயிர்மெய் மயக்களவின்றென்பதற்குஉயிர்மெய்முன்னும் உயிர்மெய்மயங்குதல்வரையறையின்றெனப்பொருள்கூறுவாருமுளர். இங்ஙனம் உயிர்மெய்யைஇரண்டெழுத்தாகப்பிரித்துமயக்கவிதிகூறுவார் அதனையேயொன்றாகவைத்து மயக்கவிதி கூறாதலானும், கூறினும் இடைநிலைமயக்கமுழுவதும்இச்சூத்திரத்தடங்காமையானும் அதுபொருந்தாதெனக.

கககூ. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

இது வேற்றுநிலை மெய்ம்மயக்கத்துள் விதந்து ங வ க்களுக்கு சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ள. ங முன் - ஙகரத்தின்முன், க - ககரமும், வ முன் - வகரத்தின்முன், ய - யகரமும், ஆம் - மயங்கும். எ - று.

போ-ரை. ஙகரமுன்னர் ககரமும், வகரமுன்னர் யகரமும் மயங்கும்.

[உ-ம்.] கங்கன், தெவ்யாது எனவரும்.

கக௨. ஞ ந முன் றம்மினம் யகாமோ டாகும்.

இது மேற்றுநிலை மெய்மயக்கத்துள் விதந்த ஞ நக்களுக்கு சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ரை. ஞ ந முன்-ஞகர நகரங்களின்முன், தம் இனம்-அவற்றிற்கினமாகிய சகரதகரங்களும், யகரம் - யகரமும், ஆகும்-மயங்கும். எ - று.

போ-ரை. இவ்விரண்டு மெய்முன்னரும் தமக்கினமாகிய சகரதகரங்களும் யகரமும் மயங்கும். எ-று.

[உ-ம்.] கஞ்சன், உரிஞ்யாது, கந்தன், பொருந்யாது என வரும்.

கக௩. ட ற முன் க ச ப மெய்யுடன் மயங்கும்.

இது வேற்றுநிலை மெய்மயக்கத்துள் விதந்து ட றக்களுக்குசிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ரை. ட ற முன் - டகர றகரங்களின்முன், க ச ப மெய்- க ச ப என்கிற மூன்று மெய்களும், உடன் மயங்கும் - இணங்கி மயங்கும், எ-று.

போ-ரை. இவ்விரண்டு மெய்முன்னரும் க ச ப என்னும் மூன்று மெய்யும் இணங்கிமயங்கும். எ-று.

[உ-ம்.] கட்கம், கட்சி, நுட்பம், கற்க, கற்சிறர், கற்ப எனவரும்.

ககச. ண ன முன் னினங் க ச ஞ ப ம ய வ வ்வரும்.

இது வேற்றுநிலை மெய்மயக்கத்துள் விதந்து ண னக்களுக்கு சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ரை. ண ன முன் - ணகர னகரங்களின்முன், இனம்-அவற்றிற்கினமாகிய ட றக்களும், க ச ஞ ப ம ய வ - ககரமுதலிய இவ்வேழு மெய்களும், வரும் - மயங்கும். எ - று.

போ-ரை. இவ்விரண்டு மெய்முன்னரும் தமக்கினமாகிய ட றக்களும், க ச ஞ ப ம ய வ என்னும் ஏழுமெய்யும் மயங்கும். எ-று.

[உ-ம்.] விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர்; மண்வலிது (எ-ம்); புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது (எ-ம்) வரும்.

ககரு. ம ம்முன் ப ய வ மயங்கு மென்ப.

இது வேற்றுநிலை மெய்மயக்கத்துள் விதந்து மவ்வுக்கு சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. மீ முன் - மகரத்தின்முன், ப ய வ - ப்ய வ் என்னும் மூன்றுமெய்களும், மயங்கும் என்ப-மயங்குமென்று சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. மகரமெய்முன்னர் பகர யகர வகரங்கள் மயங்குமென்று சொல்லுவர்புலவர். எ-று.

[உ-ம்.] கம்பன், கலம்யாது, கலம்வலிது எனவரும்.

ககசு. ய ர ழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

இது வேற்றுநிலை மெய்மயக்கத்துள் விதந்த ய ர ழ க்களுக்குச்சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ரை. ய ர ழ முன்னர் - ய ர ழ என்னு மூன்றுமெய்களின் முன், மொழி முதல் மெய் - மொழிக்குமுதலாகின்ற பத்துமெய் களும், வரும்-மயங்கும். எ-று.

பொ-ரை. இம்மூன்றுமெய்முன்னரும்மொழிமுதற்குவிதந்தகொண்ட பத்து மெய்யும் மயங்கும். எ-று.

[உ-ம்.] வேய், வேர், வீழ், கடிது, சிறிது, தீது, பெரிது, நீண்டது, மாண்டது, ஞான்றது, யாது, வலிது எ-ம்; வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு எ-ம் வரும். சுருங்கச்சொல்லல் என்னும் வனப்புவகையான் மொழிமுதன் மெய்யெனக்கூறலின் யகரத்தின்முன்யகரம்மயங்கு முடனிலை ஈண்டுகொள்ளாதொழிக.

ககஎ. ல ள முன் க ச ப வ ய வொன் றும்மே.

இது வேற்றுநிலை மெய்மயக்கத்துள் விதந்த ல ள க்களுக்கு சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ரை. ல ள முன்-லகரளகரங்களின்முன், க ச ப வ ய-ககர முதலிய இவ்வைந்தும், ஒன்றும்-மயங்கும். எ-று.

பொ-ரை. இவ்விரண்டுமெய்முன்னரும் க ச ப வ ய என்னும் ஐந்து மெய்யும் மயங்கும். எ-று,

[உ-ம்.] வேல், வாள், கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது எனவரும்.

ககஅ. ர ழ வல்லன தம்முற் றுடனிலையும்.

இது உடனிலை மெய்மயக்கத்தின் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. ர ழ வல்லன-ரகர ழகரமல்லாத பதினாறுமெய்களும், தம் முன்-தமக்குமுன், தாம் - தாம், உடன் நிலையும் உடனின்று மயங்கும். எ - று.

போ-ரை. ரகார ழகார மல்லனவாகிய வேற்றுநிலை மெய்மயக்கத் துட்கூறிய பன்னிரண்டுமெய்யும், உடனிலைக்கே யுரிய க ச த ப ஈரான்கும் தம்முற்றாமுடனின்று மயக்கும். எ-று.

[உ-ம்.] அங்ஙனம், அவ்வை, அஞ்ஞானம், அந்நீர், அட்டு, அற்றம், அண்ணம், அன்னை, அம்மை, அய்யம், அல்லி, அள்ளல் (எ-ம்) ; அக்கு, அச்சு, அத்து, அப்பு (எ-ம்.)வரும்.

கககூ. ய ர ழ வொற்றின்முன் க ச த ப ங ஞ ந ம - வீரொற் றும் ர ழ த் தனிக்குறி லணையா.

இது தனிமெய்யுடன் தனிமெய்யாயும் மயங்குவனஇவையவென்ப தூஉம், மொழிக்குறுப்பாக மயங்காதன இவையவென்பதூஉம் உணர்த்து கின்றது.

ப-ரை. ய ர ழ - யரழ என்கிறமூன்று மெய்களும்,முன் - இவ ற்றின்முன் மயக்குமென்ற, ஒற்றின்- பத்துமெய்களுள், க ச த ப ங ஞ ந ம - ககரமுதலாகிய இவ்வெட்டுமெய்களும், ஈர் ஒற்றும்- தனிமெய்யும் உயிர்மெய்யுமாகி மயக்குதலன்றியும் ஈரொற்றாயு மயக்கும்; ர ழ-ரகார ழகாரமெய்களும், தனி குறில் - தனிக்குற் றெழுத்தும், அணையா - சொல்லுக்கு உறுப்பாக வருவதும் நிற்ப துமாக மயக்குவனவல்ல. எ - று.

போ-ரை. யரழவென்னும் மூன்றொற்றும், இவற்றின்முன்மயக்கு மெனவிதித்தபத்தொற்றுள் இங்ஙனங்கூறிய எட்டொற்றும், தனிமெய்யும் உயிரூர்ந்த மெய்யுமாய் மயக்குவனவன்றி ஈரொற்றாயும் மயக்குவனவாம். ¶ ரகார ழகாரவொற்றும், தனிக்குறிலும் மயங்கும் தன்மையவாயினும் மொழிக்குறுப்பாக வருவதும் நிற்பதுமாய் மயங்கா. எ-று.

ஈரொற்றுமாம் என்னும் உம்மையும், மொழிக்குறுப்பாக என்னுஞ் சொற்களும் எஞ்சி நின்றன.

[உ-ம்.] வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை, சிறை, தலை, புறம் (எ-ம்); வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு (எ-ம்); காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம் (எ-ம்)வரும். ஏனையவந்துழிக்காண்க. அணையா என்ற ஆகாதனவற்றிற்கு உதாரணங் காட்டல் ஆகாமையுணர்க.

கஉ0. லள மெய்திரிந்த ன ண முன் மகாரம் - நைந்தீ ரொற்றுஞ் செய்யு ளுள்ளே.

இது செய்யுட்கு உரியவாய் ஈரொற்றுடனிற்பன இவையவென்பது உணர்த்துகின்றது.

¶ இனி உரையிற்கோடல் என்னும் உத்தியால் ரகர ழகரவொற்று தனிக்குறிலைச்சேர்ந்து மொழிக்குறுப்பாகி விகுதி இடைச்சொல்லாய் வரு மெனக்கொள்க எனவும் கூறுவர்.—இராமாநுசகவிராயர்.

ப-ரை. லள மெய் திரிந்த - லகார ளகாரவொற்றுத்திரிந்த, ன ண முன்-னகார ணகாரமுன் வரும்,மகாரம்-மகரவொற்றானது, நைந்து-முன்சொன்னபடியேகுறுகி, ஈர் ஒற்றும்-அந்தமெய்களுடனே யீரொற்றுடனிலையாம், செய்யுள் உள்ளே-பாட்டினுள்.

பொ-ரை. லகார ளகார ஒற்றுத்திரிந்த னகார ணகாரங்கள் முன்வரும் மகரவொற்று முன்னர்க்கூறியவாறேகுறுகிஅவற்றுடன் ஈரொற்றுடனிலையாம் செய்யுளகத்து. எ-று.

வி-பு. [உ-ம்.] "திசையறி மீகாமனும் போன்ம்." (எ-ம்), "மயிலியன் மாதர்மருண்ம்" (எ-ம்) வரும். மகாரம் நைந்தென அனுவதித்தார் மகரங் குறுகுதற்குத் தொடரும் னகர ணகரங்கள் லகரளகரந் திரிந்தனவென்பதூஉம்,அக்குறுக்கம் செய்யுட் கண்ணதென்பதூஉம் உய்த்துணர்தற்கென்க.

கஉக. தம்பெயர்மொழியின் முதலுமயக்கமு - மிம்முறைமாறியு மியலு மென்ப.

இது மொழிமுதலிடை நிலைகட்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. தம் பெயர்-தம்முடையபெயர்களை,மொழியின்-சொல்லி நிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்குமிடத்து, முதலும்-மொழிமுதலுக்கும், மயக்கமும் - இடைநிலை மயக்கத்திற்கும், இ முறை - இப்படிவிதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லாவெழுத்துகளும்,மாறியும் இயலும்-முதலாகியும் மயங்கியும் வரும், என்ப-என்றுசொல்லுவர்புலவர். எ-று.

பொ-ரை. எழுத்துகள்தம்பெயர்களை மொழிந்துநிலைமொழிவருமொழியாகப் புணர்க்குமிடத்து எல்லாமொழிமுதற்கும்இங்ஙனம்விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்து முதலாம், மயக்கத்திற்கு இங்ஙனம் விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்தும் மயங்குமென்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. இங்ஙனம் எல்லா வெழுத்தும் தனித்தனி அதற்கதுவேமுதலாக வரும் எனவே, ஈற்றிற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துந் தனித்தனியதற்கதுவே ஈறாகவருமெனச் சொல்லாதே அருத்தாபத்தியான் அமைதலின், ஈறுமென மிகைபடக் கூறாதொழிந்தார்.

[உ-ம்.] "அவற்றுள்-லளஃகான்முன்னர்யவவுந்தோன்றும்." என்புழி லகாமுதலாகியும் ஃகானிறுதி னகர வொற்றோடு மயங்கியும் நின்றது. கேப் பெரிது என்புழி எகரமெய்யோடு மயங்கின்றது. பிறவும் வரையறையின்றி

வருதல்காண்க. ஆய்தத்திற்கு பிறப்பிதிகாரத்துள் வருவதூஉ கூறியவழி மயக்கவிதியமைந்து கிடந்தமையானும் தன்பெயர்மொழிய வாராமையானும் கூறுதொழிந்தார்.

கஉஉ. மகர விறுதி யஃறிணைப் பெயரி-னகரமோ டுறழா நடப்பன வுளவே.

இது நிறுத்தமுறையானே போலியாமாறு உணர்த்துவான்தொடங்கி மொழி இறுதிப்போலி உணர்த்துகின்றது.

ப-ரை. அஃறிணை பெயரின்-பால்பகா அஃறிணைப்பெயர்களிடத்து, இறுதி-ஈற்றிலேநின்ற, மகரம் - மகரமெய்யானது; னகரமொடு - னகரமெய்யோடு, உறழா - ஒத்து, நடப்பன-நடப்பவை, உள-உண்டு. எ - று.

பொ--ரை. பால்பகா அஃறிணைப்பெயர்களி னிடத்து இறுதி மகரம் னகரத்தோடொத்து நடப்பனவுளவாம். எ-று.

வி-பு. மகரவிறுதி என்றதனல் பால்பகா அஃறிணைப் பெயரொன்பது பெற்றும். மகரம் னகரத்தோடொத்தலாவது பெயரிறுதிக்கண் மகரம்நின்ற நிலைக்களத்து னகரம் நிற்பினும் வேற்றுமையின்றி ஒத்தல்.

[உ-ம்.] † "அகனமர்ந்துசெய்யாளுறைபுமுகனமர்ந்து-நல்விருந்தோம்புவானில்." இதனுள் அகம்,அகன்,முகம், முகன் (எ-ம்.); தலம், தலன், நிலம், நிலன், கலம், கலன், நலம், நலன், வலம், வலன், (எ-ம்) வரும். பிறவுமன்ன. உறழா நடப்பன உள என்னுஞ் சொல்லாற்றலான் உறழாதன பெரும்பால வென்க. அவை வட்டம், குட்டம், மாடம், கூடம் முதலாயின. பால்பகா அஃறிணைப் பெயர்களிடத்தியல்பாய மகரவிறுதி நிலையின் னகரம் போலியாய் வருமெனவே அகன், முகன் முதலியசொற்களைப் பால்பகுத்தவாடேவறிசொல்லெனக் கொள்ளற்க என்பதூஉம், எகின், பயின், குயின்,வயின் முதலிய னகரவீற்றுப் பெயர்க்கு இவ்வையப்பாடில்லை யென்பதூஉம் பெற்றும். இனி இவ்விறுதிப் போலியை முற்கூறியவதனுல். சுரும்பு, சுரும்பர், அரும்பு, அரும்பர், சாம்பல், சாம்பர், பந்தல், பந்தர் முதலியனவுங்கொள்க.

கஉ௩. அ ஐ முதலிடை யொக்குஞ் ச ஞ ய முன்.

இது மொழி முதற்போலியும் மொழி இடைப்போலியும் உணர்த்துகின்றது.

ப-ரை. அ ஐ - அகரமும், ஐகாரமும், முதல்-சொல்லுக்குமுதலிலும், இடை-நடுவிலும், ஒக்கும்-வேறுபாடில்லாமலொத்து நடக்கும், ச ஞ ய முன் - சகர ஞகர யகரங்களுக்குமுன் வந்தால்.

† திருக்குறள், ௭௫. அ௪.

போ-ரை. மொழிமுதலினும் இடையினும் அகர ஐகாரங்கள் வேற்று மையின்றி யொத்து நடப்பனவாம், சகர ஞகர யகரங்கட்கு முன்னர்வரு மாயின். எ-று.

வி-பு. ஈண்டு முன் என்றது கால முன் எனக்கொள்க.

[உ-ம்.] பசல், பைசல், மஞ்சு, மைஞ்சு, மயல், மையல் (எ-ம்); அமச்சு, அமைச்சு, இலஞ்சி, இலைஞ்சி, அரயர், அரையர் (எ-ம்) வரும். பிறவுமன்ன.

கஉச. ஐகான் யவ்வழி நவ்வோடு சில்வழி-ஞஃகா னுறழு மென்மரு முளரே.

இது மொழி இடைப்போலி உணர்த்துகின்றது.

ப-ரை. சில் வழி - சொல்லுக்குநடுவே சிலவிடத்து, ஐகான் (வழி) - ஐகாரத்தின்பின்னும், ய வழி - யகரமெய்யின்பின்னும், நவ்வொடு-இயல்பாய்வரும் நகரமெய்யினோடு, ஞஃகான் - ஞகர மெய்யானது, உறழும்-ஒத்துநடக்கும், என்மரும் - என்று சொல் வாரும், உளர்-சிலருண்டு. எ-று.

போ-ரை. மொழியிடைக்கண் சிலவிடத்து ஐகாரத்தின்பின்னும், யகர வொற்றின்பின்னும் இயல்பாய்வரும் நகரத்தோடு ஞகரம் உறழுமென்று சொல்லுவாருமுளர். எ-று.

வி-பு. இப்போலி அருகிவருதலின் சில்வழி என்றும், எல்லார்க்கும் ஒப்பமுடிந்த தன்றாகலின் என்மரும் என்றுங் கூறினார்.

[உ-ம்.] † "செய்ஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன் - மைஞ்ஞின்றவொண் கணு மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க-நெய்ஞ்ஞின் றெரி யும்விளக்கொத்தநீலமணிமிடற்றான் - கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னைக் கண்கொண்டுகாண்பதென்னே." (எ-ம்); ஐஞ்ஞூறு (எ-ம்)வரும். இச்சூத் திரம் பிறன்கோட் கூறல் என்னும் உத்தி. "மன்யாத்தகோட்டமழக ளிறுதோன்றுமே," "மண்ஞாத்தகோட்டமழகளி றுதோன்றுமே."(எ-ம்); "பொன்யாத்ததார்ப் புரவிபரிக்குமே," "பொன்ஞாத்ததார்ப் புரவிபரிக் குமே" (எ-ம்) வருமொழி வினைக்குமுன்னர் யாநின்றநிலைக்களத்து ஞாகிற் பினுமொக்கும் போலிக்கு,தொல்காப்பியர்*"ண ன வென் புள்ளிமுன்யாவு ஞாவும் - வினையோ ரனைய வென்மனார் புலவர்." என இச்சூத்திரஞ் செய் தவாறு, இவ்வாசிரியருஞ் சூத்திரஞ்செய்யா தொழிதல் இறந்தது விலக்கல் என்னும் உத்தி. பிறவுமன்ன.

---

† திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், திருத்தில்லை, செ.௨௫.
* தொல்காப்பியம், எழு. தொகை. சூ. ௪.

இம்மூன்று சூத்திரத்தானுங்கூறிய போலிகளை இடைநிலை மயக்கத்தின்பாற்படுத்துப்பொருள் கூறுவாருமுளர். இங்ஙனங்கூறிய எழுத்துகள் மொழிக்குறுப்பாகிஒன்று நின்றநிலைக்களத்து மற்றொன்று அதுபோல மொழிநிரப்பநிற்பதன்றி, ஒன்றொடொன்று மயங்கி இரண்டெழுத்தும் உடனிற்பதின்மையானும், முதலீறிடைநிலைகட்குப்புறனடையும் கூறிக்குறைவறுத்தமையானும் உறழாநப்பன என்றும், ஒக்கும் என்றும், உறழும் என்றும் உவமவுருபுகொடுத்து இம்மூன்று சூத்திரத்தும் கூறுதலானும் அதுபொருந்தாதென்க.

கஉரு. அம்மு னிகாம் யகா மென்றிவை-யெய்தி னையொத் திசைக்கு மவ்வோ - டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

இது வடநூலார்சந்தியக்கரமென்பவற்றுள் ஐ ஔ என்னும் நெட்டெழுத்துகளின் வடிவு புலப்படுதலுணர்த்துகின்றது.

ப-ரை. அ முன்-அகரத்தின்முன், இகரம்-இகரமும், யகரம்-யகரமெய்யும், என்ற இவை-என்றுசொல்லப்பட்டவிவை, ஒத்து-தம்முளொத்து, எய்தின்-பொருந்தினால், ஐ இசைக்கும்-ஐயென்கிற நெட்டெழுத்து ஒலிக்கும், அவ்வோடு-அகரத்தோடு, உவ்வும்-உகரமும், வவ்வும்-வகரமெய்யும், (ஒத்து) - தம்முளொத்து, ஓர் அன்ன-ஒருதன்மையனவாக, (எய்தின்)-பொருந்தினால், ஔ (இசைக்கும்) - ஔ என்கிற நெட்டெழுத்து ஒலிக்கும். எ-று.

போ-ரை. அகரத்தின்முன்னர் இகரமும், யகரமும் தம்முளொத்தெய்தின், ஐ என்னும் நெட்டெழுத்தொலிக்கும். அகரத்தோடு உகரமும், வகரமும் தம்முளொத்து ஒருதன்மையவாக எய்தின், ஔ என்னும் நெட்டெழுத்தொலிக்கும். எ-று.

விடு. மொழிந்தபொருளோடொன்ற அவ்வயின்மொழியாததனை முட்டின்று முடித்தல் என்னும் உத்தியான் அகரக்கூறும், இகரக்கூறும் தம்முளொத்து எகரமொலிக்கும், அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொத்து ஒகரமொலிக்குமெனவுங்கொள்க. இனிஇச்சூத்திரத்திற்கு இவ்வாறுபொருள்சொல்லாது, தமிழ்நூற் பயிற்சி ஒன்றுமேயுடையார் எழுத்துப்போலி யுணர்த்திற்றென்று பொருள்கொண்டு, அஇ=ஐ, அய்=ஐ, கஇ=கை, கய்=கை, அஉ=ஔ, அவ்=ஔ, கஉ=கௌ, கவ்=கௌ என உதாரணங்காட்டுவர். அவ்வாறு பொருள்கொண்டு உதாரணங் காட்டுமாற்றால் பெரும்பயனின்மையானும், வடநூலோடு மாறுபடுமாதலானும் அது பொருந்தாதென்க.

கஉசு. மெய்க ளகாம நெட்டுயிர் காரமு-மையௌ கானு மிருமைக் குறிலிவ் - விரண்டொடு காரமாஞ் சாரியை பெறும்பிற.

இது மேலெழுத்திலக்கணங்கூறிய முகத்தாற்போந்த வெழுத்தின் சாரியைகளைத் தொகுத்து இனமடைத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. மெய்கள் - ஒற்றுகள், அகாரமும் - அகரச்சாரியையும், நெடு உயிர்-உயிர்நெடில்கள், காரமும்-காரச்சாரியையும், ஐ ஔ- அவற்றுள் ஐகாரஔகாரங்கள், கானும்- காரச்சாரியையுடனே கான்சாரியையும், இருமை குறில்-உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும், இ ,இரண்டொடு - காரம் கான் என்கிற இரண்டுடனே, கரமும்- கரச்சாரியையும்,ஆம் - ஆகின்ற, சாரியை- சாரியைகளை, பெறும்- பெறும், எ-று.

பொ-ரை. மெய்கள் அகரச்சாரியையும், நெட்டுயிர்கள் காரச்சாரியையும்,அவற்றுள் ஐகார ஔகாரங்கள் காரச்சாரியையுடனேகான்சாரியையும், உயிர்க்குறிலும், உயிர்மெய்க்குறிலும் காரம், கான் என்னும் இவ்விரண்டுடனே கரச்சாரியையும் பெறும். எ-று.

வி-பு. மெய்களை முற்கூறினர் அவற்றிற்கு அச்சாரியை இன்றியமையாமையின். மெய்கள் அவ்வுமென்னாது அகாரமும் என்றார் அங்ஙனம் கரம்; காரம்,கான்கள் வரின் சாரியை அகரத்தினது சாரியை யென்று கோடற்கு. ஆஞ்சாரியை என்றார் காரமுதலிய சாரியைகளை யேற்றபெற்றிகோடற்கு.

[உ-ம்.] க, ங (எ-ம்); ஆகாரம், ஐகாரம், ஔகாரம் (எ-ம்); ஐகான் ஔகான் (எ-ம்); அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம் (எ-ம்) வரும். பிறவுமன்ன.

பிறவென்றமையால் குறிலோடு கான்புணருங்கால் இடையே ஆய்தத் தோற்றமும்,வழங்கும் பிறசாரியைகளுங் கொள்க. உயிர்மெய்நெடிலும், ஆய்தமும் கூறுதொழிந்தார், உயிர்மெய்நெடில் இங்ஙனம்கூறிய மூன்றுசாரியையும் ஏலாமையானும், ஆய்தம் பிறவழிவாராமையின் மொழியிடைப்படுத்து, அம்மொழியிறுதிக்கண்பிறசாரியை தந்து, உயிர்வருக்கத்து இறுதிக்கண்ணேவழங்குதலானுமென்க. விகற்பத்தின் முடித்தல் என்னும் உத்தியான் மேல் விரிந்துமுடிந்து கிடந்தனவற்றைப் புலப்படவேண்டி ஈண்டுத் தொகுத்து முடித்தலான், இச்சூத்திரம் முடிந்தது முடித்தல் என்னும் உத்தி.

கஉஎ. மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே.

இது இவ்வியலுக்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. எழுத்து - இவ்வெழுத்துகள், மொழியாய் - பதமாயினும், தொடரினும்- அப்பதம் தம்மோடும் உருபோடும் புணர்ந்தாலும், முன் அனைத்து-முன்சொல்லப்பட்ட அப்பதத்திலக்கணத்தையும் உடையன வாகும். எ-று.

போ-ரை: இவ்வெழுத்துக்கள் பதமாயினும், அப்பதம் தம்மோடும் உருபோடும் புணரினும் அவற்றால்பிறழாது, முன்னர்க் கூறிய அப்பத்திலக்கணத்தையும் உடையவாம். எ-று.

வி-பு. எழுத்து சுண்ணத்தின்கண் அரிசனமுதலிய போலாது, மாலையின்கண் மலர்போல் அவற்றில் நிற்றலின் முன்னனைத்து என்றார். எழுத்து என்பது சாதியொருமையாதலின், அனைத்து என்னும் ஒருமையோடு முடிந்தது. முன்னனைத்தால் பதவியல் முதலிய நான்கியலுள்ளுங்காண்க.

எழுத்தியல் சூத்திரம் ௭௨.

முற்றிற்று.

இரண்டாவது

§ பதவியல்.

§ § ௧௨௮. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்-பதமா மது பகாப் பதம்பகு பதமென - விருபா லாகி யியலு மென்ப.

இது நிறுத்தமுறையானே பதத்தினிலக்கண முணர்த்துவான் றொடங்கி எழுத்தாற் பதமாதலும், அஃதிரண்டிணைய வென்பதூஉம் உணர்த்துகின்றது.

---

§ "நன்னூலார் பதவியல் கூறியதற்கு முதனூல் வடநூலாகலின், அது தோன்ற மொழியியலென்னாது, பதவியலென வடசொல்லான் அதற்குப்பெயரிட்டு, அவ்வோத்துள் வடவெழுத்துத் தமிழில் வருமாறுங் கூறினார்." என்பர் இலக்கண விளக்கச் சூறாவளியில் சிவஞானமுனிவர்.

§ § "எழுத்து தனித்து நிற்றலானும், ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்றலானும் அன்றே, தனிமொழி தொடர்மொழி எனப்பெயர் பெற்றன; அங்ஙனமாகலின் ஈரெழுத்திணைந்ததனையும்தொடர்மொழி என்னுங்கால், அவை தொடர்ந்தனவுமல்லவாய் பொருளை விளக்குதலும் இல்லையாம் ஆகலின், ஈரெழுத்தொரு மொழியும் தொடர்மொழி யென்றலே ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும் கருத்து" எனவும், "இதுவே ஆசிரியர்கருத்தாதல் 'தொடர்மொழி' எனவாளாகூறாது, 'இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி' என அடைகொடுத்தோதியதே, இரண்டனையிறவாது இணைந்திசைக்குந் தொடர்மொழியும் உண்டெனப் பொருள்கொள்ளக் கிடந்தவாறுணர்க" எனவும், அற்றாகலினன்றே 'இணைந்திசைக்குந் தொடர்மொழியை வேறு கூறாது தொடர்மொழியென ஒன்றாகக்கூறினார்' எனவும் உரைப்பர் இலக்கண விளக்கச் சூறாவளியில் சிவஞானமுனிவர்.

ப-ரை. எழுத்து ஏ - எழுத்துகள் தாமே, தனித்தும் - ஒவ்வொன்றாகத் தனித்தாகிலும், தொடர்ந்தும் - இரண்டு முதலாகத் தொடர்ந்தாகிலும், பொருள் - பிறபொருளை, தரின் - காட்டுமேயானால், பதமாம் - பதமாகும், அது - அப்பதமானது, பகாப்பதம் (என) - பகாப்பதமெனவும், பகுபதம் என - பகுபதமெனவும், இரு பால் ஆகி - இரண்டுவகையினையுடையதாகி, இயலும் - நடக்கும், என்ப - என்றுசொல்லுவர் புலவர். எ-று.

பொ-ள். எழுத்துகள் தாமே ஒவ்வொன்று தனித்தும் இரண்டுமுதலாகத்தொடர்ந்தும் பிறபொருளைத் தருமாயின் அது பதமாம். அப்பதம் பகாப்பதமெனவும், பகுபதமெனவும் இரண்டுபகுதியவாகி நடக்குமென்றுசொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. எழுத்தானுபதம் அரிசனமுதலியவற்றாற் சமைத்த சுண்ணம் போலாது மலராற் சமைத்தமாலைபோல் நிற்றலின் எழுத்தே யென்றும், ஓரெழுத்தேனும் பிறபொருள்தருதலின் பதமாம் என்பார் தனித்துஎன்றும், ஒன்றிரண்டு பலவென்பனவடநூல்வழக்கு, ஒன்றல்லனவெல்லாம் பலவென்பது தமிழ்நடையாகலின், வடநூல் வழக்குப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியர், * "ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி-யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட - மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே" எனக்கூறினாரேனும், கல், வில் என்றற்றொடக்கத்த ஈரெழுத்தொரு மொழிகளும் ஒன்றோடொன்றுதொடர்ந்து நின்றே பிறபொருளுணர்த்தலின், இவற்றைத் தொடர்ந்தன அல்லவெனக் கூறினாரல்லர் என்பதற்கு தொடர் மொழி என வாளாகூறாது, இரண்டிறந்திசைக்குந் தொடர்மொழி என அடைகொடுத்து ஓதியதே சான்றாகலான், தமிழ்நடைபற்றி "ஓரெழுத்தொரு மொழி யீரெழுத்தொருமொழி - யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட-மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே." என்றார்க்குஇரண்டெழுத்துந் தொடர்ந்தனவல்லவெனில், அது மொழியு மன்றென்பார் தனிநிலையொழிந்தனவற்றைத்தொடர்ந்துஎன்றும், இறீஇ, மிறீஇ யெனின்தொடருமேனும் தன்னையுணர்த்துமன்றி பிறபொருள் தாராமையின் பதமாகாதென்பார் பிறநடரின் என்றும், "தன்னை யுணர்த்தினெழுத்தாம் பிறபொருளைச்-சுட்டுதற் கண்ணேயாஞ்சொல்." என்பவாதலின் பொருள் என்றது பிறபொருள் என்பார் உணர்த்தின் என்னாது தரின் என்றும், அணுவென்னும் ஒலிநுட்பத்தான் எழுத்தானாற்போல, எழுத்தென்னும் ஒலிநுட்பத்தான் மொழியாம் என்பார் பதமாம் என்றும், இப்பதவியலுக்கு மேற்கோள் ஆரியமென்பார் மொழி என்னாது பதம் என்றுங்கூறினார். இச்சூத்திரத்துள் தொடர்ந்தும் என்றது பிறர்நூற் குற்றங்காட்டல் என்னும் மதம்.

---

* தொல்காப்பியம், எழு. மொழி. சூ. கஉ.

கஉகூ. உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும் - கவசவி னாலும் யவ்வி லொன்று-மாத நெடியே நொது வாங்குறி லிரண்டோ-டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

இது மேலெழுத்துத் தனித்தும் தொடர்ந்தும் ஒருமொழியாமென்றார் அவற்றுள் ஓரெழுத்தொருமொழி யிவையென்பதூஉம், இத்துணைய வென்பதூஉம் உணர்த்துகின்றது.

ப-ரை. உயிர் ம இல்-உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும், ஆறும்-அவ்வாறும், த ப ந இல்-தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும், ஐந்தும் - ஐவ்வைந்தும், க வ ச இல்-கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும், நாலும் நந்நான்கும், ய இல் - யவ்வருக்கத்தில், ஒன்றும் - ஒன்றும், ஆகும் நெடில்-ஆகுநெட்டெழுத்தாலாகிய மொழிநாற்பதும், நொ-நொவ்வும், து - துவ்வும், ஆம் குறில் - ஆகுங்குற்றெழுத்தாலாகிய மொழி,இரண்டோடு-இரண்டுடனே,ஓர் எழுத்து இயல் பதம்-ஓரெழுத்தாலாகிய மொழிகள், ஆறு ஏழ்-நாற்பத்திரண்டும்,சிறப்பின - சிறப்பினவாம், எ-று.

போ-ரை. உயிர்வருக்கத்தும் மவ்வருக்கத்தும் அவ்வாறும்,தவ்வருக்கத்தும் பவ்வருக்கத்தும் நவ்வருக்கத்தும் ஐவ்வைந்தும், கவ்வருக்கத்தும்வவ்வருக்கத்தும் சவ்வருக்கத்தும் நந்நான்கும், யவ்வருக்கத்தொன்றும் ஆகும் நெட்டெழுத்தாகிய மொழிநாற்பதும், நொவ்வும் துவ்வுமாகுங்குற்றெழுத்தாகியமொழி இரண்டுடனே ஓரெழுத்தாகிய மொழி இந்நாற்பத்திரண்டும் சிறப்பினவாம். எ-று.

வி-பு. [உ - ம்] ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ (எ-ம்) ; மா, மீ, மூ, மே மை, மோ (எ-ம்) ; தா, தீ, தூ, தே, தை (எ-ம்) ; பா, பூ, பே, பை, போ (எ-ம்) ; நா, நீ, நே, நை, நோ (எ-ம்) ; கா, கூ, கை, கோ (எ-ம்) ; வா, வீ, வை, வௌ (எ-ம்) ; சா, சீ, சே, சோ (எ-ம்) ; யா (எ-ம்) ; நொ, து (எ-ம்) வரும். இவற்றுள் ஊ=இறைச்சி. ஓ= மதகுநீர்தாங்குபலகை. பே=நுரை. நே= அன்பு. சோ = அரண். நொ, து என்னுங் குறிலிரண்டும் துன்பி, புசி என்னும் ஏவல். இவை சிறப்பின எனவே அகரவீற்றுச் சுட்டுப் பெயர்ப்பொருளையொப்புமையான் உணர்த்தி நிற்றலான், ஔ என்னும் ஓரெழுத்தொரு மொழியும் சுட்டுவினா உவமைப்பொருளைத்தரும் இடைச்சொல்லாதலால் குற்றுயிர் ஐந்தானாய ஓரெழுத் தொருமொழிகளும், கௌ என்னும் உயிர்மெய்யானாய ஓரெழுத்தொருமொழியும், இவைபோல்வன பிறவும் சிறப்பில்லன வெனக்கொள்க.

௬ சூ௱௦. பகாப்பத மேழும் பகுபத மொன்பது-மெழுத் தீறாகத் தொடருமென்ப.

இது தொடரெழுத்து ஒருமொழி யாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. பகா பதம் - பகாப்பதங்கள், ஏழ் (எழுத்தீறாக) உம்- இரண்டெழுத்துமுதலேழெழுத்தீறாகவும், பகு பதம் - பகுபதங்கள், ஒன்பது எழுத்து ஈறாகவும்-இரண்டெழுத்து முதலொன்பதெழுத்தீறாகவும், தொடரும் - தொடரும், என்ப - என்றுசொல்லுவர் புலவர். எ - று.

போ-ரை. பகாப்பதம் இரண்டெழுத்துமுதல் ஏழெழுத்தீறாகவும், பகுபதம் இரண்டெழுத்துமுதல் ஒன்பதெழுத்தீறாகவும் தொடருமென்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. (உ-ம்) அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி (எ-ம்); கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், ஆங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் (எ-ம்) வரும். எழுந்திருக்கின்றார், நடத்துவிப்பிக்கிறார், நடத்துவிப்பிக்கின்றார், நடத்துவிப்பிக்கிறார்கள், நடத்துவிப்பிக்கின்றார்கள், நடத்துவிப்பிக்கின்றவர்கள் எனப்பகுதிமுதலிய உறுப்புவேறுபட்டு வருவனவற்றிற்கு இவ்வரையறையில்லையென்க.

௧௱௩. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி, முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற - பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

இது மேற்பதம் பகாப்பதம் பகுபதமென இரண்டுபகுதியவாய் நடக்குமென்றார்; அவற்றுள்பகாப்பதம் இனையவென்பதூஉம் இத்துணைய வென்பதூஉம் உணர்த்துகின்றது.

ப-ரை. பகுப்பு ஆல்-பிரிக்கப்படுதலினாலே, பயன் அற்று-பகுதி விகுதிமுதலாகிய பயனில்லாமல், இடு குறி ஆகி - காரணமில்லாமல் இடப்பட்டகுறியாகி, முன்னே ஒன்றாய் - படைப்புக்காலந் தொட்டே ஒன்றாகி, முடிந்து - முடிந்து, இயல்கின்ற - நடக்கின்ற பெயர் - பெயர்ச்சொல்லும், வினை - வினைச்சொல்லும், இடை - இடைச்சொல்லும், உரி - உரிச்சொல்லுமாகிய, நான்கும் - நான்கும், பகா பதம் - பகாப்பதங்களாகும். எ - று.

போ-ரை. பகுபதம் போல் இதனைப்பகுத்துப்பார்க்கின், அப்பகுப்பான் பகுதி விகுதி முதலிய வுறுப்பின் பயன் விளைவதின்றி, காரணத்தால்வரும் அப்பதம் போலாது, இடுகுறியாய்ப் பகுதி விகுதி முதலிய ஆறுறுப்பானும்;

பின்புமுடிக்கப்படும் அப்பதம்போலாது, படைப்புக்காலந் தொட்டு ஒன்றுபட்டு முடிந்து நடக்கின்ற பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்னும் நான்கும் பகாப்பதமாம். எ-று.

வி-பு. பகுபதத்திற்கு மறுதலைப்பட்டது என்பார் இவ்வாறு கூறினர்.

[உ-ம்] நிலம், நீர் (எ-ம்); நட, வா (எ-ம்); மன், கோல் (எ-ம்); உறு, கழி (எ-ம்) வரும். பிறவுமன்ன.

கருஉ. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின் - வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

இது பகுபதம் இனைய வென்பதூஉம் இத்துணைய வென்பதூஉம் உணர்த்துகின்றது.

ப-ரை. பொருள் - பொருளும், இடம் - இடமும், காலம் - காலமும், சினை - உறுப்பும், குணம் - குணமும், தொழிலின் - தொழிலுங்காரணமாக, வரு - வருகின்ற, பெயர் - பெயர்ச்சொற்களும், பொழுதுகொள் - தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக்கொள்ளும், வினை - வினைச்சொற்களும், பகு பதம் - பகு பதங்களாகும். எ-று.

போ-ரை. இங்ஙனங்கூறிய பொருளாதியாறும் காரணமாகவரும் பெயர்ச்சொற்களும், தெரிநிலையாயும், குறிப்பாயும் காலத்தைக் கொள்ளும் வினைச்சொற்களும் ஆகிய இரண்டும் பகுபதமாம். எ-று.

வி-பு. பொழுதுகொள்வினை பகுபதம், ஆமெனவே அவ்விருவகை வினை[illegible]யும் பெயருஞ் பகுபதமாமென்பது அருத்தாபத்தியால் கூறினாரென்க.

[உ-ம்] பொன்னன், அகத்தன், ஆதிரையான், கண்ணன், கரியன், ஊணன் - எனப்பெயர்ப்பகுபதம் வந்தன. நடந்தான், நடக்கின்றான், நடப்பான் (எ-ம்); நடந்த, நடக்கின்ற, நடக்கும் எ-ம்); நடந்து, நடக்க, நடக்கின்(எ-ம்); நடவான் (எ-ம்); நடவாத(எ-ம்); நடவாமல்(எ-ம்) - தெரிநிலையுடன் பாட்டுவினைமுற்றும், எச்சமும்; எதிர்மறை வினைமுற்றும், எச்சமுமாய வினைப் பகுபதங்கள் முறையே வந்தன. பொன்னன், அகத்தன், ஆதிரையான், கண்ணன், கரியன், ஊணன் (எ-ம்); கரிய, பெரிய (எ-ம்); அன்றி, இன்றி (எ-ம்) - குறிப்புவினைமுற்றும், எச்சமுமாய வினைப்பகுபதங்கள் வந்தன. நடந்தான், நடந்தவன் - எனத்தெரிநிலைவினையாலணையும் பெயர்ப் பகுபதம் வந்தன. பொன்னன், ஊணன் - எனக்குறிப்புவினையாலணையும் பெயர்ப் பகுபதம்வந்தன. பிறவுமன்ன.

இனி இங்ஙனம் பொருளாதியாறும் அடியாகத்தோன்றிய அவ்வினைக் குறிப்புப்பெயர்க்கும், வினைக்குறிப்பிற்கும் வேற்றுமையாதோவெனின், வினைக்குறிப்புச்சொல்லெல்லாம்தெரிநிலைவினைபோலமுதனிலையிற்பொருள் சிறந்துநிற்கும் ; வினைக்குறிப்புப்பெயர்ச்சொல் அவ்வாறன்றி விகுதியிற் பொருள்சிறந்துநிற்குமெனவறிக.எனவேபொருளாதியாறும்காரணமாகவரும் பெயர்ச்சொற்கள் முதனிலை விகுதியாகிய அவ்விரண்டிடத்தும் பொருள்சிறந்து நிற்குமென உய்த்துணர்ந்துகொள்க. எல்லாச்சொற்களையும் கூறுங்கால் பொருள்சிறக்கு மிடத்து எழுத்தினையெடுத்தும், அவ்வெழுத்தினை நலிந்தும், ஏனையெழுத்துகளைப் படுத்துங்கூறுக.

அவன், இவன், உவன் என்னுஞ் சுட்டுப்பெயரும், எவன், யாவன் என்னும் வினாப்பெயரும், தமர், நமர், நுமர் என்னும் கிளைப்பெயரும், தந்தை, எந்தை, நுந்தை என்னும்முறைப்பெயரும், இவைபோல்வனபிறவும், சுட்டுப்பொருளும், வினாப்பொருளும், கிளைப்பொருளும்,முறைப்பொருளும் காரணமாகப்பிறபொருட்குவரும் பெயராய் பகுதிவிகுதி முதலியவுறுப்பும், உறுப்பின் பொருளுந்தந்து, வெள்ளிடைக்கிடக்கும் பகுபதமாய் பகுக்கப் படுதலால், இவற்றைப் பகுபதமென்னாது பகாப்பதமெனக்கூறின் அதுபொருந்தாதென்க.

இனி பகுதி விகுதி முதலியவுறுப்பும், உறுப்பின்பொருளும் தரும் ஒருசொல்லைப் பகுபதமென்றமையின், நன்மை, பொருண்மை, இன்மை, செம்மை, சிறுமை, நடத்தல், வருதல் முதலியசொற்கள் பகுதிவிகுதியாகப் பகுக்கப்படுதலானும்,விகுதிக்குவேறுபொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியால் நிற்றலானும், சொல் நிலையால் பகுபதமென்றும், பொருள் நிலையால் பகாப்பதமென்றுங் கொள்ளப்படுமென்க.

மேற்சொல்லதிகாரத்துள் திணைபால்இடம் முதலிய இலக்கணங்களான் விதந்து "கிளையெண்குழூஉ முதற்பலபொருள்." என்னும் சூத்திரமுதலிய வற்றான் நான்கியலுள்ளும் உணர்த்தலால்,ஆண்டு உணரவரும் பெயர் வினை இடைஉரிகள் ஈண்டு உணரவாராவேனும்,உரைத்தும் என்னும் உத்தியான் அவற்றைப் பகாப்பதம் பகுபதமென்றார்.

கஙஈ. பகுதிவிகுதி யிடைநிலை சாரியைசந்திவிகாா மாறினு மேற் பவை-முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

இது பகுபதவுறுப்பு இத்துணையவென்ப துணர்த்துகின்றது.

ப-ரை. பகுதி - முதனிலையும், விகுதி - இறுதிநிலையும், இடை நிலை - இடைநிலையும், சாரியை - சாரியையும், சந்தி - சந்தியும், விகாரம் - விகாரமும், ஆறினும் - ஆகிய இவ்வாறு உறுப்பினுள் ளும், ஏற்பவை - பொருள் அமைதிக்கு ஏற்பனவைகளை, முன்னி- நினைத்து, புணர்ப்ப - அறிவுடையோர் கூட்டிமுடிக்க,.எ பதங் களும்-எவ்வகைப்பட்ட பகுபதங்களும், முடியும்-முடிவுபெறும்.

போ—ரை. இங்ஙனம்கூறிய பகுதிமுதலிய ஆறுஉறுப்பினுள்ளும் இப் பதப்பொருள்அமைதிக்கு ஏற்பனவற்றைநீக்கருதி அறிவுடையோரால் கூட்டி முடிப்ப எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடியும். எ-று.

வி-பு. பிரகிருதி, விகிருதி என்னும் ஆரியமொழிகள் பகுதி, விகுதி எனத்திரிந்து நின்றன. தன்இயல்பின்நிற்றலின் பகுதியென்றும், தன்னியல் பின்நிற்கும் ஒருவன் உள்ளத்தை ஆடை, அணி முதலியவற்றோடு ஒருத்தி முன்னின்று தன்னிபித்துஅவாவிகாரப்படுத்தல்போல, தன்னியல்பில் நிற் கும்பகுதிப்பொருளை இடைநிலைமுதலியவற்றோடு விகுதிமுன்னின்றுதன்னி பித்தவாய் விகாரப்படுத்தலின் விகுதியென்றும், முதனிலைப் பகுதிக்கும் இறு திநிலை விகுதிக்கும் இடைநிற்றலின் இடைநிலையென்றும், இவ்விகுதி முதலிய புணர்ப்பைச்சார்ந்து ஆண்டைக்கு இயைந்து நிற்றலின்சாரியை யென்றும், நால்வகைச்சொல்லும் ஒன்றோடொன்றுசந்தித்தலான்வரும் தோன்றல், திரி தல், கெடுதலைச்சந்தியென்றும், செய்யுள்தொடை முதலியவற்றான் வலித்தல் மெலித்தல் முதலாக விகாரப்படுதலின் அவற்றை விகாரம் என்றும் காரணக் குறியாய் வந்தன. அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த தோன்றல் திரிதல் கெடுதலையும், செய்யுட்குவிதித்த ஒன்பது விகாரத்தையும் இப்ப தம் பெறுமென மாட்டேதலின், இது மாட்டேறிந்தோழுகல் என்னும் உத்தி.

கஙச. தத்தம் பகாப் பதங்களே பகுதியாகும்.

இது பகுபதவுறுப்பு ஆறனுள் பின்னைய மூன்றும் புணரியலுள் உணர் த்தப்படுதலின் அவை ஒழித்து முன்னைய மூன்றனுள் பகுதி இனைய வென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. தம் தம் பகா பதங்கள் ஏ - பெயர்ப்பகுபதங்களுள் ளும் வினைப்பகுபதங்களுள்ளும் அதனதனுடைய முன்நிற்கின்ற பகாப்பதங்களே, பகுதி ஆகும் - பகுதிகளாகும். எ-று.

போ-ரை. பெயர்ப்பகுபதங்களுள்ளும், வினைப்பகுபதங்களுள்ளும் தத்தம்முதனிலையாய் பகாப்பதங்களே அவற்றின் பகுதியாம். எ-று.

வி-பு. பகுபதத்துள் பகுதி, விகுதி முதலிய உறுப்பெல்லாம் பகாப்பத மாயினும், விகுதி முதலியவற்றை மேல்விதந்து கூறலின், ஈண்டு தத்தம் பகாப்பதங்கள் என்றது முதனிலைகளையே என்பது ¶ பாரிசேடத்தாற்பெற் றாம். பகுபதவுறுப்பாம் முதனிலை, இறுதிநிலை இடைநிலைகளாய் பகாப்பதங் களினின்று முதனிலைப் பகாப்பதம் ஒன்றனையுமே பிரித்துத் தந்தமையின் பகாப்பதங்களே என்னும் ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது.

¶ பாரிசேடமென்பதற்கு ஒழிந்துநின்றதனலுணரப்படுவதுஎன்னும் உத்தி என்பர்.—இராமாநுசகவிராயர்.

கருடு. செம்மை சிறுமை சேய்மை தீமை, வெம்மை புதுமை மென்மை மேன்மை, திண்மை யீண்மை நுண்மை யிவற்றெதி - ரின்னவும் பண்பிற் பகாநிலைப்பதமே.

இது பண்புப்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. செம்மை நுண்மை - செம்மைமுதல் நுண்மையீறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், இவற்று எதிர் - இவைகளுக்கு எதிரானவெண்மை முதலானவைகளும், இன்னவும் - இவைபோல்வன பிறவும், பண்பின் - பண்புப்பொருளினின்றும், பகா - வேறு பொருள் பகுக்கப்படாத, நிலை - நிலையையுடைய, பதம் - பதங்களாகும். எ - று.

பொ-ரை. இங்ஙனம்கூறிய பதினொன்றும், இவற்றிற்கு எதிரான வெண்மை, கருமை, பொன்மை, பசுமைகளும், பெருமை, அணிமை, நன்மை, தண்மை, பழமை, வன்மை, கீழ்மை, நொய்மை, இன்மை, பருமையும், இவைபோல்வன பிறவும் பகுதியாய், பண்புப்பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலைப்பதமாம். எ-று.

வி-பு. இங்ஙனங்கூறிய வாய்பாடு முதலியவெல்லாம் சொல் நிலையால் பகுபதமாயினும், மைவிகுதிக்குப்பகுதிப்பொருளன்றி வேறுபொருளின்மையின் பொருள் நிலையால் பகுக்கப்படாதனவென்பார் பண்பிற்பகா என்றும், *"மெய்யி னியக்க மகரமொடு சிவணும்." என்றாற்போல இங்ஙனங்கூறிய வாய்பாட்டுப் பண்புகள் மைவிகுதியின்றி இயங்காமையின், இவ்விகுதியினையும் பகுதியாக நிறீஇ, மேல்வரும்விகுதியோடுபுணர்க்கப்படும் என்பார்நிலைப் பதம் என்றும் கூறினர். பண்புப் பகாப்பதம் என்னாது பண்பிற் பகா நிலைப்பதம் என்றல் சொற்பொருள்விரித்தல் என்னும் உத்தி. செம்மை, சிறுமை முதலிய வாய்பாடுகள் எடுத்துக்காட்டல் என்னும் உத்தி.

கருகூ. ஈறு போத லிடையுகர மிய்யாத லாதி நீட லடியகர மையாத - றன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரித - லினமிக லினையவும் பண்பிற் கியல்பே.

இது மேல் பண்புப்பகுதியின் விகாரங்கள் இனையவென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. ஈறு - இறுதியிலுள்ள மைவிகுதியானது, போதல் - கெடுதலும், இடை - நடுநின்ற, உகரம் - உகரமானது, இ ஆதல் - இகரமாதலும், ஆதி - முதனின்ற குறிலானது, நீடல் - நெடிலாதலும், அடி அகரம் - முதனின்ற அகரமானது, ஐ ஆதல் - ஐகாரமாதலும், தன் ஒற்று - தன்மெய்யானது, இரட்டல் - நடுவேமிகுதலும், முன்நின்ற மெய் - முன்னின்றமெய்யானது, திரிதல் -

* தொல்காப்பியம், எழு. சூ. கூக.

வேறொருமெய்யாதலும், இனம் - வருமெழுத்திற்கினவெழுத்து மிகல் - மிகுதலும், இனையவும் - இவைபோல்வன பிறவும், பண்பிற்கு - அப்பண்பினுக்கு, இயல்பு - இயல்பாகும். ஏ - று.

பொ-ரை. மேல் செம்மை சிறுமைமுதலாகத்தெரித்த வாய்பாடுகளின் இறுதிவிகுதிபோதலும், இடையினின்ற உகரம் இகரமாதலும், முதல்நின்ற குறில் நெடிலாதலும், முதல் நின்ற அகரம் ஐகாரமாதலும், இடையேதன்னொற்றுமிகுதலும், முன்புநின்ற மெய்திரிதலும், வருமெழுத்திற்கு இனவெழுத்துமிகுதலும் இவைபோல்வன பிறவும் அப்பண்பினுக்கியல்பாம். எ-று.

வி-பு. "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்." என்ற அகரம் பன்னிருயிரும் மெய்யொடு புணரவரும் காலத்து நீங்கினாற்போல, விகுதிமுதலிய புணரவரும் காலத்துப்பண்படிநிற்க, அப்பகுதிப் பொருள்விகுதி நீங்குமென்பார்ஈறுகேடுதல்என்னாது ஈறுபோதல்என்றும்விதந்துகூறுவிகாரங்களுமுள அவைவந்தவழிக் காண்க என்பார் இனைய வென்றும்,இவ்விகாரம் ஒருதலையன்று; சிவப்பன், கறுப்பன் என்னும் பிறவாய்பாடுகள்போல, செம்மையன், கருமையன் எனவும்முடியுமென்பார் எதிர்மறை உம்மைகொடுத்து இனையவும் என்றும்,பெயர்விகுதியோடும்,வினைவிகுதியோடும், பதங்களோடும் புணரினும் ஒருவழிஇவ்விகாரப்படுமென்பார் பகுதிக்கு என்னாது, பொதுமையில் பண்பிற்கு இயல்பே யென்றும் கூறினர். பதப்புணர்ச்சிக்கும் ஈண்டுக்கூறல் ஒப்பின் முடித்தல் என்னும் உத்தி.

[உ-ம்.] நல்லன், வல்லன் என்பன ஈற்றுவிகுதி போயின.

கரியன்,பெரியன் என்பனஈற்றுவிகுதிபோய் இடைஉகரம்இகரமாயின.

பாசி, பாசடை என்பன ஈற்றுவிகுதிபோய் ஆதி நீண்டன.

பைங்கண்,பைந்தார் என்பனஈற்றுவிகுதிபோய் இடை உகரம் சகரத்தோடுகெட்டு வருமெழுத்திற்கு இனமிகுந்து அடி அகரம் ஐகாரமாயின.

வெற்றிலை, நெட்டணை என்பன ஈற்று விகுதிபோய் தின்னொற்று இரட்டின.

சேதா, சேதாம்பல் என்பன ஈற்றுவிகுதிபோய் ஆதிநீண்டு முன்னின்ற மகரவொற்று தகரவொற்றாய்த்திரிந்தன.

செம்மை, சிறுமை முதலாகவிதந்தும் இன்னவும் எனவும் அடக்கியுங் கூறிய பல்வேறுவகைப்பட்ட பண்புவாய்பாட்டுவிகற்பங்களெல்லாம் பொதுவிதியானும், ஈறுபோதல் முதலாக விதந்தும், இனையவும் என அடக்கியும் கூறிய சிறப்புவிதியானும், விகுதிபதங்களோடுபுணர்ந்துஅமைந்துகிடந்தமை உய்த்துணர்ந்துகொள்க, இங்ஙனம் விதந்துகூறிய விகாரங்கள் அன்பன்,அழகன் முதலிய வாய்பாடுகட்கு எய்தாமையானும்,செம்மை, சிறுமைமுதலாக எடுத்துக்காட்டும் மொழிகட்கு எய்தினமையானும் இஃது எடுத்தமொழியினெய்தவைத்தல் என்னும் உத்தி..

கூஎ. நடவா மடிசீ விடுகூ வேவை-நொப்போ வேளவுரி ஞுன் பொருந் திருந்தின் - றேய்பார்.செல்வவ் வாழ்கே ளஃகேன் - றெய்திய விருபான் மூன்ற மீற்றவுஞ் - செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

இது தெரிநிலைவினைப்பகுதிக்கு எய்தியதன்மேல்சிறப்புவிதிஉணர்த்துகின்றது.

ப-ரை. நட அஃகு என்று - நட வா மடி சீ விடு கூ வே வை நொ பேர் வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று,எய்திய - முதனிலையாகப்பொருந்திய, இருபான் மூன்று ஆம் ஈற்றவும் - உயிரும் மெய்யும்குற்றியலுகரமுமாகிய ஈற்றையுடைய இவைமுதலாகிய வாய்பாடுகளெல்லாம், செய் என்-செய்யென்கின்ற, ஏவல் - (பகாபதம்) ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும், வினை - மற்றை வினைகளுக்கு, பகா பதம் - பகாபதங்களாகி யபகுதியும், ஆம்-ஆகும். எ - று.

பொ-ரை. நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று முதனிலையாய் எய்திக்கிடந்த இவ்விருபத்து மூன்றும் உயிரும்,ஒற்றும்,குற்றுகரமுமாகிய ஈற்றினையுடைய இத்தொடக்கத்து வாய்பாடுகள் எல்லாம் செய்யென்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும், ஏனைவினையினது பகாப்பதமாகிய பகுதியுமாம். எ-று.

வி-பு. இத்தொடக்கத்து வாய்பாடுகளென்பார் அஃகாம் என்னாது அஃகென்று எனவும், ஈற்றவும் எனவும், எகரவுயிர் விஞஇடைச்சொற்கண்ணும்,தன்பெயர்க் கண்ணும் அன்றி பிறவழி ஈறுகாகாமையின், அஃதொழிந்தவையீண்டடைக்காமென்பார் ஆமீற்ற எனவும்,விகற்பத்தின் முடித்தல் என்னும் உத்தியான் இருபத்து மூன்றீற்றவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகள் முதலியவெல்லாம்இப்பொதுவாய்பாட்டின் அடங்குமென்பார் முடிந்தது முடித்தல் என்னும் உத்தியால் செய் எனவுங்கூறினர். இட்டுமொழிதல் என்னும் உத்தியான் எடுத்துக்கொண்ட முன்னிலையொன்றற்கே உரிய ஏவலினது பகுதிப்பொருளும், ஏனைவினையினது பகுதிப்பொருளுந் தந்துநிற்கும் நட வா முதலியவாய்பாடுகளையெண்ணித்தொகுத்த இருபான் மூன்றமீற்ற என்னுந்தொகைசெய்யென் ஏவற்பகாப்பதம் என்னும் பயனிலையோடும்,செய்யென்வினைப்பகாப்பதம் என்னும்பயனிலையோடும்தனித்தனி முடிந்தன. செய்யென்வினைப்பகாப்பதம் என்றதுணையானேசெய்யென்ஏவற்பகாப்பதமும்அடக்காதோ? வேறுகூறவேண்டியதென்னையெனின், நட வா உண் தின் என்றற்றொடக்கத்து முதனிலைகளேவிகுதியோடு

புணராது தனித்து நின்றுஓசைவேறுபாட்டான் முன்னிலையேவலொருமை எதிர்கால வினைமுற்றுப் பொருண்மை புணர்த்தினவோ, விகுதியோடு புணர்ந்து நின்றே அப்பொருண்மை யுணர்த்தினவோ என்று ஐயுறுவார்க்கு ஐய மறுத்தற்குக் கூறியதெனவுணர்க.

[உ-ம்.] நடவாய், வாராய், உண்ணும், தின்னும், அஃகாய் ; நட மின்,வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின் என்பன ஏவற்பகுதிகளாம்.

இனி ஆசிரியர் தொல்காப்பியர் * "செய்யாவென்னு முன்னிலை வினைச்சொற் - செய்யென்கிளவியாகிட னுடைத்தே." எனக்கூறிய வாற்ருல் ஆயென்னும் விகுதிகுன்றி நட வா உண் தின் அஃகு எனவும் நிற்கு மென வுணர்க. நிற்பினும் விகுதியொடு புணர்ந்தனவேயாம். அஃது அச் சூத்திரத்தில் சேனுவரையர்கடாவிடைகளான் விளக்கக்கூறிய வாற்ருனு மறிக. இனி இவ்வாறு ஏவற்பொருளுணர்த்தாது முதனிலைத் தனிவினைப் பொருளுணர்த்தி நிற்பின் பகாப்பதமென்று கொள்ளப்படும். இதுபற்றி யன்றே முன்னர் ஏவல்வினைப்பகாப்பதத்திற்கு உதாரணங் காட்டியதூஉ மென்க. இன்னும் அச்சூத்திரத்து மொழிந்தபொருளோ டொன்றவவ்வ யின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்னும் உத்தியான் விகுதி புணர்ந்து கெட்டுநிற்கும் சொற்கள் பலவுள. அவையெல்லாம் பதமுடிப் புழிக்காண்க.

[உ-ம்.] நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான், கூவினன், ஏவினன், வைத்தான், நோந்தான், போயினன், வெளவி னன், உரிஞினன், உண்டான், பொருநினன், திருமினன்; தின்றன், தேய்ந் தான், பார்த்தான், சென்றன், வவ்வினன், வாழ்ந்தான், கேட்டான், அஃகினன்; கிடந்தான்,கண்டான் ; ஏகினன்,துறுகினன்,கட்டினன்,பொரு நகினன், எய்தினன் என்பன ஏனை வினைப்பகுதிகளாம். பிறவுமன்ன. இவற்றுள் பகுதிமுதனிலையாய் எய்திக்கிடந்தமைகாண்க.

இனி இச்சூத்திரத்தில் செய்யெனேவல்வினைப்பகாப்பதம் என்ப தற்குஇவ்வாறுபொருள்கூருது ஆற்ருெழுக்காகச்செய்யென் ஏவல்வினைப்ப காப்பதமேவினை வினைப்பெயர்கட்கெல்லாம் முதனிலையெனப்பொருள்கூறு வாருமுளர். †"அடியேனுன்னடியார் நடுவுளிருக்கு மருளைப்புரியாய்." ††"எந் தாயினித்தா னிரங்காயே." †††"மருங்கேசார்ந்து வரவெங்கள்வாழ்வே

* தொல்காப்பியம், சொல். எச்சவியல், சூ. ருச.

† திருவாசகம், கோயின்மூத்ததிருப்பதிகம், செ. க.

†† ஷை ஷை செ. சு. ††† ஷை ஷை செ. எ.

வாவென்றருளாயே.'' ‡''நரிப்பாய் நாயேனிருப்பேனோ நம்பி யினித்தானல்காயே.''‡‡''கீதமினியகுயிலே—அந்தமிலான்வரக்கூவாய்.''என்றற்றொடக்கத் தனவாய திணைபா லிடங்காலங்காட்டும் விகுதியுறுப்போடுகூடி முற்றி நிற்கும் முன்னிலை ஏவலொருமை எதிர்காலவினைமுற்றுப் பகுபதங்களைப் பகாப்பதமென்றல் கூடாமையேயன்றி ''தத்தம் பகாப் பதங்களே பகுதியாகும்.'' என்னும் பொதுச்சூத்திரத்தோடு மாறுகொளக்கூறலாம் ஆதலின் அது பொருளன்றென மறுக்க. இங்ஙனம் முதனிலை புடைபெயர்தலேவினையாதலின் எல்லாவினைச்சொற்களும் பிறத்தற்கு மூலமாகியபொது முதனிலைத்தனிவினைப் பெயரொன்றே கொள்க. அதனைப்படுத்தல் ஒசையாற் கூறிக்கொள்க. எல்லாவினைச்சொற்களாவன திணைபால் இடம் காலம் விதி மறை பொதுச்சிறப்பாதியோடும் கூடின முற்றெச்சங்களும் தொழிற்பெயர்களுமென்க. * கையறியாமாக்கட்கு அன்றி நாவியற்றும் அறிவினையுடைய மக்கட்குப் பலகலைக்குரிசில் பவணந்தியென்னும் புலவர்பெருமான் புகழ்போலவிளங்கி நிற்றலான் உலகமலையாமை உள்ளிட்ட பத்தழகோடும் பிறந்து நின்றது இச்சூத்திர மென்றுணர்க- வடநூல் மேற்கோளாக ஒருமொழிகளை விதந்துபகாப்பதம் பகுபதமெனக் காரணக்குறிதாமே தந்து அவற்றை நல்விருந்தென்ன நாவலர் பயில் எழுந்தே தனித்தும் என்னும் சூத்திரமுதல் இச்சூத்திரம் ஈறாகப் பகாப்பதம் புகுபதமெனப் பல்காற் கூறுதல் தன்குறிவழக்கம் மிகவெடுத்துரைத்தல் என்னும் உத்தி.

கநஅ. செய்யென் வினைவழி விப்பி தனிவரிற் - செய்வியென் னேவ லிணையினீ ரேவல்.

இது மேல் இரட்டுற மொழிந்தவற்றுள் ஏவற்பகுதிக்கு எய்தியதன் மேற்சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. செய் என் - செய் என்னும் வாய்பாட்டு, வினைவழி - முதனிலைத் தனிவினையின்பின், வி விகுதியாவது பி விகுதியாவது, தனிவரின்-தனித்துவருமாயின் செய்வி என் ஏவல் - செய் என்னும் ஏவலின்மேல் ஓர் ஏவலாய் செய்வி என்னும் வாய்பாட்டு ஏவற்பகுதியாம், இணையின் - அவ்வினையின்பின் இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின், ஈரேவல் - செய்விப்பி என்னும் வாய்பாட்டு ஏவற்பகுதியாம். எ-று.

பொ-ரை. மேல்கூறிய செய் என்னும் வாய்பாட்டு முதனிலைத்தனி வினையின்பின் வி, பி என்னும் இவ்விரண்டு விகுதியினுள் ஒன்று வருமா

‡ திருவாசகம்,கோயின்மூத்ததிருப்பதிகம், செ. கூ.
‡‡ ஷை குயிற்பத்து செ. க.
* இக்கருத்தேபற்றி இலக்கணக்கொத்து நூலாரும் ''முன்னூ லொழியப் பின்னூல் பலவுள - மென்நூ லாரு மன்னூ லாருக் - கிணையிலையென் னுந் துணிவே மன்னுக'' என்றதூஉமென்க.

நடத்து, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பன், நடப்பன் இவை ஒருமைத்தன்மை.

நடந்தது, கூயிற்று, துண்டுகேட்டு இவை ஒன்றன்படர்க்கை.

நடப்பிம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும் இவை தன்மைப்பன்மை.

நடந்தனை, நடந்தாய், நடத்தி இவை ஒருமைமுன்னிலை.

நடமின், நடந்தனிர், நடந்தீர் இவை பன்மைமுன்னிலை.

நிலியர், நடக்க, வாழிய இவை வியங்கோள்.

நடக்கும் இது செய்யுமென்னுமுற்று. பிறவுமன்ன. இவை திணைபாலிடங்களை யுணர்த்தி வினையின் இறுதிநிலையாய் முழுவதம்வந்தன.

வில்லன், வில்லான், வளையன், வளையாள், உளார், உளாள், வில்லி, வாளி, அரசி, செட்டிச்சி, கார்தறை, மூக்கறை இவை பெயர்க்கண் சிலவந்தன. பிறவுமன்ன.

கசக. இலங்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற் - பகுதி விகுதி பகுத்திடை நின்றதை - வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

இது இடைநிலையாமாறு உணர்த்துவான் றொடங்கி பெயர்க்கு இடைநிலை உணர்த்துகின்றது.

ப-ரை. இலக்கியம் - அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தை, கண்டு - பார்த்து, அதற்கு - அவ்விலக்கியத்திற்கு, இலக்கணம் - அவ்விலக்கியத்தின் அமைதியே யிலக்கணமாக, இயம்பலின் - சொல்லுதலால், பகுதி - முன்சொல்லப் பட்ட பகுதியையும், விகுதி - விகுதியையும், பகுத்து - பிரித்து, இடை நின்றதை - நடுநின்றதை, வினை பெயர் அல் பெயர்க்கு - வினையாலணையும் பெயர் அல்லாத பெயர்களுக்கு, இடைநிலை எனல் - இடைநிலையென்று சொல்லுக. எ-று.

பொ-ரை. அறிவுடையோரால் நியமிக்கப்படும் இலக்கியங்கண்டு, அதற்கு அவ்விலக்கியத்தின் அமைதியேயிலக்கணமாகக்கூறலின், மேற்கூறிய பகுதியையும் விகுதியையும் பகுத்து இடையே நின்றதயாது அதனைவினையாலணையும் பெயரல்லாத பெயர்கட்கு இடைநிலை யென்று சொல்லுக.

வி-பு. குறிக்கப்படும் இலக்கணத்தை யுடையனவெல்லாம் இலக்கியமாயினும், ஈண்டு இலக்கியம் என்றது பெயர்ப்பகுபதத்தை; இலக்கணம் என்றது அந்னகத்துப் பகுதிமுதலிய உறுப்புக்களை. மா, பலா முதலியன பராமுதலிய வேரோடு நின்றனவெனக் கண்டதுகூறுவார்போல பகுபதம் பகுதிமுதலிய உறுப்பொடு நின்றதெனக்கண்டதுகூறி, அஃதுதம் தந்த

நோலாநாவின்மேலோராணையின் நிற்றலின் கண்டதந்த என்றும், சாரியை சந்தி விகாரங்களும் இடைநிற்குமேனும் அவை மேல் விதிக்கப்படுதலின் அவையொழிந்தனவற்றை இடைநின்றதை என்றும், மேல்வினைக்கு விதந்து கூறும் இடைநிலை வினையாலணையும் பெயர்க்கும் அமைதலின் வினைப்பெயால் பெயர்க்கு என்றும், இப்பெயரிடைநிலை வரையறுக்கப்பட்டதன்று, ஆங்காங்குணர்ந்துரைக்கவென்பார் எனவே என்றுங் கூறினர்.

[உ-ம்.] அறிஞன் என்பது ஞகர இடைநிலை பெற்றது. ஓதுவான், பாடுவான் என்பன வகர இடைநிலை பெற்றன. வலைச்சி,புலைச்சி என்பன சகர இடைநிலைபெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி, தந்தை, எந்தை, நுந்தை என்பன தகர இடைநிலை பெற்றன. பிறவுமன்ன.

௧௪௨. தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத் - திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

இது இறந்தகாலவினைக்கு இடைநிலை உணர்த்துகின்றது.

ப-ரை. த ட ற ஒற்று - தகர டகர றகர மெய்களும், இன் - இன்னும், ஐம்பால் மூவிடத்து-ஐம்பான்மூவிடங்களினும், இறந்த காலம் - இறந்தகாலத்தை, தரும் - காட்டுகின்ற, தொழில்-வினைப்பகுபதங்களினுடைய, இடைநிலை - இடைநிலைகளாகும். எ-று.

பொ-ரை. தகர டகர றகரமெய்களும், இன்னென்னுங்குற்றொற்றும் ஐம்பால் மூவிடத்தும் இறந்தகாலத்தைத்தரும் வினைப்பகுபத இடைநிலைகளாம். எ-று.

[உ-ம்.] நடந்தாள், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் (எ-ம்); உண்டான் (எ-ம்) ; சென்றன் (எ-ம்) உறங்கினன், (எ-ம்) வரும். இன் இடைநிலை எஞ்சியது ஏஎ-கடைகுறைந்தும், போனது என முதல்குறைந்தும் வரும். பிறவுமன்ன..

௧௪௩. ஆநின்று கின்று கிறுமூ விடத்தி - னைம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

இது நிகழ்கால வினைக்கு இடைநிலை உணர்த்துகின்றது.

ப-ரை. ஆநின்று - ஆநின்றென்பதும், கின்று - கின்றென்பதும், கிறு - கிறுவென்பதும், ஐம்பால் மூவிடத்தின் - ஐம்பான் மூவிடங்களினும், நிகழ் பொழுது - நிகழ்காலத்தை, அறை - காட்டுகின்ற, வினை - வினைப்பகுபதங்களினுடைய, இடைநிலை - இடைநிலைகளாகும். எ-று.

லனவற்றை எதிர்மறைவினை மூன்றுகாலமும் ஏற்குமென்று கூறுதல் இலக்கணையாதலின் பிற்கூறினார்.

[உ-ம்.] சென்று, சென்றும், சேறு, சேறும், வந்து, வந்தும், வருது, வருதும், உண்டு, உண்டும், உண்க, உண்கும், உண்மின், உண்ணும், உண், உய்க, வாழிய, வாழியர், சேறி, உண்மார், உண்ப, உண்ணும், உண்ணான் எனவரும்

மும்மையும் என்னும் முற்றும்மையை "முற்றும்மை யொரோவழி யெச்சமுமாகும்." என்பதனான் எச்சவும்மையாக்கி நடந்திலன், நடவாநின்றிலன் என எதிர்மறை ஒருகாலம் ஏற்றுவருதலுங்கொள்க.

சென்றி, செல்லாநின்றி எனவருமாயின் இடைநிலைகாலங்காட்டியவுகர வீற்றவாம் இவைசிலவிலஎன்றவற்றுள் இறுதிநிலை காலங்காட்டுவன வற்றை விதந்தோதி, முதனிலையும் பிறவிடைநிலையும் காலங்காட்டுவன வற்றை யோதாமையின், அவை சிறுபான்மைய வந்தவழிக்காண்க வென்றாராயிற்று.

அவைவருமாறு, தோட்டான், விட்டான், உற்றான், பெற்றான், புக்கான், நக்கான் என்பனவற்றுள் இடைநிலையின்றி முதனிலைவிகாரமாய் இறந்த காலங்காட்டின.

என்மனார், என்றிசினோர், என்மர் என்பவற்றுள் எடுத்தோதாப்பிற இடைநிலைகள் நின்று முன்னைய இரண்டும் இறந்தகாலமும் பின்னையதொன் றும் எதிர்காலமுங்காட்டின. பிறவுமன்ன.

ஈங்கே என்ற மிசைபானே வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய்-போருதி புலம்புதி நீயும். என இகரவீறு நிகழ்காலங் காட்டவும், ஏனைய கூறியகாலத்திற் பிறழ்ந்து வருவனவுளவேல் அவையும் பெயரெச்ச வினை யெச்சங்களின் இடைநிலையின்றி இறுதிநிலைகாலங் காட்டுவனவுங்கொள்க.

இனிபத்திமுதலிய உறுப்புக்களால் பகுபதமுடியுமாறு:—

அவன் என்னுஞ்சுட்டுப்பொருட்பெயர்ப்பகுதம் அ என்னும் பகுதியும் அன் என்னும்விகுதியும் பெற்று, "எகர வினாமுச் சுட்டின்முன்னர்" என் னுஞ் சூத்திரத்தால் வ கரந்தோன்றி, "உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே." என்பதனான் வகரத்தின்மேல் விகுதிஉயிரேறி முடிந்தது.

தமன் என்னுங்கிளைப்பொருட் பெயர்ப்பகுபதம் தாம் என்னும் பகுதி யும் அன் என்னும் விகுதியும் பெற்று, "தாணாமுதல் குறுகும்." என் பதனால் பகுதிமுதல் குறுகி, உடன்மே லுயிரேறி முடிந்தது.

குறிஞ்சியான் என்னும் இடப்பெயர்ப் பகுபதம் குறிஞ்சி என்னும் பகு தியும் ஆன் என்னும் விகுதியும்பெற்று, யகரவுடம்படுமெய்தோன்றி, உயி ரேறி முடிந்தது.

பிரபவன் என்னுங் காலப்பெயர்ப் பகுபதம் பிரபவம் என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் பெற்று, "ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே." என்பதனாற் பகுதி கடைக்குறையாய் வகர ஒற்றின்மேல் விகுதி அகர உயிரேறி முடிந்தது.

திணிதோளன் என்னுஞ் சினைப்பெயர்ப் பகுபதம் திணிதோள் என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் பெற்று, உடன்மேல் உயிரேறி முடிந்தது.

பெரியன் என்னுங் குணப்பெயர்ப் பகுபதம் பெருமை என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் பெற்று, பகுதியீறுபோய் இடை உகரம் இகரமாய் யகரவுடம்படு மெய்தோன்றி உயிரோறி முடிந்தது.

ஓதுவான் என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம் ஓது என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் வ கர இடைநிலையும்பெற்று உயிரேறி முடிந்தது.

நன்மை என்னும் பகுபதம் நல் என்னும் பகுதியும், மை என்னும் விகுதியும் பெற்று, "மெலி மேவினணவும" என்பதனான் லகரம் னகரமாய்த் திரிந்து முடிந்தது.

வருதல் என்னும் பகுபதம் வா வென்னும் பகுதியும் தல் என்னும் விகுதியும் பெற்று, "வலித்தல் மெலித்தல்" என்பதனால் பகுதிமுதல் குறுகி, ரகர இ கரம் விரிந்துமுடிந்தது.

நடந்தனன் என்னும் இறந்தகால வினைப்பகுபதம் நட என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் இறந்தகாலந்தரும் தகர இடைநிலையும் அன் சாரியையும் பெற்று, பகுபதவுறுப்புகளுள் பகுதி ஒழிந்தன இடைச்சொல்லாதலின் "இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்," என்பதனால் பகுதியீற்றின் நின்ற உயிர்முன்வந்த தகர இடைநிலை மிகாது அதற்கினமிகுந்து, இடைநிலைத் தகரவொற்றின்மேல் சாரியை அகரவுயிரேறி, சாரியையீற்று னகரவொற்றின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

நடவாநின்றன் என்னும் நிகழ்கால வினைப்பகுபதம் நட என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் ஆநின்று என்னும் இடைநிலையும்பெற்று, உடம்படு மெய்தோன்றி, இடைநிலையீற்றுக் குற்றுகரங்கெட்டு, உயிரேறி முடிந்தது.

நடப்பான் என்னும் எதிர்காலவினைப்பகுபதம் நடஎன்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் பகர இடைநிலையும்பெற்று, "இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன் கசதப மிகும்." என்பதனால் பகரமிகுந்து, உடன்மேலுயிரேறி முடிந்தது.

நடந்தது என்னும் அஃறிணை ஒருமைப்படர்க்கை இறந்தகாலவினைப் பகுபதம் நட என்னும் பகுதியும் து என்னும் விகுதியும் தகர இடைநிலையும், துவ்விகுதிக்கும் தகர இடைநிலைக்கும் இடையே அகரச்சாரியையும் பெற்றுமுடிந்தது.

நடவாய் என்னும் முன்னிலை ஏவலொருமை எதிர்காலவினைமுற்றுப் பகுபதம் நட என்னும் பகுதியும் ஆய் என்னும் விகுதியும் பெற்று வகர உடம்படுமெய்தோன்றி,விகுதி ஆகார உயிரேறி முடிந்தது.

நடப்பியாய் என்னும் ஏவற்பிறவினைப் பகுபதம் நட என்னும் பகுதியும் பி என்னும் விகுதியும் பெற்று, பகரமிகுந்து இரண்டுமோர்பகுதியாய் நின்று மேல்வரும் ஆய் விகுதியோடு புணர்ந்து, யகர்வுடம்படு மெய் தோன்றி, விகுதி ஆகார உயிரேறி முடிந்தது.

நடப்பிப்பியாய் என்னும் அவ்வினைப்பகுபதம் நடப்பி என்னும் பகுதியும் பி என்னும் விகுதியும் பெற்று, பகரமிகுந்து, அனைத்து மோர்பகுதியாய் நின்று, மேல்வரும் ஆய் விகுதியோடு புணர்ந்து, யகரவுடம்படுமெய் தோன்றி, விகுதி ஆகார உயிரேறி முடிந்தது.

விளம்பிய பகுதிவேறனவையும் இவ்வாறே முடிந்து, அனைத்துமோர் பகுதியாய் நின்று,மேல்வரும் அன் ஆன் முதலிய விகுதியோடுபுணர்ந்தமை காண்க.

நடவான் என்னும் எதிர்மறை வினைப்பகுபதம் நட என்னும் பகுதி எதிர்மறை ஆகார விகுதியோடு புணர்ந்து, இரண்டும் ஓர்பகுதியாய்நின்று, மேல்வரும் ஆன் விகுதியோடு புணர்ந்து, "ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே." என்பதனான் விகுதியினது ஆகாரம் குறைந்து முடிந்தது.

நடவா என்னும் அஃறிணைப் பன்மைப்பகுபதம் "ஆவே யெதிர்மறைக் கண்ணதாகும்." என்பவாகலின் பால்காட்டும் ஆகாரவிகுதியன்றி எதிர்மறை ஆகாரம்வேண்டாது முடிந்தது.

நடந்திலன், நடவாநின்றிலன் என்பவற்றுள் காலஇடைநிலையும் அவற்றைமறுத்த இல் என்னும் எதிர்மறைவிகுதியும் தந்து, அவற்றை ஓர் பகுதியாக்கிமுடிக்க.

இவ்வாறே பெயரெச்ச வினையெச்சங்களும்,பிறவும் பகுதி விகுதி முதலிய உறுப்புகளோடு ஏற்றவாறு அமைந்துகிடந்தமைகாண்க.

* எழுதப்படுவது என்னும் பொருட்கண் எழுது என்னும் முதனிலை முன்னர் செயப்படுபொருண்மை உணர்த்தும் ஐகாரவிகுதிபுணர்ந்துகெட்டு, கெட்டவழி தகாமிரட்டித்து, எழுத்து எனமுடிந்தது.

---

* "எழுதப்படுவதுஎன்னும் பொருட் கண் எழுது என்னும் முதனிலை உரிச்சொல்லின்முன்னர் செயப்படுபொருண்மை யுணர்த்தும் ஐகாரவிகுதி புணர்ந்து, 'செய்யாயென்னுமுன்னிலைவினைச்சொல்' என்னுஞ்சூத்திரத்து மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்னும் உத்தியான் அவ்வைகாரங்கெட்டு கெட்டவழி தகர மிரட்டித்து, எழுத்துஎன முடிந்தது" என்றும், "இவ்வாறு அன்றி வேறுகூறுவாருமுளர் அதுபொருந்தாது" என்றும் கூறுவர்.—சிவஞானமுனிவர்.

*[ஊண், தீன், கோள் என்றாற்போல்வனவும் செயப்படுபொருண்மை உணர்த்தும் ஐகாரவிகுதி புணர்ந்து கெட்டு, முதல் நீண்டு நின்றன.

திரை, நுரை, அலை, தளிர், பூ, காய், கனி என்றாற்போல்வன வினைமுதற் பொருண்மையுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்துகெட்டு நின்றன.

† கேடுவாகவையாது என்புழி கேடு என்பது புடைபெயர்ச்சியை உணர்த்தும் தல் விகுதிகெட்டு நின்றது.

கேடு என்பது அவ்வாறுப் முதல் நீண்டு நின்றதெனக்கொள்க. ஏனையவும் இவ்வாறே ஏற்றபெற்றியறிந்து முடித்துக்கொள்க.

திரை, நுரை, தளிர் என்றாற்போல்வன விகுதிகுன்றி முதனிலைமாத்திரையாய் நிற்றல்பற்றி இவற்றை முதனிலை வினைப்பெயரென வழங்குப.

ஐகாரவிகுதி செயப்படுபொருண்மை யுணர்த்துதல் நடவை, சேக்கை, உடுக்கை, தொடை, விடை என்றாற் போல்வனற்றுள்ளும்,—

இகரவிகுதி வினைமுதற்பொருண்மை யுணர்த்துதல் சேர்ந்தாரைக் கொல்லி, நூற்றுவரைக்கொல்லி, நாளோதி, நாலோதி என்றாற்போல்வனவற்றுள்ளும்,—காண்க.

இவ்விகுதிகள் சிறுபான்மை பிறபொரு ளுணர்த்தியும் வரும். வடநூலாரும் வினைப்பெயர் விகுதிகள்கூறிய நியமந்தப்பி பிறபொருளுணர்த்தியும் வருமெனக்கொள்வர்.

உடுக்கை என்பது உடுக்கப்படும்பொரு ளுணர்த்துங்கால் ஐகார விகுதித்தென்றும், உடுத்தல் எனப்புடைபெயர்ச்சியை உணர்த்துங்கால் கை விகுதித்தென்றும் தெரிந்துணர்ந்துகொள்க.]

பகுதி விகுதி என்னுஞ் சூத்திரமுதல் இச்சூத்திர மீறாகப் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக்காட்டினமையின் முடித்துக்காட்டல் என்னும் உத்தி. முன்னைத்தமிழ்நூல்களுள் இல்லனவற்றை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென முன்னர்காட்டி இச்சூத்திரங்காறும் அவற்றிற்த இலக்கணந்தந்து நிறுத்தமையின் தாஅனுட்டித் தன்து நிறீஇப் என்னும் மதம்.

கசசூ. இடையி னைந்து மீற்றி லிரண்டு - மல்லா வச்சை வருக்கமுதலிறி - யவ்வாதி நான்மை ளவ்வாது மையையம் - போதுவெழுத் தொழிந்தநா லேழந் திரியும்.

இது இவ்வியல் மொழியாக்கம் ஆதலின் ஆரியமொழி திரிந்து வடமொழியாமாறு உணர்த்துவான்றொடங்கி அவற்றின் பொதுவிதி உணர்த்துகின்றது.

---

* இத்துணையும் தொல்காப்பியச் சூத்திர விருத்தியிற் கூறப்பட்டுள்ளது.— பக்கம் உசு.

† திருக்குறள், செ. கஉ.

ப-ரை. இடையில் - ஆரியத்தில் அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ லு லூ ஏ ஐ ஓ ஔ அம் அஃ என்கிற உயிர் பதினாறனுள் நடுவிலிருக்கின்ற, நான்கும் - ரு ரூ லு லூ என்கிற நாலெழுத்துகளும், ஈற்றில் - கடையிலிருக்கின்ற, இரண்டும் - அம் அஃ என்கிற இரண்டெழுத்துகளும், அல்லா - நீங்கலாகிய, அச்சு - அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற பத்து உயிர்களும், ஐவருக்கம் - க க க க ங ச ச ஜ ஜ ஞ ட ட ட ட ண த த த த ந ப ப ப ப ம ய ர ல வ ஶ ஷ ஸ ஹ ள க்ஷ என்கிற மெய்முப்பத்தேழுள், ககரமுதலைந்தெழுத்துகளாகிய ஐந்து வருக்கங்களுடைய, முதல் - முதலிலிருக்கின்ற க ச ட த ப என்கிற ஐந்து மெய்களும், ஈறும் - கடையிலிருக்கின்ற ங ஞ ண ந ம என்கிற ஐந்துமெய்களும், யவ்வாதி நான்மை - ய ர ல வ என்கிற நான்குமெய்களும், ள - ளகரமெய்யும், ஆகும் ஐயை எழுத்து - ஆகிய இருபத்தைந்தெழுத்துகளும், பொது - தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துகளாகும், ஒழிந்த - அவையொழிந்த, நாலேழும் - இருபத்தெட்டெழுத்துகளும், திரியும் - ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துகளாய்த் தமக்கேற்ற பொதுவெழுத்துகளாகத் திரிந்துவரும். எ-று.

பொ-ரை. ஆரியமொழியுள் அச்சென்றுவழங்கும் உயிர்பதினாறனுள்ளும் இடையில்நின்ற ஏழாம் உயிர்முதல் நான்கும், ஈற்றில்நின்ற இரண்டும், ஆன ஆறும் ஒழிந்துநின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும், அல்லென்வழங்கும் முப்பத்தேழு மெய்யுள்ளும் க ச ட த ப என்னும் ஐந்து வருக்கத்தினிடையில் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லப்பட்டுநிற்கும் மூன்றுமொழிந்த க ங ச ஞ ட ண த ந ப ம என்னும் பத்தும், ய ர ல வ என்னும் நான்கும், ளவுமாகும் இருபத்தைந்தும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம். இவையன்றி மேல் உயிருளொழிந்த ஆறும், ஐந்து வருக்கங்களினும் இடைகளினொழிந்த பதினைந்தும், முப்பதாம் மெய் முதலான எட்டனுள் ளகரமொழிந்த ஏழுமான இருபத்தெட்டும் ஆரியத்திற்குச்சிறப்பெழுத்தாய், தமக்கேற்ற பொதுவெழுத்தாய்த்திரிந்துவடமொழியாம். எ-று.

வி-பு. மேல் ஏழாமுயிரென விதப்பார் ஆதலின் இடையினான்கும் என விதவாதுகூறினர். பொதுவெழுத்து எனவே சிறப்பெழுத்து என்பதுபெற்றாம். தமிழைநோக்கிச்சிறப்பாயின. சிறப்பெழுத்துத் திரியுமென வரையறை கூறவே பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதூஉம் கூறினாராயிற்று.

௧௪௭. அவற்றுள், ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்-திடையின்
மூன்று மவ்வம்முதலு-மெட்டேயவ்வு முப்பதுசயவு-மேலொன்றுசடவு
மிரண்டுசதவு-மூன்றேயகவு மைந்திருகவ்வு - மாவீறையு மீயீறிகாரமும்

இது மேலதற்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. அவற்றுள், முன்னே திரியுமென்ற எழுத்துகளுள், ஏழாம் உயிர் - சிறப்பெழுத்தாகிய ஏழாமுயிரானது, இய்யும் இருவும் - இகரமாகவானாலும் இருவாகவானாலும், ஐ வருக்கத்து - ஐந்துவருக்கங்களிலும், இடையின் மூன்றும் - நடுநின்ற மூன்றெழுத்துகளும், அ அ முதலும் - அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துகளாகும், எட்டு - எட்டாவதாகிய சகரவருக்கத்து மெய்யானது, யவ்வும் - ஓரோவிடத்தில் யகரமுமாகும், முப்பது - முப்பதா மெய்யானது, ச ய உம் - மொழிக்கு முதலிலே சகரமும் நடுவிலே யகரமுமாகும், மேல் ஒன்று - முப்பத்தொன்று மெய்யானது, ச ட உம் - மொழிக்கு முதலிலே சகரமும் நடுவிலே டகரமுமாகும், இரண்டு - முப்பத்திரண்டா மெய்யானது, ச த உம் - மொழிக்குமுதலிலே சகரமும் நடுவிலே தகரமுமாகும், மூன்று - முப்பத்து மூன்று மெய்யானது, அ க உம் - மொழிக்கு முதலிலே அகரமும் நடுவிலே ககரமுமாகும், ஐந்து - முப்பத்தைந்தாமெய்யானது, இரு க உம் - இரண்டு ககரமாகும், ஆ ஈறு - பொதுவெழுத்துகளிலே மொழியிறுதி ஆகாரமானது, ஐ உம் - ஐகாரமாகும், ஈ ஈறு - மொழியிறுதி ஈகாரமானது, இகரமும் - இகரமாகும். எ - று.

போ-ரை. மேல்திரியும் என்றவற்றுள் சிறப்பெழுத்தாகிய ஏழாமுயிர் இகரமும் இருவுமாம். ஐந்து வருக்கங்களினும் இடையினின்ற மூன்றும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாம். எட்டாம் மெய்யான சவ்வருக்கத்துள் எடுத்துச்சொல்லுமெய் ஓரோவிடத்து யகரமுமாம். முப்பதாம் மெய் மொழிமுதற்கண் சகரமும் இடைக்கண் யகரமுமாம். முப்பத்தொன்றுமெய் மொழிமுதற்கண் சகரமும் இடைக்கண் டகரமுமாம். முப்பத்திரண்டாமெய் மொழிக்கு முதற்கண் சகரமும் இடைக்கண் தகரமுமாம். முப்பத்துமூன்று மெய் மொழிமுதற்கண் அகரமும் இடைக்கண் ககரமுமாம். முப்பத்தைந்தாமெய் இரண்டுககரமாம். பொதுவெழுத்துள் மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாம். மொழியிறுதி ஈகாரம் இகரமாம். எ - று.

வி-பு. மேல் திரியும் எனப் பொதுவிதிபோக்தவற்று பயின்று வருஞ் சிலவற்றிற்குத் திரிபுகூறி ஏனைய வந்தவழிக்காண்கவென்பார் இகாழுமாகும் என பயனிலைகொடுத்து முடியாது இகாழும் என அவாய்நிலையாக முடித்தார்.

[வ-று] இடபம், விடபம், திட்டி (எ-ம்); இருடி, மிருகம், விருத்தி (எ-ம்) ஏழாமுயிர் இகரமும் இருவுமாயிற்று.

நகம், நாகம், மேகம் (எ-ம்); சலவாதி, விசயம், சருச்சரை(எ-ம்); பீடம், பீடை, திடம் (எ-ம்); தலம், தினம், தரை (எ-ம்); பலம், பந்தம், பாரம் (எ-ம்) ஐந்துவருக்கத்தினும் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லும் மூன்றும் அவ்வம் முதலாயின.

அயம், பங்கயம் என எட்டாமெய் யகரமுமாயிற்று.

சாலை, சூலை (எ-ம்); மயானம் (எ-ம்) முப்பதாமெய் சகரமும் யகரமுமாயிற்று.

சட்டி (எ-ம்); இடபம் (எ-ம்) முப்பத்தொன்றாமெய் சகரமும் டகரமுமாயிற்று.

சித்தி, சூத்திரம், சேனை (எ-ம்); அதனம், வாதனை (எ-ம்) முப்பத்திரண்டாமெய் சகரமும் தகரமுமாயிற்று.

அரன், அரி (எ-ம்); சிங்கம், மோகம் (எ-ம்) முப்பத்து மூன்றாமெய் அகரமும் ககரமுமாயிற்று.

பக்கம், தக்கணம் எனமுப்பத்தைந்தாமெய் இரண்டு ககரமாயிற்று.

வேலை, சாலை, மாலை, உவமை, வநிதை என ஆகார ஈறு ஐகார ஈறாயிற்று.

...ரி, மேதிநி, குமாரி என ஈகார ஈறு இகர ஈறாயிற்று.

கசஅ. ரவ்விற் கம்முத லாமுக்குறிலும்-லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்-கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

இது ர ல ய க்களுக்கு முதலாகிவரும் உயிரெழுத்துகளை இவையென மேலதன்சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. ரவ்விற்கு-ரகரத்திற்கு, அ முதல் ஆம் முக்குறிலும் - அ இ உ என்கிறமூன்று குற்றெழுத்துகளிலொன்றும், லவ்விற்கு-லகரத்திற்கு-இ முதல் இரண்டும் - இ உ என்கிற இரண்டிலொன்றும், யவ்விற்கு - யகரத்திற்கு, இ உம் - இகாரமும், மொழி

மூதல் ஆகி-அவ்வெழுத்துகளை முதலிலுடையவடமொழிகளுக்கு முதலாகி, முன் வரும் - அம்மூன்று எழுத்துகளுக்கு முன்னே வரும்.

போ-ளா. ரகர லகர யகரங்களை முதலாகவுடைய ஆரியமொழிகள் வடமொழியாங்கால் அகர இகர உகரம் என்னும் இம்மூன்றுகுற்றுயிரும் இங் ஙனம் சொன்னவாறே அவ்வடமொழிகட்குமுதலாய் அம்மூன்றெழுத்திற்கு முன்னர்வரும். எ-று.

[வ-று.] அரங்கம், இராமன், உரோமம் (எ-ம்); இலாபம், உலோபம் (எ-ம்); இயக்கன் (எ-ம்.) வரும்.

கசசு. இணைந்தியல் காலையாலந் கிநாமும்-னவ்வக் குகாம நகாக் ககாம - மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.

இது புணை யெழுத்தை யடுத்த ய ர ல க்களுக்கு முன்வரும் உயிரெழுத்துகள் இவையென உணர்த்துகின்றது.

ப-ளா. இணைந்து - ஆரியமொழியுள் இரண்டெழுத்து இணைந்து, இயல்காலை - ஒரெழுத்தைப்போல நடக்கும்போது, யரல கு-பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு, இகரமும்-இகரமும் ம வ கு-மகரவகரங்களுக்கு - உகரமும்-உகரமும், நகரம் கு-நகரத்திற்கு, அகரமும் - அகாரமும், மிசை-மேலே, வரும்-வந்து வடமொழிகளாகும், ர வழி - இணைந்து முன்னின்ற ரகரத்திற்குப்பின், உவ்வும் ஆம் - உகாரமும் வரும், எ-று.

போ-ளா. ஆரியமொழியுள் இரண்டெழுத்து இணைந்து ஒரெழுத்து நீர்மையாய்நடக்குங்கால்,பின்னிற்கும் ய ர லக்கண்மீதே இகரமும், மகர வகரங்கள்மீதே உகரமும், நகரமீதே அகரமும் வந்து வடமொழியாம். இணைந்து முன்னிற்கும் ரகரத்திற்குப்பின்னர் உகரமும் வரும். எ-று.

[வ-று.] வாக்கியம், வாச்சியம், நாட்டியம் (எ-ம்); வக்கிரம், வச்சிரம், சந்திரம், அப்பிரம் (எ-ம்); சுக்கிலம், ஆமிலம் (எ-ம்); பதுமம் (எ-ம்); பக்குவம் (எ-ம்); அரதனம் (எ-ம்); அருக்கன், அருத்தம், சருப்பம், சருக்கம், தருமம் (எ-ம்) வரும்.

பிற என்றமையானே, சுந்தி, கட்சி, காப்பியம், பருப்பதம் என்றற்றொடக்கத்துத் திரிபும்,

தூலம், அத்தம், ஆதித்தன், அநத்தம் என்றற்றொடக்கத்துக் கேடும், மற்றும் விகாரத்தால் வருவனவுங் கொள்க.

கடுo. றனழ எ ஒவ்வு முயிர் மெய்யு முயிரள - பில்லாச் சார்பு தமிழ்பிற பொதுவே.

இது வடமொழி ஆக்கம் கூறவேண்டி ஆரியத்திற்கு பொதுவெழுத்து சிறப்பெழுத்து என விதந்தமையின், இவ்விதப்பு தமிழிற்கு உண்டோ இன்றோ என்று ஐயுறுவார்க்கு ஐயமறுத்தல் நுதலிற்று.

ப-ரை. ற ன ழ எ ஒ உம்-முதலும் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுகளிலே றகர னகர ழகர எகர ஒகரங்க ளைந்தும், உயிர்மெய்யும் உயிரளபு அல்லா சார்வும்-உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்தெட்டும், தமிழ் - தமிழிற்கே சிறப்பெழுத்துகளாம், பிற - ஒழிந்தஇருபத்தேழெழுத்துகளும், பொது - பொதுவெழுத்துகளாம்.

போ-ரை. முதலும் சார்புமான நாற்பதெழுத்துள்ளும் றகர னகர ழகர எகர ஒகரமானமுதலெழுத்தைந்தும், உயிர்மெய்யும், உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்தெட்டும் தமிழிற்கே சிறப்பெழுத்தாம். ஒழிந்த இருபத்தேழும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம். எ-று.

வி-பு. மெய்யை முற்கூறினர் எகர ஒகரங்கள் பிராகிருதத்திற்கும் உரியவாதலினென்க.

பதவியல் சூத்திரம் உரு.

முற்றிற்று.

மூன்றாவது

உயிரீற்றுப்புணரியல்.

கடுக. மெய்யுயிர் முதலீ றமிரு பதங்களுந்-தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப் - பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிக - ளியல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

இது. நிறுத்த முறையானே மேலே ஓதவிட்ட கூறிய பதங்கள் ஒன்றோடொன்று புணருமாறு உணர்த்துவான் றொடங்கி, புணர்ச்சி இன்னதென்பதூஉம், பொதுப்புணர்ச்சியும் முறையே தலைப்பெய்து உயிரீற்றுப்பதம் புணருஞ் சிறப்புப்புணர்ச்சி கூறுவார், கமுகந்தோட்ட மென்றாற்போல மிகுதி பற்றியகுறியாய் இவ்வியற்குஉயிரீற்றுப்புணரியலெனப்பெயர்தந்தமையின், இவ்வியலின் வைத்தமுறையே புணர்ச்சி இன்னதென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. மெய் உயிர்-மெய்யாவது உயிராவது, முதல் ஈறு ஆம்-முதலுமீறுமாகிய, இரு பதங்களும் - பகாப்பதம் பகுபதம் என்கிற விரண்டு பதங்களும், தன்னொடும் பிறிதொடும் - தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாய், அவ்வழி வேற்றுமை பொருளின்-அல்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப்பொருளினாலாவது, பொருந்து உழி - பொருந்துமிடத்து, நிலை வரு மொழிகள் - நிலைமொழியும் வருமொழியும், இயல்பொடு விகாரத்து-இயல்போடாயினும் விகாரத்தோடாயினும், இயைவது - பொருந்துவது, புணர்ப்பு-முன்சொல்லப்பட்டபுணர்ச்சியாம். எ-று.

பொ-ரை. மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகவுடைய பகாப்பதம் பகுபதமென்னும் இரண்டுபதங்களும் தன்னொடுதானும் பிறிதொடு பிறிதுமாய் அல்வழிப்பொருளினாதல் வேற்றுமைப் பொருளினாதல் பொருந்துமிடத்து நிலைமொழியும் வருமொழியும் இயல்போடும் விகாரத்தோடும் பொருந்துவது மேற்கூறிய புணர்ச்சியாம். எ-று.

வி-பு. உயிர்மெய்முதலீறும் எனில் உயிர்மெய்யென்னும் ஓரெழுத்தாகப் பொருள்படுமாதலின், மெய்யுயிர்முதலீறும் என மெய்யை முற்கூறினர். திசைச்சொல்லும் வடசொல்லும் பெயர்வினை இடை உரியாய் அடங்குமாதலின் அவற்றுள் அடக்கி இருபதங்களும் என்றார். வேற்றுமையல்லாதவழி அல்வழியாதலின் வேற்றுமையல்வழி எனக் கூறல்வேண்டும். அங்ஙனங்கூறின் வேற்றுமைப்பொருள் அல்வழிப்பொருளென இருபொருட்படாது வேற்றுமையென்பது அல்வழியைவிசேடித்ததாய் அல்வழிப்பொருள் ஒன்றினும் பொருந்துழியெனப் பொருள்படும் ஆதலின் அல்வழியை முற்கூறினர். இயல்பு எனினும், தன்மை எனினும், இயற்கை எனினும் ஒக்கும். விகாரம் எனினும், செயல்எனினும், செயற்கை எனினும், விதி எனினும் ஒக்கும். இவ்விரண்டினுள் "நின்றசொன்முன்னியல்பாகும்மே." என இயற்கையைச்செயற்கையாகவும், *"இசையாவொரூஉப்பொருளில்லென்றல் யார்க்கும்-வசையன்று வையத்தியற்கை." எனச் செயற்கையை இயற்கையாகவும் கூறுவது இலக்கணை. புணரியல் மூன்றனுள்ளும் மெய்யுயிர் முதலீறு மிருபதங்களும் இவ்வாறுபுணர்ந்து வருதல் காண்க.

கடுஉ. வேற்றுமையைம் முதலாற மல்வழி-தொழில் பண்புவமையும்மை யன்மொழி - யெழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி - தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

இது மேல் அல்வழிவேற்றுமை என்றார் அவை இவை என்பது உணர்த்துகின்றது.

---

* நாலடியார், செ. கசக.

ப-ரை. வேற்றுமை-வேற்றுமைப் புணர்ச்சியாவது, ஐமுதல் ஆறு ஆம்—ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறுருபுகளும் மறைந்தாகிலும் வெளிப்பட்டாகிலும் வரப்பதங்கள் பொருந்தும் தொடர்ச்சியாம், அல்வழி - அல்வழிப்புணர்ச்சியாவது, தொழில்-வினைத்தொகையும், பண்பு - பண்புத்தொகையும், உவமை-உவமைத்தொகையும், உம்மை-உம்மைத்தொகையும், அன்மொழி - அன்மொழித்தொகையும், எழுவாய் - எழுவாயும், விளி-விளியும், ஈர் எச்சம்-பெயரெச்ச வினையெச்சங்களும், (ஈர்) முற்று-தெரிநிலைவினைகுறிப்புவினைமுற்றுக்களும், இடை-இடைச்சொல்லும், உரி-உரிச்சொல்லும், அடுக்கு என - அடுக்கும் என்று, ஈரேழ்-பதினான்கு வகையாக, தழுவு தொடர்-பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம்.

போ-ரை. வேற்றுமைப்புணர்ச்சி பெயரோ ஐ ஆல் என்னுஞ்சூத்திரத்து ஐ முதலிய ஆறு உருபுந் தொக்கும் விரிந்தும் வரும் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம். அல்வழிப்புணர்ச்சி வினைத்தொகை முதலிய ஐந்துதொகைநிலையும், எழுவாய்முதல் ஒன்பது தொகாநிலையுமெனப்பதங்கள் பொருந்தும் தொடர்ச்சி பதினான்காம்.

வி-பு. வேற்றுமைத்தொகைநிலை தொகாநிலையென விதவாமையின் அவ்விரண்டும் வேற்றுமைப்புணர்ச்சி என்பதூஉம், முற்றெச்சங்களை விதந்தமையின் தொழிலென்றது வினைத்தொகையை என்பதூஉம், வினைத்தொகைமுதல் ஐந்தும் விரிந்தவழி வினைத்தொகை பெயரெச்சமாயும், பண்பை விளக்குமொழி இடைச்சொல்லாதலின் பண்புத்தொகையிரண்டும் இடைச்சொற்சந்தியாயும், உவமைத்தொகை இரண்டாம்வேற்றுமையோடு பயனிலையாயும், உம்மைத்தொகை இடைச்சொற் சந்தியாயும், அன்மொழித்தொகை பொற்றொடி என்பது பொன்னாலாய தொடியினையுடையாள் எனச்சொற்களும் சந்திகளும் பலவாய் முடிதலானும், வேற்றுமைத்தொகையன்றி இத்தொகைகள் தொகா நிலையுமாம் என மேற்சூத்திரம் செய்யாமையானும், இவ் வைந்து தொடரும் தொகைநிலை யென்பதூஉம் பெற்றும். ஈர் என்பதனை முற்று என்பதனோடும், தழுவுதொடர் என்பதனை எல்லாவற்றோடும் ஒட்டுக. அடுக்கும் தழுவுதொடராயினும் ஒருசொல் அடுக்கி வருதலின் ஏனையபோல் தழுவுதொடர் அன்றென்பார் விதந்து பிற்கூறினர்.

[உ-ம்.] பொன்னுடையான்=பொன்னினை யுடையான், கல்லெறிந்தான்=கல்லாலெறிந்தான், கொற்றன்மகன்=கொற்றற்குமகன், மலைவீழருவி=மலையின்வீழருவி, மலையுச்சி=மலையினதுச்சி, மலைமுழை=மலைக்கண்முழை என வேற்றுமைப் புணர்ச்சி வந்தன.

கோல்யானை, கருங்குதிரை, ஆயன்சாத்தன், பொற்சுணங்கு, இராப்பகல், பொற்றொடி, தோற்றஞ்சோடுத்தான், தோற்றகோன், உண்டசாத்தன், துண்டுகட்டேருமை, † அணைந்தகோலாமயில் மயில்கோல்லோகனங்குழை, நனிபேதையே, படைபடையென்றஞ்சி என அவ்வழிப்புணர்ச்சி வந்தன.

தழுவுதொடர் ஆறும் பதினொன்றுமெனக் கூறவே தழுவாத்தொடரும் சிலவுள அவ்விருவழியும் என்றாராயிற்று.

[வ-று.] கைக்களிறு, பொற்குடம், ஆடகப்பூண் என்பனதழுவுதொடராகிய உருபும் பயனும் உடன் தொக்கமையின் களிறு, குடம், பூண் என்பனவற்றோடு நிலமொழிகள் தழுவாதுதொடர்ந்து மூன்று விகாரமும் ஏற்ற வேற்றுமைப் புணர்ச்சி.

"இரும்பு திரித்தன்ன மாயிருமருப்பிற் பரலவலடைய விரலை தெறிப்ப." என்பதனுள் மருப்பின் இரலையெனக் கொண்டுகூட்டாகவந்து இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றிருக்கும் மருப்பு என்பது இரலையென்பதனோடு புணராது, மருப்பிற் பால் எனப் புணர்ந்து திரிந்தது. இத்தொடக்கத்தன வெல்லாம் தழாத்தொடராய வேற்றுமைப் புணர்ச்சியாமென்க.

"சுனையயாழ வம்மிமிதப்ப" என்பதனுள் மொழிமாற்றுச் சுனை மிதப்ப எனத் தழுவுதொடராகி வருவழி இயல்பாக முடியும் எழுவாய்ப் புணர்ச்சி சுனையயாழ என தழாத்தொடராய் அல்வழிப் புணர்ச்சியாமென்க.

மாடத்தைக்கட்டினான் என வேற்றுமை உருபும் சாரியையும் விரிந்துநின்ற இருமொழி ஒருசந்தியாகிய வேற்றுமைச் சந்தியை வேற்றுமை கபங்கருதி, நான்குசொல் மூன்றுசந்தியாக்கி, உருபும் சாரியையும் இடைச்சொல்லாதலின் அல்வழியுள் இடைச்சொற்சந்தி என்று கோடலுமொன்று.

எட்டே வேற்றுமையென மேற்கூறுவார் எழுவாயும் விளியும் ஒழித்து வேற்றுமை ஐம்முதலாறு என்றது என்னையெனின், பெயர்ப்பொருளை வேற்றுமை செய்தலான் வேற்றுமை யெட்டென்பார் எழுவாய்க்கும் விளிக்கும் உருபும், பெயரும், பெயராது விகாரமும் அன்றி வேறுருபு இன்மையின் அவ் விரண்டினையும் ஒழித்து, தமக்கென உருபுடையன இடைநின்ற ஆறு வேற்றுமையுமே ஆதலின், அவற்றின் உருபு ஆறும்தொக்கும் விரிந்தும்இடைநிற்க, அவ்வாறோடும் பதங்கள்பொருந்தும் புணர்ச்சியை வேற்றுமைப் புண

† திருக்குறள், செ. ௧௦௮௧.

"நன்னடையினக்கிளி கடிவோள் - பன்னைய எல்லன் மாறேனும்இ ன்னே." இது நட்டை எனற்பாலது நன்னடை என மெலித்தவாறு.

"நீக்கொழிலை கன்றித் திரிதங் தெருவைபோற் போத்தருர் புல்லறி விஞர்." இது மொத்தறர் எனற்பாலது போத்தறர் என நீட்டியவாறு.

"யானை யெருத்தத்திருந்த விலங்கிலைவேற் றென்னன்றிருந்தார் கன் றென்றேன்றியேன்." இது தீயோன் எனற்பாலது தியேன் எனக் குறுகியவாறு.

"சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே." இது விளையுமே எனற்பாலது விளையும்மே என ஒற்றில்வழி ஒற்றைவிரித்தவாறு.

இதனுள் சிறியவிலையெனற்பாலது சிறியிலையெனத் தொகுத்தவாறு.

† "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் - கற்றனைத்தூறு மறிவு." இதுவும் தோட்டது, கற்றது எனற்பாலது தொட்டு, கற்று எனத் தொகுத்தவாறு. பிறவுமன்ன.

கருசு. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

இது வேறு மூன்று செய்யுள்விகாரம் இவ்வெனெ உணர்த்து கின்றது.

ப-ரை. ஒரு மொழி - ஒருசொல்லினுடைய, மூ வழி - முதலிடை கடையென்கிற மூன்றில் ஓரிடத்து, குறைதலும் - குறைந்து வருதலும், அனைத்து - அச் செய்யுள் விகாரமாம். எ-று.

போ-ரை. அடி தொடை முதலியநோக்கித் தொகுக்கும்வழித்தொகுத்தலன்றி வழக்கின்கண் மருஉப்போலச் செய்யுட்கண் மருஉவாய் அடிப்பாடாக ஒருமொழி முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் குறைந்து வருதலும் செய்யுள் விகாரமாம். எ-று.

[வி - று] "மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி." (எ-ம்); "வேதின வெரினி ேளாதிமுதுபோத்து." (எ-ம்); "நீலுண் டுகிலிகைகடுப்ப." (எ-ம்) முறையே தாமரை, ஓந்தி, நீலம் எனற்பாலன குறைந்தவாறுகாண்க.

வி-பு. செய்யுட்கே உரிய விகாரங்களை ஈண்டுக்கூறியதீ என்னை யெனின், செய்யுளகத்து அல்வழி வேற்றுமையான்வரு மூன்று விகாரமும், இவ்வொன்பது விகாரமும் வருதலின் வேறுபாடு அறிதற்கென்க.

கருஎ. ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்.

இது அல்வழி வேற்றுமைப் புணர்ச்சி விகாரத்தின் வருவதோர் ஐயம் அறுத்தனுதலிற்று.

---

† திருக்குறள், சே. ருகசு.

ப-ரை. ஒரு புணர்க்கு - ஒரு புணர்ச்சிக்கு, இரண்டு மூன்றும் - ஒருவிகாரமே யல்லாமல் இரண்டு மூன்றும், உற பெறும் - வரப்பெறும், எ-று.

போ-ரை. ஒரு புணர்ச்சிக்கண் தோன்றல் திரிதல் கெடுதல் என்ற விகாரம் எத்துணை வரும் என்று ஐயுறற்க; ஒன்றேயன்றி இரண்டுமூன்றும் வரப்பெறும். எ-று.

வி-பு. விகாரத்து இயைவது புணர்ப்பு எனவே என்றுவருதல் கூறுதே அமைதலின் இரண்டுமூன்றும் என்றார்.

[வ-று] யானை + கோடு = யானைக்கோடு, நிலம் + பனை = நிலப்பனை, பனை + காய் = பனங்காய் என முறையேகாண்க.

கருஅ. எண்மூ வெழுத்தீற் றெவ்வகைமொழிக்கு-முன்வரு ஞ ந ம ய வக்க ளியல்புங்-குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி - மிகலு மாம் ண ள ன ல வழிநத் திரியும்.

இது பொதுப்புணர்ச்சி உணர்த்துகின்றது.

ப-ரை. எண்மூ எழுத்து - இருபத்துநான்கு எழுத்துகளையும், ஈற்று - இயல்பினால் ஆயினும் விதியினால் ஆயினும் ஈறாக வுடைய, எ வகை மொழிக்கும் - பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்கிற பலவகைப்பட்ட சொற்களுக்கும், முன் - முன்னே; வரும்-வருகிற, ஞ ந ம ய வக்கள் - ஞகர நகர மகர யகர வகரங்கள், இயல்பும் - அல்வழி வேற்றுமை இரண்டிலும் இயல்பாதலும், குறில் வழி ய - குற்றெழுத்தின் பின்நின்ற யகரமெய்யே, தனி ஐ - உயிர் உயிர்மெய் என்கிற ஐகாரமே, நொ - நொவ்வே, து - துவ்வே, முன் - என்பவைகளுக்கு முன்வருகிற, மெலி - ஞகார நகார மகாரங்கள், மிகலும் - பிறசொற்களுக்குமுன் இயல்பாதல் அன்றி மிக்கு முடிதலும், ஆம்-ஆகும், ண ள ன ல வழி - ணளனலக்களின் முன்வருகிற, ந - நகரமானது, திரியும்-மற்றை ஈறுகளுக்கு முன் இயல்பாதல் அன்றித் திரியும். எ - று.

போ-ரை. இயல்பாகவும் விதியாகவும் இருபத்துநான்கு எழுத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்பன நிலைமொழியாய் நிற்க, இவற்றிற்கு முன்னர்வரும் ஞகார நகார மகார யகார வகாரங்கள் அல்வழி வேற்று

யாய இருவழியும் இயல்பாதலும், குற்றெழுத்தின் பின்வரும் யகர ஒற்றே, ஓரெழுத்தொருமொழியான உயிர்உயிர்மெய்யென்னும் ஐகாரமே, நொவ்வே, துவ்வே என்பவற்றிற்கு முன்னர்வரும் ஞகார நகார மகாரங்கள் பிறசொற்கண்முன் இயல்பாதல் அன்றி மிக்கு முடிதலுமாம்; ணகார ளகார னகார லகாரங்கட்கு முன்வரும் நகாரம் பிற ஈற்றின்முன் இயல்பாதல் அன்றித் திரியும். எ - று.

வி-பு. எவ்வகைமொழிக்கும் என்றமையான் விதியீறும் பெற்றாம். நகரம் இவ்வாறு திரியுமென ஈண்டு கூறிக்குறைவருமையின் மேல் அவற்றோடு ஒருங்கெண்ணாது விதந்தார். புணரியலிட்டது யாண்டும் அல்வழி வேற்றுமைபெனக் குறிப்பாயேனும் வெளிப்படையாயேனும்விதவாராயின் இருவழியுங்கொள்க.

[உ - ம்.]

விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு	+	ஞான்றது = விளஞான்றது, நீண்டது = விளநீண்டது, மாண்டது = விளமாண்டது, யாது = விளயாது, வலிது = விளவலிது, &c. &c.	என அல்வழியிலும்,
	+	ஞாட்சி = விளஞாட்சி, நீட்சி = விளநீட்சி, மாட்சி = விளமாட்சி, யாப்பு = விளயாப்பு, வலிமை = விளவலிமை &c. &c.	என வேற்றுமைத்தொகைநிலையிலும்,

விளவை + நாடினன் = விளவை நாடினன், மண்ணை + வைத்தான் = மண்ணை வைத்தான் என வேற்றுமைத் தொகாநிலையிலும்

ஒருமொழிக்கு முதலாய மென்கணமும், இடைக்கணமும் இயல்பாயவாறு காண்க.

ஒழிந்த உயர்திணைப் பெயர்முதலிய அறுவகைச் சொற்களினும் இவ்வாறே ஒட்டுக.

மெய், கை	+	ஞான்றது = மெய்ஞ்ஞான்றது, நீண்டது = மெய்ந்நீண்டது, மாண்டது = மெய்ம்மாண்டது &c. &c.	என அல்வழியிலும்,
	+	ஞாற்சி = மெய்ஞ்ஞாற்சி, நீட்சி = மெய்ந்நீட்சி, மாட்சி = மெய்ம்மாட்சி &c. &c.	என வேற்றுமையிலும் மிக்கன.

நோ, து } + { ஞெள்ளா = நோஞ்ஞெள்ளா, நாகா = நோந்நாகா, மாடா = நோம்மாடா } என இவை வினையாகலின் அல்வழியின்மிக்கன.

தொழிற்பெயர் இறுதிமெய் எகரம் பெறுதலும் நகரத்திரிபும் மேல் வருஞ் சிறப்புச் சூத்திரத்துட்காண்க.

மேலிமிகலுமாம் என எண்ணின்கணிற்கும் எச்சவும்மையானே நோ, து என்னும் இரண்டு சொல்முன்னும் இடையினம் மிகலுமாமெனக் கூறிற்றாயிற்று.

[வ-று.] நோ, து } + { அவள = நோய்யவள, துய்யவள; அளவா = நோவ்வளவா, துவ்வளவா } எனவரும்.

இடையினம் மிகுதல் நூறில்வழி யவ்விற்கும் தனி ஐக்கும் பொருந்தாமையின் உம்மையால்தழீஇயினர். இவ்வாறு இடையினம்மிகுதலை ஆசிரியர் தொல்காப்பியரும், *"அவற்றுள்,மெல்லெழுத்தியற்கை யுறழினும் வரையார்." என உம்மையால்தழீஇயினர். அச்சூத்திரத்திற்கு அவ்வாசிரியர் கருத்தன்றி வேறுரை செய்வாருமுளர்.

நோ, து என்னும் இவ்விரண்டுசொல்முன்னும்மெல்லினமும், இடையினமும் மிகாவேல் புணர்ச்சியின்றி விட்டிசைபோலும்; அன்றேல் வாழைப்பழம், கீரைக்கறிஎன்றாற்போலும். எகரவீற்றிற்கு உதாரணம்காட்டிற்றிலம். அது வினை இடைச்சொற்கண் அன்றி ஈறாகாமையானும் அவ்வினைவிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி மேற்கூறலானும் என்க. இச்சூத்திர முதலியன தொடர்ச்சொற்புணர்த்தல் என்னும் உத்தி.

கஙரு0 பொதுப்பெய ருயர்திணைப் பெயர்களீற்றுமெய்-வலிவரி னியல்பா மாவியரமுன் - வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

இது. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களுக்கு புணர்ச்சி உணர்த்துகின்றது.

ப - ரை. பொது பெயர் - இருதிணைகளுக்கும் பொதுவான பெயர்களுக்கும், உயர்திணை பெயர்கள் - உயர்திணைப் பெயர்களுக்கும், ஈற்று மெய் - ஈற்றிலுள்ள மெய்கள், வலி - வல்லெழுத்து முதன்மொழிகள், வரின் - வந்தால், இயல்பாம் - இயல்பாகும், ஆவி - உயிரையும், யர - யகர ரகர மெய்களையு மீறாகவுடைய அவ் விருவகைப் பெயர்களுக்கும், முன் - முன் வருகிற, வன்மை - வல்லெழுத்துகள், மிகா - மிகாவாம், உயர்திணை - உயிரீறு

* தொல்காப்பியம், எழு. தொகைமரபு, சூ. ௩௰

மெய்யீறுமாகிய உயர்திணைப் பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து, சில விகாரம் ஆம்-நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவனவுஞ் சிலவுளவாம். எ - று.

போ - ளா. இருதிணைப் பொதுவானபெயர்க்கும், உயர்திணைப் பெயர்க்கும் ஈறுனமெய்கள் வல்லின முதன்மொழி வந்தால் இயல்பாம்; உயிரே யகரமே ரகரமே என்னும் இவ்வீற்று அவ்விருபெயர்க்கண் முன்னரும் வரும் க ச த ப க்கள் மிகாவாம்; மெய்உயிரீற்று உயர்திணைப் பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவனவுஞ் சிலவுளவாம் எ - று.

வி - பு. வல்லெழுத்துள் மயங்காதன மயங்கின் ஈற்றுமெய் விகாரப்படுவனவும் உளவாதலின் பொதுப்பட வலிவரின் என்றும், வல்லினமிகுதற் குரிய ழகரம் அஃறிணைக்கன்றி இவ்விரு பெயர்க்கும் ஈறுகாமையின் அதனை யொழித்து யாழன் என்றும், வன்கணமே யன்றி ஏனைக்கணங்கள் புணரினும் விகாரப்படும் ஆதலின் இறந்து தழீஇய எச்சவும்மை கொடுத்து விகாரமாம் என்னாது விகாரமாம் என்றும், அவ்விகாரம் நிலைமொழி வருமொழி இரண்டினும் ஏற்றபெற்றியாக வருதலின் உயர்திணையீறு என்னாது உயர்திணை என்றும் கூறினார். உயர்திணைப்பெயரைப் பின் வைத்தார் பின்பு எடுத்து விதத்தற்கென்க.

[உ-ம்]

சாத்தன், கொற்றன், ஆவன்	+ குறிது, சிறிது, தீது, பெரிது, குறியன், சிறியன், தீயன், பெரியன்	=	சாத்தன், குறிது, சிறிது, தீது, பெரிது, குறியன், சிறியன், தீயன், பெரியன். &c. &c.	என அல்வழியிலும்,
	+ கை, செவி, தலை, புறம்	=	சாத்தன்கை, செவி, தலை, புறம் &c. &c.	என வேற்றுமையிலும்,

பொதுப்பெயர் இறுதி னகர ணகரங்கள் வன்மைவர இயல்பாயின.

ஊரன், அவன்	+ குறியன், சிறியன், தீயன், பெரியன்	=	ஊரன்குறியன், சிறியன், தீயன், பெரியன், அவன்குறியன், சிறியன், தீயன், பெரியன்	என அல்வழியிலும்,
	+ கை, செவி, தலை, புறம்	=	ஊரன்கை, செவி, தலை, புறம், அவன்கை, செவி, தலை, புறம்	என வேற்றுமையிலும்,

உயர்திணைப் பெயர்கள் ஈற்று னகரம் வன்மைவர இயல்பாயின.

[உ-ம்.]

சாத்தி, கொற்றி, தாய் + {குறிது, சிறிது, தீது, பெரிது, குறியள், சிறியள், தீயள், பெரியள்} = {சாத்திகுறிது, சிறிது, தீது, பெரிது, குறியள், சிறியள், தீயள், பெரியள், &c. &c.} என அல்வழியிலும்,

சாத்தி, கொற்றி, தாய் + {கை, செவி, தலை, புறம்} = {சாத்திகை, செவி, தலை, புறம், கொற்றிகை, செவி, தலை, புறம் &c. &c.} என வேற்றுமையிலும்,

பொதுப்பெயர் ஈற்று இகர யகரங்கண்முன் வந்த வல்லினம் மிகாவாயின.

நம்பி, விடலை + {குறியன், சிறியன், தீயன், பெரியன்} = {நம்பிகுறியன், சிறியன், தீயன், பெரியன், விடலை குறியன், சிறியன், தீயன், பெரியன்} என அல்வழியிலும்,

நம்பி, விடலை + {கை, செவி, தலை, புறம்} = {நம்பிகை, செவி, தலை, புறம் விடலைகை, செவி, தலை, புறம்,} என வேற்றுமையிலும்,

அவர், ஒருவர் + {குறியர், சிறியர், தீயர், பெரியர்} = {அவர்குறியர், சிறியர், தீயர், பெரியர், ஒருவர்குறியர், சிறியர் தீயர், பெரியர்} என அல்வழியிலும்,

அவர், ஒருவர் + {கை, செவி, தலை, புறம்} = {அவர்கை, செவி, தலை, புறம், ஒருவர்கை, செவி, தலை, புறம்} என வேற்றுமையிலும்

உயர்திணை இகர ஐகார ரகரங்கண் முன்வந்த வல்லினம் மிகாவாயின. பிறவுமன்ன.

கபிலர் + பரணர் = கபிலபரணர்
வடுகன் + நாதன் = வடுகநாதன்
அரசன் + வள்ளல் = அரசவள்ளல்
ஆசிவகன் + பள்ளி = ஆசீவகப்பள்ளி
குமரன் + கோட்டம் = { குமரகோட்டம், குமரக்கோட்டம் }
} என இருவழியும் உயர்திணையுள் சிலதமக்கேற்றவிகாரமாயின. ¶ பிறவுமன்ன.

கசுo. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலியியல்பே.

இது வினா, விளிப்பெயர்களுக்கு புணர்ச்சி உணர்த்துகின்றது.

ப-ரை- ஈற்று (வினாமுன்) - ஆ ஏ ஓ என்கின்ற மூன்றீற்று வினாமுன்னும், யா வினா (முன்) - யாவினாமுன்னும், விளி பெயர் முன்-உயிரீறும் மெய்யீறும் ஆகிய விளிப்பெயர்முன்னும், வலி- வருகிற வல்லெழுத்துகள், இயல்பு - இயல்பாகும், எ-று.

பொ-ரை. மூன்றீற்றுவினா முன்னும், யா வென்னும் வினாப்பெயர் முன்னும், உயிரீறு ஒற்றீறு ஆய விளிப்பெயர்கள்முன்னும் வரும் வல்லினம் இயல்பாம். எ-று.

[உ-ம்.]

நம்பியா + { கொண்டான், சென்றான், தந்தான், போயினான் } = { நம்பியாகொண்டான், சென்றான், தந்தான், போயினான் }
உண்கா + { கொற்றா, சாத்தா, தேவா, பூதா } = { உண்காகொற்றா, சாத்தா, தேவா, பூதா }
யா + { குறிய, சிறிய, தீய, பெரிய } = { யாகுறிய, சிறிய, தீய, பெரிய }
} என வினாமுன் வல்லினம் இயல்பாயின.

நம்பி, விடலை } + கேள், செல், தா, போ = { நம்பிகேள், செல், தா, போ &c. &c. } என உயர்திணைப் பெயரின் அண்மைவிளி முன்னும்,

கிள்ளை } + ஷ = { கிள்ளைகேள், செல், தா, போ } என அஃறிணைப் பெயரின் அண்மைவிளி முன்னும்,

---

¶ இனி ஒப்பின்முடித்தலால் உயர்திணைப் பெயர்ச்சொல் இறுதிகள் போல உயர்திணை வினைச்சொல் இறுதிகளும் வலிவரின் இயல்பாம் எனக் கொள்க. அவை வருமாறு - உண்டான்குமரன், உண்டாள்குமரி, உண்டார்குமரர், ஒருபுலவர் எனவரும். பிறவும் இவ்வாறு காண்க என்பர்.— இராமாநுசகவிராயர்.

சாத்தி, தாய்	+	கொள், செல், தா, போ	=	சாத்திகோள் செல், தா, போ, &c. &c.	எனப் பொதுப் பெயரின் அண்மைவிளி முன்னும்,
நம்பீ, விடலாய்	+	ஷ	=	நம்பீகோள் செல், தா, போ, &c. &c.	என உயர்திணைப் பெயரின் சேய்மை விளி முன்னும்,
கிள்ளாய்	+	ஷ	=	கிள்ளைகோள் செல், தா, போ,	என அஃறிணைப் பெயரின் சேய்மை விளி முன்னும்,
சாத்தீ, தாயே	+	ஷ	=	சாத்தீகோள் செல், தா, போ &c. &c.	எனப் பொதுப்பெயரின் சேய்மைவிளி முன்னும்

வரும் வல்லினம் இயல்பாயின. பிறவுமன்ன.

இறுதி ஏகார ஓகார விளிமுன் வரும் வல்லினம் இயல்பாதற்கு உதாரணம் காட்டிற்றிலம், அவ்விரண்டற்கும் மேல்சிறப்புவிதி இடைச்சொல் லேயோ என்னுஞ் சூத்திரத்துள் அடக்கிக்கூறுதலின்.

கசுக. ஆவி யாழ விறுதிமுன் னிலைவினை - யேவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

இது முன்னிலை ஏவல்வினைகளுக்குப் புணர்ச்சி உணர்த்துகின்றது.

ப-னி. ஆவி-உயிரையும், ய ர ழ - ய ர ழ என்கின்ற மூன்று மெய்களையும், இறுதி - இறுதியாகவுடைய, முன்னிலை வினை-முன்னிலைவினைமுன்னும், ஏவல் முன் - ஏவல் வினைமுன்னும் - வல்லினம் - வருகிற க ச த ப க்கள், இயல்பொடு - இயல்புடனே, விகற்பு - விகற்பமாம், எ-று.

பொ-ளா. உயிரையும், ய ர ழ என்னும் மூன்று ஒற்றையும், இறுதியாகவுடைய விகுதியுருபினவாய முன்னிலைவினைமுன்னும், ஏவல் முன்னும் வரும் வல்லினம் இயல்புடனே விகற்பமாம். எ-று.

[உ-ம்.]

உண்டி, உண்டனை, உண்டாய், தின்றி, தின்றனை, தின்றாய்	+	கொற்றா, சாத்தா, பூதா, தேவா	=	உண்டிகொற்றா, சாத்தா, பூதா, தேவா, &c. &c. தின்றிகொற்றா, சாத்தா, பூதா, தேவா, &c. &c.

உண்டனிர், நின்றனிர் } + { கொற்றரோ, சாத்தரோ, பூதரோ, தேவரோ = { உண்டனிர்கொற்றரோ, சாத்தரோ, &c. &c. நின்றனிர்கொற்றரோ, சாத்தரோ, &c. &c.

என முன்னிலை வினைமுன் இயல்பாயின.

கொணு, எறி, விடு, ஆய், சேர், தாழ் } + { கொற்றா, சாத்தா, தேவா, பூதா = { கொணு கொற்றா, சாத்தா, தேவா, பூதா &c. &c.

என ஏவல்முன் இயல்பாயின. விகற்பம் வந்தவழிக் கண்டுகொள்க.

நட + கொற்றா = நடக்கொற்றா, ஈர் + கொற்றா = ஈர்க்கொற்றா, எய் + கொற்றா = எய்க்கொற்றா, தாழ் + கொற்றா = தாழ்க்கொற்றா

என ஏவல்முன் விகற்பித்தனவென்று கோடலு மொன்று.

இவ்வாறு அருகிவருதலின் இயல்போடுவிகற்பே என விகற்பத்தைப் பிரித்துக்கூறினார். ழகர வீறு முன்னிலைவினை ஏலாமையின் உதாரணம் காட்டிற்றிலம். முன்னிலைவினை என்றார் ஏவலென விதந்தது என்னையெனின், முன்னிலைவினை யென்பது தன்மைவினை, படர்க்கைவினைகட்கு இனமாகிய முன்னிலைவினையை உணர்த்தும் அல்லது இனமின்றிமுன்னிலை யொன்றற்கே உரிய ஏவல் வினையை யுணர்த்தாமையி னென்க.

கசூஉ. இ ஈ ஐ வழி யவ்வுமேனை யுயிர்வழிவவ்வு மேமுனிவ் விருமையு - முயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

இது உயிரீற்றுப் பதம்புணரும்சிறப்புப்புணர்ச்சி கூறுவான்தொடங்கி உயிரீற்றின்முன் உயிர்முதல்வந்து புணருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. இ ஈ ஐ வழி - இகர ஈகார ஐகாரங்களின் முன்னே, யவ்வும் - யகரமும், ஏனை உயிர்வழி - அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்கின்ற இவ்வேழுயிர்களின் முன்னே, வவ்வும் - வகரமும், ஏ முன் - ஏகாரத்தின் முன்னே, இ இருமையும் - யகரமும் வகரமும், உயிர் வரின் - உயிர் முதன் மொழிவந்தால், உடம்படு மெய் என்று ஆகும் - உடம்படு மெய்யென்று வரப்பெறும். எ-று.

பொ-ரை. § இகர ஈகார ஐகாரங்களின் வழியே யகரமும், அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வேழுயிர்களின்வழியே வகரமும், ஏகாரத்தின்வழியே

---

§ 'உடம்படுமெய்யி னுருபுகொளல் வரையார்' என ஆசிரியர் தொல்காப்பியர் பொதுப்பட வோதினாரேனும், உயிர்களை உடம்படுத்தற்குரியன இடப்பிறவியான் அவ் வுயிரோடொத்த இடையெழுத்தென்பதூஉம், அவற்றுள்ளும் மொழிமுதற்கண் வருவன யகரவகரங்களேயாகலின் அவையே யின்டைக்கு வரப்பெறு மென்பதூஉந் தாமே விளங்கும் என்பர்,—சிவஞான முனிவர்.

யகாரமும், வகாரமும் உயிர்முதன் மொழிவந்தால் உடம்படு மெய்யென்று வரும். எ-று.

வி-பு. இருமை என்பது † "ஒருமைச் செயலாற்றும் பேதை யெழு மையுந்-தான்புக் கழுந்து மளறு." என்றாற்போலக் குணியைக் குணமாகக் கூறுவதோர் மரபு வழுவமைதி.

[உ - ம்.]

மணி	+ அழகிது	= மணியழகிது,	கடு	+ அழகிது =	கடுவழகிது,
தீ	+ எழுந்தது	= தீயெழுந்தது,	பூ	+ அழகிது =	பூவழகிது,
அவை	+ ஒள்ளியம்	= அவையேளளியம்,	நொ	+ அழகா	= நொவழகா
விள	+ அழகிது	= விளவழகிது,	சோ	+ அழகிது	= சோவழகிது,
பலா	+ அழகிது	= பலாவழகிது,	கௌ	+ அழகிது	= கௌவழகிது,

‡ "ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார்." [ஏ+ஏ=ஏயே]; சே+அழகிது=சேவழகிது என அல்வழிக்கண் கூறிய முறையே உடம்படு மெய்பெற்றன.

மணி + ஒளி = மணியொளி,
விள + அடி = விளவடி,
மணியை + அடித்தான் = மணியையடித்தான்
} என வேற்றுமைக்கண், உடம்படுமெய் பெற்றன,

மா + இருஞாலம் = மாயிருஞாலம் என் உரிச்சொல் ஆகாரவீற்றின் வழி யகர உடம்படு மெய்வந்த தென்னையெனின், அஃது § "இடையுரி வடசொலினியம்பிய கொளாதவும்" என்னும் சூத்திரத்தா னமையுமென்க.

வினைவந்துக்கோட்டும் என மெய்யீற்றின் வழியும் உயிர்வரினுடம்படு மெய் பெறுமென்பாரு முளராலோ வெனின், உயிரீற்றின் முன் உயிர்முதல் வரின் உயிரோடு உயிர்க்குமயக்கமின்மையின் புணர்ச்சியின்றி விட்டிசைத்து நிற்குமாதலின், உடம்படாத அவ்விரண்டும் உடம்படுதற் பொருட்டு இடை யேவரும் மெய்யை உடம்படு மெய்யென்ப ஆகலின், அங்ஙனம் உயிரேறி ஒற் றுமைப்பட்டு புணர்தற்குரிய மெய்யீற்றின் வழித் தோன்றும் மெய்யை உடம்படு மெய்யென்பது பொருந்தாது. அவ் வகரமெய் தோன்றுதற்கு விதி வருஞ்சூத்திரத்துட் கூறுப.

உடன்படல் என்பது உடம்படல் எனமரீஇயிற்று. †† "உடம்பாடிலாத வர்வாழ்க்கை" என வருதல் காண்க. உயிரோடு உயிர்க்கு மயக்கமின்மையின்

---

† திருக்குறள், செ. அசரு.

‡ சிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், செ. கசுo.

§ நன்னூல், சூ. உசுக.

†† திருக்குறள், செ. அகூo.

வருமுயிர்க்கு உடம்பாக அடுக்கும் மெய் உடம்படு மெய்யெனப் பொருள் கூறுதலு மொன்று. இவ் வுடம்படுமெய்களின் தோற்றம் ஏனைத்தோன்றல் விகாரம்போலாது மயங்காதன மயக்குதற்கு ஆகுபோல வந்தமையின், இப் புணர்ச்சியை இயல்புப் புணர்ச்சி யென்றுகூறுவார் கூற்றும் அமையுமென் பார் உடம்படுமெய்தோன்றும் என்னாது உடம்படுமெய்யென்றதும் என் றுர். ஈண்டும் எகர ஈறு ஒழியக்கொள்க.

கசூஈ. எகா வினாமுச்சுட்டின் முன்ன - ருயிரும் யகாமு மெய்தின் வவ்வும் - பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு - நீளின் யகாமுந் தோன் றுதனெறியே.

இது இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரத்தானும், எண்மூ வெழுத்தீற்று என்னும் சூத்திரத்தானும் எய்தியவிதி விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. எகர வினா (முன்னர்) எகர்வினா விடைச்சொல்லின் முன்னும், மூச்சுட்டின் முன்னர் - மூன்று சுட்டிடைச் சொல்லின் முன்னும்; உயிரும் - உயிரும், யகரமும்-யகரமும், எய்தின் - வந் தால், வவ்வும்-வகரமும், பிற - யகரமொழிந்த மெய்கள், வரின் - வந்தால், அவையும் - அவ்வந்த மெய்களும், தூக்கில் - செய்யுளி டத்து, சுட்டு- சுட்டுகள், நீளின் - நீண்டுவருமிடத்து, யகரமும்- யகரமும், தோன்றுதல் - மிகுதல், நெறி - முறையாம். எ-று.

பொ-ரை. எ என்னும் வினாவிடைச் சொல்முன்னும், அ இ உ என்னும் மூன்று சுட்டிடைச்சொல் முன்னும் உயிரும் யகரமும் வந்தால் வகர மும், ஒழிந்தமெய்கள் வந்தால் அம் மெய்களும், செய்யுட்கண் சுட்டு நீண்டி சைத்தவழி யகரமும் மிகுதல் முறையாம். எ-று.

[உ-ம்.] எ + அணி = எவ்வணி, இ + அணி = இவ்வணி,
யானை = எவ்யானை, யானை = இவ்யானை,
அ + அணி = அவ்வணி, உ + அணி = உவ்வணி,
யானை = அவ்யானை யானை = உவ்யானை

அ, இ, உ } + { குதிரை, சேனை, தண்டு, படை, ஞாலம், நாடு, மனை, வளை = { அக்குதிரை, அச்சேனை, &c. இக்குதிரை, இச்சேனை, &c. உக்குதிரை, உச்சேனை, &c. (எ-ம்.)

எ + ஙனம் = எங்ஙனம், இ + ஙனம் = இங்ஙனம்,
அ + ஙனம் = அங்ஙனம், உ + ஙனம் = உங்ஙனம் (எ-ம்.)

* "ஆயிடைத்தமிழ் கூறுநல் லுலகத்து." [அ+இடை =ஆயிடை] (எ-ம்) வகரமும், வந்தமெய்களும், யகரமும் முறையே தோன்றியவாறு காண்க. பிறவுமன்ன.

யகரமு மெய்தின் வவ்வும் என்றமையின் இங்ஙனந் தோன்றிய வகர யகரங்கள் உடம்படு மெய்யல்ல வென்பதூஉம், சுட்டுநீளின் எனவே நீடல் உடன்பாடு என்பதூஉம், நீடல் ஒருதலை யன்று என்பதூஉம், யகரந்தோன்றும் எனவே இந்நீட்சி அடிதொடைநோக்கி நீட்டும்வழி நீட்டல் அன்றென்பதூஉம், யகரமும் என எண்ணின்கணின்ற இழிவு சிறப்பும்மையான் யகரத்தோற்றம் உயிர்வரும்வழி யன்றி பிறவழித்தோன்றாது என்பதூஉம், நெறி என்றமையின் இவ்வாறு நெறிப்பட வருவன வெல்லாங் கோடல்வேண்டும் என்பதூஉம் பெற்றாம்.

[வ-று.] ஆ+வயினை=ஆவயினை எனச் சுட்டு நீண்டு பிறவழி யகரந் தோன்றாதாயிற்று.

ஆ +ஙனம் = ஆங்ஙனம்,
ஈ +ஙனம் = ஈங்ஙனம்,
ஊ+ஙனம் =ஊங்ஙனம்

எனச் சுட்டு நீண்டவழியும் வருமொழி ஙகர மிகுந்தது.

யா+ஙனம் = யாங்ஙனம் என யாவினாமுன்வருமொழி ஙகர மிகுந்தது.

ஈது (எ-ம்); ஆங்கு, ஈங்கு, ஊங்கு (எ-ம்); ஆண்டு ஈண்டு (எ-ம்) சுட்டுப்பெயர்ச்சொல் நீண்டன.

விளைவத்துக்கோட்கும் (எ-ம்), செல்வுழிச்செல்க (எ-ம்), சார்வுழிச்சார்ந்ததகையள் (எ-ம்) மெய்யீற்றுமுன் உயிர்வருங்கால் இங்ஙனம் உடம்படுமெய்யன்று எனக் கூறும் வகரந்தோன்றின. பிறவுமன்ன.

கசுச. உயிர்வரி னுக்குறள் மெய்விட் டோடும் - யவ்வரி னியவா முற்றுமற் றேரோவழி.

இது குற்றிய லுகரத்திற்கு இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரத்தாள் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும், முற்றியலுகரத்திற்கு அச்சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. உ குறள் - குற்றிய லுகரமானது, உயிர்-உயிர்முதன் மொழி, வரின் - வந்தால், மெய் விட்டு - தனக்கிடமாகிய மெய்யை விட்டு, ஓடும் - கெடும், யு - யகர முதன்மொழி, வரின் - வந்தால்,

* தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம்.

இ ஆம் - அது இகரமாகத்திரியும், முற்றும் - முற்றியலுகரமும் அற்று - அவ் விருவிதியும் பெறும், ஓரோ வழி ஒவ்வோரிடத்து.

போ-ரி. குற்றியலுகரம் உயிர்முதன் மொழிவந்தால் தனக்காதாரமான மெய்யிற்க தான்கெடும்; யகர முதன்மொழிவந்தால் இகரமாகத் திரியும்; முற்றிய லுகரமும் அவ்விருவிதியும்பெறும் ஓரோவிடங்களின். எ-று.

[உ-ம்.]

நாகு + அரிது	= நாகரிது	} என அல்வழியிலும்,
நாகு + இன்வளர்ச்சி	= நாகின்வளர்ச்சி,	} எனவேற்றுமையிலும்
தனது + அடி	= தனதடி	

குற்றியலுகரம் உயிர்முதன் மொழிவரக் கெட்டது.

நாகு + யாது	= நாகியாது	} என அல்வழியிலும்,
நாகு + யமன் கொள்ளான்	= நாகியமன் கோள்ளான்	} எனவேற்றுமையிலும்

குற்றியலுகரம் யகரமுதன்மொழிவர இகரமாகத் திரிந்தது.

கதவு + அழகிது	= கதவழகிது,	} என அல்வழியிலும்,
செலவு + அழகிது	= செலவழகிது	
அது + ஐ	= அதனை	} எனவேற்றுமையிலும்

முற்றியலுகரம் உயிர்முதன்மொழிவரக்கெட்டது.

கதவு + யாது	= கதவியாது	} என அல்வழியில்

முற்றியலுகரம் யகரமுதன்மொழிவர இகரமாகத் திரிந்தது. பிறவுமன்ன.

கேடும் என்னாது ஓடும் என்றமையால் குற்றியலுகரம் ஒரோவழி இன் ஐ முதலிய என்னும் பொதுவிதி பெறுதலும் கொள்க.

[வ-று.] ‡ "தன்முகமாகத் தானழைப்பதுவே" (எ-ம்), ‡‡ "ஆறன்றொருமைக் கதுவு மாதுவும்." (எ-ம்.) வரும்.

ஆசிரியர் தொல்காப்பியர் "* அவற்றுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடுநிலையல்." (எ-ம்), ** "குற்றியலுகரமு மற்றென மொழிப."(எ-ம்) கூறிய சூத்திரங்களுள் அற்று என்னும் மாட்டேற்றிற்கு மெய்யீறுபோலக்

---

‡ நன்னூல், சூ. ௩௦௩. ‡‡ நன்னூல், சூ. ௩௦௦.

* தொல்காப்பியம், எழு. புணரியல், சூ. ௨.

** ௸, ௸ சூ. ௩.

றற்றியலுகரவீறும் புள்ளியொடு நிற்குமெனப் பொருள்கொள்ளாது இம்மூன்ருஞ் சூத்திரத்தை * "புள்ளியீற்றுமு னுயிர்தனித்தியலாது, மெய்யொடுஞ்சிவணுமவ்வியல் கெடுத்தே." என்னும் முப்பத்தாருஞ் சூத்திரத்தோடு மாட்டெறிந்ததாகக் குற்றியலுகரமும் புள்ளியீறுபோல வுயிரேற இடங்கொடுத்துக் கெடாது இரண்டுயிரும் ஒருங்கு நிற்கும் எனக் கூறிச் சாதிப்பாருமுளர். அவ்வாறு கூறல் மாட்டேற்று இலக்கணமன்ரும். அன்றியும் மெய்யுயி ரென்பன ஐவமவாதுபெயராய் வந்த காரணக்குறி அல்லவாகவேண்டும் அதனல் அஃது அந் நூலாசிரியர் கருத்தன்ரும். இவ்வாறு அந் நூலோடு பொருந்தா உரைக்கோள் பலவுள, அவற்றை அந் நூற்கருத்தாகத் துணிந்து அந் நூலோடு இந் நூலை மறுதலைப்பட்டதென்று கோடற்க.

கசுடு. இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் - க ச த ப மிகும் வித வாதன மன்னே.

இது உயிரீற்றின்முன் வல்லினம் புணருமாறு உணர்த்துவான் தொடங்கி உயர்திணைப் பெயர் பொதுப்பெயர்க்கு ஆவியரமுன் வன்மைமிகா என எய்தியதன்மேற் சிறப்புவிதியும், அஃறிணைப் பெயர்க்கும் வினைமுதலியவற்றிற்கும் எய்தாத தெய்துவித்தலும் உணர்த்துகின்றது.

டடை. இயல்பினும் - இயல்பினலும், விதியினும் - விதியினலும், நின்ற - இறுதியாக நின்ற, உயிர்முன் - உயிர்களின்முன், க ச த ப - வருகிற க ச த ப க்கள், மிகும் மன் - பெரும்பாலுமிகும், விதவாதன - சிறப்புவிதியிற் சொல்லாதவைகள். எ - று.

பொ-ரை. இயல்பினனும் ¶ விதியினனும் இறுதியாகநின்ற உயிர்களின் முன்னர் வரும் க ச த ப க்கள் பெரும்பாலு மிகும் விதந்துசொல்லாதன. எ-று.

வி-பு. விதியீருவன முன்னைய உயிரீறும் மெய்யீறும் ஒழியுவுயிரீருய் நிற்பனவும், யாதானும் ஒருயிர்பின்னர் இறுதிக்கண் தோன்றி நிற்பனவுமாம். விதப்பு ஆவன சிறப்புவிதி.

[உ-ம்.]

ஆடூஉ	+	கொற்றன், சிறியன், தீயன், பெரியன்	=	ஆடூஉக்குறியன், ச்சிறியன், த்தீயன், ப்பேரியன்,

* தொல்காப்பியம், எழு. புணரியல், சூ. ௩௬.

¶ மன் என்பது மிகுதிப்பொருள் குறித்த இடைச்சொல்லாதலால் பெரும்பாலுமெனப் பொருளுரைக்கப்பட்டது என்பர் - இராமாநுசகவிராயர்.

தம்பி	+	கொற்றன்	=	தம்பிக்கோற்றன்,
சாத்தி	+	பெண்	=	சாத்திப்பேண்,
தாரா	+	கடிது	=	தாராக்கடிது

என இயல்பீற்று மூவகைப் பெயர்ப்பதமுன் அல்வழியில் வன்மை மிக்கன.

ஒற்றை	+	கை	=	ஒற்றைக்கை,
வட்ட	+	கல்	=	வட்டக்கல்,
தாழ	+	கோல்	=	தாழக்கோல்

என விதியீற்றின்முன் அல்வழியில் வன்மை மிக்கன.

ஆடூஉ	+	கை, செவி, தலை, புறம்	=	ஆடூஉக்கை, ச்செவி. த்தலை, ப்புறம்,
‡ எட்டி, காவிதி, நம்பி	+	பூ	=	எட்டிப்பூ, காவிதிப்பூ, நம்பிப்பூ

என இயல்பீற்று உயர்திணை அஃறிணைப் பெயர்ப்பதமுன் வேற்றுமையில் வன்மைமிக்கன.

விள	+	கோடு	=	விளக்கோடு,
கடு	+	காய்	=	கடுக்காய்,
ஆடு	+	கால்	=	ஆட்டுக்கால்

என் விதியீற்றின்முன் வேற்றுமையில் வன்மை மிக்கன.-

ஆடி	+	கொண்டான்	=	ஆடிக்கோண்டான்,
ஆடா	+	கொண்டான்	=	ஆடாக்கோண்டான்,
ஆடே	+	கொண்டான்	=	ஆடேக்கோண்டான்,
ஆடென	+	கொண்டான்	=	ஆடெனக்கோண்டான்,
ஆட	+	கொண்டான்	=	ஆடக்கோண்டான்

எனப் பல்வகைத்தெரிநிலை வினையெச்சங்கள்முன் வன்மைமிக்கன.

உண், பாக்கு	+	சென்றான்	=	உண்பாக்குச்சென்றான்,
பூத்து	+	காய்த்தது	=	பூத்துக்காய்த்தது,

---

‡ எட்டி, காவிதி என்பனவற்றை தேயவழக்காகிய சிறப்புப்பெய ரொன்பர்.—நச்சினார்க்கினியர்.

பொள்ளென + பரந்தது = பொள்ளெனப்பரந்தது,
இருளின்றி + கண்டார் = இருளின்றிக்கண்டார்,
பொருளின்றி + காணர் = பொருளின்றிக்காணர்

எனக் குறிப்புவினை யெச்சங்கள்முன் வன்மை மிக்கன.

மற்றை + சாதி = மற்றைச்சாதி,
கடி + கமலம் = கடிக்கமலம்,
சொன்றி + குழிசி = சொன்றிக்குழிசி,
கங்கை + சடை = கங்கைச்சடை

என முறையே இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல், வடசொல் முன் வன்மை மிக்கன. பிறவுமன்ன.

விதவாதன பெரும்பாலும் மிகுமெனவே விதந்தன சிறுபான்மை மிகுமெனவும், விதவாதன சிறுபான்மை மிகாவெனவும் கூறினாராயிற்று.

[வ-று.]

நொ, து + கொற்றா, சாத்தா, தேவா, பூதா = நொக்கொற்றா, ச்சாத்தா, த்தேவா, ப்பூதா, துக்கொற்றா, ச்சாத்தா, த்தேவா, ப்பூதா என்பன

ஏவல்முன் வல்லினம் இயல்பொடுவிகற்பே என்று முற்கூறிய விதப்புவிதி பெறாது மிகுந்தன.

எனவே நொ, து முன் மூவினமும் மிகும் என்றாராயிற்று.

ஏரிகரை, குழந்தைகை, குழவிகை, ‡ பழமுதிர்சோலை மலைகிழவோனே (எ-ம்.); கூப்புகாம், ஈட்டுதனம், நாட்டுபுகழ் (எ-ம்) இருவழியும் பின்விதவாதன மிகாவாயின. பிறவுமன்ன.

கசுகூ. மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே.

இது உயிரீற்று சிலமரப்பெயர்முன் வரும் வல்லெழுத்திற்கு எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிதுவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. மரம் பெயர் முன்னர்-உயிரீற்று மரப்பெயர்களுக்கு முன், இனம் மெல் எழுத்து வர - முன்சொன்ன பொதுவிதியால் வருகிற வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்து மிக, பெறுவனவும்-பெறுவனவும் உள - சிலவுளவாம், வேற்றுமைவழி - வேற்றுமை வழியில். எ-று.

---

‡ திருமுருகாற்றுப்படை.

போ-ளா. உயிரீற்று மரப்பெயர்கள் முன் மேலைப் பொதுவிதியான் வல்லெழுத்து மிகாது, வரும் வல்லெழுத்திற்கு இனமான மெல்லெழுத்து மிகப் பெறுவனவும் சிலவுள வேற்றுமைக்கண். எ-று.

வி-பு. பெறுவன என்னுஞ் சொல் பெறுன எனத் தொகுத்தல் விகாரமாயிற்று.

[உ-ம்.]

விள, களா, மா	+	காய், கனி, கொம்பு, செதிள், தோல், பழம்	=	விளங்காய், ஞ்செதிள், ந்தோல், ம்பழம் களங்கனி, ஞ்செதிள், ந்தோல், ம்பழம், மாங்கொம்பு, ஞ்செதிள், ந்தோல், ம்பழம்

என உயிரீற்று சிலமரப்பெயர்முன் வன்மைவர இனமெல்லெழுத்து மிக்கன. ¶ பிறவுமன்ன.

இனமெல்லெழுத்தும் என்றமையின் பொதுவிதி இக்காட்டு எலா என்க.

கசுஎ. செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப் - பெயரி னெச்சமுற் றாறனுருபே - யஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

இது உயிரீறுகட்குத் தனித்தனி சிறப்புவிதி கூறுவான் தொடங்கி அகர வீற்றுச் சொல்லுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கல் நுதலுகின்றது.

ப-ரை. செய்யிய என்னும் வினையெச்சம் - செய்யிய என்னும் வினையெச்ச வினையும், பல் வகை பெயரின் எச்சம் பலவகைப் பட்ட பெயரெச்ச வினையும், (பல்வகை) முற்று - பலவகைப் பட்ட முற்றுவினையும், ஆறன் உருபு - ஆறாம்வேற்றுமை அகர உருபும், அஃறிணை பன்மை - அஃறிணைப் பன்மைப் பெயரும், அம்ம-அம்ம என்கின்ற உரையசை இடைச்சொல்லும், முன்-ஆகிய அகரவீற்றுச் சொற்கள் ஆறன்முன்னும், இயல்பு - வல்லெழுத்துகள் இயல்பாம். எ-று.

போ-ளா. இங்ஙனம் விதந்த அகரவீற்றுச் சொற்கள் ஆறன்முன்னும் வரும் வல்லினம் இயல்பாம். எ-று.

¶ இனி யாங்கோடு, யாக்கோடு; காயாங்கோடு, காயாக்கோடு; உகாங்கோடு, உகாக்கோடு;— செதிள், தோல், பூ என மெல்லெழுத்தும் வல்லெழுத்தும் பெற்று விகற்பித்துவருதல் உரையிற் கொள்க என்பர்.— இராமாநுசகவிராயர்.

வி-பு. பல்வகை என்பதனை முற்று என்பதனேடும் ஒட்டுக. பெய ரெனெச்சம் என இன்சாரியை தவிர்வழி வந்தமையின் விரித்தல் விகாரம். இதன் முதல் இறுதிகளின் அகரவீற்றுச்சொல் வைத்தமையான் இடையன் வும் அகரவீற்றென்பதூஉம், பல்வகை என்றதனன் வினையடி நான்கினும் பிறந்த பெயரெச்சம் முற்று என்பதூஉம், முற்று என விதந்தமையின் அஃறிணைப்பன்மை என்றது பெயரென்பதூஉம் பெற்ரும். ‡ வினையடி நான்காவன இயல்பாகிய வினையடி ஒன்றும், ஏனைப் பெயர் இடை உரியடியாகப், பிறந்தவினையடி மூன்றுமாம்.

[உ-ம்.]

உண்ணிய	+	கொண்டான், சென்ருன், தந்தான், போயினன்	=	உண்ணியகொண்டான், சென்றன், தந்தான், போயினன்

எனச் செய்யிய என்னும் வினையெச்சமுன்னும்,

உண்ட, உண்ணுகின்ற, உண்ணுத	+	குதிரை, செந்நாய், தகர், பன்றி	=	உண்டகுதிரை, செந்நாய், தகர், பன்றி, &c. &c.

என இயல்பாய வினையடித் தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன்னும்,

கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய	+	ஷை	=	கடைக்கணித்தகுதிரை, செந்நாய், தகர், பன்றி, &c. &c.

எனப் பெயர்வினையடித் தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன்னும்,

திண்ணென்ற, பொன்போன்ற	+	ஷை	=	திண்ணென்றகுதிரை, செந்நாய், தகர், பன்றி &c. &c.

என இடைவினையடித் தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன்னும்,

சான்ற, உற்ற	+	ஷை	=	சான்றகுதிரை, செந்நாய், தகர், பன்றி &c. &c.

என உரிவினையடித் தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன்னும்,

அமர்முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, இல, பல, சில	+	ஷை	=	அமர்முகத்தகுதிரை, செந்நாய், தகர், பன்றி, &c. &c.

எனப் பெயர்வினையடிக் குறிப்புப் பெயரெச்சத்தின் முன்னும்,

---

‡ இலக்கணக்கொத்து, வினையியல், சூ. ச.

பொன்னன்ன } + ஷ்டி = { பொன்னவன்ன குதிரை, செந்நாய், தகர், பன்றி

என இடைவினையடிக் குறிப்புவினை யெச்சத்தின் முன்னும்,

கடிய } + ஷ்டி = { கடியகுதிரை, செந்நாய், தகர், பன்றி

என உரிவினையடிக் குறிப்பு வினையெச்சத்தின் முன்னும் இயல்பாயின.

முற்றிற்கும் பொருள் வேறுபாடன்றி சொல் வேறுபாடின்மையின் இவையே காட்டாகக் கொள்க.

வாழ்க, வாழிய } + { கொற்றா, சாத்தா, தேவா, பூதா } = { வாழ்ககோற்ற, சாத்தா, தேவா, பூதா &c. &c.

என வியங்கோள் முற்றின்முன் இயல்பாயின.

முற்றுமுன் இயல்பாம் என்றமையின் அருத்தாபத்தியான் இவ்வினை முற்று வினையெச்சமாயும், குறிப்புமுற்று ஈறொச்சமாயும் நின்றவழி வரும் வல்லினம் இயல்பாதலுங் கொள்க.

[வ - று.]

உண்ட + கண்டன = { உண்டகண்டன } என வினைமுற்று வினையெச்சமாய தன்முன்னும்,

அமர்முகத்த + குதிரை = { அமர்முகத்த குதிரை, } எனக் குறிப்புமுற்று பெயரொச்சமாயதன் முன்னும்,

அமர்முகத்த + கலக்கின் = { அமர்முகத்த கலக்கின } எனக் குறிப்புமுற்று வினையெச்ச மாய தன் முன்னும்,

தன + { கைகள், செவிகள், தாள்கள், பதங்கள் } = { தனகைகள், செவிகள், தாள்கள், பதங்கள் } என ஆறனுருபின் முன்னும்,

பல + { குதிரை, செந்நாய், தகர், பன்றி } = { பலகுதிரை, செந்நாய், தகர், பன்றி } என அல்வழியில் அஃறிணைப் பன்மைப் பெயர் முன்னும்,

பல + {கொடுத்தான் / செய்தான் / தந்தான் / படைத்தான்} = {பலகோடுத்தான், / சேய்தான், / தந்தான், / படைத்தான்} எனவேற்றுமையில் அஃறிணைப் பன்மைப் பெயர் முன்னும்

வரும்வல்லினம் இயல்பாயின. பிற பெயர்களும் அன்ன.

¶ அம்ம + {கொற்றா, / சாத்தா, / தேவா, / பூதா} = {அம்மகோற்ற, / சாத்தா, / தேவா, / பூதா} என உரையசை இடைச்சொல்முன் வரும் வல்லினம் இயல்பாயின.

ஒரு சொல்லையே பலவிடத்துங் காட்டியது என்னையெனின், இங்ஙனங் காட்டியவற்றுள் பல என்னும் ஒருசொல் பெயரொச்சக் குறிப்பாயும், குறிப்புவினை முற்றாயும், குறிப்புமுற்று ஈரொச்சமாகும் பெயரொச்சக் குறிப்பாயும் வினையெச்சக் குறிப்பாயும், குறிப்புவினையாலணையும் அஃறிணைப் பன்மைப் பெயராயும், பொருளாதி ஆறனுள் பண்புகாரணமாகவரும் அஃறிணைப் பன்மைப் பெயராயும் அறுவகைப்பட்டு, பொருள்நோக்க முதலியவற்றான் இன்னதென்று துணியப்படுமாதலா னென்க. பிறசொற்களும் அன்ன. இவ்விகற்பமெல்லாம் சொல்லதிகாரத்துள் காண்க.

கசுஅ. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய் - யேகலு முரித்தஃ தேகினு மியல்பே.

இது வியங்கோள் முற்றுச்சொற்கு எய்தாததெய்துவித்தலும், எய்தியவழிப் புணரும் வல்லினத்திற்கு எய்திய திரிபுபடாமற் காத்தலும் உணர்த்துகின்றது.

ப - ரை. வாழிய என்பதன் - வாழிய என்னும் வியங்கோள் முற்றினுடைய, ஈற்றின் - இறுதியிலுள்ள, உயிர்மெய் - யகரவுயிர் மெய்யானது, ஏகலும் - குறைதலும், உரித்து - உரித்தாகும், அஃது - அவ்வுயிர்மெய்யானது, ஏகினும் - குறைந்து இகரவீறாய் நின்றாலும், இயல்பே - வல்லினம் பொதுவிதியினாலே மிகாமற் சிறப்புவிதியிற் கூறிய இயல்பேயாம். எ - று.

போ-ரை. வாழிய என்னும் வியங்கோள் முற்றினது ஈற்றுயிர் மெய் குறைதலும் உரித்து; குறைந்து இகரவீறாய் நின்றாலும் வல்லினம் பொது விதியால் மிகாது சிறப்புவிதியுள் கூறிய இயல்பேயாம். எ-று.

¶ இனி உரையிற் கோடலால் அம்ம என்னும் இடைச்சொல் அம்மா கோற்ற என நீளினும் வல்லெழுத்து இயல்பாதலும், குணகடல், குடகடல், வடகடல், வடதலை என விதி அகர ஈற்றுப் பெயர்ச்சொன்முன் இயல்பாதலுங் கொள்க என்பர்.—இராமாநுசகவிராயர்.

[உ-ம்.] ஆவாழி, அந்தணர்வாழி, படாஅதிவாழி என ஈற்றுயிர் மெய்குறைந்து வந்தது.

வாழி + {கொற்றா, சாத்தா, தேவா, பூதா} = {வாழிகொற்றா, சாத்தா; தேவா, பூதா} எனக் குறைந்தவழியும் வல்லினம் இயல்பாயின.

ஏகலுழரீத்து என முடித்து,பின்பு அஃது எனச்சுட்டி புணர்ச்சிவிதி கூறுதலானும், செய்யுளிறுதிக்கண் வாழி என முடிந்து நிற்றலானும் இது புணர்ச்சி விகாரமன்று கடைக்குறை என்பதூஉம், இவ்வடிப்பாடாகக்குறைந்த இயலுந்தன்மை செய்யிய என்னும் வாய்பாட்டு வாழிய என்னும் வினையெச்சத்திற் கின்மையின், வாழிய என்னும் வியங்கோள் முற்றிற்கே இவ்விகாரம் கூறினா ரென்பதூஉம் பெற்றாம்.

கசுசு. சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி.

இது சாவ என்னும் நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. சாவ என் மொழி-சாவ என்னுஞ் செயவெனெச்ச வினைச்சொல்லினுடைய, ஈற்று - இறுதியிலிருக்கின்ற, உயிர் மெய் - வகரவுயிர்மெய்யானது, சாதலும் - கெட்டுப் புணர்தலும், விதி - விதியாகும், எ - று.

பொ-ரை. சாவ என்னும் செயவெனெச்ச வினைச்சொல்லினது ஈற்றுயிர்மெய் கெட்டுப் புணர்தலும் விதியாம். எ-று.

[உ-ம்.] சாவ+குத்தினான்=சாக்குத்தினான் எனவரும்.

[வி-பு.] இப்புணர்ச்சி சாவக்குத்தினான் என்னும் புணர்ச்சிபோல் சிறந்ததன்மையின் சாதலும் என்றும், ஒரோவழி அருகிவருதலின் விதி என்றும் கூறினார்.

கஎ0. பலசில வெனுமிவை தம்முன் றம்வரி-னியல்பு மிகலு மகர மேக - லகாம் றகா மாகலும் பிறவரி—னகரம் விகற்ப மாகலு முளபிற.

இது வருமொழிக்குஎய்தியது இகந்துபடாமைக்காத்தலும்,அதன்மேற் சிறப்புவிதியும், நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும் உணர்த்துகின்றது. இதனுள் மிகுதல் செய்யிய என்னுஞ் சூத்திரத்தான் விலக்கி ஈண்டு விதித்தமையின் சிறப்புவிதியாயிற்று.

ப-ரை. பல சில எனும் இவை - பலசில என்கின்ற இவ்விரு சொல்லும், தம் முன் - தமக்குமுன்னே, தாம் வரின் - தாம்வரு

மீரயின, இயல்பும்-இயல்பாதலும், மிகலும் - மிகுதலும், அகரம் - அகரமானது; ஏக - கெட, ல்கரம்-லகரமானது, றகரம்ஆகலும் - றகரமாகத் திரிதலும், பிற - இவற்றின்முன், பிறமொழிகளுள் யாதாயினுமொன்று, வரின் - வந்தால், அகரம் - அகரமானது, விகற்பம் ஆகலும் - நிற்றலும் நீங்கலும், உள - உளவாம், எ-று.

பொ - ள். பல சில என்னும் இவ்விருசொல்லும் தம்முன்னர் தாம் வருமாயின் இயல்பாதலும், மிகுதலும்; அகரங்கெட ல்கரம் றகரமாகலும், இவற்றின்முன் பிறமொழிகளுள் யாதானு மொன்றுவரின் அகரம் நிற்றலும் நீங்கலு முளவாம். எ-று.

[உ-ம்.] பல+பல=பலபல, சில+சில=சிலசில என இயல்பாயின. பல+பல=பலப்பல, சில+சில=சிலச்சில என மிக்கன.

இம்மிகுதி இயல்புபோல் பயின்றுவாராமையின் வல்லினம் விகற்பமாகலும் என்னாது இயல்புமிகலும் என்றார்.

பல+பல=பற்பல, சில+சில=சிற்சில என அகரமேக லகரம் றகரமாயின.

பல, சில	+	கலை, சாலை, தாழிசை, படை, ஞானம், நாள், மணி, வளை, யானை, அணி, ஆயம், &c. &c.	=	பல்கலை, ல்சாலை, ஃறாழிசை, ல்படை, ஞ்ஞானம், ஞ்னாள், ஞ்மணி, ல்வளை, ல்யானை, ல்லணி, ல்லாயம் சில்கலை, ல்சாலை, ஃறாழிசை &c. &c.

எனப் பிறவரின் அகரம் விகற்பமாயின.

பிற என்ற மிகையானே, பல்பல, சில்சில என அகரமேக லகரம் றகரமாகாது அங்ஙிவருதலும், பிறவல்லின மொழிவரின் லகரம் றகரத்தோடு உறழும்வழி. உறழாது இயல்பாதலும், அகரவீற்றுப் புணர்ச்சியுள் அமையாது ஒழிந்தன உளவேல் அவையுங் கொள்க.

அகரம்நீங்கநின்ற பல்லாயமுதலியன நன்மை, வன்மை, மென்மை, அன்மை, இன்மை என்பனபோல லகர மெய்யீற்றுப் பண்படியாய்நின்று வருமொழியோடு புணர்ந்தன அன்றே அவற்றை அகரவீற்றினவாக வைத்துப் புணர்ந்தது என்னையெனின், அப்பண்படி பன்மை, சின்மை எனப் பகுதிப்பொருள் விகுதியோடேனும் பலர், பல, சிலர், சில என விகுதிப் பொருள் விகுதியோடேனும் அன்றி, தனித்துநில்லா ஒற்றுமை நயம் பற்றி யென்க.

இஃது ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல் என்னும் உத்திக்கினம்.

அகாம்விகற்பமாம் என்றதனையானே பல் சில் எனப்பண்படி தோ ன்றினமையின் இவ்விதி அல்வழிக்கே யென்பது கூறுதே யமையுமென்க.

கஎக. அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.

இது ஆகாரவீற்றுச் சொல்லுள் சிலவற்றிற்கு எய்திய தொருமருங்கு விலக்குதல் உணர்த்துகின்றது.

ப-ரை. அல்வழி - அல்வழியில், ஆ மா - ஆவுமாவுமாகியஇரு பெயரும், மியா - மியாவென்னும் முன்னிலை அசை இடைச்சொ ல்லும்; முற்று - ஆகாரவிற்று அஃறிணைப்பன்மை எதிர்மறை முற்றுவினையுமாகிய, முன்-இயற்பின்முன், மிகா-வருகிற வல்லி னம் இயல்பாகும், எ - று.

போ-ரை. அல்வழிக்கண் ஆவுமாவுமாகிய இருபெயரும், மியாவெ ன்னும் முன்னிலைஅசைஇடைச்சொல்லும், ஆகாரவீற்றுஅஃறிணைப்பன்மை எதிர்மறைமுற்றுவினையும் நிற்க இவற்றின்முன் வரும் வல்லினம் மிகா.

[உ - ம்.]				
ஆ, மா	+	குறிது, சிறிது, தீது, பெரிது	=	ஆதுறிது, சிறிது, &c. &c. மாதுறிது, சிறிது, &c. &c. (எ-ம்)
கேண்மியா	+	கொற்று, சாத்தா, தேவா, பூதா	=	கேண்மியாகோற்ற, சாத்தா, தேவா, பூதா (எ-ம்)
உண்ணு, தின்னு	+	குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள்	=	உண்ணுதுதிரைகள், &c. &c. தின்னுதுதிரைகள், &c. &c. (எ-ம்) வரும்.

இது ஆமா என்றதனையானே காட்டு ஆ எனவும் பொருள்தர இரட் டுற மொழிந்தமையான், ஆமா துறிது, சிறிது, தீது, பெரிது என மிகாமையும், முற்றுமுன் மிகா என்றமையான் அநுத்தாபுத்தியான் அவ் வினையாலணை யும் பெயர்முன் உண்ணுதுதிரைகள், தின்னுதுதிரைகள், செந்நாய்கள், தக ர்கள், பன்றிகள் என மிகாமையும், அவ் வினைமுற்று வினையெச்சமாய் அவ ற்றின்முன் உண்ணுகிடந்தன, தின்னுகிடந்தன, சென்றன, தந்தன, போ யின என மிகாமையும் கொள்க. உண்ணுந்துதிரைகள், உண்ணுக்கிடந்தன எனப் பொருவிதி பரன் மிகுமேல் எதிர்மறைப் பெயரெச்சமும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமுமாமென்க.

களஉ. குறியதன் கீழாக் குறுகலு மதனோ - டுகரமேற்றலு மியல்பு மாந் தூக்கின்.

இது ஆகாரவீற்றுள் சில சொல்லினது இறுதிக்கு எய்தாதன எய்துவித்தலும், அவ்வழி வருவதோர் ஐயமறுத்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. குறி அதன் கீழ் ஆ-குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம், குறுகலும் - அகரமாதலும், அதனோடு அவ்வகரமாதலுடனே, உகரம் ஏற்றலும் - உகரம்பெறுதலும், இயல்பும் - அவ்விரண்டும் இல்லாமல் இயல்பாதலும் ஆகிய மூன்றுவிதியும், ஆம் - ஆகும், தூக்கின் - பாட்டினிடத்து, எ - று.

போ - ரை. குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம் குறுகலும், அக்குறுகலுடனே உகரம் பெறுதலும், அவ் விரண்டு மின்றித் தன்னியல்பி னிற்றலு மாகிய மூன்றுவிதியும் பெறும் செய்யுட்கண், எ-று.

வி-பு. சுறமறிவன துறையெல்லாம் - நிலவிரி கானல்வாய் [நிலா+விரி=நிலாவிரி.] (எ-ம்);

இறவுப்புறத்தன்ன - சுறவுக்கோடன்ன-மருவினேன் செய்யுமோ நிலவு [நில=நிலவு] (எ-ம்);

நிலாவணங்த வெண்மணன்மே னின்று - நெடியகழியுமிரா [நிலா+அணங்த = நிலாவணங்த.] (எ-ம்) முறையே காண்க. ஈண்டு இயல்பு ஐயமறுத்தற் குரைத்தாரென்க. இம்மூன்றுமாந் தூக்கின் எனவே வழக்கில் இரண்டும் ஒன்றுமாம் என்றுராயிற்று.

வ-று. உதித்ததுநிலவு - நிலா, கண்டேன்கனவு - கனா, எனக் குறுகுதலோடு உகரமேற்றலும் தன்னியல்புமாகிய இரண்டும் வந்தன. தரா, மிடா எனத் தன்னியல்பு ஒன்றுமாய் நின்றன. இவ் விகாரங்கள் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சியான் வந்தன அல்லவென்று ஐயமறுத்தற்குக் கூறப்பட்டன வென்க. இவ்வாறு வருவனவெல்லாம் அன்ன.

களங. அன்றி யின்றியென் வினையெஞ் சிகாந் - தொடர்பினு ளுகாமாய்வரி னியல்பே.

இது இகரவீற்றுச் சொற்களுள் அன்றி இன்றியென்னும் வினையெச்சக் குறிப்பிற்கு எய்தாத தெய்துவித்தலும் எய்தியவழிப் புணரும் வல்லினத்திற்கு எய்தியது விலக்கலும் உணர்த்துகின்றது.

ப-ரை. அன்றி இன்றி என் - அன்றி இன்றி என்கின்ற, வினை எஞ்சு இகரம் - வினையெச்சக்குறிப்புச் சொற்களி னீற்றி லிருக்

கின்ற இகரம், தொடர்பின் உள் - செய்யுளில், உகரம் ஆய்வரின் - உகரமாய்த் திரிந்துவரின், இயல்பு வருகிற க ச த பக்கள் இயல்பாகும். எ-று.

பொ-ரை. அன்றி இன்றி என்னும் வினையெச்சக் குறிப்புச்சொல் வினது ஈற்றிகரம் செய்யுட்கண் உகரமாய் வருமாயின் க ச த பக்கள் பொதுவிதியான் மிகாது இயல்பாம். எ-று.

வி-பு. என் என்னும் வினைத்தொகையும், எஞ்சு என்னும் வினைத்தொகையும் சொல் என்னும் முதற்பெயரோடு முடியாது, அதனகத்து இகரம் என்னும் சினைப்பெயரோடு முடிந்தன. இவ்வாறு ‡ உடம்படு புணர்த்திக் கூறின்மையின் இதற்கிதுவே விதியென்பதூஉம், உகரமாய்வரின் எனவே உகரமாதல் உடன்பாடென்பதூஉம், அஃதொரு தலையன்றென்பதூஉம் பெற்றும்.

[உ-ம்.] "நாளன்றுபோகிப் புள்ளிடைதட்பப் - பதனன்று புக்குத் திறனன்று மொழியினும் - வறிதுபெயர்குந ரல்லர்-நெறிகொளப் பாடான் றிரங்கு மருவிப் - பீடுகெழுமலையற் பாடியோரே." (எ-ம்);

"உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே." (எ-ம்) வரும். பிறவுமன்ன.

கஎச. உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட - மருவும் டகா முரியின் வழியே - யகாவுயிர் மெய்யா மேற்பன வரினே.

இது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. உரி வரின்-உரி என்னும் அளவுப்பெயர்வந்தால், நாழியின் - நாழி என்னும் அளவுப்பெயரினது, ஈற்று உயிர்மெய் - ஈற்றிலுள்ள ழிகரமானது, கெட - நீங்க, டகரம் - டகரமெய்யானது, மருவும் - புணரும், உரியின் வழி - உரி என்னும் அளவுப்பெயரின்பின், யகர உயிர் மெய் ஆம் - யகரவுயிர் மெய்வரும், ஏற்பன - அவ்வுயிர் மெய்வருதற்கு ஏற்றமொழிகள், வரின்-வந்தால்.

பொ-ரை. உரி என்னும் அளவுப்பெயர்வரின் நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றுயிர் மெய்கெட அவ்வழி டகரவொற்றுவரும், உரி என்னும் அளவுப்பெயரின்பின் யகரவுயிர் மெய்வரும் அவ் வுயிர்மெய்வருதற்கேற்ற வருமொழிகள் வருமாயின். எ-று.

---

‡ உடம்பொடுபுணர்த்தல்.—இது தொல்காப்பியம் பொருளதிகாரம் இறுதிச்சூத்திரத்துக் கூறப்பட்டது உத்திவகையு ளொன்று.

[உ-ம்.] நாழி+உரி=நாடுரி (எ-ம்), உரிய + உப்பு = உரியவுப்பு, உரி+பயறு = உரியபயறு, உரி+மிளகு = உரியமிளகு, உரி+வரகு= உரியவரகு (எ-ம்) வரும்.

ஏற்பனவரின் எனவே ஏலாதனவரின் உரி+அரிசி=உரியரிசி, உரி+ஆழாக்கு=உரியாழாக்கு, உரி+எண்ணெய்=உரியெண்ணெய் என இச் சிறப்புவிதி பெறாது பொதுவிதியே பெறுதல் கொள்க.

நாடுரி என்பது நாவுரி என இக்காலத்து மரீஇயிற்று.

பொதுவிதியான் வரும்உடம்படுமெய்யை இச் சிறப்புவிதி விலக்கினமையின் நாழியுரி என்பது இலக்கணம் அன்றென்க.

கஎ௫. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.

இது எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. சுவை - அறுசுவையுள் ஒன்றை புணர்த்துகின்ற, புளி முன்-புளியென்னும் பெயர்முன், இனம் மென்மையும்-வருகிற வல்லெழுத்துகள் மிகுதலல்லாமல் அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துகளும், தோன்றும் - ஒரோவிடத்து மிகும், எ-று.

பொ-ரை. புளி என்னும் மரமும் பழமும் அன்றி அறுசுவையுள் ஒன்றை யுணர்த்தும் பெயர்முன்வரும் வல்லினம் மிகுதலே யன்றி, அவற்றிற்கினமாய மெல்லினமும் ஒரோவழி மிகும். எ-று.

[உ-ம்.] புளி+கறி=புளிங்கறி, ஞ்சோறு, ந்தயிர், ம்பாளிதம் என வரும்.

பலசுவையும் உடைத்தேனும் மிகுதிபற்றிப்புளிப்பாகியகறிஎனவும், புளிப்பையுடையகறி எனவும் விரிதலின் இருவழிக்கும் இவையே காட்டாமென்க.

மேன்மையும் என்ற இறந்தது தழீஇயஇழிவு சிறப்பும்மையால் புளிக்கறி எனப் பொதுவிதியான்வரும் வல்லெழுத்துப்பேறே சிறப்புடைத்தென்க.

கஎசு. ‡ அல்வழி இ ஐ முன்ன ராயி-னியல்பு மிகலும் விகற்பமுமாகும்.

---

‡ இங்ஙனம் பொதுப்பட விதித்தாரேனும், எழுவாய்த்தொடரில் இயல்பும், பண்புத்தொகையில் மிகலும், குறிலிணை மொழிமுன் விகற்பமுமாமெனக் கொள்க.

இது இகர ஐகாரவீற்று அஃறிணைப்பெயர்முன் வரும் வல்லினத்தி ற்கு ஒருவழி எய்தியது விலக்கவும், எய்திய திகந்துபடாமற் காத்தலும் எய்தியது விலக்கலுடன் விலக்காமையும் உணர்த்துகின்றது.

ப-ரை. இ ஐ முன்னர் - இகர ஐகாரவிற்று அஃறிணைப் பெயர்முன், அல்வழி - அல்வழியினிடத்து, ஆயின் - வல்லினம் வருமாயின், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் - பொதுவிதியான் மிகுதலும், விகற்பமும் - ஒன்றற்கே ஒருகால் மிகாமையும் ஒருகால் மிகுதலும், ஆகும்- ஆகும். எ-று.

பொ-ரை. இகர ஐகாரவீற்று அஃறிணைப்பெயர்முன்வல்லினம் அல்வழிக்கண் வருமாயின் இயல்பாயும், பொதுவிதியுடன் மிகுந்தும், ஒன்றற்கே ஒருகால் மிகாதும் ஒருகால் மிகுந்தும் புணரும். எ-று.

வி-பு. இ ஈற்று உயர்திணைப்பெயர், பொதுப்பெயர் வினைசட்குப் பொதுச்சூத்திரங்களான் இம் மூன்று விதியும் அமைந்து கிடந்தமையின் இச் சூத்திரத்தாற் கூறுதல் மிகுதி பொன்றுமே அமைந்துகிடந்த அஃறிணைப் பெயர்க்கென்பது பெற்றும். ஒப்பின் முடித்தலான் ஐகாரவீறும் உடன் கூறினர்.

[உ-ம்.]

பருத்தி, ஓதி யானை, குதிரை	+	குறிது, சிறிது தீது, பெரிது =	பருத்திகுறிது, சிறிது, &c. &c. ஓதிகுறிது, சிறிது, &c. &c.	என இயல்பாயின

கிளி + குறிது = கிளிக்குறிது, தினை + குறிது = தினைக்குறிது என விகற்பித்தன. பிறவுமன்ன.

மிகுதி வெய்தியது இகந்துபடாமைக் கூறினமையின் காட்டிற்றிலம்.

௦ களஎ. ஆமுன் பகரவீ யனைத்தும் வாக்குறுக - மேலனவல்வழி யியல்பா கும்மே.

இது தொடர்மொழியுள் பின்னின்ற இடக்கர்ச் சொல்லினது ஈகாரத்திற் கெய்தாத தெய்துவித்தலும், எய்தியவழி அதன்முன்வரும் வல்லினத்திற்கு மேலைச்சூத்திரத்தான் எய்திய திகந்துபடாமைக்காத்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஆ முன் பகர ஈ - ஆமுன்னின்ற பகர ஈகாரம், அனைத்தும் - நாற்கணமும், வர - வந்தால், குறுகும் - குறுகும், அல்வழி - அல்வழியில், மேலைச்சூத்திரத்தினுட் கூறியவிதி மூன்றனுள், இயல்பு ஆகும் - வருகிறவல்லினம் இயல்பைப்பெறும்.

பொ-ள. ஆ என்னும் பெயர் முன்னின்ற பகர ஈகாரம் இருவழியும் நாற்கணங்களுழ், வந்தால் குறுகும்; குறுகி விதி இகர ஈறாக நின்ற அதன் மேல்வரும் வல்லினம் அல்வழிக்கண் மேலைச்சூத்திரத்துள் கூறிய விதி மூன்றனுள் இயல்பைப் பெறும். எ-று.

வி-பு. குறுகுதற்குக் காரணம் அனைத்தும் வருதலேயன்றி மேல் நின்ற ஆவுமாம் என்பார் ஆழன் என்றார். பகா வீ என்றது இடக்காடக்கல். வருஞ் சூத்திரத்துள் பவ்வீ யும்து. ஆ என்னும் சொல்லும் நாற்கணத்துளொன்று முன்னும் பின்னும் தொடராதேல் குறுகா தென்பார் வாக்குநுதும் என்றார். இருமொழியை நிலைமொழியாக நிறீஇப் புணர்த்த மையான் வரும்விதி இகர ஈறுதலின் எய்திய திகர்துபடாமை இயல்பாகும் என்றார். ஆதும்மே என்றது விரித்தல் விகாரம்.

[உ-ம்] ஆப்பீ	+	அரிது, குளிரும், நன்று, வலிது	=	ஆப்பியரிது, க்குளிநும், நன்று, வலிது		என அல்வழியிலும்,
	+	அருமை, குளிர்ச்சி, நன்மை, வன்மை	=	ஆப்பியருமை, க்குளிர்ச்சி, நன்மை, வன்மை		என் வேற்றுமையிலும்,

ஈகாரங் குறுகலும், அல்வழிக்கண் வல்லினம் இயல்பிகர்து படாமையுங் காண்க.

களஅ. பவ்வீ நீமீ முன்ன ரல்வழி - யியல்பாம் வலிமெலி மிகலு மா மீக்கே.

இது ஈகாரவீற்று இடக்கர்ப்பெயர்க்கும், நீ என்னும் பெயர்க்கும், மீ என்னும் பெயர்க்கும் முன்னர்வரும் வல்லினத்திற்கு ஒருவழி இயல்பினும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கலும், இவற்றுள் மீ என்பதன்முன் வரும் வல்லினத்திற்கு அச்சூத்திரத்தான் எய்திய திகர்துபடாமைக் காத்தலும், எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும் உணர்த்துகின்றது.

ப-ளா. ப ஈ - பகரமெய்யின்மேலேறி நின்ற ஈகார வீற்றிடக்கர்ப்பெயரும், நீ - நீ என்கிற முன்னிலைப் பெயரும், மீ - மீ என்கிற மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயருமாகிய, முன்னர் - இம் மூன்றன் முன்னும், அல்வழி அல்வழியில், இயல்பாம் - வருகிற வல்லின மியல்பாகும், மீ கு-இவற்றுள்ளே மீ என்னுஞ் சொல்லுக்கு, வலி - வல்லெழுத்து,

(மிகலும் ஆம்) மிகுதலுமாகும், மெலி-மெல்லெழுத்து, மிகலும் ஆம் - மிகுதலும் ஆகும். எ-று.

போ-ரை. பகரவொற்றை ஊர்ந்து நின்ற ஈகாரவீற் றிடச்சொற் பெயரும், நீ என்னும் முன்னிலை யொருமைப் பொதுப்பெயரும், மீ என்னும் மேலாய பண்பையும் அப் பண்பாகுபெயராய் மேலாய இடமுதலியவற்றையும் உணர்த்தி நிற்கும் பலபொரு ளொருசொல்லும் நிற்க இவற்றின்முன்வரும் வல்லினம் அல்வழிக்க ணியல்பாம்; இங்ஙனம் புணரும் மீ என்னும் சொல்லுக்குமுன் அல்வழிக்கண் வல்லெழுத்து மிகலுமாம், மெல்லெழுத்து மிகலுமாம். எ-று.

[உ-ம்.]

பீ + { குறிது = பீகுறிது, சிறிது = பீசிறிது, தீது = பீதீது, பெரிது = பீபெரிது, } (எ-ம்), நீ + { குறியை = நீகுறியை, சிறியை = நீசிறியை, தீயை = நீதீயை, பெரியை = நீபெரியை(எ-ம்),

மீ + கண் = மீகண் (எ-ம்) இயல்பாயின. மீ + கூற்று = மீக்கூற்று, மீ + கோள் = மீக்கோள் என எய்தியதிகந்துபடாமை மிக்கது.

மீ + தோல் = மீந்தோல் என மெலி மிகுந்தது.

பிறவும் ஏற்றபெற்றி வருவன உளவேல் கொள்க.

மீகண் என்பது கண்ணினது மேலிடமெனப் பொருள்தந்து நிற்குமேனும் ஆறனுருபின் பயனிலையாம். மீ என்னும் வருமொழி நிலைமொழியாய் நின்று வல்லெழுத்து மிகாது புணர்ந்தமையின் இலக்கணப்போலியாய் அல்வழியாயிற்று. மீக்கூற்று என்பது புகழ். அது மேலாய சொல்லால் பிறந்த புகழ் என்னும் மேம்பாடெனப் பொருள்தந்து நிற்றலின் பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

மீக்கோள் என்பது மேற்போர்வை. அது யாக்கையின்மேல் கொள்ளுதலையுடைய போர்வையெனப் பொருள்தந்து நிற்றலின் ஏழாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஈண்டு மீ என்றது இடப்பொருளோடு ஏழாம்வேற்றுமையுருபின் பொருள்பட நின்றதேனும் கண்ணாதி உருபு வேண்டாமையின் வேற்றுமைத்தொகையாயிற்று. மீந்தோல் என்பது மேற்றோல், அது மேலாயதோலெனப் பொருள் தந்து நிற்றலின் பண்புத்தொகை. இஃது இக்காலத்து பீந்தோல் என மரீஇயிற்று.

நீ என்பதன்முன் வல்லினம் இயல்பாதல் போதுப்பெய ருயர்திணைப் பெயர்க" ளீற்றுமெய் என்னுஞ் சூத்திரத்தான் அமையாதோவெனின்,

விகாரமொழியன்றி அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஆவியாக்களின் ஓரீற்றதாய் நின்றுபுணரும் பொதுப்பெயர்க்கே வன்மை மிகாவென இருவழிக்குங் கூறியது அமையுமன்றி, அல்வழிக்கண் நீ என உயிரீறுயும், வேற்றுமைக்கண் நின் என நெடில்குறுகி னகரவொற்றீறுயும் விகாரப்பட்டு நிற்கும் இப்பொதுப்பெயர்க்கு அவ்விதி அமையாதென்க.

கஎகூ. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ - றாகு முகர முன்ன ரியல்பாம்.

இது முற்றுகரவீற்றுள் சிலவற்றின்முன் வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினும் என்னும் சூத்திரத்தால் எய்தியது விலக்கல் உணர்த்துகின்றது.

ப-ரை. மூன்று (உருபு) - மூன்றும் வேற்றுமை உருபிற்கும், ஆறு உருபு - ஆறும்வேற்றுமை உருபிற்கும், எண் - இயல்பாயும் விகாரமாயும் வருகிற எண்ணிற்கும், வினைத்தொகை - வினைத்தொகைக்கும், சுட்டு-சுட்டுப்பெயருக்கும், ஈறு ஆகும் - ஈறுகிய, உகரம் முன்னர் - முற்றியலுகரத்தின் முன்னே, இயல்பு ஆம். - வருகிறவல்லினம் இயல்பாகும். எ-று.

பொ-ரை. முற்றுகரவீற்று மூன்றும் உருபே, ஆறும் உருபே, இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணே, வினைத்தொகையே, சுட்டுப்பெயரோ என்னும் இவற்றின்முன் வரும் வல்லினம் இயல்பாம். எ-று.

வி-பு. மூன்றாறுருபு என்புழி ஆம் என்னும் சாரியை தொக்கன.

[உ-ம்.]

சாத்தனொடு + { கொண்டான், சென்றான், தந்தான், போயினான் } = { சாத்தனொடுகொண்டான், சென்றான், தந்தான், போயினான் }

என முற்றுகரவீற்று மூன்றும் வேற்றுமை உருபின் முன்னும்,

சாத்தனது + { கை, செவி, தலை, புறம் } = { சாத்தனதுகை, செவி, தலை, புறம் }

என முற்றுகர வீற்று ஆறும் வேற்றுமை உருபின் முன்னும்,

ஏழு, ஒரு, இரு, அறு + { கை, செவி, தலை, புறம் } = { ஏழுகை, செவி, &c. &c. ஒருகை, செவி, &c. &c. }

என இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணின்முன்னும்,

அடு + { களிறு, சேனை, தானை, படை = { அடுகளிறு, சேனை, தானை, படை

என் வினைத்தொகை முன்னும்,

அது, இது, உது + { குறிது, சிறிது, தீது, பெரிது = { அதுகுறிது, சிறிது, தீது, பெரிது

எனச் சுட்டுப்பெயரின்முன் அல்வழியிலும்,

அது, இது, உது + { கண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான் = { அதுகண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான்

எனச் சுட்டுப்பெயரின்முன் வேற்றுமையிலும் வரும் வல்லினம் இயல்பாயின.

உதுகாண், உதுக்காண்என இயல்பாயும், விகாரமாயும்வரப்பெருமாலோ. வெனின், அஃது ‡ இயல்பின்விகாரமும் என்னும் சூத்திரத்து அன்ன பிறவும் என்பதனுன் அமையுமென்க.

கஅ௦. அதுமுன் வருமன் றன்றந் தூக்கின்.

இது அது என்னுஞ் சுட்டுப் பெயர்முன் வரும் அன்று என்னும் சொற்கு எய்தாத தெய்துவித்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. அது முன் - அதுஎன்னுஞ் சுட்டுப்பெயர்முன், வரும் - வருகிற, அன்று - அன்றென்னும் வினைக்குறிப்பு முற்றுனது, தூக்கின் - பாட்டினிடத்து, ஆன்று ஆம் - முதனீளும், எ-று.

பொ-ரை. அது என்னும் சுட்டுப்பெயர்முன் வரும் அன்று என்னும் வினைக்குறிப்புச் சொல் முதனீளும் செய்யுளகத்து. எ-று.

[உ-ம்.] அது+அன்று=அதான்று என வரும்.

வி-பு. ஆன்றேயாம் என இயல்பை விலக்காமையின், அதுவன்று, அதன்று என வருவனவும் கொள்க. அதுமுன்வருமன்றான்றம் என விதந்தமையான் ஏனை இது, உது முன்வரும் அன்று ஆன்று ஆகாதென்பது பெற்றும்.

கஅக. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.

இது குற்றுகர வீற்றுள் சிலவற்றிற்கு இயல்பினும் விதியினும் என்னும் சூத்திரத்தான் எய்தியது ஒருவழி விலக்குதல் உணர்த்துகின்றது.

---

‡ நன்னூல், சூ. உ௫௫.

ப-ரை. வல் தொடர் அல்லன முன் - வன்றொடரொழிந்த ஐந்து குற்றியலுகர ஈற்றின்முன்னும், அல்வழி - அல்வழியில், மிகா - வருகிறவல்லினம் இயல்பாகும். எ-று.

போ-ரை. வன்றொடரொழிந்த ஐந்தன்பத்திக் குற்றுகர வீற்றின் முன்னும் வரும் வல்லினம் மிகா அல்வழிக்கண். எ-று.

[உ-ம்]

நாகு, எஃகு, வரகு, குரங்கு, தெள்கு.	+	கடிது, சிறிது, தீது, பெரிது	=	நாகுகடிது, சிறிது, தீது, பெரிது, எஃகுகடிது, சிறிது, தீது, பெரிது, &c. &c. (எ-ம்.),

ஏகு + கால் = ஏகுகால், அஃகு + பிணி = அஃகுபிணி, பொருது + சென்றான் = பொருதுசென்றான், அறிந்து + தந்தான் = அறிந்துதந்தான்,

எய்து + கொன்றான் = எய்துகொன்றான் (எ-ம்) வரும். பிறவுமன்ன.

கசஉ. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின் - மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

இது இடைத்தொடர் முதலிய நான்கு குற்றுகர வீற்றின்முன் வேற்றுமையில் வன்மை மிகாவென உணர்த்துகின்றது.

ப-ரை. இடை தொடர் (முன்) - இடைத்தொடர் முன்னும், ஆய்தம் தொடர் (முன்)-ஆய்தத்தொடர்முன்னும், ஒற்று இடையில் மிகாநெடில் (தொடர்முன்) - ஒற்றிடையேமிகாதநெடிற்றொடர் முன்னும், உயிர் தொடர் முன்-உயிர்த்தொடர் முன்னும், வேற்றுமை-வேற்றுமையில், மிகா-வருகிறவல்லினம் இயல்பாம். எ-று.

போ-ரை. இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் முன்னும், ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகா வேற்றுமைக்கண். எ-று.

[உ-ம்.]

தெள்கு, எஃகு, நாகு, வரகு	+	கடுமை, சிறுமை, தீமை, பெருமை	=	தெள்கின்கடுமை, கின்சிறுமை, கின்தீமை, கின்பெருமை, &c. &c.	¶ என வரும்.	

¶ தெள்கின்கடுமை, எஃகின்கடுமை எனச் சாரியைகூட்டி வல்லெழுத்து மிகாமைக்கு உதாரணங்காட்டுவாரு முளர். அது கூடாமைக்கு அவர் காட்டிய வாதுகதிர் என்னும் உதாரணமே சான்றாதல் உணர்க என்பர்.—இராமாநுசகவிராயர்.

சாரியைப்பேறு ‡இதற்கிதுசாரியை என்னும் சூத்திரத்தானமைந்தன. சாரியை மிகுதலின் வல்லெழுத்து மிகாவென ஏதுவரைந்து கூறுது மிகா என வாளா கூறினமையின், வாதுகதிர் எனச் சாரியை மிகாவழி வல்லினம் மிகாது வருவனவுளவேனும் கொள்க.

§[தெள்குகால், சிறை, தலை, புறம் (எ-ம்); எஃகுகடுமை, சிறுமை, தீமை, பெருமை (எ-ம்); நாகுகால், செவி, தலை, புறம் (எ-ம்); வாதுகதிர், சோறு, தாள், பதர் (எ-ம்) வரும். ஒற்றிடையின் மிகா என்பதனை உயிர்த்தொடர் என்பதனோடும் கூட்டுக. ஒற்றிடையின் மிகும், அவ்விரு குற்றுகரங்களும் வரும்சூத்திரத்தாற் கூறுப. அவற்றிற்கு முன்வரும் வல்லினம் மிகுமென்றுணர்க. * "ஈரொழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும், வேற்றுமையாயி னொற்றிடையின் மிகத், தோற்றம்வேண்டும் வல்லெழுத்து மிகுதி." ** "ஒற்றிடையின்மிகா மொழியுமாருளவே, அத்திறத்தில்லை வல்லெழுத்து மிகலே." *** "இடையொற்றுத் தொடரு மாய்தத்தொடரு,நடையா யிபல வென்மனார் புலவர்." என்றார் ஆசிரியர் தொல்காப்பியனும் என்க.]

கஅரு. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட் - டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

இது மேலை நிலைமொழிக்கோர் புறனடையாய் எய்தாதது எய்துவித்ததும், வருமொழிக்கு முதலயிரோல் இந்நிலைமொழிக்கு உயிர்வரினுக்குறள் என்னும் சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. நெடில் (தொடர்) நெடிற்றொடர்களும்,உயிர் தொடர்- உயிர்த்தொடர்களு மாகிய, குற்றுகரங்கள் உள் - குற்றியலுகர மொழிகளுள், ட ற ஒற்று - அவ்வுகரமேறி நின்ற டகர றகரமெய்கள், வேற்றுமை - வேற்றுமையில், மிக - பெரும்பாலும், இரட்டும் - இரட்டும். எ-று.

பொ-ரை. நெடிற்றொடர் குற்றுகரவீற்று மொழிகளுள்ளும், உயிர்த்தொடர் குற்றுகரவீற்று மொழிகளுள்ளும், அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லெழுத்து ஆறனுள் டகார றகாரமான இரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் இரட்டும். எ-று.

---

‡ நன்னூல், சூ. உருரு.

§ இதுவும் ஒருபாடம்.

* தொல்காப்பியம், எழு. குற்றியலுகரப்புணரியல், சூ. சு.
** ஷை ஷை சூ. எ.
*** ஷை ஷை சூ. அ.

வி-பு. குற்றுகரங்கள் என்னும் எழுத்துக்குறிப்பு அம்மொழிகளை உணர்த்தி நின்றது. வருமொழி வரையாமையின் நாற்கணமும் கொள்க.

[உ-ம்.] ஆடு, † பாறு + { கால், செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வன்மை, அடி } = { ஆட்டுக்கால், ஆட்டுச்செவி, &c. &c. பாற்றுக்கால், பாற்றுச்செவி, &c. &c. }

என நெடிற்றொடர்க்குற்றுகரவீற்று டறக்கள் நாற்கணமும் வர இரட்டித்தன.

முருடு, ‡ முயிறு + { ஷை } = { முருட்டுக்கால், முருட்டுச்செவி, &c. &c. முயிற்றுக்கால், முயிற்றுச்செவி, &c. &c. }

என உயிர்த்தொடர் குற்றுகரவீற்று டறக்கள் நாற்கணமும் வர இரட்டித்தன.

இவ் விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் இரட்டுமெனவே சிறுபான்மை வேற்றுமைக்கண் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழிக்கண் இரட்டுதலும், சிறுபான்மை பிறவொற்று இரட்டுதலும் கொள்க.

[வ-று] "காவிரிபுரக்கு நாடுகிழவோனே."

"நாடுக பிறந்தார்க்கே யோடுமென் மனனேகாண்."

"கறைமிட றணியலு மணிந்தன்றக்கறை." என வேற்றுமைக்கண் இரட்டா வரியின.

காடு + அரண் = காட்டரண்
களிறு + யானை = களிற்றியானை } என அல்வழிக்கண் இரட்டின.

வெருகு + கண்வெங்கருனை = வெருக்குக்கண்வெங்கருனை
எருது + கால் = எருத்துக்கால் } எனவேற்றுமையிலும்,

எருது + மாடு = எருத்துமாடு } என அல்வழியிலும் பிறவொற்று இரட்டின.

கஅச. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற் றம்மின வன்றொட ராகா மன்னே.

இது மென்றொடர் குற்றுகர மொழிகளுள் சிலநிலைமொழிக்கு மூவினமும் வரின் எதிர்மறைமுகத்தான் எய்தாதது எய்துவித்தலும், உயிர்வரின்

---

† பாறு = பருந்து. ‡ முயிறு = மரந்தி.

அவ்வெதிர்மறை முகத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. மெல் தொடர் மொழி உள் - மென்றொடர் குற்றியலுகர மொழிகளுள், சில - சில மொழிகள், வேற்றுமையில் - வேற்றுமைக்கண், தம் இனம் - தமக்கினமாகிய, வல் தொடர் - வன்றொடர் குற்றியலுகர மொழிகளாக, ஆகா - ஆதலையொழிந்தன, மன் - பெரும்பாலன. எ-று.

போ-ரை. மென்றொடர் குற்றுகர மொழிகளுள் சில் வேற்றுமைக்கண் தமக்கினமான வன்றொடராதலை யொழிந்தன பெரும்பால். எ-று.

வி-பு. சில என்னும் எழுவாய் ஆகா என்னும் எதிர்மறை வினையாலணையும் பெயரகத்து முதனிலையோடு முடிந்தது. வருமொழி வரையாமையின் நாற்கணமும் கொள்க.

[உ-ம்.]

மருந்து+பை = மருத்துப்பை, கரும்பு+வில்=கருப்புவில்,	என
சுரும்பு+நாண்= சுருப்புநாண், கன்று +ஆ =கற்றா	வரும்.

இவ்வாறு சிலவருதலையும் எதிர்மறை முகத்தால் கூறினமையின் வழக்கின்கண்ணும் சான்றோர் செய்யுட்கண்ணும் ஏற்றபெற்றி கொள்க.

வண்டு+கால்=வண்டுக்கால், பந்து+திரட்சி=பந்துத்திரட்சி முதலிய வெல்லாம் வன்றொடராகாதன வென்க.

சிலவன்றெடராம் எனவே ஆகாதன பலவென்பது தாமே போதரவும், மன்னே என்ற மிகையானே,

என்பு +உடம்பு=எற்புடம்பு, அன்பு +தளை =அற்புத்தளை, குரங்கு+மனம் =குரக்குமனம்	என அல்வழிக்கண் அருகி வன்றொடராதலுங் கொள்க.

கஅடு. ஐயீற் றுடைக்குற் றுகர முளவே.

இது மேலை நிலைமொழிக்கு மூவினமும் வரின் எய்தாததெய்துவித்தலும்,உயிர்வரின் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஐ - ஐகாரச்சாரியையை, ஈறு உடை - இறுதியிலே பெற்றுவருகிற, குற்றுகரம் உம்-மென்றொடர் குற்றியலுகரமொழிகளும், உள - சில உண்டு. எ-று.

போ-ரை. ஐகாரச்சாரியையை இறுதியிலே பெற்றுவரும் மென்றொடர் குற்றுகர மொழிகளும் சில வுள. எ-று.

வி-பு. மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தமையான் இதுவும் மென்றொடரென்பது பெற்றாம். வருமொழி வரையாமையின் நாற்கணமும் கொள்க.

[உ-ம்.] பண்டை+காலம்=பண்டைக்காலம், இன்றை+நாள்=இற்றைநாள் (எ-ம்), அன்றை+கூலி = அற்றைக்கூலி,இன்றை+நலம்=இற்றைநலம் (எ-ம்) வரும். பிறவுமன்ன.

மேலைச்சூத்திரத்தைச் சாரவைத்தானேனும் ஐயீற்றுடைக்குற்றுகாம் எனப் பொதுப்படக் கூறினமையின் நேற்றைப்பொழுது எனப் பிறதொடர்கள் ஐகாரம் பெறுதலும்; ஐயீற்றுடைக்குற்றுகாம் என உடைமையாக்கிக் கொண்டமையின், வருமொழிப் புணர்ச்சியானன்றி, ஒற்றை, இரட்டை, வேட்டை என ஒருமொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும்; ஈராட்டை, மூவாட்டை எனத் தொடர்மொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க.

கஅகூ. திசையோடு திசையும் பிறவுஞ் சேரி - னிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும் - றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.

இது. குற்றுகரவீற்றுத் திசைப்பெயர்க்கு எய்தாதது எய்துவித்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. திசையொடு - திசைச்சொல்லோடு, திசையும் - திசைச்சொல்லும், பிறவும் - பிறசொல்லும், சேரின் - புணருமிடத்து, நிலை ஈறு - நிலைமொழி யீற்றிலே நின்ற, உயிர்மெய் - உயிர்மெய்யும், க ஒற்று - அதன் பின்னின்ற ககரமெய்யும், நீங்கலும்-கெடுதலும், றகரம் - அவ்விடத்து நின்ற றகரமெய், ன ல ஆக-னகரமெய்யாகவும் லகரமெய்யாகவும், திரிதலும் - திரிதலும், ஆம் - ஆகும். எ - று.

பொ-ரை. திசைச்சொல்லோடு திசைச்சொல்லும், பிற சொல்லும் புணருமிடத்து நிலைமொழி ஈற்றினின்ற உயிர்மெய்யும், அதன்மேனின்ற ககரவொற்றும் கெடுதலும், அங்ஙனம் நின்ற றகரவொற்று னகரவொற்றும் லகரவொற்றும் திரிதலுமாம். எ-று.

[உ-ம்.] வடக்கு + { கிழக்கு, மேற்கு, திசை, மலை, வேங்கடம் } = { வடகிழக்கு, மேற்கு, திசை, மலை, வேங்கடம் } (எ-ம்),

தெற்கு + { கிழக்கு, மேற்கு, குமரி, வீதி, மலை } = { தென்கிழக்கு, மேற்கு, குமரி, வீதி, மலை } (எ-ம்),

மேற்கு + {பால், நாடு = {மேற்பால், மேனாடு} (எ-ம்),
குடக்கு + {திசை, நாடு = {குடதிசை, குடநாடு} (எ-ம்),
குணக்கு + {கடல், பால் = {குணகடல், குணபால்} எ-ம், வரும்.
பிற என்றமையானே,

மேற்கு + திசை = {மேற்றிசை, மேலைத்திசை}, கிழக்கு + , தெற்கு + , மேற்கு + , வடக்கு = {கீழ்மேற்றென்வடல் (எ-ம்),
கிழக்கு + திசை = {கீழ்த்திசை, கீழைத்திசை},

{வடக்கு, தெற்கு} + {ஊர், மலை = {வடக்கூர், வடக்குமலை; தெற்கூர், தெற்குமலை} (எ-ம்),

இங்ஙனங்காட்டிய விகாரமின்றியும் வருமெனவும், இவ் விதியெல்லாம் ஏற்ற பெற்றிகோடல் வேண்டுமெனவும் கொள்க.

வடகிழக்கு என்பது வடக்கும் கிழக்கும் ஆயதோர் கோணமென உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

வடதிசை என்பது வடக்காகிய திசையெனப் பண்புத்தொகை.

வடமலை என்பது வடக்கின்கண் மலையென ஏழாம்வேற்றுமைத் தொகை.

கீழ்மேற்றென்வடல் - கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்பன உம்மைத்தொகை. பிறவும் அன்ன.

கஅஎ. ‡ தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.

இது தெங்கு என்னும் பெயர்க்கு எய்தாதது எய்துவித்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. காய் - காயென்னுஞ்சொல், வரின்-வந்தால், தெங்கு- தெங்கென்னும் நிலைமொழி, நீண்டு - முதல் நீண்டு, ஈறு உயிர் மெய் - ஈற்றிலுள்ள உயிர்மெய், கெடும் - நீங்கும், எ-று.

பொ-ரை. காய் என்னும் சொல் வருமாயின் தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு ஈற்றுயிர் மெய்கெடும். எ-று.

வி-பு. ஈறு கெடும் என்றமையால் முதல் நீளும் என்பது பெற்றாம்.

[உ-ம்] தெங்கு + காய் = தேங்காய் எனவரும்.

தெங்குநீண்டீற்றுயிர்மெய்கெட்டே புணரும் என இயல்பை விலக்காமையின் தெங்கங்காய் என வருமுடிபுங்கொள்க.

---

‡ தேங்காய் முதலிய சொற்களைப் புதிதாக விதித்தலென்பர்.— இலக்கணக்கொத்துநூலார்.

கஅஅ. எண்ணிறை யளவும் பிறவு மெய்தி - னொன்று முதலெட் டீற மெண்ணுள் - முதலீ ரெண்முத னீளு மூன்று - மாறு மேழுங் குறுகு மாறே ழல்லவற் றீற்றுயிர் மெய்யு மேழ னுயிரு - மேகு மேற்புழி யென்மனார் புலவர்.

இது ஒன்றுமுதல் எட்டீறும் எண்ணுப்பெயர்க்கு உயிர்வரின் எய்திய தன்மேற் சிறப்புவிதியும், மெய்வரின் எய்தாதது எய்துவித்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. எண் - எண்ணுப் பெயரும், நிறை - நிறைப்பெயரும், அளவும்-அளவுப்பெயரும், பிறவும் - பிறபெயர்களும், எய்தின்-வந்தால், ஒன்று முதல் - ஒன்றுமுதல், எட்டு ஈறு ஆம்-எட்டீறாகும்,எண் உள்-எண்களுள், முதல் இரண்டு எண்-முதலிலுள்ள இரண்டெண்களும், முதல் நீளும் - முதற்குறில் நீளும், மூன்று ஆறு ஏழ் - மூன்றும் ஆறும் ஏழும், (முதல்) குறுகும் - முதல் நெடில் குறுகும்,ஆறு ஏழு அல்லவற்றின் - ஆறுமேழு மல்லாத ஆறெண்களினுடைய, ஈறு உயிர்மெய்யும் - இறுதியிலுள்ள உயிர்மெய்களும், ஏழன் - ஏழனுடைய, (ஈற்று)உயிரும்-இறுதியிலுள்ள உயிரும், ஏகும் - கெடும், ஏற்புழி - ஏற்குமிடங்களில், என்மனார் - என்று சொல்லுவர், புலவர் - புலவர். எ-று.

பொ-ரை. எண்ணுப்பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிறபெயரும் வரின் நிலைமொழியாக நின்ற ஒன்றுமுதல் எட்டீறும் எண்களுள் முதற்கண்ணவாய ஒன்று இரண்டு என்னும் இரண்டெண்ணும் முதனீளும்; மூன்றும் ஆறும் ஏழும் முதல் குறுகும்;ஆறும் ஏழும்அல்லாத ஆறெண்களின் ஈற்றுயிர் மெய்யும், ஏழு என்னும் எண் ஈற்றுயிரும் கெடும் ஏற்குமிடங்களின் என்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. இச்சூத்திரத்துட் கூறிய விகாரமும்,இப்புணர்ச்சி முற்ற முடித்தற்கு பின்ஐந்து சூத்திரத்தால் கூறும். விகாரமும், உயிர்வரின் உகரம் மெய்விட்டோடுதலையும்,ஒழிந்த கணங்கள் வரின் தன் இயல்பின்நிற்றலையும் விலக்கியவல்ல, இவ்விகாரமனைத்தும் ஒருங்குவரவேண்டுமென்னும் நியதிய வல்ல,இவ்விகாரம் பண்புத்தொகைக்கே உரியவென்பார் ஏற்புழி என்றும்; ஏழ என்பதனை உயிரீற்றுமொழியாகக் கொள்வார் சிலர், ஒற்றீற்று மொழியாகக் கொள்வார் சிலர், யாம் ஒருதலை துணிந்தாம் என்பார் என்மனார் புலவர் என்றும்; ஒற்றீறும் விலக்கப்படுவ தன்றென்பார் உடம்பொடு புணர்த்தி ஒற்றீறாக ஏழ் குறுகும் என்றும் கூறினர். ஏழ என்பது முற்றுகரவீற்றதே

னும் ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல் என்னும் உத்தியான் ஈண்டுக் தறுதும் என்றும் கூறப்பட்டதென்க.

-[உ - ம்.]

ஆறு, } + { பத்து, கழஞ்சு, = { அறுபது, கழஞ்சு, நாழி, மீனீ, } (எ-ம்),
ஏழு } + { நாழி, மீன் = { எழுபது, கழஞ்சு, நாழி, மீன் }

ஏழு + கடல் = எழ்கடல் (எ-ம்) வரும்.

ஏனையவற்றிற்கு உதாரணம் பின்னர்க் காட்டுதும்.

இரண்டு + ஆயிரம் = இரண்டாயிரம், ஏழு + ஆயிரம் = ஏழாயிரம் என உயிர்வரின் குற்றுகரமும், முற்றுகரமும் கெட்டுப் புணர்ந்தன.

இரண்டு + கழஞ்சு = இரண்டுகழஞ்சு,
மூன்று + படி = மூன்றுப்படி,
நான்கு + பொருள் = நான்குபொருள்,
ஏழு + கடல் = ஏழுகடல்
} எனத் தன் இயல்பின் நின்று புணர்ந்தன. பிறவு மன்ன.

கஅகூ. ஒன்றன் புள்ளி ரகா மாக - விரண்டனொற்றுயிரேகவுவ் வருமே.

இது ஒன்று இரண்டு என்னும் எண்களின் விகாரம் உணர்த்துகின்றது.

ப-ரை, ஒன்றன்-ஈற்றுயிர் மெய்கெட நின்ற ஒன்றென்னும் எண்ணினது, புள்ளி - னகரமெய்யானது, ரகரம் ஆக-ரகரமெய் யாக, இரண்டன் - இரண்டனுடைய, ஒற்று - ணகர மெய்யும், உயிர் - அகர உயிரும், ஏக - கெட, உ வரும் - அவ்விரண்டு ரகர மெய்மேலும் உகரம் வரும். எ - று.

பொ-ரை. மேற்கூறிய நால்வகைப்பெயரும் வருமிடத்து ஈற்றுயிர் மெய்யேகுமென்றமையான், இறுதி உயிர்மெய் கெடநின்ற ஒன்றென்னும் எண்ணினது னகரவொற்று ரகரவொற்றாக, இரண்டென்னும் எண்ணி னது ணகரவொற்றும் ரகரத்தை ஊர்ந்து நின்ற அகர உயிரும் கெட அவ் விரண்டு ரகரத்தின்மேலும் உகரம் வரும். எ-று.

[உ-ம்.]

ஒன்று, } + { ஆயிரம், பத்து, கழஞ்சு, நாழி, வகை
இரண்டு }

{ ஓராயிரம், ஒருபது, கழஞ்சு, நாழி, வகை, ஈராயிரம், இருபது, கழஞ்சு, நாழி, வகை } என வரும்.

ஓராயிரம், ஈராயிரம் என்புழி, உகரக்கேடு முற்றுமற்றேரோவழி என்பதனாற் கொள்க. பிறவுமன்ன.

கஅo. மூன்றனொற்றுப் பழிவும் வந்தது மாகும்.

இது மூன்று என்னும் எண்ணின் விகாரம் உணர்த்துகின்றது.

ப-ரை. மூன்றன் இறுதி-உயிர்மெய்கெடநின்றமூன்றென்னும் எண்ணினது, உறுப்பு-மெய்யானது, அழிவும்-கெடுதலும், வந்ததும் - வருகிறமெய்யாகத் திரிதலும், ஆகும் - ஆகும். எ-று.

பொ-ரை. நால்வகைப்பெயரும் வருமிடத்து இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற மூன்றென்னும் எண்ணினது னகரவொற்றுக் கெடுதலும், வரும் ஒற்றாகத் திரிதலுமாம். எ-று.

[உ-ம்.]

மூன்று	+	ஒன்று, எடை, உழக்கு, உலகு	=	மூவொன்று, வேடை வுழக்கு, வுலகு	(எ-ம்)
மூன்று	+	பத்து, கழஞ்சு, நாழி, மொழி	=	முப்பது, க்கழஞ்சு, ந்நாழி, ம்மொழி	(எ-ம்) வரும்.

கக௯. நான்கன் மெய்யே லறவா தம்மே.

இது நான்கு என்னும் எண்ணின் விகாரம் உணர்த்துகின்றது.

ப-ரை. நான்கன்-இறுதிஉயிர்மெய் கெடநின்ற நான்கென்னும் எண்ணினது, மெய் - னகரமெய், லற ஆகும் - லகரமெய்யாகவும் றகரமெய்யாகவுந் திரியும், எ-று.

பொ-ரை. நால்வகைப் பெயரும் வருமிடத்து இறுதி உயிர்மெய் கெடநின்ற நான்கு என்னும் எண்ணினது னகரவொற்று லகரவொற்றாயும், றகரவொற்றாயும் திரியும். எ-று.

[உ-ம்.]

நான்கு	+	ஒன்று, எடை, நாழி, மணி	=	நாலொன்று, லெடை, ஞாழி, ன்மணி	(எ-ம்),
நான்கு	+	பத்து, கழஞ்சு, கலம், கவி	=	நாற்பது, ற்கழஞ்சு, ற்கலம், ற்கவி	(எ-ம்) வரும்.

ககஉ. ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.

இது ஐந்து என்னும் எண்ணின் விகாரம் உணர்த்துகின்றது.

ப-ரை. ஐந்தன் - இறுதியுயிர் மெய்கெட நின்ற ஐந்தென்னும் எண்ணினது, ஒற்று - நகரமெய்யானது, அடைவதும் - வருகிற மெய்யாகியும், இனமும் - அதற்கினமாகியும், கேடும் - கெட்டும் வரும், எ-று.

பொ-ரை. நால்வகைப்பெயரும் வருமிடத்திறுதி உயிர்மெய் கெடி நின்ற ஐந்தென்னும் எண்ணினது, நகரவொற்று வருமொற்றாகியும், அதற் கினமாகியும், கெட்டும் முடிவதாம். எ-று.

[உ-ம்.]

ஐந்து + {மூன்று, மஞ்சாடி, வட்டி, வண்ணம், = {ஐம்மூன்று, ம்மஞ்சாடி, வ்வட்டி, வ்வண்ணம்} (எ-ம்),

ஐந்து + {பத்து, கழஞ்சு, கலம், பொறி = {ஐம்பது, ங்கழஞ்சு, ங்கலம், ம்பொறி} (எ-ம்) வரும்.

வி-பு. அடைவதும் இனமும் என்றமையின் அருத்தாபத்தியான் ஐந்நூறு, ஐந்தூணி என்புழி ஒற்று தன்னியல்பின் நிற்றல்கொள்க.

கசுரு. எட்ட னுடம்பு ணவ்வாகு மென்ப.

இது எட்டு என்னும் எண்ணின் விகாரம் உணர்த்துகின்றது.

ப-ரை. எட்டன்-இறுதியுயிர்மெய் கெடநின்ற எட்டென்னும் எண்ணினது, உடம்பு - டகரமெய்யானது, ண ஆகும் - ணகர மெய்யாகும், என்ப - என்றுசொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை, நால்வகைப்பெயரும் வருமிடத்து இறுதி உயிர்மெய் கெட நின்ற எட்டென்னும் எண்ணினது டகரவொற்று ணகரவொற்றாகுமென்று சொல்லுவர் புலவர். எ-று.

[உ-ம்.]

எட்டு + {பத்து, கழஞ்சு, கலம், குணம் = {எண்பது, ண்கழஞ்சு, ண்கலம், ண்குணம்} எனவரும்.

வி-பு. எண்ணிறையளவும் என்னுஞ் சூத்திரத்துட் கூறியபுணர்ச் சிக்கு வேண்டும் விகாரம் இதுகாறும் என்பதுதோன்ற அச்சூத்திரத்துட் கூறிய புலவர் என்னும் எழுவாயைச் சுட்டி, அதன் பயனிலையாக இச் சூத்திரத்து இறுதிக்கண் என்ப என்றார்.

கசுச. ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின் - முன்னதினேனைய முரணி யொவ்வொடு - தகா நிறீஇப்பஃ தகற்றி னவ்வை-நிரலே ணள வாத் திரிப்பது நெறியே,

இது ஒன்பதுஎன்னும் எண்ணுப்பெயர்க்கு எய்தாதது எய்துவித்தலும், அதனொடு புணரும் பத்து நூறு என்னும் வருமொழிகட்கு இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தானும், எண்மூவெழுத்திற்று என்னுஞ் சூத் திரத்தானும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒன்பானொடு - ஒன்பஃதுடனே, பத்தும் - பத்தென் பதும், நூறும் - நூறென்பதும், ஒன்றின் - வந்துபுணருமாயின்

முன்னதின் - முன்னதாகிய நிலைமொழியினின்றும், ஏனைய - மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும் முறைமை - முறையே நூறெனவும் ஆயிரமெனவும் திரித்து, ஒ ஓடு - நிலைமொழி முதலிலுள்ள ஒகரவுயிரோடு, தகரம் - தகரமெய்யை, நிறீஇ - அதற்கு ஆதாரமாக நிறுத்தி, பஃது - அந்நிலைமொழி யிறுதியிலுள்ள பஃதை, அகற்றி - கெடுத்து, ன ஐ - அம்மொழிமுதற்கு அயல் நின்ற னகரமெய்யை, நிரலே - முறையே, ண ள ஆக - ணகரமெய்யாகவும் ளகர மெய்யாகவும், திரிப்பது - திரிப்பது, நெறி - முறைமையாகும். எ - று.

பொ-ரை. ஒன்பஃதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்து புணருமாயின், அந்த நிலைமொழி வருமொழிகளுள் முன்னர்த்தாகிய நிலைமொழியி னின்று ஏனை வருமொழியாகிய பத்தையும் நூற்றையும் நிரனிறை வகையானே நூறெனவும் ஆயிரமெனவும் திரித்து, நிலைமொழிக்கு முதற்கண் ஒகர உயிரோடு தகர மெய்யை அதற்காதாரமாக நிறுத்தி, அந்நிலைமொழி யிறுதிக்கண் பஃதைக்கெடுத்து, அம்மொழிமுதற்குஅயல் நின்ற னகர வொற்றை முறையே ணகரவொற்றாயும் ளகரவொற்றாயும் திரிப்பது முறைமையாம். எ-று.

வி-பு. முன்னதின் என்னும் இன் உருபு நீங்கற்பொருட்டாய் ஏனைய என்னும் இடைச்சொல்லடியாகத் தோன்றிய வினைக்குறிப்புப்பெயர்கொண்டது. நிலைமொழித் திரிபுபோல வருமொழித்திரிபும் வகைபடக் கூறாது பொதுப்பட முறைமை என்றாரேனும்,

* "ஒன்பா னொகரமிசைத் தகர மொற்று-முந்தை யொற்றே ணகார மிரட்டும்-பத்தென் கிளவி யாய்தபக ரங்கெட-நிற்றல் வேண்டு மூகாரக்கிளவி யொற்றிய தகரம் றகர மாகும்." (எ-ம்)

** "ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே-முந்தை யொற்றே ளகார மிரட்டு - நூறென் கிளவி நகாரமெய்கெட - வூவா வாகு மியற்கைத் தென்ப-வாயிடை வருத லிகர ரகர-மீறுமெய் கெடுத்து மகர மொற்றும்." (எ - ம்)

ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாற்றான் அவற்றின் திரிபு அறிந்து திரித்துக்கொள்க.

நெறியே என்ற இலேசானே தனிக்குறில்முன் ஒற்று இரட்டித்தலுங் கொள்க.

---

* தொல்காப்பியம் எழு. குற்றியலுகரப்புணரியல் சூ. கசo.
** ௸ ௸ சூ. ருஅ.

[உ-ம்.] ஒன்பஃது + நூறு = தொள்ளாறு (எ-ம்),
ஒன்பஃது + ஆயிரம் = தொள்ளாயிரம் (எ-ம்) வரும்.

தொளாயிரம் என இக்காலத்து மரீஇயிற்று. ஒன்பஃது நின்றுபுணரினும், ஒன்பது நின்று புணரினும் இப்படியே யாம் என்பார் பஃது அஃகற்றி என்பதனோடு பொருந்த ஒன்பஃதோடு என்னாது ஒன்பானோடு என்றும், நகரவொற்றை ஒகரவுயிர்க் குடம்பாக நிறுத்துகவென்பார் ஒவ்வொடு என்றும், இப்புணர்மொழிகள் ஒகர உயிரொன் றொழிய விகாரப்பட்டுக் கிடந் தமையின், குறிப்பின்றி முடியும் மரூஉ முடிபென்று கொள்ளற்க என்பார் திரிவது என்னாது திரிப்பது என்றும், இவற்றை இலக்கண முடிபாகத் தொல்லாசிரியர் முடித்தவாறே முடித்தாமென்பார் நெறியே என்றுங் கூறினார்.

இச் சூத்திரத்து முன்னதின் ஏனைய முரணி என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது ஒன்பஃதினனே பத்தையும் நூற்றையும் பெருக்கி வேனப் பொருள் கொள்வாருமுளர். முரணி என்னுஞ் சொற்கு அது பொருளன் றுதலானும், அது பொருளாமேனும் அதனால் வருமொழி இவ்வாறு திரிந்த வெனத் தோன்றாமையானும், தோன்றின் நிலைமொழிக்கு விகாரங் கூற வேண்டாமையானும் அது பொருந்தா தென்க.

இன்னும் முன்னதின் ஏனைய முரணி என்பதற்கு நிலைமொழியாய எட்டின்மே லொன்று ஒன்பஃது எனப் பஃது என்னும் இறுதியதாய்த் திரிந்து நின்றாற்போல், வருமொழியாய் எண்பதின்மேல் பத்தை நூறுஎனவும், எண்ணூற்றின்மேல் நூற்றை ஆயிரம் எனவும் திரித்து பொருள் கோடலு மொன்று.

கசுரு. முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தி - னிடையொற் றேக லாய்த மாக - லெனவிரு விதியு மேற்கு மென்ப.

இது ஒன்றுமுதல் எட்டெண்களின்முன் வரும் பத்து என்னும் எண்ணிற்கு இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. முதல் - ஒன்றுமுதலாகிய, இரு நான்கு ஆம் எண் முனர் - எட்டெண்களின் முன்னும் வருகிற, பத்தின் - பத்தென்னும் எண்ணினது, இடை - நடுநின்ற ஒற்று - தகரமெய்யானது, ஏகல் - கெடுதலும், ஆய்தம் ஆகல் - தகரநின்றவிடத்து அது கெட ஆய்தம் வருதலும், என இரு விதியும் - என்னும் இவ்விரண்டுவிதியையும், ஏற்கும் - ஏற்கும், என்ப - என்று சொல்லுவர் புலவர்.

பொ-ரை. ஒன்றுமுதலாகிய எட்டெண்களின் முன்னும் வரும் பத்தென்னும் எண் இடைநின்ற தகரவொற்று ஒருகாற் கெடுதலும், ஒருகால் இடையே தகரநின்ற நிலைக்களத்து அது கெட ஆய்தம் வருதலும் என்னும் இவ்விரண்டு விதியையும் ஏற்குமென்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. இடை என்பதனைப் பின்னுங் கூட்டுக. இடையே ஆய்தமாகல் என்றமையின் அவ்வழி தகரக்கேடு கூறாதே அமையுமென்க.

[உ-ம்.]

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு	+	பத்து	=	ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, &c. &c. ஒருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்பஃது, &c. &c.

என வரும்.

கககூ. ஒருபஃ தாதிமுன் னொன்றுமுதலோன்பா-னெண்ணு மவையூர் பிறவு மெய்தி - னாய்த மழியவாண் டாகுந் தவ்வே.

இது மேலைச் சூத்திரத்தான் எய்திய ஒருபஃதாதியாய நிலைமொழிக்கு உயிர்வரி னுக்குறள் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்பு விதியும், மெய்வரின் எய்தாதது எய்துவித்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை.ஒருபஃது ஆதி முன்-ஒருபஃதுமுதலாகிய எட்டெண்களின்முன்,ஒன்று முதல்-ஒன்றுமுதலாகிய, ஒன்பான் எண்ணும் ஒன்பதெண்களும், அவை - அவ்வெண்களை,ஊர்-ஊர்ந்த,பிறவும்-மற்றவையும், எய்தின் - வந்து புணருமாயின், ஆய்தம் - நிலைமொழியிடையிலே நின்ற ஆய்தமானது, அழிய-கெட, த - இயல்பாகிய தகரம், ஆண்டு-அவ்வாய்தநின்றவிடத்து,ஆகும்-வரும்.

பொ-ரை. ஒருபஃதாதியாய எட்டெண்களின்முன்னும் ஒன்றுமுதல் ஒன்பதெண்ணும், அவையூர்ந்த பிறவும் வந்து புணருமாயின் ஆய்தங்கெட, அந்நிலைக்களத்து இயல்பாய தகரம் வரும். எ-று.

வி-பு. ஐயமறுத்தற்கு அவையூர்பிறவும் என்றார்.

[உ-ம்.] ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று,

இருபஃது + ஒன்றேகாலே யரைக்கால் = இருபத்தொன்றேகாலே யரைக்கால்,

முப்பஃது + ஒருகழஞ்சு = முப்பத்தொருகழஞ்சு,

எழுபஃது + ஒன்பதின்கலனே தூணி = எழுபத்தொன்பதின்கலனே தூணி,

எண்பஃது+ஒன்பதியாண்டு=எண்பத்தொன்பதியாண்டு என்வரும். பிறவுமன்ன.

ஆய்தமழியவான் டாதுந்தவ்வே என்றமையான் ஆய்தமழிந்தவற்றிற்கும், ஒருபது முதலிய முற்றுகர வீற்று எண்ணுப்பெயர்கட்கும் வேற்றுமையின்மையின் அருத்தாபத்தியான் அவற்றோடு இவ்வருமொழிகள் புணரினும் ஆண்டாதுந்தவ்வே என்றாயிற்று. இவற்றிற்கும் காட்டு அவையேயா மென்க.

ககூஎ. ஒன்றுமுதல் லீரைந் தாயிரங் கோடி-யெண் ணிறை யளவும் பிறவரிற் பத்தி - னீற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்று-மேற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

இது பத்து என்னும் நிலைமொழிக்கு உயிர்வரின், உயிர்வரினுக்குறள் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும், மெய்வரின் எய்தாதது எய்துவித்தலும், ஒன்பது என்னும் நிலைமொழிக்கு உயிர்வரின், உயிர்வரினுக் குறள் என்னும் சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதியும், மெய்வரின் எய்தாதது எய்துவித்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒன்று முதல் ஈரைந்து - ஒன்றுமுதலாகிய பத்தெண்களும், ஆயிரம் - ஆயிரமும், கோடி - கோடியுமாகிய, எண் - எண்ணுப்பெயரும், நிறை - நிறைப்பெயரும், அளவும் - அளவுப்பெயரும், பிற - பிறபெயரும், வரின் - வந்து புணருமாயின், பத்தின் - நிலைமொழியாகிய பத்தினது, ஈறு உயிர்மெய் - இறுதியிலுள்ள துகர உயிர்மெய்யை, கெடுத்து - அழித்து, இன். உம் - இன்சாரியையாயினும், இற்று உம் - இற்றுச்சாரியை யாயினும், ஏற்பது - அவ்விடத்திற் கேற்பது, ஏற்கும் - ஏற்றுநிற்கும், ஒன்பது உம் - ஒன்பதென்னும் நிலைமொழியும், இனைத்து - இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னுயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப்பெறும்.

பொ-ரை. ஒன்றுமுதலாகிய பத்தும், ஆயிரமும், கோடியும் என்னும் எண்ணுப்பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிறபெயரும் வந்து புணருமாயின், நிலைமொழியாகிய பத்தென்னும் எண்ணினது ஈற்றுயிர் மெய்யைக்கெடுத்து, அந்நிலைக்களத்து இன்சாரியையேனும் இற்றுச்சாரியையேனும் ஆண்டைக்கேற்பது ஏற்றுநிற்கும்; ஒன்பதுஎன்னும் நிலைமொழியும் இங்ஙனம் ஓதந்த எண்ணுதிப்பெயர்வந்து புணருமாயின் இன்னேனும் இற்றேனும் ஆண்டைக்குஏற்பது ஏற்று நிற்கப்பெறும். எ-று.

பத்து +	ஒன்று, மூன்று, ஆயிரம், கழஞ்சு, கலம், மடங்கு	=	பதினொன்று, ன்மூன்று, னாயிரம், ன்கழஞ்சு, ன்கலம், ன்மடங்கு	(எ-ம்),
பத்து +	ஒன்று, இரண்டு, மூன்று, கோடி, தூணி	=	பதிற்றொன்று, ற்றிரண்டு, ற்றுமூன்று, ற்றுக்கோடி, ற்றுத்தூணி	(எ-ம்),
ஒன்பது +	ஆயிரம், கழஞ்சு கலம், மடங்கு	=	ஒன்பதினாயிரம், ன்கழஞ்சு, ன்கலம், ன்மடங்கு	(எ-ம்),
ஒன்பது +	ஒன்று, இரண்டு, குறுணி	=	ஒன்பதிற்றொன்று, றிரண்டு, றுக்குறுணி	(எ-ம்) வரும்.

பிறவுமன்ன.

வி-பு. பதினொன்று என்பது உம்மைத்தொகை. பதிற்றொன்று என்பது பண்புத்தொகை. பிறவும் கண்டுகொள்க.

பத்துக்கோடி, ஒன்பதுகோடி என இந்நிலைமொழிகள் தன்னியல்பின் நிற்றலே யன்றி வழக்கின்கண்ணும் சான்றோர் செய்யுட்கண்ணும் இவ்வாறமைந்து கிடந்தனவும் சொல்கவென்பார் ஏற்பதேற்கும் என்றும், ஒன்பதன் ஈற்றுயிர்மெய்யைக்கெடாது குற்றுகரவீற்றுப் பொதுவிதியான் உயிரொன்றுமேகெட இன்னும் இற்றும் ஏற்ப தேற்று நிற்றலின் ஒன்பதும் இற்றே என தன்மையணி யாக்காது, உவமையணியாக்கி இனைந்தே என்றும் கூறினர்.

¶ ஒன்பது என்பதன் இறுதி பத்து என்பதுபோல முரணி நிற்றலின் அதனோடு இதனை மாட்டெறியப்பட்டதெனினும் அமையும்.

கசுஅ. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்-கரந்திட வொற்று னவ்வாகு மென்ப.

இது பத்து என்னும் நிலைமொழிக்கு உயிர்வரினுக்குறள் என்னும் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. இரண்டு - இரண்டென்பது, முன் வரின் - முன்வருமாயின், பத்தின் - பத்தென்னு நிலைமொழியினது, ஈறு உயிர்

¶ ஒன்பதன் இறுதி பத்துஎன்பதுபோல நிற்றலின் அதனோடு இதனை மாட்டெறியப்பட்டதென்க. இது மாட்டெறிந்தொழுகல் என்னும் உத்தி என்பர்.—இராமாநுசகவிராயர்.

மெய் - ஈற்றிலுள்ள துகரவுயிர் மெய்யானது, கரந்திட - கெட, ஒற்று - தகரமெய், ன ஆகும் - னகர்மெய்யாகத் திரியும், என்ப - என்று சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. இரண்டென்பது வரின் பத்தென்னும் நிலைமொழியினது ஈற்றுயிர் மெய்கெடத் தகரவொற்று னகரவொற்றாகத் திரியுமென்று சொல்லுவர் புலவர். எ-று.

[உ-ம்.] பத்து+இரண்டு=பன்னிரண்டு எனவரும்.

வி-பு. உம்மைத் தொகைக்கண்ணும் பண்புத் தொகைக்கண்ணும் இரண்டு என்னும் எண் வருமொழியாய் வருமேனும் முன்வரின் என வருதலைச் சிறப்பித்தமையான் ஒருசொல் நீர்மையாய் சிறந்த உம்மைத்தொகைக்கு இவ்விதி கூறினரென்க.

கசுகூ. ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின் முன்னதின் முன்னல வோட வுயிர்வரின் - வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி.

இது ஒன்பதொழித்த ஒன்பது எண்களாய நிலைமொழிகளுள் மூன்று ஆறு ஏழற்கு எண்ணிறையளவும் பிறவுமெய்தின் என்னுஞ் சூத்திரத்துள் மூன்றுறேழ் குறுகும் என எய்தியதன்மேல் சிறப்புவிதியும், எல்லாவற்றிற்கும் உயிர்வரின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும், மெய்வரின் எய்தாதது எய்துவித்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒன்பது - ஒன்பதென்கிற எண் ஒன்றனையும், ஒழித்த - ஒழித்துநின்ற, எண் ஒன்பதும் - ஒன்றுமுதல் பத்திறுகிய ஒன்பதெண்ணினையும், இரட்டின் இரட்டித்துச் சொன்னால், முன்னதின் - நிலைமொழியினது, முன் அல - முதலெழுத்தல்லாதவைகளெல்லாம், ஓட - கெட, உயிர்வரின் - உயிர்முதலான எண் வரின், வ உம்-வகரமெய்யும், மெய் வரின் - மெய்முதலான எண் வரின், வந்ததும் - வந்தமெய்யும், மிகல் - மிகுதல், நெறி-முறையாம். எ - று.

பொ-ரை. ஒன்பது என்னும் எண் ஒன்றனையும் ஒழித்து நின்ற ஒன்றுதி பத்தீறான எண் ஒன்பதனையும் இரட்டித்துக் கூறின், நிலைமொழி முதலெழுத்து ஒன்று நிற்க அல்லன எல்லாங்கெட உயிர்முதலான எண் வரின் வகரவொற்றும், மெய்முதலான எண்வரின் வந்த ஒற்றும் மிகுதல் முறைமையாம். எ-று.

[உ-ம்.]

ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று, ஆறு + ஆறு = அவ்வாறு,
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு, ஏழு + ஏழு = எவ்வேழு,
மூன்று + மூன்று = மும்மூன்று, எட்டு + எட்டு = எவ்வெட்டு,
நான்கு + நான்கு = நந்நான்கு, பத்து + பத்து = பப்பத்து
ஐந்து + ஐந்து = ஐயைந்து, என வரும்.

வி-பு. நெறி என்றமையானே நான்கிற்குக் குறுக்கமும்; ஐயைந்து என்புழி ஐகாரக் குறுக்கத்தின் முன் ஒற்று இரட்டாமையும், ஒரோவொன்று, ஒவ்வொன்று, கழக்கழஞ்சு, கலக்கலம் என இரட்டித்து வருவனவும், குற்றுகரப் புணர்ச்சிவிதியுள் கூறுதொழிந்து நெறிப்பட வருவன உள வேல் அவையுஞ் சொள்க.

ஒவ்வொன்று கோடு என்றால் இம்முறையே பலவற்றையுங் கொடு எனப் பொருள்தந்து நிற்றலின் இஃதடுக்கன்று, வேற்றுமை அல்லனவெல்லாம் அல்வழியாதலின் எழாத்தொடராய் அல்வழியுள் ஒன்றுமென்க.

௨௦௦. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.

இது ஊகார ஈற்றுப் பூவென்னும் பலபொருள் ஒருசொல் முன்வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. பூ பெயர் முன் - பூவென்னும் பலபொரு ளொரு சொன்முன், இனம் மென்மையும் - வருகிறவல்லின மிகுதலல்லாமல் அவற்றிற் கினமாகிய மெல்லினமும், தோன்றும் - மிகும்.

பொ-ரை. பூ வென்னும் பலபொருட் பெயர்ச்சொன்முன் வல்லினம் வரின் பொதுவிதியான் க ச த ப மிகுதலே யன்றி அவற்றிற் கினமாகிய மெல்லொற்றுகளும் மிகும். எ-று.

வி-பு. இப்பொருட்டாய பூப்பெயரென விதவாமையின் பலபொருள் ஒருசொல் என்பது பெற்றும்.

[உ-ம்.]

பூ + { கொடி = பூங்கொடி, சோலை = பூஞ்சோலை, } பூ + { தடம் = பூந்தடம், பணை = பூம்பணை } என வரும்.

இவற்றுள் பூஎன்பது மலரேல் இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகையாகவும், பொலிவேல் பண்புத்தொகையாகவும், பூங்கணை என்புழி மலர் என்னும் ஒருபொருட்டாய் மூன்றும் வேற்றுமை யுருபும் பயனும் உடன்றொக்க தொகையாகவும், பண்புத்தொகையாகவும்,

பூங்கரும்பு என்பது போலிவு என்னும் ஒருபொருட்டாய் பண்புத் தொகையாகவும் வருவன காண்க.

உறழ்ந்துவருமென உறுதிகூறுது, பூக்கோடி என வல்லினம் மிகுதலே உம்மையால் தழீஇக்கொண்டமையின், இவ்விருவகைத்தோன்றலும் ஏற்ற பெற்றி கொள்க.

௨௦௧. இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே

இது ஏகார ஓகார இடைச்சொற்கள் முன்வரும் வல்லினத்திற்குஇயல் பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கல் உணர்த்து கின்றது.

ப-ரை. இடைச்சொல் - இடைச்சொல்லாகிய, ஏ (முன்)- ஆறேகாரத்தின் முன்னும், ஓ முன் - எட்டோகாரத்தின் முன் னும், வரின்-வல்லினம் வந்தால், இயல்பு-பொதுவிதியான்மிகாது இயல்பாகும். எ-று.

பொ-ரை. இடைச்சொல்லாய ஆறு ஏகாரத்தின் முன்னும் எட்டு ஓகாரத்தின் முன்னும் வல்லினம் வருமாயின் பொதுவிதியான் மிகாது இயல் பாம். எ-று.

[உ-ம்.] அவனே+கொண்டான் = அவனேகோண்டான் என்பது பிரிநிலையும்,வினவும், ஈற்றசையும்,தேற்றமும் ஆகிய ஏகாரத்தின் முன்னும்,

அறமே+பொருளே+காமமே+துறவே=அறமே பொருளே காம மே துறவே என்பன எண் ஏகாரத்தின் முன்னும்,

'ஏயெதனையென்றோரிருடிவினவ' [ஏயெ+தினை=ஏயெதனை,] என னும் இசைநிறை ஏகாரத்தின் முன்னும்,

அவனோ+கொண்டான் = அவனோகோண்டான் என்பது ஒழியிசை முதலிய எட்டு ஓகாரமுன்னும் வல்லினம் இயல்பாதல் காண்க.

இவ்விடைச்சொல் ஒன்று பலபொருள் தருமாறு இடைச்சொல்லிய லுள் காட்டுதும்.

௨௦௨. வேற்றுமை யாயி னைகா னிறுமொழி - யீற்றழி வோடுமம் வேற்பவு முளவே.

இது ஐகார ஈற்று நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தல் உணர்த்து கின்றது.

ப-ரை. ஐகான் இறு மொழி-ஐகார ஈற்றுச்சொற்கள், வேற்றுமை ஆயின்-வேற்றுமைக்கண் வருமாயின், ஈறு அழிவோடும் - ஈற்றைகாரங் கெடுதலுடனே, அம் - அம்முச்சாரியை, ஏற்பவும்-பெற்று முடிவனவும், உள - சிலவுள. எ-று,

பொ-ரை. ஐகார ஈற்றுச்சொல் வேற்றுமைக்கண் வருமாயின் இறுதி ஐகாரங் கெடாது அம்முச்சாரியை பெற்று முடிவனவும், ஐகாரங்கெட்டு அம்முச்சாரியைபெற்று முடிவனவும் சிலவுளவாம். எ-று.

விசு. உம்மைகள் இரண்டனுள் முன்னையதௌதிர்மறைக்கண்ணும், பின்னையது எதிர்மறையோடு இழிவுசிறப்பின் கண்ணும் வந்தன.

[உ-ம்.] புன்னை+கானல்=புன்னையங்கானல், கொல்லை+சாரல்=கொல்லையஞ்சாரல், கொன்றை+தீங்குழல் = கொன்றையந்தீங்குழல், முல்லை+புறவம் = முல்லையம்புறவம் என ஐகாரம் கெடாது அம்முச்சாரியை பெற்றன.

வழுதுணை + காய் = வழுதுணங்காய், ஆவிரை+பூ=ஆவிரம்பூ, ஆவிரை+வேர்=ஆவிரம்வேர் என ஐகாரம் கெட்டு அம்முச்சாரியை பெற்றன.

தகுதியாக்காது ஏற்பன என்றமையான் முல்லைப்புறவம் எனவரினும் கொள்க.

அம்முஞ் என்னுமையின் உம்மையான் வல்லினந் தழீஇயதன்று என்க.

வருமொழி வரையாமையின் நாற்கணத்துள் ஏற்பன கொள்க.

௨0௯. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரி - னைபோ யம்முந் திரள்வரி னுறழ்வு - யட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

இது பனை என்னும் நிலைமொழிக்கும், அதனோடு புணருஞ் சில வருமொழிகட்கும் இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தானும், மேலைச் சூத்திரத்தானும் எய்தியவற்றை இகந்துபடாமற் காத்தலும், இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. பனை முன்-பனையென்னும்பெயர்முன், கொடி வரின்-கொடியென்னும் பெயர் வருமாயின், மிகலும்-வந்ததுமிகுதலும், வலி வரின்-க ச த ப க்கள் வருமாயின், ஐ போய் - நிலைமொழியீற்றைகாரங்கெட்டு, அம் உம்-அம்முப்பெறுதலும், திரள் வரின்-

திரளென்னும் பெயர் வருமாயின், உறழ்வும் - வந்தது மிகுந்தும், ஐ போய்-அம்முப்பெற்றும் விகற்பித்தலும், அட்டு உறின்-அட்டென்னும்பெயர் வருமாயின், ஐ கெட்டு - ஐகாரங்கெட்டு, அ நீள்வும் - வருமொழி அகரம் ஆகாரமாதலும், ஆம் - ஆகும், வேற்றுமை - வேற்றுமைக்கண். எ-று.

போ-ள். பனை என்னும் பெயர்முன் கொடி என்னும் பெயர் வருமாயின் வந்தது மிகவும், க ச த ப க்கள் வரின் நிலைமொழியீற்று ஐகாரங் கெட்டு அம்முப்பெறுதலும், திரள் என்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும், ஐபோய் அம்முப்பெற்றும், தம்முள் உறழ்தலும், அட்டு என்னும் பெயர் வருமாயின் ஐகாரங்கெட வருமொழி அகரம் ஆகாரமாதலுமாம் வேற்றுமைக்கண். எ-று.

வி-பு. கெட்டு என்பது செய என் எச்சம் திரிந்து நின்றது.

[உ-ம்]

பனை + கொடி = பனைக்கோடி { என வந்தது மிகுந்தன.

பனை + {காய், செறும்பு, தூண், பழம் = {பனங்காய், ஞ்செறும்பு, ந்தூண், ம்பழம்

என ஐகாரங்கெட்டு அம்முச்சாரியை பெற்றன.

பனை + {திரள் = {பனைத்திரள், பனந்திரள்

என வந்தது மிகுந்தும், ஐ போய் அம்முப்பெற்றும், உறழ்ந்தும் வந்தன.

பனை + {அட்டு = {பனாட்டு

என ஐகாரங்கெட்டு வருமொழி அகரம் ஆகாரமாயின.

பனைக்கோடி என்பது பனையையெழுதியகோடி. பனாட்டு என்பது பனையினது தீங்கட்டி.

உயிரீற்றுப்புணரியல், சூத்திரம் ருரு.

முற்றிற்று.

நான்காவது

மெய்யீற்றுப்புணரியல்.

உ0ச. உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.

இது மெய்யீற்றுப் பதம்புணரும் சிறப்புப்புணர்ச்சி இவ்வியலாற்கூறப்படுதலின் மெய்யீற்றுமுன் உயிர்முதல்வந்து புணருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. உடல் மேல்-நிலைமொழி யீற்றினின்ற மெய்யின்மேல், உயிர் - வருமொழி முதலுயிர், வந்து - வந்து, ஒன்றுவது - ஒன்றுபட்டிணங்கி நிற்பது, இயல்பு - இயல்புப்புணர்ச்சியேயாம்.

போ-ரை. நிலைமொழி யீற்றினின்ற மெய்யின்மேல் வருமொழி முதலுயிர்வந்து ஒன்றுபட்டிணங்கி நிற்பது இயல்புப் புணர்ச்சியேயாம். எ-று.

[உ-ம்.]

தோன்றல் + அழகன் = தோன்றலழகன்,
உரிஞ் + அழகிது = உரிஞழகிது,
புகழ் + அழகிது = புகழழகிது, } என அல்வழியிலும்,

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் } எனவேற்றுமையிலும் காண்க. பிறவுமன்ன.

வி-பு. இவ்வாறு மெய்யும் உயிரும் கூடி உயிர்மெய்யாய் மெய்யினது புள்ளியும் உயிர்வடிவமும் கெட்டுநிற்றலின் விகாரமாமென்பாரை விலக்கி, சிறந்த ஒலிவடிவின் யாக்கையும் உயிரும்போல் மெய்யினது மாத்திரை உள்ளடங்க ஒன்றுபட்டு, இரட்டையிலைபோல் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாய் இணங்கிநிற்றலானும், ஒன்றுத தனிக்குறில் முன்னொற்று மீதலியன விகாரப்படுதலானும் ஒன்றுவதியல்பே என்றார். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

உ0ரு. தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

இது எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. தனி குறில் முன்-தனிக்குற்றெழுத்தின் முன்னின்ற, ஒற்று - மெய்யானது, உயிர் - உயிரானது, வரின் - வந்தால், இரட்டும் - இரட்டித்து நிற்கும், எ-று.

போ-ரை. தனிக்குறின்முன்னொற்று உயிர்வரின் இரட்டித்து நிற்கும். எ-று.

[உ-ம்.]

மண் + அரிது = மண்ணரிது,
பொன் + அரிது = பொன்னரிது, } என அல்வழியிலும்,

மண் + அகம் = மண்ணகம்,
பொன் + ஒளி = பொன்னொளி } என வேற்றுமையிலும்

தனிக்குறில்முன் ஒற்று இரட்டித்தன. பிறவுமன்ன.

உ௦௯. தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந் - துன்னுமென்று துணிநரு முளரே.

இது யகரமொழிந்த பத்துமெய் முன்னும் வரும் யகரத்திற்கு எண்மூ வெழுத்தீற்று என்னுஞ் சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. தன் ஒழி - தன்னையொழிந்த, மெய் முன் - ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்கிற பத்துமெய்களின் முன்னும், ய-யகரமானது, வந்தால், இகரம்-இகரச்சாரியையை, துன்னும் என்று - தன்முன் பொருந்துமென்று, துணிநர் உம் - அருதிற் கொள்வாரும், உளர் - சிலருளர். எ-று.

பொ-ரை. யகரம் தன்னையொழிந்த ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்துமெய் முன்னும் வந்தால் தன்முன் இகரச்சாரியையைப் பொருந்துமென்று அருதிற்கொள்வாரும் சிலருளர். எ-று.

[உ-ம்.]

வேள் + யாவன் = வேளியாவன்,
மண் + யாது = மண்யாது } என அல்வழியிலும்,

வேள் + யானை = வேளியானை,
மண் + யானை = மண்ணியானை } என வேற்றுமையிலும்

யகரமெய்வர ஒழிந்தமெய் இகரச்சாரியை பெற்றன. பிறவுமன்ன.

எதிர்மறையாயஇழிவுசிறப்பும்மையான் இகரம் துன்னுது பொதுச் சூத்திரத்தான் இயல்பாமென்பார் பெரும்பாலரென்க.

உ௧௦. ‡ ஞ ண ந ம ல வ ள ன வொற்றிறு தொழிற்பெய-ரேவல் வினைநனி யவ்வன் மெய்வரி - னுவ்வுறு மேவ லுறசில சில்வழி.

இது முதனிலைத்தொழிற்கும் ஏவற்கும் பொதுவாய சில நிலைமொழிகட்கு எய்யாதது எய்துவித்தல் உணர்த்துகின்றது.

---

‡ இது ஒரு சூத்திரத்துள் ஒன்றனை ஒன்றொழித்தல் என்பர்.—இலக்கணக்கோத்துநூலார்.— பாயிரம், சூ. ௬.

ப-ரை. ஞ ண ந ம ல வ ள ன-ஞ ண ந ம ல வ ள ன என்கிற, ஒற்று - எட்டு மெய்களும், இறு - இறுதியாகிய, தொழிற்பெயர் - முதனிலைத் தொழிற்பெயர்களும், ஏவல் வினை - ஏவல் வினைகளும், ய அல் மெய் - யகரம் ஒழிந்த மெய்கள், வரின்-வருமாயின், நனி பெரும்பாலும், உ - உகரச்சாரியையை, உறும் - இறுதிக்கண்பொருந்தும், சில ஏவல்-சில ஏவல்வினைகள், சில் வழி -சில் இடங்களிலே, உறா - அவ் வுகரச்சாரியையைப் பொருந்தாவாம். எ-று.

பொ-ரை. யரழக்களையொழிந்த எட்டொற்றும் இறுதியாகும் முதனிலைத் தொழிற்பெயரும், ஏவல்வினையும் மேல்விதந்த யகரமொழிந்த மெய் வருமாயின் பெரும்பாலும் உகரச்சாரியையை இறுதிக்கண் பொருந்தும்; சில ஏவல்வினை அவ்வுகரச் சாரியையைப் பொருந்தா சில இடங்களின்.

வி-பு. ஏவல்வினையோடு எண்ணினமையின் முதனிலைத் தொழிற்பெயரொன்பதுபெற்றும்.

[உ-ம்.]

உரிஞ், உண், பொருந், திரும், தின்	+	கடிது, நீண்டது, வலிது	=	உரிஞுக்கடிது, ஞுநீண்டது, ஞுவலிது, &c. &c.	எனத் தொழிற்பெயர் அல்வழியிலும்,
	+	கடுமை, நீட்சி, வன்மை	=	உரிஞுக்கடுமை, ஞுநீட்சி, ஞுவன்மை, &c. &c.	எனத் தொழிற்பெயர் வேற்றுமையிலும்,
	+	கொற்றா, நாகா, வளவா	=	உரிஞுகோற்ற, ஞுநாகா, ஞுவளவா, &c. &c.	என ஏவல்வினையும் உகரம்பெற்றன; பிறவுமின்ன.

உரிஞு, உண்ணு என வருமொழியின்றி உகரம்பெறுதலும்;

மணலைவாரு, சருகைவாரு எனச் சிறுபான்மை விலக்கிய ஈறு உகரம் பெறுதலும் உளவென்பார் நனி என்றும்; யகரம் வருமொழிக்கு இகரம் விதித்தலின் அதனோடு புணரும் இந்நிலைமொழியிற்றி உகரம் பெறுதென்பார் யவ்வல்மெய் என்றும்;

உண்ணுகோற்ற, உண்கோற்ற என உகரம்பெற்றும் பெறுதும் வருவனவும்;

உரிஞுகோற்ற என உகரம்பெற்றே வருவனவும் உளவென்பார் சில் வேவலுற சில்வழி என்றும் கூறினர்.

போ-ரை. தனிக்குறி லொன்றனையும் ஒழிந்து ஒருமொழி தொடர் மொழிகளைச் சார்ந்த ணகார னகாரங்கள் வருமொழிக்கு முதலாகவந்த நகரம் மயக்கவிதியின்மையின் திரிந்தவிடத்து இயல்பாகாது கெடுதலைப் பொருந்தும். எ-று.

[உ-ம்.]

பாண், தூண், பசுமண், அரசன், செம்பொன்	+ நன்று =	பாணன்று, தூணன்று, பசுமணன்று, அரசனன்று, செம்பொனன்று	என அல்வழியிலும்,
	+ நன்மை =	பாணன்மை, தூணன்மை, பசுமணன்மை, அரசனன்மை, செம்பொனன்மை	என வேற்றுமையிலும்

வருமொழி நகரம் திரிந்தழி ண னக்கள் கெட்டன.

உகக. சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி - யியல்பாம் வேற் றுமைக் குணவெண் சாண்பிற - டவ்வா கலுமா மல்வழி யும்மே.

இது ணகரவீற்றுள் சிலவற்றிற்கு வேற்றுமைக்கண் எய்தியது விலக்கலும், சிலவற்றிற்கு அல்வழிக்கண் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. சாதி (பெயர்) - சாதிபற்றி வரும் பெயர்களுக்கும், குழூஉ(பெயர்) - திரள்பற்றி வரும்பெயர்களுக்கும், பரண் கவண் பெயர்-பரண்கவண் என்னும்பெயர்களுக்கும், இறுதி-ஈற்றுணகரமானது, வேற்றுமைக்கு உம்-வேற்றுமைக்கண்ணும்,இயல்பாம்-வல்லினம்வந்தாலியல்பாகும், உணவு எண் (பெயர்) - உணவிற்குறிய எள்ளின் திரிசொல்லாகிய எண்ணெனினும் பெயருக்கும், சாண் (பெயர்) - சாணென்னும் நீட்டலளவைப் பெயருக்கும், (இறுதி)-ஈற்றுணகரமானது, அல்வழி உம் - அல்வழிக்கண்ணும், ட ஆகல் உம் ஆம் - வல்லினம்வந்தால் திரிந்து டகரமாதலும் பொருந்தும், எ-று.

போ-ரை. சாதிபற்றியும் திரள்பற்றியும் வரும் பெயர்களும், பரண் கவண் என்னும் பெயர்களுமானவற்றின் இறுதி ணகரம் வேற்றுமைக்கண்ணும் வல்லினம்வந்தால் இயல்பாம்; எண்ணலளவையன்றி உணவிற்குறிய எள்ளின் திரிசொல்லாய எண் என்னும் பெயரும், சாண்என்னும் நீட்டலளவைப்பெயரும் வல்லெழுத்துக்கள் வரின் திரிந்து டகரமாதலும் பொருந்தும் அல்வழிக்கண்ணும். எ-று.

வி-பு. அல்வழிக்கண் இறந்தது தழீஇய எச்சவும்மையை வேற்றுமைக்கண்ணுங் கூட்டுக.

[உ-ம்.]

பாண், உமண் } + { குடி; சேரி, தோட்டம், பாடி = { பாண்குடி, சேரி &c. &c. உமண்குடி, சேரி, &c. &c. } (எ-ம்),

அமண் } + { ஷ = { அமண்குடி, சேரி, தோட்டம், &c. &c. } (எ-ம்),

பாண், கவண் } + { கால் = { பாண்கால், கவண்கால் } (எ-ம்)

வேற்றுமைக்கண் ணகரம் இயல்பாயின.

¶ எண் + { கடிது, சிறிது, தீது, பெரிது = { எட்கடிது, ட்சிறிது, ட்டீது, ட்பெரிது } (எ-ம்),

சாண் + { கோல் = { சாட்கோல் } (எ-ம்)

அல்வழிக்கண் ணகரம் டகரமாகத் திரிந்தன.

டவ்வாகலும் என்னும் இறந்தது தழீஇய வெச்ச இழிவுசிறப்பும்மையான் எண்கடிது, சாண்கோல் என இயல்பாதலே வலியுடைத்தென்க.

பிற என்ற மிகையானே வேற்றுமைக்கண் பாணக்குடி என அகரச் சாரியை பெறுதலும்; அட்டேண்டுழனி என்னும் இயல்பும்; மண்குடம், மட்குடம் என்னும் உறழ்வும்; இருவழிக்கண்ணும் இன்னும் ணகரவீற்றுள் அமையாதன உளவேல் அவையுங் கொள்க.

சாதியும், குழுவும் ஆகுபெயராயவற்றை உடையராய உயர்திணைப் பொருளை உணர்த்தி நின்றன வேனும் தெய்வம் என்றாற்போல, சொல்லான் அஃறிணையாதலின் பொதுப்பெய நுயர்திணைப் பெயர்க ளீற்று மெய்வலிவரி னியல்பாம் என்பதனான் அமையாவாயின. மேல்வரும் னஃகான் கிளைப்பெயரும் அது.

உகஉ. னஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகா - னடைவுமாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது னகரவீற்றுச் சாதிப்பெயர்க்கு வேற்றுமைக்கண் எய்திபது விலக்கலும், பிறிதுவிதி வகுத்தலும் உணர்த்துகின்றது.

¶ எண், சாண் என்னும் மொழியிறுதி ணகரத்தை ஊண்சாண்டவ் வாகலும் என்றது இலக்கணை என்பர்.—இராமாநுசகவிராயர்.

ப-ரை. ன கரன்-னகரத்தை யிறுதியிலுடைய, கிளை பெயர் - சாதிப்பெயர், இயல்பும் - வல்லினம்வரினறு திரியாது இயல்பாத லும், அ நரன் அடைவும் - அகரச்சாரியை பெறுதலும், வேற் றுமை பொருள் கு - வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண், ஆ கும் - ஆகும். எ-று.

போ-ரை. னகரவீற்றுச்சாதிப்பெயர் வல்லினம்வரினறுதிரியா தியல் பாதலும், அகரச்சாரியை பெறுதலுமாம் வேற்றுமைப் பொருட் புணர்ச் சிக்கண். எ-று.

[உ-ம்]

¶ எயின் +	குடி	= எயின்குடி,	எயினக்குடி,
	சேரி	= எயின்சேரி,	எயினச்சேரி,
	தோட்டம்	= எயின்தோட்டம்,	எயினத்தோட்டம்,
	பாடி	= எயின்பாடி	எயினப்பாடி

என வேற்றுமைக்கண் வல்லினம்வரனகரம் முறையே இயல்பாயும், அகரச் சாரியை பெற்றும்வந்தன.

வி-பு. பொருட்கே என்ற மிகையானே எயின்மாபு, எயினவாழ்வு, எயினவணி என ஏனைக்கணம் வரின் அகரச்சாரியை பெறுதலும்; எயினக் கன்னி, எயினப்பிள்ளை, எயினமன்னன் என அல்வழிக்கண் அகரச்சா ரியை பெறுதலும் கொள்க.

கிளை என்னும் பலபொருள் ஒருசொல் ஈண்டு சாதிமேல் நின்றது.

உகா௲ மீன்றவ் வொடுபொருஉம் வேற்றுமை வழியே.

இது மீன் என்னும் சொற்கு வேற்றுமைக்கண் எய்தியது ஒருவாற் றான் விலக்கல் உணர்த்துகின்றது.

ப-ரை. மீன் - மீனென்னும் மொழியின் இறுதினகரம், வேற்று மைவழி - வேற்றுமைக்கண் வல் எழுத்து வரின், ற ஒடு - றகரத் தோடு, பொருஉம் - உறழ்ந்துவரும். எ-று.

போ-ரை- மீனென்னும் மொழி இறுதி னகரம் வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின் றகரத்தோடு உறழ்ந்து வரும். எ-று.

[உ-ம்]

மீன் +	கண்	= மீன்கண்,	மீற்கண்
	செவி	= மீன்செவி,	மீற்செவி,
	தலை	= மீன்தலை,	மீற்றலை,
	புறம்	= மீன்புறம்,	மீற்புறம்.

என வேற்றுமைக்கண் வல்லினம்வர னகரம் றகரத் தோடுஉறழ்ந்தும் வந்தன.

¶ எயின் வேட்சாதி எனவிசிப்பர்.—இராமாநுசகவிராயர்.

நாசமாகல் இக்காலத்துப் பயின்றுவராதேனும் தொன்னெறி யாதலின் அணைவழி நிற்க வென்பார் வழியே என்றார்.

உகச. தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை - மேவினி றுதி யழிவும் வலிவரி - னீறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

இது தேன் என்னுஞ்சொற்கு ண ன வல்லினம்வரட் டறவும் என எய்தியது விலக்கலும், பிறவரி னியல்பாகும் வேற்றுமைக் கல்வழிக் கனைத்துமெய்வரினு மியல்பாகும்மே என எய்தியது இகந்துபடாமற் காத்தலும், இச்சூத்திரத்து இயல்பும் என எய்தியதன்மேற் சிறப்புவிதியும், வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. தேன் மொழி - தேனென்னுஞ்சொல், மெய் வரின் - மூவின மெய்களும்வரின், இயல்பும் - இறுதிநகரமெய் இயல்பாதலும், மென்மை மேவின்-மெல்லினம் வரின், இறுதி-அம்மெய், அழிவு உம் - இயல்பாதலே யன்றிக் கெடுதலும், வலி வரின்-வல்லினம் வரின், ஈறு - அம்மெய், போய் - இயல்பாதலேயன்றிக் கெட, வலி மெலி மிகல் உம் - வந்த வல்லினமானது அதற்கின வாவது மிகுதலும், ஆம்-ஆகும், இரு வழி - இருவழிக்கண்ணும்.

பொ-ரை. தேன் என்னுஞ் சொல் மூவினமெய்யும் வரின் இறுதி னகரம் இயல்பாதலும்; மெல்லினம் வரின் இவ்விறுதி இயல்பாதலே யன்றிக் கெடுதலும்; வல்லினம் வரின் இறுதி இயல்பாதலே யன்றிக்கெட வந்த வல்லினமாதல் அதற்கினமாதல் மிகுதலுமாம் இருவழிக்கண்ணும். எ-று.

¶ வி-பு. "குறிலணை விலா ண ன க்கள் வந்த-நகரந் திரிந்துழி நண்ணுங்கேடே" என்றமையான் இயல்பிற்கு நகரமொழிந்த எட்டுமெய்யும் வருவித்துக் காண்க.

¶ "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்தியதை இதில் மெய்வரி னியல்பென்றதனுள் வேற்றுமையில்வலிவர இயல்பாதலும், "வலிவரி னீறு போய் வலிமெலி மிகலுமாம்" என்றதும் விலக்கிற்றெனவும்; "அல்வழிவலி வர இயல்பாம்" என எய்தியதை இதில் மெய்வரினியல்பென்றதனுள் அல்வழியில் வலிவர இயல்பாதல் காத்ததெனவும்; ண ன வென ஈறுபற்றிச் சொன்ன பொதுவிதியை ஒருபக்கந் தழுவி இச் சூத்திரத்தால் இந்த ஒருசொல்லுக்குவிதி கூறுதலால் எய்தியதன்மேல் சிறப்புவிதியெனவும்; "அவ்வழிக் கனைத்து மெய்வரினும் இயல்பாம்" என்றதனுள் அல்வழியில் இயல்பாகவலி வருதல் அதன்மேற் சிறப்பாதலால் வருமொழிக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி எனவுங் காண்க என்பர்.—இராமாநுசகவிராயர்.

[உ-ம்]

தேன்	+	கடிது = தேன்கடிது, ஞான்றது = தேன்ஞான்றது, யாது = தேன்யாது	என	அல்வழியிலும்,
	+	கடுமை = தேன்கடுமை, மலிவு = தேன்மலிவு, யாப்பு = தேன்யாப்பு	என	வேற்றுமையிலும்

னகரம் மெல்லின மெய்வர இயல்பாயின.

தேன்	+	மொழி = தேன்மொழி, தேமொழி	என	அல்வழியிலும்,
	+	மலர் = தேன்மலர், தேமலர்	என	வேற்றுமையிலும்

னகரம் மெல்லின மெய்வர இயல்போடு கெட்டும் வந்தன.

தேன்	+	குழம்பு = தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு,	என	அல்வழியிலும்,
	+	குடம் = தேன்குடம், தேக்குடம், தேங்குடம்	என	வேற்றுமையிலும்

னகரம் வல்லின மெய்வர இயல்பாயும், வந்த வல்லினமும் அதற் கின மாகிய மெல்லினமும் மிகுந்தும் வந்தன. பிறவு மன்ன.

தேன் என்பது பலபொருளொருசொல்லாதலின்மணங்கமழ்சோலை என்னும் பொருட்டாய் தேங்கமழ்சோலை என இவ்விகாரங்கள் ஏற்று வருவனவும் கொள்க.

உகடு. மாமலெகின்மொழி யியல்பு மகர மருவ் வலிமெலி மிகலு மாகும்.

இது எகின் என்னுஞ்சொற்கு வேற்றுமைக்கண் ணனீ வல்லினம் வரட்டறவும் என எய்தியது விலக்கவும், அகர மருவ என்றமையின் அச் சூத்திரத்தால் இருவழிக்கண்ணும் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்த லும்,வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. மரம் அல் - மரமல்லாத, எகின் மொழி - அன்னத் தையுணர்த்தும் எகின் என்னுஞ்சொல், இயல்பும் - வேற்றுமை யிலும் வல்லினம்வர இறுதியியல்பாதலும், அகரம் மருவ - இரு வழியிலும் அகரச்சாரியை பொருந்த, வலி மெலி மிகலும் - வல் லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும், ஆகும்-ஆகும்.

போ-ரை. மரமன்றிப் பறவையாய அன்னத்தை உணர்த்தும் எகின் என்னுஞ்சொல் வேற்றுமைக்கண்ணும் வல்லினம்வர இறுதி யியல்பாதலும், இருவழியும் அகரச்சாரியையைப் பொருந்த வரும்வல்லெழுத்தாதல் அவற்றிற்கு இனமாதல் மிகுதலுமாம். எ-று.

[உ-ம்.]

எகின் + { கால், சிறை / தலை, புறம் } = { எகின்கால், தலை, புறம் } என வேற்றுமைக்கண் னகரம்இயல்பாயிற்று,

எகின் + { புள் } = { எகினப்புள், எகினம்புள் } என அல்வழியிலும்,

எகின் + { கால் } = { எகினக்கால், எகினங்கால் } என வேற்றுமையிலும்

அகரம் மருவ வலிமெலி மிகுந்தன.

அகரம் மருவுதற்கு வருமொழி வரையாமையின் நாற்கணமுங்கொள்க.

[வ-று.]

எகின் + { மாட்சி, = எகினமாட்சி, / வாழ்க்கை, = எகினவாழ்க்கை, / அழகு = எகினவழகு } எனவரும். பிறவுமன்ன.

உகசு. குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே.

இது குயின் ஊன் என்னுஞ் சொற்கட்கு ணன வல்லினம் வரட்டறவும் என எய்தியது விலக்கல் உணர்த்துகின்றது.

ப-ரை. குயின் - குயின் என்னும் பெயரும், ஊன் - ஊன் என்னும் பெயரும், வேற்றுமைக்கண் உம் - வேற்றுமையினிடத்தும், இயல்பு - இயல்பாகும். எ-று.

போ-ரை. குயினென்னும் பெயரும் ஊனென்னும் பெயரும் வல்லினம் வரின் அல்வழிக்கண் இயல்பாதலேயன்றி வேற்றுமைக்கண்ணும் இயல்பாம். எ-று.

[உ-ம்]

{ குயின் / ஊன் } + { கடுமை, சிறுமை, / தீமை, பெருமை } = { குயின்கடுமை, சிறுமை, தீமை, பெருமை / ஊன்கடுமை, சிறுமை, தீமை, பெருமை }

என வேற்றுமைக்கண் வல்லினம்வர னகரம் இயல்பாயின.

குயின் = மேகம்.

உகஎ. மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய - கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.

இது மின் பின் பன் கன் என்னும் நான்கு சொற்கும் ண ன வல்லினம் வரட் டறவும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும், ஈண்டு அகாரச்சாரியை முன்வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினுஞ் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. மின் பின் பன் கன் - மின்முதலிய நான்கு சொற்களும், தொழிற்பெயர் அனைய - தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பொருந்தும், கன் - இவற்றுட் கன்னென்னுஞ்சொல், அ ஏற்று - அகாரச்சாரியையும் பெற்று, மென்மையோடு உறழும், வருகிற வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும். எ-று.

பொ-ரை. இந்நான்கு சொல்லும் தொழிற்பெயர்போல யவ்வன்மெய் வரின் உகரச்சாரியைப் பொருந்தும்; இவற்றுள் கன்னென்னுஞ்சொல் உகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையும் பெற்று, வல்லினம்வந்தால் வருமெழுத்தாதல் அதற்கினமாதல் மிகப்பெறும், எ-று.

வி-பு. அவ்வும் என்னும் உம்மையும், பெறும் என்னும் முற்றும் விகாரத்தால் தொக்கன.

[உ-ம்]

மின், பின், பன், கன்	+	கடிது, நன்று, வலிது	=	மின்னுக்கடிது, னுநன்று, &c. &c. பன்னுக்கடிது, னுநன்று, &c. &c.	என அல்வழியிலும்,
	+	கடுமை, நன்மை, வன்மை	=	மின்னுக்கடுமை, னுநன்மை, &c. &c. பன்னுக்கடுமை, னுநன்மை, &c. &c.	எனவேற்றுமையிலும்

யகரமொழிந்த மெய்வர உகரச்சாரியை பெற்றன.

கன் + தட்டு = { கன்னத்தட்டு, கன்னந்தட்டு } என அல்வழியிலும்,

கன் + தூக்கு = { கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு } என வேற்றுமையிலும்

வல்லினம் வர அகரச்சாரியையும் பெற்று, வரும்வல்லினமாதல் அதற்கின மெல்லினமாதல் மிகப் பெற்றன. பிறவுமன்ன.

னன் என்பது சிறுதாரசுத்தட்டு. முன் என்னுஞ்சொல்லை முன்னம் என்றாற்போல, இதனைக் கன்னம் என்றுங் கூறுப.

உ௧அ. தன்னென் னென்பவற் றீற்றுநவ் வன்மையோ - டுறழு நின்னீ றியல்பா முறவே.

இது தன் என்றும் என் என்றும் வரும் விகார மொழிகட்கு ண ன வல்லினம்வரட் டறவும் என எய்தியது ஒருவாற்றான்விலக்கலும்,நின் என்று வரும் விகாரமொழிக்கு எய்தியது விலக்கலும் உணர்த்துகின்றது.

ப-ரை. தன் என் என்பவற்று - தன் என் என்பவைகளினுடைய, ஈற்று - இறுதியிலுள்ள, ன - னகரமெய்யானது, வன்மையோடு உறழும் - வல்லினம்வரின் பொதுவிதியால் றகரமாகத்திரிதலும் அவ்விதியேலாது இயல்பாதலுமாம்,நின்-நின் என்பதனது, ஈறு-இறுதியிலுள்ள னகரமெய்யானது, இயல்பு ஆம்-வல்லினம் வரின் திரியாது இயல்பேயாகும். எ-று.

போ-ரை. தான் என்பது தன் என்றும், யான் என்பது என் என்றும்வரும்விகாரமொழிகளின் ஈற்று னகரம் வல்லினம் வரின் பொதுவிதியானே றகரமாய்த் திரிதலும், இவ்விதி ஏலாது இயல்பாதலுமாம்; நீ யென்பது நின்னென நின்ற விகாரமொழி ஈற்று னகரம் வல்லினம் வரின் திரியாது இயல்பேயாம்.

வி-பு. வன்மை என்றது னகரத்திற்கு இனமாய றகரத்தை.

தன் + பகை = { தன்பகை, தற்பகை, } என் + பகை = { என்பகை, எற்பகை }

என னகரம் இயல்பாயும், அதற்கினமாய றகரமாகத்திரிந்தும் வந்தன. நின் + பகை = நின்பகை என, னகரம் இயல்பாயின.

உறவே என்ற மிகையானே, மீன் பின் முதலியன மீன்கடிது, மீன் கடுமை என இருவழியும் சாரியைப்பேறும் திரிபும்இன்றி வருதலும்; மான் குளம்பு,அழன்கை என வேற்றுமைக்கண்விதவாதன இயல்பாதலும்; வரிற் கொளீஇம் எனச் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தான் இயல்பாகாது திரிதலும்; இன்னும் னகாவீற்றுள் அமையாதன உளவேல் அவையுங் கொள்க.

நின் என்பது விகாரமொழி யாதலின் பொதுப்பெயருயர்திணைப் பெயர்க வீற்றுமெய் வலிவரி னியல்பாம் என்பதனுள் அடங்காதாயிற்று.

௨௧௯. மவ்வீ றொற்றழிந் துயிரீறொப்பவும் - வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.

இது மகரவீறு புணருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ம் ஈறு - மகரவீற்றுச்சொற்கள், ஒற்று - இறுதியிலுள்ள மகரமெய், அழிந்து-கெட, உயிர் ஈறு ஒப்பவும்-விதியுயிரீறாய் நின்று இயல்புயிரீறுபோலப் புணர்வனவும், வன்மை கு- வல்லினம் வரின் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிபவும், ஆகும். எ-று.

பொ-ரை. மகரவீற்றுச் சொற்கள் இறுதி மகரக்கெட விதியுயிரீறாய் நின்று இயல்பு உயிரீறுபோல உயிர்வரின் உடம்படு மெய்தோன்றவும், வல்லினம்வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாகவும் புணர்வனவும், வல்லினம் வரின் கெடாது அவற்றிற்கு இனமாய்த் திரிவனவும் ஆம். எ-று.

[உ-ம்]

வட்டம் + {ஆழி, கடல்} = {வட்டவாழி, வட்டக்கடல்,}
வட்டம் + {நேமி, வாரி} = {வட்டநேமி, வட்டவாரி} என அல்வழியிலும்,

மரம் + {அடி, கால்} = {மாவடி, மாக்கால்,}
மரம் + {நார், வேர்} = {மாநார், மாவேர்,} என வேற்றுமையிலும்

நாற்கணமும்வர மகரம் கெட்டு முறையே உடம்படுமெய் பெற்றும், வல்லின மிகுந்தும், மெல்லினமும் இடையினமும் இயல்பாயும் வந்தன.

நாம் + கடியம் = நாங்கடியம்,
அடும் + களிறு = அடுங்களிறு } என அல்வழியிலும்,

நம் + கை = நங்கை } என வேற்றுமையிலும்

மகரம் வல்லினம்வரக் கெடாது அதற்கினமாகிய மெல்லினமாகத் திரிந்து வந்தன.

வன்மைக்கினமாத் திரியும் என்றமையின், அருத்தாபத்தியால் நாம் பெரியம் எனப் பகரம் வரும்வழித் திரியாதென்பது பெற்றும்.

உஉ௦. வேற்றுமை மப்போய் வலிமேலி யுறழ்வு — மல்வழி யுயி ரிடை வரினியல் பும்முள.

இது சில மகரவீற்றிற்கு மேலைச்சூத்திரத்தான் எய்தியது இகந்துபடாமற் காத்தலும் விலக்கலும், வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. வேற்றுமை - வேற்றுமைக்கண், ம - மகரவிறுதி, போய்-கெட, வலி மெலி உறழ் உம்-வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும், அல்வழி - அல்வழிக்கண், உயிர் - உயிரும், இடை - இடையினமும், வரின் - வந்தால்; இயல்பும் - கெடாது இயல்பாதலும், உள - உளவாம். எ-று.

பொ-ரை. வேற்றுமைக்கண் மகர இறுதிகெட அவற்றின் முன்வரும் வல்லினமாதல் அவற்றிற் கினமாதல் மிகுதலும், அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வரின் கெடாது இயல்பாதலும் உளவாம். எ-று.

[உ-ம்]

குளம் + கரை = { குளக்கரை, குளங்கரை } என வேற்றுமைக்கண் மகரங்கெட வல்லினமாதல், அவற்றிற்கு இனமாதல் மிகுந்தன.

குளம் + அழகிது = குளமழகிது,
அருளும் + அரசன் = அருளுமரசன்,
குளம் + யாது = குளம்யாது,
கொல்லும் + யானை = கொல்லும்யானை
} என அல்வழிக்கண் உயிரும் இடையினமும்வர மகரம் கெட இயல்பாயின. பிறவுமன்ன.

உஉக. நுந்தம் எம்நம்மீற மவ்வரு ஞநவே.

இது சில பொதுப்பெயர்க்கு மவ்வீறெற்றழிந்தென எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. நும் தம் எம் நம்-நும்முதலிய நான்கு விகாரமொழிகளுக்கும், ஈறு ஆம்-இறுதியாகிய, ம - மகரமெய்யானது, வரும் ஞ ந - வருகிற ஞகர நகரங்களாகத் திரியும். எ-று.

பொ-ரை. இந்நான்கு விகார மொழிகளீற்றுமகரம் மேல்வரும் ஞ நக்களாகத்திரியும். எ-று.

[உ-ம்]

{ நும், தம், எம், நம் } + { ஞான், நூல் } = { நுஞ்ஞான், நுந்நூல், தஞ்ஞான், தந்நூல், எஞ்ஞான், எந்நூல், நஞ்ஞான், நந்நூல் } என மகரம் ஞ நக்களாகத் திரிந்தன.

வி-பு. ஞ ந வரின் அவையாய்த் திரியுமெனவே ஒழிந்த மகரம் வரின் நும்மணி என இயல்பாமென்பது பெற்றாம்.

உ௭௨. அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

இது அகம் என்னுஞ்சொற்கு வன்மைக்கினமாத் திரிபவும் என் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. அகம் முனர் - அகம் என்னும் இடப்பெயர் முன், செவி கை-செவி கை என்கிற சினைப்பெயர்கள், வரின்-வந்தால், இடையன - நிலைமொழி நடுநின்ற ககரமெய்யும் அதன்மேலேறிய அகர வுயிரும், கெடும் - அழியும். எ-று.

பொ-ரை. அகம் என்னும் இடப்பெயர் முன்னர் செவி கை என்னும் சினைப்பெயர்வரின் நிலைமொழி இறுதிமகரம் வன்மைக்கினமாத் திரிதலே யன்றி, அதன் இடைநின்ற ககரவொற்றும், அதனை யூர்ந்த அகர வுயிருங் கெடும். எ-று.

உ-ம். "அஞ்செவி நிறைய மந்திரமோதி" [அகம் + செவி = அஞ்செவி.] (எ-ம்),

"அங்கையு ணெல்லி யதன்பயன்" [அகம்+கை = அங்கை.] (எ-ம்) வரும்.

வி-பு. செவி எனச் சகரத்தை முற்கூறினார். "அஞ்சிறைத்தும்பி" [அகம்+சிறை=அஞ்சிறை.] (எ-ம்) வருதலினென்க.

இடையன கெட்டே வரும் என நியதி கூறுமையின் அகஞ்செவி, அகங்கை, அகஞ்சிறை என வருதல் விலக்கப்பட்டன வல்லவென்க.

நகர்ப்புறம் என்பதனைப் புறநகர் என்றாற்போல செவியகம், கையகம் என்னும் இடஉறுப்புத் தற்கிழமைப் பெயரோடு முடிந்த ஆறம் வேற்றுமைத்தொகைச் சொல்லை முன்பின்னாக வழங்கலின், இவ்விரண்டும் இலக்கணப்போலியாய் தழாத்தொடராய அல்வழியுள் ஒன்றுமென்க.

அகஞ்சிறை என்பது ஏனையவற்றின் சிறைபோலப் புறத்தின் கண்ண வன்றி அகத்தின்கண்ணவாகலின் ஏழாம்வேற்றுமைத்தொகை.

உ௭௩. ஈமங், கம்ம முருமந் தொழிற்பெயர்மானு - முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

இது இம்மூன்றுசொற்கும் மவ்வீறொற்றழிந்து என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. ஈம் உம் கம் உம் உரும் உம் - ஈம் கம் உரும் என்கின்ற மூன்றும், தொழிற்பெயர் மானும் - இருவழியிலும் தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச்சாரியை பெ

ற்றுமுடியும், - முதலன், - இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமும் கம்மும், வேற்றுமை கு - வேற்றுமைக்கண், அ் உம் பெறும்-உக ரச்சாரியையல்லாமலும் அகரச்சாரியையும் பெறும். எ-று.

பொ-ரை. இம் மூன்று சொல்லும் இருவழியும் முதனிலைத் தொழிற் பெயர்போல யவ்வன் மெய்வரின் உகரச்சாரியை பெற்று முடியும்; இவற்றுள் முதற்கண் நின்ற ஈமும், கம்மும் வேற்றுமைக்கண் உகரச்சாரியை யன்றி அகரச்சாரியையும் பெறும். எ-று.

வி-பு. இவற்றுள் கம் என்பது பலபொருளொருசொல்லாதலின் எப் பொருளை உணர்த்தி நிற்பினும் இவ்விதிகொள்க.

[உ-ம்]

ஈம், கம், உரும்	+	கடிது, நீண்டது, வலிது	=	ஈழக்கடிது, ழநீண்டது, ழவலிது, கம்ழக்கடிது, ழநீண்டது, ழவலிது, உருழக்கடிது, ழநீண்டது, ழவலிது

என அல்வழியிலும்,

ஈம், கம், உரும்	+	கடுமை, நீட்சி, வன்மை	=	ஈழக்கடுமை, ழநீட்சி, ழவன்மை, கம்ழக்கடுமை, ழநீட்சி, ழவன்மை, உய்ழக்கடுமை, ழநீட்சி, ழவன்மை

என வேற்றுமையிலும், யகர மல்லாத மெய்கள்வர உகரச்சாரியை பெற்றன.

ஈம் + குடம்=ஈமக்குடம், கம் + குடம்=கம்மக்குடம் } என வேற்றுமைக்கண் அகரச்சாரியையும் பெற்றன. பிறவுமன்ன.

வி-பு. கம்மென்பது கம்மியாதுதொழில். அத்தொழிலால் சமைந்த குடமென்க. இது முதனிலைத்தொழிலன்று, ஆதலின் மானும் என்றார்.

உஉச. யா ழ முன்னர்க் க ச த ப வல்வழி - யியல்பு மிகலுமாகும் வேற்றுமை - மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

இது ய ர ழ மெய்யீற்றுமுன் க ச த ப க்கள் புணருமாறு உணர்த்து கின்றது.

ப-ரை. ய ர ழ முன்னர் - யகர ரகர ழகர மெய்களின்முன், க ச த ப - ககர சகர தகர பகரங்கள்வரின், அல்வழி - அல்வழி யில், இயல்பும்-இயல்பாதலும், மிகலும்- [illegible]லும், வேற்றுமை -

வேற்றுமையில், மிகலும்-மிகுதலும், இனத்தோடு உறழ்தல் உம் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், விதி ஆகும் - விதி யாகும். எ-று.

பொ-ரை. இம்மூன் றீற்றின் முன்னும் க ச த ப க்கள் வரின் அல்வழிக்கண் இயல்பாதலும் மிகுதலும், வேற்றுமைக்கண் மிகுதலும் வல்லின மாதல் மெல்லினமாதல் மிகுதலும் விதியாம். எ-று.

[உ-ம்.]

வேய், வேர், வீழ்	+	கடிது=	வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது	என் அல்வழிக்கண் வன்மை இயல்பாகியும்,
மெய்	+	கீர்த்தி	=மெய்க்கீர்த்தி	என் அல்வழிக்கண் வன்மை மிகுந்தும்,
பொய்	+	கொண்டான்	=பொய்க்கொண்டான்,	
கார்	+	பருவம்	=கார்ப்பருவம்,	
நாய், தேர், பூழ்	+	கால்=	நாய்க்கால், தேர்க்கால், பூழ்க்கால்	என வேற்றுமைக்கண் வன்மைமிகுந்தும்,

வேய்+குழல்= { வேய்க்குழல், வேய்ங்குழல், } ஆர்+கோடு= { ஆர்க்கோடு, ஆர்ங்கோடு } என

வேற்றுமைக்கண் வன்மை மென்மை மிகுந்தும் வந்தன. பிறவுமன்ன.

வி-பு. மேல் என்ற மிகையானே, "வாய்புகு வதனினுங் கால்பெரிது கடுக்கும்" [வாய்+புகு=வாய்புகு] என வேற்றுமைக்கண் இயல்பாதலும்;

பாழ்கிணறு, பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகைக்கண் உறழ்தலும்; இன்னும் அமையாதன வுளவேல் அவ்வயுங்கொள்க.

உ௨௫. தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே-தாழுங் கோல் வந் துறுமே லற்றே.

இது இவ்விருசொற்கும் எய்தாதது எய்துவித்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. தமிழ்-தமிழ் என்கிற சொல், வேற்றுமை கு-வேற்றுமைக்கண்ணே நாற்கணமும் வந்தால், அ உறஉம் - அகரச்சாரியை பொருந்தவும், பெறும் - பெறும், தாழ் உம் - தாழ் என்னுஞ் சொல்லும், கோல்-கோலென்னுஞ் சொல்லானது, வந்து-வந்து, உறுமேல் - பொருந்துமாயின், அற்று - அகரச்சாரியை பெறும்.

பொ-ரை. தமிழ் என்னுஞ்சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக் கண் அகரச்சாரியைப் பொருந்தவும் பெறும்; தாழ் என்னுஞ் சொல்

லும் கோல் என்னுஞ் சொல்வந்து பொருந்துமாயின் அவ் வகரச்சாரியை யைப் பெறும். எ-று.

வி-பு. தமிழிற்கு வருமொழி வரையாமையின் நாற்கணமு மென்றும்.

தமிழ் +	அரசன்	=	தமிழவரசன்,	எனத்
	பல்லவதரையர்	=	தமிழப்பல்லவதரையர்,	
	நாகன்	=	தமிழநாகன்,	
	வளவன்	=	தமிழவளவன்	

தமிழ் என்னுஞ் சொல் நாற்கணம் வரவும்,

தாழ் + கோல் = தாழக்கோல் எனத் தாழ் என்னுஞ்சொல் கோல் என்னுஞ் சொல்வரவும், வேற்றுமைக்கண் அகரச்சாரியை பெற்று வந்தன. பிறவுமன்ன.

அவ்வுறவும் என்னும் எதிரதுதழீஇய எச்சவும்மையானே தமிழின்சுவை என இன்சாரியை பெறுதலுங் கொள்க.

தமிழையுடைய பல்லவ தரையர், தாழைத்திறக்குங் கோல் என விரியும்.

தாழக்கோல் எனினும், திறவுகோல் எனினும் அமையும்.

தாழாயகோல் என ஒருபொருட்கு இருபெயரொட்டாகவும் ஒன்று.

உஉகூ. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

இது கீழ் என்னுஞ் சொல்முன் வரும் வல்லினத்திற்கு ய ர ழ முன்னர் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது பெரும்பாலும் விலக்கல் உணர்த்துகின்றது.

ப-ரை. கீழின் முன் - கீழென்கிற சொல்லின்முன் வருகிற, வன்மை - வல்லினம், விகற்பம் உம் ஆகும் - ஒருகாலியல்பாகியும் ஒருகால் மிக்கும் வருகிற விகற்பத்தையும் பொருந்தும். எ-று.

பொ-ரை. கீழ் என்னுஞ் சொல்முன் வரும் வல்லினம் ஒருகாலியல் பாகியும் ஒருகால் மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும். எ-று.

[உ-ம்].

கீழ் + குலம் = { கீழ்குலம், கீழ்க்குலம் } கீழ் + சாதி = { கீழ்சாதி, கீழ்ச்சாதி } எனக்

கீழ் என்னுஞ் சொல்முன் வரும் வல்லினம் ஒருகால் இயல்பாகியும், ஒருகால் மிகுந்தும் வந்தன. பிறவுமன்ன.

வி-பு. இழிவுசிறப்பும்மையான் இவற்றுள் இயல்பே சிறப்புடைத் தென்க.

கீழ்மை என்னும் பண்பொடு புணர்தல் பதவியலுள் முடித்துப் போந்தமையின், † 'மேலிருந்தும் மேலல்லார்மேலல்லர்' என்றாற்போல கீழ் என்பது பண்பாகுபெயராய் இத்தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம் என்க.

உஉஎ. லள வேற்றுமையிற் றடவு மல்வழி - யவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி - மேவி னணவு மிடைவரி னியல்பு - மாகு மிருவழி யானு மென்ப.

இது லள வீறு புணருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ல ள - லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும், வலி வரின் - வல்லினம் வந்தால், வேற்றுமையில் - வேற்றுமைக்கண், ற ட உம் - முறையே றகர டகர மெய்களும், அல்வழி - அல்வழிக்கண், அவற்றோடு உறழ்வு உம் - றகர டகாரங்களுடனே உறழ்வனவும், ஆம் - ஆகும், இரு வழியான் உம் - இருவழிக்கண்ணும், மெலி மேவின் - மெல்லினம்வந்தால், ன ண உம் - முறையே னகார ணகாரமெய்களும், இடை வரின் - இடையினம் வந்தால், இயல்பு உம் - இயல்பும், ஆகும் - ஆகும், என்ப - என்று சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. லகார ளகாரமான இரண்டீறும் வல்லினம்வரின் வேற்றுமைக்கண் முறையே றகர டகாரங்களாம்; அல்வழிக்கண்ணே றகார டகாரங்களுடனே உறழ்வனவாம்; இருவழிக்கண்ணும் மெல்லினம் வரின் னகார ணகாரங்களாம்; இடையினம் வரின் இயல்பாம் என்று சொல்லுவர் புலவர். எ-று.

[உ-ம்.]

கல், முள்	+ குறை	= கற்குறை, முட்குறை		என

லளக்கள் வேற்றுமைக்கண் வல்லினம்வர முறையே றடக்களாகத் திரிந்தும்;

கல், முள்	+ குறிது	= கல்குறிது, கற்குறிது, முள்குறிது, முட்குறிது		என

லளக்கள் அல்வழிக்கண் வல்லினம் வர இயல்பாகியும், திரிந்தும்;

கல், முள்	+ ஞெரிந்தது	= கன்ஞெரிந்தது, முண்ஞெரிந்தது	என அல்வழியிலும்,
	+ ஞெரி	= கன்ஞெரி, முண்ஞெரி	என வேற்றுமையிலும்

லளக்கள் மெல்லினம்வர முறையே னணக்களாகத் திரிந்தும்,

† திருக்குறள், சே. கஎங.

கல், முள் + யாது = கல்யாது, முளியாது என அல்வழியினும்; + யாப்பு = கல்யாப்பு, முளியாப்பு என வேற்றுமையினும்

ல் ள் க்கள் இடையினம்வர இயல்பாகியும் வந்தன. பிறவுமன்ன.

வி-பு. அல்வழியவற்றே டுறழ்வும் என்றுரோனும் இவற்றுடும் அடங்காதெனவிலக்கிய தகரம்வரின், ஏற்புழிக் கோடலான் உறழ்ச்சியுள் இயல்பு ஒழித்துத் திரிபு ஒன்றுமே பெறுதல் கொள்க.

கற்றீது, முட்டீது எனவரும்.

உஉஅ. குறில்வழி லளத்தவ் வணையி னாய்த - மாகவும் பெறூஉ மல்வழி யானே.

இது இவ்விரண் டிற்றிற்கும் மேலைச்சூத்திரத்தான் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. குறில் வழி - தனிக்குறிலின் பின்னின்ற, ல ள-லகர ளகர மெய்களானவை, அல்வழியான் - அல்வழிக்கண், த - தகரமானது, அணையின் - வருமாயின், ஆய்தம் ஆக உம்-றகர டகரங் களாகத் திரிதலல்லாமலும் ஆய்தமாகித் திரிதலையும், பெறும் - பொருந்தும். எ-று.

பொ-ரை. தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரங்கள் அல்வழிக் கண்ணே தகரம்வருமாயின் றகர டகரங்களாகத் திரிதலே யன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும். எ-று.

[உ-ம்.] கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது என ல ள அல்வழிக்கண் தகரம்வர முறையே றகர டகரங்களாகத் திரிதலோடு ஆய்தமாகத் திரிந்தும்வந்தன.

உஉகூ. குறில்செறி யாலள வல்வழிவந்த - தகாந் திரிந்தபிற் கேடு மீரிடத்தும் - வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரி - னியல்புந் திரிபு மாவன வுளபிற.

இது ல ள வேற்றுமையிற்றடவும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. குறில் செறியாத-தனிக்குறிலொன்றனையுஞ் சாராத, ல ள - லகர ளகர மெய்களானவை, அல்வழி - அல்வழிக்கண், வந்த - வருமொழிக்கு முதலாய்வந்த, தகரம் - தகரமானது,

திரிந்த பின்-திரியுமிடத்து, கேடும்-கெடுதலும், ஈரிடத்து உம் - இருவழிக்கண்ணும், வரு - வருமொழிக்கு முதலாய்வந்த, ந - நகரமானது, திரிந்த பின்-திரியுமிடத்து, மாய்வு உம்-கெடுதலும், வலி - வல்லெழுத்து முதன்மொழி, வரின்-வந்தால், இயல்பு உம் திரிபு உம்-அல்வழிக்கண் உறழாது இயல்பாதலும் திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியாது இயல்பாதலும், ஆவன உள - பொருந்துவன உள, எ-று.

போ-ரை. தனிக்குறில் ஒன்றனையுஞ் சாராது வரும் லகார ளகாரங்கள் அல்வழிக்கண் வந்த தகரந்திரியு மிடத்துக் கெடுதலும்; இருவழிக்கண்ணும் வந்த நகரந் திரியுமிடத்துக் கெடுதலும்; வல்லினம்வரின் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலும்,திரிதலும்; வேற்றுமைக்கண் திரியாது இயல்பாதலும் பொருந்துவன வுள. எ-று.

வி-பு. திரியுமுன் கெடுவனவற்றைத் திரிந்தபின் கேடும் மாய்வும் என்றமையான் காலவழுவமைதி.

[உ-ம்]

தோன்றல், வேள் } + { தீயன் நல்லன் = { தோன்றறீயன், ளல்லன், வேடீயன், ணல்லன் } என

அல்வழிக்கண் லளக்கள் வந்த தநக்கள் திரியுமிடத்து கெட்டும்;

தோன்றல், வேள் } + { நன்மை = { தோன்றனன்மை, வேணன்மை } என

வேற்றுமைக்கண் லளக்கள் வந்த நகரம் திரியுமிடத்து கெட்டும்;

கால் + கடிது = கால்கடிது,
வேல் + படைக்குமரன் = வேற்படைக்குமரன்,
மரங்கள் + கடிய = மரங்கள்கடிய,
வாள் + படைக்கையன் = வாட்படைக்கையன்,
} என அல்வழிக்கண் லளக்கள் வல்லினம் வர முறையே இயல்பாகியும், திரிந்தும்;

"கால் குதித் தோடிக் கடல்புக மண்டி" [கால் + குதித்து = கால் குதித்து.];

"வாள்போழ்ந் தட்ட நீள்கழன் மறவர்" [வாள் + போழ்ந்து = வாள் போழ்ந்து.]

என வேற்றுமைக்கண் லளக்கள் வல்லினம்வர திரியாது இயல்பாகியும் வந்தனகாண்க.

பிற என்ற மிகையானே, தோன்றறிமை, வேடிமை என வேற்றுமைக் கண்ணும் தகரந்திரியுமிடத்துக் கெடுதலும்;

காற்றுணை, தாட்டுணை எனக் கெடாமையும்;

விற்படை என உறழாது திரிதலும்;

கோல்களிறு, கோள்போருள் என வினைத்தொகை இயல்பாதலும்; இன்னும் இவ்விரண்டிற்றுள் அமையாதன. பிறவுங் கொள்க.

இங்ஙனம் உயர்திணைச்சொல்லின்கண் காட்டியவிகாரங்கள் மயக்கவிதியின்மையிற் படுவனவாதலின் சிலவிகாரமாமுயர்திணை என்பதனுள் அடங்காவெனக.

உ௬௦. லள இறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுற - வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.

இது விகுதிபெற்ற தொழிற்பெயர்க்கும், முதனிலை திரிந்த தொழிற்பெயர்க்கும் வருவதோர் ஐயமறுத்தலும், ஒருவாற்றால் அல்வழி யவற்றோ டுறழ்வும் என எய்தியது விலக்கலும் உணர்த்துகின்றது.

ப-ரை. லள இறு தொழிற்பெயர் - லகாரத்தை இறுதியாக வுடைய முதனிலைதிரிந்த தொழிற்பெயரும், ளகாரத்தை இறுதி யாகவுடைய முதனிலைதிரிந்த தொழிற்பெயரும், ஈரிடத்து உம் - இருவழியிலும், உ - உறு - யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறுவாம், வலி - வல்லினம், வரின் - வந்தால், அல்வழி - அல்வழிக்கண், இயல்பும் ஆவன - உறழாது இயல்பாவனவும், உள - சிலவுள. எ-று.

பொ-ரை. லகாரத்தை இறுதியாக வுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும், ளகாரத்தை இறுதியாகவுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும் முதனிலைத் தொழிற்பெயர்போல யவ்வன்மெய்வரின் உகரம் பெறுமோ பெறுவோ என்று ஐயுறற்க, இருவழியும் உகரம் பெறுவாம்; வல்லினம்வரின் அல்வழிக்கண் உறழாது இயல்பாவனவுஞ் சிலவுள. எ-று.

[உ-ம்.]

ஆடல் + { சிறந்தது = [ஆடல்சிறந்தது / ஆடற்சிறந்தது], நன்று = ஆடனன்று, வலிது = ஆடல்வலிது } என அல்வழியிலும்,

ஆடல் + { சிறப்பு = ஆடற்சிறப்பு, நன்மை = ஆடனன்மை, வன்மை = ஆடல்வன்மை } என வேற்றுமையிலும்.

விகுதிபெற்ற தொழிற்பெயரின் இறுதி லகாரமும்,

கோள்	+ கடிது	=	[கோள்கடிது / கோட்கடிது]	என அல்வழியிலும்
	+ நன்று	=	கோணன்று	
	+ வலிது	=	கோள்வலிது	
	+ கடுமை	=	கோள்கடுமை	என் வேற்றுமையிலும்
	+ நன்மை	=	கோணன்மை	
	+ வன்மை	=	கோள்வன்மை	

முதனிலை திரிந்த தொழிற்பெயரின் இறுதி ளகரமும் உகரம்பெறுது பொதுவிதியான் முடிந்தன.

நடத்தல் + கடிது = நடத்தல்கடிது,		எனச் சில உறழாது அல்
நடப்பித்தல் + கடிது = நடப்பித்தல்கடிது		வழிக்கண் இயல்பாயின.

வி-பு. இறந்தது தழீஇய எச்சஇழிவு சிறப்பும்மையானே, பின்னல் கடிது, பின்னற்கடிது; உன்னல்கடிது, உன்னற்கடிது:— எனப் பொது விதியான் உறழ்தலே பெரும்பாலவென்க.

உஙக. வல்லே தொழிற்பெய ரற்றிருவழியும் - பலகைநாய் வரி னும் வேற்றுமைக் கவ்வுமாம்.

இது ல ள வேற்றுமையிற் றடவும் என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. வல் - வல்லென்கிற சூதாடு கருவிப்பெயர், இரு வழி உம் - இருவழிக்கண்ணும், தொழிற்பெயர் அற்று -ஞகரமல்லாத மெய்கள்வந்தால் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெறும், பலகை நாய் வரின் உம் - பலகை நாய் என்கிற இருபெயர் வரி னும் பிறபெயர்கள் வரினும், வேற்றுமை கு - வேற்றுமைக்கண்; அ உம் ஆம் - உகரச்சாரியை யல்லாமலும் அகரச்சாரியையும் பெறும். எ-று.

போ-ரை. வல் என்னுஞ் சூதாடு கருவிப்பெயர் யவ்வன்மெய்வரின் தொழிற்பெயரேபோல இருவழியும் உகரச்சாரியை பெறும்; பலகை நாய் என்னும் இருபெயர் வரினும், பிறபெயர் வரினும் வேற்றுமைக்கண் அகரச் சாரியையும் உகரச்சாரியையும் பெறும். எ-று.

வி-பு. வரினும் என்னும் எதிரதுதழீஇய வெச்சவும்மையால். பிற பெயர் என்பதூஉம், அவ்வும் என்னும் இறந்ததுதழீஇய எச்சவும்மை யான் உகரச்சாரியை என்பதூஉம் பெற்றும்.

[உ-ம்.]

வல் +	கடிது	=	வல்லுக்கடிது,	} என அல்வழியிலும்,
	நன்று	=	வல்லுநன்று,	
	வலிது	=	வல்லுவலிது.	
வல் +	கடுமை	=	வல்லுக்கடுமை,	} எனவேற்றுமையிலும்
	நன்மை	=	வல்லுநன்மை,	
	வன்மை	=	வல்லுவலிமை	

வல் என்னுஞ் சொல்லின் ஈற்று உகரம் உகரச்சாரியை பெற்றன,

வல் +	பலகை	=	வல்லுப்பலகை, வல்லப்பலகை,	} என
	நாய்	=	வல்லுநாய், வல்லநாய்,	
	புலி	=	வல்லுப்புலி, வல்லப்புலி,	
	குதிரை	=	வல்லுக்குதிரை, வல்லக்குதிரை	

வல் என்னுஞ்சொல் வேற்றுமைக்கண் பலகை, நாய் முதலிய பெயர்கள் வர உகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையும் பெற்றன காண்க.

வல்லினதனை வனைந்த பலகை, வல்லினுணாய் எனவும் விரியும்.

வேற்றுமைக்கு ஏன்றமையின் வல்லாயநாய் என இருபெயரொட்டாயவழி அகரச்சாரியை பெறுதெனக.

உளஉ. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லு - மல்வழி யானும் றகர மாகும்.

இது நெல்முதலிய நான்கு சொற்களின் ஈற்று லகரத்திற்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. நெல் உம் செல் உம் கொல் உம் சொல் உம் - நெல் முதலிய நான்குசொற்களின் ஈற்று லகரமெய்யானது, அல்வழியான் உம் - அல்வழிக்கண்ணும், றகரம் ஆகும்-பொதுவிதியானன்றி வேற்றுமைபோல றகரமெய்யாகத் திரியும். எ-று.

போ-ரை. இந்நான்கு சொல்லும் வல்லினம்வரின் பொதுவிதியான் உறழாது அல்வழிக்கண்ணும் வேற்றுமைபோல றகரமாய்த் திரிந்து முடியும். எ-று.

[உ-ம்.]

நெல், செல், கொல், சொல் +	கடிது,	=	நெற்கடிது,	நெற்சிறிது,&c.	} என
	சிறிது,		செற்கடிது,	செற்சிறிது,&c.	
	தீது,		கொற்கடிது,	கொற்சிறிது,&c.	
	பெரிது.		சொற்கடிது,	சொற்சிறிது,&c.	

நெல், முதலிய நான்கு சொற்களின் இறுதி லகரம் அல்வழிக்கண் றகரமாகத் திரிந்தன.

வி-பு. செல் என்பது மேகம். கோல் என்பது குருயிர்துடித்த என் முற்போலக் கொல்லவர் என்னும் உயர்திணைப்பொருளை உணர்த்தி நின்ற தோர் அஃறிணைச்சொல்.

உளஙு. இல்லெ னின்மைச் சொற்கை யடைய-வன்மை விகற்பமு மாகா ரத்தொடு-வன்மை யாகலு மியல்புமாகும்.

இது இல் என்னும் பண்புச்சொற்கு ல் ள் வேற் றுமையிற் றடவுமல் வழி யவற்றோ டோழ்வும் என எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும், அவற்றின்முன் வரும் வல்லினத்திற்கு அல்வழி இ ஐ முன்னராயின் என் னுஞ் சூத்திரத்தானும், இயல்பினும் விதியினும் என்னுஞ் சூத்திரத்தானும் எய்திய திகர்துபடாமற் காத்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. இன்மை - இன்மைப் பண்பை உணர்த்துகின்ற, இல் என் சொல் கு-இல்லென்கிற சொல்லுக்கு, ஐ - ஐகாரச்சாரியை யானது, அடைய - பொருந்த, வன்மை - அவ்விடத்து வருகிற வல்லினம், விகற்பம் உம் - விகற்பித்தலும், ஆகாரம் அத்து ஒடு- ஆகாரச்சாரியை பொருந்த, வன்மை ஆகலும் - அவ்விடத்து வருகிற வல்லினமிகுதலும், இயல்பும் - இவ்விருவிதியும் பெறாது இயல்பாதலும், ஆகும் - பொருந்தும், எ-று.

பொ-ரை. இல் இடத்தை உணர்த்தாது இன்மைப்பண்பை உணர்த்தி நிற்கும் இல் என்னுஞ் சொற்கு ஐகாரச்சாரியை பொருந்த அல்வழி வரும் வல்லினம் விகற்பித்தலும்; ஆகாரச்சாரியை பொருந்த அல்வழிவரும் வல் லினம் மிகுதலும்; இவ்விருவிதியும் பெறாது இயல்பாதலும் பொருந்தும்.

வி-பு. சாரியைப் பேற்றிற்கு வருமொழி வரையாமையின் நாற்கணத் தோடுங் கொள்க.

[உ-ம்.] இல்+பொருள்= { இல்லைபொருள், இல்லைப்பொருள் } என ஐகாரச்சாரியைபொருந்த வரும் வல்லினம் விகற்பித்தன.

இல்+பொருள்=இல்லாப்பொருள் என் ஆகாரச்சாரியை பொருந்த வரும் வல்லினம் மிகுந்தன.

இல் + { பொருள், ஞானம், வன்மை, அணி } = { இல்பொருள், ஞானம், வன்மை, லணி } என நாற்கணமும் வர இவ்விருவிதியும் பெறாது இயல்பாயின.

இல் என்னும் பண்படி நின்று வருமொழியோடு புணர்வழிவருஞ் சாரியைபெறின், இவ்விருசாரியை தோன்றியவழியும் இல்பொருள் என் னும் இயல்புப்புணர்ச்சிபோல் பண்புத்தொகையேயாம் என்க.

இது மெய்யீற்றுப் புணரியலாதலானும், லகரவீற்றிற்குப் பொதுவிதி கூறிச் சிறப்புவிதி கூறும்வழி இன்மைப்பொருளைத்தரும் இல் என்னுஞ் சொற்கென விதந்தமையானும், விகுதியடைதல் பதவியலுளன்றி ஈண்டுக் கூற வேண்டாமையானும், ஆகாரத்தோடுவன்மையாகலும் என வல்லினப்பேற்றோடு ஆகாரத்தையும் உடனிகழ்த்திக் கூறுதலானும், இயல்புமாகும் என்றமையானும், மறைப்பொருளை இல் என்னும் பகுதியுன்றி ஆகாரந் தரவேண்டாமையானும், தருமேல் இன்மைக்கு மறையாய உண்மைப் பொருளைத் தரவேண்டுமாதலானும், ஆகாரம்மறைவிகுதி தெரிநிலைக்கன்றி, குறிப்பிற்கு வாராமையானும், ஈண்டுப்பெறும் ஐகார ஆகாரங்கள் சாரியையேயன்றி, குறிப்புமுற்றுவிகுதியும், எச்சத்தின்கண்வந்த மறைவிகுதியும் அல்லவென்க.

இல்லைபொருள், இல்லைப்பொருள் என்பன இங்ஙனங் கூறியவாறே பண்புத்தொகையாகவும், ஐகாரவீற்றுக் குறிப்புமுற்றுப் பயனிலையோடு முடிந்த தொகாநிலையாகவும் கொள்ளப்படுமாதலின், தம்முள் வேற்றுமை யாதோவெனின் தொகைநிலை ஒருமொழிபோல் நடத்தலும், தொகாநிலை விட்டிசைத்து நடத்தலும் தம்முள் வேற்றுமை யென்க.

இல்லாப்பொருள் என்பது இங்ஙனங் கூறியவாறே பண்புத்தொகையாகவும், இல்லாத என்னும் பெயரெச்சக் குறிப்பினது இறுதிகெட்டுப் பயனிலையோடு முடிந்த தொகாநிலையாகவுங் கொள்ளப்படும். இவற்றிற்கும் தம்முள் வேற்றுமை யதுவாமென்க.

இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியரும் * "இல்லென்கிளவி யின்மை செப்பின் - வல்லெழுத்து மிகுதலு மையிடைவருதலு - மியற்கை யாதலு மாகாரம் வருதலுங் - கொளத்தகு மாபி னுடைத்தே." என்றார்.

உ௲௪. புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும்.

இது ல ள வேற்றுமையிற் றடவும் என்னுஞ் சூத்திரத்தான் எய்திய தன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. புள் உம் வள் உம் - இவ்விரு சொற்களும், தொழிற் பெயர் உம் மானும் - யகரமல்லாத மெய்கள்வந்தால் பொதுவிதியான்முடிதலல்லாமலும்தொழிற்பெயர்போல உகரச்சாரியையும் பெற்றுப் புணரும். எ-று.

---

* தொல்காப்பியம், எழு. புள்ளிமயங்கியல். ௬, எஎ.

பேர் - லீா. இவ்விருசொற்களும் இருவழியும் யவ்வன் மெய்வரின் பொதுவிதியான் முடிதலேயன்றித் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்றும் புணரும். எ-று.

[உ-ம்]

புள், வள்	+ கடிது, நன்று, வலிது	=	புள்ளுக்கடிது, ளுநன்று, ளுவலிது வள்ளுக்கடிது, ளுநன்று, ளுவலிது	என அல்வழியிலும்,
	+ கடுமை, நன்மை, வன்மை	=	புள்ளுக்கடுமை, ளுநன்மை, ளுவன்மை வள்ளுக்கடுமை, ளுநன்மை, ளுவன்மை	என வேற்றுமையிலும்

உகரச்சாரியைபெற்று, பொதுவிதியால் புணர்ந்து வந்தன.

உளரு. சுட்டு வகாழ வினமுற முறையே - யாய்தழ மேன்மையு மியல்பு மாகும்.

இது வகரவீற்றுச் சுட்டுப்பெயர் மூவினத்தோடும் புணருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. சுட்டு வகரம் - அவ் இவ் உவ் என்கிற அஃறிணைப்பன்மைச் சுட்டுப்பெயர்களீற்று வகரமெய், மூ இனம் - வல்லினமும் மெல்லினமும் இடையினமும், உற - வர, முறை - முறையாக, ஆய்தமும் - தனிநிலையும், மென்மையும் - மெல்லினமும், இயல்பும் - இயல்பும், ஆகும் - ஆகும். எ-று.

பொ-ரை. அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயரீற்று வகரம் வல்லினமும், மெல்லினமும், இடையினமும் வர முறையானே ஆய்தமும், வரும் மெல்லினமும், இயல்புமாம். எ-று.

[உ-ம்.]

அவ், இவ், உவ்	+ கடிய, ஞானம், யாவை	=	அஃகடிய, ஞ்ஞானம், வ்யாவை, இஃகடிய, ஞ்ஞானம், வ்யாவை, உஃகடிய, ஞ்ஞானம், வ்யாவை	எனச்

சுட்டுப்பெயரீற்று வகரம் மூவினமும் வர முறையே ஆய்தமும், மெல்லினமும், இயல்பும் ஆயின.

வி-பு. வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை பெறுமென மேல் விதித்தலின் இவ்விதி அல்வழிக்கென்க.

௨௩௬. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே - மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

இது தெவ் என்னுஞ் சொல் மவ்வன்மெய்யோடு புணருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. தெவ் என் மொழி-தெவ் என்கிற பகையை யுணர்த்தும் பெயரானது, தொழிற்பெயர் அற்று - யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்றுமுடியும், ம-மகரமெய்யானது, வரின்-வந்தால், வஃகான்-வகரமெய்யானது, ம உம் ஆகும் - உகரச்சாரியை பெறுதலல்லாமலும் ஒரோவிடத்து மகரமெய்யாகவுந் திரியும். எ-று.

பொ-ரை. தெவ் என்னுஞ்சொல் மவ்வன்மெய்யோடுபுணருமிடத்து, தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்று முடியும். அவற்றுள் மகரம் வருங்கால், உகரச்சாரியை பெறுதலேயன்றி, ஒரோவழி ஈற்று வகரம் மகரமாகத் திரியவும் பெறும். எ-று.

[உ-ம்.]

தெவ்	+	கடிது, மாண்டது, வந்தது	=	தெவ்வுக்கடிது, வுமாண்டது, வுவந்தது	என அல்வழியிலும்,
தெவ்	+	கடுமை, மாட்சி, வன்மை	=	தெவ்வுக்கடுமை, வுமாட்சி, வுவன்மை	என வேற்றுமையிலும்

யகரமல்லாத மெய்கள்வர உகரச்சாரியை பெற்றும்;

தெவ்	+	மன்னர்	=	தெவ்வுமன்னர் தெம்மன்னர்	என அல்வழியிலும்,
தெவ்	+	முனை	=	தெவ்வுமுனை, தெம்முனை	என வேற்றுமையிலும்

மகரம் வர உகரச்சாரியை பெற்றதுமன்றி, ஈற்று வகரம் மகரமாகத் திரிந்தும்வந்தன காண்க.

வி-பு. இப்பகை யென்னும் பண்புப்பெயர் பண்பியாய் பகைப்பொருளை யுணர்த்தி ஆகுபெயராய் நின்றவழியும் இவையே காட்டென்க.

௨௩௭. னல்முன் றனவும் ணளமுன் டணவு - மாகுந்தனக்க ளாயுங் காலே.

இது முன்னர்ப் புணர்த்திய வருமொழிக்கு முதலாய மெய்களுள் திரிதற்பாலன இவையென விதந்து உணர்த்துகின்றது.

ப-ரை. ன ல முன்-னகரலகரமெய்களின் முன், (த) வருகிற தகரம், ற (உம) - றகரமும், (ந) - வருகிறநகரம், ன உம் - னகர

மும், ணளமுன் - ணகர ளகர மெய்களின்முன், த - வருகிற தகரம், ட (உம்) டகரமும், ந - வருகிற நகரம், ண உம் - ணகரமும், ஆகும் - ஆகும், ஆயுங்கால் - ஆராயுமிடத்து. எ-று.

பேர-ரா. னகர லகரங்கள் முன்னர்வரும் தகரம் றகரமாம்; அவற்றின்முன்னர் வரும் நகரம் னகரமாம்; ணகர ளகரங்களின் முன்னர்வரும் தகரம் டகரமாம்; அவற்றின்முன்னர் வரும் நகரம் ணகரமாம் ஆராயுங்காலத்து. எ-று.

[உ-ம்.]

பொன், கல்	+ { தீது, நன்று	= { பொன்றீது, பொன்னன்று, கற்றீது, கன்னன்று	என அல்வழியிலும்,
	+ { தீமை, நன்மை	= { பொன்றீமை, பொன்னன்மை, கற்றீமை, கன்னன்மை	என வேற்றுமையிலும்

ன லக்கள் முன் த ந க்கள் முறையே ற ன க்களாயின.

மண், முள்	+ { தீது, நன்று	= { மண்டீது, மண்ணன்று, முட்டீது, முண்ணன்று	என அல்வழியிலும்,
	+ { தீமை, நன்மை	= { மண்டீமை, மண்ணன்மை, முட்டீமை, முண்ணன்மை	என வேற்றுமையிலும்

ண ள க்கள் முன் த ந க்கள் முறையே ட ண க்களாயின.

வி-பு. ஆயுங்காலே என்றதனான் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தானன்றி மயக்கவிதியின்மையின், இங்ஙனம் புணரும் மூதூ ஈறு இரண்டனுள் ஒன்றேனும் இரண்டுமேனும் விகாரப்பட்டு மயங்குதற்குரியனவாகின்று புணருமென்பதூஉம், மயக்கவிதி உள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அல்வழி வேற்றுமைப்பொருள் நோக்கத்தான் வருமென்பதூஉம் பெற்றும்.

உ௱அ. உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்.

இது உயிரீற்றுப் புணரியற்கண்ணும் இவ்வியற்கண்ணும் முடிந்த வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கு எய்திய தன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. உருபின் முடிபவை - மேல் உருபு புணர்ச்சிக்கண் முடியு முடிபுகள், அ பொருளின் உம்-அப் பொருட் புணர்ச்சிக்கண்ணும், ஒக்கும் - ஒத்துமுடியும். எ-று.

போ-ளா. மேல் உருபு புணர்ச்சிக்கண் முடியுமுடிபுகள் அப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் ஒக்கும். எ-று.

[உ-ம்.] எல்லாவற்றதும், எல்லாவற்றுக்கோடும்:—என அஃறிணைக் கண் அற்றும், உருபின்மேல் உம்மும்பெற்றாற்போல பொருட்புணர்ச்சிக் கும் பெற்றன.

எல்லாநமதும், எல்லாநங்கையும் :—என உயர்திணைக்கண் நம்மும், உருபின்மேல் உம்மும் பெற்றாற்போலப் பொருட்புணர்ச்சிக்கும் பெற்றன.

எல்லார்தமதும், எல்லார்தங்கையும் ; எல்லீர்நுமதும் ; எல்லீர் நுங்கையும் ; தனது, தன்கை ; தமது, தங்கை ; நமது, நங்கை ; எனது, என்கை ; எமது, எங்கை ; நினது, நின்கை ; நுமது, நுங்கை :— என உருபு புணர்ச்சிபோல் பொருட்புணர்ச்சியும் முடிந்தவாறு காண்க. பிறவு மன்ன.

உஈகூ. இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும் - போலியு மரூஉம் பொருந்திய வாற்றிற் - கியையப் புணர்த்த லியாவர்க்கு நெறி யே.

இது இப்புணரியல்கட்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. இடை (சொலின்) - இடைச்சொற்க ளுள்ளும், உரி (சொலின்) - உரிச்சொற்களுள்ளும், வட சொலின்-வட சொற்களுள்ளும், இயம்பிய - உயிரீறும் ஒற்றீறுமான புணரிய லிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்சொல்லிய புணர்ச்சி யிலக்கணங்களுள், கொளாத உம்-பொருந்தாது வேறு பட்டு வருவனவும், போலி உம் - இலக்கணப்போலி மொழிக ளும், மரூஉ உம்-மரூஉமொழிகளும்,பொருந்திய-இருவகை வழ க்கிலும் நடக்கின்ற, ஆறு இன் கு-முறைமைக்கு, இயைய-பொரு ந்துமாறு, புணர்தல்-புணர்க்கை, யாவர்க்கு உம்-அறிவுடையோ ரெல்லார்க்கும், நெறி - முறை. எ-று.

போ-ளா. இடைச்சொல்லினும், உரிச்சொல்லினும், வடசொல்லினும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலில் தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பு என வோதியபுணர்ச்சி யிலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவன வும்; இலக்கணப் போலி மொழிகளும், மரூஉமொழிகளும், இருவகை வழ க்கினும் நடக்கும் முறைமை யறிந்து அதற்குப் பொருந்துமாறு புணர்க்கை அறிவுடையோரெல்லார்க்கும் முறைமை. எ-று.

[உ-ம்] ஆ(ன்) + கன்று=ஆன்கன்று, வண்டு (இன்) + கால் வண்டின்கால்:—என வேற்றுமைப் புணர்ச்சிக்கண் சாரியையிடைச்சொல் திரியாது இயல்பாயின.

மழவு+களிறு = மழ+களிறு=மழகளிறு, தடவு+தோள்=தட+தோள்=தடந்தோள்:— என அகரஈற்று உரிச்சொல்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயும், மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன.

அளி+குலம்=அளிகுலம், தன+தடம்=தனதடம்:—என இயல்பீறும் விதியீறுமான உயிரீற்று வடசொல்முன் வல்லெழுத்து மிகாது இயல்பாயின.

இல்முன், முன்றில்; பொதுவில், பொதியில்:—என இலக்கணப்போலி மொழிகளும்,

அருமருந்தன்னபிள்ளை,	அருமந்தபிள்ளை;	மலையமானாடு,	மலாடு;
குணக்குள்ளது,	குணாது;	தஞ்சாவூர்,	தஞ்சை;
தெற்குள்ளது,	தெனாது;	ஆற்றூர்,	ஆறை;
வடக்குள்ளது,	வடாது;	ஆதன்றந்தை,	ஆந்தை;
சோழநாடு,	சோணாடு;	பூதன்றந்தை,	பூந்தை;
பாண்டியநாடு,	பாண்டிநாடு;	வடுகன்றந்தை	வடுகந்தை:—

என மரூஉ மொழிகளும், நிலைமொழி வருமொழிகளுள் ஏற்குஞ் செய்கையறிந்து முடிக்க. பிறவுமன்ன.

மெய்யீற்றுப்புணரியல், சூத்திரம் கக.

முற்றிற்று.

ஐந்தாவது

உருபுபுணரியல்.

உசம. ஒருவ னொருத்தி பலரொன்று பலவென - வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான் - குருபு முறழ்தா நாற்பதா முருபே.

இது வேற்றுமையுருபுகள் நிலைமொழியோடும் வருமொழி யோடும் புணருமாறு இவ்வியலாற் கூறுவான் தொடங்கி அவ்வெட் டுருபுகளும் சாரும் இடவகையான் இத்துணைத்தென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. ஒருவன் - ஒருவனும், ஒருத்தி - ஒருத்தியும், பலர் - பலரும், ஒன்று - ஒன்றும், பல - பலவும், என - என்றுகருத, வரு - வருகிற, பெயர் ஐந்தொடு - ஐந்துபெயரோடும், பெயர் முதல் - எழுவாய்வேற்றுமையான பெயர்முதல் விளியீறாகின்ற, இரு நான்கு உருபுஉம் - எட்டுருபுகளையும், உறழ் தர - பெருக்க, உருபு-வேற்றுமை யுருபுகளானவை, நாற்பது ஆம்-நாற்பதாகும்.

பொ-ரை. இப்பாற்பொருளின என்று கருதவரும் ஐந்து பொருளுடனே எழுவாய்வேற்றுமையான் பெயர்முதலாக விளி ஈறாகின்ற எட்டுருபினையும் உறழ வேற்றுமையுருபுகள் நாற்பதாம். எ-று.

வி-பு. சொல்மேல்வைத்தோதின் இப்பெயர்களோடன்றிப் பொதுப் பெயர்களோடு உருபு வாராவெனப் பொருள்படு மாதலின், எல்லாப்பெயரும் அடங்குதற்குப் பொருள்மேல் வைத்து எனவருபெயர் என்றார்.

[உ-ம்.] நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள்,

நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ:—என ஒருவன் என்னும் வாய்பாட்டு உயர்திணை ஆண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன.

ஏனை நான்கு பெயரோடும் இவ்வாறே ஒட்டுக.

உசக. பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.

இது வேற்றுமையுருபுகள் வருதற்குக் காரணமும் வரும் இடமும் உணர்த்துகின்றது.

ப-ரை. உருபு - வேற்றுமை யுருபுகளானவை, தம் பொருளின் தம்பொருளை, தர-கொடுக்க, பெயர் வழி-பெயர்க்குப்பின்னேவரும். எ-று.

போ-ரை. வேற்றுமை உருபுகள் தம்பொருளைத்தர பெயர்க்குப்பின் வரும். எ-று.

[வ-று] நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான், நம்பியாற்பெற்றான் எனவரும். பிறவுமன்ன.

தம்பொருள்தா வருவன எழுவாய் முதலிய எட்டுருபும், வழிவருவன பெயர் முழுவதூஉம், உருபாய எழுவாயொழிந்த ஏழுருபும் எனக்கொள்க.

உசஉ. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியி-னொக்கு மன்னப் பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

இது ஐ முதலிய ஆறுருபும் நிலைமொழி வருமொழியோடு புணருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஒற்று உயிர் முதல் ஈறு - நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருகிற மெய்யுயிர்களை முதலும் ஈறுமாக வுடைய, உருபுகள் - ஐமுதலிய ஆறுருபுகளும் இடைச்சொல்லாயினும், புணர்ச்சியின் - இயல்பொடுவிகாரத்து இயையும் புணர்ச்சி வகையால், மன் - பெரும்பாலும், ஒக்கும் - ஒக்கும், வேற்றுமை புணர்ப்பு - போன இரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண், அ பெயர் - இயல்பொடு விகாரத்து இயைந்த மெய்யுயிர் முதலீற்றுப்பெயர்களை. எ-று.

போ-ரை. தொகாநிலையாய வேற்றுமைப் புணர்ச்சிக்கண் இடையே நின்று நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் ஒற்றுயிர்களை முதலும் ஈறுமாகவுடைய - ஐ முதலிய வேற்றுமை யுருபாறும் இடைச்சொல்லேனும் இயல்பொடு விகாரத்து இயையும் புணர்ச்சிவகையால் பெரும்பாலு மொக்கும், போன இரண்டியலுள்ளும் வேற்றுமைப்புணர்ச்சிக்கண் இயல்பொடு விகாரத்து இயைந்த ஒற்றுயிர் முதலீற்றுப்பெயர்களை. எ-று.

வி-பு. மன் என்றமையால் சிறுபான்மை ஒவ்வா என்பதாம்.

[உ-ம்.] நம்பி + கண் + வாழ்வு = நம்பிகண்வாழ்வு என்புழி "ஆவி யரமுன் வன்மைமிகா" என்றும், "ணன வல்லினம்வரட் டறவும் பிறவரி னியல்புமாகும் வேற்றுமைக்கு" என்றும் கூறியவாறே கண் உருபின் முதலும் ஈறும் இயல்பாயின.

உறி + கண் + தயிர் = உறிக்கட்டயிர் என்புழி "இயல்பினும் விதியினு நின்ற உயிர்முன் க ச த ப மிகும்" என்றும், "ணன வல்லினம்வரட் டற" என்றும் கூறியவாறே கண் உருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

பழி + கு + அஞ்சி = பழிக்கஞ்சி என்புழி "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் கசதப மிகும்" என்றும், "முற்றுமற் றொரோவழி" என்றும் கூறியவாறே குவ்வுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

நம்பி + கு + பிள்ளை = நம்பிக்குப்பிள்ளை என்புழி "ஆவி யரமுன் வன்மைமிகா" என்ற விதி ஒவ்வாது குவ்வுருபின்முதல் வல்லொற்று மிக்கது. பிறவுமன்ன.

இவ்வுருபு, சாத்திக்கு, கிளிக்கு எனப் பொதுப்பெயர் அஃறிணைப்பெயர்க்கண்ணும் மிகுதலின் சிலவிகாரமாமுயர்திணை என்னும் விதியன்று.

ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் என்றமையின் நாற்பதாமுருபே எனத் தொகைகொடுத்துக் கொணர்ந்தவற்றுள் எழுவாயும் விளியும் ஒழித்து, தமக்கென உருபும் முதலீறுமுடைய ஐ முதலிய ஆறுருபிற்கும் இவ்விதி கூறுகின்றார் என்பதூஉம்; இவ் வுருபுகளின் முதல் ஈறுகட்கு மாட்டேற்றான் இவ்விதி கூறவே உருபின் இருமருங்கும் புணரும் நிலைமொழியீறும் வருமொழிமுதலும் படும் பாகுபாட்டிற்கு விதி போனஇரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கென விதித்தவற்றுள் அடங்குமாதலின், அவையும் இம்மாட்டேற்றான் அமைந்தாரல்லர் என்பதூஉம்; அங்ஙனம் அடங்குதற்கு மூன்ற றுருபேன் என்னுஞ் சூத்திரமே கரியென்பதூஉம்; ‡ தான்றநா முதல்குறுகும் என்றற் றொடக்கத்து உருபோடு புணரும் நிலைமொழிகளின் விகாரங்கள் தொகைநிலைக்கண்ணும், நாற்கணத்தின் முன்னும் வருதலின், அவ்விகாரம் எழுத்துப்புணர்ச்சியான் வந்தன வல்ல, வேற்றுமைப்பொருள் நோக்கத்தானே வந்தன, அதனால் இவ்வியலுள் கூறப்படும் என்பதூஉம்; ஒக்குமன்னப்பெயர் என்றமையின் வினையிறுதி வேற்றுமைப்புணர்ச்சிக்கு வாராமையின், அதனை ஒழித்துப் பெயரை உவமித்தார் என்பதூஉம்; வேற்றுமைப்புணர்ப்பே என்றமையின் வேற்றுமையுருபின் புணர்ச்சியாதலின், அதற்கு அல்வழிப்புணர்ச்சி ஒவ்வா என்பதூஉம் பெற்றாம்.

உசஅ. பதமுன் விகுதியும் பதமு முருபும் - புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை - வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

இது உருபு புணர்ச்சிக்கு எய்தியதன்மேல் சிறப்புவிதியாகச் சாரியை மேல் விதிப்பான் தொடங்கி அவை வருமாறு இவ்வாறென உணர்த்தும்வழி ஒப்பின்முடித்தலான் விகுதிப் புணர்ச்சிக்கும் பதப்புணர்ச்சிக்கும் உடனுணர்த்துகின்றது.

ப-ரை. பதம் முன் - பதத்தின்முன், விகுதி உம் - இறுதிநிலையாவது, பதம் உம் - பதமாவது, உருபு உம் - உருபாவது, [illegible]

‡ நன்னூல், சூ. உசஎ.

வழி-புணருமிடத்து, சாரியை ஒன்று உம் - ஒருசாரியையாகினும், (சாரியை) பல உம்-பலசாரியையாயினும், வருதல் உம்-வருதலும், தவிர்தல்உம்-வாராதொழிதலும், விகற்பம் உம்-இவ்விரண்டுமாகிய விகற்பமும், ஆகும் - ஆகும். எ-று.

போ-ா. பதத்தின்முன் விகுதியேனும் பதமேனும் உருபேனும் புணருமிடத்துச் சாரியை யொன்றேனும் பலவேனும்வருதலும், வாரா தொழிதலும், இவ்விரண்டுமாகிய விகற்பமுமாம். எ-று.

வி-பு. புணர்ந்தவழி, புணரும்வழி என்னாது, புணர்வழி எனப் பொதுமையிற் கூறவே, இம் மூவகைப் புணர்ச்சியுள் சாரியை விதித்தன வற்றுள்ளும், விதிப்பனவற்றுள்ளும், ஒழிந்தனவற்றுள்ளும் அவை வரு மாறு இவ்வாறென உய்த்துணர்க என்றாராயிற்று.

[வ-று.] நட+த்+த்+அன் [சா.]+அன் = நடந்தனன் (எ-ம்),
நட+த்+த்+ஆன் = நடந்தான் (எ-ம்),
நட+த்+த்+அன் [சா.] +அ = நடந்தன (எ-ம்),
நட+த்+த்+அ = நடந்த (எ-ம்),

விகுதிப்புணர்ச்சியுள் சாரியை வேண்டியும், வேண்டாதும், விகற்பித்தும் வந்தன.

புளி +மரம்	=	புளியமரம்	[அம்]	என அல்வழியிலும்,
உரிஞ் +கடிது	=	உரிஞுக்கடிது	[உ]	
புளி +காய்	=	புளியங்காய்	[அம்]	என வேற்றுமையிலும்,
உரிஞ் +கடுமை	=	உரிஞுக்கடுமை	[உ]	
புளி +கறி	=	புளிக்கறி		என வேற்றுமையிலும்
நெல் +குப்பை	=	நெல்லின்குப்பை[இன்] / நெற்குப்பை		

பதப்புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின.

அவை + அற்று [சா.] + ஐ = அவற்றை,
மரம் + அத்து [சா.] + ஐ = மரத்தை } (எ-ம்),
தான் + ஐ = தன்னை, யான் + ஐ = என்னை } (எ-ம்),
ஆ + ன் [சா.] + ஐ = ஆனை,
ஆ + ஐ = ஆவை } (எ-ம்)

உருபு புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின. பிறவுமன்ன.

மடம்+கு = மடத்துக்கு [அத்து, உ]
= மடக்கு } என்றற்றொடக்கத்தன சாரியை வேண்டியவழி யின்மையின் செய்யுள் விகாரமாமென்க.

௨சச. அன்ஆ னின்னல் லற்றிற் றத்தம் – தம்நம் நும்மே அஉ
ஐகுன - வின்ன பிறவும் பொதுச்சா ரியையே.

இது மேற்சாரியை யென்றார் அவை இவை யென்பது உணர்த்து கின்றது.

ப-ரை. அன்-ன - அன்முதல் னகர மெய்யீருகச்சொல்லப் பட்ட பதினேழும், இன்ன பிற உம் - இவைபோல்வன பிறவும், பொது சாரியை - விகுதி பதம் உருபு என்கிற மூன்று புணர்ச்சி களிலும் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியை யாகும். எ-று.

போ-ரை. அன்னும் ஆனும் இன்னும் அல்லும் அற்றும் இற்றும் அத்தும் அம்மும் தம்மும் நம்மும் நும்மும் ஏயும் அவ்வும் உவ்வும் ஐயும் குவ்வும் னவ்வும் இவைபோல்வன பிறவும் விகுதி பதம் உருபு என்னும் மூன்று புணர்ச்சிக்கண்ணும் தனிமொழிக்கண்ணும் வருதலின் பொதுச்சாரியை யென்னும் பெயரவாம். எ-று.

[வ-று.]

ஒன்றன்கூட்டம்	[அன்],	கல்லேதூணி	[ஏ],
ஒருபாற்கு	[ஆன்],	நடந்தது	[அ],
வண்டின்கால்	[இன்],	சாத்தனுக்கு	[உ],
*தொடையல்	[அல்],	"கேழலட்ட	[ஐ],
பலவற்றை	[அற்று],	பேழ்வா	
பதிற்றுப்பத்து	[இற்று],	யேற்றை"	
மரத்திலை	[அத்து],	"துறுகன்	[கு],
மன்றம்	[அம்],	மறையினு	
எல்லார்தம்மையும்	[தம்],	முய்குவை	
எல்லார்நம்மையும்	[நம்],	போலாய்"	
எல்லீர்நும்மையும்	[நும்],	ஆன்	[ன்]:—

என முறையே காண்க.

இன்னபிற என்றதனானே, அவன்றன்னை என்புழி தன் என்னுஞ்சாரியையும், அவன்தாம், அவர்தாம் என்புழி தான், தாம் என்னுஞ்சாரியையும்,

---

* தொடையல் என்புழி அல் விகுதிமேல்விகுதி யென்றொழிக. அல் ச்சாரியை பொருள்நிலைக்கு உதவிசெய்யுஞ் சிறப்புத்தோன்ற நல்லன என்ற நன்னூலார் கருத்தறியாது, அல்லுச்சாரியை யெனக்கொள என்பர்:—சிவஞானமுனிவர்.

புறநீர்சோறு என்புழி ஆம் சாரியையும்,

இல்லாப்பொருள் என்னும் பண்புத்தொகைக்கண் ஆகாரச்சாரியையும் வந்தன. இன்னும் வருவனவுங் காண்க.

உசடு. எல்லாமென்ப திழிதிணை யாயி - னற்றே டுரபின் மேலும் முறுமே - யன்றே னம்மிடை யடைந்தற் றாகும்.

இது ஒருசார் நிலமொழியோடு உருபு புணர்தற்கு ஒற்றுயிர் முதலீற் றுருபுக ளென்னும் சூத்திரத்தான் எய்தியதன்மேல் (எல்லாம் என்னுஞ் சொற்கு) சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. எல்லாம் என்பது-எல்லாம் என்னும் பொதுப்பெயர், இழி திணை ஆயின் - அஃறிணையில்வரும்போது அதனோடு ஆறுருபுகளும் புணரின், (இடை) - இடையிலே, அற்று - அற்றுச் சாரியையும், உருபின் மேல் - உருபின்மேல், உம் - முற்றும்மையும், உறும் - பெறும், அன்றேல் - உயர்திணையில் வரும்போது, இடை - இடையிலே, நம் - நம்முச்சாரியை, அடைந்து - அடைந்து, அற்று ஆகும் - உருபின்மேல் முற்றும்மையும் பெறும்.

போ-ரை. எல்லாம் என்னும் பொதுப்பெயர் அஃறிணைக்கண் ஆனகாலை அதனோடு ஆறுருபும் புணரின் இடையே அற்றுச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும் பெறும்; உயர்திணைக்கண் ஆனகாலை இடையே நம்முச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும் பெறும். எ-று.

[உ-ம்.]

எல்லாம்+ஐ =எல்லாவற்றையும்,
எல்லாம்+ஆல் =எல்லாவற்றலும் } என

அஃறிணையில் உருபேற்க அற்றுச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும் பெற்றன.

எல்லாம்+ஐ =எல்லாநம்மையும்,
எல்லாம்+ஆல் =எல்லாநம்மாலும் } என

உயர்திணையில் உருபேற்க நம்முச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும் பெற்றன.

வி-பு. இனி இரட்டுறமொழிதல்என்னும் உத்தியான் எல்லாமென்ப விழிதிணையாயி எனவும், இனற்றேடு எனவும் பிரித்து, அஃறிணைக்கண் ... இன்சாரியை அற்றுச்சாரியையோடு எனப் பொருள் தந்து எல்லா ...னையும் என வருதலுங்கொள்க. ஏனையவற்றுேடும் இவ்வாறே

இச்சொற்கு இருதிணைக்கண்ணும் அற்றுச்சாரியையும், நம்முச்சாரியையும் உருபு புணர்ச்சிக்கண் பதமுன்விகுதியும் என்னுஞ் சூத்திரத்திற் கூறியவாறே வேண்டியே வருதல் தோன்ற, இன்றியமையா முற்றும்மையோடு உடனிகழ்ச்சிப் பொருளவாய் அற்றேடு என்றும், அடைந்தற்றதும் என்றுங் கூறினர்.

தாம், நாம், நீர் என்னும் மூவிடப்பெயர் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வந்தமையானே, தம், நம், நும் என விகாரப்பட்டு, தமக்கினமான மூவிடப் பெயர்களை முறையேசார்ந்து, சிறப்புப்பொருள் தாராமையின், ஒருபொருட் பன்மொழி யல்லவாய் வருதலின், இம்மூன்றும் சாரியை இடைச்சொல் லெனப் படுமாதலின், தம் என்பதைப் படர்க்கைப்பெயர்க்கும், நும் என்பதை முன்னிலைப் பெயர்க்கும், வருஞ் சூத்திரத்து அமைத்தாற்போல, நம் என்பதை ஈண்டு தன்மைப்பெயர்க்கு அமைத்தானென்பதூஉம்; தன்மையாயினும் திணைப்பொதுமையின் நில்லாது, பாணரோம் என்றாற்போல, எல்லாநம்மையும் என்ற துணையானே உயர்திணைத்தன்மையை உணர்த்துமென்பதூஉம் பெற்றாம்.

உசகூ. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை - தள்ளி நிரலே தம்நும் சாரப் - புல்லு முருபின் பின்ன ரும்மே.

இது எல்லாரும், எல்லீரும் என்னுஞ் சொற்களுக்கு சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. எல்லாரும் எல்லீரும் என்பவற்று - ஆறுருபும் புணருமிடத்து, எல்லாரும் எல்லீரும் என்கிற இரு பெயர்களினுடைய இறுதியிலுள்ள, உம்மை-முற்றும்மைகளை, தள்ளி-தள்ளி, நிரல் - முறையாக, தம் - தம்முச்சாரியையும், நும் - நும்முச் சாரியையும், சார - அவையிருந்த இடங்களிலே பொருந்த, உம்- அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள், உருபின் பின்னர் - உருபுகளின் பின்னே, புல்லும் - வந்து புணரும். எ-று.

போ-ரை. எல்லாரும் என்னும் உயர்திணைப் படர்க்கைப் பெயரோடும், எல்லீரும் என்னும் முன்னிலைப் பொதுப் பெயரோடும், ஆறுருபும் புணருமிடத்து அவ்விருபெயரின் இறுதிகளின் நின்ற முற்றும்மைகளைத் தள்ளி, அந்நிலைக்களங்களில் படர்க்கைப்பெயர்க்குத் தம்முச்சாரியையும், முன்னிலைப்பெயர்க்கு நும்முச்சாரியையும் பொருந்த, அவற்றால் தள்ளுண்ட முற்றும்மைகள் உருபின் பின்னே வந்து பொருந்தும். எ-று.

[உ-ம்.]

எல்லாரும் + ஐ = { எல்லார்தம்மையும், எல்லாரையும் } (எ-ம்),

எல்லீரும் + ஐ = { எல்லீர்நும்மையும், எல்லீரையும் } (எ-ம்)

விகற்பித்து வந்தன.

ஏனையவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச்சாரியை தன்மைமுன்னிலைகளின் வருதல் ஒரிடம் பிறவிடந் தழுவலு முளவே யென்னும் வழுவமைதி யென்க.

உசஎ. தான் தாம் நாம் முதல் குறுகும் யான்யாம் - நீ நீர் என்எம் நின்நும் மாம்பிற-குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல.

இது தான் முதலிய பொதுப்பெயர்கட்கு சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. தான் தாம் நாம் - தான்முதலிய மூன்றுபெயர்களும், முதல் குறுகும் - உருபுகள் புணருமிடத்து நெடுமுதல் குறுகி முறையே தன்னை தம்மை நம்மை என வரும், யான் யாம் நீ நீர் - யான்முதலிய நான்கு பெயர்களும், என் எம் நின் நும் ஆம் - உருபுகள் புணருமிடத்து முறையே என்னை எம்மை நின்னை நும்மை எனவரும், கு இன் - இவ்வேழு பெயரோடும் குவ்வுருபு புணருமிடத்து, அ வரும் - நடுவே தனக்கு என அகரச்சாரியை வரும், நான்கு - குவ்வுருபின் அகரச்சாரியை வரினும், ஆறு - ஆறும் உருபுகள் வரினும், இரட்டல - அவ்வேழு சொற்களினும் இறுதியாகிய தனிக்குறின்முன் ஒற்றுக்கள் இரட்டாவாம்.

போ-ரை. இங்ஙனங் கூறிய இருதிணைப்பொதுவாய மூவிடப்பெயர் ஏழோடும் ஆறுருபும் புணருமிடத்து, தான், தாம், நாம் என்னும் மூன்று பெயரும் நெடில் முதல்குறுகி முறையே தன்னை, தம்மை, நம்மை என வரும்; யான், யாம், நீ, நீர் என்னும் நான்குபெயரும் முறையே என்னை, எம்மை, நின்னை, நும்மை எனவரும்; இவ்வேழுபெயரோடும் குவ்வுருபு புணருமிடத்து இடையே தனக்கு என அகரச்சாரியை வரும்; குவ்வுருபின் அகரச்சாரியை வரினும் ஆறுமுருபு உயிர்கள்வரினும் இவ்வேழு விகார மொழிகளின் இறுதியாய் தனிக்குறில்முன் ஒற்றுக்கள் இரட்டாவாம்.

வி-பு. ஒழிந்த உருபுகளோடும் இவ்வாறே ஒட்டுக. பிறஎன்றமிகை யானே, நீ என்பது உன்னை என்றும், நீர் என்பது உம்மை என்றும் வருதல் கொள்க.

முன்னும் பின்னும் சாரியைப்பேறு கூறுவர் சாரியைபெறாது விகாரப்படு மொழிகளை இச்சூத்திரத்தாற் கூறுன்ற இடையே கூறியது இப் பொதுப்பெயர்களை இங்ஙனம் தம், நம், நும் எனக் கூறிய சாரியை இடைச்சொல்லும் ஆயினவென உய்த்துணர்தற் கென்க.

உசஅ. ஆமா கோனவ் வணையவும் பெறுமே.

இது ஆ,மா,கோஎன்னுஞ்சொற்களுக்கு சிறப்புவிதிஉணர்த்துகின்றது.

ப-ரை. ஆ - ஆவென்கிற பசுவின்பெயரும், மா - மாவென்கிற விலங்கின் பொதுப்பெயரும், கோ - கோவென்கிற இறைவனை உணர்த்திநிற்கும் பெயரும், ன அணைய உம் - உருபுகள் புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும், பெறும்-பெறும்.

பொ-ரை. ஆ என்னும் பெயரும், மா என்னும் விலங்கின் பொதுப் பெயரும், கோ என்னும் இறைவனை உணர்த்திநிற்கும்பெயரும் உருபுகள் புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும் பெறும். எ-று.

[உ-ம்]

ஆ, மா, கோ	+ ஐ =	ஆனை, ஆவை, மானை, மாவை, கோனை, கோவை		என விகற்பித்து வருதல் காண்க. பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

வி-பு. எதிரது தழீஇய எச்சவும்மையானே, நவ்வுருபிற்கு னகரச் சாரியை பெறன்றுமே யமையாது, ஆனுக்கு,மானுக்கு, கோனுக்கு என உகரச்சாரியைஉடன் பெறுதலும், ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு என உகரச் சாரியை ஒன்றுமே பெறுதலும், ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என இன் சாரியையும் உகரச்சாரியையும் உடன்பெறுதலும், ஆவினை, மாவினை, கோவினை என இன்னென வரும் வேற்றுமையுருபொழிந்தவற்றிற்கு இன் சாரியை பெறுதலுங் கொள்க.

இனி இரட்டுறமொழிதலான் ஆமா என ஒருசொல்லாய்க் காட்டா வினையுணர்த்தி நின்று இவ்விதிகள் பெறுதலும், அணையவும் என்றொழியாது பெறுமே என்றமையானே ஆன், மான், கோன், ஆமான் என னகரச்சாரியை தனிமொழிக்கண்ணும் வருதலுங் கொள்க.

ஆ என்பதனோடு கோ என்பதனைச் சாரவையாது மா என்பதனைச் சாரவைத்தமையானே,கோ என்பது இறைவனையுணர்த்திய தென்பதூஉம், மா என்பது விலங்குமா என்பதூஉம் பெற்றாம்.

உசக. ஒன்று முதலெட் டீற் மெண்ணூர் - பத்தின்முன் றான்வரிற் பவ்வொற் றொழியமே-லெல்லா மோடு மொன்பது மிற்றே.

இது ஒருபஃது முதலிய எட்டு எண்ணுப்பெயர்களுக்கும், ஒன்பது என்னும் எண்ணுப்பெயர்க்கும் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. ஒன்று முதல் - ஒன்றுமுதல், எட்டு ஈறு ஆம் - எட்டீறாகிய, எண் - எண்களோடு, ஊர் - புணர்ந்த, பத்தின் முன்-பத்தென்கிற எண்முன் உருபுகள் புணருமிடத்து, ஆன் - ஆன்சாரியை, வரின் - வருமாயின், ப ஒற்று - பகரமெய், ஒழிய - நிற்க, மேல் - அதன்மேலே நின்ற, எல்லாம் - எல்லாவெழுத்தும், ஓடும் - கெடும், ஒன்பது உம் - ஒன்பதென்கிற எண்முன்னும், இற்று - உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகரமெய் நிற்ப மேலேநின்ற எல்லா எழுத்துங் கெடும். எ-று.

போ-ரை. ஒன்றுமுதல் எட்டீறும் எண்களோடு புணர்ந்த பத்தென்னும் எண்முன்னர் உருபுகள் புணருமிடத்து இடையே ஆன்சாரியைவரின், அப்பத்தென்னும் எண்ணினது பகரவொற்றுமே நிற்க மேல் நின்ற எல்லா எழுத்துங் கெடும்; ஒன்பதென்னும் எண்முன்னரும் உருபுகள் புணருமிடத்து ஆன்சாரியைவரின், அதன் பகரவொற்று நிற்க மேல்நின்ற எல்லா எழுத்துங் கெடும். எ-று.

[உ-ம்.]

ஒருபது, இருபது, ஒன்பது	+ ஐ =	ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை (எ-ம்), இருபானை, இருபதை, இருபஃதை (எ-ம்), ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை (எ-ம்)	

எ-ழுதற்பித்து வரும்.

பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

ஒருபது,ஒருபஃது என விகாரப்பட்டு வரும் பத்து என்பார் எண்ணூர் பத்து என்றார்.

வரின் என்றமையான் வருதற்கும் இஃதே விதியென்பதூஉம், இவ்வாறு ஆன் வருதலைப் ப்ராமுகமாகக் கூறினமையின், உகரச்சாரியை இன் சாரியைகளும் வேண்டுழி வருமென்பதூஉங் கொள்க.

உருo. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

இது வகர ஈற்று மூன்று சுட்டுப்பெயர்களுக்கும் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

பதவுரை. வ இறு சுட்டிற்கு - வகரமெய்யீற்று மூன்றுசுட்டுப் பெயர்களுக்கும், அற்று உறல் - உருபுகள் புணருமிடத்து அற்றுச்சாரியை பொருந்தல், வழி - முறைமையாம், எ-று.

பொ-ரை. அஃறிணைப் பன்மைப்பாய வகர ஈற்று மூன்று சுட்டுப் பெயர்க்கும் உருபுகள் புணருமிடத்து அற்றுச்சாரியை பொருந்தல் முறைமையாம். எ-று.

[உ-ம்.]

அவை, இவை, உவை	+ ஐ =	அவற்றை, இவற்றை, உவற்றை		என அற்றுச்சாரியை வேண்டியே வருதல் காண்க.

வி-பு. வழியே என்ற மிகையானே, அவற்றினை, இவற்றினை, உவற்றினை என இன்சாரியை வருதலும், தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டாமையுங் கொள்க. பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

உருக. சுட்டின்மு னாய்த மன்வரிற் கெடுமே.

இது அஃது முதலிய மூன்று சுட்டுப்பெயர்களுக்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. சுட்டின் முன் - அஃது இஃது உஃது என்கிற சுட்டுப் பெயர்களின் மொழிமுதற் சுட்டெழுத்தின் முன்னின்ற, ஆய்தம் - ஆய்தமானது, அன் வரின் - அச்சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து அன்சாரியை வரின், கெடும் - கெடும்.

பொ-ரை. அஃது, இஃது, உஃது என வரும் மூன்று சுட்டுப்பெயர்களோடும் உருபுகள் புணருமிடத்து இடையே அன்சாரியைவரின், மொழிமுதற் சுட்டெழுத்துக்கண் மூன்றின் முன்னின்ற ஆய்தங் கெடும். எ-று.

[உ-ம்.]

அஃது, இஃது, உஃது	+ஐ =	அதனை, அஃதை, இதனை, இஃதை, உதனை, உஃதை	எனச் சாரியை விகற்பித்து வருதலும், வந்தவழி ஆய்தம் கெடுதலுங் காண்க.

வி-பு. அன்சாரியை வருதல் நோக்கி, ஆய்தங் கெட்டவழி அது, இது, உது என் ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களாய், பின்னர் அன்சாரியை பெறுதலின் அவற்றிற்கும் இதுவே விதியெனக்கொள்க.

[வ-று.]

அது, இது, உது	+ ஐ =	அதனை, அதை, இதனை, இதை, உதனை, உதை	என் விகற்பித்து வருதல் காண்க.

அன் வருதலைப் பராமுகமாகக் கூறின்மையின் துவ்வுருபு புணர்வழி அதற்கு என அன்சாரியை தனித்துவருதலே யன்றி அதனுக்கு என உகரச்சாரியை உடன்வருதலுங் கொள்க.

உருஉ. * அத்தி னகர மகரமுனை யில்லை.

இது அத்துச் சாரியைக்கு இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. அத்தின் - அத்துச்சாரியையினது, அகரம் - அகர உயிரானது, அகரம் முனை - இயல்பினும் விதியினும் நின்ற அகர உயிரீற்றின்முன்வரின், இல்லை - வகர உடம்படுமெய் பெறுது கெடும். எ-று.

பொ-ரை. அத்துச்சாரியையின் அகரவுயிர் இயல்பினும் விதியினும் நின்ற அகரஉயிரீற்றின் முன்வரின், வகரவுடம்படுமெய் பெறுதுகெடும். எ-று.

[உ-ம்.]
மகம்+கை =மகம்+[அத்து. சா.]+கை=மகத்துக்கை.
மரம்+குறை= மரம்+[அத்து. சா.]+கை =மாத்துக்குறை.
என மகரம் இரண்டு அகரவீற்றின்முன்னும் கெட்டது.

உருங. இதற்கிது சாரியை யெனினள வின்மையின் - விகுதியும் பதமு முருபும் பகுத்திடை - நின்ற வெழுத்தும் பதமு மியற்கையு - மொன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.

இது சாரியைக் காவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. இதற்கு இது சாரியை எனின் - விகுதிமுதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியையென்று அளவுசெய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளும் தனித்தனி சொல்லப்புகின், அளவு இன்மையின் - அளவுபடாமையால், விகுதி உம் - விகுதிப்புணர்ச்சியையும், பதம் உம்-பதப்புணர்ச்சியையும், உருபு உம் - உருபுப்புணர்ச்சியையும், பகுத்து-கண்டவிடத்துப் பகுத்து, இடை நின்ற-நடுவே நின்ற, எழுத்து உம்-அகாரம் அகரம் முதலிய எழுத்துச்சாரியையினையும், பதம் உம் - அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும், இயற்கை உம் - இவ்விரண்டு சாரியையுந் தோன்றாத இயல்பினையும், ஒன்ற உணர்த்தல் - தெரிய அறிவித்தல், உரவோர் - பெரியோரது, நெறி - கடனாகும்.

* தொல்காப்பியம், எழு. புணரியல், சூ. உங.

போ-ள. விகுதிமுதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை யென்று வரையறுத்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளும் தனித் தனி சொல்லப்புகின் வரையறைப்படாமையின், விகுதிப்புணர்ச்சியினை யும், பதப்புணர்ச்சியினையும், உருபுபுணர்ச்சியினையும் கண்டுழிப்பகுத்து இடையே நின்ற ஏகாரம் அகரம் முதலிய எழுத்துச்சாரியையினையும், அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும், இவ்விரண்டு சாரியையும் தோன்ற இயல்பினையுந் தெரிய அறிவித்தல் பெரியோரது நெறியாம். எ-று.

[உ-ம்.] "ஆனமணியியம்புங்கானத்தான."— ஆ+ன்[சா.]+அ[சா.] =ஆன். (எ-ம்),

"ஆனநெய்தெளித்துநானநீவி"— ஆ+ன்[சா.]+அ[சா.]=ஆன். (எ-ம்),

விதித்த பொருட்புணர்ச்சிக்கண் "உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்" என்ற மாட்டேற்றான் அமைந்த னகரச்சாரியை யன்றி அகரச்சாரியையும் உடன்வந்தன.

வி-பு. இனி விதியா தொழிந்தவற்றின்கண் பாட்டின்பொருள் எனக் குற்றியலுகரத்து இன்சாரியையும், மாத்திலே என மஃகான் புள்ளிக்கு அத் துச்சாரியையும் வந்தன.

தன்கை, என்கை எனச் சாரியையின்றி இயல்பாய் வந்தன.

இவ்வாறே மூவகைப் புணர்ச்சியும் பகுத்து உணர்ந்துகொள்க.

எல்லாச்சாரியையும் இடைப்பதமேனும், எழுத்துச்சாரியை பதச் சாரியையெனப் பகுத்தல் வேறறிதற்கு இட்ட இலச்சினையாம் என்க.

உடுச. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினு - முரைத்த விதியி னோர்ந் தொப்பன கொளலே.

இது இங்ஙனங் கூறிய நான்கின் புணர்ச்சிக்கும் ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. விகுதி - விகுதியும், பதம் - பதமும், சாரியை-சாரி யையும், உருபு - உருபுமாகிய, அனைத்தின் உம் - நான்கின்புணர்ச் சிகளிடத்தும், உரைத்த - பொதுப்படச் சொல்லப்பட்ட, விதி யின் - விதிகளுள், ஓர்ந்து - இவ்விதி இதற்குப்பொருந்தும் இவ் விதி இதற்குப் பொருந்தாது என உய்த்துணர்ந்து, ஒப்பன-எவ் விதி எதற்குப்பொருந்துமோ அவ்விதியை, கொளல் - அதற்குக் கொள்க, எ-று.

போ-ரை. விகுதியே பதமே சாரியையே உருபே என்னும் நான்கின் புணர்ச்சிக்கண்ணும் விதிகள் பொதுப்பட கூறப்பட்டவேனும், அவ்விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும், இவ்விதி இதற்குப் பொருந்தாதென உய்த்துணர்ந்து, எவ்விதி ஏதற்குப்பொருந்துமோ அவ்விதி அதற்குக் கொள்க.

¶ வி-பு. விகுதிப்புணர்ச்சியுள், "றவ்வொடுசரவும்மைமகிழ்பல்லவும்" எனப்பொதுப்பட விதித்தாரேனும், விதி உளதென்றுகருதி இவ்விகுதி வந்தழியெல்லாம் இவ்விருகாலமும் பொருந்துமென்று கொள்ளற்க. சென்று என்புழி இறந்தகாலமும், சேறு என்புழி எதிர்காலமும் பொருந்துமென்று கொள்ளற்க.

பதப்புணர்ச்சியுள், "அல்வழி இ ஐம் முன்னராயி-னியல்பும்மிகலும் விகற்பமுமாகும்." எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதி உளதென்று கருதி, ஆடிதிங்கள் என இயல்பாமென்றும், பருத்திக்குறிது என மிகுமென்றுங் கொள்ளற்க. பருத்திகுறிது என எழுவாய்க்கண் இயல்பாம்எனவும், ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகைக்கண் மிகும் எனவுங் கொள்க.

சாரியைப்புணர்ச்சியுள், "பதமுன்விகுதியும்பதமுமுருபும் புணர்வழியொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந்தவிர்தலும் விகற்பமுமாகும்." எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதி உளதென்றுகருதி, நாட்டினீங்கினான் என இன்னென வரும் வேற்றுமையுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டுக்கணிருந்தான் எனக் கண் உருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்ளற்க. நாட்டின்கணிருந்தான் எனக் கண் உருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டினீங்கினான் என இன் உருபிற்கு இன்சாரியை வராதென்றுங்கொள்க.

உருபுபுணர்ச்சியுள், "ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியி-னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே." எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதி உளதென்றுகருதி, நம்பிக்கு என உயிரீற்று உயர்திணைப்பெயர் முன் வந்த கு உருபு மிகாவென்றும், நம்பிகண் என மன் என்றமையால் கண் உருபு மிகுமென்றுங் கொள்ளற்க. நம்பிக்கண் எனக் கண்ணுருபு மிகாவென்றும், நம்பிக்கு என கு உருபு மன் என்றமையான் மிகுமென்றுங் கொள்க. பிறவுமன்ன.

° சாரியைப்புணர்ச்சி ஏனை மூவகைப் புணர்ச்சியினையுஞ் சார்ந்து இடையே தோன்றல்விகாரமாய் வந்து புணர்தலின், விகுதிபதஞ்சாரியையுருபு என உருபிற்குமுன் கூறினர்.

¶ விகுதிப்புணர்ச்சியுள் 'தவ்வொடிறப்பும்' என்பதற்கும் இவ்வாறே கொள்க என்பர்.—இராமாநுசகவிராயர்.

இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள்கொள்ளாது, இந்நால்வகைப் புணர்ச்சியுள் ஒன்றற்குச் சொன்னவிதி மற்றொன்றற்குங் கொள்கவெனப் பொருள்கொள்வாருமுளர்.

அப்பொருட்கு அமைந்தசொல் இச்சூத்திரத் தின்மையானும், "சாரியைசந்தி விகாரமாறினு மேற்பவை - முன்னிப்புணர்ப்ப முடியுமெப் பதங்களும்" என்றும்; ஈறுபோதல் என்னும் சூத்திரத்து அவ்விகாரம் வித்திப் புணர்ச்சிக்கண் அன்றி, பதப்புணர்ச்சிக்கண்ணும் வருமென்பது தோன்ற "பண்பிற்கியல்பே" என்றும்; புணரியல்விதி பெயர், வினை, இடை, உரி நான்கிற்கும் பொருந்துமென்பது தோன்ற, "மெய்யுயிர் முதலீ ரெழிரு பதங்களும்" என்றும்; விதந்துரைத்த சிறப்புவிதிகளுள், "உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்" என்றும்; "ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியி - னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே." என்றுங் கூறிய வாற்றான் அப்பொருள் அமைந்து கிடத்தலானும், அது பொருந்தாதென்க.

உருடு. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பு - முயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும் - விரவுப் பெயரின் விரிந்து நின்று - மன்ன பிறவு மாதமை யுருபே.

இது வேற்றுமைப் புணர்ச்சிக்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. இயல்பின் விகாரம் உம்-பொதுவிதியோடு முடிதலே யன்றி அப்படி விதித்த இயல்பிலே விகாரமாகியும், விகாரத்து இயல்பு உம்-விகாரத்திலே யியல்பாகியும், உயர்திணை இடத்து - உயர்திணையினிடத்து, விரிந்து உம்-வெளிப்பட்டும், தொக்கு உம்-மறைந்தும், விரவு பெயரின்-பொதுப்பெயரின்கண், விரிந்து உம்-வெளிப்பட்டும், நின்று உம் - மறைந்தும், அன்ன பிற உம்-இவ்வ போல்வன பிறவேறுபாடுகளும், ஆகும் - ஆகிவரும், ஐ உருபு - இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி. எ-று.

பொ-ரை. வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொது விதியோடு தானும் ஒருங்கு முடிதலே யன்றி, அங்ஙனம் விதித்த இயல்பின்கண் விகாரமாயும், விகாரத்தின்கண் இயல்பாயும், உயர்திணைக்கண் விரிந்துந் தொக்கும், விரவுப்பெயர்க்கண் விரிந்தும் விரிதலொழிந்தும், இவைபோல்வன பிற வேறுபாடாயும் வரும் இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சி. எ-று.

வி-பு. உயிரே ஒற்றே சாரியையே என்றிவை தோன்றல் திரிதல் கெடுதல் உறழ்ச்சி விகற்பங்களையெல்லாம் உள்ளடக்கி இயல்பின்விகாரமும் விகாரத்தியல்பும் என்றும்; எல்லாவேற்றுமையும் விரிந்துந் தொக்கும்

வருதல்பொருளாது, இவ்வேற்றுமை உயர்திணைப் பெயர்க்கண்ணும், விரவுப் பெயர்க்கண்ணும் விரிதலே தகுதியாய், தொகுதல் தகுதியாயும், வலிந்து கோடலாயும் வருமென்பது தோன்ற விரிந்துதோக்கும், விரிந்தும் விரித வின்றும் என்றுஸ்; நெருநல் அளவும் வருத்தியபிணி இன்று நின்றதென் பதுபோல ஒழிதற்பொருள் தோன்ற நின்றும் என்றும் கூறினர்.

மேலைச்சூத்திரத்து ஒப்பனகோளலே என்றமையான் இவ்விதிகளை இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி வந்தழி யெல்லாங் கூட்டாது, வேற்று மைப்பொதுப்புணர்ச்சியோடு ஒருங்கொத்து முடிவன இவை, இப்புறன டைச் சிறப்புவிதியான் முடிவன இவை, என உய்த்துணர்ந்து ஏற்பனவற் றோடுங் கூட்டுக.

[வ-று] "வழிபடுதெய்வ நிற்புறங்காப்ப" [நின் + புறம் = நிற்புறம்.]

மண் + கொணர்ந்தான் = மண்கொணர்ந்தான் என விகாரத்தியல்பா யிற்று.

நம்பி + கொணர்ந்தான் = நம்பியைக்கொணர்ந்தான் என் உயர் திணைக்கண் விரிந்தது.

* ஆடூஉ + அறிசொல் = ஆடூஉவறிசொல், மகடூஉ + அறிசொல் = மக டூஉவறிசொல், பல்லோர் + அறியுஞ்சொல் = பல்லோரறியுஞ்சொல், நான்முகன் + தொழுது = நான்முகற்றொழுது:— என அதன்கண் தொக்கது.

கொற்றன் + கொணர்ந்தான் = கொற்றனைக்கொணர்ந்தான் என விரவுப்பெயர்க்கண் விரிந்தது.

ஆண் + பெற்றாள் = ஆண்பெற்றாள், பெண் + பெற்றாள் = பெண்பெ ற்றாள்.

† "தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்து" [தன் + கொண் டான் = தற்கொண்டான்.]

"வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப" [நின் + புறம் = நிற்புறம்.] என் அதன்கண் தொக்கது.

இவ்விரண்டிடத்துந் தொகையுள் சில தகுதியாயும், சில வலிந்துகோ டலாயும் வருதல் காண்க.

வி-பு. அன்னபிறவும் என்றமையானே, தன் + கொண்டான் = தற் கொண்டான், என் + பணியாளாய் = எற்பணியாளாய் என:—உறழப்படு வன திரிந்தேவருதலும், இன்னும்வருவனவுளவேல் அவையுங்கொள்க.

---

* தொல்காப்பியம், சொல். கிளவியாக்கம், சூ. உ.

† திருக்குறள், செ. ருக.

இங்ஙனம் எண்ணின்கண் நின்ற இறந்தது தழீஇய இழிவுசிறப்பும் மைகளானே வேற்றுமைக்கு என விதித்த பொதுவிதியோடு ஒருங்கொத்து, வாதுகட்டினான் என இயல்பின்கண் இயல்பாயும், விளக்குறைத்தான், பலாக்குறைத்தான், கடுக்குறைத்தான் என விகாரத்தின்கண் விகாரமா யும் வருதலே பெரும்பாலவென்க.

இனி விரவுப்பெயர்க்கண் விரிந்துநின்றும் என்பதற்குஇவ்வாறன்றி, எழுந்திருந்து என்பதற்கு இருந்து என்பதனை அசைநிலையாக்கி எழுந்து என ஒருபொருள் கோடல்போல, நின்று என்பதனை அசைநிலையாக்கி விரிந்து என ஒருபொருள் கொள்ளின், வழக்கின்கண்ணும் செய்யுட்கண்ணும் தொக்குவரும் இலக்கியங்கட்கு இலக்கணம் இன்றாமென்க.

உருசு. புள்ளியு முயிரு மாயிரு சொன்முன்-றம்மி னாகிய தொழின் மொழி வரினே - வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.

இது மூன்றும் வேற்றுமையின் சில உயிரீறு மெய்யீறுகட்குச் சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ை. புள்ளி உயிர் உம் ஆய் இறு சொல் உம் முன்-மூன்றும் வேற்றுமைப் புணர்ச்சியுள்ளே மெய்யும் உயிரும் இறுதியாகநின்ற சொற்களின்முன், தம்மின் ஆகிய - கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாலாகிய, தொழில் மொழி - தொழிற்சொல், வரின் - வந்தால், வல்லினம் - அவ்விடத்துவருகிற வல்லினம், விகற்பம் உம் - உறழ்ச்சியும், இயல்பும் - இயல்பும், ஆகும் - ஆகும்.

பொ-ை. மூன்றும்வேற்றுமைப் புணர்ச்சியுள் ஒற்றும்உயிரும் இறுதி யாய் நின்ற சொன்முன்னர், கருவிகருத்தா வுடனிகழ்வதன்பொருள் என்ப வற்றுள் கருத்தாவாகிய நிலைமொழிப்பொருள் தம்மாலாகிய தொழிற்சொல் வரின், அங்ஙனம்வரும் வல்லினம் வேற்றுமைப்பொதுமுடிபேலாது விகற் பமும் இயல்புமாம். எ-று.

வி-ம். இவ்விதியும் ஒப்பன கொள்க.

[வ-று.]

¶பேய் + கோட்பட்டான் = { பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்

சூர் + கோட்பட்டான் = { சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான்

¶ மேல்ஒப்பனகோளலே என்றதனால் இரண்டாம் வேற்றுமைக்குச் சொன்னபடி இதற்குங்கொள்களென்பர். — இராமாநுசகவிராயர்.

[வ-று.]

புலி + கோட்பட்டான் = { புலிகோட்பட்டான், புலிக்கோட்பட்டான் (எ-ம்),

பேய் + பிடிக்கப்பட்டான் = { பேய்பிடிக்கப்பட்டான் (எ-ம்)

புலி + கடிக்கப்பட்டான் = { புலிகடிக்கப்பட்டான் வரும்.

வி-பு. உம்மையால் சுறப்பாயப்பட்டான், அராத்தீண்டப்பட்டான் என்வேற்றுமைப் பொதுவிதியான் மிக்கு முடிவனவே பெரும்பாலவென்க.

இவற்றுள் தம்மினாகிய தொழில் பட்டான் என்பதாம்.

கோள் என்பது முதலியவாய் இடைப்பிற வருவன தந்தொழிலாம்.

இங்ஙனமாயினும் இவ்விரண்டினையும் ஒருசொல்லாக்கி தம்மினாகிய தொழின்மொழி என்றார்.

பட்டான் என்புழி இது பட்டான் என்னும் பொருள்தோன்ற, கோள் என்பதுமுதலியன அதனைவிசேடித்துநிற்கும், ஒற்றுமை நயங்கருதி என்க. வேற்றுமை நயங்கருதி கோட்பட்டான் என்பது ஒழிந்தன எழுவாய்ப் பயனிலையாகிய வினையெச்சம் முற்றுவினை கொண்டதாம்.

எழுவாய்க்கண்ணும் மூன்றும் வேற்றுமைக்கண்ணும் கருத்தாவுள ஆகலின் தந்தொழிலையே யாண்டு தம்மினாகிய தொழிலென்றாரெனின், பேய்பிடித்தது என்னும் எழுவாய்க்கண் பேயாற்பிடித்தது என மூன்றாம் உருபும் விரித்தற்கு அமையும். அங்ஙனம் விரித்தல் கூடாமையின் தந்தொழிலும், தம்மினாகிய தொழிலும் எழுவாய்க்கண் கருத்தாவும், மூன்றாம்வேற்றுமைக்கண் கருத்தாவும் தம்முள் வேறுபாடுடையவாம். அவ்வேறுபாடு அவ் விலக்கணம் கூறும்வழி காட்டுதும்.

உடுஎ. இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும் - விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான் - வகுத்துரை யாதவும் வகுத்தனர் கோளலே.

இது இவ்வதிகாரத்திற்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. இதற்கு இது முடிபு என்று - இதற்கு இது முடிபென்று, யாவும் - இவ்வதிகாரத்துள் விதிக்கத்தகுவனவற்றை எல்லாம், எஞ்சாது - குறையாமல், விதிப்பு - தனித்தனி அளவுசெய்து விதிக்கப்புகின், அளவு இன்மையின் - அதற்கு ஓரளவில்லாமையால், விதித்தவற்று - வகுத்து விதித்தவற்றினுடைய, இயலான் - இலக்கணங்களை ஏதுவாகக்கொண்டு, வகுத்து உரையாதவும் - வகுத்துவிதி உரையாதனவற்றையும், வகுத்தனர் கொளல் - கருதலளவையால் வகுத்து விதியுரைத்துக்கொள்க. எ-று.

போ-ரை. இதற்கு இது முடிபென்று இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றை யெல்லாம் தனித்தனி வரையறுத்து விதிக்கப்புகின் அதற்கோர் வரையறையின்மையின், வகுத்து விதித்தனவற்றின் இலக்கணங்களை ஏதுவாகக்கொண்டு, வகுத்து விதியுரையாதனவற்றையும் கருதலளவையான் வகுத்து விதியுரைத்துக்கொள்க. எ-று.

[வ-று.] எழுத்தியலுள் "மொழிமுதற் காரண மாமணுத்திரளொலி" எழுத்தென உரைத்தமையானே, "கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ் சட்டகம் போலச் செவிப்புல வொலியை - யுட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே."—எனப் பிறர் கூறியவாறு இவ்வொலிவடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக வரைந்துகொள்ளப்பட்டது வரிவடிவு எழுத்து எனவும்;

பதவியலுள் "அன் ஆன் அள் ஆள்"—என்னுஞ் சூத்திரத்து முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்தமையானே, பெருமாள் என்னும் பதம் பெருமையுடையான் என்னும் பொருள்தோன்றநின்ற பெருமான் என்னும் பதத்தினது இறுதி ஆன் விகுதி ஆள்விகுதியாய் ஒரோவிடங்களில் திரிந்து ஆண்பாலையே உணர்த்திநின்றது எனவும்;

உயிரீற்றுப் புணரியலுள் "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் கசதபமிகும்."—என உரைத்தமையானே, "ணன வல்லினம் வரட்டற வும்"—என்புழி டகரமும் வல்லினமாதலின் மிகுந்தது எனவும்;

மெய்யீற்றுப் புணரியலுள் "நுந்தம் எம்நம் மீறு மவ்வருஞநவே."—என உரைத்தமையானே, அம் என்னுஞ்சொல் இறுதி மகரமும் குற்றொற்று ஆகலின், தன்னொடு மயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த்திரிந்து, அந்நலம் என அழகினது நலம் என்னும் பொருட்டாய் வரும் எனவும்;

உருபு புணரியலுள் "வவ்விறுசுட்டிற் கற்றுறல்வழியே."—என உரைத்தமையானே, அதுபோலும் வினவும் எவற்றை என அற்றுச்சாரியை பெறும் எனவும்;

இரண்டாம் வேற்றுமைக்கும், மூன்றும் வேற்றுமைக்கும் முன்னை யுரைத்தமையானே, ஏழாம்வேற்றுமையும் "மண்புகுந்தும் விண்பறந்தும்

மாறுமபன்றுக் காணு வொருபொருள்" — என வேற்றுமைப் பொதுவிதி ஏலாத சிறுபான்மை வரும் எனவுங்கொள்க.

இன்னும் இவ்வோத்தியலுள்ளும் வருத்து உரையாதனவற்றை எல்லாம் இடர்ப்படாது இதுவே நிலனாக வருத்துரைத்துக்கொள்க.

உருபு புணரியல், சூத்திரம் கஅ.

முற்றிற்று.

முதலாவது

எழுத்ததிகாரம் முற்றிற்று.

கட்டளைக்கலித்துறை.

அடைவெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்த
மிடைநிலை போலியென் றீரைந் தெழுத்து மிருபதமும்
படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையு
முடனுணர் வாரெழுத் தறி வாரென்ப ருத்தமரே.

இரண்டாவது

சொல்லதிகாரம்.

சொல்லதிகாரம் என்பது சொல்லினது அதிகாரத்தை யுடையதென அன்மொழித்தொகையாய் அப்படலத்திற்குக் காரணக்குறியாயிற்று. சொல் என்றது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும், ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையாகிய பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச்சொல்லும் பிறவுமாம். அவை "இயற்சொற் றிரிசொல்" என்னுஞ் சூத்திரத்தால் பிற்கூறுபவாகலின் ஈண்டு எதிரது போற்றி ஆளப்பட்டது. அதிகாரம், அதிகரித்தல். அதனை மேலே அதிகாரமுகத் துரைத்தாங்கு உரைத்துக்கொள்க. எனவே சொல்லை முதலிவரும் பல ஓத்தினது தொகுதி சொல்லதிகாரம் என்றவாறாயிற்று. எழுத்தினான் ஆக்கப்படுதல் மேலை அதிகாரத்திற்சேர்ந்த பதவியலுள் காண்க. இருதிணைப்பொருள் முதலியன பின்வருஞ் சூத்திரங்களான் உணர்க. இனிப் பொருட்டன்மை யாவது ஒருபொருட்குக் கேடுபிறந்தாலும் தனக்குக் கேடின்றி, தானொன்றேயாய், பலவகைப்பட்ட பொருள்தோறும் நிற்குமென்றுணர்க.

முதலாவது

பெயரியல்.

உருஅ. மூச்சக நிழற்று முழுமதி முக்குடை-யச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

இது கடவுள் வணக்கமும், அதிகாரமும் உணர்த்துகின்றது.

ப-ரை. மு சகம் - மூன்றுலகத்திற்கும், நிழற்றும் - நிழலைச் செய்கின்ற, முழு மதி - நிறைந்தமதிபோலும், மு குடை - மூன்றுகுடையையுடைய, அச்சுதன் - அழியாதகடவுளுடைய, அடி - அடிகளை, தொழுது - வணங்கி, அறைகுவன் - சொல்லுவேன், சொல் - முன்னதிகாரத்துள் சொல்லிய எழுத்தினாலாகிய சொல்லிலக்கணத்தை. எ - று.

பொ-ரை. மூன்றுலகத்திற்கும் நிழலைச்செய்யும் நிறைந்த மதிபோலும் மூன்று குடையையுடைய அழியாதவன் அடிகளை வணங்கிச் சொல்லுவன் மேலை அதிகாரத்திற் கூறிய எழுத்தினாய சொல்லிலக்கணத்தை. எ-று,

வி-பு. தோன்றி அழியு மாலையவென்பார் சகம் என்றும்; உலகமே உருவமாயினான் உயிர் இன்புறுவதே தான் இன்புறுவதாமென்பார் அக்கடவுள் முடிமேல் நிழற்றுங்குடையை முச்சகத்திற்கும் நிழற்றும் என்றும்; நிறைந்ததண்ணளியை உடையன் என்பார் அதனை உவமை முகத்தால் குடைமேல்வைத்து முழுமதிக்குடை என்றும்; சுதந்தரமின்றித தோன்றி யழியும் உயிரும் பிறவுமாகிய சகத்திற்கு அவ்வாறு தோன்றி அழியான் தலைவனாக வேண்டும் என்பார் அச்சுதன் என்றும்; நம்செயலன்று என்பார் அடிதொழுதறைதுவன் என்றும்; வரையறைப்படாத பெருமையை யுடையது என்பார் அவ்வாற்றல் தோன்றச் சொல் என்றும் கூறினார்.

ஈண்டு காப்பதுகருதி அச்சுதன் என்றது, மேலே அதிகாரத்துப்படைப்பதுகருதி நான்முகன் என்றது போலும். சொல் என்பது ஆகுபெயர். ஏகாரம் ஈற்றசை.

உடுகூ. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று - இரு திணை யைம்பாற் பொருளையுந் தன்னையு-மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின் - வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

இது மேல் சொல் என்றது இஃதென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. ஒரு மொழி - ஒருமொழியும், தொடர் மொழி - தொடர்மொழியும், பொது மொழி - பொதுமொழியும், என்று - என மூன்றுபிரிவினதாகி, இரு திணை - இருதிணையாகிய,ஐம்பால் பொருளை உம் - ஐம்பாற்பொருளையும், தன்னை உம் - அப்பொருளையன்றித் தன்னையும், மூவகை இடத்து உம் - மூன்றிடத்திலும், வழக்கொடு - வழக்கினிடத்தும், செய்யுளின் - செய்யுளிடத்தும், வெளிப்படை - வெளிப்படையாலும்,குறிப்பின் - குறிப்பினாலும், விரிப்பது - விளக்குவது, சொல் - சொல்லாகும். எ - று.

பொ-ரை. ஒருமொழியும், தொடர்மொழியும், பொதுமொழியும் என மூன்று கூற்றினதாய், இருதிணையாகிய ஐம்பாற்பொருளினையும், அப்பொருளையன்றித் தன்னையும், மூன்றிடத்தினும், வழக்கின்கண்ணும் செய்யுட்கண்ணும், வெளிப்படையானும் குறிப்பினானும் விளக்குவது சொல்லாம்.

வி-பு. எனவே எல்லாச்சொல்லும் பொருளும் ஒருமொழி, தொடர்மொழி,பொதுமொழி என்னும் மூன்றுயும்,இருதிணை ஐம்பாலாயும் அடங்குமென்பதூஉம்;

இருதிணை முதலிய காரணத்தான் உயர்திணைச்சொல்,அஃறிணைச்சொல், ஆண்பாற்சொல்,பெண்பாற்சொல்,பலர்பாற்சொல், ஒன்றறிசொல்,

பலவறிசொல், தன்மைச்சொல், முன்னிலைச்சொல்,படர்க்கைச்சொல்,வழக்குச்சொல், செய்யுட்சொல்,வெளிப்படைச்சொல், குறிப்புச்சொல் (எ-ம்);

உயர்திணைப்பொருள், அஃறிணைப்பொருள், ஆண்பாற்பொருள்,பெண்பாற்பொருள், பலர்பாற்பொருள், ஒருபொருள், பலபொருள், தன்மைப்பொருள், முன்னிலைப்பொருள், படர்க்கைப்பொருள், வழக்குப்பொருள், செய்யுட்பொருள்,வெளிப்படைப்பொருள், குறிப்புப்பொருள் (எ-ம்) வழங்கப்படுமென்பதூஉம்;

உயிர்க்கு அறிவு கருவியாய் நின்று தன்னையும் பொருளையும் உணர்த்துமாறுபோல, ஒருவற்கு சொல் கருவியாய்நின்று தன்னையும், உள்பொருள், இல்பொருள்,மெய்ப்பொருள், பொய்ப்பொருள், சித்துப்பொருள், சடப்பொருள், நித்தியப்பொருள், அநித்தியப்பொருள், உருவப்பொருள், அருவப்பொருள், காட்சிப்பொருள், கருத்துப்பொருள், இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள், முதற்பொருள், சினைப்பொருள், இயங்கியற்பொருள், நிலையியற்பொருள்:—என பலவாற்றானும் பகுத்துக் கூறப்படும் இருதிணை ஐம்பொருளையும் உணர்த்துமென்பதூஉம் பெற்றாம்.

உ௬௦. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி - பல பொரு ளனபொது விருமையு மேற்பன.

இது மேலைச் சூத்திரத்து நிறுத்தமுறையானே மூவகை மொழிகள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஒரு மொழி - ஒருமொழிகளாவன, ஒரு பொருளன ஆம் - பகாப்பதமாவது பகுபதமாவது ஒன்று நின்று தத்தம் ஒருபொருளைத் தருவனவாம், தொடர் மொழி - தொடர்மொழிகளாவன, பல பொருளன - அவ்விருவகைப் பதங்களும் தன்னோடும் பிறிதோடும் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தால் இரண்டுமுதலியவாகத் தொடர்ந்துநின்று இரண்டுமுதலிய பல பொருளைத் தருவனவாம், பொது (மொழி) - பொதுமொழிகளாவன, இருமை உம் ஏற்பன - ஒன்றாய்நின்று ஒருபொருளைத் தந்தும், அதுவே தொடர்ந்துநின்று பலபொருளைத்தந்தும் இவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்பனவாம். எ-று.

போ-ரை. ஒருமொழிகளாவன பகாப்பதமேனும் பகுபதமேனும் ஒன்று நின்று தத்தம் ஒருபொருளைத் தருவனவாம்; தொடர்மொழிகளாவன அவ்விருவகைப்பதங்களும் தன்னோடும் பிறிதோடும் அல்வழி வேற்றுமைப்பொருள் நோக்கத்தான் இரண்டுமுதலியவாகத் தொடர்ந்து நின்று

இரண்டுமுதலிய பலபொருளைத் தருவனவாம்; பொதுமொழிகளாவன ஒன்றாய் நின்று ஒருபொருள் தந்தும், அதுவே தொடர்ந்து நின்று பலபொருள் தந்தும், இவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்பனவாம். எ-று.

[வ-று.] நிலம், நிலத்தன், நட, நடந்தான், தில், மன், தவ, நனி:—என்றற் றொடக்கத்தன ஒருமொழி,

எட்டு, கோட்டு, தாமரை, வேங்கை, எழுந்திருந்தான், வாராநின்றன், உரைத்திட்டான்:—என்றற் றொடக்கத்தன பொதுமொழி.

நிலம்வலிது, அதுகோல், சாலப்பகை, நிலங்கடந்தான், நிலத்தைக் கடந்தான், நிலங்கடந்தநெடுமால்:—என்றற் றொடக்கத்தன தொடர்மொழி.

எள்ளைத்து, கொள்ளைத்து, தாவுகின்றமரை, வேகின்றகை, எழுந்து பின்னிருந்தான், வந்துநின்றன், உரைத்துப்பின்னிட்டான் :—எனத்தொடர் மொழிகளாய் பலபொருள் தந்தவும் காண்க.

வி-பு. இவை ஒருமொழிகளாய் ஒருபொருள் தருவதன்றி, மொழிகள் தொடராது யாண்டும் தனித்து நில்லாவேனும், இப்பொருட்கு இச்சொல் லென இறை[illegible]றும் அறிவுடையோராலும் படைக்கும்படைப்புக்காலத்தும், தொடர்மொழிக்கண் நின்ற இரண்டுமுதலிய சொற்களுள் ஒன்று நின்று மற்றைய எஞ்சிய வழியும் தனித்து நிற்றலின் ஒருமொழி என்றார்.

எஞ்சியவழித் தனித்துநிற்றல் வருமாறு:— ஒருவனுழை ஒருவன் வந்தழி வாஎன்றல் உலகியல். அவ்வழி வருதற்கு வினைமுதலாகிய நீ என்னுஞ் சொல் எஞ்சி, வா என்னுஞ்சொல் தனித்து ஒருமொழியாய் நின்றது. இத் தொடக்கத்தன எல்லாம் கொள்க.

சேனை, குழாம் :—என்றற்றொடக்கத்தன ஒருமொழி பலபொருள் தந்தது என்னையெனின், ஈண்டு தொடர்மொழி பலபொருளன சின்றது பல சொல்லில் பலபொருளையன்றி இப்பொருளை அன்றென்க.

இப்பொருளைப் பலபொருளான் இயைந்த ஒருபொருளென ஆசிரியர் அநந்தியனார் "பலவி னியைந்தவு மொன்றெனப் படுமே - யடிசில் புத்தகஞ் சேனை யமைந்த - கதவ மாலை கம்பல மனைய"—எனக் கூறுமாறு காண்க.

இனி இவ்வொருமொழியைத் தனிமொழி எனவும்; தனிமொழியாவது சமயவாற்றலால் பொருள் விளக்குவதெனவும்; அது பெயர்ச்சொல் முதலாக நான்குவகைப்படுமெனவும் கூறி, தொடர்மொழியாவது இருமொழித் தொடரும், பன்மொழித் தொடரும் என இருவகைப்படுமெனவும்; அவை தொடருங்கால் பயனிலைவகையானும் தொகைநிலை வகையானும், எண்ணு

நிலை வகையானும் தொடருமெனவும்; அவ்வாறன்றி வடநூலார் கூறிய வாறே அவாய் நிலையானும், அண்மையானும், தகுதியானும் தொடரு மெனவும்; அவற்றிற்கு உதாரணம் முறையே சாத்தன்வந்தான், யானைக் கோடு, தீ, நீர், ஆவைக்கோணு, ஆற்றங்கரைக்கண் ஐந்துகனிகள் உள வாகின்றன, நீராலநனை (எ-ம்); அறம்வேண்டி அரசனுலகம் புரந்தான் (எ-ம்) கூறுப.

அவையெல்லாம் இருவகைப் பிரத்துள்ளும், அல்வழி வேற்றுமைப் பொருள்களுள்ளும் அடங்குமாறு உய்த்துணர்க.

உசுக. மக்க டேவர் நாக நுயர்திணை - மற்றுயி நுள்ளவு மில்லவு மஃறிணை.

இது நிறுத்த முறையானே இருதிணையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. மக்கள்-மக்களும், தேவர்-தேவரும், நரகர்-நரசரும், உயர் திணை - உயர்திணையாகும், மற்று உயிர் உள்ள உம் - அவ ரொழிந்த விலங்குமுதலாகிய உயிருள்ளவையும், இல்ல உம் - நிலம் நீர் முதலாகிய உயிரில்லாதவையும், அல் திணை - அஃறிணை யாகும். எ - று.

பொ-ரை. மக்களும், தேவரும், நரகரும் உயர்திணையாம்; அவரை யொழிந்த விலங்குமுதலிய உயிருள்ளனவும், நிலம் நீர் முதலிய உயிரில் லனவும் அஃறிணையாம். எ-று.

வி-பு. மக்கள், தேவர், நரகர் எனப்படுதல் அவ்வவ் யாக்கையும் உயி ரும்கூடி நின்றவழி ஆதலின், அவை பிரிந்தவழியும் வேறுசருதியவழியும் அவ ருயிரையும் உடம்பையும் உயிரில்லனவாகிய அஃறிணையாகக் கொள்ளப்படு மென்க. விலங்குமுதலியவற்றின் உயிருடம்புகளும் அன்ன.

மக்களாகப்பிறந்து புண்ணிய பாவம் இயற்றிப் புண்ணிய மிகுதியால் தேவராயும், பாவ மிகுதியால் நரகராயும் பிறத்தலின், மக்கடேவர் நரகர் எனச் சாதனசாத்தியமுறைவே வைத்தாரென்க.

அன்றியும் ஆசிரியர் தொல்காப்பியர் *"உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே"— என் முன்னர்க்கூறிப் பின்னர் **"தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியு-மிவ்வென வறியுமந் தந்தமக் கிலவே-யுயர்திணை மருங் கிற் பால்பிரிந் திசைக்கும்."—எனக் கூறலின் உயர்திணைப்பாற்படுத்த

*தொல்காப்பியம், சொல் கிளவியாக்கம், சூ. க.
** ௸ ௸ ௸ சூ. ச,

மக்கடேவர் நரகருயர்திணை என முறைதெரித்து ஓதினுமொன்க் கோட்லுமா மென்க.

† "திணை நிலங் குலனொழுக்கம்" — என்பவாகலின் திணை என்னும் பல்பொருளொருசொல் ஈண்டு குலத்தினை யுணர்த்திநின்றது. உயர்திணை அல்லாததிணை அஃறிணை எனப்பட்டது. இவ்விரண்டும் பண்புத்தொகை. உயர்வாயதுலம், அஃதன்மையவாயதுலம் என விரியும். அடையடுத்த இவ்விரண்டுசாதிப் பண்புகளும் ஆகுபெயராய் பண்பிகளை உணர்த்தி நின்றன. திணை என்பது ஒழுக்கம். அஃது ஆகுபெயராய் ஒழுக்கத்தை யுடைய பொருள்களை உணர்த்தி நின்றதெனவும், உயர்திணை என்பது வினைத்தொகை எனவுங் கூறுவாருமுளர்.

சாதி வேற்றுமை கருதி, உலகப்பொருள்களை எல்லாம் உயர்திணை, அஃறிணை என இரண்டு சாதியாகவகுத்து, அவ்வேற்றுமைகருதி, அவற்றை ஐம்பாலாசப்பகுத்தலே எல்லா ஆசிரியர்க்கும் கருத்தாவதன்றி, ஈண்டு ஒழுக்கம் கருதவேண்டுவது இன்மையானும், அவ்வொழுக்கமும் உயிரில்லனவற்றிற்குப் பொருந்தாமையானும், ஈண்டு திணை என்பதற்கு அது பொருளன்று எனவும்; உயர்திணையை உயர்ந்ததிணையென இறந்தகால வினைத்தொகையாக விரிக்கின், மரம் நாடோறும் உயர்ந்தமைகருதி, உயர் மரம் எனவும்; கல்வி அறிவு நாடோறும் உயர்ந்தமைகருதி அதனையுடையார்மேலேற்றி, உயர்மக்கள் எனவும் கூறும் வினைத்தொகைபோல், உயர்திணை என்பதற்கு உயரும் புடைபெயர்ச்சிவினை காட்சிவகையானும், கருத்துவகையானும் இன்மையின், அது வினைத்தொகை அன்று எனவும் கொள்க.

உசுஉ. ஆண் பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

இது நிறுத்தமுறையானே ஐம்பாலுள் சிலபாலும், அவற்றிற்குரிய திணையும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஆண் - ஆண்பாலும், பெண் - பெண்பாலும், பலர் - பலர்பாலும், என - என்று, முப்பாற்று - மூன்றுபாலினையுடைத்தாகும், உயர்திணை - உயர்திணை. ஏ - று.

போ - ரை. ஆண் பெண் பலர் என்னும் இம் மூன்றுபாலினையும் உடைத்து உயர்திணை. எ-று.

வி-பு. ஆடவர் என்றற்றொடக்கத்து ஆண் பன்மையும், பெண்டிர் என்றற்றொடக்கத்து பெண் பன்மையும், மக்கள் என்றற்றொடக்கத்து இருவர் பன்மையும் அடக்கி, பலர் எனப்பட்டதென்க. மேல் பல என்பதும் அது.

† சூடாமணி நிகண்டு, ஒருசொற்பலபொருட்டொகுதி, செ. எஎ.

உசுரு. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

இது அஃறிணையும் அதற்குரிய பாலும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒன்று - ஒன்றன்பாலும், பல - பலவின்பாலும், என்ற - என்ற, இரு பாற்று - இரண்டுபாலினை யுடைத்தாகும், அல்திணை - அஃறிணை. எ - று.

பொ-ரை. ஒன்றும் பலவும் என்னும் இரண்டுபாலினையுடைத்து அஃறிணை. எ-று.

வி-பு. அஃறிணைக்கண்ணும் சேவல் என்றற் றொடக்கத்து ஆண்பாலும், பேடை என்றற் றொடக்கத்து பெண்பாலும் உளவேனும், அவ்வாண்பாலும் பெண்பாலும் உயிருள்ளவற்றுள் சிலவற்றிற்கும், உயிரில்லனவற்றிற்கும் இன்மையின், அப்பகுப்பு ஒழித்து எல்லாவற்றிற்கும் பொருந்த ஒன்று எனப்பட்டதென்க.

உசுச. பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பா - லாண்மை விட் டல்ல தவாவுவ பெண்பா - லிருமையு மஃறிணை யன்னவு மாகும்.

இது திணைபால்கட்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. பெண்மை - பெண்டன்மையை, விட்டு - விட்டு, ஆண் - ஆண்டன்மையை, அவாவுவ - அவாவுவனவாகிய, பேடு - பேடுகள், ஆண்பால் - உயர்திணை ஆண்பாலாகும், ஆண்மை - ஆண்டன்மையை, விட்டு - விட்டு, அல்லது - பெண்டன்மையை, அவாவுவ - அவாவுனவாகிய, (பேடு) - பேடுகள், பெண்பால் - உயர்திணைப் பெண்பாலாகும், இருமை உம் - இவ்விருவகைப் பேடுகளும், அஃறிணை அன்ன உம் - அஃறிணையை யொப்பனவும், ஆகும் - ஆகும். எ - று.

பொ-ரை. பெண்தன்மையினை விட்டு ஆண்தன்மையினை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணை ஆண்பாலாம்; ஆண்தன்மையினைவிட்டு பெண்தன்மையினை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணைப் பெண்பாலாம்; இவ்விருவகைப் பேடுகளும் உயர்திணையாமன்றி அஃறிணையை ஒப்பனவுமாம். எ-று.

வி-பு. ஆணிலக்கணமும் பெண்ணிலக்கணமும் விரவி, ஒருவகையேனும் நிரம்பாது நிற்கும் பேட்டினைப் பாற்பொதுமையின் நீக்கி, உயர்

திணை ஆண்பாலோடும் பெண்பாலோடும் சேர்த்தமையின், அவ்விலக்கணங்களுள்விட்ட இலக்கணமும், அவாவும் இலக்கணமும் சிறந்தன என்பதூஉம்; விடாத இலக்கணமும், அவாவாத இலக்கணமும் உள, அவை அத்துணைச் சிறப்பினவல்ல என்பதூஉம்; விடுதலும் அவாவுதலும் இலக்கணை என்பதூஉம்; பேட்டிலக்கணங்களுள் சிறந்தது ஒன்றையே கருதாது, சிறவாதனவற்றையும் உடன்கருதியவழி, இருவகைப்பேடும் ஆண் பெண் என்னும் இரண்டனுள் ஒன்றன்பாற்படுதல் கூடாமையின், அப்பாலினவாம் உயர்திணையுமன்றி அஃறிணை இலக்கணமின்மையின், அஃறிணையுமன்றி உயிருள்ளனவற்றுள் ஆண் பெண் என்னும் பகுப்பிலவாகிநின்ற அஃறிணையை ஒக்குமென்பதூஉம் பெற்றும்.

பேடு, அழிதூஉ, அலி, மகண்மா:—என்பன ஒருபொருட்கிளவி. அலி, மகண்மா என்பனவற்றை வேறு கூறுவாருமுளர்.

† "பெண்ணவா யாணிழந்த பேடி யணிவாளோ - கண்ணவாத் தக்க கலம்."—எனப் பெண்ணிலக்கணஞ் சிறந்தமையின் பெண்பாற்பட்டது.

ஆண்பாற்பட்டதற்கும், அஃறிணையொத்து நின்றதற்கும், இலக்கியம் வந்தவழிக் காண்க.

உகூரு. படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற்—பெறப்படுந் திணைபா லனைத்து மேனை - யிடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.

இது கிறுத்தமுறையானே மூன்றிடத்தும் சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. படர்க்கை வினைமுற்று - படர்க்கைவினைமுற்றுச் சொல்லையும், (படர்க்கை) நாமம்-படர்க்கைப் பெயர்ச்சொல்லையும், குறிப்பின்-முன்குறித்தால், திணை பால் அனைத்து உம் - இருதிணை ஐம்பாலும், பெற படும் - பின் அவ்விருவகைச் சொல்லாலும் பெறப்படும், ஏனை இடத்து - ஒழிந்த தன்மை முன்னிலைகளின், (வினைமுற்று) - வினைமுற்றுச்சொல்லையும், (நாமம்) - பெயர்ச்சொல்லையும், (குறிப்பின்) - முன்குறித்தால், அவற்று - அவ்விருதிணை ஐம்பாலுள், ஒருமை (பால்) - ஒருமைப்பாலும், பன்மை பால் - பன்மைப்பாலும், (பெற படும்) - அந்நால்வகைச்சொல்லாலும் பெறப்படும். எ - று.

---

† நாலடியார், செ. உருக.

போ-ரை. வெளிப்படைச்சொல்லாயும் குறிப்புச்சொல்லாயும் வழக்கின்கண்ணும் செய்யுட்கண்ணும் நிற்கும் படர்க்கை வினைமுற்றுச்சொல்லையும், படர்க்கைப் பெயர்ச்சொல்லையும் முன்குறித்தால் பின் அவ்விருவகைச் சொல்லும்கருவியாக இருதிணையும் ஐம்பாலும் பெறப்படும்; ஒழிந்ததன்மை முன்னிலை வினைமுற்றுச்சொல்லையும், தன்மைமுன்னிலைப்பெயர்ச்சொல்லையும் முன்குறித்தால் பின்பு அந்நால்வகைச்சொல்லும் கருவியாக இருதிணை ஐம்பாலுள் ஒருமைப்பாலும், பன்மைப்பாலும் பெறப்படும். எ-று.

வி-பு. வினைமுற்றுநாமம் என்பனவற்றையும், குறிப்பின் என்னும் வினையெச்சத்தையும் பெறப்படும் என்பதனையும் ஏனையிடத்துங் கூட்டுக.

[வ-று.] நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன:—எனப் படர்க்கை வினைமுற்றுச்சொல்லும்;

அவன், அவள், அவர், அது, அவை.— எனப் படர்க்கைப் பெயர்ச்சொல்லும்;—முன்பு தம்மைஉணர்த்தி, பின்பு இருதிணையும்ஐம்பாலுமாகிய பொருள்களை உணர்த்தின.

நடந்தேன், நடந்தேம்:—எனத் தன்மைவினைமுற்றுச்சொல்லும்;

யான், யாம்:— எனத் தன்மைப்பெயர்ச்சொல்லும்;

நடந்தாய், நடந்தீர்:—என முன்னிலை வினைமுற்றுச்சொல்லும்;

நீ, நீர் என முன்னிலைப் பெயர்ச்சொல்லும்:—முன்பு தம்மையுணர்த்தி, பின்பு இருதிணை ஐம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தின. பிறவுமன்ன.

வினைமுற்றை முற்கூறினமையான், அவை இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய ஈற்றில்நின்றுஇசைக்கும் விகுதிகளோடு பயின்றுவருதலின், இருதிணை ஐம்பாற்பொருள்களை உணர்த்தும் நெறியில் பெயர்களிற் சிறந்தன என்பதூஉம்; குறிப்பின் என்றமையால் சொல் தன்னை உணர்த்துமென்பதூஉம்; தன்னை முன்னுணர்த்தி பொருளை பின் உணர்த்துமென்பதூஉம்; ஒலியெழுத்தை உணர்தற்கு வரிவ்டிவு ஓரறிகுறியாய் நின்றாற்போல, பொருளை உணர்தற்கு சொல் ஓர்குறியாய் நின்றதென்பதூஉம்; அக்குறியினைக்குறித்தாலன்றி இருதிணைஐம்பாலாகிய பொருட்பேறு இன்றென்பதூஉம்; பெறப்படும் என்றமையால் செவிப்புலனாகிய சொல்லை யொழிந்து கட்பொறி மாத்திரையின் இருதிணை ஐம்பாற்பொருள்களை ஒருவன் உணரும் உணர்ச்சி விலங்குணர்ச்சிபோலுமன்றி அது பொருட்பேறு ஆகாதென்பதூஉம்;

ஒருமைப்பன்மைப்பாலே என்றமையால் தன்மைமுன்னிலைகளின் ஆண் பெண் பலர் ஒன்று பல என்னும் பால்விகற்பத்தோடு இருதிணையும் தோன்று என்பதூஉம்; மூவிடங்களின் ஒன்றற்குரிய வினைமுற்றும், பெயரும், தம்மையும் பொருளையும் உணர்த்துமாறு இவ்வாறெனவே இவ்விடங்கட்குப் பொதுவாகிய வினைமுற்றுக்களும், பெயர்களும் பொதுமைநீங்கி ஓரிடத்திற் குரியவாகி, இவ்வாறு தம்மையும் பொருளையும் உணர்த்துமென்பதூஉம்; பெயரெச்சமும், வினையெச்சமும், வினைத்தொகையும், பண்புத்தொகையும் குறைச்சொல்லாதலின், தம்பயனிலையாகியவருமொழியோடு புணர்ந்து பொருள்முற்றி, இம் மூவிட வினைமுற்றுள்ளும் பெயருள்ளும் அடங்குதலின், இவ்வாறுதம்மையும் பொருளையும்உணர்த்துமென்பதூஉம்; இடைச்சொல்லும், உரிச்சொல்லும், பெயர்வினையுள் அடங்குதலின், அவ்வாறு தம்மையும் பொருளையும் உணர்த்துமென்பதூஉம்; இவ்வாறுஎல்லாச் சொல்லையும் வினைமுற்றுள்ளும், பெயருள்ளும் அடக்கி, மூவகையிடத்தும் நின்று, சொல் இருதிணை ஐம்பாற்பொருளையும் தன்னையும் உணர்த்தும் சிறப்புவிதி கூறினர் என்பதூஉம் பெற்றும்.

"வயிர வூசியு மயன்வினை யிரும்புஞ் - செயிரறு பொன்னைச் செம்மைசெய் யாணியுந் - தமக்கமை கருவியுந் தாமா மவைபோ - லுரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே."— என்றார் ஆசிரியர் அகத்தியனாரும் என்க.

இனிஇச்சூத்திரத்திற்கு இவ்வாறன்றி இருதிணைஐம்பாலைப் பொருளகத்து அறிவித்ததன்றி, சொல்லகத்து அறியுமாறு கூறினரெனப்பொருள் கூறின் * "இருதிணை மருங்கி னைம்பா லறிய - வீற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்துந் - தோற்றந் தாமே வினையொடு வருமே."—என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாறே, படர்க்கைவினைமுற்று ஒன்றுமேகூறில் அமையும். படர்க்கைநாமம் என்றல் மிகைபடக் கூறலாம்.

ஏனையிடத்தவற் றேருமைப் பன்மைப்பாலே என்றல் தன்மைமுன்னிலைகள் ஒருமை பன்மைமாத்திரையன்றி இருதிணை ஐம்பால் விளக்காமையின் மற்றென்று விரித்தலாம்.

இ[illegible]ன்றி மூவிடங்களின் ஒவ்வொன்றற்குரிய முற்றும்பெயருமே இரு[illegible]பாற்பொருளினை விளக்கும்; ஒழிந்தன விளக்கா எனப் பொருள்கூறின், எல்லாச்சொல்லும் மூவகையிடத்தும் நின்று இருதிணை ஐம்பாற்பொருளை விளக்குமெனக்கூறிய "ஒருமொழி தொடர்மொழி" என்னும் பொதுச்சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலாம்.

---

* தொல்காப்பியம், சொல், கிளவியாக்கம், சூ. ௧௦.

இச்சூத்திரத்தன் குறிப்பின் என்னுஞ்சொல்லை வினையெச்சமாக்காது, குறிப்பினும் இருதிணைஐம்பாலும் விளக்குமெனப்பொருள்கூறின்,வெளிப்படையும் குறிப்புமாம் சொற்கள் இருதிணை ஐம்பாற்பொருள்களை விளக்கு நெறியன்றி, மூவிடச்சொற்போல குறிப்புச்சொல்லென வேறொன்று இன்மையானும், ஒருவர் அறிவுதந்தாரொன்றால்,

† "நுண்ணுணர் வுடையோர் நூலொடு பழகினும்-பெண்ணறி வென்பது பெரும்பேதைமைத்தே." என்பவாகலின், அறிவு பெண்பாலால் பெறுதல் கூடாமையின், அதனையொழித்து ஒருவர் என்னும் படர்க்கைப் பெயரும், அதன் பயனிலையாகிய தந்தார் என்னும் படர்க்கைமுற்றும் உயர்திணைவினையும், ஆண்பாலினையும் குறிப்பால் விளக்குதலின், இப்பெயர் வினைகளை யொழித்து, படர்க்கைவினைமுற்றுநாமம் என்றார்அல்லர் ஆதலானும், சொற்கள் வெளிப்படையானும் குறிப்பினானும் இருதிணை ஐம்பாற் பொருள்களை விளக்குதல் நிறுத்தமுறையே "ஒன்றேழ்பொதுச்சொல்" என்னும் சூத்திரத்தால் பிற்கூறுதலானும், ஈண்டும் கூறுதல் கூறியது கூறலாம் ஆதலானும் அது பொருளன்றென்க.

உகூகூ. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே.

இது நிறுத்தமுறையானே மூவிடம் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. மூ விடம் - மூவிடமாவன, தன்மை - தன்மையும், முன்னிலை - முன்னிலையும், படர்க்கை - படர்க்கையுமாம். எ-று.

பொ-ரை. மூவிடமாவன தன்மையும் முன்னிலையும் படர்க்கையுமாம்.

[வ-று.] யான், நீ, அவன் (எ-ம்); வந்தேன், வந்தாய், வந்தான் (எ-ம்) வரும்.

வி-பு. சொல்வானும் கேட்பானுமாகிய இருவர் கூட்டத்துப் பிறந்த சொல்அவ்விருவரிடத்து நில்லாது,அயலானிடத்தில் படர்தலின் படர்க்கை எனப்பட்டது.

உகூஎ. இலக்கண முடைய திலக்கணப் போலி-மருஉவென் றாகு மூவகை யியல்பு - மிடக்க ரடக்கன் மங்கலங் ‡ குழூஉக்குறி - யெனுமுத் தகுதியோ டாறம் வழக்கியல்.

---

† வெற்றிவேற்கை.

‡ குழூஉக்குறியையும் உடனெண்ணினர். குழூஉவின்வந்த குறுநிலவழக்கு சான்றோர்வழக்கின்கண்ணும் அவர் செய்யுட்கண்ணும் வாராமையின் அமைக்கப்படாவெனச் சேனவரையர் மறுத்தமையான் அது வழக்குநெறி ஆகாமையறிக என்பர் சிவஞானமுனிவர். — இலக்கணவிளக்கச்சூறாவளி, சொல். சூ. கO.

இது கிறுத்தமுறையானே வழக்கு ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. இலக்கணம் உடையது-இலக்கணவழியால் வருவதும், இலக்கணம் போலி - இலக்கணமில்லையாயினும் இலக்கணமுடையதுபோல வருவதும்; மரூஉ - இலக்கணஞ் சிதைந்து மரீஇயதும், என்று ஆகும் - என்றுவழங்குகிற; மூவகை இயல்பு உம் - மூவகையியல்பு வழக்கும், இடக்கர் அடக்கல் - சொல்லத்தகாததை மறைத்துச்சொல்வதும், மங்கலம் - மங்கலமில்லாததை யொழித்து மங்கலமாகக் கூறுவதும், குழூஉ குறி-ஒருகூட்டத்தி லுள்ளோர் யாதாயினும் ஒரு காரணத்தால் ஒருபொருளினது சொற்குறியை ஒழித்து வேறொரு சொற்குறியாற் கூறுவதும், எனும் - என்றுவழங்குகிற, மூத்தகுதியோடு - மூன்றுதகுதி வழக்குடனே, ஆறு ஆம் - ஆறாகும், வழக்கு இயல் - வழக்கிலக்கணம். எ-று.

பொ-ரை. இலக்கண முடையதென்றும், இலக்கணப் போலியென்றும், மரூஉவென்றும் வழங்கும் மூவகை இயல்புவழக்கும்; இடக்கரடக்கலென்றும், மங்கலமென்றும், குழூஉக் குறியென்றும் வழங்கும் மூன்று தகுதி வழக்குடனேகூட அறுவகைப்படும் வழக்கிலக்கணம். எ-று.

[வ-று] நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், நன்னிலம், தண்ணீர்:— என்றற்றொடக்கத்தன இலக்கணமுடையன.

இல்முன் என்பதனை முன்றில் என்றும், நகர்ப்புறம் என்பதனைப் புறநகர் என்றும், புறவுலா என்பதனை உலாப்புறம் என்றும், கண்மீ என்பதனை மீகண் என்றும், கோவில் என்பதனைக் கோயில் என்றும், போதுவில் என்பதனைப் போதியில் என்றும்:—வழங்கும் இத்தொடக்கத்தன இலக்கணப்போலி.

அருமருந்தன்னபிள்ளை என்பதனை அருமந்தபிள்ளை என்றும், மலையமானாடு என்பதனை மலாடு என்றும், சோழநாடு என்பதனைச் சோணாடு என்றும், பாண்டியநாடு என்பதனைப் பாண்டிநாடு என்றும், இந்நாடு என்பதனை இந்தநாடு என்றும், ஆதன்றந்தை என்பதனை ஆந்தை என்றும், பூதன்றந்தை என்பதனைப் பூந்தை என்றும், மரவடி என்பதனை மாரடி என்றும், குளவாம்பல் என்பதனைக் குளாம்பல் என்றும், யாவர் என்னும் பெயரை யார் என்றும் ஆர் என்றும், யார் என்னுங் குறிப்புவினையை ஆர் என்றும், எவன் என்னும் குறிப்புவினையை என் என்றும் என்ன

என்றும், ஆற்றூர் என்பதனை ஆறை என்றும்:—வழங்கும் இத்தொடக்கத்தன மரூஉ.

கன்கழீஇவருதும், கால்கழீஇவருதும், வாய்பூசிவருதும், ஆமன் பகாவீ, பவ்வீ, புலிநின்றிறந்த நீரல்லீரத்து, கருமுகமந்தி, செம்பினேற்றை:—என்றற் றொடக்கத்தன இடக்காடக்கல்.

சேத்தானை துஞ்சினர் என்றும், ஓலையை திருமுகம் என்றும், காராட்டை வெள்ளாடு என்றும், இடுகாட்டை நன்காடு என்றும்:—வழங்கும் இத்தொடக்கத்தன மங்கலம்.

பொற்கொல்லர் பொன்னை பறி யென்றும், யானைப்பாகர் ஆடையை காரை என்றும், வேடர் கள்ளை சொல்விளம்பி என்றும், — வழங்கும் இத்தொடக்கத்தன குழூஉக்குறி.

வி-பு. இலக்கணநெறியால்வருவதனை இலக்கணமுடையது என்றும்; இலக்கண முடையதன்றிப் படைப்புக்காலத்து இலக்கணமுடையதோடு ஒருங்குபடைக்கப்பட்டதுபோல வருவதனை இலக்கணப்போலியென்றும்;

தொன்றுதொட்டதன்றி இடையே இலக்கணஞ்சிதைந்து மரீஇயதனை மரூஉ என்றும்;

இம்மூன்றுந் தகுதிவழக்குப் போலாது எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லாற் கூறுதலின் இயல்புவழக்கு என்றும்;

"இடக்கரென்பது மறைத்துமொழி கிளவி." என்பவாகலின் இடக்கர் தோன்றாது அதனை மறைத்ததை இடக்காடக்கல் என்றும்;

இடக்கர்போல் கூறத்தகாதது அன்றேனும் மங்கலமில்லதை யொழித்து மங்கலமாகக் கூறுவதை மங்கலம் என்றும்;

ஒவ்வொரு குழுவினுள்ளோர் யாதானும் ஒரு காரணத்தான் ஒருபொருளினது சொற்குறியை யொழித்து, வேறோர் சொற்குறியால் கூறுவதைக் குழூஉக்குறி என்றும்;

இம்மூன்றும் இப்பொருளை யறிதற்கு அமைந்துகிடந்த இச்சொல்லாற் கூறுதல் தகுதியன்று, வேறோர்சொல்லால் கூறுதல் தகுதியெனக் கருதிக் கூறுதலின் தகுதிவழக்கு என்றும் :— பெயர்பெற்றன.

இலக்கணப்போலியினையும், மரூஉவினையும் வேறறிதற்குச் சான்றோர் ஆட்சியே காரணமென்க. அன்றி நிலைமொழி வருமொழிகள் முன்

பின்னாக மாறிநிற்பன இலக்கணப்போலி; ஒழிந்தனவெல்லாம் மரூஉ என்று கோடலும் ஒன்று.

இவ்வறுவகை வழக்கும் திரிசொற்கண்ணும் வருதலின், இயற்சொல்லாகிய உலகவழக்கையும்; திரிசொல், திசைச்சொல், வடசொல்லாகிய செய்யுள் வழக்கையும் தொகுத்து இச்சூத்திரத்தான் வழக்கெனப்பட்டதென்க.

அங்ஙனமாயின் செய்யுள் என வேறுகூறுவது யாது கருதியெனின், இவ்வுலகவழக்கும் செய்யுள்வழக்கும் வழக்காய்நில்லாது தொடைப்பட்டமைகருதியென்க.

வழக்கு என்பது சொல்நடை.

இனி ஆசிரியர் தொல்காப்பியர் இடக்கர் என்பதனை "அவையல் கிளவி" எனவும், அவையல்கிளவியாவது இழிந்தோர்சொல்லும் இழிந்த சொல்லாதலான் அதனை நன்மக்களிடை மறைத்துக்கூறுக வென்பார் * "அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்" எனவும், மறைத்துக் கூறுங்கால் மேற்றொட்டு மரீஇவழங்கியதனை மறைத்தலை நீக்குக வென்பார் ** "மறைக்குங் காலை மரீஇய தொராஅல்." எனவுங்கூறுவர்.

மேற்றொட்டு மரீஇவழங்கியது "ஆப்பிநீரொடுக் தெளித்துச் சிறுகாலை," யானையிலண்டம், யாட்டுப்பிழுக்கை என வரும்.

தம்பொருள்மேல் நில்லாது அணிகுறித்துநின்ற "பகல்கான்றெழுதரும் பல்கதிர்ப் பரிதி" என்றாற்போல்வன தம்பொருளை உணர்த்துங்கால் மறைத்துக் கூறப்படுமாறும் உணர்க.

உகூஅ. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல - சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின் - வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுஞ்.

இது நிறுத்தமுறையானே செய்யுள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. பல் வகை தாதுவின் - தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்கிற எழுவகைத் தாதுக்களினாலே, உயிர்க்கு - உயிருக்கு இடமாகச்செய்யப்பட்ட, உடல் போல் - உடம்புபோல, பல சொல்லால் - இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்கிற நால்வகைச்சொற்களால், பொருட்கு - பொருளுக்கு, இடன் ஆக - இடமாக,

* தொல்காப்பியம், சொல். எச்சவியல், சூ. சகூ.
** ஷை ஷை ஷை சூ. சஎ.

உணர்வின் இன் - கல்வியறிவினால், வல்லோர் - செய்யுள்செய்ய வல்லவர் அணி பெற - அலங்காரம்பெற, செய்வன - உண்டாக்குவன, செய்யுள் - செய்யுளாம். எ-று.

பொ-ரை. தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கிடனாக இயற்றப்பட்ட உடம்புபோல, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களால் பொருட்கு இடனாகக் கல்வியறிவினால் செய்யுள் இயற்ற வல்லோர் அலங்காரம்பெற இயற்றுவன செய்யுளாம்.

வி-பு. ஈண்டு பொருள் என்றது அகமும் புறமுமாகிய பொருள்களை. இங்ஙனம் கூறவே எழுத்தாலியன்றது சொல்லாதலின், எழுத்து சொல் பொருள் அணி என்னும் நான்கினும் நடப்பது யாப்பு என்பதாயிற்று.

[வ-று.]

‡ "வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்
திருக்குன்ற வாண ளிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே."—

என்னும் இக்கட்டளைக்கலித்துறை இடமணித்தென்னும் பொருட்கிடனாகி, தன்மை உவமை உருவக அணிகளும் பிறவும் உடைத்தாய் வருதல்காண்க. பிறவுமன்ன.

உசுசு. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி — யாகுபெயர் அன்மொழிவினைக் குறிப்பே - முதறொகை குறிப்போ டின்ன பிறவுங்-குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

இது நிறுத்தமுறையானே வெளிப்படையும் குறிப்பும் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஒன்று ஒழி பொதுச்சொல் - இருதிணை ஆண்பெண்ணுள் ஒன்றனை யொழிக்கும் பொதுச்சொல்லும், விகாரம் - வலித்தல் முதலாகிய விகாரச்சொற்களும், தகுதி - மூவகைத் தகுதி வழக்குச்சொற்களும், ஆகுபெயர் - ஆகுபெயர்ச் சொல்லும், அன்மொழி - அன்மொழித்தொகைச்சொல்லும், வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச்சொல்லும், முதல் - முதல்குறிப்புச்சொல்

‡ திருக்கோவையார், செ. கரு.

லும், தொகை - தொகைக்குறிப்புச்சொல்லும், குறிப்பு - இம்மு தல்தொகையல்லாத பலவழியானும்வரும் குறிப்புச்சொல்லும், இன்ன பிற உம்-இவைபோல்வன பிறவும், குறிப்பின் - குறிப்பினால், தரும் - இருதிணை ஐம்பாற்பொருள்களையுந் தருகிற, மொழி - சொற்களாம், அல்லன - இவையல்லனவெல்லாம், வெளிப்படை - வெளிப்படையால் (தரும்) - அப்பொருளைத்தருகிற, (மொழி) - சொற்களாம். எ-று.

போ-ளா. இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றனை யொழிக்கும் பொதுச்சொல்லும், வலித்தல் முதலிய ஒன்பது விகாரச்சொல்லும், மூவகைத்தகுதி வழக்குச்சொல்லும், ஆகுபெயர்ச்சொல்லும், அன்மொழித்தொகைச் சொல்லும், வினைக்குறிப்புச்சொல்லும், முதற்குறிப்புச்சொல்லும், தொகைக் குறிப்புச்சொல்லும், இம்முதல்தொகையல்லாத பலவாற்றானும் வருங்குறிப்புச்சொல்லும், இவைபோல்வன பிறவும் குறிப்பினால் இருதிணை ஐம்பாற் பொருளைத்தருஞ் சொற்களாம்; இவை அல்லனவெல்லாம் வெளிப்படையான் அப்பொருள்களைத்தருஞ் சொற்களாம். எ-று.

வி-பு. வெளிப்படை அல்லனவெல்லாம் குறிப்புச் சொல்லாயினும் அக்குறிப்புச் சொல்லுள்ளும் வேற்றுமை தோன்றற்கு ஏகாரம்இடையிட்டுக் கூறினனென்க.

[வ-று.] ஆயிரமக்கள் பொருதார், பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ்நால்வர் மக்களிருந்தார்:—என்புழி மக்கள் என்னும் பொதுப் பெயரும்; பொருதார், இருந்தார் என்னும் பொதுவினையும் உயர்திணை ஆண்பால் பெண்பாலுள் ஒன்றனையொழித்து ஒன்றனைக் குறிப்பான் உணர்த்தின.

இப்பெற்றமுழ வொழிந்தன, இப்பெற்ற மறத்திற்கே கறக்கும் என்புழி பெற்றம் என்னும் பொதுப்பெயரும்; ஒழிந்தன, கறக்கும் என்னும் பொதுவினைகளும் அஃறிணை ஆண்பால் பெண்பாலுள் ஒன்றனை யொழித்து ஒன்றனைக் குறிப்பான் உணர்த்தின.

இவற்றுள் பொருதார், கறக்கும் என்னும் வினைகள் விகுதிமாத்திரையிற் பொதுவினை ஆயின.

துறுத்தாட்பூதம், மராமலர், துலிகமோ டிகலியவங்கை:—என்புழி இவ்விகாரச்சொற்கள் துறுந்தாள், தாமரை இங்குலிகம் என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின.

கால்கழிஇவருதும், நன்காடு, பறி:—என்புழி இத்தருமிகள் தத்தம் பொருள்களைக் குறிப்பால் உணர்த்தின.

புளித்தின்றான், கடுத்தின்றான்:—என்புழி இவ்வாகுபெயர்கள் அவற்றின் பழத்தினைக் குறிப்பால் உணர்த்தின.

பொற்றொடி தந்த புனைமடல், அறப்பொருந்தற்கில்லையருள்:—என்புழி இவ்வன்மொழித்தொகை அவற்றையுடைய மகளிரைக் குறிப்பால் உணர்த்தின.

† "சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனை-யிகல்வெல்லல் யார்க்கு மரிது." — என்புழி வல்லன், இல்லன் என்னுஞ் சொற்கள் பெயர்ப் பொருளை யொழித்து வினைக்குறிப்புப்பொருளைக் குறிப்பாலுணர்த்தின.

‡ "அறத்தா றிதுவென வெள்ளைக்கொழிப்பு" என்புழி இம்முதற்குறிப்புச் சொற்கள் †† "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை - பொறுத்தானோ டூர்ந்தா னிடை."—என்னும் பாட்டைக் குறிப்பாலுணர்த்தின.

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ - நிலந்தலைக் கொண்ட"—என்புழி ஐவர் என்னும் தொகைக்குறிப்புச்சொல் பாண்டவரைக் குறிப்பாலுணர்த்திற்று.

"ஒன்றி னிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே - சென்றுலா
மாழ்கடல்சூழ் வையகத்து ளைந்துவென் றாறகற்றி
யேழ்கடிந் தின்புற் றிரு."—என்பது மது.

இனி பல்வாற்றானும் வரும் குறிப்புச்சொற்கள் பொருளைக் குறிப்பாலுணர்த்துமாறு.—

கற்கறித்து நன்கட்டாய், நீயிர் பெரிதுமறிதிர், பறவாத்துளவி, பாயா வேங்கை.

"உவர்க்கடலன்ன செல்வரு முளரே - கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே."

"செல்வர்தம் பெருந்திரு வுறுக-பல்பக னிவா ழியரோ நெடிதே-யியாச் சிறுவிலைக் காலத் தாயினு - மாறுபொரு டந்தெஞ் சொற்கொள் வோயே."

† திருக்குறள், செ. சுசுஎ. ‡ காரிகை, செ. கரு.
†† திருக்குறள், செ. ௩௭.

"பல்சான் றீரே பல்சான் றீரே - கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட் - பயனின் மூப்பிற் பல்சான் றீரே."

"அறனே மற்றிது விறன்மாண் குடுமி - யின்னா வாகப் பிறர்தம் மண் கொண் - டினிய செய்தினின் னார்வலர் முகத்தே."

"நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்-போதர விட்ட நுமருந் தவ றிலர்-நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப் - பறையறைந் தல்லது செல்லற்க வென்று-விறையே தவறுடை யான்."

"மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு - கையார் பிரிவித்தல் காண்."

"சோலைவை யோரெழுத்தா லென்சொல்லுந் தொக்கதன்மே
னீல்ப்பே ரொவ்வெழுத்தி னுனிரம்பு—மாலைக்
குடைவேந்தன் சென்னி குலநதியின் பேராக்
கடைசேர்ந்த வோரெழுத்தாற் காண்."

கா, காவி, காவிரி :— என்பது பொருள். இஃது எழுத்துப்பெருக்கம்.

"ஆற்றின்பே ரீற்றி னெழுத்தொழிய வின்புஞ்சேர்
நாற்கால் தாமீற் றுயிர்நடப்ப—வேற்புடைய
வுண்பயனு மாங்கதனி னீரெழுந்த லோதுநூற்
கின்பஞ்சேர் செய்யுளா மின்று."

பாலாறு, பாலா, பால், பா :—என்பது பொருள். இஃது எழுத்துச் சுருக்கம்.

"வாம மணிமே கலையார் மயிர்குறுகி
னமவர் பெய்யு மணிகுழை—யேம
மயிர்நிறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பிறி
செயிர்தீர் மரமாகுஞ் சென்று."

கூழை, குழை, ஒதி, ஒதீ :— என்பது பொருள். இது மாத்திரைச் சுருக்கம்.

"பூமேலா ளாரொன்பார் பூம்போர்வை யென்செய்யுந்
தீமேற் படிற்கொடுத்தாற் கொள்வதெவ—னாமே
நலந்திகழுஞ் செங்கை நயதீர னெங்கோன்
சிலம்பன் றிருவேய் கடன்."— இது வினாவுத்தாம்.

"நீத்தொழிந்த வாறைந் தடக்கிப்பின் னிச்சயமே
வாய்த்தமைந்த வாயில்பெண் ணானையுங்—கூத்தற்கு
மேளேற்ற டோசை விளைகில மிவ்வல்லாற்
கேளா யுடன்வருவ தில்."—

நிலமைகடைப்பிடி, சிவபுண்ணியஞ்செய் என்பது பொருள்.— இத்தொடக்கத்தனவெல்லாங்குறிப்பினால் தத்தம்பொருள்களையுணர்த்தின.

இன்னபிறவும் என்றமையானே தெரிநிலைவினைக்குறிப்பு வினையாலணையும் பெயரும்; வினைமுற்றுணுங் குறிப்புமுற்றுணும் வருமெச்சங்களும்; செய்யும் என்னும் முற்றும்; அன்று, இன்று, என்னும் வினையெச்சக் குறிப்பும்; கேட்குநபோலவும் கிளக்குநபோலவும், இயங்குநபோல்வும் இயற்றுநபோல்வும் அஃறிணை மருங்கினும் அறையப்படுதல் முதலிய இலக்கணைகளும்; இவைபோல்வன பிறவுங்கொள்க.

இவ்வாறன்றி, நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்:— என்றற்றொடக்கத்தனவெல்லாம் வெளிப்படையிற் பொருளுணர்த்தின.

வடநூலார் சொற்பொருளை, வாச்சியம், வேங்கியம், இலக்கணை, என மூன்றெனவும், ‡ இலக்கணையை வேங்கியத்துளடக்கி இரண்டெனவும் கூறுப.

இவற்றுள் வாச்சியம் என்பது வெளிப்படை. வேங்கியம் என்பது குறிப்பு. இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருட்குத் தந்துரைப்பது. அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும். அவை வருமாறு:—

“சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெருந்துணையு
நின்றதுகொ னேர்மருங்கிற் கையூன்றி—முன்றின்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்
குழந்தபின் சென்றவென் னெஞ்சு.” — என்புழி மருங்குங் கையும் ஊன்றுதலும் முதலிய இலக்கணங்கள் நெஞ்சிற் கின்மையின் விட்டஇலக்கணை.

கங்கையின்க ணிடைச்சேரி, புளித்தின்றான்:—என்புழி இடைச்சேரி கங்கைக்கரைக்கண் இருத்தலும், புளியினது பழத்தைத் தின்றலும் உண்மையின் விடாத இலக்கணை.

“பாயிருள் பருகிப்-பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி.”—என்புழி இருளைப் பருகுதலும் பகலைக் காலுதலும் பரிதிக்கின்மையானும், இருளைப் போக்குதலும் பகலைத்தருதலும் அதற்குண்மையானும் விட்டும்விடாத இலக்கணை.

‡ இலக்கணையும் சத்தத்தின்க ணுளதென்றும், அது ஆற்றலுடைத்தற் பாலதன் சம்பந்தமென்றுங் கூறுவர்.—தருக்கசங்கிரகநூலார்.

னையுங் குறிப்பினுள் அடங்குமாதலின் "வெளிப்படை குறிப் பின் விரிப்பது சொல்லே." எனத் தொகுத்தும் இவ்வாறு வகுத்துங் கூறினா ரென்க.

உஎம. அதுவே, இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை - யெனவிரண் டாகு மிடையுரி யடுத்து-நான்கு மாந்திசை வடசொலணு காவழி.

இது மேலைச்சூத்திரங்களாலும் சொல்லாவது இஃதெனக்காட்டக் கண்ட சொல் இத்துணையாம் என்பது உணர்த்துகின்றது.

ப-ரை. அது-முன்னேகாட்டியசொல், இயற்சொல்-இயற்சொல் லும், திரிசொல் - திரிசொல்லுமென்கிற, இயல்பின் - தன்மையை யுடைய, பெயர் (சொல்) பெயர்ச்சொல்லும், வினை (சொல்)-வினை ச்சொல்லும், என-என்று, இரண்டு ஆகும்-இரண்டாகும், இடை (சொல்)-இடைச்சொல்லும், உரி (சொல்) உரிச்சொல்லும், அடு த்து - அவற்றுடனடுத்து, நான்கு உம் ஆம் - நான்குமாகும், திசை வட சொல்-திசைச்சொல்லும் வடசொல்லும், அணுகா வழி-அவற் றுடன் சேராதவிடத்து. எ-று.

பொ-ரை. மேற்காட்டிய சொல் இயற்சொல் திரிசொல் என்னும் இயல்பினையுடைய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமென இரண்டாம்; இவற்றுடன் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அடுத்து நான்குமாம் இவற்றுடன் திசைச்சொல்லும் வடசொல்லும் அணுகாவிடத்து. எ-று.

வி-பு. செய்யுட்குரியன உரிச்சொல்லெனக் கூறுதலானும், வருஞ் சூத்திரம் செந்தமிழாகி யெனக் கூறுதலானும், இயற்சொல் என்றதைப் பெயர்வினை இடையினும், திரிசொல் என்றதை எல்லாவற்றினும் பிரித்து உணர்த்துக்கொள்க.

எனவே, அதுவே எனச் சுட்டியசொல் பெயரியற்சொல், பெயர்த்திரி சொல், வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற்சொல், இடைத்திரி சொல், உரித்திரிசொல் என எழுவகைப்படு மென்பதூஉம்; திசைச்சொல் லும் வடசொல்லும் அணுகியவழி ஒன்பதுவகைப்படுமென்பதூஉம்பெற்றாம். உரியியற்சொல் இன்றாகவும், உரித்திரிசொல் என்றது இயற்சொல், திரிசொல் என்னும் பொதுவிலக்கண நோக்கி யென்க.

இச்சொற்களை பொருள்கோடாது முறைதெரித்தோதிய தென்னையெ னின், ஒருவன், ஒருத்தியென்ற மாத்திரையின் அவர் கைகால் முதலிய அகத் துறுப்பும்; ஆடை, அணி முதலிய புறத்துறுப்பும் அடங்குதல்போல

பெயர்வினை என்ற மாத்திரையின் அவற்றின் அகத்துறுப்பாகிய விகுதி உருபு முதலிய இடைச்சொற்களும், புறத்துறுப்பாகிய வேற்றுமை உருபு முதலிய இடைச்சொற்களும் அடங்குதலானும், உரிச்சொல்:—

"பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி" என்பவாகலின் பெயருள் அடங்குதலானும், திசைச்சொல்லும் வடசொல்லும் இவற்றுள் யாதானும் ஒன்றுபடங்குதலானும், இவற்றை அடக்கிநின்ற தலைமையுஞ் சிறப்புந் தோன்ற பெயர்வினை யென இரண்டாகுமென வரையறுத்தும், பெயர்வினையுள் அடங்கி நின்றவற்றையே வேறுபாடறிதற்கு வேறுபடுத்துத், தொகை கோடலின், இடையுரிக்கு அத்தலைமையுஞ் சிறப்பும் இன்றென்பது தோன்ற அடுத்துநான்குமாம் என்றும்; கொடுந்தமிழ் முதலிய சொல் செந்தமிழோடு விராயவழி அவற்றைத் திசைச்சொல் என்றும்; ஆசிரியச்சொல் தமிழ்நடைபெற்றுச் செந்தமிழோடு விராயவழி, அதனை வடசொல்லென்றும்; தமிழோடு தழுவப்படுமாயினும் செந்தமிழ்ச் சொல்லோடு தொகைகோடல் ஒருதலை யன்றென்பது தோன்ற அணுகர்வழி யென்றும் முறைதெரிந்தோதினு ரென்க.

வடக்குமோர் திசையன்றே திசைச்சொல்லன்றி வடசொல்லென வேறு கூறுவ தென்னையெனின், தமிழ்நாட்டிற்கு வடதிசைக்கண் பதினெண் மொழிகளுள் ஆரியமுதலிய பலமொழியும் உளவேனும் தென்றமிழ்க் கெதிரியது கடவுட்சொல்லாகிய ஆரியம் ஒன்றுமே என்பது தோன்ற அவற்றுள் தமிழ்நடைபெற்றதை வடசொல் என்றும், ஏனையவற்றுள் தமிழ்நடைபெற்றதைத் திசைச்சொல் என்றும் சான்றோரால் நியமிக்கப் பட்டனவென்க.

அன்றியும், ஆரியச்சொல் எல்லாத்தேயத்திற்கும் விண்ணுலகமுதலியவற்றிற்கும் பொதுவாகலான், அவ்வாரியச்சொல் தமிழ்நடை பெற்றதைத் திசைச்சொல் என்றல் கூடாதெனக் கோடலுமாம்.

அங்ஙனமாயின் வடசொல் என்ற தென்னையெனின், ஆண்டுப்பயிற்சி மிகுதிபற்றி யெனக்கொள்க.

இச்சொற்களைப்பெயர்முதலியவாக வைத்த தென்னையெனின், பெயர்ச்சொல் பொருளை விளக்குதலானும்; வினைச்சொல் பொருளது புடைபெயர்ச்சியை விளக்குதலானும்; இடைச்சொல் பொருளையும், பொருளது புடைபெயர்ச்சியையும் தம்பாலன்றித் தத்தங் குறிப்பால் விளக்குதலின், பெயர்ச்சொல் வினைச்சொற்களும் ஆகாது, அவற்றின் வேறுமாகாது, இடை நிகரனவாய் நிற்றலானும்; உரிச்சொல் பொருட்பண்பாகிய இசை, குறிப்பு, பண்பு மூன்றனையும் விளக்கி, பொருட்குரிமைபூண்டு நிற்றலா

றும்; திசைச்சொல் கொடுந்தமிழ் மொழியாயும், அன்னியமொழியாயும் வருதலானும்; வடசொல் அன்னியமொழியேயாய் வருதலானும்; இம்முறை வைக்கப்பட்டனவென்க.

* "சொல்லெனப் படுப பெயரே வினையென்-றாயிரண் டென்ப வறிந்திசி னோரே."

** "இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு-மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப." என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும் என்க.

உ௪க. செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்-தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

இது மேலைச் சூத்திரத்து நிறுத்தமுறையானே இயற்சொல்லாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. செந்தமிழ் ஆகி - செந்தமிழ் நிலத்து மொழியாகி, திரியாது-திரிசொற்போலாகாது, யார்க்கு உம் - கற்றோருக்குங் கல்லாதோருக்கும், தம் பொருள்-தம்பொருளை, விளக்கும்-ஒப்பவிளக்குகின்ற, தன்மைய-தன்மையுடைய வுலகவழக்கே, இயற்சொல்-இயற்சொல்லாகும். எ-று.

போ-ரை. செந்தமிழ்நிலத்து மொழியாகி அந்நிலத்து மொழியுள் மேற்கூறப்படுந் திரிசொற்போலாது கற்றார்க்குங் கல்லாதார்க்கும் ஒப்பத் தம்பொருளை விளக்குந் தன்மையினையுடைய உலகவழக்கு இயற்சொல்லாம். எ-று.

வி-பு. யார்க்கும் என்றதனால் உலகவழக்கு என்பது பெற்றாம்.

[வ-று.] மணி, பொன்:—என்றற்றொடக்கத்தன பெயரியற்சொல்:

நடந்தான், வந்தான்:—என்றற் றொடக்கத்தன வினையியற்சொல்:

அவனை, அவனால்:— என்றற்றொடக்கத்து வரும் வேற்றுமையுருபு முதலியன இடையியற்சொல்.

செந்தமிழ் நிலமாவ தியாதெனில்.—"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ் - சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ் - சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு - மங்கலப் பாண்டி வளநா டென்ப." இவ்வாறன்றிச் செந்தமிழ்நிலம் வையையாற்றின் வடக்கெனக் கூறுவாரு முளர்.

---

* தொல்காப்பியம், சொல். பெயரியல், சூ. ௧௫௮.
** ௸, ௸ ௸ சூ. ௧௫௯.

கொடுந்தமிழ்நிலத்து புனனாடு எனப்படுவது சோணாடு ஆதலானும், பாண்டியனையே தமிழ்நாடன் எனச் சான்றோர் கூறுதலானும் அஃதனை யன்றென்க.

உஎஉ. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்-பலபொருள் குறித்த வொருசொல் லாகியு - மரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

இது சிறுத்தமுறையானே திரிசொல்லாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஒரு பொருள் - ஒருபொருளை, குறித்த - கருதிய, பல சொல் ஆகியும் - பலசொற்களாகியும், பல பொருள் - பலபொருள் களை, குறித்த-கருதிய, ஒரு சொல் ஆகி உம் - ஒருசொல்லாகியும், அரிது - அரிதாக, உணர்-கற்றோர் அறிகின்ற, பொருளன - பொருளினவாய்வருவன, திரி சொல் ஆகும்-திரிசொல்லாகும். எ-று.

பொ-ரை. ஒரு பொருளைக் கருதிய பலசொல்லாகியும், பலபொருளைக் கருதிய ஒருசொல்லாகியும், கற்றாருணரும் பொருளவாய் வருவன திரிசொல் லாம். எ-று.

வி-பு. அரிதுணர்பொருளன என்றமையான் ஒருபொருள் குறித்த பலசொல்லுள்ளும், பலபொருள் குறித்த ஒருசொல்லுள்ளும் வரும் இயற்சொல் ஒழியக்கொள்க.

[வ-று.] கிள்ளை சுகம், தத்தை :— என்றற் றொடக்கத்தன ஒரு பொருள் குறித்த பலபெயர்த்திரிசொல்.

யானை, கோழி, சங்கு, வாரணம் :— என்றற் றொடக்கத்தன பல பொருள் குறித்த ஒருபெயர்த்திரிசொல்.

படர்ந்தான், சென்றான் :— என்றற் றொடக்கத்தன ஒருபொருள் குறித்த பலவினைத்திரிசொல்.

வரைந்தான், ஆர்ந்தான் :— என்றற் றொடக்கத்தன பலபொருள் குறித்த ஒருவினைத் திரிசொல்.

சேறும், வருதும்: — என்றற் றொடக்கத்து விகுதிகள் ஒருபொருள் குறித்த பலவிடைத்திரிசொல்.

‡ "கொல்லே யைய மசைநிலைக் கூற்றே."—என்றற் றொடக்கத்தன பலபொருள் குறித்த ஓரிடைத்திரிசொல்.

‡‡ "சால வுறுதவ நனிகூர் கழிமிகல்"—என்றற்றொடக்கத்தன ஒரு பொருள் குறித்த பலவுரித் திரிசொல்.

‡‡‡ "கடிவென்கிளவி காப்பே கூர்மை" — என்றற்றொடக்கத்தன பல பொருள் குறித்த ஓருரித்திரிசொல்.

---

‡ நன்னூல், சூ. சஙு. ‡‡ நன்னூல், சூ. சடுக.
‡‡‡ ஷை சூ. சடுஎ.

பிறசொல்லும் வடசொல்லும் ஒருபொருள் பலபொருள் என்னும் விகற்பத்தான் வந்தனவேல் காண்க. ஈண்டு இயற்சொல் திரிசொல் என்றது அவற்றின் எழுத்துக்கள் திரியாமையுந் திரிந்தமையுங் கருதியன்று. வாளா ரத்தின்முகம் தன்னியல்பாயிருந்ததேனும், நார்முகச் செவ்விக்கு மறுதலைப் பட்டமை கருதி வலிமுகமெனப்பட்டதுபோல, கல்வி வேதுவான்ன்றி இயல்பாகத் தம்பொருளை யுணர்த்தலின் இயற்சொல் என்றும், அவ்வியல்பிற்கு மறுதலைப்பட்டு, கல்வியே துவால் தம்பொருளை உணர்த்தலின் திரிசொல் என்றும் கூறப்பட்டதெனக.

உஎ௲. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினு - மொன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந் - தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப.

இது நிறுத்தமுறையானே இயற்சொல் திரிசொல் என்றவற்றின் பின்னின்ற அவ் வியல்பினவாய பெயர்வினை யிடையுரிகளை இவ்வியலுள் இடுகுறிகாரணம் என்னுஞ் சூத்திரந்தொட்டு இவ்வதிகாரத்து ஐந்தியலானும் உணர்த்த நிறீஇ ஒழிந்த திசை வடசொற்களுள் திசைச்சொல் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. செந்தமிழ் நிலம்-செந்தமிழ் நிலத்தை, சேர்-சேர்ந்த, பன்னிரு நிலத்தின் உம்-பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களினும், ஒன்பதிற்று இரண்டினில் - பதினெண்மொழிகளுள், தமிழ்-தமிழ்நிலமானது, ஒழி-ஒழிந்த, நிலத்தின் உம் - நிலங்களிலுமுள்ளோர், தம் குறிப்பின-தங்குறிப்பினவாய் அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ் நிலத்துவந்து வழங்குவன, திசைச்சொல் என்ப - திசைச்சொல்லென்று சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலத்தின்கண்ணும் பதினெண் மொழியுள் தமிழும், மேற்கூறும் வடசொற்குக் காரணமாகிய ஆரியமும் ஒழிந்த பதினாறு மொழியும் வழங்கும் பதினாறு நிலத்தின்கண்ணும் உள்ளோர் தங்குறிப்பினவாய் செந்தமிழோர் குறிப்பினவன்றி, அத்திசைகளினின்றும் செந்தமிழ்நிலத்து வந்து வழங்குவன திசைச்சொல்லென்று கூறுவர் புலவர். எ-று.

வி-பு. ¶ செந்தமிழ் என்றமையால் கொடுந்தமிழ் என்பதூஉம்; ஆரியத்தின் காரியமாய வடசொல்லை வேறுகூறுதலின் தமிழொழி நிலம் பதினாறென்பதூஉம்; கற்றோரையும் மற்றோரையும் தழீஇ, தங்குறிப்பினவெனப்

¶ செந்தமிழ் என்றதினாலே கொடுந்தமிழ்என்றது அருத்தாபத்தியால் பெறப்பட்டது என்றும், அந்தோ என்பது சிங்களச்சொல் என்றும், எருந்நை-புறண்டில் என்பது தெலுங்குச்சொல் என்றும், மாமரத்தை-கோக்கு என்பது துளுவச்சொல்என்றும்,பிறவும் உரைப்பர்.—இராமாநுசகவிராயர்.

பாதமையின் இத்திசைச்சொற்கள் அங்கிலத்தோர்க்கு இறைச்சொல்லாய் செந்தமிழோர்க்கு அவ்வாறு குறிக்கப்படாத திரிசொல்லாய் நிற்குமென்பது உம் பெறும்.

கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டாவன—" தென்பாண்டி குட்டங் குடங் கற்கா வேண்பூழி - பன்றி பருவா வதன்வடக்கு - நன்றாய - சீத மலாடு புனனாடு செந்தமிழ்சே - ரேதமில் பன்னிருநாட் டெண்."— என்பனவாம்.

இவற்றுள் செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் தென்திசைக் கண்ணதாகிய

தென்பாண்டிநாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும்; சோற்றைச் சொன்றி யென்றும்;

துட்டநாட்டார் தாயைத் தள்ளை என்றும்;

குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும்;

கற்காநாட்டார் வஞ்சரைக் கையர் என்றும்;

வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும்;

பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும்;

அருவாநாட்டார் செறுவைச் செய் என்றும், சிறுகுளத்தைக் கேணி என்றும்;

அருவாவடதலையார் புளியை எகின் என்றும்;

சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும், தோழியை இதுளை என்றும்;—வழங்குவர்.

இவை முதலியனவும் ¶ தமிழொழிந்த பதினாறு நிலத்து மொழிகளுள் ஏற்பனவும் செந்தமிழோடு விரவிவருதல் காண்க.

உஎச. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானு - மீரெழுத் தானு மியைவன வடசொல்.

இது வடசொல்லாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. பொது எழுத்தான் உம் - ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலும், சிறப்பு எழுத்தான் உம் - ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்துத் திரிந்த வெழுத்தாலும், ஈரெழுத்தான் உம் - இவ்விரண்டெழுத்தினாலும், இயைவன - செந்தமிழ்ச்சொல்லை ஒப்பனவாகி வடதிசையிலிருந்து செந்தமிழ் நிலத்துவந்து வழங்குவன, வடசொல் - வடசொல்லாம், எ-று.

¶ இவற்றைப்பதினேழ்நிலமென்பர்.—இராமாநுசகவிராயர்.

அது.—" சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம்வங்கங்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே."—என்பதனாலறிக.

போ-ரை. ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது வெழுத்தானும், ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்துத்திரிந்த வெழுத்தானும், இவ்விரண்டானும் செந்தமிழ்ச்சொல்லை ஒப்பனவாகி வடதிசைக்கண் நின்றுஞ் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன வடசொல்லாம். எ-று.

வி-பு. பதவியலுள் "பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்" எனக் கூறினமையின் சிறப்பெழுத்துத் திரிந்த வெழுத்தானும் என்பது பெற்றும்.

அவ்வடசொற்கு ஆரியச்சிறப்பெழுத்துத் திரிந்த எழுத்து ஆதிகாரணமாயும், அச்சிறப்பெழுத்து அநாதிகாரணமாயும் நிற்றலின் சிறப்பெழுத்தானும் என்றார். அது பருத்தியான் இயன்ற படாம் என்றற்போலவும்.

ஆரியச்சொல் சிதைந்து வடசொல்லாதலின் இவை சொல்லால் செந்தமிழ்ச்சொல்லை ஒவ்வாமைகருதி எழுத்தானொக்கும் என்பார் எழுத்தானியைவன என்றார்.

[வீ-று.] அமலம், உருவம், கமலம், காரணம், காரியம்:—என்றற்றொடக்கத்தன பொதுவெழுத்தா னியைந்தன.

சுகி, போகி, சுத்தி:—என்றற்றொடக்கத்தன சிறப்பெழுத்தான் இயைந்தன.

அரன், அரி, கடினம், சலம்:—என்றற்றொடக்கத்தன ஈரெழுத்தானும் இயைந்தன.

அரன் என்புழி தமிழின்சிறப்பாகிய னகரவீறு பதவியலுள் "உவ்வுமாம்பிற" என்றமையான் அமைந்தமையின், ஈண்டு விதந்து கூறாராயினர், பிறவுமன்ன.

* "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ - யெழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே."

** "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்"—என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும் எனக.

உஎ௫. இடுகுறி காரண மாபெயா டாக்கந் - தொடர்ந்து தொழிலல காலந் தோற்ற-வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன் - றேற்பவும் பொதுவு மாவன பெயரே.

---

* தொல்காப்பியம், சொல். எச்சவியல், சூ. ௫௰௬.

** ௸ ௸ ௸ சூ. ௫௰௭.

இ-ஜ-இவ்வதிகாரந்த ஐந்தியலாலும் உணர்த்தநிறீஇப பெயர் வினை யிடை உரி என்னும் நான்கனுள் பெயரிலக்கணம்உணர்த்துவான்தொடங்கி அதன் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. இடு குறி-இடுகுறியும்,காரணம்(குறி)-காரணக்குறியும், மரபு-மரபினையும், ஆக்கம்-ஆக்கப்பாட்டினையும், தொடர்ந்து-தொடர்ந்து,தொழில் அல-வினையாலணையுங் காரணக்குறியல்லாதவை, காலம்-காலத்தை, தோற்ரு-காட்டாமல், வேற்றுமைக்கு-எட்டுவேற்றுமையுஞ் சார்தற்கு, இடன் ஆய் - இடமாகி, திணை-இருதிணையிலும், பால்-ஐம்பாலிலும்,இடத்து-மூவிடத்திலும்,ஒன்று-ஒன்றனை, ஏற்ப உம் - ஏற்பனவும், பொது உம் - பலவற்றினை யேற்பனவும், ஆவன-ஆகிவருவன, பெயர்-பெயர்களாம். எ-று.

பொ-ரை. இடுகுறியும் காரணக்குறியும் மரபினையும் ஆக்கப்பாட்டினையுந் தொடர்ந்து வினையாலணையும் காரணக்குறியொன்றும் காலந்தோற்ற அல்லனகாலந் தோற்ருவாய் எட்டுவேற்றுமையுஞ் சார்தற்கிடமாய் இருதிணை ஐம்பான் மூவிடத்து ஒன்றனை யேற்பவும் பலவற்றினை யேற்பவுமாய் வருவன பெயர்களாம். எ-று.

[வ-று.] ஆண், பெண், மாம், தெங்கு, கழுது :—என்றற்ருெடக்கத்தன இடுகுறிமரபு தொடர்ந்து வந்தன.

அவன், அவள், காளை, காரிகை, விலங்கு, பறவை :—என்றற்ருெடக்கத்தன காரணக்குறிமரபு தொடர்ந்து வந்தன.

"பொன்போலுங் கள்ளி பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாருய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு."—என்னும் பொய்யாமொழிப்புலவன் பாட்டில் வேட்டுக்குமரன் தன்பெயர் முட்டை என்றற் ருெடக்கத்தன இடுகுறியாக்கம் தொடர்ந்தன.

பொன்னன், பூணன், ‡ "மலைமகண் மகனே மற்ருேர் கூற்றே" :—என்றற்ருெடக்கத்தன காரணக்குறியாக்கம் தொடர்ந்தன.

நடந்தவனை, நடந்தானை:—என்றற்ருெடக்கத்தன வினையாலணையுங் காரணக்குறி காலங்காட்டின.

ஏனை இலக்கணங்கள் முன்னும் பின்னும் பெறப்படுதலின் ஈண்டுக் காட்டிற்றிலம். ஆண், பெண் முதலிய இடுகுறிப்பெயரும், அவன், அவள்

‡ திருமுருகாற்றுப்படை.

மூலிய காரணப்பெயரும், இடையே ஒருவரால் ஆக்கப்பட்டனவன்றி, அவ்விலக்கணங்களோடு தோன்றிய பொருள்கட்கெல்லாம் தொன்று தொட்டு மரபுபற்றி வருதலானும்; மூட்டை என்றற்றொடக்கத்துக் காரணப் பெயரும் மரபுபோலத் தொன்றுதொட்டனவன்றி, அப்பொருள்கட்கு இடையே ஒருவரால் ஆக்குப்பட்டு வருதலானும்; இடுகுறிகாரணமிரண்டும் மரபையும் ஆக்கத்தையும் தொடர்ந்து என்றார்.

இதற்கு இவ்வாறன்றி இடுகுறிப்பெயர் காரணப்பெயர் இரண்டும் ஒழிய இடையன், பாகன் என்னும் மரபுப்பெயர் தெங்கு, கடு என்னும் ஆகுபெயரெனப் பொருள்கொள்வாருமுளர்.

எல்லாப்பெயரும் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என்னும் இரண்டாய் அடக்குவதன்றி வேறின்மையானும்,—"இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின." — என வரையறைகூறிப் போந்தமையானும், அது பொருந்தாதென்க.

உஎகூ. அவற்றுள், கிளையெண் குழஉமுதற் பலபொரு டிணைதே-யூர்வா னகம்புற முதல நிலன்யாண்-டிருது மதிநா ளாதிக் காலந்-தோள் குழன் மார்புகண் காது முதலுறுப் - பளவறி வொப்பு வடிவு நிறங்கதி-சாதி குடிசிறப் பாதிப் பல்குண - மோத லீத லாதிப் பல்வினை-யிவை யடை சுட்டு வினப்பிற மற்றே - டுற்றநவ் வீறு நம்பி யாடூஉ - விடலை கோவேள் குரிசி றென்ற - லின்னன வாண்பெய ராகு மேஎ்ப.

இது மேல் திணைபாலிடத்து ஒன்றேற்பவும் என்பவற்றுள் உயர்திணை ஆண்பாற்குரிய பெயர்கள் உணர்த்துகின்றது.

ப-ரை. அவற்றுள்-மேற்பெயரென்றவற்றுள், கிளை-சுற்றமும், எண்-எண்ணும், குழூஉ-கூட்டமும்; முதல் - முதலாகிய, பல பொருள்(ஒடு)-பல பொருள்களோடும், திணை-ஐந்திணையும், தேம்-தேயமும் ஊர் - ஊரும், வான்-வானும், அகம்-அகமும், புறம்-புறமும், முதல -முதலியனவாகிய, நிலன் (ஒடு) - இடங்களோடும், யாண்டு - வருடமும், இருது - பருவமும், மதி-மாதமும், நாள் - நாண்மீனும், ஆதி-முதலாகிய, காலம் (ஒடு) - காலங்களோடும், தோள்-புயமும், குழல் - மயிரும், மார்பு - மார்பும், கண் - கண்ணும், காது-காதும், முதல் முதலாகிய, உறுப்பு (ஒடு)-அவயவங்களோடும், அளவு-அளவும், அறிவு-அறிவும், ஒப்பு-ஒப்பும், வடிவு-வடிவும், நிறம் - நிறமும், கதி - நாற்கதியும், சாதி - குலமும், குடி-குடியும், சிறப்பு-சிறப்பும், ஆதி-முதலாகிய, பல் குணம் (ஒடு)-பல குணங்களோடும், ஓதல் -

ஓதுதலும், ஈதல், கொடுத்தலும், ஆதி - முதலாய பல் வினை (ஒடு) பல தொழில்களோடும், இவை-இவற்றை, அடை-அடைந்த, சுட்டு வினா பிற மற்று ஓடு-சுட்டும் வினாவும் பிறவும் மற்றும் ஆகிய நான்க னோடும், உற்ற-பொருந்திய, ன ஈறு-னகரமெய்யீற்றுப்பெயர்களும், நம்பி யாடூஉ விடலை கோ வேள்குரிசில் தோன்றல்-நம்பிமுதலாகச் சொல்லப்பட்ட இப்பெயர்களும், இன்னன - இவைபோல்வன பிற வும், ஆண் பெயர் ஆகும் - உயர்திணை யாண்பாற் பெயர்களாகும், என்ப-என்றுசொல்லுவர் புலவர். எ-று.

போ-ரை. மேல் பெயரோ வென்றவற்றுள் இங்ஙனம் பகுத்துக்கூறிய பொருளாதி ஆறனோடும், இவற்றையடையுஞ் சுட்டினோடும், வினாவினோ டும், பிறவென்பதனோடும், மற்றென்பதனோடும் பொருந்திய னகரவீற்றுப் பெயர்களும்; நம்பிமுதலாக எடுத்தோதிய பெயர்களும்; இவைபோல்வன பிறவும் உயர்திணையாண்பாற் பெயர்களாமென்று சொல்லுவர் புலவர்.

வி-பு. "த ந நு எ ம் முதன்மகரமிடையிட்டு - ன ள ர வ்ளீ ற்றன சுற்றப் பெயரே." என்பவாகலின் கிளைப்பெயர்அறிக. சுட்டு முதலிய நான் கிடைச்சொற்குந் தமக்கென வோர் பொருளின்றிப் பொருளாதி ஆறனுள் யாதானும் ஒன்றைக் கூறுவான் குறிப்பின்வழியடைந்து உணர்த்தலின், இவையடைசுட்டு வினாப்பிற மற்று என்றார். வினாச்சுட்டுடனும் வேறு மாமென்பது மது.

[வ-று.] தமன், நமன், நுமன், எமன்:—என்பன கிளையான் வருபெயர். ஒருவர் என்பது எண்ணான் வருபெயர்.

அவையத்தான், அத்திகோசத்தான்:—என்பன குழூஉவான்வருபெயர்.

பொருளன், பொன்னன், முடியன்:—என்றற்றொடக்கத்தன முதல் என்பவற்றான் வருபெயர். இவை பொருளான் வருபெயர்.

வெற்பன், பொருப்பன், சிலம்பன் (எ-ம்); மறவன், எயினன் (எ-ம்); இடையன், ஆயன் (எ-ம்): ஊரன், மகிழ்நன் (எ-ம்); சேர்ப் பன், துறைவன் (எ-ம்) :—வருவன குறிஞ்சி முதலிய ஐந்திணையானும் வரு பெயர்.

சோழியன், கொங்கன்:—என்பன தேயத்தான் வருபெயர்.

கருவூரான், மருவூரான்:—என்பன ஊரான் வருபெயர்.

வானத்தான், அகத்தான், புறத்தான்:—என்பன வான் முதலிய மூன் றானும் வருபெயர்.

மன்னகத்தான், பாதலத்தான்:—என்றற்றொடக்கத்தன முதல என்பவற்றான் வருபெயர். இவை இடத்தான் வருபெயர்.

மூவாட்டையான், வேனிலான், தையான், ஆதிரையான்:—என்பன ஆண்டு முதலிய நான்கானும் வருபெயர்.

நெருநலான், காலையான், மாலையான்: — என்றற்றொடக்கத்தன ஆதி என்பவற்றான் வருபெயர். இவை காலத்தான் வருபெயர்.

திணிதோளன், செங்குஞ்சியன், வரைமார்பன், செங்கண்ணன், குழைக்காதன்:—என்பன தோள் முதலிய ஐந்தானும் வருபெயர்.

குறுந்தாளன், நெடுங்கையன்:—என்றற்றொடக்கத்தன முதல் என்பனவற்றான் வருபெயர். இவை சினையான் வருபெயர்.

பெரியன், புலவன், பொன்னெறிப்பான், கூனன், கரியன், மாறுடவன், பார்ப்பான், சேரன், ஆசிரியன்:—என்பன அளவு முதலிய ஒன்பதானும் வருபெயர்.

நல்லன், தீயன்:—என்றற்றொடக்கத்தன ஆதி என்பவற்றான் வருபெயர். இவை குணத்தான் வருபெயர்.

ஓதுவான், ஈவான்:—என்பன அவ்விரண்டானும் வருபெயர்.

கணக்கன், பிணக்கன்:—என்றற்றொடக்கத்தன ஆதி என்பவற்றான் வருபெயர். இவை தொழிலான் வருபெயர்.

அவன், இவன், உவன், எவன், யாவன், ஏவன், பிறன், மற்றையான்:—என்பன சுட்டு முதலிய நான்கானும் வருபெயர்.

நம்பி முதலிய பெயர்கள் ஏழும் உரைக்கிடையிற் காண்க.

ஒன்னன் என்றமையான், வில்லி, வாளி, சென்னி, கிள்ளி:—என்றற்றொடக்கத்து உயர்திணை ஆண்பாற் பொருள்குறித்து வருவனவெல்லாங் கொள்க.

இவையன்றிச் சுட்டு வினாப்பிறமற்றொற்றனவீறு என்பவற்றிற்கு, அப்பொருளன், இப்பொருளன், உப்பொருளன், எப்பொருளன், பிறபொருளன், மற்றப்பொருளன்:— என உதாரணங் காட்டுவோருமுளர்.

சுட்டுமுதலிய நான்கனோடும் னகர ஈறு ஆதல் இன்மையான், அவற்றிற்கு அவைகாட்டாகாவென்க.

உஎஎ. கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்-ளெவ்வோ றிகரந் தேற்ற வீற்றவுந் - தோழி சேவிலி மகடூஉ நங்கை - தையலோ டின்ன பெண்பாற் பெயரே.

இது உயர்திணைப் பெண்பாற்கு உரியபெயர் உணர்த்துகின்றது.

ப-ரை. கிளை முதல் ஆக-சுற்றமுதலாக, கிளந்த-முன்சூத்திரத்திலே பகுத்துச்சொல்லப்பட்ட, பொருள்கள் உள்-அறுவகைப்பொருள்களுள், ள ஒற்று இகரம் கு-ளகரமெய்யும் இகரவுயிரும் பொருந்தற்கு, ஏற்ற-ஏற்ற, ஈற்ற உம் - ஈற்றுப்பெயர்களும், தோழி செவிலி மகடூஉ நங்கை தையல் ஒடு-தோழிமுதலாக எடுத்துச்சொல்லப்பட்ட பெயர்களும் ஆகிய இவற்றுடனே, இன்னன-இவைபோல்வன பிறவும், பெண்பால் பெயர் - உயர்திணைப் பெண்பாற்பெயர்களாம்.

பொ-ரை. மேலைச்சூத்திரத்து கிளைமுதல்ாகப் பகுத்துக்கூறிய அறுவகைப் பொருள்களுள் ளகரவொற்றும் இகரவுயிரும் உறுதற்கேற்ற அவ்விரண்டீற்றவாய் வரும் பெயர்களும், தோழிமுதலாக எடுத்தோதிய பெயர்களும், இவற்றுடனே இவைபோல்வன பிறவும் உயர்திணைப் பெண்பாற்பெயர்களாம். எ-று.

[வ-று.] தமளீ, நமளீ, நுமளீ, எமளீ, அவையத்தாளீ, அத்திகோசத்தாளீ, பொருளாளீ, பொன்னாளீ (எ-ம்); ஒருத்தி, அவையத்தி, அத்திகோசத்தி, பொன்னி (எ-ம்):—பொருளாதி ஆறனுள்ளும் ளகர ஒற்றிற்கும் இகரஉயிர்க்கும் ஏற்பன அறிந்து ஒட்டிக்கொள்க.

வி-டு. ஏற்றவீற்ற என்றமையால் கிளைப்பெயர் இகரஈறு ஏலாமையும், எண்ணுப்பெயர் ளகரவொற்றீறு ஏலாமையுங் காண்க. பிறவுமன்ன.

தோழிமுதலிய ஐந்துபெயரும் உரைக்கிடையிற்காண்க.

இன்னன என்றமையான் இருளை, மாது, அங்கனை:—என்றற் றொடக்கத்து உயர்திணைப் பெண்பால் குறித்து வருவனவெல்லாங் கொள்க.

உ௭௮. கிளந்த கிளைமுத லுற்றாவ் வீற்றவுங் - கள்ளெ வீற்றினேற்பவும் பிறவும்-பல்லோர் பெயரின் பகுதியாகும்.

இது பலர்பாற்கு உரியபெயர் உணர்த்துகின்றது.

ப-ரை. கிளந்த-முன்னேசொல்லப்பட்ட, கிளை முதல்-சுற்றமுதலாகிய அறுவகைப்பொருளையும், உற்ற-பொருந்திய, ர ஈற்ற உம்-ரகர மெய்யீற்றுப் பெயர்களும், கள் என் ஈற்றின் - கள்ளென்னும் விகுதியை ஈறாகவுடைய பெயர்களும், ஏற்ப உம்-இவ்விடத்திற்குப் பொருந்தி வருவனவும், பிறவும்-இவைபோல்வன பிறவும், பல்லோர் பெயரின் பகுதி ஆகும்-பலர்பாலின் பெயர்களாம். எ-று.

பே-ரை. மேற்கூறப்பட்ட கிளைமுதலிய அறுவகைப் பொருளையும் பொருந்திய ரகர ஒற்றீற்றுப் பெயர்களும், கள் என்னும் விகுதியை ஈருக வுடைய பெயர்களும் ஈண்டைக்குப் பொருந்தி வருவனவும், இவ்வபோல்வன பிறவும் பலர்பாலின்பெயர்களாம். எ-று.

வி-பு. கள் ஈறு பகுதிப்பொருள் விகுதியாயும், விகுதிமேல் விகுதியும் வருதலின், உம்மை இடையிட்டு வேறுதினர். கள்ளெனீற்றிவே வும் என்றார் அஃறிணைக்கண்ணும் களீற்றுப்பெயர் வருதலின். பல்லோ பகுதியின் பெயராம் எனக் கூட்டுக.

பகுதி என்பது பால். தோதுப்பு-தோகுதி என நின்றாற்போல பகுப்பு-பகுதி என நின்றது. பகுப்பு பல்லோர்பெயரின் பகுப்பாகும் எனினும் அமையும்.

[வ-று] தமர், நமர், நுமர், எமர், இருவர், மூவர் :— எனப்பொருளாதி ஆறனோடும் ஒட்டுக.

கோக்கள், மனுக்கள் :— என்றற்றொடக்கத்தன பகுதிப்பொருள் விகுதி ஈற்றுப்பெயர்கள்.

தமர்கள், நமர்கள், அரசர்கள், மறவர்கள்:—என்றற்றொடக்கத்தன விகுதிமேல்விகுதி ஈற்றுப்பெயர்கள்.

இவ்விகுதிமேல் விகுதி இடைச்சொல் ஆதலின், — ‡"ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா"-என்னுஞ் சூத்திரத்தாற் கூறும் வழுவமைதியாய் வந்தன. பிறவும் என்றமையான், மாந்தர், மக்கள் :—என்றற்றொடக்கத்து பலர்பால்குறித்து வருவனவெல்லாம் கொள்க.

உஎகூ. வினச்சுட்டுடனும் வேறு மாம்பொரு - ளாதி யுறுதுச் சுட்டணை யாய்த -மொன்றனெண் ணின்னன வொன்றன் பெயரோ.

இது அஃறிணை ஒருமைப்பாற்கு உரியபெயர் உணர்த்துகின்றது.

ப-ரை. வின சுட்டு உடன் உம் - வினவிலும் சுட்டிலும் மறை ந்து —ம்றுடனுகியும், வேறும் ஆம் - வினவவும் சுட்டவும் படாது வேருகியும் வருகிற,பொருள் ஆதி - பொருளாதி ஆறனையும், உறு - பொருந்திய, து- துவ்விகுதியீற்றுப்பெயரும், சுட்டு அணை ஆய்தம்- சுட்டோடு கூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதி ஈற்றுப் பெயரும்,ஒன்றன் எண்-ஒன்றென்கிற எண்ணுப்பெயரும்,இன்னன- இவைபோல்வன பிறவும், ஒன்றன் பெயர் - அஃறிணை ஒருமைப் பாற்பெயராகும். எ-று.

‡ நன்னூல், சூ. ௩௯௮.

போ-ரை. வினாவின்கண்ணும் சுட்டின்கண்ணும் சார்ந்த அவற்றினு டனாயும், வினாவும் சுட்டவும்படாத வேறாயும் வரும் பொருளாதி ஆறனை யும் பொருந்திய துவ்விகுதி ஈற்றுப்பெயரும், ஒன்றென்னும் எண்ணுக் பெயரும், இவைபோல்வன பிறவும் அஃறிணை ஒருமைப்பெயராம். எ-று.

[வ-று.] எது, யாது, ஏது (எ-ம்) ; அது, இது, உது (எ-ம்) ; குழை யது, நிலத்தது, மூலத்தது, கோட்டது, துறியது, ஆடலது (எ-ம்) ; அஃது, இஃது, உஃது (எ-ம்) ; ஒன்று (எ-ம்):—வரும்.

வி-பு. இன்னன என்றமையால், பிறிது, மற்றையது :—என்றற்றொடக் கத்து அஃறிணை ஒருமைப்பொருள் குறித்து வருவன வெல்லாம் கொள்க.

சுட்டினையாய்தம் இப்பகுதி விகுதிப் புணர்ச்சிக்கண் சந்திவகையான் வந்ததன்மையின், இச்சுட்டுப்பெயர்கள் வேறோதப்பட்டன என்பதூஉம்; இவைபோல் எடுத்தோதாமையின், ஆய்த மணையாச் சுட்டுப்பெயர்களே வினாச்சுட்டுடனும்என்றவற்றுள் அமைந்துகிடந்தனவென்பதூஉம்; வினாச் சுட்டுடனும் என்பதற்கு, எக்குழையது, அக்குழையது :—என உதாரணங் காட்டுவது பொருந்தாது என்பதூஉம் பெற்றாம்.

உஅ. முன்ன ரவ்வொடு வருணைவ யவ்வுஞ் - சுட்டிறு வவ்வுங் கள்ளி றுமொழியு - மொன்ற லெண்ணு முள்ள வில்ல - பல்ல சில்ல வுள வில பலசில - வின்னவும் பலவின் பெயரா கும்மே.

இது அஃறிணைப் பன்மைப்பாற்கு உரியபெயர் உணர்த்துகின்றது.

ப-ரை. முன்னர் - முன்னேசொல்லப்பட்ட, அ ஒடு-வினாச்சுட் டுடனும் வேறுமாம்பொருளாதி ஆறனோடும், வரு-ஏற்றபடிவருகிற, ஐவ (உம்) - வைவிகுதி யீற்றுப்பெயர்களும், அ உம்-அகரவீற்றுப் பெயர்களும், சுட்டு இறு வ உம்-வகர ஈற்றுச் சுட்டுப்பெயர்களும், கள் இறு மொழி உம்-கள்ளென்னும் பகுதிப்பொருள் விகுதி ஈற்றுப் பெயர்களும், ஒன்றல் எண்ணும் - இரண்டுமுதலாகிய எண்ணுக் பெயர்களும், உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில-உள்ள என்பது முதலாகிய குறிப்புவினையாலணைந்த எட்டுப்பெயர்களும், இன்னவும்-இவைபோல்வன பிறவும், பலவின் பெயர் ஆகும் - அஃ றிணைப் பன்மைப்பாற் பெயர்களாகும். எ-று.

போ-ரை. முன்னர்க்கூறிய வினாச்சுட்டுடனும் வேறுமாம்பொருளாதி ஆறனோடும் ஏற்ற பெற்றிவரும் வகர ஐகார ஈற்றுப்பெயர்களும், அகரவீற் றுப்பெயர்களும், வகர ஒற்றீற்றுச் சுட்டுப்பெயர்களும், கள் என்னும் பகுதிப்

பொருள் விகுதி இறுதியாகிய பெயர்களும், உள்ள என்பது முதலிய குறிப்பு வினையாலணைந்த எட்டுப்பெயர்களும், இவைபோல்வன பிறவும் அஃறிணைப் பன்மைப்பெயர்களாம். எ-று.

வி-பு. மேலைச் சூத்திரங்களுள் கூறியவாறே உறுதிகூருது வருவை என்றதனால் ஏற்றபெற்றி என்பதூஉம்; உள்ள, இல்ல முதலிய பண் பொடுவரும் அகர ஈற்றுப்பெயர்கள் முன்ன ரவ்வோடு வருவை யவ்வும் என்பவற்றுள் அடங்குதலின், பின்னர் கூறிய உள்ள, இல்ல முதலிய எட்டும் குறிப்புவினையாலணையும் பெயர் என்பதூஉம் பெற்றும்.

[வ-று] எவை, யாவை (எ-ம்); அவை, இவை, உவை (எ-ம்); நெடியவை, கரியவை, நல்லவை, தீயவை, உள்ளவை (எ-ம்); பொருள, பொருளன, அகத்த, அகத்தன, மூலத்த, மூலத்தன, கோட்ட, கோட்டன, கரிய, கரியன, உள்ள, உள்ளன, இல்ல, இல்லன, ஓதுவ, ஓதுவன, ஈவ, ஈவன (எ-ம்); அவ், இவ், உவ் (எ-ம்); யானைகள், குதிரைகள் (எ-ம்); இரண்டு, மூன்று, பத்து, நூறு, ஆயிரம் (எ-ம்):—வரும்.

உள்ள முதலிய எட்டும் உரைக்கிடையிற் காண்க.

இன்னவும் என்றமையான் யா, பிற, மற்றைய:—என்றற் றொடக்கத்து அஃறிணைப் பன்மைப்பொருள் குறித்து வருவன வெல்லாம் கொள்க.

உஅக. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

இது மேல் பொதுவுமான பெயரோ என்றார் அவற்றுள் அஃறிணை இருபாற்கும் உரிய பொதுப்பெயர் உணர்த்துகின்றது.

ப-ரை. அஃறிணை-அஃறிணைப்பெயர்களும், பால்பகா - பால் பகுக்கப்படாத, பெயர்கள் - பெயர்களனைத்தும், பால் - அத்திணை இருபாலுக்கும், பொதுமைய-பொதுப்பெயர்களாம். எ-று.

பொ-ரை. அஃறிணைப்பெயர்களுள் இங்ஙனம் பால்பகுத்தலை ஒழிந்து நின்ற பெயர்கள் அனைத்தும் அத்திணை இருபாற்கும் உரிய பொதுப் பெயர்களாம். எ-று.

[வ-று.] யானைவந்தது, யானைவந்தன; குதிரைவந்தது, குதிரை வந்தன; மரம்வளர்ந்தது, மரம்வளர்ந்தன; கல்சிவந்தது, கல்சிவந் தன:—எனவரும்.

வி-பு. இச்சூத்திரம் திணைப்பொதுப் பெயரின்பின் கூருது ஈண்டுக் கூறியது என்னையெனின், விளக்குதற்பொருட்டு ஒன்றினமுடித்த றன்னின முடித்தல் என்னும் உத்தியால் கூறப்பட்டதென்க.

உஅஉ. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்குஞ்-சினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டுந்-தன்மை நான்கு முன்னிலை யைந்து, மெல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

இது இருதிணைக்குமுரிய பொதுப்பெயர்களைத் தொகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. முதல் பெயர் நான்கு உம் - முதற்பெயராகிய நான்கு பெயரும், சினை பெயர் நான்கு உம்-சினைப்பெயராகிய நான்குபெயரும், சினை முதல் பெயர் ஒரு நான்கு உம்-சினைமுதற் பெயராகிய நான்குபெயரும், முறை (ப்பெயர்) இரண்டு உம்-முறைப்பெயராகிய இரண்டுபெயரும், தன்மை (பெயர்) நான்கு உம்-தன்மைப்பெயராகிய நான்குபெயரும், முன்னிலை (பெயர்) ஐந்து உம் - முன்னிலைப் பெயராகிய ஐந்துபெயரும், எல்லாம் தாம் தான் - எல்லாம் தாம் தான் என்கிற மூன்று பெயரும், இன்னன - இவைபோல்வன பிறவும், பொதுப்பெயர்-இருதிணைக்கும் பொதுப்பெயர்களாம், எ-று.

போ-ரை. முதற்பெயர் முதலான ஒன்பது கூற்றுப் பெயர்களும், இவைபோல்வன பிறவும் இருதிணைக்கும் உரிய பொதுப்பெயர்களாம்.

வி-பு. பெயர் என்பதனை முறை முதலியவற்றோடுங் கூட்டுக.

எல்லாம் என்பதுமுதல் இன்னன என்பது ஈறாகநின்ற செவ்வெண்ணின் இறுதிக்கண் நான்கும் என்னுந் தொகையோடு உம்மை தொக்கன.

எல்லாம், தாம், தான்:—என விதந்த மூன்றுபெயரும் ஒழிய இன்னன என்றமையால், சூரியனுதித்தான், சூரியனுதித்தது:—என ஒருபொருளையே உயர்திணைப்பொருளாக்கியும், அஃறிணைப்பொருளாக்கியும் கூறப்படும் பொதுப்பெயர் முதலியனவும்;

ஊமைவந்தான், ஊமைவந்தாள்:—என உயர்திணை இருபாலையும் உணர்க்கும் பொதுப்பெயர் முதலியனவும்; தன்மைமுன்னிலை யிருபாலையும் பெயரும்; பிறவும் கொள்க.

அறுவகைப் பெயர்கட்கும் உதாரணம் பின்வரும் தீத்தம் வகைச் சூத்திரங்களுள் கொள்க.

உயர்திணைக்குச் சிறந்தபெயர் அஃறிணைக்கண் விரவியும், அஃறிணைக்குச் சிறந்தபெயர் உயர்திணைக்கண் விரவியும் வருதலின், இவற்றை விரவுப்பெயர் என்றும் கூறுப. அங்ஙனம் வருதல் காட்டும் உதாரணங்களுள் காண்க.

உ அ௲ ஆண்மை பெண்மை யொருமை பன்மையி - னமைந் நான் மைக ளாம்பெண் முறைப்பெயர்.

இது மேல் தொகுத்துணர்த்திய்வற்றுள் முதற்பெயர் முதல் முறை பெயர் ஈறாகக் கிடந்தவற்றை வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. ஆண்மை பெண்மை ஒருமை பன்மை இன்-ஆண்முத லாகிய இந்நான்குபாலுங் காரணமாக, அ - அம்முதற்பெயரும் சினைப்பெயரும் சினைமுதற்பெயரும், நான்மைகள் ஆம்-நந்நான்காகும், ஆண் பெண் - ஆண்மை பெண்மை என்கிற இருபாலும் காரண மாக, முறைப்பெயர்-முறைப்பெயர், (இரண்டாம்) - இரண்டாகும்.

பொ-ரை. ஆண்மை முதலிய இந்நான்குபாலுங் காரணமாக முற் கூறியமுதற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் என்னும் மூன்றும், ஒவ் வொன்றும் நந்நான்காம்; ஆண்மை பெண்மை என்னும் இருபாலும் காரண மாக முறைப்பெயர் இரண்டாம். எ-று.

வி-பு. மேலைச்சூத்திரத்து இரண்டுஎன்பதனையும், இச்சூத்திரத்து ஆம் என்பதனையும் கூட்டி, முறைப்பெயர் இரண்டாம் என உரைத்துக்கொள்க.

உயர்திணைக்கே உரிய பலர்பாலையும், அஃறிணைக்கே உரிய ஒன்று பல என்னும் இருபாலையும் ஒழித்து, இருதிணைக்கும் பொதுவாகிய ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என்னும் நான்குபாலினையும், இவற்றுள் முறைகூறுதற்குரிய ஆண்மை, பெண்மை என்னும் இருபாலினையும் காரண மாக இச்சூத்திரத்துட் கூறினர். இவற்றின் காரியங்களை இனைத்தென்று அறி பொருளாக மேலைச்சூத்திரத்துள் கூறியவாறு உய்த்துணர்ந்துகொள்க.

எனவே, — ஆண்மை முதற்பெயர், பெண்மை முதற்பெயர், ஒருமை முதற்பெயர், பன்மை முதற்பெயர் (எ-ம்); ஆண்மைச்சினைப்பெயர், பெண் மைச்சினைப்பெயர், ஒருமைச்சினைப்பெயர், பன்மைச்சினைப்பெயர் (எ-ம்); ஆண்மைச்சினைமுதற்பெயர், பெண்மைச்சினைமுதற்பெயர், (எ-ம்); ஒரு மைச் சினைமுதற்பெயர், பன்மைச்சினைமுதற்பெயர் (எ-ம்); ஆண்மை முறைப்பெயர், பெண்மை முறைப்பெயர் (எ-ம்) :—பெயர்பெறும் என்ப தாயிற்று.

[வ-று.] சாத்தன், சாத்தி, கோதை, கோதைகள் :—இவை முதற் பெயர் நான்கு.

முடவன், முடத்தி, செவியிலி, செவியிலிகள் : — இவை சினைப் பெயர் நான்கு.

முடக்கொற்றன், முடக்கொற்றி, கொடும்புறமருதி, கொடும்புற மருதிகள்:—இவை சினைமுதற்பெயர் நான்கு.

தந்தை, தாய்:—இவை முறைப்பெயர் இரண்டு.

கள் விகுதி அஃறிணைப்பன்மைக்குச் சிறந்தாய் உயர்திணைப்பன்மைக் கண்ணும் விரவி வருதலின், ஒருமைப்பொதுப்பெயரோடு கள் விகுதி புணர்ந்த துணையானே அவை பன்மைப்பொதுப்பெயர் ஆயின.

உ௮௪. அவற்றுள், ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.

இது திணைப்பொதுவாய் நின்ற பெயர்கள் பாற்பொதுவாய் நிற்கு மாறு உணர்த்துகின்றது.

ப-ரை. அவற்றுள் - முதற்பெயர் முதலாகச் சொல்லப்படும் இருபத்தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள், ஒன்று ஏ - ஒவ் வொன்றே, இருதிணை - இருதிணையிலும், தன் பால்-தன்றன்பாலே, ஏற்கும்-ஏற்றுவரும். எ-று.

பொ-ரை. முதற்பெயர் முதலவாக் கூறப்படும் இருபத்தாறும், பிறவு மாகிய பொதுப்பெயர்களுள், ஒவ்வொன்று இருதிணைக்கண்ணும் தன் தன் பால்களை ஏற்கும். எ-று.

வி-பு: எனவே,— ஆண்மைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண்பாலினை யும், அஃறிணை ஆண்பாலினையும்; பெண்மைப் பொதுப்பெயர் உயர் திணைப்பெண்பாலினையும், அஃறிணைப் பெண்பாலினையும்; ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை ஆணொருமை பெண்ணொருமையினையும், அஃ றிணை ஒருமையினையும்; பன்மைப்பொதுப்பெயர் உயர்திணைப் பன்மையினை யும், அஃறிணைப் பன்மையினையும்:—ஏற்கும் என்பதாயிற்று.

[வ-று] சாத்தனிவன், சாத்தனிவ்வெருது (எ-ம்); சாத்தியிவள், சாத்தி யிப்பசு (எ-ம்); ‡ கோதையிவன், கோதையிவள், கோதையிது (எ-ம்); கோதைகளிவர், கோதைகளிவை (எ-ம்); தந்தையிவன், தந் தையிவ்வெருது (எ-ம்); தாயிவள், தாயிப்பசு (எ-ம்); யானம்பி, யா னங்கை, யான்பூதம் (எ-ம்); யாமக்கள், யாம்பூதங்கள் (எ-ம்); நீநம்பி, நீநங்கை, நீபூதம் (எ-ம்); நீயிர்மக்கள், நீயிர்பூதங்களீர் (எ-ம்); அவ ரெல்லாம், அவையெல்லாம், (எ-ம்); அவர்தாம், அவைதாம் (எ-ம்); அவன்றன், அவடான், அதுதான் (எ-ம்):—வரும்.

---

‡ கோதை என்பது சாத்தன், சாத்தி, மருதி, கேவிலி என்றாற்போல ஈற்றால் பால்விளக்குதலின்றி பொதுவாய் நிற்றலின், பன்மை சுட்டிப் பெயராமென்க என்பர்:—சிவஞானமுனிவர், இலக்கண விளக்கச்சூறாவளி, சூ. உ௫.

இவற்றுள் காட்டாதொழிந்தனவும் பிறவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

ஆண்மைப்பொதுப்பெயர் பெண்மைப்பொதுப்பெயர்கட்கு, ஆண்மக்கள், ஆண்விலங்கு; பெண்மக்கள், பெண்விலங்கு; காளைவந்தான், காளைவந்தது:—என இக்காலத்துப் பயின்றுவருவன காட்டலும் ஒன்; பிறவுமன்ன.

செஞ்ஞாயிறு என்றாற்போல, தன்னோடு இயைபின்மை நீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப்பட்டன வன்றி, செந்தாமரை என்றாற்போல, பிறிதோடு இயைபு நீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப்பட்டனவாகி, ஆண்மைப் பொதுப்பெயர்; பெண்மைப் பொதுப்பெயர் என்றும்; ஒருமைப்பொதுப்பெயர், பன்மைப் பொதுப்பெயர், என்றும்; இனச்சுட்டுளவாய் வருதலின் தன்பாலேற்றும் எனக் கூறினானென்க.

இனி ஆசிரியர் தொல்காப்பியர் பன்மைசுட்டிய பெயரொன்றது பலபாலையுஞ் சுட்டிநிற்றலின், பிறிதின் இயைபுநீக்கிய விசேடணம் அடுத்து நின்றதென்பார்.

* "பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு-மொன்றே பலவே யொருவ ரொன்னு-மென்றிப் பாற்கு மோரன் னவ்வே"—எனக்கூறி, தன்பால் ஏற்றலை உம்மையால் தழீஇனர்.

அவ்வாசிரியர் கருத்தறியாது பன்மைப் பொதுப்பெயருள் பன்மையென்பது பிறிதோடு இயைபுநீக்கிய விசேடணம் அன்றெனத் தோன்றியவாறே விசேடண இலக்கணஞ்சிதைத்து,இடர்ப்பட்டு உரைகூறுவாருமுளர். அதனைத் தோன்றக்கூறின் பெருகும்.

அவ்வாசிரியர் கூறியவாறே பன்மைப் பொதுப்பெயர்க்கு உதாரணம்:—யானைவந்தது, யானைவந்தன; யானைவந்தான், யானைவந்தாள்:—என வருமாறும், இங்ஙனம் யானை என்னும் பால்பகா அஃறிணைப்பெயர்க்கு களீ விகுதியின்மையின், அஃறிணை ஒருமைக்கே சிறந்ததாய் அதன்பன்மைக் கண்ணும் விரவி, ஆகுபெயராய் உயர்திணை ஆணொருமை பெண்ணொருமையினும் விரவிவருமாறுங் காண்க.

பலபாலையுஞ் சுட்டி நிற்றலின், அவற்றையும் பன்மைசுட்டிய பெயரெனல் வேண்டுமாலெனின் அது பொருந்தாது. நான்குபாலும்சுட்டி நிற்குந் தன்மைநோக்க ஏனைய மூன்றுபாலுஞ் சுட்டிநிற்கும் பெயர்கள், சின்மை சுட்டிய பெயரெனப்படுவன வல்லது, பன்மைசுட்டிய பெயரெனப்படாவாகலான் என்க.

---

* தொல்காப்பியம், சொல். பெயரியல், சூ. உஅ

அற்றேல், அவற்றைச் சின்மைசுட்டிய பெயரெனவே அமையும் பிற வெனின், அவற்றுள் ஆண்மைசுட்டுதல் முதலிய பகுப்புண்மையின், அவற்றைப் பகுத்துக்கூற வேண்டுதலான் அமையாவென்க.

§ ["இக்கருத்தேபற்றியன்றே, பஃறொடைவெண்பா என்றாற்போல "ஏனையவற்றையும் பஃறொடை வெண்பா எனக்கூறாததூஉம், பகுப் "புண்மையின் சிஃறொடைவெண்பா என்றொழியாததூஉம், பஃறாழிசைக் "கொச்சகம் என்றதனைநோக்கி, அதனிற் குறைந்ததனைப்பகுப்பின்மையான் "சிஃறாழிசைக்கொச்சகமென்றே போந்ததூஉம் என்க."

"இனி இவ்வாறன்றி ஆணொருமை பெண்ணொருமை, அஃறிணை யொ "ருமையென்ற மூன்றும் ஒருமைப்பாலென ஒன்றாயடங்குதலின், பலபால் "களையுஞ் சுட்டுகின்றன வல்ல ஆதலான், அம்மூன்றொருமையுஞ் சுட்டிய "பெயர்களை ஒருமைசுட்டிய பெயரெனவும், இஃது ஒருமையும் பன்மையும் "என்னும் இருபால்சுட்டி நிற்றலான், பன்மைசுட்டிய பெயரெனவும் கொள் "ளினும் இழுக்காது."]

உ௮௫. தன்மை யானான் யாநா முன்னிலை - யெல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ - யல்லன படர்க்கை யெல்லா மெனல் பொது.

இது தன்மை நான்கும் முன்னிலை யைந்தும் என்றார் அவை இவை என்பதூஉம், இடந்தோன்றேற்பவும் பொதுவும் என்றார் அவை இவை என்பதூஉம் உணர்த்துகின்றது.

ப-ரை. தன்மை - தன்மைப்பெயர் நான்காவன, யான் நான் யாம் நாம் - யான் நான் யாம் நாம் என்பனவாம், முன்னிலை-முன்னிலைப்பெயரைந்தாவன, எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ - எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என்பனவாம், அல்லன-இவ்வொன்பதுமல்லாத பெயர்களெல்லாம், படர்க்கை-படர்க்கையிடத்திற் குரியனவாம், எல்லாம் எனல் - அவற்றுள் எல்லாமென்னும் பெயரொன்றும், பொது - மூவிடத்திற்கும் உரித்தாம். எ-று.

பொ-ரை. தன்மைப்பெயர் நான்காவன யான் நான் யாம் நாம் என்பனவாம்; முன்னிலைப்பெயரைந்தாவன எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என்பன வாம்; திணைபாலுள் ஒன்றற்கேற்பவும் பொதுவுமாகிய பெயர்களுள் இவ் விரண்டிடத்து ஒன்பதுபெயருமல்லாத பெயர்களனைத்தும் படர்க்கையிடத்

§ இலக்கணவிளக்கச் சூறாவளி, பெயரியல், சூ. உ௮-ல், சிவஞான முனிவர் இங்ஙனமே கூறியிருப்பதுங்காண்க.

திற்குரியவாம்; அவற்றுள் எல்லாம் என்னும் பெயர் ஒன்று மூவிடத்திற்கும் உரித்தாம். எ-று.

வி-பு. எல்லாம் என்னும் பெயர் மூவிடத்தும் வருமாறு,—யாமெல்லாம், நீயிரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம் என வரும்.

இத்தன்மை முன்னிலைப்பெயர்களை உணர்த்தலும் கேட்டலும் இல்லா அஃறிணைக்கண் இவ்வொன்பது பெயரும் விரவிப் பொதுப்பெயராமாறு என்னையெனின், ஆசிரியர் தொல்காப்பியர் *"அவ்வழி, அவனிவனுவனென வரூஉம் பெயரும்" என்னுஞ் சூத்திரத்து யார், யாம், நாம் எனவரூஉம் பெயரும் உயர்திணைப் பெயரெனக் கூறினாரேனும், மரபியலுள் ** "மக்கடாமே யாறறி வுயிரே - பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே."— "ஒருசார் விலங்கு முளவென மொழிப." - என்னுஞ்சூத்திரங்களின் விலங்கினுள் ஒருசாரான கிளியும், துரங்கமும், யானையும் முதலாயினவும், மனவுணர்வுடையனவாயின் அவையும் ஈண்டு ஆறு அறிவுயிராய் அடங்குமெனக் கூறலின், அம்மரபுபற்றிப் பொதுப்பெயரெனப்பட்டன வென்க. மேல்வரும் தன்மைமுன்னிலை வினைகளும், அவ்வினையாலணையும் பெயர்களும் அன்ன.

அங்ஙனமாகவே ‡ "கேட்குந போலவுங் கிளக்குந போலவு-மியங்குந போலவு மியற்றுநபோலவு -மஃறிணை மருங்கினு மறையப் படுமே." —என்பது புனைந்துரைவகையால் வழுவமைதியாகக் கூறப்பட்டனவேயாம் ஆதலின், அவைபற்றிப் பொதுப்பெய ரெனப்பட்டன வெனக்கோடல் பொருந்தாமையும் அறிக.

உஅ௬. வினையின் பெயரே படர்க்கை வினையா-லணையும்பெயரே யாண்டு மாதும்.

இது சில வினையின் பெயர்க்கு அல்லன படர்க்கை என்பதனான் எய்திய இடம் யாண்டுமாதும் என்பதனால் இகந்துபடாமல் படர்க்கை என்பதனால் காத்தலும், வினையாலணையும் பெயர்க்கு அதனைவிலக்கி இடம் வகுத்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. வினையின் பெயர் ஏ-தொழிற்பெயர்களே, படர்க்கை-படர்க்கையிடத்திற் குரியவாகும், வினையால் அணையும் பெயர்-வினைமுற்றாலணையும் பெயர்களானவை, யாண்டும் ஆகும் - தனித்தனி மூவிடத்திற்கும் உரியவாகும். எ-று.

---

* தொல்காப்பியம், சொல். பெயரியல், சூ. கசஉ.

** ஷ பொருள். மரபியல், சூ. ௩௩.

‡ நன்னூல், சூ. ௪0௯.

போ-ளா. யானுணல், நீயுணல், அவனுணல்,என மூவிடத்து வினையாயினும், அவ்வுணல், தினல் என்றற்றொடக்கத்து வினையின்பெயர் படர்க்கைக்கே உரியவாம்; அவ்வவ்வினையாலணையும்பெயர் அவ்வினையின் பெயர்போல் படர்க்கைக்கேயுரியவாகாது, உண்டேனை, உண்டாயை, உண்டானை எனத் தனித்தனி மூவிடத்திற்கும் உரியவாம். எ-று.

வி-பு. யானுண்டேன், நீயுண்டாய், அவனுண்டான்:— என இடத்தால் ஒன்றுபடநின்ற நிலைமொழி வருமொழிபோல், அம்மூவிட முற்றின்கண் தொழில் பணிலையாகி, யானுணல், நீயுணல், அவ்னுணல்:— என ஒன்றுபட நிற்பனவற்றிற் கன்றி, எனதுணல், நினதுணல், அவனதுணல் என்றும்; உணல் என்றும்; வேறுபட்டு நிற்கும் வினையின் பெயர்கட்கு எய்திய இடம் இகந்துபடுதல் இன்றென உணர்க.

இவ்வாறன்றி வினையின்பெயரோபடர்க்கை என்பதற்கு வினையின் பெயரனைத்தும் படர்க்கையெனப் பொருள்கொள்ளின் கூறியது கூறலாம், அதுபொருந்தாதென்க.

உ௮எ. தான்யா னானீ யொருமை பன்மைதாம் - யாநா மெலா மெலீர் நீயிர்நீர் நீவிர்.

இது இப்பன்னிரண்டு பொதுப்பெயர்களும் இருதிணைக்கும் பொதுவாகிய ஆண்மை பெண்மை ஒருமை பன்மை என்னும் நான்கு பொதுப்பால்களுள் இப்பாலுள் அமைந்து கிடந்தனவென்பது உணர்த்துகின்றது.

ப-ளா. தான் யான் நான் நீ - தான் யான் நான் நீ என்கிற நான்கும், ஒருமை - இருதிணை முக்கூற்றொருமைப் பெயர்களாம், தாம் யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர் - தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர் என்கிற எட்டும், பன்மை - இருதிணை இருகூற்றுப் பன்மைப்பெயர்களாம். எ-று.

போ-ளா. தான் யான் நான் நீ என்னும் நான்கும் இருதிணை முக்கூற்று ஒருமைப்பெயராம்; தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீவிர் என்னும் எட்டும் இருதிணை இருகூற்றுப் பன்மைப்பெயராம். எ-று.

வி-பு. இதனை—"அவற்றுள், ஒன்றே இருதிணைத் தன்பா லேற்கும்." என்னுஞ் சூத்திரத்தில் முற்கூறாது ஈண்டுக்கூறிய தென்னையெனின், தன்மைமுன்னிலைப்பெயர்களின் வகையுணர்ந்தன்றி ஒருமைபன்மைதோன்றுமையின் ஈண்டுக் கூறி அவற்றின் பின்னின்றவாகலின், எல்லாம்,தான், தாம் என்பவற்றிற்கும் ஈண்டு ஒருமை பன்மை உடன்கூறினரென்க.

உ௬அ. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.

இது எண்ணான்வரும் உயர்திணை ஆண்பெண்பாற்பெயர்க்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. ஒருவன் ஒருத்தி - ஒன்று என்னும் எண்ணால் ஒருவன் ஒருத்தி என வருவனவன்றி, மேல் - இவற்றின்மேல், எண் - இரண்டு முதலாகிய எண்களால், பெயர் - இவ்வாண்பாற் பெயரும் பெண்பாற்பெயரும், இல-வருவன இல்லாம். எ-று.

பொ-ரை. எண்ணான்வரும் உயர்திணை ஆண்பாற் பெயரும் பெண்பாற்பெயரும் வருங்காலத்து ஒன்று என்னும் எண்ணானே ஒருவன் ஒருத்தியென வருவனவன்றி, இவற்றின்மேல் இரண்டுமுதலிய எண்களான் இப்பெயர்கள்வருவன இலவாம். எ-று.

வி-பு. ஒருவன், ஒருத்தி—என்றற்றொடக்கத்தனவாகிவரின் பன்மைப் பகுதியோ டொருமைவிகுதி புணர்ந்து பால்வழுவாம் ஆதலின் எண்ணில என்றார்.

உ௬கூ. ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப் - பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

இது எண்ணான்வரும் ஒருவர் என்னும்பெயர்க்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. ஒருவர் என்பது - ஒருவரென வழங்குஞ்சொல், உயர் இருபாற்று ஆய் - உயர்திணை ஆண்பெண் இவ்விருபாற்கும் பொதுவாய், பன்மை வினை - அத்திணைப்பன்மை வாய்பாட்டு வினையை, கொளும் - கொண்டுமுடிகின்ற, பாங்கிற்று - பாங்கினை யுடைத்தாகும், என்ப-என்று சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. ஒருவர் என வழங்குஞ்சொல் உயர்திணை ஆண்பால் பெண்பால் இரண்டற்கும் பொதுவாய், அத்திணைப்பன்மை வாய்பாட்டு வினையைக் கொண்டுமுடியும் பாங்கினை யுடைத்தென்று சொல்லுவர்புலவர். எ-று.

[வ-று.] ஆடவருளொருவர் அறத்தின்வழி நிற்பார் ஒருவர் நில்லார் (எ-ம்), பெண்டிருளொருவர் கொழுநன் வழிநிற்பார் ஒருவர் நில்லார்(எ-ம்), ‡"மாஅர் (ஒருவர்) உலகத்தோர் சொல்லில்லார்" (எ-ம்) வரும்.

வி-பு. இவ்வொருவர் என்னுஞ் சொல் பொதுவியலுள் கூறும் உவப்பு உயர்வு முதலியவற்றான் வரும் ஒருவர் என்னுஞ் சொல்லன்றி தன்னியல்பாய் வந்ததாகலின் ஈண்டுக் கூறப்பட்டதென் றுணர்க.

---

‡ நாலடியார், செ. ௧௧௯. இச்செய்யுளில் ஒருவர் என்பது உரையிற் கண்டது.

இச்சொல்லின்கண் பகுதிக்கேற்ப இருபாற்றய் என்றும்; விகுதிக்கேற்ப பன்மைவினைகோளும் என்றும்; உயர்திணைமுப்பாலுள் பன்மையைப்பின் விதத்தலின் ஆண் பெண் என விதவாது உயரிருபாற்றாய் என்றும்; உவமொன முன் விதத்தலின் உயர்திணைப்பன்மையென விதவாது பன்மை என்றும்; ஒருவர்வந்தார், ஒருவரவர்:—என வினையும் பெயரும் கொளவருவது உவப்பு உயர்வு முதலியவற்றான் வருவதாம்.

இங்ஙனம் தன்னியல்பாய்வரும் ஒருவர் என்பது வினையும் வினைக்குறிப்பும் கொள்ளுமென்பார் பெயரையொழித்து வினைகோளும் என்றும்; இச்சொல் ஒருமைப்பகுதியோடு பன்மைவிகுதிமயங்கி,பால்வழுவாய் நின்றதேனும் தன் இயல்பாய் மயங்கின்றமையின் வழாநிலை போலும் என்பதூஉம்; பன்மைவினை என்றது சொல்மாத்திரையின் பன்மைவினையன்றி, பொருள்மாத்திரையின் ஒருமைவினையாம்ஆதலின், இப்பயனிலையை ஒருவர் என்னுஞ் சொற்கொள்ளுதல் வழுவன்று என்பதூஉம் தோன்ற பாங்கிற்று என்றும்; இங்ஙனமாதல் சான்றோர்க்கு ஒப்பமுடிந்ததென்பார் என்பர் என்றும் கூறினர்.

உ௬௦. பொருண்முத லாறோ டளவைசொற் றானி — கருவி காரியங் கருத்த னாதியு — ளொன்றன் பெயரா னதற்கியை பிறிதைத் — தொன் முறை யுரைப்பன வாகுபெயரே.

இது மேற்கூறிய ஒன்றற்கேற்பவும் பொதுவுமாகிய பெயர்க்கண்வரும் காரணப்பெயர்களுள் ஆகுபெயர் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. பொருள் முதல் ஆறோடு-பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறுடனே, அளவை-இவற்றின் பகுதியவாகிய நால்வகை யளவையும், சொல்-சொல்லும், தானி-தானியும், கருவி-காரணமும், காரியம் - காரியமும், கருத்தன்-வினைமுதலும், ஆதி உள்-ஆதியாகவரும்பொருள்களுள்,ஒன்றன்-ஒருபொருளினது, பெயரான் - இயற்பெயரால், அதற்கு - அப்பொருளுக்கு, இயை - இயைந்த, பிறிதை - பிறிதொருபொருளை, தொல் முறை-தொன்று தொட்டு வருமுறையே, உரைப்பன - சொல்லப்பட்டுவருவன, ஆகு பெயர்-ஆகுபெயர்களாம். எ-று.

பத-ரை. பொருளே இடமே காலமே சினையே குணமே தொழிலே என்னும் ஆறுடனே, இவற்றின் பகுதியவாகிய நால்வகை அளவையே சொல்லே தானியே கருவியே காரியமே கருத்தாவே என்னும் ஆறும் ஆதியாகவரும் பொருள்களுள், ஒருபொருளின் இயற்பெயரானே அப்பொரு

னிலுக்கு இயைந்த பிறிதொருபொருளை தொன்றுதொட்டு வருமுறையே கூறிவருவன ஆகுபெயர்களாம். எ-று.

வி-பு. பொருளாதி ஆறன்றி வேறுபொருள் இன்றேனும், அவற்றுள் பயின்று வருவனவற்றைப் பிரித்து அளவை முதலாக விதந்தமையின், பொருள் முதலாறு என்பன இவை ஒழிந்தனவற்றை என்பதூஉம்; அதற்கியைபிறிதை என்றமையான் இயையாதனவற்றிற்கு வருவன பல பொருள் ஒருசொல் அன்றி ஆகுபெயர் ஆகாவென்பதூஉம்; தொன் முறையுரைப்பன என்றமையான் ஆகுபெயர்மேல் ஆகுபெயராயும், அடை யடுத்தும், இருபெயரொட்டாயும், வழக்கின்கண்ணும், செய்யுட்கண்ணும் பயின்று பலபொருள் ஒருசொல்போல வருவனவன்றி, இடையே தோன் றியவாறு ஆக்கப்படுவன அல்ல என்பதூஉம் பெற்றாம்.

[வ-று.] "தாமரை புரையுங் காமர் சேவடி."—"ஆம்ப லூறுந் தேம் பொதி கிளவி." — என்முதற்பெயரின்பொருள் சினைப்பொருளுக்கு ஆயின.

† "அகனமர்ந்து செய்யா ளுறையும்."— புறங்கடை யடையா மறந் திகழ் வேலோன்.":—என இடப்பெயர் சித்தத்திற்கும் முதிற்கும் ஆயின.

காரறுத்தது, கார்த்திகை பூத்தது :— எனக் காலப்பெயர் பைங்கூ ழிற்கும் தோன்றிக்கும் ஆயின. — இவற்றுள் கார் என்பது நிறத்தின்பெயர் மேகத்திற்காய், மேகத்தின்பெயர் பருவத்திற்காய், பருவத்தின்பெயர் பைங் கூழுக்கு ஆனமையின் மும்மடியாதபெயர்.

‡ அறுபதமூர்லும், மருக்கொழுந்து நட்டான், வெற்றிலைநட்டான், புளிமுளைத்தது :—என அடையடுத்தும் தனித்தும்வந்த சினைப்பெயர் முத லுக்காயின. — இவற்றுள் புளி என்பது சுவைப்பெயர் பழத்திற்காய், பழத் தின்பெயர் மரத்திற்கு ஆனமையின் இருமடியாதுபெயர்.

"செறிகீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள்"—‡‡ "கார்நிகர் வண்கை" புளித் தின்றான் :—என நிறமுஞ் சுவையுமாகிய குணப்பெயர்கள் குவளைக்கும், மேக த்திற்கும், பழத்திற்கும் ஆயின.

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை."—"பாட்டின் பொருளைப் பரவிப் பல்கால்":-எனத்தொழிற்பெயர் அக்கரத்திற்கும், சொற்றொடைக்கும் ஆயின.

வற்றலோடுண்டான்:—எனவற்றல் என்னும் தொழிற்பெயர் அதனை யுடைய உண்விற்கு ஆயிற்று.

---

† திருக்குறள், செ. அச.

‡ தேவாரம், திருவெஞ்கூற்றிருச்சை.

‡‡ நன்னூல், சிறப்புப்பாயிரம்.

ஒன்று, இரண்டு, அரை, கால் :—என எண்ணலளவைப்பெயர் அஃறிணை ஒருமைக்கும், பன்மைக்கும், யாக்கையின்கண் உறுப்பிற்கும் ஆயின.—

துலாக்கோல், துலாவாரந்தூங்கினான், துலாநிறைத்தான் :—என எடுத்தலளவைப்பெயர் நிறைகோலிற்கும், தராசிற்கும் நிறைற்நிறைவை மரத்திற்கும் ஆயிற்று.—இவற்றுள் துலாக்கோல் என்பது இருபெயரொட்டு முன்மொழியாகுபெயர்.

நாழி, உழக்கு, ஆழாக்கு :—என முகத்தலளவைப்பெயர் அளவு கருவிகட்காயின.

கீழைத்தடி, மேலைத்தடி:—எனத் தடிஎன்னும் நீட்டலளவைப்பெயர் விளைநிலத்திற்கு ஆயிற்று.

அவன்மொழியுணர்ந்தான், இந்நூற்குரைசெய்தான்:—எனமொழி, உரை என்னுஞ் சொல்லின்பெயர் அதன்பொருட்கு ஆயின.

விளக்குமரிந்தது, நெஞ்சுநொந்தது:—எனவிளக்கும், ஒளியையுடைய பிழம்பும், உணர்வும் ஆகிய தானிகளின் பெயர் அவற்றிற்குத் தானமாகிய விளக்குத் தண்டினுக்கும் மார்பினுக்கும் ஆயின.

திருவாசகம், திருவாய்மொழி :—என அடைபடுத்த வாசகம், மொழி என்னும் முதற்கருவியின்பெயர் அவற்றின்காரியமாகிய யாப்பிற்கு ஆயின.

இந்நூலலங்காரம், இந்நூல்பாட்டியல் :— என இவ்விலக்கணங்களாகிய காரியத்தின்பெயர் இவற்றைத் தருதற்குக் கருவியாகிய நூல்கட்கு ஆயின.

இந்நூல் திருவள்ளுவர் :—எனக் கருத்தாவின்பெயர் காரியத்திற்கு ஆயிற்று.

ஆதி என்றமையானே காளைவந்தான் என்றற்றொடக்கத்து உவமையான் வருவனவும், தேவர் முதலியோர் பெயரை மக்கட்கிட்டு வழங்குவனவும், பிறவுங்கொள்க. அறுபதம் முதலியனவற்றை பொற்றொடி முதலியன போல் அன்மொழித்தொகைப் பெயரென்றால் என்னையெனின்; அன்மொழித்தொகைப்பெயர் செய்யுள் இயற்றுவோன் ஒருவரை வியப்புமுதலியவற்றின் தன்கூற்றாயும் பிறர் கூற்றாயும் உரைப்புழி ஆங்காங்கு வருவதன்றி இதுபோல நியதிப்பெயராய் வருவதன்றென்க.

அங்ஙனமாயினும் ‡"ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் தம்பொருளுணர்த்தாது பிறிதுபொருளுணர்த்துதலான் ஒக்குமாதலின், அவைதம்

‡ ஆகுபெயரும் என்பதுதொட்டு உளர் என்பதுகாறும் சூத்திரபாஷியத்தில் சிவஞானமுனிவரால் கூறப்பட்டது.

முன் வேற்றுமை யாதோவெனின், ஆகுபெயர்—தன்றன்பெயரான் அதனோடு இயைபுபற்றி பிறிதொன்றனையுணர்த்தி ஒருமொழிக் கண்ணதாம்; அன் மொழித்தொகை—இயைபு வேண்டாது இருமொழியுந்தொக்க தொகை யாற்றலான் பிறிதுபொருளுணர்த்தி இருமொழிக்கண்ணதாம். இவை தம் முள் வேற்றுமையென்க."

"இருபெயரொட்டாகுபெயர் இருமொழிக்கண் வந்ததன்றோவெனின் அன்று; என்னை, வகரக்கிளவி, அதுவாகுகிளவி, மக்கட்சுட்டு என்னும் இருபெயரொட்டாகுபெயருள் வகரமும், அதுவாதலும், மக்களும் ஆகிய அடைமொழிகள் கிளவி, சுட்டு என்னும் இயற்பெயர்ப்பொருளை விசேடித்து நில்லாது, எழுத்தும்சொற்பொருளும் பொருளுமாகியஆகுபெயர்ப்பொருளை விசேடித்துநிற்ப, கிளவி, சுட்டு என்பனவே § ஆகுபெயர்ப்பொருளை யுணர்த்த இருபெயரும் ஒட்டி நிற்குமாகலின்."

"இனி பொற்றொடி என்னும் அன்மொழித்தொகையில் பொன் என்பது அவ்வாறு அன்மொழித் தொகைப்பொருளை விசேடித்து நில்லாது தொடியினையே விசேடித்து நிற்ப, அவ்விரண்டன் தொகையாற்றலான் அன்மொழித்தொகைப்பொருளை உணர்த்துமாறும் அறிக."

"இக்கருத்தேபற்றி ‡ மக்கட் சுட்டு முதலியவற்றைப் பின்மொழியாகு பெயர் என்பாரும் உளர்." என வறிக.

இப்பட்டுச்சீனம், இப்பொன்கழஞ்சு, இந்நெல்நாழி, இம்மனையைங்கோல், இப்புன்னோம்பு, இந்நெல்லவல், இவ்வாடைகோலிகன் என வருவனவற்றுள் சீனம், கழஞ்சு, நாழி, கோல், அம்பு, அவல், கோலிகன் என்பனவற்றை ஆகுபெயர் எனவும், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என ஐந்து அதிகாரங்கட்கும் வரும் காரிய ஆகுபெயரைச் சொல்லாதுபெயர்எனவும்; அகத்தியம், தொல்காப்பியம் என்பனவற்றை ஆகுபெயர்த்திரிபு எனவும் கூறுவாருமுளர். இப்பட்டுச்சீனத்துள்ளது என்பார் இசையெச்சமாக்கி இப்பட்டுச்சீனம் எனக் குறைத்துக்கூறலான், இப்பட்டு என்னும் எழுவாய்க்கும் உள்ளது என்பது பயனிலையன்றி, சீனம் என்பது பயனிலையன்றாதலானும், சுட்டிக்கூறாதசீனம் எனவாளாகூறினது பலபொருளொருசொற்போல் அவ்விடத்தினையும்பட்டினையும் உணர்த்

§ 'ஆகுபெயராயப்பொருளை யுணர்த்த' எனவும் பாடம்.

‡ மக்கட்சுட்டு என்பதனை பின்மொழி ஆகுபெயராய் நின்ற இருபெயரொட்டுப்பண்புத்தொகை என்பர் கல்லாடநம்; அதனை சேனாவரையர் அன்மொழித்தொகை என்பர்; நச்சினார்க்கினியர் ஆகுபெயர் என்பர். இனி சிவஞானமுனிவரும் அன்மொழித்தொகை அன்றெனவும், ஆகுபெயரெனவும் கூறுவர் என்பது:— தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

தாமையானும், இத்தொடக்கத்தனவாகிய இசையெச்சங்களை ஆகுபெய ரென்பார்க்கு —‡ "திருவளர் தாமரை சீர்திகழ் காவிக ளீசர்தில்லைக் - குரு வளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ - மரு வளர்மாலை." —என வரும் உருவகங்களையும் ஆகுபெயரெனக் கூறல்வேண்டு மாதலானும், இவையெல்லாம் ஆகுபெயரிலக்கணத்தான் வந்தனவல்ல என வும்; சொல்லாகுபெயர்க்கு அவர் காட்டியவற்றுள் சொல்லின் து பெயர் அவற்றிற்கு ஆனதின்மையின் அவைசொல்லாகுபெயராகாஎனவும்; வெளிப் படைச்சொல் குறிப்புச்சொல் என்னும் இரண்டனுள் ஆகுபெயர் குறிப் புச்சொல்லாதலானும், அகத்தியம், தொல்காப்பியம் என்பன கருத் தாவோ காரியமோ என ஐயமுற்று ஒன்றனைக் குறிப்பான் உணரவேண் டாது காரியமாகிய நூல்களை வெளிப்படையான் உணர்த்தலானும், கருத்தா வின்மேல் செல்லாமையானும், விகுதிச்சூத்திரத்து பிற என்பதனான் வரும் அம் - விகுதியோடு பகுதிபுணர்ந்து, இந்திரனால் செய்யப்பட்ட நூலுக்கு ஐந்திரம் எனவந்த ஆரியச்சொல்போல வந்தனவன்றி ஈறுதிரிந்தன அல்ல வெனவும் உணர்க.

இவற்றுள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்பன காரியவாகுபெயரெனக் கோடலன்றி, அப்பெயர்களான் அவ்விலக்கணங்களைக் கூறுதற்குத் தானமாகிய படலங்களைக் கூறினமையான், இவை தானியாகு பெயர் எனக் கோடலுமாம் என்க.

‡‡ "இனி திருவாசகம், திருவாய்மொழி :—என்பன உண்மையால் நோக்குவார்க்கு அன்மொழித்தொகையாவனவன்றி ஆகுபெயராகாமை யும் உணர்க."

இனி ஆகுபெயர்கள், தாம் தத்தம்பொருளை நீங்காது நின்று தம்பொரு ளின் வேறல்லாத பொருளோடு புணர்தலும், பொருத்தமல்லாத கூற்றால் நின்று பிரிதுபொருளை உணர்த்தலுமாகிய அவ்விரண் டிலக்கணத்தை யுடைய விடாதவாகுபெயரும், விட்டவாகுபெயரும் என இருவகைய எனவும், அவற்றிற்கு உதாரணம் முறையே கடுத்தின்றான், துழிப்பாடிநேரிது எனவும் கூறுவர். அவ்வாறு ஆகுபெயர்கள் வருமாறும் உணர்ந்துகொள்க.

உகூக. ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள் - வேற்று மை செய்வன வெட்டே வேற்றுமை.

இது மேல் வேற்றுமைக்கிடனாய் என்றார் அவ்வேற்றுமை இனைய எனவும் இத்துணைய எனவும் உணர்த்துகின்றது.

---

‡ திருக்கோவையார், கூ. க.

‡‡ இது இலக்கணவிளக்கச் சூறாவளியில்கண்டது.—சொல், சூ. ௩௪.

ப-ரை. ஏற்கும் - தம்மை ஏற்றுக்கொள்ளுதற்குரிய, எ வகை பெயர்க்கு உம்-எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும், ஈறு ஆய்-இறுதியாய், பொருள்-அப்பெயர்ப்பொருளை, வேற்றுமைசெய்வன-வேற்றுமைப்படுத்துவனவாகிய, வேற்றுமை - வேற்றுமைகள், எட்டு ஏ-எட்டேயாகும். எ-று.

பொ-ரை. தம்மை ஏற்றுக்கோடற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்கட்கும் இறுதியாய் அப்பெயர்ப்பொருளைவேற்றுமைப்படுத்துவனவான வேற்றுமைகள் எட்டேயாம். எ—று.

வி-பு. வேற்றுமை செய்வன வேற்றுமை யெட்டே எனக் கூட்டுக. எப்பெயரும் எல்லாவேற்றுமையும் ஏலாதென்பார் ஏற்கும் என்றும்;

வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களுள் பெயர்படநின்றனவும் தழீஇக்கோடற்கு எவ்வகை என்றும்;

வினைமுதலியமூன்றும் வேற்றுமைகொள்ளாதென்பார்பெயர்என்றும்;

ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்,— என எய்தியதனை விலக்கி "எழுவாயுருபு திரிபில்பெயரே" எனப் பிறிதவிதி வகுத்தலின் பெயர் முழுவதூஉம் உருபாம் எழுவாயுருபினை யொழித்து விளியுருபிற்கு பெயரிறுதியாகிய அகப்பாட்டெல்லையினையும், ஏனை ஆறுருபிற்கும் அதன் இறுதியாகிய புறப்பாட்டெல்லையினையும் தழீஇக்கோடற்கு பொதுமையின் ஈறாய் என்றும்;

பொருளையேயன்றி சொல்லையும் ஒரோவழி வேறுபடுப்பது ஐ முதலிய ஏழுருபிற்குமேயன்றி எழுவாய்க்கு ஒவ்வாமையானும், பொருளொன்றனையும் வேறுபடுத்தல் எட்டுருபிற்கும் ஒப்பமுடிந்தமையானும் சொல்லையும் உடன்கூறாது பொருள் என்றும்;

வேற்றுமை என்னும் காரியத்தைச் செய்யுங் கருத்தாவாகிய எட்டு வேற்றுமை உருபிற்கும் வேற்றுமை எனவும் பெயர்போந்தது காரியவாகு பெயராகிய காரணக்குறி என்பார் வேற்றுமை செய்வன வேற்றுமை என்றும்;

* "ஏழியன்முறைய தெதிர்முக வேற்றுமை - வேறென விளம்பான் பெயரது விகாரமென் - றோதிய புலவனு முளனொரு வகையா — னிந்திர

* விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கல் ஆண்டெல்லார்க்கும் ஒப்பமுடிந்ததன்று; ஏழியன்முறைய தெதிர்முக வேற்றுமை என ஆசிரியர் அகத்தியனார் கூறியதை எடுத்தோதி, ஐந்திரநூலார் விளிவேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக சேர்த்தார் என்பது பெறப்படுதலான், ஆசிரியர் அவர்மதம்பற்றிக் கூறினாராகலின் அதனோடு மாறுகொள்ளாரென்பர்.— சேனாவரையர்—தொல்காப்பியம், சொல். வேற்றுமையியல், கஈ-ம். சூத்திரவுரையிற்காண்க.

னெட்டாம் வேற்றுமை யென்றனன்."- என ஆசிரியர் அகத்தியனார் கூறுப வாகலின், விளியுருபு படர்க்கைச் சொல்லையும் பொருளையும் முன்னிலைச் சொல்லும் பொருளுமாக வேற்றுமைசெய்தலின், அதனை ஏழுவாயுள் அடக்காது வேறுகோடலே தந்துணிபென்பார் எட்டே என்றும் கூறினார்.

வேற்றுமை என்னும் பண்புப்பெயர் பண்பிக்காகாமையின் பண்பாகு பெயரன்றாயிற்று.

இனி இரட்டுற மொழிதலால் வேற்றுமை செய்வன வேற்றுமை யெட்டே எனக்கொண்டு கூட்டாது ஆற்றொழுக்காக நிறீஇ ஏகாரத்தை தேற்றமே ஆக்காது பிரிநிலை ஆக்கி இங்ஙனம் வருவனவாகிய எட்டுருபும் வேற்றுமை, அவையன்றி ஒருசாரார் கூறும் உருபடைந்தபெயரும், உருபின் பயனிலையும் வேற்றுமையல்ல எனவும் பொருளுரைத்துக்கொள்க.

உகூஉ. பெயரே ஐ ஆல் கு இன் அது கண்-விளியென் றாகு மவற் றின் பெயர்முறை.

இது வேற்றுமைகள்தம் பெயரும் முறையும் உணர்த்துகின்றது.

ப-ரை. அவற்றின் - முன்னே எட்டுவேற்றுமை யென்னப்பட் டவைகளினுடைய, பெயர்-பெயர்களும், முறை - முறையுமாவன, பெயர்-பெயரும், ஐ-ஐயும், ஆல்-ஆலும், கு - குவ்வும், இன் - இன்னும், அது-அதுவும், கண்-கண்ணும், விளி-விளியும், என்று ஆகும்- என்றிப்படிச் சொல்லப்பட்டவையாகும். எ-று.

பொ-ரை. மேல் எட்டேவேற்றுமை என்றவற்றின் பெயரென்னை டைக்கைமுறை யென்னையெனின் பெயர்முதலாக விளியீறாக இங்ஙனங் ...றிய பெயரும் முறையுமாம். எ-று.

வி-பு. ஏகாரம் எண். மேல் எட்டே என்ற தொகைக்கு வகைதோன்றப் பெயர்கூறினாரன்றி அவ்வேற்றுமைகளின் பெயர்விகற்பமெல்லாங் கூறப் ...ந்தாரல்லர் ஆதலின் அவையெல்லாம் வரும் சிறப்புச் சூத்திரங்களான் ...ணர்க. இவை இம்முறைநிற்றற்குக் காரணமும் அங்ஙனம் காட்டுதும்.

‡ அன்றியும்—"நாரா யணன்பூ வோரா யிரத்தைக்
3 கரத்தாற் கொய்தோ ராற்கே கொடுத்துச்
சக்கரச் சிறுமையி னீங்கி நற்சுவைப்
பாற்கடற் கண்ணே பள்ளி கொண்டான். — என்பத
...று மறிக.

‡ இலக்கணக்கொத்து, வேற்றுமையியல், சூ. ௬.

உகூ௩. ஆறனுருபு மேற்குமவ் வுருபே.

இது மேற்கூறிய வேற்றுமையுருபு எட்டனுள் எழுவாயுருபே ஏனை உருபுகளையும் ஏற்குமென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. அ உருபு - பெயராய்நிற்கின்ற அவ்வெழுவாயுருபே, ஆறன் உருபு உம்-ஐம்முதலாகிய ஆறுவேற்றுமை உருபுகளையும், ஏற்கும் - ஏற்கும். எ-று.

பொ - ரை. எழுவாய் வேற்றுமையாவது பெயர்மாத்திரையாய்த் தோன்றி நிற்கும் நிலையென்பவாகலின் அவ்வெழுவாயாய்நின்ற உருபே ஐம் முதலிய ஆறுவேற்றுமைகளின் உருபும் ஏற்கும். எ-று.

வி-பு. எனவே, விளியுருபாவது பெயரது விகாரமேயாதலின் அவ் வெழுவாயுருபின்வேறல்லவெனவும் படும் என்பதுபற்றி ஆறனுருபு மேற்கு மவ் வுருபே என்றார்.

இங்ஙனம் ‡ ஆறனுருபும் என அன்சாரியை தவிர்வழி வந்தமையால் செய்யுள் விகாரம்.

இனி இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது பெயரே யன்றி ஆறும்வேற்றுமையுருபும் அவ்வுருபுகளை யேற்குமெனப் பொருள் கொண்டு, சாத்தனது, சாத்தனதை, சாத்தனதால், சாத்தனதற்கு, சாத் தனதனின், சாத்தனதனது, சாத்தனதன்கண், சாத்தனதே என உதா ரணங் காட்டுவாருமுளர்.

உருபேற்றல் பெயர்க்கேயுரிய இலக்கணமன்றி வினைமுதலியவற்றிற் குரிய இலக்கணமன்றுமாதலானும், "பெயர்வழித்தம்பொரு ளாவரு முரு பே." என்றும்—"ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்" என்றும் வரை யறைகூறிப்போந்தமையானும், ஈண்டு இடைச்சொல் உருபேற்குமெனின் மாறுகொளக் கூறலாமாகலானும், சாத்தனதை, சாத்தனதால் என்புழி சாத்தனது என்பது குழையது, கோட்டது என்றாற்போல துவ்விகுதியும் அகரச்சாரியையும் பெற்று உருபேற்றுநின்ற வினைக்குறிப்பு பெயராமாத லானும், அன்றியும், உருபு ஏற்புழி பெயர்போலத் தனித்துநின்று உரு பேற்றல்வேண்டுமாதலானும், அதனை, அதனால் என உருபேற்குமெனின் சுட்டுப்பெயர் உருபேற்றதாமன்றி உருபு உருபேற்றதன்று மாதலானும், அது பொருந்தாதென்க.

---

‡ எழுவாயாய் நின்ற உருபே ஆறு வேற்றுமைகளின் உருபும் ஏற்கு மென்னும் கருத்தான் 'ஆறனுருபு மேற்குமவ் வுருபே' என்றது நன்னூலார் கருத்தென்பர்.— இலக்கணவிளக்கச்சூறவளியார், சொல். ௩௨.

உசு௪. நீயிர் நீவிர்நா னெழுவா யலபெற.

இது மேல் ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கும் என்றமையின் ஏலாப் பெயருமுள என்றுராதலின் அவற்றுள் இரண்டாவது முதலிய ஏழுருபும் ஏலாதன இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. நீயிர் நீவிர் நான் - நீயிர்முதலாகிய இம் மூன்றுபெயர்களும், எழுவாய் அல-எழுவாயல்லாத வேற்றுமைகளை, பெற-ஏலா வாம். எ-று.

பொ-ரை. இம்மூன்றுபெயரும் எழுவாய் வேற்றுமையினையன்றி ஏனை ஏழுவேற்றுமையினையும் ஏலா. எ-று.

வி-பு. எனவே, நீர் என்னும் ஈரெழுத்தொருமொழி அதுபோல ஈரெழுத்தொருமொழியாகிய நும் எனவும், யான் என்னும் யகரமுதன்மொழி யகரத்தோடு பிறப்பொத்த எகரமுதன்மொழியாகிய என் எனவும் திரிந்து, ஐ முதலிய ஆறுருபும் ஏற்றுற்போல,நீயிர், நீவிர், நான் என்னும் மூன்றும் அங்ஙனம் வாராமையின், நும், என் எனத்திரிதலும், அவ்வுருபுகளை ஏற்றலும் இலவென்பதாயிற்று.

உசுரு. அவற்றுள், எழுவா யுருபு திரிபில் பெயரே - வினைபெயர் வினுக்கொள லதன்பய னிலையே.

இது நிறுத்தமுறையானே பெயர் வேற்றுமையது இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. அவற்றுள் - முன்சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள், எழுவாய்-முதல்வேற்றுமையினது, உருபு-உருபாவது, திரிபு இல்-ஐம்முதலாகிய உருபேற்றுத் திரிதலில்லாத,பெயர் ஏ-பெயரேயாம், வினை-வினையையும், பெயர்-பெயரையும், வினு-வினுவையும், கொளல் - கொள்ளவருதல், அதன் - அவ்வுருபினது, பயனிலை - பொருள்நிலையாய் வருதலாம். எ-று.

பொ-ரை. மேற்கூறிப்போந்த எட்டுவேற்றுமையுள் முதல்வேற்றுமையின் உருபாவது திரிபில்லாத பெயரேயாம்; அதன் பொருளாவது வினையையும் பெயரையும் வினுவையும் கொளப் பொருள்நிலையாய் வருதலாம்.

வி-பு. திரிபில்லாமை யாவது உருபும் விளியும் ஏலாது, முடிக்குஞ் சொல்லும் நோக்காது; ஆ என்றுற்போல தன்னிலையில் நிற்றலாம். பயனிலை என்றது ஈண்டுமுடிக்குஞ் சொல லன்று, பொருள்நிலை யென உணர்க. பொருள்நிலை எனினும் பயனிலை எனினும் ஒக்கும்.

பொருள் என வாளாகூறாது பொருண்மை என்றது என்னையெனின், ஏனை வேற்றுமையின் பொருள்கட்கெல்லாம் அப்பொருள் முதற் கண் நிலைபெறுதலின் என்க. கொளவருதலாவது - முடிக்குஞ்சொற் கொள வருந்தன்மை. எனவே, எழுவாய்வேற்றுமை யுருபாவது தன்னிலையில் நிற்கும்பெயரே யென்பதூஉம், பெயரே என்றமையான் இதற்கு இது என வேறுருபு இன்றென்பதூஉம், அதன் பொருளாவது வினைமுதற்பொருண்மையாகத் தன்னைத்தானே வேற்றுமைசெய்த லென்பதூஉம் பெற்றாம். தன்னைத்தானேவேற்றுமைசெய்தல் ‡"நன்னிலைக்கட்டன்னை நிறுப்பானுந் தன்னை - நிலைகலக்கிக் கீழிடுவானு-நிலையினு - மேன்மேலுயர்த்தி நிறுப்பானுந் தன்னைத்-தலையாகச் செய்வானுந் தான்."—என்பதனானும் உணர்க.

வினை எனப் பொதுப்படக் கூறினமையின் வினையும் வினைக்குறிப்புமாகிய விகற்பமெல்லாங் கொள்க. இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியரும்,

* "எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே" (எ-ம்), —

**"பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்-வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்-பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்-றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே" (எ-ம்): — கூறிய முறைமையும் பொருண்மை சுட்டல் முதலியவாகக் கூறியவாறும், இம்மூன்றுமடங்குமாறுங் காண்க.

[வ-று.] ஆ உண்டு என்பது ஒருபொருளின் பண்புமுதலாயின சுட்டாது அப்பொருட்டன்மையது உண்மைத்தன்மையேசுட்டி நிற்கவருதலாம்.

ஆசெல்க என்பது தான் ஏவலைக்கொள்ளவருதலாம்.

ஆகிடந்தது என்பது தனது தொழில்வினைச் சொல்லவருதலாம்.

ஆகரிது என்பது தனது பண்பினைத் தான்கொள்ள வருதலாம்.

வினைக் குறிப்பாதல் ஒப்புமையான் ஆவில்லை, ஆவல்ல - என்னுந் தொடக்கத்து குணப்பொருளவல்லா வினைக் குறிப்புக்கொள வருதலுங் கொள்க. இவையெல்லாம் வினைப்பாற்பட்டன.

ஆபல என்பது தான்பெயராக்கொண்டு முடியவருதலாம்.

ஆயாது, ஆவேவன் - என்பன தான்வினாவுதற்குப் பொருந்தி வருதலாம் எனப்பகுத்துக்காண்க. அங்ஙனம்பகுத்துக் காண்புழி அவிகாரியாய்

‡ நாலடியார், செ. உசஅ.

* தொல்காப்பியம், சொல். வேற்றுமையியல், சூ. ச.

** ஷை ஷை ஷை சூ. ரு.

நின்றபெயர் இம்முடிக்குஞ் சொற்களை அவாவியகாலத்து விகாரியின் நின்றும் விகாரியாகத் தன்னைத்தானே வேற்றுமைசெய்து நின்றமையுணர்க.

இதனை முதல்வேற்றுமையென்றதென்னையெனின் பெயராய் நிற்றலானும் வினைமுதற் பொருண்மையைத் தருதலானுமென்க. இனி [illegible]வினிலை என்றது முடிக்குஞ்சொல் எனக் கூறுவாருமுளர்.

வினைபெயர்விளிக்கோளும் என முற்றுச்சொல்லாற் கூறாது, வினைபெயர் விளிக்கோளல் எனத் தொழிற்பண்புச்சொல்லாற் கூறுதலானும், இரண்டாம்வேற்றுமை முதலியவற்றிற்கு உருபும் பொருளுங் கூறுதலான் இம்முதல்வேற்றுமைக்கும் உருபும்பொருளுங் கூறவேண்டுமாதலானும், இவ்வெட்டு வேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல் ‡ "எல்லையின்னு மதுவும் பெயர்கொளு-மல்ல வினைகொளும்" என்னுஞ் சூத்திரத்தாற் பிற்கூறுதலானும், ஈண்டும் கூறின்கூறியதுகூறலாம் ஆதலானும், அது பொருந்தாதென்க.

இன்னும் அவருட் சிலர் விளிக்கோளல் என்பதற்கு சாத்தனே என விளிவிடைச்சொற்களைக் கொள்ளுமென உதாரணங்காட்டுவர். அங்ஙனமாயின் தேர்நிலை, தேற்றம் முதலிய பொருள்தரும் இடைச்சொற்களையும் கொள்ளுமெனக் கூறவேண்டுமாதலானும், இஃது இடைச்சொற்சந்தியன்றி எழுவாய்ச்சந்தியன்றும் ஆதலானும், அவர்க்கு அது கருத்தன்றென்க.

இவ்வினைமுதற்பொருள்— † "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா-பிற்பகற் றாமே வரும்."—

‡‡ "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையா
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு."—என்பவற்றுள் இன்னா தாமேவரும், கேண்மை தானேநந்தும், தொடர்புதானேதேயும்:—என செயப்படுபொருட்கண்ணும்,

ஆதித்தன் கற்றீப்பிறப்பித்தனன், காற்றுப்பழமுதிர்த்தது:—என ஏதுவின்கண்ணும்,

சாத்தனுண்டான் என தன்வசம் என்பதன்கண்ணும்,

மாடஞ் செய்யப்பட்டது என வினைமுதலென்று தெரியப்படாமல் வினைமுதலாலே நிற்பதாகிய தெரியாநிலைக்கண்ணும்,

‡ நன்னூல், சூ. ௩௱௧௯.

† குறள், செ. ௩௱௰௯.

‡‡ நாலடியார், செ. ௧௨௫.

"ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப."—என் ஓர்பொருளே ஒருகால் வினைமுதலாயும் ஒருகால் செயப்படுபொருளாயும் நிற்குந் தடுமாற்றத்தின் கண்ணும்,

†"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்-பிறவினை யெல்லாந் தரும்."—என்பதனுள் கொல்லாமை அறவினையெல்லாந்தரும் கோறல் பிறவினையெல்லாந்தரும்.—என தொழிற்பெயர்க்கண்ணும்,

கண்காணும், செவிகேட்கும்:—என கருவியின்கண்ணும்,

குன்று குவட்டைத்தாங்கும், தூண் போதிகையைத்தோட்டது:—என இடத்தின்கண்ணும்,

‡"இரப்பவ ரென்பெறினுங் கொள்வர்."—என கோள்பவன்கண்ணும் வருமெனவும்;

தாய் மகவுக்கூட்டினள், ஆரியன் மாணக்கனைப் படிப்பித்தான், தலைவன் தலைவியைப் புல்லினன்:—என இருவினைமுதலால் ஒருவினையும் உளவெனவும்;

அரசன்தேர்செய்தான், தச்சன் தேர்செய்தான், சாத்தனுறங்கினன் என ‡‡"ஏவுத லியற்றுத லிவையின்வே றுதல்" என வினைமுதல் மூவகையாம் எனவுங் கொள்க.

இவையெல்லாம் உரையிற்கோடல் என்னுந் தந்திரவுத்தி. இவ்வாறு பிறவருவனவும் அன்ன.

உகூக. இரண்டா வதனுரு பையே யதன்பொரு - ளாக்க லழித்த லடைத னீத்த - லொத்த லுடைமை யாதி யாகும்.

இது இரண்டாம்வேற்றுமையது இலக்கணம்உணர்த்துகின்றது.

ப-ரை. இரண்டு ஆவதன் - இரண்டாம் வேற்றுமையினது, உருபு - உருபாவது, ஐ ஏ - முன் சொல்லப்பட்ட ஐயொன்றுமேயாம், அதன்-அதனுடைய, பொருள்-பொருள்களாவன, ஆக்கல் - ஆக்கப்படுபொருளும், அழித்தல் - அழிக்கப்படுபொருளும், அடைதல்-அடையப்படுபொருளும், நீத்தல்-துறக்கப்படுபொருளும், ஒத்தல்-ஒக்கப்படுபொருளும், உடைமை-உடைமைப்பொருளும், ஆதி ஆகும் - முதலியனவாக அவ்வுருபையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட செயப்படுபொருள்களாம். எ-று.

---

† குறள், சே. ஙஉக. ‡ ஔவையார், தனிச்செய்யுள்,
‡‡ இலக்கணக்கொத்து, வேற்றுமையியல், சூ. கசு.

போ-ரை. இரண்டாம் வேற்றுமையினது உருபு மேற்கூறிய ஐ யுருபு ஒன்றுமே; அதன் பொருள்களாவன தன்னையேற்ற பெயர்ப்பொருளை ஆக்கப்படுபொருளாகவும், அழிக்கப்படுபொருளாகவும், அடையப்படுபொருளாகவும், துறக்கப்படுபொருளாகவும், ஒக்கப்படுபொருளாகவும், உடைமைப்படுபொருளாகவும், இவைபோல்வன பிறவாகவும் வேற்றுமை செய்தலாம். எ-று.

வி-பு. ஈண்டு தந்து உரைத்தனவெல்லாம் மேற்போந்த ஏற்குமேவ் வகை என்னுஞ் சூத்திரத்திற்கு இனியவந்த இசையெச்சம். மேல்வருவனவும் அன்ன.

[வ்-று.] குடத்தைவனைந்தான்,— உடைத்தான்,— அடைந்தான்,— துறந்தான்,—ஒத்தான்,—உடையான்,—எனவரும்.

குடத்தையோத்தான் என்புழிச் சுதந்தரமின்றி ஒழுகினான் என்பது பொருள்.—ஆதி என்றமையான் இவ்வாறு செயப்படுபொருளாக வேற்றுமைசெய்தனவெல்லாங் கொள்க. ஒருவன் ஓர்வினைசெய்ய அதனாற்றோன்றியபொருள்யாது அது செயப்படுபொருள் என்பதாம். ஒருவன் ஓர் வினைசெய்யத் தொழிற்படு பொருள்யாது அது செயப்படுபொருள் எனினும் அமையும்.

செயப்படுபொருள், செய்பொருள், கருமம், காரியம் என்பன ஒரு பொருட்கிளவி.

அழித்தல் முதலிய வினைசெய்தவழித் தோன்றியகாரியங்கள் என்னையெனின், அழிபொருளாதல் முதலியனவும் குறிப்புவினையு ளொன்றனையுடையனாகிய காலத்து அஃதுடைமையாதலுமாம். பிறவுமன்ன.

‡ இச்செயப்படுபொருள் கருத்துண்டாதல், கருத்தின்றாதல், இருமையுமாதல், ஈருருபிணைதல், கருத்தாவாதல், அகநிலையாதல், தெரிநிலை :— என இவைமுதலாகியும் வருமெனக்கொள்க.

இவற்றிற்கு உதாரணம்:—சோற்றையுண்டான் (எ-ம்); சோற்றைக் குழைத்தான் (எ-ம்); எறும்பைமிதித்து வழியைச்சென்றான், பசும்புல்லை மிதித்துப் பலவூரையடைந்தான், தாளோடு கூழையுண்டான், நஞ்சினைக்கலந்த பாலைக்குடித்தான், கத்தரிக்காயையும் புழுவையுங் கறித்

---

‡ இச்செயப்படுபொருள் கருத்துண்டாதல் முதலியவாகவரும் என்பதனை 'கருத்துண்டாதல் கருத்தின்றாத-லிருமையுமாதலீருரு பிணைதல்-கருத்தாவாத லகநிலையாத - றெரிநிலையாதியாய்வருஞ் செயப்படுபொரு-ளியற்றப்படுத லெய்தப்படுதல் - வேறுபடுக்கப் படுதலாதியு - மவ்வெழுவகையுளடங்கு மென்ப. எனக்கூறுவதனானு முணர்க. — இலக்கணக் கொத்து, வேற்றுமையியல், சூ. கக.

தான், பதரையு நெல்லையும் பணத்திற்கொண்டான் (எ-ம்); ஆரியனை ஐயுற்றபொருளை வினவினான் (எ-ம்); பசுவினைப் பாலினைக்கறந்தான், யானையைக் கோட்டைக்குறைத்தான், (பசுவினது, யானையது என்பன போல ஆரியனது என வராமைபற்றி இங்ஙனம் ஈருருபு இணைதல் இருவகைப்பட்டன.) (எ-ம்); தன்னைப்புகழ்ந்தான், தன்னைக்குத்தினான், தன்னைப் பேணினான், தன்னைக்காதலித்தான், (எ-ம்); வருதலைச்செய்தான் (எ-ம்); மாடஞ்செய்யப்பட்டது (எ-ம்):—முறையே காண்க.

தேர்நிலையாவது வினைமுதலுருபேற்றும் செயப்படுபொருளே யெனத் தெரியநிற்றல். எயிலையிழைத்தான், பொருளைப்பெற்றான், கயிற்றையறுத்தான்:—என முறையே இயற்றப்படுதலும், எய்தப்படுதலும், வேறுபடுக்கப்படுதலும் முதலியனவற்றுள்ளேயடங்கும்.

முதலியனவென்றதனால், ஆரியன் மாணக்கனை ஊர்க்குப்போக்கினான், தாய்மகளை ஊர்க்குப்போக்கினாள்:-என்புழி இருவரும்போதலாலே வினைமுதலாயும், ஏவற்படுதலால் செயப்படுபொருளாயும், ஏவுவித்துக் கொள்ளுதலால் ஏவுதற்கருத்தாவாயும், ஏவப்போதலால் இயற்றுதற்கருத்தாவாயும்வந்தன. இவ்வேற்றுமை தன்பெயர்ப்பொருளைமேற்போந்த கருத்தனுலாகிய காரியமாக்குதலின், இரண்டாம் வேற்றுமையெனப்பட்டது.

உ௬௭. மூன்ற வதனுருபாலா னோடொடு - கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்.

இது மூன்றும்வேற்றுமையது இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. மூன்று ஆவதன்-மூன்றும்வேற்றுமையினுடைய, உருபு-உருபுகளானவை, ஆல் ஆன் ஒடு ஓடு-முன்சொல்லப்பட்டஆலேயன்றி ஆனும் ஒடும் ஓடுவுமாகும், அதன் - அவ்வுருபுகளுடைய, பொருள்-பொருள்களானவை, கருவி-கருவிப்பொருளும், கருத்தா-வினைமுதற்பொருளும், உடன் நிகழ்வு-உடனிகழ்ச்சிப் பொருளும் ஆகிய அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்டு மூன்றுமாகும். எ-று.

போ-ரை. மூன்றும்வேற்றுமையின் உருபு மேற்கூறிய ஆலேயன்றி ஆனும் ஒடும் ஓடுவுமாம்; அவற்றின்பொருள்களாவன தம்மையேற்ற பெயர்ப்பொருளைக் கருவியாகவும், ஏதுப்பொருட்டாகிய கருத்தாவாகவும், உடனிகழ்வதாகவும் வேற்றுமைசெய்தலாம். எ-று.

வி-பு. மூன்றும்வேற்றுமைப் பொருளாதலின் ஏதுப்பொருட்டாகிய கருத்தா என்றும், அதன்பொருள் என்பது தொகுதி ஒருமையாதலின் அதற்கு அவற்றின்பொருளென்றும் பொருள்கூறினும்.

கருவி, காரணம், ஏது, நிமித்தம் என்பன வேறுபொருட்கிளவியாயும், ஒருபொருட்கிளவியாயும் வருதலின், காரணமூன்றனுள் முதற்காரணம் துணைக்காரணமென்னும் இரண்டனையுங் கருவியென்றும், ஏவுதற்கருத்தாவும், இயற்றுதற்கருத்தாவுமாகிய நிமித்தகாரணம் இரண்டனையுங் கருத்தாவென்றும் கூறினர்.

வனைந்தான் என்புழி குடமாகிய காரியத்திற்கு அதுவதுவாகியமண் முதற்காரணம். குலாலனது அறிவும் அந்தக்கரணமும்முதலிய ஞாபகக்கருவியும், தண்டசக்கரமுதலிய காரகக்கருவியும், அம்முதற்காரணத்துக்குத் துணையாய்நின்று காரணத்தைத் தருதலின், துணைக்காரணம் குலாலன்நிமித்தமாக அக்காரியம் தோன்றுதலின், அவன் நிமித்தகாரணம். ஞாபகக் கருவி என்பது அறிதற்கருவி ; காரகக்கருவி என்பது செய்தற்கருவி.

நடந்தான் என்புழி. குடம்போல்வதோர்காரிய மின்றேனும், நடத்தலைச்செய்தான் என்பது பொருளாதலின், நடத்தல் காரியம் அவயவத்தாற் பலவேறுவகைப்பட்ட குடமுதலிய கலன்களில் பொதுமையின் நிற்கும் மண்போலப் பலவேறுவகைப்பட்ட வினைகளில் பொதுமையின் நிற்குந் தொழில் நடத்தற்கு முதற்காரணம். அறிவும், காலும் முதலியன துணைக்காரணம். வினைமுதல் நிமித்தகாரணம், பிறவுமன்ன.

[வ-று.] அறிவாலாக்கியகாட்சி, அறிவாலாகியகாட்சி:-என்புழி ஆல் உருபு பெயர்ப்பொருளை ஞாபகமுதற்கருவியாக வேற்றுமைசெய்தது. கண்ணாலாக்கிய காட்சி, கண்ணாலாகியகாட்சி:-என்புழி ஞாபகத்துணைக்கருவியாக வேற்றுமைசெய்தது. காட்சி என்றது காட்சிஉணர்வை.

மண்ணாலாக்கியகுடம், மண்ணாலாகியகுடம்: — என்புழிகாரகமுதற்கருவியாக வேற்றுமைசெய்தது.

திரிகையாலாக்கியகுடம், திரிகையாலாகியகுடம்:-என்புழி காரகத்துணைக்கருவியாக வேற்றுமைசெய்தது. இங்ஙனம் ஆக்குதற்கு வினைமுதல் அறிவனும் குலாலனுமாம். ஆதற்கு வினைமுதல் காட்சியுணர்வும் குடமுமாம். இக்காட்சி உணர்வும் குடமும் வினைமுதலாயகாலத்து இக்கருவிகள் ஏதுப்பொருளவாய்நின்றன.

அரசனாலாகியதேவகுலம், தச்சனாலாகியதேவகுலம்:-என்புழிமுறையே ஏதுப்பொருளாகிய ஏவற்கருத்தாவாகவும், இயற்றுதற்கருத்தாவாகவும் வேற்றுமைசெய்தது. ஆக்கியதேவகுலமென வரின் மூன்றாமுருபு ஏலாவாய் அரசனும், தச்சனும் எழுவாயாம். இஃதெழுவாய்க்கண்வருங் கருத்தாவிற்கும். இவ்வேற்றுமைக்கண்வருங் கருத்தாவிற்கும் தம்முள்வேற்றுமையென்க.

" தூங்குகையா னோங்குநடைய"—" உறழ்மணியா னுயர்மருப்பின"

†"புண்டறியேன்கூற்றென்பதனை யினியறிந்தேன்-பெண்டகையாற் பேரமர்க்கட்டு." - என்புழி உடனிகழ்வதாக வேற்றுமைசெய்தது. ஆன் உருபையும் இவ்வாறேயொட்டிக்காண்க.

‡"நாவீற்றிருந்த கலைமாமகளோடு நன்பொற்-பூவீற்றிருந்த திருமாமகள் புல்லநாளும்"-ஒடு (எ-ம்); ††"மனத்தொடுவாய்மை மொழியிற்றவத் தொடு-தானஞ்செய் வாரிற் றலை" - ஒடு (எ-ம்) முறையே ஒடும் ஒடுவும் உடனிகழ்வதாக்கின. ஏற்புழிக்கோடலான் இவ்விரண்டுருபிற்கு உடனிகழ்ச்சிப்பொருளொன்றுமே கொள்க.

இங்ஙனம்வருங் கருத்தா ஏதுப்பொருட்டாய் வருதலின் விதந்து கூறுது கருவியின்பாற்படுத்தினும் அமையுமென்பதுதோன்ற இவ்வுருபிற்குச் சிறந்தகருவிப்பொருளை முற்கூறினர்.

‡‡இக்கருவிப்பொருள் அகக்கருவி,புறக்கருவி,ஒற்றுமைக்கருவிஎன மூன்றும் வருமெனக்கொள்க. அவையாவன:—மனத்தானினைத்தான், வாளால்வெட்டினான்,அறிவாலறிந்தான்—ஆல் :—என முறையேகாண்க.

இரண்டாம்வேற்றுமைப் பொருளாகிய காரியத்திற்குவேண்டுங் கருவிப்பொருளைத் தருதலின் இது மூன்றாம்வேற்றுமை யெனப்பட்டது. "ஆனு மானு மோடு மொடுவுஞ் - சானு மூன்றாம் வேற்றுமைக் கது வே - செய்வோன் காரணஞ் செயத்தகு கருவி - யெய்திய தொழின்முதலியையுடைத் ததன்பொருள்" என்றார் ஆசிரியர் அகத்தியனாருமென்க.

முதற்காரணத்தைக் காரணமென்றும், ஏவற்கருத்தாவைத் தொழின்முதலென்றும் விதந்துகூறினாராதலின் இங்ஙனம் பொருள் ஐந்தாயின.

உகூஅ. நான்கா வதற்கு ருபாகுங் குவ்வே-கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்-பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே.

இது நான்காம்வேற்றுமையது இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. நான்கு ஆவதற்கு - நான்காம்வேற்றுமைக்கு, உருபு- உருபாவது, கு ஏ ஆகும் - முன்சொல்லப்பட்ட குவ்வொன்றுமே யாகும், பொருள் - அவ்வுருபின்பொருள்களாவன, கொடை-

---

† திருக்குறள், செ. கoஅரு.

‡ சிந்தாமணி, நாமகளிலம்பகம், நாட்டுவளம், செ. க.

†† திருக்குறள், செ. உகூ௫.

‡‡ இக்கருவி அகக்கருவிமுதலியவாக மூவகைப்படுமென்பதனை 'அகம்புறமொற்றுமையாகுங்கருவி' எனக்கூறுமாற்றாலுணர்க.—இலக்கணக்கொத்து, வேற்றுமையியல், சூ. உக.

கொடையும்,பகை-பகையும்,நேர்ச்சி-நட்பும், தகவு-தகுதியும், அது ஆதல் - அதற்காரணமும், பொருட்டு-நிமித்தகாரணமும், முறை-முறையும், ஆதியின் - முதலான பொருட்சொற்களின் புணர்ச்சியில், இதற்கு இது எனல் - இதற்கு இதுவென்கிறதுபட வருகின்றவையாகிய அவ்வுருபேற்ற பெயர்ப்பொருள் வேறுபட்டபலவுமாம்.

பொ-ரை. நான்காம்வேற்றுமைக்கு உருபு மேற்கூறிய குவ்வொன்றுமேயாம்; அதன்பொருளாவது கொடையும் பகையும் நேர்ச்சியும் தகவும் அதுவாதலும் பொருட்டும் முறையும் முதலானபொருள்தோன்றப்புணரும் புணர்ச்சிக்கண் இதற்கிதென அங்ஙனம் வருதற்குரிய எப்பொருளினையும் ஏற்றுக்கொள்ளும்பொருளாகத் தன்னையேற்ற பெயர்ப்பொருளை வேற்றுமைசெய்தலாம். எ-று.

வி-பு. இதற்கிது என்றமையான் ஏற்றுக்கொள்ளும்பொருளென்பது பெற்றாம்.

[வ-று] † "இரப்பார்க்கொன் - றீவார்மே னிற்கும்புகழ்" என்பது கொடை.

பிணிக்குமருந்து என்பது பகை; விளக்கிற்கெண்ணெய் என்பது நேர்ச்சி. நட்பு என்பதும் இது.

"அருங்கல மூலகின்மிக்க வரசர்க்கே யுரிய" என்பது தகுதி.

ஆடைக்குநூல் என்பது அதுவாதல்; கூழிற்குக்குற்றேவல்செய்யும் என்பது பொருட்டு; சாத்தற்குமகன் என்பது முறை.

ஆதி என்றமையானே, கைக்கியாப்புடையதுகடகம் என்னும் யாப்புடைமை முதலியவாய் இதற்கிதென்பதுபட வருவனவெல்லாங்கொள்க.

இவற்றுள் ஏற்றுக்கொள்ளும்பொருளாக வேற்றுமைசெய்தல் காண்க.

இவ்வேற்றுக்கோடற்பொருள், ‡ "கேளாதேற்றல் கேட்டேயேற்றலெல்லாதேற்ற லீவோனேற்ற லுயர்ந்தோனேற்ற லிழிந்தோனேற்ற-லொப்போனேற்ற லுணர்வின்றேற்றல் - விருப்பாயேற்றல் வெறுப்பாயேற்றல்"—என இவைமுதலாகப் பலவுமாமெனக்கொள்க.

[உ-ம்.] ஆவிற்குநீர்விட்டான் (எ-ம்); வறியார்க்கீந்தான் (எ-ம்); மாணாக்கனுக்கு அறிவைக்கொடுத்தான் (எ-ம்); தனக்குச்சோறிட்டான்,

† திருக்குறள், செ. உ௩௨.

‡ இலக்கணக்கொத்து, வேற்றுமையியல், ௩-உச.

அறிவைச் சேர

தன்னகரிசிகொடுத்தான் (எ-ம்); † "அருமற்றை சோரு மறிவிலான் செய்யும்-பெருமிறைதானேதனக்கு" (எ-ம்); அரனுக்குக்கண்ணைவரிகொடுத்தார் (எ-ம்); அரித்துச் சக்கரங்கொடுத்தா னரன் (எ-ம்); சோழந்துவிநந்து கொடுத்தான் சேரன் (எ-ம்); சோற்றிற்கு நெய்விட்டான், நீர்க்குவாசமூட்டினன், வாளிற்குறைவழங்கினன், தண்டிற்குத் தங்கங்கட்டினன், சுவர்க்குச் சித்திரமெழுதினன், மாணுக்கனுக்குக் கசையடிகொடுத்தானரியன் (எ-ம்); கள்ளனுக்குக் கசையடிகொடுத்தா னரசன் (எ-ம்):—முறையேகாண்க.

முதலென்றதனால், மருகனுக்கு மகட்கொடுத்தான் என்பது வழக்கு; மகனுக்கு அரசுகொடுத்தான் என்பது உரிமை; அரசர்க்குத் திறைகொடுத்தான் என்பது அச்சம்; தந்தைதாய்க்குத் தீதிகொடுத்தான் என்பது பாவனை:—எனவும் வரும்.

ஒருவனோர் காரியத்தை ஒருகருவியாற்செய்தல் அக்காரியந் தனக்கேனும் பிறர்க்கேனும் உதவுதற்பொருட்டன்றி வீண்காரியஞ் செய்யானுதலின், இஃது இம்முறையானே நான்காம்வேற்றுமை யெனப்பட்டது.

உ௯௯. ஐந்தா வதனுரு பில்லு மின்னு-நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

இது ஐந்தாம்வேற்றுமையது இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. ஐந்து ஆவதன் - ஐந்தாம் வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளானவை, இல் உம் இன் உம்-இல்லும் முன்சொல்லப்பட்ட இன்னுமாம், பொருள் - அவ்வுருபுகளின் பொருள்களாவன, நீங்கல் - நீங்கற்பொருளும், ஒப்பு-ஒப்புப்பொருளும், எல்லை-எல்லைப்பொருளும், ஏது - ஏதுப்பொருளுமாகிய அவ்வுருபுகளை யேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இந்நான்குமாம். எ-று.

பொ-ரை. ஐந்தாம்வேற்றுமையின் உருபாவன இல்லும் மேற்கூறிய இன்னுமாம்: அவற்றின் பொருளாவன நீங்கற்பொருளாகவும், உவமைப்பொருளாகவும், எல்லைப்பொருளாகவும், ஏதுப்பொருளாகவும் தம்மையேற்ற பெயர்ப்பொருளை வேற்றுமை செய்தலாம். எ-று.

வி-பு. ஏதுப்பொருள் மூன்றாம்வேற்றுமைக்கன்றி இதற்கு அத்துணைச் சிறப்பின்மையின் பின்கூறப்பட்டது.

[வ-று.] தமரிற்றீர்ந்தானிவன், வரையின் வீழருவி, †† "தலையினிழிந்த மயிரனையர்மாந்தர் - நிலையினிழிந்தக்கடை." (எ-ம்); அரசரிற்பெரிய

† திருக்குறள், சே. அ௫ள.
†† ஷை சே. ௯௬௱.

ரந்தணர், ஆவினிழிந்ததுமேதி (எ-ம்):—வருவழி இன் உருபு நீங்குதற் பொருளவாகவேற்றுமை செய்தது.

பாலின்வெளிதுகொக்கு, காக்கையிற்கரிது களம்பழம், நாயிற் கடைப்பட்ட நன்மை :—என்பனவும் ஒப்புமைகருதாது உயர்வுந் தாழ்வுங் கருதியவழி நீங்குதற் பொருளவாம்.

‡இந்நீக்கப்பொருள் நிலைத்திணை, இயங்குதிணை, பண்பாதியின் வருமெனவுங்கொள்க. அவையாவன:—மலையினிழிந்தான் (எ-ம்); யானையினிழிந்தான் (எ-ம்); சிறுமையினீங்கிய (எ-ம்) வரும்.

ஆதியென்றமையான்:-†"குடிப்பிறந்துகுற்றத்தினீங்கி"—†† ஐயத்தினீங்கி :—எனவருமெனவுங்கொள்க. இவ்விலக்கணத்தான் முன்னர்காட்டிய உதாரணங்களையும் உய்த்துணர்ந்து கொள்க.

"திறல்வேனுதியிற் பூத்தகேணி"—"பொன்னிற்பிதிர்ந்த பொறி சுணங்கிளமுலை"—என்புழி உவமைப் பொருளாக வேற்றுமைசெய்தது.

கருவூரின்கிழக்கு, மருவூரின்மேற்குச் சோணாடு:—என்புழி எல்லைப் பொருளாக வேற்றுமைசெய்தது.

'கோட்டிற்செய்த கொடிஞ்சிநெடுந்தேர்,' அறிவிற்பெரியன்:-என்புழி ஏதுப்பொருளாக வேற்றுமைசெய்தது. இல்லுருபினையும் இவ்வாறே யொட்டிக்கொள்க.

இங்ஙனங்கூறவே எல்லாப்பொருளையும் இதனினிற்றிது என விகற்பித்துணர்தற்கு வருவன இவ்வுருபு என்பதாயிற்று.

ஆகவே நான்காம்வேற்றுமைப் பொருளாகிய கொள்வோனையும் கொடைப்பொருளினையும் இவ்வாறு விகற்பித்துணர்தலல்லது கொடுத்தல் கூடாமையின், இஃது ஐந்தாம்வேற்றுமை யெனப்பட்டது.

௩௦௦. ஆறனொருமைக் கதுவு மாதுவும்-பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப் - பொன்றன் கூட்டம் பலவி னீட்டந்-திரிபி னாக்க மாந்தற் கிழமையும்-பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. ௭

‡ இந்நீக்கப்பொருள் நிலைத்திணைமுதலிய வாகுமென்பதனை 'நிலைத்திணை யியங்கு திணைபண்பாதியி னீக்கம் வருமென நிகழ்த்தினர் புலவர்.' எனக்கூறியதானுமறிக. —இலக்கணக்கொத்து, வேற்றுமையியல், ௬, உ௬.

† திருக்குறள், செ. ௯௫௨.

†† ௸ செ. ௩௫௩.

ஒ-ரு: ஆறும்வேற்றுமையது இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. ஆறன் - ஆறும்வேற்றுமையினது, ஒருமைக்கு - வருமொழியின் ஒருமைப்பொருண்மைக்கு, அது உம் ஆது உம்-முன் சொல்லப்பட்ட அதுவேயன்றி ஆதுவும், பன்மைக்கு - வருமொழியின் பன்மைப் பொருண்மைக்கு, அ உம் - அகரமும், உருபு ஆம்- உருபுகளாகும், பொருள் - அவற்றின்பொருள்களாவன, பண்பு - குணமும், உறுப்பு-அவயவமும், ஒன்றன்கூட்டம்-ஒருபொருட்கூட்டமும், பலவின் ஈட்டம்- பலபொருட்கூட்டமும், திரிபின் ஆக்கம்- ஒன்றுதிரிந் தொன்றாதலும், ஆம் தற்கிழமை உம் - ஆகியவைந்து தற்கிழமைப் பொருள்களையும், பிறிதின் கிழமை உம் - அவையல்லாத பிறிதின்கிழமைப் பொருள்களையும், பேணுதல் - உடையனவாக அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இவ்விருவகைச் சம்பந்தப் பொருள்களுமாகும். எ-று.

போ-ரை. ஆறும் வேற்றுமையினது ஒருமைப் பொருண்மைக்கு மேற்கூறிய அது என்பதேயன்றி ஆது என்பதும், பன்மைப்பொருண்மைக்கு அகரமும் உருபாம். அவற்றின் பொருளாவன குணமுந் தொழிலுமாகிய பண்புஞ் சினையும் ஒருபொருட் கூட்டமும், பலபொருட்கூட்டமும், ஒன்று திரிந்தொன்றானதுமாகிய ஐந்துதற்கிழமைப் பொருளினையும், பிறிதின்கிழமைப் பொருளினையும் உடையதாகத் தம்மையேற்ற பெயர்ப் பொருளை வேற்றுமை செய்தலாம். எ-று.

வி-பு. கிழமை என்பது ஆகுபெயர். (உரிமை) உரிமை உடைமை

[வ-று.] நிலத்ததகலம், சாத்தனதியல்பு, சாத்தனது நன்மை, சாத்தனதிருக்கை, சாத்தனதுநிலை, சாத்தனது வாவு, கபிலாதுபாட்டு (எ-ம்); சாத்தனது கை, சாத்தனது கால் (எ-ம்); மாந்தாதுதோகை, நெல்லது குப்பை (எ-ம்); படையதுதொகை, விலங்கினதீட்டம் (எ-ம்); நெல்லினதுபொறி, கோட்டதுநூறு (எ-ம்):—ஐவகைத்தற்கிழமையும் முறையே வந்தன.

ஒன்றன்கூட்டத் தற்கிழமை மாறி துப்பையது நெல் எனவரின் உறுப்புத்தற்கிழமை. பலவினீட்டம் மாறி நிற்பினும் அது.

சாத்தனதாடை, சாத்தனது பிள்ளை - எனபிறிதின்கிழமைவந்தன. -பட்டு என்பது வரிவடிவை நோக்கியகாலத்துப் பிறிதின்கிழமையாம்.

எனதுகை, தனதுதாள், எனதுநிலம், தனதேயில்:—என ஆது உருபோடும்; எனகைகள், தனதாள்கள், எனவாளிகள், தனதானைகள்:—என அகர உருபோடும் ஒட்டுக.

சாத்தனதாடை என்புழி சாத்தனதுகை என்றாற்போலாது ஆடைக்குச் சாத்தன் பிறிதாதலின் அப்பிறிதினதுகிழமை பிறிதின்கிழமை எனப்பட்டது.

அஃறிணை ஒருமைபன்மைகட்கு இயைந்த உருபு இங்ஙனங்கூறவே உயர்திணை ஒருமை பன்மையாகிய கிழமைப்பொருட்கு இவ்வுருபுகள் ஏலா என்பது பெற்றாம். அவைவருங்கால், அவனுடையவிறலி, அவனுடைய விறலியர்:—என மூன்றுசொல்லாய் இரண்டு சந்தியாய் முன்னது எழுவாய்ச்சந்தியும் பின்னது பெயரெச்சக்குறிப்புச்சந்தியுமா மென்க.

அவன்விறலி என்புழி உடைய என்பது இசையெச்சம்.

சாத்தனுடைய வியல்பு, சாத்தனுடையகை : — என்றற்றொடக்கத்தனவும் அன்ன.—இவற்றை ஆறாம்வேற்றுமைச்சந்தி என்றும், உடைய என்பதனைச் சொல்லுருபு என்றும் கூறுவாருமுளர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் உயர்திணை ஒருமை பன்மைகட்கு இவ்வுருபுகள் ஏலாவென்பதுகருதி,—*"அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயி-னதுவெனுருபுகெடக் குகரம்வருமே." என்றார்.

இவ்வாறாம்வேற்றுமைப் பொருளாகிய ‡துறைப்பொருள்-ஒற்றுமை, வேற்றுமையென உரைக்கப்படு மெனவும் ; அவற்றுள் ஒற்றுமையாவது ஓர்பொருளே யாகுமெனவும்; வேற்றுமையாவது - ஒன்றாய்த்தோன்றல், உரிமையாய்த்தோன்றல், வேறாய்த்தோன்றல் :—என மூவகைப்படுமெனவும்; அம்மூவகையுள் ஒன்றாய்த்தோன்றல் - ஒன்றன்கூட்டம், பலவினீட்டம்,திரிபினாக்கம், சினை, குணம்,தொழில் :-என அறுவகைப்படுமெனவும்; உரிமையாய்த்தோன்றல்-பொருள், இடம், காலம், இருவகைநால்:-என ஐவகைப்படுமெனவும் ; வேறாய்த்தோன்றல்-வேறிடத்துஞ்செல்லும் நிலைமையிலுடைமைகள் பலவுமாமெனவுங் கொள்ளப்படும்.

---

* தொல்காப்பியம், சொல். வேற்றுமைமயங்கியல், சூ. கக.

‡ இதனை "ஒற்றுமை வேற்றுமை யுரைக்கப்படுங்குறை, யொற்றுமையாவதோர்பொருளேயாகு,மொன்றாய்த்தோன்றலுரிமையாய்த்தோன்றல், வேறாய்த்தோன்றலென வேற்றுமையா, மொன்றன்கூட்டம் பலவினீட்டந்,திரிபினாக்கஞ்சினை குணந் தொழிலென,வோரறுவகைத்தாமொன்றாய்த் தோன்றல் பொருளிடங்கால மிருவகைநூலென, வுரிமையாய்த் தோன்றலுரைக்கப் படுமே, வேறாய்த்தோன்றல் வேறிடத்துஞ்செலு, நிலைமையிலுடைமைகள் பலவுமாகும்." (எ-ம்); "குறையை யின்னுங் கூறிற்பெருகும்." (எ-ம்) ; கூறியதனுனுமறிக. — இலக்கணக்கொத்து, வேற்றுமையியல், சூ.உஅ, உகூ.

[உ-ம்.] என்னுயிர், இராதந்தலை,-என்றாற்போல்வன, வேற்றுமை.

வேற்றுமை வகையுள் ஒன்றாய்த்தோன்றலுக் குதாரணம் முன்னர் ஐவகைத் தற்கிழமைக்குக் காட்டியனவேயாம்.

உரிமையாய்த் தோன்றலுக் குதாரணம்:—முருகனதுவேல்-குறிஞ்சி, வெள்ளியதாட்சி, சம்பந்தனதுதமிழ், சம்பந்தனது பிள்ளைத்தமிழ்:—எனமுறையேகாண்க.

வேறாய்த்தோன்றலுக் குதாரணம்:—சாத்தனதுபசு, சாத்தனது சோறு, சாத்தனதுபொன் எனவரும்.

இவை முன்னொருவர்க் குரிமையாயும், பின் வேறொருவர்க் குரிமையாயும் வருதலின் நிலையில் உடைமையாயின.

இம்மூவகை வேற்றுமையை வடநூலார் நூற்றொரு பேதமாக்குவர். மேற்போந்த கொள்வோனையுங் கொடைப்பொருளினையும் இதனி னிற்றிது என விகற்பித்து உணர்ந்து கொடுத்தல் இவ்விரு கிழமைப்பொருளுடையோர் செயல் என்பதுதோன்ற இஃது ஆறும்வேற்றுமையெனப்பட்டது. "ஆறனுருபே யதுவாதவ்வும் - வேறொன் றுடையதைத் தனக்குரியதை யென - விருபாற்கிழமையின் மருவுறவருமே."—என்றார் ஆசிரியர் அகத்தியனாரும் என்க.

௩௦௧. ஏழ னுருபுகண் ணாதி யாகும்-பொருண்முதலாறு மோரிரு கிழமையி - னிடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

இது ஏழாம்வேற்றுமையது இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. ஏழன் - ஏழாம்வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளானவை, கண் ஆதி ஆகும் - முன்சொல்லப்பட்டகண்ணையன்றி அறுமுதலாகிய பிறவுமாம், இதன்-இவ்வுருபுகளுடைய, பொருள்-பொருளாவது, பொருள் முதல்-பொருளாதியாகிய, ஆறும்-ஆறும், ஓரிரு கிழமையின் - ஆறும்வேற்றுமைச் சூத்திரத்திலே சொல்லப்பட்ட இருகிழமைப்பொருள்களுக்கும்,இடன் ஆய் நிற்றல்-இடமாய் நிற்கிற உருபேற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட அவ்விடப்பொருளாம், என்ப - என்றுசொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. ஏழாம்வேற்றுமையின் உருபு மேற்கூறிய கண்ணையன்றி அஃதாதியாய் பிறவுமாம்; இவற்றின் பொருளாவன தம்மையேற்றபெயர்ப் பொருளாகிய பொருளாதியாறும் மேற்போந்த இருகிழமைப் பொருட்கும் இடமாகி நிற்க அவற்றினை வேற்றுமைசெய்தலாம் என்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. இடப்பொருளேயன்றி ஏனையைந்து பொருளும் ஈண்டு இடனாய் நிற்றலின் **பொருண்முதலாறும்** என்றும், வினைவரினும் அவ்வினை முதல் இவ்விருகிழமையின்பாற்படுமாதலின் **கிழமையின்** என்றுங்கூறினர். ஈண்டு இது என்றது உடந் தொகுதியொருமை.

[வ-று.] மணியின்கண்ணொளி, மணியின்கண்ணிருந்தவொளி (எ-ம்); பனையின்கணன்றில், பனையின்கணிருந்தவன்றில் (எ-ம்):—இருகிழமைக்கும் பொருளிடமாயிற்று.

ஊரின்கணில்லம், ஊரின்கணிருந்தவில்லம் (எ-ம்); ஆகாயத்தின்கட் பருந்து, ஆகாயத்தின்கட் பறந்தது பருந்து (எ-ம்); இடமிடமாயிற்று.
நாளின்கணாழிகை, நாளின்கண் வந்ததுநாழிகை (எ-ம்); வேனிற்கட்பாதிரி, வேனிற்கட்பூத்தது பாதிரி (எ-ம்):—காலமிடமாயிற்று.

கையின்கண்விரல், கையின்கணிருந்ததுவிரல் (எ-ம்); கையின்கட் கடகம், கையின்கட் கிடந்தது கடகம் (எ-ம்):—சினை இடமாயிற்று.

கரும்பின்கணழகு, கரும்பின்கணிருந்தவழகு (எ-ம்); இளமையின்கட்செல்வம், இளமையின்கணிருந்ததுசெல்வம் (எ-ம்):—குணமிடமாயிற்று.

ஆடற்கட்சதி, ஆடற்கணிகழ்ந்ததுசதி (எ-ம்); ஆடற்கட்பாட்டு, ஆடற்கட்பாடப்பட்டது பாட்டு (எ-ம்):—தொழிலிடமாயிற்று.

ஆதி என்றமையான் வருமுருபுகள் வரும்சூத்திரத்தாற் கூறுபவாகலின் அவை அங்ஙனங்காட்டுதும். இது பெயர்ப்பொருளை மேற்போந்த இருகிழமைப் பொருள்கட்கும் இடமாக வேற்றுமைசெய்தலின் ஏழாம் வேற்றுமை யெனப்பட்டது. இவ்விடவேற்றுமைப்பொருள்,-உரிமை, இருவகை, ஓரிடம், எங்கும் என நான்கென்றே சிலரியம்புவர்.

அவற்றிற்கு உதாரணம்:-நிலத்தின்கட் டேரோடுகின்றது, கடற்கணாவா யோடுகின்றது, ஆகாயத்தின்கட் பருந்துபறந்தது, காட்டின்கட் புலி வாழ்ந்தது (எ-ம்); மதிக்கண்மறு, கையின்கண்விரல், குன்றின்கட் குவடு, நெற்றியின்கண்விழி, ஆண்டின்கணிருது, நாளின்கண் வைகறை, (எ-ம்); ஊர்க்கணிருந்தான், தேர்க்கணிருந்தான் (எ-ம்); மணியின்கணொளி, உயிரின்கணுணர்வு, பாலின்கட்சுவை,-நெய், தீயின்கட்சூடு, நீரின்கட்சீதம் (எ-ம்) முறையேகாண்க.—இவையெல்லாம் முற்கூறியவற்றுளடங்கும்.

இனி இடமல்லாவிடம் மூவகைப்படும், கூட்டிப்பிரித்தல், பிரித்துக்கூட்டல், இருவரின்முடியும் ஒருவினைத்தொழிற்பெயர் என. அவை

யாவன, — †“உடையா னரசரு ளேறு.”—“அவற்றுள், அ இ உ எ ஒக் குறில்”(எ-ம்); ††“வானுறையுந் தெய்வத்துள்வைக்கப்படும்.”-†††“மற் றையான் செத்தாருள் வைக்கப்படும்”(எ-ம்); ††††“புல்லி விடாஅப் புலவி யிற் றோன்றும்.”—தட்டுப்புடைக்கண்வந்தான், புல்லுதற்கண்வேர்வை வந்தது, பொருதற்கண் மழைபெய்தது, சூதாடற்கண் தூக்கம் வந்தது (எ-ம்) முறையே காண்க.

௩௦௨. கிளைநால் கடையிடை.தலைவாய் திசைவயின் - முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்- பின்பா டளைதே முழைவழி யுழியுளி - யுளீளகம் புறமில் லிடப்பொரு ளுருபே.

இது மேல் கண்ணாதி என்றார் அவை இவையென்பது உணர்த்து கின்றது.

ப-ரை. கண் இல் - கண்முதலாக இல்லீறாகச்சொல்லப்பட்ட இவ்விருபத்தெட்டும்,இடம் பொருள் உருபு-தம்மையேற்ற பெயர்ப் பொருளை இடப்பொருளாக வேற்றுமைசெய்கின்ற உருபுகளாம்.

போ-ரை. இங்ஙனம் கண்முதலாக இல்லீறாக எண்ணப்பட்ட இருபத் தெட்டும் இடப்பொருளாக வேற்றுமைசெய்யும் உருபுகளாம். எ-று.

வி-பு. தொடர்புதோன்ற கணுருபை ஈண்டும் அநுவதித்தார்.

[வ-ரு.] ‡ ஊர்க்கால் நிவந்த பொதும்பருள், ‡‡ வேலின் கடைமணி போற் றிண்ணியான், நல்லாரிடைப்புக்கு, இடை - வலைத்தலைநோக்கியர், ‡‡‡ குரைகடல்.வாயமுதென்கோ, வாய் - தேர்த்திசையிருந்தான், அவர் வயிற்சென்றான், வயின்-‡‡‡‡கற்றார்முற்றோன்றாகழிவிரக்கம், முன்-காட் டுச்சாரோடுங் குறுமுயால், சார்-“காழ்வரை நில்லாக் களிறன்னான் கைவ லத்தீ-யாழ்வரை நின்றது,” வலம் - இல்லிடப்பரத்தை,இடம்-தன்மேற்கடு வரை நீரிற் கடுத்துவரக் கண்டும், மேல்-§“பிண்டிக்கண்ணார் நிழற்கீழெழுந்த படிகள்”, கீழ் - கடைப்புடை கொள்ளிய நீர், “சுரன்முதல்வந்த உரன் மாய்மாலை.” காதலிபின் சென்றதம்ம, நம்பாடணையாதநாள், பாடு - கல்லலைச் சுனைநீர் கையிலுண்மையான், அளை - தோழிக்குரியவை கோ டாய்நேர்ந்து, தேம்-அவனுழைவந்தான், உழை - நின்றதோர் நறவேங்கை நிழல்வழி யசைந்தன்ன, உறையுழி யோலைபோல், உழி-குயில்சேர் குளிர்

† திருக்குறள், செ. ௩அ. †† திருக்குறள், செ. ௫௦.
††† ௸ செ. உகச. †††† ௸ செ. கா௩உச.
‡ குறிஞ்சிக்கலி, செ. ௨௦.. ‡‡ திரிகடுகம், செ. ௩௩
‡‡‡ திருவாசகம்,உயிருண்ணிப்பத்து,செ.அ. § காரிகை, செ. க.
‡‡‡‡ நான்மணிக்கடிகை, செ. அ.

காவுவி சேர்புறையும், உவி - முல்லையங் குவட்டுள்வாழும், உள் - † "பயன் சாராப் பண்பில்சொற்பல்லாகத்து," அகம்-"செல்லுமென்னுயிர்ப்புறத் திறுத்த மருண்மாலை," புறம் - ஊரிலிருந்தார், இல்:—என இவை பல திறத்தனபோலுமேனும் அவையாகாது ஒரு திறத்தனவாய்க் கண் உருபின் பரியாய உருபாய் வருதல் காண்க.

இனி கண் கால் முதலியன இடவிகற்பங்களை உணர்த்தின் ஒருதிறத்த வாகிய உருபாகாது பலதிறத்தவாகிய இடங்களை உணர்த்தும் பெயராகி, கவினைகன்ஞாலம், கடைநாள், இடைச்சுரம் தலையாயார், தென்றிசை :— என்றற்றொடக்கத்தனவாய் வருதல்காண்க.

மணியின்கண்ணொளி என்புழி கண் என்பது பெயராயின் மணி யின திடத்தொளி என்பது பொருளாய் மூன்றுசொல்லாய் இரண்டுசேர்ந் தியாமென்க. ஏனையவும் அன்ன.

இனிப் பெயர்முதலாகக்கூறிய ஏழுருபுகளும் தமக்குரிய பொருளல் லனவற்றையும் உணர்த்துமெனக்கொள்வர். அவையாவன,—

மாடஞ் செய்யப்பட்டது என்புழி வினைமுதலன்றி செயப்படுபொ ருளும் உணர்த்திற்று.

வீட்டை விரும்பினான் என்புழி செயப்படு பொருளையன்றி வேறு பொருளை விள்க்கிற்று.

மலையோடு பொருதமால் யானை, ††தோடியோடுதோல்கவின்வா டியதோள், ††† பாலொடுதேன்கலந்தற்றே, மதியோடொக்குமுகம், †††† விலங்கொடு மக்களனையர், எழுத்தொடுபுணர்ந்தசொல்,-என்புழி கருவிகருத்தாவுட னிகழ்வதன்றி, வினையின்மை, வேறுவினைமயக்கம், ஒப்பு, ஒப்பல்லொப்பு, ஒற்றுமை, என பலபொருளும் உணர்த்தின.

சோற்றிற்கரிசி, கூழிற்குத் குற்றேவல், பூவிற்குப்போனான், உண ற்குவந்தான், பிணிக்குமருந்து, உணற்குக்கருவிகை :—என்புழி கொள் வோனைவிட்டு ஆதிகாரணகாரியம், நிமித்தகாரணகாரியம், இருவகைப் பெயர்ப்பின் வினையெச்சம், இருவகைப்பெயர்ப்பின் பெயரெச்சம்,- என பலபொருளும் உணர்த்தின.

‡‡பித்தரிற்பேதையாரில், வேங்கடத்தின் றெந்த, தமிழின் வடக்கு வாணிகத்தினுயினான், காக்கையிற்கரிது களம்பழம், - என்புழி ஒப்பு, எல்லை, ஏது, ஒப்பின்மை என பலபொருளும் உணர்த்தின.

வாளறுவெட்டு என்புழி குறையையன்றி வேறுபொருளும் உணர்த் திற்று.

---

† திருக்குறள், செ. ககூச.
†† ௸ செ. கஉ௲௫.
‡‡ நாலடியார், செ. ௫௨.
‡ திரிகடுகம், செ. க.
††† திருக்குறள், செ. ௧௧௨௧.
†††† ௸ செ. ௪௧௦.

அறிவிற்கட்டிரிவு என்புழி இடமேயன்றி வேறுபொருளும் உணர்த்
திற்று எனக்கூறுவர். அவையெல்லாம் இவ்வாசிரியர் கூறியவற்றுள் சில
வருமாறும், வினையவற்றை இலக்கியங்களுள்ளும் காண்க.

௩௦௩. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின் - றிரிபு குன்றன் மிகுத
லியல்பயற் - றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்-தன்முக மாகத்
தானழைப் பதுவே.

இது எட்டாம்வேற்றுமையது இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. எட்டன் - எட்டாம் வேற்றுமையினுடைய, உருபு -
உருபுகளானவை, எய்து பெயர் ஈற்றின் - விளியடைந்த பெயரீற்றி
னுடைய, திரிபு - திரிதலும், குன்றல் கெடுதலும், மிகுதல்-மிகுத
லும்,இயல்பு-இயல்பாதலும்,அயல் திரிபு உம்-ஈற்று அயலெழுத்துத்
திரிதலும், ஆம்-ஆகும், பொருள்-அவற்றின்பொருளாவது, படர்க்
கையோரை-படர்க்கைப்பெயர்ப்பொருளை, தன் முகம் ஆக- தனக்
கெதிர்முகமாக, அழைப்பது - அழைப்பதாலாகிய விளிக்கப்படு
பொருளாம். எ-று.

பொ-ரை. எட்டாம்வேற்றுமையாகிய விளிக்குவேற்றுருபின்று; அவ்
விளியடைந்த பெயரீற்றின் திரிபும் கேடும் மிகுதலும் இயல்பும் ஈற்றயல்
நின்றதன் திரிபுமே உருபாம்: இவற்றின் பொருளாவன இவற்றினையேற்ற
படர்க்கைப் பெயர்ப்பொருளை ஒருவன் தனக்கெதிர்முகமாக அழைக்கப்
படுவதாக வேற்றுமைசெய்தலாம். எ-று.

வி-பு. எய்துபெயரீற்றின், என்றமையான், வேற்றுருபின்றென்பது
ஒசையெச்சமாய் நின்றது. இயல்பு என்றமையான், இவ்வியல்பாய் விளி
யுருபிற்கும், எழுவாயுருபிற்கும் சொல்லான் வேற்றுமை இன்றேனும் பொரு
ளான் வேற்றுமை உண்டென்பதூஉம்; படர்க்கையோரை என்வே, ஒரு
மொழியொழிதன் னினங்கொளற்குரித்து ஆகலின் படர்க்கையும்பாலும்
விளி ஏற்குமென்பதூஉம்; வினைத்தன்மை முன்னிலைகள் ஏலாவென்ப
தூஉம் பெற்றாம். தான் என்பது அசைநிலை.

ஈறுதிரிதல் முதலிய ஐவகை உருபும் பொருளும் பின்வருஞ் சிறப்புச்
சூத்திரங்களானு முணர்க. இஃதெழுவாயினின்றும் ஒருவாற்றான் வேறு
பட்டமையின் இறுதிக்கண் தந்து எட்டாம்வேற்றுமை எனப்பட்டது.

௩௦௪. இஉ ஊவோ டையோ னளரல - யவ்வீற் றுயர்திணை யோ
ரவல் லிவற்றொடு - ணஃகா னுவீ றதும் பொதுப்பெயர் - ருநவொழி
யனைத்தீற் றஃறிணை விளிப்பன.

இது பெயருள்விளிக்கப்படுவன இவையென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. இ, உ, ஊ ஒடு ஐ ஓ ன ள ர ல ய,- இகரமும் உகரமும்
ஊகாரமும், ஐகாரமும் ஓகாரமும் என்கிற, உயிர்களும், ன ள ர
ல ய் என்கிறமெய்களும் ஆகிய பத்தெழுத்துகளையும்,ஈற்று-இறுதியி

னுடைய, உயர்திணை (பெயர்)-உயர்திணைப்பெயர்களும், ஓ ர அல்-ஓகாரஉயிரும் ரகரமெய்யுமொழிந்த - இவற்றொடு - இவ்வெழுத்து களுடனே, ண கான் ஆ - ணகரமும் ஆவும் ஆகிய பத்தெழுத்துக ளும், ஈறு ஆகும் - இறுதியாகிய, பொது பெயர் - பொதுப்பெயர்க ளும், ஞ ந ஒழி - ஞகர நகரங்களும் (ஈறாகாத எகரமும்) ஒழிந்த, அனைத்து - இருபத்தொரு எழுத்துகளையும், ஈற்று - ஈற்றினுடைய, அஃறிணை (பெயர்) அஃறிணைப்பெயர்களும், விளிப்பன - அழைக் கப்படுவன. எ-று.

போ-ரை. இ உ ஊ ஐ ஓ ன ள் ர ல ய என்னும் பத்தீற்று உயர் திணைப்பெயரும், இவற்றுள் ஓகாரமும் ரகாரமுமான இரண்டுமொழித்து நின்ற எட்டுடனே ணகாரமும் ஆகாரமுமான இரண்டுங்கூடிய பத்து ஈற் றுப் பொதுப்பெயரும், நாலாறும் ஈறே என்றவற்றுள் ஞகரமும் நகரமும், இன்னோரன்ன இடங்களின் ஈறாகாதென மேலே அதிகாரத்து விலக்கிய எகரமும் ஒழிந்த இருபத்தோரீற்று அஃறிணைப்பெயரும் விளிக்கப்படு வனவாம். எ-று.

வி-பு. இ உ ஊ வோடு என்புழி குற்றுகரம் முற்றுகரமென உகரத் தை விதவாமையின் இரண்டுங்கொள்க. பெயர் என்பதனை இருதிணைக் கண்ணுங் கூட்டுக. விளிப்பன என்பது வினைமுதல்வினையைச் செயப் படுபொருண்மே லேற்றப்பட்டது. இவ்வீற்றுப்பெயர்கள் விளிக்கப்படு மெனவே ஏனையீற்றுப்பெயர்கள் விளிக்கப்படாவென்பது பெற்றாம்.

௩௦௫. இம்முப் பெயர்க்க ணியல்பு மேயு-மிகா நீட்சியு முருபா மன்னே.

இது மூவகைப் பெயர்க்கும் பொதுவாகிய விளியுருபு தொகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. இ முப்பெயர்க்கண் - முன் விளிக்கப்படுமென்ற மூவ கைப்பெயர்களிடத்தும், இயல்பு உம்-இயல்பாதலும், ஏ உம்-ஏகார மிகுதலும், இகரம் நீட்சி உம் - இகரம் ஈகாரமாதலும், உருபு ஆம் மன் - பெரும்பாலும் விளியுருபுகளாகும். எ-று.

போ-ரை. மேல் விளிக்கப்படுமென்ற மூவகைப் பெயர்க்கண்ணும் இயல்பாதலும் ஏகாரமிகுதலும், இகர ஈறு ஈகார ஈறாய்த் திரிதலும் விளி யுருபாம் பெரும்பாலும். எ-று.

[வ-று.] முனிகூறாய், வேந்துகூறாய், ஆடூஉக்கூறாய், விடலைகூறாய், கோக்கூறாய், வேள்கூறாய், மாந்தர்கூறீர், தோன்றல்கூறாய், சேய்கூறாய், முனியே, வேந்தே, நம்பீ - என உயர்திணைக்கண் மூன்றுருபும் வந்தன.

பிதாக்கூறாய், ஆனைகூறாய், பிதாவே, ஆனே, சாத்தீ: — எனப் பொதுப்பெயர்க்கண் மூன்றுருபும் வந்தன.

விளக்கோடியாய், புறக்கோடியாய், புல்வாய்கோடியாய், விளவே, புறவே, புல்வாயே, மந்தீ :—என அஃறிணைக்கண் மூன்றுருபும்வந்தன.

மன்னே என்றமையான் இவ்வுருபுகள் சிலவற்றிற் கேலாமையும் இப் பொதுவிதியினும் மேல்வருஞ் சிறப்புவிதியினும் அடங்காதவரும் உருபுகள் சிலவுளவேல் அவையுங்கொள்க.

௩௦௬. ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவு-முருபா மல்லவற் றயு மாகும்.

இது ஐகாரவீற்றிற்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. ஐ இறு பொதுப்பெயர்க்கு - பொதுவிதியால் இயல்பும் ஏகார மிகுதலுமன்றி ஐகார ஈற்றுப் பொதுப்பெயர்க்கு, ஆய் உம் ஆ உம் - ஐகாரம் ஆயாதலும் ஆவாதலும், அல் அவற்று-உயர்திணை அஃறிணைப்பெயர்களுக்கு, ஆய் உம்-அவ்விரண்டுமல்லாமல்ஐகாரம் ஆயாதலும், உருபு ஆகும் - விளியுருபுகளாகும். எ-று.

பொ-ரை. ஐகாரவீற்றுப் பொதுப்பெயர்க்கு இயல்பும் ஏகார மிகுதலுமன்றி ஐகாரம் ஆயும் ஆவுமாய்த்திரிதலும், உயர்திணை அஃறிணைப்பெயர்க்கு அவ்வுருபுகளன்றி ஐகாரம் ஆ எனத்திரிதலும் உருபாம். எ-று.

[வ-று.] அன்னாய், தந்தாய் (எ-ம்); "ஆவன்னவலந்தே னெழுந்திராய்." அன்னா (எ-ம்):—விரவுப்பெயர்க்கண் இரண்டுருபும் வந்தன. ‡

விடலாய், மடந்தாய் (எ-ம்); "சிறுமீன் கவுட்கொண்ட-செந்நாவி நாராய்." "கொன்றாய் குறுந்தே கொடி முல்லாய்." (எ-ம்) :—இருதிணைப் பெயர்க்கண்ணும் ஆய் உருபு வந்தது.

௩௦௭. ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண் - ணளபீ றழிவய விட்கீயதனே - டிறுபோத லவிற்றே டோவுற - லீறழிந் தோவுற லிறுதி யவ்வாத - லதனே டயறிரீந் தேயுற லீறழிந் - தயலே யாதலும் விளியுரு பாதும்.

இது னகரவீற்று உயர்திணைப்பெயர்க்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ரை. ன ஈறு உயர்திணை பெயர்க்கண் - பொதுவிதியன்றி னகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள், ஒரு சார் அளபு - சில

‡ ஐகாரஈற்றுப் பொதுப்பெயர் ஆயுமாவுமாகத் திரிவதன்றி 'அன்னே யுன்னையல்லால்' என ஏகாரமாகத் திரிதலும் உடன்கியனபுகுதலாற் கொள்க.

அளபெடுத்தலும், (ஒருசார்) ஈறு அழிவு-சில ஈறு கெடுதலும், (ஒரு சார்) அயல் நீட்சி - சில ஈற்றய னீளுதலும், (ஒருசார்) அதனோடு ஈறு போதல்-சில ஈற்றயல் நீண்டு ஈறு கெடுதலும், (ஒருசார்) அவற்றோடு ஓ உறல் - சில ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரம் மிகுதலும், (ஒருசார்) ஈறு அழிந்து ஓ உறல்-சில ஈறுகெட்டு ஓகாரமிகுதலும், (ஒருசார்) இறுதி ய ஆதல்-சில இறுதி னகரமெய் யகரமெய்யாதலும், (ஒருசார்) அதனோடு அயல் திரிந்து ஏ உறல் - சில ஈற்று னகரமெய் யகரமெய்யாய்த்திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகார மிகுதலும், (ஒருசார்) ஈறு அழிந்து அயல் ஏ ஆதலும் - சில ஈறு கெட்டு அயலில் அகரம் ஏகாரம் ஆதலும், விளி உருபு ஆகும் - விளியுருபுகளாகும். எ-று.

பொ-ள். பொதுவிதியன்றி னகரவீற்று உயர்திணைப்பெயர்களுள் சில அளபெழுதலும், சில ஈறு கெடுதலும், சில ஈற்றயல் நீளுதலும், சில ஈற்றயல் நீண்டு ஈறுகெடுதலும், சில ஈற்றயல் நீண்டு ஈறுகெட்டு ஓகாரம் மிகுதலும், சில ஈறுகெட்டு ஓகாரம் மிகுதலும், சில இறுதி னகரவொற்று யகரவொற்றாய்த்திரிதலும், சில இறுதி னகரவொற்று யகரவொற்றாய்த் திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரமிகுதலும், சில ஈறுகெட்டு அயலில் அகரம் ஏகாரமாதலும் விளியுருபாம். எ-று.

வி-பு. ஒருசார் என்பதனை விளியதிகாரம் அனைத்தினுங் கூட்டுக.

[வ-று] அம்பர்கிழாஅன், வல்லங்கிழாஅன்:—என அளபாயின.

எலுவசிறு அரோம்பூறுநண்ப,-புலவ, - தோழ (நண்பன், புலவன், தோழன்):—என ஈறழிந்தன.

நம்பான் (நம்பன்), பெருமான் (பெருமன்):—என ஈற்றயல் நீண்டன.

இறைவா (இறைவன்), மன்னா (மன்னன்) :—என அயல் நீண்டு ஈறு கெட்டன.

ஐயாவோ (ஐயன்), அப்பாவோ (அப்பன்): —என ஈறுகெட்டு அயல்நீண்டு ஓகார மிக்கன.

கிளையவோ (கிளையன்), ஐயவோ (ஐயன்):—என ஈறழிந்து ஓகாரமிக்கன.

வாயிலாய் (வாயிலான்), ஆதிரையாய் (ஆதிரையான்) :-என இறுதி யவ்வாயின.

வாயிலோயே (வாயிலான்) - என இறுதி யவ்வொற்றாய் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரமிக்கது.

"ஐயேயெமக் கருண்மடவை" (ஐயன்) — "மன்றவாழியமுருகே" (முருகன்):-எனஈறழிந்து அயலில் அகரம் ஏகாரமாயின.

௩௦அ. **ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவய - னீட்சி யிறுதி யவ் வொற்றுத - லயலி லகரமே யாதலும் விளித்தனு.**

இது ளகர வீற்று உயர்திணைப்பெயர்க்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ப-ரை. ளகான் உயர் பெயர்க்கு-பொதுவிதியன்றிளகரமெய் யீற்று உயர்திணைப்பெயர்களுள், (ஒருசார்) அளபு-சில அளபெடுத் தலும், (ஒருசார்) ஈறு அழிவு - சில ஈறுகெடுதலும், (ஒருசார்) அயல் நீட்சி - சில ஈற்றயல் நீளுதலும், (ஒருசார்) இறுதி ய ஒற்று ஆதல் - சில இறுதி ளவ்வொற்று யவ்வொற்றாதலும், (ஒருசார்) அயலில் அகரம் ஏ ஆதல் உம்-சிலஈற்றயல் அகரம் ஏகாரமாதலும், விளி தனு - விளி உருபுகளாகும். எ-று.

பொ-ரை. ளகரவீற்று உயர்திணைப்பெயர்க்குப் பொதுவிதியன்றி அளபெழலும், ஈறுகெடலும், அயல்நீடலும், இறுதி ளகரவொற்று யகர வொற்றாதலும், ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும் விளி உருபாம். எ-று.

[வ-று.] "மேவார்த்தொலைத்த விறன்மிகு வேஎள்." - என அளபா யிற்று.

"துனிகொள்ள லெல்லாநீ" (எல்லாள்) - என ஈறுகெட்டது.

நமர்காள் (நமர்கள்), எமர்காள் (எமர்கள்):—என ஈற்றயல் நீண்டன.

குழையாய் (குழையாள்), வாயிலாய் (வாயிலாள்):—என இறுதி ளகரவொற்று யகரவொற்றாயின.

"தலைநீதுகொள்வமடிகேள்"(அடிகள்)-என ஈற்றயல் அகரம் ஏகார மாயின.

எல்லா என்பது தோழிமுன்னிலைப் பெயரன்றோ விளியேலாதென விலக்கப்பட்ட அம்முன்னிலைப்பெயரை ஈண்டுக்காட்டியது என்னையெ னின், ‡ "முன்னிலை யெல்லீர் நீயிர் நீவிர் நீ யல்லன படர்க்கை" - என

‡ இனி "ஒருசார்னவ் வீற்று" என்னும் இலக்கணவிளக்கச் சூத்திரத்துக்கு சிவஞான முனிவரும், "ஏடா வென்பதுதோழன் முன்னிலைப் பெயராயே நிற்பதொன்றாயின் ஆண்மைபேற்றற்கு இடமாகாமையின் வேற்றுமைக் கிடனுமெனச் சிறந்தெடுத்தோதிய பெயரிலக்கணம் வழுவாய் முடியுமென்க. தோழன் முன்னிலைப்பெயரொன்றன்மையான், அஃதிடைச் சொல்லன்மையு முணர்க. ஆயின் ஏடா என்பது தோழன் முன்னிலைப் பெயரொன்றாகு தென்னையெனின், வழக்கு மிகுதிபற்றி அவ்வாறுகூறிய தென்க." என்பர்—இலக்கண விளக்கச் சூறாவளி, சூ. ருக.

வரையறுக்கப்பட்டமையின், தோழன் என்னும் பொருட்டாகிய ஏடன் என்னும் படர்க்கைப்பெயர் விளியேற்றலமயின் ஏடா என்பது தோழன் முன்னிலைப்பெயரென்றும், தோழி என்னும் பொருட்டாகிய எல்லாள், ஏடி என்னும் படர்க்கைப்பெயர்கள் விளியேற்றமையின் "எல்லாவு மே டியுந் தோழிமுன்னிலைப்பெயர்" என்றுங் கூறப்பட்டனவன்றி, அவை இயல்பாய்நின்ற முன்னிலைப்பெயரல்ல என்க.

௩௦௧. ரவ்வீற் றுயர்பேயர்க் களபேழ லீற்றய - லகாம் இ ஈ யாத லாண்டையா - வீயாத லதனோ டேயுற லீற்றே - மிக்கயல் யாக் கெட் டதனய னீட-லீற்றி னீருற லிவையுமீண் டுருபே.

இது ரகாரவீற்று உயர்திணைப் பெயர்க்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி உணர்த்துகின்றது.

இ-ள். ர ஈறு உயர் பெயர்க்கு-(பொதுவிதியன்றி) ரகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள், (ஒருசார்) அளபு எழல்-சில அளபெடுத்தலும், (ஒருசார்) ஈற்று அயல் அகரம் இ ஈ ஆதல்-சில ஈற்றயல் அகரமானது இகரமாதலும் ஈகாரமாதலும், (ஒருசார்) ஆண்டை ஆ ஈ ஆதல் - சில அவ்வீற்றயல் ஆகாரம் ஈகாரமாதலும், (ஒருசார்) அதனோடு ஏ உறல் - சில அதனோடு ஏகாரமேற்றலும், (ஒருசார்) ஈற்றே மிக்கு அயல் யா கெட்டு அதன் அயல் நீடல்-சில ஈற்றில் ஏகாரமிக்கு அயலில் யர்கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாதலும், (ஒருசார்) ஈற்றின் ஈர் உறல்-சில ஈற்றில் ஈர் ஆதலும், இவையும்-ஆகிய இவையும், ஈண்டு-இவ்விடத்து, உருபு-விளியுருபுகளாகும். எ-று.

பொ-ரை. பொதுவிதியன்றி ரகாரவீற்று உயர்திணைப் பெயர்க்கு அளபெழலும், ஈற்றயலகரம் இகரமாதலும், ஈகாரமாதலும், அவ்விடத்து ஆகாரம் ஈகாரமாதலும், அதனோடு ஏகாரமேற்றலும், ஈற்றில் ஏகாரமிக்கு அயலில் யா கெட்டு அதனயலில் இகரம் ஈகாரமாதலும், ஈற்றின் ஈர் ஆதலும் விளியுருபாம். எ-று.

[வ-று.] சிறஅர், மகாஅர் :—என அளபாயின.

† "என்னை முன்னில்லன் மின்றெவ்விர்." (தெவ்வர்) என ஈற்றயல் அகரம் இகரமாயிற்று.

வேந்தீர் (வேந்தர்), நாயீகீர் (நாய்கர்) :—என அகரம் ஈகாரமாயின.

---

† திருக்குறள், செ. ௭௭௧.

சான்றீர் (சான்றார்), மடவீர் (மடவார்) :—என ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாயின.

"பல்சான்றீரோ பல்சான்றீரோ" (சான்றார்), கணியீரோ (கணியார்):—என ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரமேற்றன.

நம்பீரோ (நம்பியார்), தம்பீரோ (தம்பியார்), தோழீரோ(தோழியார்), தொழும்பீரோ (தொழும்பியார்):—என ஈற்றில் ஏகாரமிக்கு அயல் யா கெட்டு இகரம் ஈகாரமாயின.

எமரீர் (எமர்), தமரீர் (தமர்) :—என ஈர் ஏற்றன.

ஈண்டு என்ற மிகையானே, கடலாரோ, கடலீரோ, கழியாரோ, கழியீரோ, சாத்தியாரோ, சாத்தியீரோ, கொற்றியாரோ, கொற்றியீரோ :—என அஃறிணைப்பெயர் விரவுப்பெயர்களைச் சிறப்பித்து ரகரவீற்று உயர்திணைப் பெயர்போலக் கூறியவழியும் இவ்வுருபேற்றல்கொள்க.

௱௯௦. லகாரவீற் றுயர்பெயர்க் களபெய வீட்சியும்-யகார வீற்றிற் களபுமா முருபே.

இது லகார யகார ஈற்று உயர்திணைப்பெயர்க்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. லகார ஈறு உயர் பெயர்க்கு-பொதுவிதியன்றி லகர மெய்யீற்று உயர்திணைப்பெயர்க்கு, (ஒருசார்) அளபு-சில அளபெடுத்தலும், (ஒருசார்) அயல் நீட்சியும் - சில ஈறு அயல்நீளுதலும், யகாரம் ஈறு (உயர் பெயர்க்கு)-யகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்க்கு, அளபு உம்-அளபெடுத்தலும், உருபு ஆம்-விளியுருபுகளாகும்.

போ-ரை. பொதுவிதியன்றி லகாரவீற்று உயர்திணைப்பெயர்க்கு அளபெழலும், ஈற்றயல் நீடலும், யகாரவீற்று உயர்திணைப்பெயர்க்கு அளபெழலும் உருபாம். எ-று.

வி-பு. உயர்திணைப்பெயர் என்பதனை யகாரவீற்றின்கண்ணும், உம்மையை அளபு என்பதன்கண்ணும் கூட்டுக.

[வ-று.] "வலம்புரித் தடக்கைமாஅ லின்னிறம்." மால் - என அளபெடுத்தது.

தோன்றால் (தோன்றல்), மடவரால் (மடவரல்), தாழ்குழால் (தாழ் குழல்) :—என ஈற்றயல் நீண்டது;

சேஎய் (சேய்) - என யகரமெய்யீற்று உயர்திணைப்பெயர் அளபெடுத்தது.

௱௯௧. ளவ்வீற் றுயர்திணை யவ்விரு பெயர்க்கண்-ணிறுதி யழிவத னோடயனீட்சி.

இது னகரவீற்று அஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கும் எய்திய தன்மேல் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. ன ஈறு உயர்திணை அல் இருபெயர்க்கண் - பொது விதியன்றி னகரமெய்யீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களிடத்து, (இறுதி) அழிவு - சில ஈறுகெடுதலும், (ஒருசார்) அதனோடு அயல் நீட்சி - சில ஈறு கெடுதலுடனே ஈற்றயல் நீளுதலும் விளி உருபுகளாம். எ-று.

பொ-ரை. பொதுவிதியன்றி னகரஈறு அஃறிணைப் பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் இறுதிகெடுதலும், அதனோடு ஈற்றயல் நீடலும் விளி உருபாம். எ-று.

வி-பு. இறந்தது தழீஇய எச்சவும்மைகளும் விளியுருபாம் என்பதூஉந் தொக்குநின்றன.

[வ-று.] அலவ, இகல, கலுழ (எ-ம்); அலவா, இகலா, கலுழா (எ-ம்); சாத்த, கோற்ற (எ-ம்); சாத்தா, கோற்ற (எ-ம்) வரும்.

௩௪௨. லளவீற் றஃறிணைப் பெயர்ப்பொதுப் பெயர்க்க - ணீற் றய னீட்சியு முருபா கும்மே.

இது லகார ளகார ஈற்று அஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. ல ள ஈறு அஃறிணைப் பெயர் பொதுப்பெயர்க்கண் - லகர ளகர மெய்யீற்று அஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும், ஈறு அயல் நீட்சி உம் - பொதுவிதியன்றி ஈற்றயலெழுத்து நீளுதலும், உருபு ஆகும் - விளி உருபாகும். எ-று.

பொ-ரை. பொதுவிதியன்றி லகார ளகார வீற்று அஃறிணைப்பெயர்க்கண்ணும்விரவுப்பெயர்க்கண்ணும் ஈற்றயல் நீடலும்விளிஉருபாம். எ-று.

[வ-று.] "காட்டுச்சாரோடுங் குறுமுயால்." (முயல்), கிளிகாள் (கிளிகள்) (எ-ம்); தூங்கால் (தூங்கல்), மக்காள் (மக்கள்)(எ-ம்):—வரும்.

௩௪௩. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையி - னளபும் புலம்பி னோவு மாகும்.

இது மேல்விதந்த விளி உருபுகட்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. அண்மை இன் - முன்சொல்லப்பட்ட விளியுருபுகளுள் சமீபவிளிகளுக்கு, இயல்பு ஈறு அழிவுஉம் - இயல்பாதலும் ஈறுகெடுதலும், சேய்மை இன் - தூரவிளிகளுக்கு, அளபு உம் - அளபெடுத்

தலும், புலம்பு இன்-புலம்பல் விளிகளுக்கு, ஓ உம் - ஓகார மிகுதலும், ஆகும்-வரும். எ-று.

போ-ளா. மேற்போந்த விளிஉருபுகளுள், இயல்புகளும் ஈறழிவுகளும் அண்மைவிளிக்கண்ணும், அளபுகள் சேய்மைவிளிக்கண்ணும், ஓகாரங்கள் புலம்பல்விளிக்கண்ணும் வரும்,

வி-பு. எனவே, ஏனை விளி உருபுகள் அண்மை சேய்மை புலம்பு என்னும் மூவிடத்தும் விராய்வரும் என்பது பெற்றாம்.

௩௧௪. நுவ்வோடு வினச்சுட் டுற்ற னளர - வைதுத் தாந்தா னின்ன விளியா.

இது இ உ ஊ வோடு என்னுஞ் சூத்திரத்திற்கு ஆவதோர்புறனடை உணர்த்துகின்றது.

ப-ளா. நு ஒடு - நுவ்வுடனே, வின - மூன்றுமுதல் வினவையும், சுட்டு-மூன்று சுட்டையும், உற்ற-முறையே பொருந்திய, ன ள ர னளர மெய்யீற்று உயர்திணைப்பெயர்களும், வை து-வை து என்கிற இரண்டு ஈற்று அஃறிணைப்பெயர்களும், தான் - தானென்கிறபொதுப்பெயரும், இன்னன-இவைபோல்கின்றபிறவும், விளியா-விளிக்கப்படுவன வல்ல. எ-று.

போ-ளா. மேல் விளிக்கப்படுமென்றவற்றுள் நுவ்வுடனே மூன்று முதல் வினவையும் மூன்றுசுட்டையும் வரன்முறையே பொருந்திய ன ள ர என்னும் மூன்று ஈற்று உயர்திணைப்பெயர்களும், வை து என்னும் இரண்டீற்று அஃறிணைப்பெயர்களும், தான் என்னும் பொதுப்பெயரும் விளிக்கப்படா. எ-று.

வி-பு. இங்ஙனம் விதந்த கிளைப்பெயர், வினப்பெயர் சுட்டுப்பெயர்களின் இடைநிற்கும் எழுத்தை ஒழித்து முதலெழுத்தோடு உற்றதாக இறுதி ன ள ரக்களைக் கூறினமையின், வரன்முறையென்றாம். நுவ்வொடு வை து வீன்னும் ஈறு இரண்டும் பொருந்தாவென்பார் அதனை ஒடு கொடுத்துப் பிரித்தார்.

மகர ஈற்றுப் பொதுப்பெயர் முன்னரே விலக்கப்பட்டமையின் ஈண்டு தாம் என்றது அசைநிலை.

[வ-று.] நுமன், நுமள், நுமர் (எ-ம்); எவன், எவள், எவர், எவை, எது (எ-ம்); யாவன், யாவள், யாவர், யாவை, யாது (எ-ம்); ஏவன், ஏவள், ஏவர், ஏவை, ஏது (எ-ம்); அவன், அவள், அவர், அவை, அது, இவன், இவள், இவர், இவை, இது, உவன், உவள், உவர், உவை, உது (எ-ம்) - வரும்.

இன்னன என்றமையானே, பிறவ், மற்றையான் என்றற் றொடக்கத்தனவும் கொள்க.

௫௬௫. முதலை யையுறிற் சினையைக் கண்ணுறு - மதுமுதற் காயிற் சினைக்கை.யாதும்.

இது முதல் சினைத்தொடர்பின்கண் இரண்டாம் உருபுவரின் முதல் சினை இரண்டன்பாலும் வராது தமொறிவருதலே மரபெனப் புறனடை உணர்த்துகின்றது.

ப்-ரை. முதல்-முதலினை, ஐ உறின் - ஐயுருபு பொருந்தினல், சினையை-சினையினை, கண்-கண்ணுருபு, உறும்-பொருந்தும், அது-அது உருபு, முதற்கு-முதலுக்கு, ஆயின்-வரின், சினைக்கு-சினையினுக்கு, ஐ-ஐயுருபு, ஆகும்-வரும். எ-று.

பொ-ரை. முதலினை ஐ உருபு பொருந்தின் சினையினைக் கண்ணுருபு பொருந்தும் ; அது உருபு முதலுக்கு வரின் சினைக்கு ஐ உருபு வரும். எ-று.

வி-பு. "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே."-- என்பதனுன் ஆறுவதன் பன்மை உருபுங் கொள்க.

இது இரட்டுறமொழிதல் என்னும் உத்தியான் அது என்பதனைச் சுட்டாக்கி, கண் உருபு முதற்காயின் சினைக்கு ஐ ஆகும் எனவும்பொருளுரைத்துக்கொள்க.

[வ-று.] **யானையைக் காலின்கண் வெட்டினன், யானையது காலை வெட்டினன், யானையின்கால்களை வெட்டினன், யானையின்கட் காலைவெட்டினன் (எ-ம்); கையினை விரலின்கட்பிடித்தான், கையதுவிரலைப்பிடித்தான், கையின்விரல்களைப்பிடித்தான், கையின்கண் விரலைப்பிடித்தான் (எ-ம்) வரும்.**

இங்ஙனம் கூறவே யானையைக் காலைவெட்டினன் என இரண்டன் பாலும் ஐ உருபு வாராதென்றாராயிற்று. வரின் செயப்படுபொருள் இரண்டாய் முதல்சினைகள் ஒருபொருட் பகுதியவல்லவாம். ஆதலின்,இங்ஙனஞ் செயப்பட்டது ஒருபொருளே, முதல்சினைகள் ஒருபொருட்பகுதியவே என்பது தோன்ற கண் உருபும் அது உருபும் வருமென்பதாயிற்று.

இவ்வாறன்றி ஒரோவழி முதல்சினை இரண்டன்பாலும் ஐ புஉரு வரின் "யாதனுருபிற் கூறிற்றாயினும்" என்னுஞ் சூத்திரத்தான் முதலின்பால் ஐ உருபு அது உருபாயேனும்,சினையின்பால் ஐ உருபை கண் உருபாயேனும் திரிக்கப்படும் என்க.

௫௬௬. முதலிவை சினையிவை யெனவே றுளவில - வுரைப்போர் குறிப்பி னவற்றே பிண்டமும்.

இது மேல்முதல் சினை இரண்டன்பாலும் ஐ உருபு வாராதென அருத்தாபத்தியாற் கூறினர்; அங்ஙனம் வாராமைக்கு ஏதுவும், மேலைச்சூத்திரப்பொருளோடு இப்பொருளைப் பிண்டப்பொருளுக்கும் ஏற்பித்தலும் உணர்த்துகின்றது.

ப-ரை. முதல் இவை சினை இவை என-கடங்களிவை படங்களிவை என்கிறதுபோல முதற்பொருள்களிவை சினைப்பொருள்களிவை என்கிறதற்கு, வேறு உள இல-இரண்டாக வேறுள்ளன இலவாம், உரைப்போர்-ஒருபொருளையேஇரண்டாகப் பகுத்துச் சொல்லுவோரது, குறிப்பின-குறிப்பின் மாத்திரையவேயாம், பிண்டம் உம் - பிண்டப்பொருளும், அற்று-அத்தன்மையாம். எ-று.

பொ-ரை. கடங்களிவை படங்களிவை யென்றாற்போல முதற்பொருள்களிவை சினைப்பொருள்களிவை யென இரண்டாக வேறுள்ளன இலவாம்; ஒருபொருளையே இரண்டாகப் பகுத்துக்கூறுவார் குறிப்பின் மாத்திரையவேயாம்; பிண்டப்பொருளும் அத்தன்மைத்தாம். எ-று.

வி-பு. யானையைக் குறித்தவழி, யானையுண்டாய் கால் கை கோடு முதலியன வேறில்லையாய், கால் கை கோடு முதலியவற்றைக்குறித்தவழி, அவையுண்டாய் யானை வேறில்லையாய் நிற்கும் ஒருபொருட்பகுதியவாதலின் இவ்வாறு கூறப்பட்டன.

வேறுளவில் என்றமையான், யானையைக் காலைவெட்டினான் என ஐ உருபு முதல்சினை இரண்டன்பாலும் வாராமைக்கு ஏது கூறினாராயிற்று.

இனி ஒருபொருட்கண் முதலைக்கருதி சினையெனவும், சினையைக் கருதி முதலெனவும், கூறுதல்போல பிண்டித்தபொருள்களைக் கருதியல்லது பிண்டம் எனல் கூடாமையின் பிண்டமும் அற்றே என்றது. துணை. யானே, பிண்டித்தபொருள்களும் அனையவே என்பதுதாமே போதரும் என்க.

அவை வருமாறு:—

நெல்லைப் பொலியின்கண்வாரினான், நெல்லினதுபொலியைவாரினான் - என வரும்.

நெல்லைப்பொலியை வாரினான் - என இரண்டன்பாலும் ஐ உருபு வாரா; இப்பிண்டப்பொருளாகிய பொலிக்குப்பையும், பிண்டித்தபொருளாகிய நெல்லும் முதல்சினையனையவாய் வேறுளவிலவாம் ஆதலின்என்க.

இச்சூத்திரத்திற்கு இவ்வாறன்றி, யானையதுகோடு, கோட்டதுநுனி, என ஒன்றற்குச் சினைமற்றொன்றற்கு முதலாயும், ஒன்றற்குமுதல் மற்றொன்றற்கு சினையாயும் நியதியின்றி வருதலின், இவையேமுதல் இவையே

சினை எனவேறறியக்கிடப்பன இல்லையவைசொல்லுவோர் குறிப்பினான் ஆங்காங்குமுதல் சினை என உணரப்படுவனவாய்

நெல்லினதுதுப்பை துப்பையினதுநெல்:-என பிண்டப்பொருளும் அத்தன்மைத்தாய்,கிழமையாய் நின்றது கிழகைம்த்தாயும் கிழமைத்தாய்நின்றது கிழமையாயும் நியதியின்றிச் சொல்லுவோர்குறிப்பினான் அறியவருமெனப் பொருள்கூறுவாருமுளர்.

இப்பொருள் முதல் சினை இரண்டன்பாலும் ஐ உருபுவாராமைக்கு ஏது ஆகாமையானும், இவ்வாறு முதலும் சினையும் வருதல் வெளிப்படையாதலின், இவற்றை உரைப்போர் குறிப்பினவெனக் கூறவேண்டாமையானும், ஆசிரியர் தொல்காப்பியரும், முதல்சினைகள் ஒருபொருட்பகுதிய என்பதுதோன்ற * "முதலுஞ்சினையும் பொருள்வேறுபடாஅ." — என்றமையானும்,இப்பொருளும் இதனோடு மாட்டெறிந்தபொருளும் பொருந்தா தென்க.

௩௩௭. யாத னுருபிற் கூறிற் றியினும் - பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

இது வேற்றுமையுருபுகள் மயங்கி ஒன்று நிற்கும் நிலைக்களத்து மற்றொன்று வரினும் அமையுமெனப் புறனடை உணர்த்துகின்றது.

ப-ள். யாதன் உருபின் - மற்றொரு வேற்றுமையுருபால், கூறிற்று ஆயின்உம்-ஒரு வேற்றுமைப்பொருள் சொல்லப்பட்டதாயினும், பொருள் செல் மருங்கின்-அப்பொருள்சென்றவழியே,வேற்றுமை - அவ்வுருபு, சாரும்-சேரும். எ-று.

பொ-ரை. ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமை உருபால் கூறப்பட்டதாயினும் அவ்வுருபு மயங்கி வந்தமையின் அவ்வுருபு சென்றவழியே பொருள் சாராது பொருள் சென்றவழியே அவ்வுருபு சாரும். எ-று.

வி-பு. எனவே, அங்ஙனம் மயங்கிவந்த உருபை பொருளுக்கியைந்த உருபாகத் திரித்துப் பொருள்கொள்க என்பதாயிற்று.

[வ-று.] "நாகுவேயோடு நக்கு வீங்கு தோள்."—என்புழி நாகுவேயோடு உடனிகழ்ச்சிப் பொருளாகாது செயப்படுபொருளாய் நிற்றலின் ஒடு உருபை ஐ உருபாகத் திரித்துக்கொள்க.

"கிளையரி நாணற் கிழங்கு மணற்கீன்ற-முளையோரன்ன முள்ளெயிற்றுத்துவர்வாய்." - என்புழி மணல் ஏற்றுக்கோடற் பொருளாகாது இடப்

---

* தொல்காப்பியம், சொல். வே. மய. ௬. ௯.

பொருளாய் நிற்றலின் கு உருபை கண் உருபாகத் திரித்துக்கொள்க. பிறவுமன்ன. வேற்றுமைஉருபுமயங்கிவரின் பொருள் நோக்கித் திரித்துக்கொள்ள வேண்டும் என்பதாயிற்று.

இனி இவ்வாறு மாறுபட் நிற்றலன்றி, உரையிற்கோடல் என்பதனால் ‡ "தமொ ருருபுக டாஞ் சிலவுள." எனவும், ஒருபொருட்கேத்த தம் உருபுகள்போல வேறுருபுகள் வருவன எனவும் கொள்க.

"தமொ ருருபுக டாஞ் சிலவுள்" ஆதற்கு உதாரணம்.—† "அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ டவ்வையைக் காட்டி விடும்." என வரும். இதனுள் ஐயும் குவ்வும் தமொறி வருதல் காண்க.

ஒருபொருட்கே தத்தம் உருபுகள்போல் வேறு உருபுகள் வருவன வினைமுதல் முதலாக முறையே உரைக்கின்றாம்.

‡‡ "ஒன்று மூன்றுநான் காறெனு முருபொடு - வருமே வினைமுத லெனவகுத் தனரே."—

[உ-ம்.] அவர்செய்தார், அவராற்செய்யத்தகும்அக்காரியம், அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம், அவரதுவரவு:—என முறையே காண்க.

‡‡ "எல்லா வுருபொடுஞ் செயப்படு பொருளெழும்."—

[உ-ம்.] சோறடப்பட்டது, சோற்றையட்டான், அரிசியாற்சோறாக்கினான், அவட்குக்கொள்ளு மிவ்வணிகலம், பழியினஞ்சும், நூலதுகுற்றங் கூறினான், தூணின்கட்சார்ந்தான்:—என முறையே காண்க.

‡‡ "ஒன்று மூன்றுநான் கைந்தா றுருபொடு - கருவி வருமெனக் கருதினர் பெரியோர்."—

[உ-ம்.] கண்காணும், கண்ணாற்காண்பன், கண்ணிற்குக் காணலாம், கண்ணினது காட்சி:—என முறையே காண்க.

‡‡ "எல்லா வுருபொடுங் கொள்வோ னெழுமே."—

[உ-ம்.] "இரப்பவ ரொன்பெறினும் கொள்வர்" - "செய்யவடவ்வையைக் காட்டிவிடும்." நாகராற்பலி, நாகர்க்குப்பலி, நாகரினன்பு செய்தான், நாகரது பலி, நாகர்கணன்பு செய்தான்: — என முறையே காண்க.

---

‡ இலக்கணக்கொத்து, வே. சூ. சகூ.

† திருக்குறள், செ. கசுஎ.

‡‡ இவ்வ முறையே இலக்கணக்கொத்து, வே. சூ. ரூஉ—ரூடு.

‡ "இரண்டொன் கைந்தொடு மெழுமே நீக்கம்."—

[உ-ம்.] மதுரையை நீக்கினன், மதுரைக்குவடக்கு சிதம்பரம்:— என முறையே காண்க.

‡ "நான்கைந் தாறே மொடுகுறை நடக்கும்."—

[உ-ம்.] சாத்தனுக்கு மகன், மரத்தின்நீங்கினகொம்பு, சாத்தனதுகை, உயிரின்கண் உணர்வு:— என முறையே காண்க.

‡ "ஒன்றி ரண்டொன் கேழோ டிடமெழும்."—

[உ-ம்.] தூண்போதிகை தொட்டது, தூணைச்சார்ந்தான், இன்றைக்கு, நாளைக்கு, பகலைக்கு, அந்திக்கு, சந்திக்கு, மாலைக்கு, காலைக்கு, ஊர்க்கு, வீட்டிற்கு,—வருவான்; தூணின்கட்சார்ந்தான்:—என முறையே காண்க.

௩௧அ. ஐயான் குச்செய்யுட் கவ்வு மாத-மாகா வஃறிணைக் கானல்லாதன.

இது சில வேற்றுமையுருபு செய்யுட்கண் திரிந்துவரினும் அமையுமெனப் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. ஐ ஆன் கு - ஐயும் ஆனும் குவ்வும் ஆகிய மூன்றுருபுகளும், செய்யுட்கு - செய்யுளிடத்து அ உம் ஆகும்-ஒரோவழி அகரமாகத்திரிந்து வரவும்பெறும், அஃறிணைக்கு - அஃறிணையிடத்து, ஆன் அல்லாதன-ஆனல்லாத ஐயுங் குவ்வும், ஆகா - அகரமாத் திரியாவாம். எ-று.

பொ-ரை. ஐ ஆன் கு என்னும் மூன்றுருபும் செய்யுளகத்து ஒரோவழி அகரமாகத் திரிந்து வரவும் பெறும். அஃறிணைக்கண்ணெனின் ஆன் ஒன்றுமே திரியும், ஐயுங் குவ்வுந் திரியா. எ-று.

வி-பு. ஆகா வஃறிணைக்கான் அல்லாதன எனவே உயர்திணைக்கண் மூன்றுருபும் திரியுமென்பது பெறும்.

[வ-று.] காவலோனைக் களிறஞ்சும்மே என்பது காவலோனக் களிறஞ்சும்மே என்றும்; புலவரான் என்பது புலவரான என்றும்; கடிநிலையின்றே யாசிரியற்கு என்பது கடிநிலையின்றே யாசிரியற்க என்றும், உயர்திணைக்கண் மூன்றுருபும் திரிந்தன.

புள்ளினான் என்பது புள்ளினான என ஆன் உருபொன்றும் அஃறிணைக்கண் திரிந்தது.

அவ்வுமாம் என்னும் இழிவுசிறப்பும்மையான் இங்ஙனந்திரிதல் ஒருதலை யன்றென்க. அகரமாகத்திரியுமென்றமையின் ஆனுங் குவ்வுந் திரிந்துழி அவற்றின்முன்னின்ற ஆனுங் குவ்வுஞ் சாரியையென்பது பெறும்.

---

‡ இவை முறையே இலக்கணக்கொத்து, வே. சூ. ௩௯—௩௮.

அல்லது அவ்வுமாதும் என்பதனை இரட்டுறமொழிதல் நோக்கி ஐயுருபு அகரமாய்த்திரியவும் பெறும். ஆன் உருபும் குவ்வுருபும் அகரத்தின் கண்ணாகவும் பெறுமெனப் பொருள்கோடலுமொன்று.

௩௧௯. எல்லை யின்னு மதுவும் பெயர்கொளு-மல்ல வினைகொளு நான்கே ழிருமையும் - புல்லும் பெரும்பாலு மென்மனர் புலவர்.

இது எழுவாய்முதலிய எட்டு வேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல் உணர்த்துகின்றது.

ப-ரை, எல்லை-இன் உம்-எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம்வேற்றுமையும், பெயர்-பெயரை, கொளும் - கொண்டுமுடியும், அல்ல - ஒழிந்த எழுவாய்முதலிய வேற்றுமைகளெல்லாம்,வினை-வினையை, கொளும்-கொண்டுமுடியும், நான்கு ஏழ் - நான்காம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும், இருமை உம் - வினையையேயன்றிப் பெயரையும், புல்லும் - கொண்டுமுடியும், பெரும்பால் உம் - மிகவும், என்மனர் - என்றுசொல்லுவர், புலவர்-புலவர். எ-று.

பொ-ரை. "நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே." என்னும் நான்குபொருளுள் எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் பெயரைக்கொண்டு முடியும்; ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைகளெல்லாம் வினையைக்கொண்டு முடியும்; அவற்றுள் நான்காம் வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையினையேயன்றி வினையொடு பொருந்தும் பெயரையுங்கொண்டு முடியும் பெரும்பாலுமென்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. நான்கேழ் பெயரும் புல்லும் என்னாது இருமையும் புல்லும் என்றமையான் வினையொடு பொருந்தும் பெயரென்றும். பெரும்பாலும் என்றமையானே, வினைகொளற்குரியன சிறுபான்மை தொழிற்பெயர் கோடலும்,வினையாலணையும் பெயர்கோடலும், அவற்றுள் எழுவாய்வேற்றுமை வினைகொண்டுமுடிதலேயன்றி சிறுபான்மை பெயரையும் வினாவையுங்கொண்டு முடிதலுங்கொள்க.

[வ-று.] கருவூரின்கிழக்கு,சாத்தனதுகை என எல்லை இன்னும் அதுவும் பெயர்கொண்டன.

சாத்தன்வந்தான், சாத்தனல்லன், குடத்தைவனைந்தான், குடத்தையுடையான், வாளால்வெட்டினான், வாளால்வலியன், சாத்தனுக்குக் கொடுத்தான், சாத்தனுக்கு நல்லன், நோயினீங்கினான், நோயிற் கொடியன், அவையின்கணிருந்தான், அவையின்கட்பெரியன், கொற்றா நோ, கொற்றவலியை :—என அல்லன வினைகொண்டன.

பிணிக்குமருந்து,மணியின்கணொளி :—என நான்காம் வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையேயன்றி பெயருங்கொண்டன.

இப்பெயர்கள் எல்லையின்னும் மதுவுங்கொள்ளும் பெயர்கள்போலாது பிணிக்குக்கொடுத்த மருந்து, மணியின்கணிருந்த ஒளி :— எனவினை வேண்டி நிற்றலின் வினையோடுபொருந்தும் பெயர்கள் ஆயின.

இங்ஙனமாதலின் இவற்றிற்கும் வினைப்பயனிலை ஒன்றுமே சிறந்ததென்பதூஉம், இது கருதி அல்ல வினைகோளும் என முடித்தாரென்பதூஉம் பெற்றாம்.

வினைகோளும் எனப் பொதுப்படக் கூறினமையின் காட்டாதொழிந்த வினைவிகற்பங்களெல்லாம் வருவித்து முடித்துக்காண்க.

சாத்தன்வருதல், சாத்தன்வந்தவன், குடத்தைவனைதல், குடத்தை வனைந்தவன் :—என சிறுபான்மை தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும்கொண்டன. பிறவுமன்ன. இங்ஙனம் காட்டாதொழிந்த உருபுகளோடும் இவ்வாறே ஒட்டுக.

சாத்தனவன், சாத்தன்யாவன், சாத்தன்யார் :—எனப் பெயரேயாகிய எழுவாய்வேற்றுமை சிறுபான்மை சுட்டுப்பெயரும்,வினாப்பெயரும், வினாவினைக்குறிப்பும் கொண்டது.

இங்ஙனம் சாத்தன் என்பான் பிறனொருவனாற் சுட்டவும் வினாவவும் பட்டு நிற்றல்மாத்திரையேயன்றி இவன் இத்தொழில் இயற்றினனென வாராமையின், இவ்வெழுவாய்வேற்றுமைவினைகொண்டு முடிதலே சிறந்ததென்பார் ஏனைஉருபுகளோடு சேர்த்துப் பொதுப்பட அல்லவினைகோளும் என வரையறுத்துச், சுட்டவும் வினாவவும்பட்டு நிற்றலின் பெயரும் வினாவுங்கொண்டு முடிதலை பெரும்பாலும் என்பதனால் தழுவவும் கூறினாரென்க.

பெயரியல், சூ. கூஉ.

முற்றிற்று.

இரண்டாவது

வினையியல்.

௩௨௦. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ் - செய்பொரு ளாறுந் தருவது வினையே.

இது பெயர் வினையென இரண்டாகுமென்ற நிறுத்தமுறையானே வினைச்சொல் இலக்கணம் உணர்த்துவான் தொடங்கி, அவற்றுள் தெரிநிலை வினைச்சொல்லின் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

வருஞ்சூத்திரத்தான் வினைக்குறிப்பென்றமையின் இது தெரிநிலை யென்பது பெற்றாம்.

ப-ரை. செய்பவன் - கருத்தாவும், கருவி - காரணமும், நிலம் - இடமும், செயல்-செயலும், காலம்-காலமும், செய் பொருள்-செயப்படுபொருளும் ஆகிய, ஆறும்-அறுவகைப்பொருளும், தருவது - கொடுப்பது, வினை-தெரிநிலைவினைச்சொல்லாம். எ-று.

பொ-ரை. கருத்தாவும் கருவியும் இடமும் செயலும் காலமும் செயப்படுபொருளுமாகிய அறுவகைப்பொருளையும் தருவது தெரிநிலை வினைச் சொல்லாம். எ-று.

வி-பு. வினை என்றது ஆகுபெயர். நடவா முதலியவெல்லாந் தழுவுதற்கு செய் என்றார். செய்பவன் என ஒருபான்மேல்வைத் தோதினாரேனும்,—‡"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே." — என்பதனான் ஐம்பாலுங் கொள்க.

செய்பவன் என்றும் கருவி என்றும் பொதுப்படக் கூறினமையின் இயற்றுதற்கருத்தா,ஏவற்கருத்தா என்னும்இரண்டனையும்,முதற்காரணம், துணைக்காரணம் என்னும் இரண்டனையும் கொள்க.

செய்பவன் என்பது செய்பவனாகிய் பொருளென்னும் பயத்ததாய் நிற்றலின் ஆறு என்னும் அஃறிணைத் தொகைச்சொல்லோடு முடிந்தது. அன்றி திணைவிரவி அஃறிணைமுடிபினவாயின எனினும் அமையும்.

[உ-ம்.] வனைந்தான் என்புழி குலாலனாகிய இயற்றுதற் கருத்தாவும், மண்ணாகிய முதற்காரணமும், தண்டசக்கரமுதலிய துணைக்காரணங்களும், வனையுமிடமும், வனைதற்செயலும், இறந்தகாலமும், குடமுதலிய செயப்படுபொருளும் தோன்றுதல் காண்க.

---

‡ இதனை வடநூலார் உபலக்ஷணம் என்பர்.

அரசன் ஆலயஞ்செய்தான் என்பது ஏவற்கருத்தா.-இஃது இயற்றிறன் றொழிற்கு ஏவினானைக் கருத்தாவாக்கிக் கூறுதலின் ஏவற்கருத்தாவெனப்படும்.

அரசன் ஆலயஞ் செய்வித்தான் என்பது ஏவற்கருத்தா என்பாருமுளர். செய்தற்றொழிலை தச்சனியற்றினாற்போல செய்வித்தற்றொழிலை அரசனியற்றுதலின் இத்தொழிற்கு அரசனும் இயற்றுதற் கருத்தாவேயாமென்க. ‡"முற்றும்மை யொரோவழி யெச்சமுமாகும்."-என்பதனான் அறுந்தருவது வினையென்பதற்கு இத்தொகையில் சில குறைந்துவரவும் பெறுமெனப் பொருளுரைத்துக்கொள்க. அவை வருமாறு:—

கோடியாடிற்று, கோடிதுஞ்சும்:—என்புழி முன்னையது செயப்படு பொருளும், பின்னையது செயப்படு பொருளோடு கருவியும் குறைந்து வந்தன.

கோடிதுஞ்சும் என்பதற்கு காற்றினது அபாவத்தைக் கருவியாகக் கூறினும் அமையும். இன்னும் ஆறும்என்னும் முற்றும்மையை உயர்வுசிறப்பும்மையாக்கி, இழிந்தன சிலவுள அவையும் வேண்டுமேல் கொள்கவெனவும் பொருளுரைத்துக்கொள்க.—அவையாவையெனின் இன்னதற்குஎனவும் இது பயன் எனவும் வருவனவாம்.

குடத்தைத் தனக்கு வனைந்தான், பிறர்க்குவனைந்தான்: — என்னும் இன்னதற்கென்பதூஉம், அறன்முதலிய பயன்கருதி வனைந்தானென்னும் இது பயனென்பதூஉம் ஏதுவின்பாற்பட்டுக் கருவியுளடங்கவும் பெறாஉமாதலின் இழிந்தனவாயின. இப்பொருளை "முற்றும்மை யொரோவழி யெச்சமுமாகும்"—என்பதன்பாற்படுத்து ஆறுந்தருவது வினையே எட்டுந் தருவது வினையேயென அமையாதோவெனின் இவ்விரண்டுடன் எட்டாய்வருவதன்றி ஆறேவருவதோர் வினையின்மையின் அமையாதென்க.

முற்றுவினைகளுள் பகுதியால்செயலும், விகுதியால்கருத்தாவும், இடைநிலை முதலியவற்றால் காலமும், பெயரெச்ச வினையெச்சங்களின் இம்முறையே செயலும் காலமும் தோன்றின. அங்ஙனமாதலின் முற்றுச்சொல்லான் மூன்றும், எச்சச்சொல்லான் இரண்டும் என்னாது, ஆறுந்தருவது வினைச்சொல் என்றதென்னையெனின், இவ்வாறுங் காரணமாகக் கூடுங் கூட்டத்து இவற்றுள்செயலென்னு முதற்காரணத்தினின்றும் ஓர் வினையாகிய காரியம் நிகழுமாதலின் இவ்வாறு காரணத்தையுந் தருங்காரியமாகிய வினையின் தொழிலை ஒற்றுமை நயங்கருதி அதன்சொன்மேல் ஏற்றப்பட்டது.

காரணத்தைக் காரியந்தருமென்பது "புகை தன் ஆதியான அனல் காட்டு மென்றாற்போலும். இங்ஙனமாகவே செய்பவன் முதலிய ஆறனுள்

‡ நன்னூல், சூ. சஉசு.

முற்றின்கண் மூன்றும் எச்சத்தின்கண் இரண்டும் வெளிப்படையாயும் ஏனைய குறிப்பாயுந் தோன்றுமென்பதாயிற்று. இவ்வாறுங் காரணமாகவே இவற்றுள் **செயல்** என்றது காரியமாகிய வினையுடியையன்றென வுணர்க. 'காலமுறிதொழில் கருத்தனோ டியையப் - பால்வகை தோறும் படுமொழி வேறே.' என ஆசிரியர் அவிநயனார்கூறியவாறும்,-*" வினையெனப்படுவது வேற்றுமைகொள்ளாது - நினையுங் காலைக் காலமொடு தோன்றும்." என ஆசிரியர் **தொல்காப்பியனார்** கூறியவாறும் காண்க.

௩௨௩. பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள் - வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

இது குறிப்புவினைச் சொல்லினது பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. பொருள் முதல் ஆறின் உம்-பொருளாதியாறுங் காரணமாக, தோற்றி-அவற்றினிடத்தே பிறந்து, முன் ஆறன் உள் - முன் சொல்லப்பட்ட செய்பவன்முதலான ஆறனுள், வினை முதல் மாத்திரை-கருத்தாவொன்றையே, விளக்கல் - விளக்குதல், வினைக்குறிப்பு-வினைக்குறிப்புச்சொல்லின் இலக்கணமாம். எ-று.

பொ-ரை. பொருளாதியாறும் அடியாக அவற்றின்கட் டோன்றி மேற்கருத்தா முதலாகச்சொன்னஆறனுள் கருத்தாவொன்றையுமே விளக்குதல் வினைக்குறிப்புச் சொல்லினது இலக்கணமாம். எ-று.

வி-பு. மேலே அதிகாரத்துக்குப் பகுபத உறுப்புக் கூறியவழி ¶ தெரிநிலைவினைக்கு வினையடிகள் விளங்கிக் கிடந்தமைபோல குறிப்புவினையடி அங்ஙனம் வகைப்பட்டு விளங்காமையின் ஈண்டுவிளங்க **பொருண்முதலாறினுந்தோற்றி** என்றும் ; தெரிநிலை வினைபோல இக் குறிப்புவினைக்கண்ணும் செய்பவன் முதலியவாறும் உளவென்பார் **முன்னாறனுள்** என்றும் ; அவற்றுள் செய்பவனை இச்சொல்லினது விகுதிவிளக்கும், மற்றுள்ளனவற்றுள் ஒன்றேனும் விளக்குதற்குரிய உறுப்பு இதன் அகத்து இன்றென்பார் **வினைமுதன்மாத்திரை** என்றும் ; இது சிறப்புவினையாதலின்

---

* தொல்காப்பியம், சொல். வினை. சூ. க.

¶ இனித் தெரிநிலை வினையின்பாற்பட்ட **செய்யான்** என்னும் தொடக்கத்து எதிர்மறை வினையினும், குறிப்பின்பாற்பட்ட **இலன்** என்னும் தொடக்கத்து எதிர்மறைவினையினும் புடைபெயர்ச்சி வினையில்லையாம். இங்ஙனமாகவும் இவற்றை வினை என்பதும், **செய்பவன்** முதலிய ஆறும் தரும் என்பதும், **முயற்கோடு, ஆகாயப்பூ** என்றாற்போல இன்மையை உண்மைபோலவைத்துக் கூறுவதோர் இலக்கணை என்பர்.—**இராமாநுச கவிராயர்.**

இதற்குக் கருத்தாவாக விகுதிப்பொருளைக் கோடலும் குறிப்பாம் என்பார் தருதல் என்றது விளக்கல் என்றுங் கூறினர்.

[வ-று.]. குழையினன், குழையினள், குழையினர், குழையிற்று, குழையின, குழையினேன், குழையினேம், குழையினை, குழையினீர் (எ-ம்); அகத்தினன், புறத்தினன் (எ-ம்) ; ஆதிரையான், ஓணத்தான் (எ-ம்); குறுந்தாளன், செங்கண்ணன் (எ-ம்) ; கரியன், நெடியன், நல்லன், உண்மையன், உடையன் (எ-ம்) ; கடுநடையின், இன்சொல்லன் (எ-ம்) ;

"மதியாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டுச்
சதியாய் குறுந்தாட்டுத் தான—நதிபா
யிருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தேன் னுள்ள (வாய்த்து)
முருகவிட்டு நின்ற வொளி."—(எ-ம்) வரும். பிறவுமன்ன.

இவை பொருளாதியாமுன் ஒருபொருளை வழங்குதற்கு வரும் பெயராய் நில்லாது இவன்குழையையுடையனாயினன் என ஆறும்வேற்றுமையினது உடைமைப்பொருட்கண்ணும் ; அகத்தின்கண் இருந்தனன், புறத்தின்கண் இருந்தனன் :— என ஏழாம்வேற்றுமையது நிலப்பொருட்கண்ணும் ; ஆதிரைநாளிற்பிறந்தான், ஓணநாளி லுதித்தான் :— என அவ்வேழாம்வேற்றுமையது காலப்பொருட்கண்ணும் ; குறுந்தாளையுடையான், செங்கண்ணையுடையான் :— என அவ்வாறும்வேற்றுமையது உடைமைப் பொருட்கண்ணும் ; கருவண்ணமா யிருப்பன், நெடுவடிவமாயிருப்பன், நற்குணமாயிருப்பன், உண்மைத் தன்மையன், உடைப்பொருள் சிறந்தான் :— எனப் பண்பின்கண்ணும் ; கடுநடையாக நடப்பான், இன்சொல்லாகச்சொல்லுவான் :— எனத் தொழிற்பண்பின்கண்ணும் வருதலின் வினைக்குறிப்புச் சொல்லாயின.

இவை முன்பு வினைக்குறிப்பாய் பின்பு பொருள்களை வழங்குதற்கு வரும்பெயராய்வரின் அவை குறிப்புவினையாலணையும் பெயராம். இவை தம்முள் வேற்றுமையென்க. இவற்றுள் குணமடியாகத்தோன்றிய வினைக்குறிப்புச்சொற்கள் குணவிகற்பம் பலவாதலின் பல விகற்பப்பட்டு வரும். அவையாவன—

பொன் னன்னன் (அன்னன்), புலிபோல்வன் :—என ஒப்புணர்த்தியும் ;—"எப்பொருளுமல்லனிறைவன்." (அல்லன்), "பொய்யர்நெஞ்சிற் புனிதனிலன்."(இலன்), "எவ்வுயிர்க்கண்ணு மிறைவ னுளன்." (உளன்), மெய்வலியன் :— எனப்பண்புணர்த்தியும் ;— ஆவுண்டு (உண்டு) என உண்மையுணர்த்தியும் ;— அவைதாமிவையல்ல (அல்ல), "மாற்றருந்துப் பின் மாற்றேஒர் பாசறையிலன்" (இலன்), "மாற்றருந்துப்பின் மாற்றேஒர் பாசறையுளன்." (உளன்), சொலல்வல்லன் : — எனக் குறிப்புணர்த்தி

யும் ;— குழையிலன் (இலன்), கச்சிலன் (இலன்) :— என உடைமைக்கு மறையாயும் வருவனவாம்.

ஒப்பாவது வினைபயன் மெய்யுரு வென்பனவற்றுள் ஒன்றனை யொன்றொத்தல்.

பண்பாவது ஒருபொருள் தோன்றுங் காலத்து உடன்தோன்றி அது கெடுந்துணையும் நிற்பது.

உண்மையாவது ஒருபொருட்குக் கேடுபிறந்தாலும் தனக்குக் கேடின்றி, தான் ஒன்றேயாய் பலவகைப்பட்ட பொருள்தோறும் நிற்பது.

குறிப்பாவது பொருட்குப்பின்தோன்றி சிறிதுபொழுது நிகழ்வது. இவையெல்லாம் தொல்காப்பியக்கடலில்தோன்றவிளங்கும்.

இந்நூல் சுருங்கிய நூலாதலின் இன்றியமையாதனவற்றைச் சில விடங்களில் விரித்தெழுதுகின்றனவு முள, அவை ஆராய்ந்தறிந்துகொள்க.

குழையினன் - என்புழி குழையையுடையான் வினைமுதல்; இது விகுதியான் விளங்கிற்று.— குடத்தின்கண் மண்போல இவ்வினையாகிய காரியத்தின்கண் முதற்காரணமாகிய செயலுண்டெனவும்; காலமின்றேல் இதுவினையன்றாமாதலானும், முக்காலங்களுள் ஒன்றன்பால் சார்தற்குரிய இடைநிலை இதற்கு வேண்டாமையானும், முக்காலமும் உண்டெனவும்; வினைமுதற்கோர் ஆதாரம்வேண்டுதலின் இடனுண்டெனவும்; ஒன்றை வனைந்தான், ஒன்றல்வனைந்தான் என்றாற்போல இரண்டாவதற்கும் மூன்றாவதற்கும் இது பயனில்லையாக, ஒன்றைக்குழையினன், ஒன்றற்குழையினன் என இயையாமையின் இதன்கண் செயப்படுபொருளும் கருவியும் இல வெனவும் உய்த்துணர்க. ஒன்றற்குழையினன் எனின் ஒரோவழி இயையின் அங்ஙனங் கருவியுளதென்று கொள்க.

உடையன் என்னுங் குறிப்புவினை, ஒன்றையுடையன், ஒன்றினலுடையன் என வருதலின் இதன்கண் ஆறும் உண்டென்க. இவ்வாறே தெரிநிலை வினைபோலக் குறிப்புவினை பிறவற்றுள்ளும் செய்பவன் முதலிய ஆறும் வருதலும் சில குன்றிவருதலும் உய்த்துணர்க. வினை - தெரிநிலை, குறிப்பு என இருகூற்றதாமென இவ்விரு சூத்திரத்தானுங் கூறினர்.

இவற்றுள் தெரிநிலையின்பாற்படும் செய்யான் என்றற்றொடக்கத்து எதிர்மறைக்கண்ணும், குறிப்பின்பாற்படும் இலன் என்றற்றொடக்கத்து எதிர்மறைக்கண்ணும் வினையில்லையாம். அங்ஙனமாகவும் இவற்றை வினை யென்பதூஉம், இவை செய்பவன்முதலிய ஆறுந்தருமென்பதூஉம் என்னை யெனின், இவற்றை வினை என்பது, முயற்கோடு, ஆகாயப்பூ என்றாற் போல இன்மையை உண்மைபோலவைத்துக் கூறுவதோர் இலக்கணை.

இவை செய்பவன்முதலிய ஆறுந் தருமென்பது,சீதமின்மை பனியின்மை காட்டல்போல் வினையின்மை செய்பவன் முதலியவற்றின் இன்மைகளைக் காட்டி நிற்றலையாம்.

௩௨௨. அவைதாம்,-முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி - யொன் றற் குரியவும் பொதுவு மாகும்.

இது மேல் தெரிநிலை குறிப்பெனத் தொகுத்துணர்த்திய வினைச் சொற்களைவகுத்து உணர்த்துகின்றது.

ப்-ரை. அவை தாம் - முன்னிரண்டு சூத்திரங்களாலுந் தெரிநிலையாயுங் குறிப்பாயும் வருமென்ற வினைச்சொற்கள், முற்று உம் - முற்றுவினைச்சொற்களும், பெயர் (எச்சம் உம்)-பெயரெச்சவினைச் சொற்களும், வினை எச்சம் உம் - வினையெச்சவினைச்சொற்களும், ஆகி - ஆகி, ஒன்றற்கு உரிய உம் - திணைபாலிடங்களுள் ஒன்றற்குச்சிறப்பாய் வருவனவும், பொது உம் - பலவற்றிக்குப்-பொதுமையின்நிற்பனவும், ஆகும்-ஆகும். எ-று.

பொ-ரை. மேல் இரண்டு சூத்திரத்தானுங் கூறிய தெரிநிலையாயும் குறிப்பாயும் வரும் வினைச்சொற்கள் தாம் முற்றுவினைச்சொற்களும்,பெயரெச்ச வினைச்சொற்களும், வினையெச்ச வினைச்சொற்களுமாகி திணைபாலிடங்களின் ஒன்றற்குரியனவும் பொதுமையின் நிற்பனவுமாகும். எ-று.

வி-பு. திணைபாலிடங்களின் என்பது இசையெச்சம். முக்காலங்களின் ஒன்றற்குரியவும் பொதுவுமாமாறு பதவியலுள் போந்தமையின் அஃதொழித்து திணைபாலிடங்களின் என்றும். உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரங்களானும் உணர்க.

இனி ‡ "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே." என்பதனுன் இங்ஙனம் திணைபாலிடம்பொழுது இவைநீண்டி ஒன்றற்குரியவும் பொதுவுமாய்வருவனவும் சிலவுள வெனக்கொள்க. அவையாவன—

பிரிவர், ஆடுவர் :— இவை தன்வினையொன்றற்கே உரியன.

பிரிப்பர், ஆட்டுவர் :— இவை பிறவினையொன்றற்கே உரியன.

‡‡ "தேற்ற வொழுக்க மொருவன்க ணுண்டாயின்"— † "நட்பாட் டேற்றதவர்" (தேற்றுதவர்) (எ-ம்) ; அவனைத் தேற்றிக்கொடுத்தான், அவ

---

‡ நன்னூல், சூ. ௩௫௮.

‡‡ நாலடியார், செ. ௭௫. † திருக்குறள், செ. ௧௮௭.

னைத் தேற்றிப்பிரித்தான் (எ-ம்) :—இவை சொல்லொன்றே தன்வினையும் பிறவினையுமாயின. * "தொல்காப்பியனெனத் தன்பெயர் தோற்றி" — வெளுத்தான் இவன் :—இவைபோல்வனவு மது.

உண்பான், உண்ணான் :—இவை விதிவினை, மறைவினை.

செய்யாய், செய்யீர், † மகனெனல் மக்கட்பதடியெனல் (எனல்), அல்லும்பகலு மருச்சிக்க யாமந்தொறும் வல்லார், யாட்டாதார், வல்லார் திறைகொள்வர், வல்லார் திறைகொடுப்பர், அகல்விசும்பிலார், அருளான், வெதுளான் :-இவை சொல்லொன்றே விதிவினையும், மறைவினையுமாயின.

உண்டசாத்தன், உண்டசோறு :—இவை செய்வினை, செயப்பாட்டு வினை.

புலிகொன்ற யானை, மீன்விழுங்கினவன், ஒன்னார் வணங்கினான், அவள் விரும்பினவன் இவன், அறிந்துவந்தான், "தவரடி புனைந்த தலைமையோன்" :—இவை சொல்லொன்றே செய்வினையும், செயப்பாட்டுவினையும் ஆயின.

சாத்தன் நடந்தான், கால்நடந்தது :—இவை முதல்வினை, சினைவினை.

வனம்பொலிந்தது, படைபொருதிற்று, அவன்பருத்தான், அருக்கன் உருக்கினான் :—இவைபோல்வன வெல்லாம் முதல்வினையும், சினைவினையுமாயின.

தேடியபொருள், தேடிவந்தான், ஓடியபுரவி, ஓடிவிழுந்தான் (எ-ம்); பாங்கனொடுகூடிய தலைவன், தலைவியொடுகூடியவந்தான் (எ-ம்) :- இவை சொல்லொன்றே ஈரொச்சமாயினவென வறிக.— இவைபோல்வன பிறவுமன்ன.

௩௨௩. பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர் - முதலறு பெயரல தேற்பில் முற்றே.

இது மேற்கூறிய முற்றுமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. பொது இயல்பு ஆறை உம் - பலவகை வினைகளும் பொது இலக்கணமாகிய செய்பவன் முதலாறையும், தோற்றி - தோன்றச்செய்து, பொருட்பெயர் முதல் - பொருட்பெயர் முதலாகிய, அறு பெயர் அலது-அறுவகைப்பெயர் அல்லாத மற்றொன்றையும், ஏற்பு இல - ஏலாதன, முற்று - முற்றுவினை வினைக்குறிப்புகளாம். எ-று-

பொ-ரை. தெரிநிலைமுற்றும் குறிப்புமுற்றும், பெயரெச்சமும் பெயரொச்சக்குறிப்பும் வினையெச்சமும் வினையெச்சக்குறிப்புமாகிய அறுவகை வினைக்கும், பொது இலக்கணமாகிய செய்பவன் முதலிய ஆறனையும்

---

* தொல். சிறப்புப்பாயிரம். † திருக்குறள், சே. ௧௯௬.

தோற்றுவித்துப் பொருட்பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் பயனிலையாக ஏற்பனவாகியல்லது ஒன்றனையும் ஏலாதன முற்றுவினைவினைக் குறிப்புக்களாம். எ-று.

வி-பு. ஐம்பாலவாகிய வினைமுதலைத்தரும் விகுதி உறுப்புக்குறைந்த குறைச்சொல்லாகிய எச்சங்களைப்போலாது அவ்வுறுப்போடுகூடி நிலைந்து நிற்றலின் முற்றெனப்படுமென்பார் ஆறையும் என்றும்; பெயரன்றி வினைச்சொல் முதலியவற்றுள் ஒன்றனையும் ஏலாதன முற்றெனவும், பெயரன்றி பெயர்ப்பின் வேறொன்றனையும் ஏலாதன முற்றெனவும், இருபொருள் தோன்ற பெயரலது என்றும் கூறினர்.

[வ-று.] செய்தான் அவன், நல்லன் அவன், துளிர்ந்தது நிலம், வந்தது கார், துவிந்தது கை, பாந்தது பசப்பு, ஒழிந்தது பிறப்பு என வரும். — ஏனைத் திணைபாலிடங் காலங்கடோறும் ஒட்டுக.

இற்றுள் ஐம்பாலவாகிய வினைமுதலைத் தரும் விகுதி உறுப்புக்குறையாது முற்றிநிற்றலும் பொருளாதி ஆறுபெயரையன்றி வினைமுதலியவற்றைப் பயனிலையாக ஏலாமையும், பெயர்ப்பின் வேறொன்றையும் ஏலாமையுங் காண்க. "மற்றுச்சொனொக்கா மரபி னனைத்து - முற்றி நிற்பது முற்றியன்மொழியே." என்றார் ஆசிரியர் அகத்தியனாரும் என்க.

௩௨௪. **ஒருவன் முதலைந்தையும் படர்க்கையிடத்து - மொருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையினு-முக்காலத்தினு முரண முறையே-மூவைந் திருமூன் றறுய் முற்று-வினைப்பத மொன்றே மூவொன் பானும்.**

இது மேற்கூறிய தெரிநிலை குறிப்பு என்னும் இருவகை முற்றுள் தெரிநிலை முற்றுஒன்றுமே இறப்பு எதிர்வு நிகழ்வு என்னுங் கால விகற்பங்களைப் பெறுமென்பதூஉம், அவற்றான் இத்துணையாமென்பதூஉம் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒருவன் முதல் ஐந்தை உம் - ஆண்பால் முதலாகிய ஐம்பால்வினை முற்றுக்களையும், படர்க்கை இடத்து உம்-படர்க்கையிடத்திலும், ஒருமை-ஒருமைவினைமுற்றையும், பன்மையை - பன்மைவினைமுற்றையும், தன்மை-தன்மையிடத்திலும், முன்னிலையின் உம் - முன்னிலையிடத்திலும் வைத்து, முக்காலத்தின் உம் - முக்காலங்களாலும், முரண - மாற, முறையே-சொல்லப்பட்ட முறையே, மூவைந்து - படர்க்கைவினை முற்றுக்கள் பதினைந்தும், இருமூன்று-தன்மைவினைமுற்றுக்களாறும், ஆறு - முன்னிலைவினை முற்றுக்கள் ஆறும், ஆய்-ஆகி, முற்றுவினை பதம் ஒன்று ஏ - தெரிநிலை வினைமுற்றுப் பதமொன்றுமே, மூவொன்பான் ஆம் - இருபத்தேழாகும். எ-று.

போ-ரை. ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐம்பாலவாகிய வினைமுற்றுக்களை படர்க்கைக்கண்ணும், ஒருமை பன்மை என்னும் இருபாலவாகிய வினைமுற்றுக்களைத் தன்மைக்கண்ணும் முன்னிலைக்கண்ணும் வைத்து முக்காலங்களானும் மாற முறையே படர்க்கைவினை முற்று பதினைந்தும், தன்மைவினைமுற்று ஆறும், முன்னிலைவினைமுற்று ஆறுமாகிய முற்றுவினைச்சொல் ஒன்றுமே இருபத்தேழாம். எ-று.

வி-பு. ஈண்டு ஒருவன் என்றது பெயராயன்று, உயர்திணை ஆண்பால் வினையை உணர்த்தி நின்றதோர் குறிப்புச்சொல். ஒருமைப்பன்மை என்புழி இடையேதோன்றிய பகரம் சந்தவின்பப்பொருட்டு விரித்தல் விகாரமாய்வந்தது. ஒன்றே என்னும் ஏகாரம் முற்றுவினைப்பதம் முற்றுவினைக்குறிப்புப்பதம் என்னும் இரண்டனுள் முற்றுவினைப்பதம் ஒன்றுமே மூவைந்தாறும் என்னும் பொருள்தந்து நிற்றலின் பிரிநிலை.

இங்ஙனங்கூறவே; இவற்குச்செல்வம் முன்னுண்டு இப்பொழுதுண்டு பின்னுண்டு என வினைக்குறிப்புப்பதம் முக்காலமும் ஏற்குமேனும் காலங்காட்டும் இடைநிலை முதலிய வேண்டாது பொதுமையின் நிற்றலின் அதனை இவ்வாறு விரிக்கப்படாதென்பது பெற்றாம்.

௩உ௫. அன்ஆ னிறுமொழி யாண்பாற் படர்க்கை.

இது மேற் கூறிப்போந்த இருவகை முற்றுள் ஆண்பாற்படர்க்கைக் குரியன உணர்த்துகின்றது.

ப-ரை. அன் ஆன் இறு மொழி-அன் ஆன் என்கிற இரு விகுதியையும் இறுதியிலுடைய மொழிகள், ஆண்பால் படர்க்கை - உயர்திணை ஆண்பாற்படர்க்கை வினைமுற்றும் குறிப்புமுற்றுமாம். எ-று.

போ-ரை. அன் ஆன் என்னும் இருவிகுதியும் இறுதியாகிய மொழிகள் உயர்திணை ஆண்பாற்படர்க்கை வினைமுற்றும் வினைக்குறிப்பு முற்றுமாம். எ-று.

வி-பு. ஆண் பெண் என்னும் விகற்பம் அஃறிணைப்பெயர்க்கண் அன்றி அவ்வினைக்கண் இன்மையின், ஆண் என்றமையான் உயர்திணை என்பதூஉம்; பால் என்றமையான் முற்று என்பதூஉம்; மேலைச்சூத்திரத்து முற்றுவினைப்பதம் ஒன்றேயென விதந்தாற்போல இதனுள் விதவாமையின், இருவகைமுற்றிற்கும் பொதுவாகக்கூறினானென்பதூஉம் பெற்றாம். மேல்வருஞ் சூத்திரங்களுமன்ன.

[வ-று.] நடந்தனன், நடந்தான், நடவாநின்றனன், நடவாநின்றான், நடப்பன், நடப்பான், (நம்பி)— என உயர்திணை ஆண்பாற் படர்க்கை இறந்தகாலவினைமுற்றும், நிகழ்காலவினைமுற்றும், எதிர்கால வினைமுற்றும் முறையே வந்தன.

குழையினன், குழையான், - நம்பி :—என உயர்திணை ஆண்பாற்படர்க்கை வினைக்குறிப்புமுற்று வந்தன.

ருஉசு. அள்ளா லிறுமொழி பெண்பாற் படர்க்கை.

இது மேற்கூறிப்போந்த இருவகை முற்றுள் பெண்பாற்படர்க்கைக் குரியன உணர்த்துகின்றது.

ப-ரை. அள் ஆள் இறு மொழி - அள் ஆள் என்கிற இரண்டு விகுதியையும் இறுதியிலுடைய மொழிகள், பெண்பால் படர்க்கை- உயர்திணைப் பெண்பாற்படர்க்கை வினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம்.

போ-ரை. அள் ஆள் என்னும் இருவிகுதியும் இறுதியாகிய மொழிகள் உயர்திணைப்பெண்பாற்படர்க்கைவினை முற்றும் குறிப்பு முற்றுமாம்.

[வ-று] நடந்தனள், நடந்தாள், நடவாநின்றனள், நடவாநின்றாள், நடப்பள், நடப்பாள்,- நங்கை: - என உயர்திணைப் பெண்பாற்படர்க்கை இறந்தகால வினைமுற்றும், நிகழ்காலவினைமுற்றும், எதிர்காலவினைமுற்றும் முறையேவந்தன.

குழையினள், குழையாள்,-நங்கை :—என உயர்திணைப் பெண்பாற் படர்க்கை வினைக்குறிப்பு முற்று வந்தன.

ருஉள. அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற - பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.

இது மேற் கூறிப்போந்த இருவகைமுற்றுள் பலர்பாற்படர்க்கைக் குரியன உணர்த்துகின்றது.

ப-ரை. அர் ஆர் ப ஊர் அகரம் மார் ஈற்ற - அர் ஆர் ப மார் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், பல்லோர் படர்க்கை - உயர்திணைப் பலர்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், மார் - இவற்றுள்ளே மார் ஈற்று வினைமுற்று, வினையொடு முடியும் - பொதுவிதியாற் பெயருடன் முடிவதன்றி வினையுடனும் முடியும். எ-று.

போ-ரை. அர் ஆர் ப மார் என்னும் நான்கு விகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் உயர்திணைப்பன்மைப் படர்க்கைவினை முற்றும் குறிப்புமுற்றுமாம் ; இவற்றுள் மார் ஈற்று வினைமுற்று பொதுவிதியால் பெயருடன் முடிவதன்றி வினையுடனும் முடியும். எ-று.

வி-பு. "மாரொதிர்வும் பாந்தஞ் செலவொடு வரவும்." என பதவியலுள் கூறினமையின் இவ்விருவிகுதியும் குறிப்புமுற்றின்கண் வாரா வெனவும்; மார் வினையுடனும் முடியும் என்றமையின் இதற் கெய்தியதன்

மேல் சிறப்புவிதி வகுத்தாரெனவும்; வினையோடுமுடிமே என்புழி இறந்ததுதழீஇய எச்சவும்மை யின்றெனக்கொள்ளினும் அமைபீக்கூறினமை யின் வினையொடுமுடிதல்போல் பெயரொடுமுடிதல் பயின்றுவருவ தன்றெனவுங் கொள்க.

[வ-று.] நடந்தனர், நடந்தார், நடக்கின்றனர், நடக்கின்றார், நடப்பர், நடப்பார்-அவர் :— என உயர்திணைப்பலர்பாற்படர்க்கை இறந்தகால வினைமுற்றும், நிகழ்காலவினைமுற்றும், எதிர்காலவினைமுற்றும் முறையே வந்தன.

குழையினர், குழையார் - அவர் :— என உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைக்குறிப்புமுற்று வந்தன.

நடப்ப, எய்துப, செல்லுப, புல்லுப - அவர் (எ-ம்);

"பெரிய வோதினுஞ் சிறியவுணராப் - பீடின்று பெருகிய திருவிற்-பாடின்மன்னரைப் பாடன்மாரெமரே." (பாடன்மார்) (எ-ம்) வரும்.

பாடன்மார் என்பது மார் ஈற்று எதிர்மறை வினைமுற்றாதலின் எதிர் கால வினையொன்றனையும் மறுத்து பாடுவாரல்லர் என்னும் பொருட்டாய் நின்று எமர் என்னும் பெயர்கொண்டது.

இனி வினையொடு முடியுமாறு— "ஆர்த்தார் கொண்மார் வந்தார்"

"விழுக்கோட் பல்வின் பழூஉப்பயன் கொண்மார்-குறவ ரூன்றிய குரம்பை புதைஇ." எனவரும்.

இதனை வினைமுற்று வினையெச்சமாயிற் றென்றால் என்னையெனின், வினைமுற்றினவழி அதற்கியைந்த பெயர்ப் புணரின் வாராது இயையாத வினைவந்ததேல் அதற் கியைய வினைமுற்று வினையெச்சமாயிற் றெனப்படும். இம் மார் ஈற்று வினைமுற்றிற்குப் பெயர்போல வினையும் இயைந்து வருதலின் முற்றெச்ச மாயினதன்று முற்றேயா மென்க.

பின்வரும் ‡ "செய்கெனொருமையும் செய்குமென் பன்மையும்" என்னும் முற்றுக்களுமன்ன.-" காலமொடு கருத வரினு மாரை-மேலைக் கிளவியொடு வேறுபா டின்றே."—என்றார் ஆசிரியர் அகத்தியனாரும் என்க.

௩௨அ. துறுடுக் குற்றிய லுகர வீற்ற - வோழ்றன் படர்க்கை டுக் குறிப்பி னுதும்.

இது மேற்கூறிப்போந்த இருவகைமுற்றும் ஒன்றன்பாற்படர்க்கைக் குரியன உணர்த்துகின்றது.

‡ நன்னூல், சூ. ௩௩௩.

ப-ரை. து று டு குற்றியலுகரம் ஈற்ற - து று டு என்கிற இம் மூன்று குற்றியலுகர விகுதிகளை இறுதியிலுடையமொழிகள், ஒன் றன் படர்க்கை - அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினைமுற் றும் குறிப்புமுற்றுமாம்; டு-இவற்றுள் டுவ்விகுதி, குறிப்பின் ஆகும்- குறிப்பு வினைமுற்றிற் கல்லது தெரிநிலை வினைமுற்றிற்கு வருவ தில்லை. எ-று.

பொ-ரை. இம்மூன்று குற்றியலுகரவீற்று விகுதிகளையும் இறுதியாக வுடைய மொழிகள் அஃறிணை ஒருமைப்படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்; இவற்றுள் டுவ்விகுதி குறிப்பின்கண்ன்றி தெரிநிலைக்கண் வாராது. எ-று.

வி-பு. றுவ்விகுதி முக்கால வினைக்கண்ணும் பயின்று வாராமையா னும், துவ்விகுதி தன்முன்னின்ற எழுத்து நோக்கி றுவ்விகுதியாய்த் திரிந்த தெனினும் அமையுமாதலானும், டுவ்விகுதி குறிப்பொன்றற்கே வருதலா னும், இதுவும் துவ்விகுதி திரிந்ததெனினும் அமையு மாதலானும் துவ் விகுதியின்பின் கூறப்பட்டன.

[வ-று.] நடந்தது, நடக்கின்றது, நடப்பது, வந்தன்று, கூயிற்று - அது:- என அஃறிணை ஒன்றன்பாற்படர்க்கை முற்று துவ்விகுதி முக்காலத்தி னும், றுவ்விகுதி இறந்தகாலத்தினும் முறையே வந்தன.

அணித்து, சேய்த்து, அற்று, இற்று, எற்று - அது (எ-ம்);

பொருட்டு, ஆதிரைநாட்டு, குண்டுகட்டு - அது (எ-ம்) அஃறிணை ஒன் றன்பாற்படர்க்கைக் குறிப்புவினை முற்றுவந்தன.

வந்தன்று - என்புழி அன் என்பது சாரியை.—சுட்டினும் வினாவி னும் வந்த வினைக்குறிப்புக்கள், "பொருண்முத லாறினுந் தோற்றி." என்றவற்றுள், எப்பொருளவெனின், பொருளாதி யாறனுள் யாதானும் ஒன்றனைச் சுட்டியும் வினவியும் வருதலின் அவ்வவப்பொருளவாமென்க.

துற்றியலுகரவீற்ற என்றமையான், எற்று என்முற்போல, எது, யாது என்பனவும் காரணப்பெயரா மன்றி வினைக்குறிப்புமாம் என்பதூஉம்; அங்ஙனமாகவே,—"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே." என்பதனான், அது, இது - என்றற்றொடக்கத்து முற்றுகரவீற்றவும் வினைக் குறிப்பாம் என்பதூஉம் பெற்றாம்.

௩௨௬. அ ஆ வீற்ற பலவின் படர்க்கை - யாவே யெதிர்மறைந் தன்ணு தாகும்.

இது மேற்கூறிப்போந்த இருவகை முற்றுள் பலவின்பாற்படர்க்கைக் குரியன உணர்த்துகின்றது.

ப-ரை. அ ஆ ஈற்ற-அ ஆ என்கிற விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள், பலவின் படர்க்கை - பலவின்பாற்படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம், ஆ - அவற்றுள் ஆகாரம், எதிர்மறை கண்ணது ஆகும் - எதிர்மறையினிடத்து வருமன்றி உடன்பாட்டினிடத்து வாராது. எ-று.

போ-ரை. இவ்விரு விகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் அஃறிணைப்பன்மைப்படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்; இவற்றுள் ஆகாரம் எதிர்மறைவினைக் கண்ணதாமன்றி உடன்பாட்டு வினைக்கண் வாராது. எ-று.

வி-பு. ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும் என்றமையான் ஏனை விகுதிகள் உடன்பாட்டினும் எதிர்மறையினும் வருமென்பது பெற்றும்.

[வ-று] நடந்தன, நடந்த, நடவாநின்றன, நடவாநின்ற, நடப்பன, நடப்ப-அவை :—என அஃறிணைப் பலவின்பாற்படர்க்கை இறந்தகால வினைமுற்றும், நிகழ்கால வினைமுற்றும், எதிர்காலவினைமுற்றும் முறையே வந்தன.

கரியன, கரிய -(அவை)— என அஃறிணைப் பலவின்பாற்படர்க்கைக் குறிப்புவினை முற்றுவந்தன.

நடந்தில, நடவாநின்றில, நடவா அவை :— என அஃறிணைப் பலவின்படர்க்கை எதிர்மறை இறந்தகால வினைமுற்றும், நிகழ்கால வினை முற்றும், எதிர்கால வினைமுற்றும் முறையேவந்தன.

¶ இல்லன, இல்ல என்னும் எதிர்மறை வினைக்குறிப்பு முற்றின் கண் பகுதியே மறைப்பொருள் தந்து நிற்றலின் இதற்கெதிர் மறையாகாரம் வேண்டாமையின் ஏற்புழிக் கோடலான் இம்மறை விகுதி தெரிநிலைக்கே கொள்க.

இங்ஙனங் காட்டிய அன்பெறு அகர ஈற்றுப் பலவறி சொற்களுள் நடப்ப என்பதன் இறுதிநோக்கி உயர்திணைப்பன்மைப்படர்க்கைக்கும், அஃறிணைப்பன்மைப்படர்க்கைக்கும்பொதுவினையென்று கொள்ளற்க.— இதன்கண் பகரம் எதிர்கால வினை இடைநிலையாதலின் இத்தொடக்கத்தனவெல்லாம் பலபொருள் ஒருசொல்லாமென்க.

௩௩௦. தன்மை முன்னிலை வியங்கோள் வேறில - யுண்டி ரோச்ச மிருதிணைப் பொதுவினை.

¶ இனி உரையிற்கோடல் என்னும் உத்தியான் இம்மணிநல்ல என்று உடம்பாட்டுக் குறிப்புவினைக்கு எதிர்மறையாக இம்மணி போல்லா (எ-ம்), நீரத்நீரத்தீர் போல்லாவே (எ-ம்):— இந்த எதிர்மறை ஆகார விகுதி குறிப்பின்கண்வருதலுங்கொள்க - என்பர்.—இராமாநுசகவிராயர்.

இது இருபாலிடங்கட்கு பொதுவினை உணர்த்துவான் தொடங்கி அவற்றுள் இருதிணைக்கும் பொதுவினை இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. தன்மை - தன்மைவினை வினைக்குறிப்பு முற்றுக்களும், முன்னிலை - முன்னிலைவினை வினைக்குறிப்பு முற்றுக்களும், வியங்கோள் - வியங்கோள் வினைமுற்றுக்களும், வேறு இலை உண்டு - வேறு இல்லை உண்டு என்கிற மூன்று வினைக்குறிப்பு முற்றுக்களும், எச்சம் - பெயரெச்சவினை வினைக்குறிப்புக்களும் வினையெச்சவினை வினைக்குறிப்புக்களும், இரு திணை - உயர்திணை அஃறிணை என்கிற இருதிணைக்கும், பொதுவினை - பொதுவினைகளாம். எ-று.

பொ-ரை. தன்மைவினை வினைக்குறிப்பு முற்றும், முன்னிலைவினை வினைக்குறிப்பு முற்றும், வியங்கோள் வினைமுற்றும், வேறு இல்லை உண்டு என்னும் மூன்று வினைக்குறிப்பு முற்றும், பெயரெச்சவினை வினைக்குறிப்பும், வினையெச்சவினை வினைக்குறிப்பும் இருதிணைக்கும் பொதுவினையாம். எ-று.

வி-பு. தன்மை முன்னிலை என்றமையான், அவை முற்றென்பது பெற்றாம். எச்சம் எனப் பொதுப்படக் கூறினாரேனும், முற்றெச்சங்கள் முற்றோடொக்குமாதலின் அவையொழியக் கொள்க.

செய்யும் என்னும் முற்றும் இருதிணைப் பொதுவினையன்றோ அதனைக் கூறாதொழிந்த தென்னையெனின், முற்று எச்ச மாயினாற்போல, செய்யும் என்னும் பெயரெச்சம் செய்யும் என்னும் முற்றானமையின், எச்சமிருதிணைப்பொதுவினை யென்றதனானே அம்முற்றும் இருதிணைப் பொதுவினையென்பது தாமே போதருமென்க.

செய்யும் எனெச்சம் முற்றாமாறும், அம்முற்றிற்கு ஈண்டுப்போந்த இருதிணைப் பொதுமொழி அஃது ஐம்பான் மூவிடங்களின் பொதுமையின் நிற்குமாறும் மேற்கூறுப.

௩௩௧. குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ - டல்ல னென்னே னாகு மீற்ற - விருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

இது நிறுத்த முறையானே தன்மை ஒருமை வினைமுற்றும் குறிப்பு முற்றும் உணர்த்துகின்றது.

ப-ரை. கு டு து று என்னும் குற்றியலுகரமோடு - கு டு து று என்கிற குற்றியலுகர விகுதிகளும், அல் அன் என் ஏன் - அல் அன் என் ஏன் என்கிற நான்கு மெய்யீற்று விகுதிகளும், ஆகும் -

ஆகிய, ஈற்ற-இவ்வெட்டுவிகுதிகளையும் இறுதியிலேயுடைய மொழிகள், இரு திணை - இருதிணையிடத்தனவாகிய, முக்கூற்று - ஒருவன் ஒருத்தி ஒன்று என்கிற மூன்றுபால்களுக்கும் பொதுவாகிய, ஒருமை தன்மை - ஒருமைத்தன்மை வினைமுற்றும் குறிப்புமுற்றுமாம்.

பொ-ளை. இவ்வெட்டு விகுதிகளையும் இறுதியாகவுடைய மொழிகள் இருதிணைக்கண்ணவாகிய ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் முக்கூற்றொருமைத்தன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ-று.

வி-பு. துவ்விகுதியை உடன்கூறினமையின்-அதன்பின்னின்ற மூன்றுங்காலங் காட்டும் விகுதிகளென்பதூஉம், ஒருமை என்றமையின் இவை திணைப்பொதுவன்றி பாற்பொதுவாகாதென்பதூஉம் பெற்றாம். ஒருமை பன்மை எனமேல்விதப்பனவும் அன்ன.

[வ-று.] உண்து, கொண்டு, வந்து, வருது, சென்று, சேறு, ¶ உண்பல், உண்டவன், உண்ணாநின்றனன், உண்பன், உண்டனென், உண்ணாநின்றனென், உண்குவென், உண்டேன், உண்ணாநின்றேன், உண்பேன் - யான் (எ-ம்); தாரினென், தாரினேன்-யான் (எ-ம்) வரும். காட்டாதொழிந்தன வந்துழிக்காண்க.

‡ தன்மைக்கண்ணும் அன்விகுதி கொள்ளாதொழியின், ‡‡"எழுத்தசைசீர் பந்தமடிதொடை பாவினங் கூறுவன்." என்றற்றொடக்கத்தன அமையா வென்க.

கூகூஉ. அம்மா மென்பன முன்னிலை யாரையு - மெம்மே மோமிவை படர்க்கை யாரையு - மும்மூர் கடதற விருபாலாரையுந் - தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

ஓது தன்மைப்பன்மை வினைமுற்றும் குறிப்புமுற்றும் உணர்த்துகின்றது.

ப-ரை. அம் ஆம் என்பன - அம் ஆம் என்கிற இரண்டுவிகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், முன்னிலையாரை உம் - தன்னிலையி னிற்கையன்றி முன்னிலையிடத்தாரையும், எம் ஏம் ஓம் இவை - எம் ஏம் ஓம் இம்மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், படர்க்கையாரை உம் - தன்னிலை நிற்கை யன்றிப் பட

¶ உண்ணுநிற்பல் எனச் சிறுபான்மை நிகழ்காலத்தும் வரும்என்பர்.- இராமாநுசகவிராயர்.

‡ இதனை 'இவன் என்னும் எவ்வ முனையாமை' யென்புழி பரிமேலழகர்-அன் என்பதைத் தன்மை ஒருமை வினைமுற்று விகுதியாகப் பொருள் கூறலானும் உணர்க.

‡‡ காரிகை, பாயிரம், செ. க.

ர்க்கையிடத்தாரையும், உம் ஊர் க ட த ற - கும் டும் தும் றும் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், இருபாலாரை உம் - தன்னிலையில் நிற்கையன்றி அவ் வீரிடத்தார்களையும், தன்னொடு படுக்கும் தன்மை பன்மை - தன்னுடன் கூட்டுகிற தன்மைப்பன்மை வினைமுற்றும் குறிப்புமுற்றுமாம். எ-று.

போ-ரை. தன்னிலையில் நிற்பதன்றி அம் ஆம் என்னும் இவ்விரு விகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் முன்னிலையாரையும், எம் ஏம் ஓம் என்னும் இம்மூன்று விகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் படர்க்கையாரையும், கும் டும் தும் றும் என்னும் இந்நான்கு விகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் முன்னிலை படர்க்கை என்னும் ஈரிடத்தாரையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம். எ-று.

வி-டு. தன்னிலையில்நிற்பதன்றி என்னும் இறந்ததுதழீஇய எச்சவும்மைகள் எண்ணும்மைகளாயும், இருபாலாரையும் என்புழி இவற்றொடு முற்றும்மையாயும் நின்றன.

[வ-று] உண்டனம், உண்ணாநின்றனம், உண்பம், உண்டாம், உண்ணாநின்றாம், உண்பாம், தாரினம், தாரினும் - யாம் (எ-ம்) ;-யானும் நீயும் (எ-ம்) ; உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்பெம், உண்டேம், உண்ணாநின்றேம், உண்பேம், உண்டோம், உண்ணாநின்றோம், உண்போம், தாரினெம், தாரோம், தாரினோம் - யாம் (எ-ம்) ; - யானும் அவனும் (எ-ம்) ; உண்குய், உண்டும், வந்தும், வருதும், சென்றும், சேறும்-யாம் (எ-ம்) ; - யானும்நீயும் அவனும் (எ-ம்) :— தனித்தன்மைப்பன்மையும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மையும் முறையே வந்தன.

இன்னும் அவ்வும்மைகளை ஐய உம்மைகளாக்கி அம் ஆம் என்பன முன்னிலையாரையேனும் படர்க்கையாரையேனும் ஒருங்கு தன்னொடு படுக்குமெனவும் ; ஆக்கஉம்மையாக்கி அம் ஆம் என்பன முன்னிலையாரையும் படர்க்கையாரையும் ஒருங்கு தன்னொடு படுக்குமெனவும் பொருளுரைத்து, உண்டனம் யானும் அவனும் (எ-ம்) ; - யானுநீயும் அவனும் (எ-ம்) :— அருகிவருதல் கண்டுகொள்க. ஏனை எட்டுவிகுதியுமன்ன.

இவற்றை ‡" ஒரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்னும்இடவழுவமைதியாகக் கோடலு மொன்று. தன்மையொருமைக்கண் அன் விகுதியும், பன்மைக்கண் ஓம் விகுதியும் புதியனபுகுதல்.

---

‡ நன்னூல், சூ. ௩அ௦.

௩௩௩. செய்கே னொருமையுஞ் செய்குமேன் பன்மையும் - வினை யோடு முடியினும் விளம்பிய முற்றே.

இது எய்தியதன்மேற் சிறப்புவிதியும் எய்திய திகந்துபடாமற் காத்தலும் உணர்த்துகின்றது.

வினையோடுமுடியினும் என்றமையான் பெயரோடுமுடியும் என்னும் விதி தாமே போதருமாதலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி என்றும்.

ப-ரை. செய்கு என் - செய்கு என்கிற, ஒருமை உம்-தன்மை யொருமைமுற்றும், செய்கும் என் - செய்கும் என்கிற, பன்மைஉம்-தன்மைப்பன்மை முற்றும், வினையொடு முடியின் உம்-பெயருடனே யன்றி வினையுடனே முடியினும், விளம்பிய - முன்சொல்லப்பட்ட, முற்று ஏ-முற்றுக்களேயாம். எ-று.

போ-ரை. செய்கு என்னுந் தன்மையொருமைமுற்றும் செய்கும் என் னுந் தன்மைப்பன்மைமுற்றும் பெயருடனேயன்றி வினையுடனேயும் முடி யும்; அங்ஙனமுடியினும் மேற்கூறிய முற்றேயாம். எ-று.

வி-பு. எச்சங்களைப்போலாது வினைமுதலைத்தரும் விகுதியுறுப்போடு கூடி முற்றிநிற்றலின் முற்றெனப்பட்டதன்றி, பயனிலைகொண்டு முற்ற லின் முற்றெனப்பட்ட தன்றென்பார் பெயரோயன்றி வினையோடுமுடியி னும் விளம் பியமுற்றே என்றார்.

[வ-று.] உண்குவந்தேன், உண்கும்வந்தேம் என வரும்.

இங்ஙனமாயின், உண்பேன் வந்தேன், உண்பேம் வந்தேம் என இவ்வொருமை பன்மையும் வினையோடுமுடியுமென்று லென்னையெனின், ‡ "எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர் - செப்பின ரப்படிச் செப்புதன் மரபே." என்பவாகலின் செய்கெனொருமையுஞ் செய்குமென் பன்மையும் பெயரொடும் வினையொடும் முடிதல் மரபாயினாற்போல அவை பெயருடனன்றி வினையொடு முடிதல் மரபன்மையின் அஃது இயையா தென்க.

௩௩௪. முன்னிலை கூடிய படர்க்கை முன்னிலை.

இது உளப்பாட்டுப் பன்மை முன்னிலைக்கண்ணும் உளதென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. முன்னிலை - முன்னிலையோடு, கூடிய - சேர்ந்த, படர் க்கை உம் - படர்க்கையும், முன்னிலை - முன்னிலையாம். எ-று.

---

‡ நன்னூல், சூ. ௩௮௮.

போ-ள. தன்மையோடுகூடிய முன்னிலை படர்க்கைகள் தன்மை யாதற்போல முன்னிலையோடுகூடிய படர்க்கை முன்னிலையாம். எ-று.

வி-பு விகுதிகளை விதவாது கூறினமையின் முன்னிலைப் பன்மை விகுதிகளெல்லாம் படர்க்கையை உள்ளடுத்து மென்பதூஉம், படர்க்கை என்றமையால் தன்மையை உளப்படுத்தா வென்பதூஉம் பெற்றாம்.

[வ-று.] நீயுமவனும்,-உண்டனிர்,-உண்டீர்,-உண்மின்,-குழையினிர், -குழையிர் (எ-ம்); "ஒண்டேவி நாராய்நின் சேவலுநீயுமாய் - வண்டேம் பூங்கானல் வைகலுஞ் சென்றீரால்." [சேவலும் நீயும் சென்றீர்] (எ-ம்) வரும்.

இச்சூத்திரம் முன்னிலைப் பன்மைமுற்றுக் கூறியவழிக் கூறாது ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல் என்னும் உத்தியான் ஈண்டுக் கூறப்பட்டது.

ங்கூடு. ஐயா யிகர வீற்ற மூன்று - மேவலின் வருஉ மெல்லா வீற்றவு - முப்பா லொருமை முன்னிலை மொழியே.

இது முன்னிலை ஒருமைவினை முற்றும் குறிப்பு முற்றும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஐ ஆய் இகரம் ஈற்ற மூன்று உம் - ஐ ஆய் இ என்கிற மூன்றுவிகுதிகளை இறுதியிலுடைய மொழிகளும், ஏவலின் வருஉம் எல்லா ஈற்ற உம் - விகுதி குன்றாதும் குன்றியும் நிற்பனவாகிய ஏவலிலே வருகிற இருபத்துமூன்றீற்றுமொழிகளும், முப்பால்-ஒருவன் ஒருத்தி ஒன்று என்கிற மூன்றுபால்களுக்கும் பொதுவாகிய, ஒருமை முன்னிலை மொழி - முன்னிலையொருமை முற்றும் குறிப்பு முற்றுமாம். எ-று.

போ-ளா. ஐ ஆய் இ என்னும் மூன்றீற்று மொழிகளும், விகுதி குன்றாதும் குன்றியும் நிற்பனவாகிய ஏவற்கண்வரும் இருபத்துமூன்றீற்றுமொழிகளும், ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் மூன்றுகூற்றவாகிய முன்னிலை ஒருமைவினைமுற்றும் குறிப்புமுற்றுமாம். எ-று.

வி-பு. இகரவீற்று மொழிகட்கு இகரம் எதிர்காலங் காட்டுவதன்றி இடைநிலை நின்றுங் காலங்காட்டு மென்பது தோன்ற ஐ ஆய் என்னும் விகுதிகளோடு இகரவிகுதியை உடன்கூறினர். ஏவல்முற்று தெரிநிலை யொன்றற்கே யுரிமையின் உம்மை கொடுத்து விதந்தோதினர்.

[வ-று.] உண்டனை, உண்ணாநின்றனை, உண்பை, உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய், உண்டி, உண்ணாநின்றி, சேறி, நடவாய், வாராய்,

கேளாய், அஃகாய், நட, வா, கேள், அஃகு :— என்பன முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களாம்.

வில்லினை, வில்லாய், வில்லி - நீ :— என்பன முன்னிலைக் குறிப்பு முற்றுக்களாம்.

இகர ஈற்று மொழிகள் எதிர்கால இடைநிலை யேற்குமேல் காண்க.

ஏவல் எனப் பொதுப்படக் கூறினமையின், 'செய்வி', செய்விப்பி என்னும் ஏவல்மேல் ஏவல்களும், செய்யல், செய்யேல் என்றற் றொடக்கத்து எதிர்மறை யேவல்களும், இருபத்துமூன் றீற்றுள் அடங்கிக்கிடந்தமை காண்க. பால்காட்டி நிற்றலின் ஏவலும் முற்றேயாமென்க.

௩௩௫. முன்னிலை முன்ன ரீயு மேயு-மந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இது ஏவல் முற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. முன்னிலை முன்னர்-முன்னிலை யேவல் முற்றெனமுன் சொல்லப்பட்டவற்றிற்கு முன், ஈ உம் - ஈகாரமும், ஏ உம்-ஏகாரமும், அ நிலை மரபின் - அவ்விடத்து நிற்றற்குரிய மரபினையுடைய, மெய்-யாதானும் ஒருமெய்யை, ஊர்ந்து-ஏறி, வரும்-வரும். எ-று.

போ - ரை. முன்னிலை யேவல் முற்றென மேற்கூறியவற்றிற்கு முன்னே ஈகாரமும் ஏகாரமும் ஆண்டுவந்து நிற்றற்குரிய மரபினையுடைய மெய் யாதானும் ஒன்றை ஊர்ந்துவரும். எ-று.

வி-பு. ஈகார ஏகாரங்களை, "அன் ஆன் அள் ஆள்" என் விகுதி கூறியவழி எடுத்தோதாமையானும், மேலைச்சூத்திரத்து ஐ, ஆய், இகரங்களோடு ஒருங்கோதாமையானும் இவை விகுதியுருபல்லவென்பதூஉம், ஏவற்கண் வரும் எழுத்துப்பேறென்பதூஉம், அந்நிலைமரபின்மெய் என விதந்தமையின் அஃது அம்மொழி இறுதிமெய் யன்றென்பதூஉம் பெற்றாம்.

"சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ." [செல்=சென்றீ] (எ-ம்), "அட்டிலோலை தொட்டனை நின்மே." (எ-ம்) வரும்.

இவ்வெழுத்துப்பேறு, "நடவாமடி" என்னுஞ் சூத்திரத்தின்பின் கூறாது ஈண்டுக் கூறினர்.

இவ்வாறுவரும் ஏவல்கள் பகுதிமாத்திரையன்றி நிற்றலின், இவை முன்னிலை யொருமைவிகுதி உருபீற்று வினைமுற்றோ ஏவல்வினைமுற்றோ என்று ஐயுறுவார்க்கு ஐயமறுத்தற்கு. இவற்றிற்கு விகுதியுருபின் பொருளின்மையின் முன்னிலைஅசையாம் என்க.

நஙஎ. இரீஈ ரீற்ற விரண்டு மிருதிணைப் - பன்மை முன்னிலை மின்னவற் றேவல்.

இது முன்னிலைப் பன்மை வினைமுற்றும் குறிப்புமுற்றும் உணர்த்துகின்றது.

ப-ரை. இர் ஈர் ஈற்ற இரண்டு உம் - இர் ஈர் என்கிற இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், இரு திணை-இருதிணைக்கும்பொதுவாகிய, பன்மை முன்னிலை-பன்மை முன்னிலை வினைமுற்றும் குறிப்புமுற்றுமாம், மின்-மின்விகுதியை யிறுதியிலுடைய மொழிகள், அவற்று ஏவல் - முன்னிலைப்பன்மை யேவன்முற்றும்.

பொ-ரை. இர் ஈர் என்னும் இருவிகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் இருதிணைப்பன்மைமுன்னிலை வினைமுற்றும் குறிப்புமுற்றுமாம். மின்என்னும் விகுதியை இறுதியாகவுடைய மொழிகள் இருதிணைப் பன்மைமுன்னிலை ஏவல் முற்றும். எ-று.

[வ-று.] நீர் உண்டனிர்,-உண்ணாநின்றனிர், - உண்குவிர், - உண்டீர், -உண்ணாநின்றீர்,-உண்பீர்,-குழையினிர்,-குழையீர் :—என்பனஇருதிணைப் பன்மை வினைமுற்றுக்களும் குறிப்புமுற்றுக்களாம்.

நீர் உண்மின் என்பது இருதிணைப்பன்மை முன்னிலை ஏவல்முற்றும்.

வி-பு. மின்னவற்றேவல் என்றமையான் நீர் உண்ணும், - தின்னும் எனஉம் ஈற்றவாய் வரும் பன்மையேவல் புதியன வென்பதூஉம், அவை ‡ "புதியனபுகுதலும் வழுவல" என்பதனுன் அமையு மென்பதூஉம் பெற்றும்.

நஙஅ. கயவோடு ரவ்வொற் றீற்ற வியங்கோ - ளியலு மிடம்பா லெங்கு மென்ப.

இது வியங்கோள்முற்று உணர்த்துகின்றது.

ப-ரை. க ய ஒடு - க ய என்கின்ற இரண்டுயிர் மெய்யினையும், ர வொற்று - ரகரமெய்யினையும், ஈற்ற - இறுதியிலுடைய மொழிகள், வியங்கோள் - வியங்கோள் முற்றுக்களாம், இடம் (எங்கும்) - மூன்றிடங்களிலும், பால் எங்கும் - ஐம்பால்களிலும், இயலும் - செல்லும், என்ப - என்றுசொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. க ய என்னும் இரண்டுயிர் மெய்யினையும் ரகரவொற்றினையும் இறுதியாகவுடையன வியங்கோள் முற்றும்; அவை மூவிடத்தினும் ஐம்பாலினும் செல்லுமென்று சொல்லுவர் புலவர். எ-று.

‡ நன்னூல், சூ. சசஉ.

வி-பு. ரவ்வோற்று என்றமையான் முன்னைய இரண்டும் உயிர் மெய்யென்பதூஉம், ஒடு என்றமையான் ரகரவொற்று ககர யகர உயிர் மெய்கள்போல் தனித்தியலாது யகரத்தோடு வரப்பெறுமென்பதூஉம், என்ப என்றமையான் இம்மூன்றீற்றவும் தொன்றுதொட்டு நெறிய வென்பதூஉம்பெற்றாம்.

[வ-று.]

யான், யாம்	வாழ்க, - வாழிய -வாழியர், - நிலியர்	எனத்தன்மையினும்,
நீ, நீர்	ஷை	எனமுன்னிலையினும்,
அவன், அவள், அவர், அது, அவை	ஷை	எனப்படர்க்கை ஐம்பாலினும்,

"பெறுக தில்லம்ம யானே" [யான்பெறுக.] எனத் தன்மை ஒருமையினும்;

"வெல்க வாழிநின் வென்றிவார் கழல்" [கழல்வாழ்க.], "செல்க நியன சிறக்கநின்புகழே." [புகழ்செல்க.] எனப்படர்க்கை ஒருமையினும்;

"மன்னியபெரும்நீ நிலமிசையானே" [நீ மன்னிய]:— என முன்னிலை ஒருமையினும்:—வியங்கோள்வினைமுற்றுக்கள் வாழ்த்துதற்பொருண்மைக்கண் வந்தன.

நடக்க,வருக, உண்க, செல்க:—என வியங்கோள்வினைமுற்றுக்கள் உயர்ந்தோன் இழிந்தோனை இன்னது செய்கவென விதித்தற்பொருண்மைக்கண் வந்தன.

‡"போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்"[யாம்போற்றி.]எனத் தன்மைப் பன்மையினும்;- ‡‡"என்கோங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க." [கொங்கைசேரற்க.] எனப் படர்க்கை ஒன்றன்பாலினும்;

"கடாவுக பாகநின் கால்வ னெடுந்தேர்." [பாக கடாவுக.] என முன்னிலை ஒருமையினும்:— வியங்கோள் வினைமுற்றுக்கள் வேண்டிக் கோடற்பொருண்மைக்கண் வந்தன.

இங்ஙனங்கூறினர் "வருத்துனா யாதவும் வருத்தனர் கோளலே." என அல் ஈற்று வியங்கோளும் உடன்பட்டுப்புணர்த்தமையின் எடுத்தோதாப் பிறவீற்றவாய் இருதிணை ஐம்பால் மூவிடங்களினும் வாழ்த்து

‡ திருவாசகம், திருவெம்பாவை, செ. ௨௦.
‡‡ ஷை ஷை செ. ௧௯.

முதலிய ஏவற்பொருளவாய்ச் சென்றன வுளவேல் அவை "புதியன புகுதலும் வழுவல" என்னும் வழுவமைதியாய் வந்த வியங்கோள் என்ப தாஉம் பெற்றாம்.

†"பயனில்சொற் பாராட்டுவானை ¶மகனெனல்-மக்கட்பதடியெனல்." என்புழி பதடியெனல் என்பது வியங்கோள்; மகனெனல் என்பது எதிர்மறையொருமையேவல். இவ்வாறு பிறவீற்றவாய் வருமாயின் அவை வியங்கோளாதல் ஆராய்ந்துகொள்க.—ஏவல் வியங்கோள் என்

† திருக்குறள், சே. ககூகூ.

¶இனி மொழிந்தபொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால், அல் – ஆல் – உம்–மார்–ஐ–என்னும் விகுதிகளை யுடையனவும் வியங்கோள் முற்றுக்களெனக்கொள்க. இவற்றுள் அல் ஈறு மகனெனல் மக்கட் பதடியெனல் என மகன் என்று சொல்லாதொழிக, பதடி என்று சொல்லுக என எதிர்மறையிலும் உடன்பாட்டிலும்; ஆல்ஈறு மரீஇயதோரால் மருவியதை நீக்காதொழிக எனவிதித்தற்கண் எதிர்மறையிலும்; உம் ஈறு வாழ்தல் வேண்டும் இவண்வரைந்த வைகல் என வாழ்த்துதற்கண்ணும்; வரல்வேண்டும் என வேண்டிக்கோடற்கண்ணும்; மார் ஈறு பாடன்மாரெயமே எனப் பாடுவாராகவென வாழ்த்துதற்கு எதிர்மறையிலும், ஐ ஈறு அஞ்சாமையஞ்சுவ தொன்றின் என விதித்தற்கண் எதிர்மறையிலும் வருமெனக் காண்க. நாடா கொன்றே, காடா கொன்றே என்பன நாடாக, காடாக என வருதலால் இவையும் வியங்கோளெனவும்; இவற்றுள் ஒன்றே என்பது எண்ணிடைச்சொல்லாதலால் இதுபோலவே 'சியகங்கன்றநுகேன மொழிந்தனனுக' என்பதில் தருக என வியங்கோளாய் வேண்டிக் கோடற்பொருளில் வருதலும், செய்க என்னும் வாய்பாட்டு வியங்கோள் முற்றிற்குச் செய்யாதொழிக என வினையெச்சமும் முடிக்குஞ்சொல்லுமாய்விரிந்து எதிர்மறையாதலும், செய்யல் என்னும் எதிர்மறை வியங்கோள் விகுதிமேல் விகுதிபெற்றுச் செய்யற்க என நின்று எதிர்மறையாதலும், செய் என்னும் வாய்பாட்டு ஒருமை ஏவற்கு செய்யல், செய்யால், செய்யேல், செய்யாதை:—என நின்றுஎதிர்மறை யாதலும், செய்யும் என்னும் வாய்பாட்டையுடைய பன்மையேவல் போம் என ஈற்று உயிர்மெய் கெட்டுத் துணிவுதோன்ற நிற்றலும், போய்விடும், போய்த்தொலையும், போயொழியும் என வினையெச்சமும் முடிக்குஞ்சொல்லுமாய் விரிந்து விரைவும் வெகுளியுந்தோன்ற நிற்றலும், போ என்னும் ஒருமையேவலும், போய்விடு, போய்த்தொலை, போயொழி, என அவ்வாறு நிற்றலும், செய்தல்வேண்டும் என்னும் வியங்கோள்செய்யவேண்டும் எனவினையெச்சமும் முடிக்குஞ்சொல்லும்போல நிற்றலுமன்றி செய்யட்டும் என இடைக்குறைந்து மரீஇ நிற்றலும் பிறவுங் காண்க என்பர்.—இராமாநுசகவிராயர்.

இதனைச் சேறுவளையநும் எனலை என்பது எனல் என ஐவிகுதி புணர்ந்துகெட்டதெனவும், அல்எதிர்மறை விகுதியெனவும், உடன்பாட்டில் 'செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல் செய்யென் பொருளுந் தருகிடனுடைத்தே' என்றாற்போலக் கொள்க எனவும் கூறுவர். பரிமேலழகரும் அல் ஏவலொருமை யென்றே பொருளுரைப்பர்.

பன ஒரு பொருட்கிளவியாயினும் இருதிணை ஐம்பான் மூவிடங்களினுஞ் செல்லும் ஏவலை ‡‡ வியங்கோளென்பது தொன்னெறி மரபாம் என்க.

௩௩௯. வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.

இது இவ்வினைக்குறிப்புமுற்று மூன்றும் பாலிடங்கட்குப் பொதுவாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. வேறு இல்லை உண்டு - வேறு இல்லை உண்டு என்கிற மூன்றுவினைக் குறிப்பு முற்றுக்களும், ஐம்பால் - ஐம்பாலுக்கும், மூ விடத்தன - மூவிடத்திற்கும் உரியனவாம். எ-று.

பொ-ரை. வேறு இல்லை உண்டு என்னும் மூன்றுவினைக் குறிப்பு முற்றும் ஐம்பாற்கும் மூவிடத்திற்கும் உரியனவாம். எ-று.

வி-பு. உண்டு என்பது அஃறிணை ஒருமைக்கே யன்றிப் பொது வினையாதல் புதியனபுகுதலாமென்பார் பின்கூறினர்.

வேறு அவன், இல்லை அவன், உண்டுஅவன்,-அவள்,-அவர்,-அது,-அவை,-யான்,-யாம்,-நீ,-நீர் (எ-ம்); † "விளிந்தாரின் வேறல்லர் மன்ற" (வேறு);

"யாருமில்லைத் தானேகள்வன் - றானதுபொய்ப்பின் யானெவன் செய்கோ." [யாவரும் இல்லை.];

"தினைத்தா ளன்ன சிறுபசுங் கால - வொழுகுநீ ராரல்பார்க்குங் - குருகு முண்டுதா மணந்த ஞான்றே." [குருகும் உண்டு];

"பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல் - கொண்ட கொழுந னுழுகுறை தாங்குறூஉம் - பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல். [பெண்டிரும் உண்டு];

"நாவுண்டு நீயுண்டு நாமந் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ - பூவுண்டு
வண்டறங்குஞ் சோலை மதிலரங்கத் தேயுலகை
யுண்டுறங்கு வானொருவ னுண்டு." (எ-ம்) :—வரும்.

---

‡‡ வியங்கோள் என்றது 'வேண்டிக்கோடற்பொருட்டு' என்றும், சேனாவரையரும் 'வேண்டிக்கோடற் பொருண்மைக்கண் வரும்' என்றும், எழுத்தோத்தினுள் "ஏவல்கண்ணிய வியங்கோட் கிளவியும்" என அகர ஈற்றுள் எடுத்தலாற் பொருந்திய மெய்யூர்ந்து அகர ஈறாய்வருதலும், "செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்" எனவும், 'சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்' எனவும், 'மறைக்குங் காலை மரீஇய தோரால்' எனவும், உடம்பொடு புணர்த்தலான் அல் ஈறாய் வருதலும், ஆல் ஈறாய் வருதலும் பெறுதலின் வியங்கோள் ஈறு கூறினொனவேபடும். பிறவும் உள வேல் கொள்க என்பதனானும் உணர்க.

† திருக்குறள், செ. ௧௪௩.

† "பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை - வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்." (எஞ்சல் இல்) என்பது செய்யுளாதலின், இல்லை என்பது இல் எனக் கடைகுறைந்து நின்றது.

இனி மொழிந்தபொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்றுமுடித்தல் என்பதனால் வேண்டும், தகும், படும் என்னுஞ் சொற்களும் ஐம்பால் மூவிடத்தனவாம் எனவுங் கொள்க.

[வ-று.] †† "ஓஒதல் வேண்டுமொளிமாழ்குஞ் செய்வினை-யா அது மென்னுமவர்." [அவர் ஓஒதல் வேண்டும்];

யான் போகல்வேண்டும்; நீ யுரைத்தல் வேண்டும்.

* "இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு-வினைப்படு தொகுதியி னும்மைவேண்டும்." [உம்மைவேண்டும்];

‡ "இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள் - வினைப்படுத் தொகுப்பி னும்மைவேண்டும்." [உம்மைவேண்டும்];

** "இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்-கின்னென் சாரியை யின்மை வேண்டும்." [இன்மைவேண்டும்];

‡‡ "வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்-வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்."];

a† "நலம்வேண்டி னாணுடைமைவேண்டும்." [நாணுடைமைவேண்டும்] (எ-ம்):—

இவரால் இக்காரியஞ் செய்யத் தகும், இவ்வூ ழருந்தத் தகும், இச்சோறுண்ணத்தகும், இந்நீர்குடிக்கத்தகும் (எ-ம்):—

b†† "முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா-வஞ்சரை யஞ்சப்படும்." ††† "இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற-வொளியோ டொழுகப் படும்." a‡ "கற்றுணர்ந்தோரைத் தலைநிலத்து வைக்கப்படும்." b‡‡ "கீழ்களைச்-செய்தொழிலாற் காணப் படும்." (எ-ம்):—வரும்.

இம்மூன்றும் ஒருபொருட் கிளவியாய் தொழிற்பெயராய் தேற்றப் பொருள்பட்டே நிற்குமென்க.

---

† திருக்குறள், செ. சச. ‡ நன்னூல், சூ. ௩௬௬.
†† ஷை, செ. ௬௫௩. ‡‡ ஷை சூ. ௩௮௬.
* தொல். சொல். கிளவியாக்கம், செ. ௩௩.
a† திருக்குறள், செ. ௬௰௦.
b†† ஷை செ. அ௨௪. ††† திருக்குறள், செ. ௬௯௮.
a‡ நாலடியார், செ. ௧௩௩. ** தொல். எழுத். புணரியல், சூ. ௨௬.
b‡‡ ஷை செ. ௩௭௭.

இங்ஙனம் வருஞ் செய்யுட்கட்கெல்லாம், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர், உரையாசிரியர் முதலாயினோர் முற்றாயும், எச்சமாயும் பொருளுணாக்கின் வழுவாமென்று கருதி வியங்கோட்பொருட்டு என்றும், விதிப்பொருட்டு என்றும், ததிப்பொருட்டு என்றும், வேண்டும் என்றும், தமக்கு வேண்டியவாறே பொருளெழுதி சொற்குணம் வாளாபோயினர். அதுநிற்க.

௩௪௦. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற் - காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு - செய்வ தாதி யறுபொருட் பெயரு - மெஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

இது ஈரெச்சம் என்றவற்றுள் பெயரெச்சமாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. செய்த செய்கின்ற செய்யும் என் - செய்த என்றும் செய்கின்ற என்றும் செய்யும் என்றுஞ் சொல்லப்படுகிற, பாட்டில்-மூவகைச்சொற்களிலே, காலம் உம் - முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்கிற மூன்று காலங்களும், செயல் உம் - தொழிலும், தோன்றி - தோன்றி, பாலொடு - பாலுடனே, செய்வது ஆதி - செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் என்கிற, அறு பொருள் பெயர் உம்-அறுவகைப்பொருட்பெயர்களும், எஞ்ச நிற்பது - ஒழியநிற்பன, பெயர் எச்சம் - பெயரெச்சவினை வினைக் குறிப்புக்களாம். எ-று.

பேர-ரை. செய்த செய்கின்ற செய்யும் என்னும் மூவகைப்பட்ட சொல்லின்கண் முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்றுகாலமுஞ் செயலுந்தோன்றி வினைமுற்றுதற்கு வேண்டும் பாலொன்றுந் தோன்றாது,அப்பாலுடனே செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் என்னும் அறுவகைப் பொருட்பெயரும் ஒழியநிற்பன பெயரெச்சவினை வினைக்குறிப்புக்களாம். எ-று.

வி-பு. பாட்டு என்னும் பலபொருளொருசொல் ஈண்டுச்சொல்லையுணர்த்தி நின்றது.

இவற்றுள் செய்யும் என்னும் ஒன்றும் இறுதிநிலை காலங்காட்டியது. இவை வெளிப்படையின் உணர்த்துவன காலமுஞ் செயலும் என்பார் பாட்டு என்றும்,பெயரெச்சம் என்றது வினைமுற்றாத குறைச்சொல்லாய் திணைபாலிடங்கட்குப் பொதுவாகிய பெயரெச்சம் நின்றனவற்றை யென்பார் பாலொடு என்றுங் கூறினார். நிற்பது என்பது தோததியோருமை.

எற்புழிக்கோடலால் தோன்றி என்பதன்காறும் தெரிநிலை உடன்பாட்டிற்கும், ஏனைய தெரிநிலையுங் குறிப்புமாகிய உடன்பாடு எதிர்மறை இரண்

டற்கும் கொள்க. பதப்பொருளொழிந்த உடை வினையெச்சத்திற்கும் கொள்க.

[வ-று.] உண்ட, உண்ணுநின்ற, உண்ணும்,-சாத்தன்,-கலம்,-இடம்,-ஊண்,-நாள்,-சோறு(எ-ம்); † வேலாண் முகத்தகளிறு, மூவிலைய வேல் (இலைய), உள்ளபொருள்(எ-ம்); உண்ணுத சோறு(எ-ம்); இல்லாத பொருள் (எ-ம்) :—வரும்.

செய்வதாதி அறுபொருளுங் காரணமாதலின் இவ்வெச்சங்கள் காரியப்பொருட்டாய் நின்றன.

வனைந்தகுடம் என்புழி குடங்காரியமாயும் நிமித்தமாயும் நிற்றலின் இவ்வெச்சங் காரணப்பொருட்டாயும் காரியப்பொருட்டாயும் நின்றது. பிறவுமன்ன.

அறுபொருட்பெயரும் என்னும் உம்மையை ஆறுந்தருவது வினையே என்னும் உம்மைபோல வைத்து அறுபொருட் பெயரிற் சில குறைந்தும் இன்னதற்கு இது பயனென்னும் இருபொருட்பெயரும் பிறபெயரும் கூடியும் எஞ்சநிற்பதெனவும் பொருளுரைத்துக்கொள்க.

அவை வருமாறு:— ஆடினகொடி, துஞ்சினகொடி, - இவை குறைந்து எஞ்ச நின்றன. களைப்பட்டபயிர், களைகட்டகூலி, — இவை இன்னதற்கெனவும் இது பயனெனவும் இருபெயரும் எஞ்சவந்தன.

உண்ட இளைப்பு (எ-ம்); ‡ "குண்டு சுனைபூத்த வண்டுபடு கண்ணி" (எ-ம்); குடிபோனவூர் (எ-ம்); பொன்பெரியநம்பி (எ-ம்) : — பிறபெயர்கள் எஞ்சநின்றன. பிறவுமன்ன.

உண்ட இளைப்பு என்பது உண்டகாரணத்தான் வரும் காரியமாகிய இளைப்பாதலின் செயப்படுபொருள் கொண்டதெனின் அமையாதோவெனின், சாத்தனுண்டசோறு என்புழி சோற்றையுண்டசாத்தன் எனச் சோறு என்பது இரண்டாம் உருபு ஏற்றாற்போல, இளைப்பு என்பது அவ்வுருபேலாமையின் அது செயப்படுபொருளாகாதென்க. இவ்வெச்சம் காரணப்பொருட்டாயே நின்றது. எனவே இப்பெயரெச்சங்கள் காரணப்பொருட்டாயும் காரியப்பொருட்டாயும் இவ்விருதிறத்தவாயும் வருதல் காண்க.

‡‡ இப்பெயரெச்சம் அரசன்செய்ததேர் எனத் தலைமைபற்றியும், தச்சன்செய்ததேர் என அஃதின்மைபற்றியும் வரும்.

---

† திருக்குறள், செ. ௫௦௦.

‡ திருமுருகாற்றுப்படை.

‡‡ இனிச் சேனாவரையரும் 'நிலனும் பொருளும்' என்னுஞ் சொல்லதிகாரச் சூத்திரத்து எல்லாப் பொருள் பஃறொழில் பற்றிவருஞ் சிறப்பின்றாகலின் தொழின் முதலொடு கூறாது 'இன்மை யுடைமை நாற்றந்தீர்தல்' என்னும் பொருண்மையால் தீழிஇக்கொண்டாராகலின் பழமுதிருங்கோடு, பழமுதிர்ந்தகோடு எனச் சிறுபான்மை எல்லாப் பொருட்குரியவாதலுங் கொள்க." என்பர்.

இனி ‡ "காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை." எனக் கூறுத லின் வினைத்தொகையினைப் பெயரெச்சவினையுளடக்கி இதுவே விதியாகக் கொள்க.

[வ-று.] அடுகளிறு,-கோடு,-களம்,-போர்,-நாள்,-கந்து:-என் வரும். "காலமும் வினையுந் தோன்றிப்பா லொன்றுது - பெயர்கொள் ளும் மது பெயரெச் சம்மே." என்றார் ஆசிரியர் அகத்தியனாம் என்க.

௩௪௧. செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ் - செய்யுளு ளும்முந் தாகலு முற்றே - லுயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

இது செய்யும் என்னெச்சத்திற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. செய்யும் ஏன் எச்சம் - செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தினுடைய, ஈற்று - இறுதியிலுள்ள, உயிர்மெய்-உயிர் மெய்யானது, சேறல் உம் — கெடுதலும், செய்யுள் உள் - செய்யு ளிடத்து, உம்-உம்விகுதியானது, உந்து ஆகல் உம் - உந்து எனத் திரிதலும், முற்றேல் - அது முற்றாயின், உயிர் உம் - அதனிறுதி உயிராயினும், உயிர்மெய் உம் - உயிர்மெய்யாயினும், ஏகல் உம்- கெடுதலும், உள-உளவாம். எ-று.

போ-ரை. செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் இறுதி உயிர்மெய்கெடுதலும், செய்யுளகத்து அதனிறுதி உம்மை உந்து எனத்திரித லும், அது முற்றாயின் அதனிறுதி உயிரேனும் உயிர்மெய்யேனும் கெடுத லும் உளவாம். எ-று.

வி-பு. செய்யுளுளும்முந்தாம் எனவே ஏனைய வழக்கு செய்யுளீரி டத்துமாமென்பதூஉம்; முற்றேல் எனவே செய்யும் என்னெச்ச முற்று, மாம் என்பதூஉம்; இறந்தது தழீஇ யெண்ணிநின்ற இழிவுசிறப்பும்மைக ளான் இவை ஒரு தலையல்ல என்பதூஉம்பெற்றும். முற்றுவிகுதியின்றி எச்சவிகுதியே முற்றுவிகுதிப்பொருளாகிய பால்காட்டி ஒரோவழி நிற்ற லின் எச்சம் முற்றுமெனப்பட்டது.

[வ-று.] ஆம்பொருள், போம்பொருள் (எ-ம்); "ஆம்பொருள்க ளாகுமவை யார்க்குமழிப் புண்ணாவாம்."—போம்புழை; வாம்புரவி வழுதி:—எனச் செய்யும் என் எச்சம் ஈற்றுயிர் மெய்கெட்டன. இவை மகரவொற்றுநிற்றலின் வினைத்தொகை யாகாவென்க.

"நெல்லரியு மிருந்தொழுவர் - செஞ்ஞாயிற்று வெயின் முனையிற் றெண்கடற் றிரைமிசைப் பாயுந்துநீர்" "கோழி கூப்பெயர்க்குந்து":— இவை உம்-உந்தாயின.

‡ நன்னூல், சூ. ௩௫௪.

அஃதாம், இவைபோம் (எ-ம்) ; "சாரனுடவென் ரேழியும் கலுழ்மே"—"அம்பனூரு மவனெடு மோழிமே" (எ-ம்) :—இவைமுற்றாய் உயிரும் உயிர்மெய்யுங் கெட்டன.

செய்யுமீ என்னும் முற்றென்றேனும் செய்யும் என்னும் ஏவன் முற்றென்றேனும் விதவாது பொதுமையின் முற்றேல்என்றமையின், "மாமனற மாக்கள் வருகுவங் கேண்மோ." (கேள்) — "முதுமறை யந்தணீர் முன்னிய துரைமோ." (உரை) :—எனக் கேளும், உரையும் என்னும் ஏவல் முற்றும் இவ்வாறு உயிரும் உயிர்மெய்யுங் கெட்டுவருதல் கொள்க. இவை இங்ஙனமாதலின், ‡ "சொற்றொறுமிற்றிதன்பெற்றி" என்னுஞ் சூத்திரத் தானே ஆடுவாமோ என்னுந் தன்மைப்பன்மை முற்று ‡‡ "பொன்னூசலாடாமோ" என எதிர்கால இடைநிலை கெட்டுவருதலும் பிறவுங்கொள்க.

௩சஉ. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை - யொழிய நிற்பது வினையெச் சம்மே.

இது வினையெச்சமாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. தொழில் உம் - செயலும், காலம் உம் - பொழுதும், தோன்றி - விளங்கி, பால் - பாலுடனே, வினை - வினையானது, ஒழிய - எஞ்ச, நிற்பது - நிற்பன, வினை எச்சம் - வினையெச்சவினை வினைக்குறிப்புக்களாகும். எ-று.

போ-ரை. பின்னர் செய்து செய்பு முதலியவாய் விதந்து கூறும் வாய்பாடுகளின்கண் தொழிலும் இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்னும் முக்காலங்களும் முறையேதோன்றி, வினைமுற்றுதற்கு வேண்டும் பாலொன்றுந் தோன்றாது, அப்பாலுடனே வினையொழிய நிற்பன வினையெச்சவினை வினைக்குறிப்புக்களாம். எ-று.

வி-பு. வினையெனப் பொதுப்படக் கூறினமையின் வினை-வினைக்குறிப்பின் விகற்பங்களும், அவ்வினையாலணையும் பெயரும், தொழிற்பெயரும் கொள்க.

[வ-று.] அறமன்றி, அறமல்லாமல், அருளின்றிச்செய்தான், - செய்யான், - செய்த, - செய்து, - செய்தவன், - செய்தல், - இலன், - இல்லாத, - இல்லாது, - இன்மை, - இல்லாமை :— எனவரும்.

செய்தான் என்னும் தெரிநிலைவினைக்கண் செய்தல் என்னுந் தெரிநிலைத்தொழிற்பெயர்போல, இலன் என்னும் குறிப்புவினைக்கண் இன்மை, இல்லாமை என்பன குறிப்புத் தொழிற்பெயராய் நிற்றலின், 'அறமன்றி

‡ நன்னூல், சூ. சகூக.

‡‡ திருவாசகம், திருப்பொன்னூசல், சே. க.

யின்மை (அன்றி),"அறமன்றி யில்லாமை" (அன்றி), ‡ நீயலாற்பிறிது மற்றின்மை, (அலால் - இன்மை) :—என முடிந்து நின்றன. பிறவுமன்ன. தெரிநிலை வினையெச்சங்கட்கு உதாரணம் வருஞ் சூத்திரங்களானுணர்க.

"காலமும் வினையுந் தோன்றிப் பாலோடுறாது - வினைகொணர்வது வினையெச் சம்மே." என்பது அகத்தியம்.

௩௪௩. செய்து செய்பு செய்யாச் செய்யூச் - செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர் - வான்பான் பாக்கின வினையெச் சம்பிற - வைந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்.

இது மேல் தொழிலுங் காலமுந் தோன்றியென்ற வினையெச்ச வாய்பாடுகள் இவையென வகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. செய்து—செய்யியர் - செய்து என்பது முதல் செய்யியர் என்ப தீறாகிய ஒன்பது வாய்பாட்டால் வருவனவும், வான் பான் பாக்கு - இம்மூன்று விகுதிகளைக்கொண்டு வருவனவும், இன - இவைபோல்வன பிறவும், வினை எச்சம் - வினையெச்ச வினைகளாம்- ஐந்து - முன்னையவைந்தும், ஒன்று - நடுநின்ற ஒன்றும், ஆறு - பின்னைய ஆறும், முக்காலம் உம் - இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும், முறை - முறையாக, தரும்- காட்டுவனவாம். எ-று.

போ-ரை. செய்து என்பது முதலிய ஒன்பதுவாய்பாட்டான் வருவனவும், வான்பான்பாக்கு என்னும் மூன்று விகுதியவாய் வருவனவும், இவைபோல்வன பிறவும் வினையெச்ச வினைகளாம். இவற்றுள் முன்னைய ஐந்து இறந்தகாலமும், செய என்ப தொன்று நிகழ்காலமும், ஒழிந்தவாறு எதிர்காலமும் காட்டுவனவாம். எ-று.

வி-பு. இவற்றுள் செய்து என்பது இடைநிலையானும் ஏனைய இறுதி நிலையானும் காலங்காட்டின. ‡‡ வான் பான் பாக்கு என்பன அவ்வெச்ச விகுதியாகிய மொழிகளை உணர்த்திநின்ற குறிப்புச்சொல்.

இன என்றமையால் †"அற்றா லளவறிந் துண்க"(அற்றால்), ††"ஒலித்தக்காலென்னா முவரி"(ஒலித்தக்கால்) ; "காண்டலும் இதுவே சொல லும்"(காண்டலும்) :— எனச் செயின் என்னும் வாய்பாடுபோல் எதிர்காலங் காட்டுவனவும்,

---

‡ திருவாசகம், கோயிற்றிருப்பதிகம், செ. எ.

‡‡ வான், பான், பாக்கு என்பன தொழிற்பெயராக வருமென்பர். —சிவஞானமுனிவர். திருக்குறளில் "கரப்பாக்கறிந்து" என்புழி பரிமேலழகர் பாக்கு என்பதை இவ்வாறே கொள்ளுதல் காண்க.

† திருக்குறள், செ. ௯௪௩.

†† ௸ செ. எ௬௩.

"கூறமந் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி" — † "கூறாமை நோக்கிக்குறிப்பறிவான்" — †† "ஈத லியையாக் கடை" (இயையா) :— என எதிர்மறைவிகற்பங்களாய் வருவனவும் இத்தொடக்கத்துக் குறைச் சொல்லாய் வினையெஞ்சிநிற்பனவெல்லாங் கொள்க.

ஒலித்தக்கால் என்புழி ககரவொற்று இடையே மிக்கமையின்கால் என்பது பெயரொச்சங்கொண்ட பெயரன்று, வினையெச்ச விகுதியென்பது பொருந்தும்.

ஈதலியையாக்கடை என்புழி கடை என்பது எதிர்மறைப்பெயரொச் சங்கொண்ட இடப்பெயரொன்றாலென்னையெனின், அதனகத்து இடப் பொருளின்றி ஈதலியையாதாயின் என்னும் பொருள்தந்து நிற்றலின் வினை யெச்ச விதியேயாமென்க. பிறவுமன்ன.

பிற என்றமையானே, செய்து என்னும் வரய்பாட்டு எச்சங்களும் இடைநிலையின்றி, ஆடிக்கொண்டான், தழீஇக்கொண்டான் என இறுதி நிலை தன்னியல்பினின்றும் விகாரமாயும், புந்நகின்மூன் என முதனிலை விகாரமாயுங் காலங்காட்டுவன வுளவெனவும்; செய என்னும் வாய்பாட் டெச்சம் எதிர்காலத்திற்கும் உரித்தெனவும், இவ்வெச்சங்கட்கு விதந்து கூறாதனவெல்லாம் அமைத்துக்கொள்க.

௩சச. அவற்றுள், முதலி னான்கு மீற்றின் மூன்றும் - வினைமுதல் **கொள்ளும் பிறவுமேற் கும்பிற.**

இது இவ்வெச்சங்கட்காவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. அவற்றுள் - முன் சூத்திரத்துட்சொல்லிய வினை யெச்சங்களுள், முதலில் - முதலிலுள்ள, நான்கு உம் - செய்து செய்பு செய்யா செய்யூ என்கிற நான்கும், ஈற்றில் - இறுதியிலு ள்ள, மூன்று உம் - வான் பான் பாக்கு என்கிற விகுதிகளையுடைய மூன்றும், வினை முதல்-செய்பவனை, கொள்ளும்-கொண்டுமுடியும், பிற - நடுவிலுள்ள செய்தென செய செயின் செய்யியு செய்யியர் என்கிற ஐந்தும் இவைபோல்வன பிறவுமென்றதனால் வருஞ் செய் தால் முதலியவையும் வினையெச்சக்குறிப்புக்களும் ஆகிய இவைகள், பிற உம் - செய்பவனையன்றி மற்றவைகளையும், ஏற்கும் - கொண்டு முடியும், எ-று.

போ-ரை. மேலைச்சூத்திரத்து முதற்கண்கூறிய செய்து செய்பு செய் யா செய்யூ என்னும் நான்கும் இறுதிக்கண் கூறிய வான் பான் பாக்கு என்

† திருக்குறள், சே. எ0க. †† திருக்குறள், ரே. உ௩0.

னும் மூன்றும் வினைமுதலைக்கொண்டு முடியும்; இடைநின்ற செய்தென செய செயின் செய்யிய செய்யியர் என்னும் ஐந்தும், இன்ன என்றதனால் வருவனவும், வினையெச்சக் குறிப்புக்களும் வினைமுதலையும் அஃதல்லாத பிறவற்றையுங் கொண்டுமுடியும். எ-று.

வி-பு. இடையின் ஐந்தும் என்னாது பிற என்றார் இன என்றதனான் வருவனவும் வினையெச்சக் குறிப்புக்களுந் தழீஇக்கோடற்கென்க.

[வ-று.] நடந்து வந்தான் — "வாளொடு கனையிருள் வந்து தோன்றினன்." — † "எண்ணித்துணிககருமம்" — "பரீஇயுயிர்செகுக்கும்" — "ஐவரொடு சினைஇ நிலந்தலைக்கொண்ட" (எ-ம்); "புலாப்பச்சிலை யிடையிடுபு தொடுத்த." — "தேரிபுதேரிபு குத்தினவேறு" (எ-ம்); ‡ "கல்லாக்கழிப்பர் தலையாயார்." — "நிலங்கிளையா நாணி நின்றோணிலை." (எ-ம்); "படுமகன் கிடக்கை காணூஉ - வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" — "நிலம் புடையூ வெழுதரு வல்ம்படு குஞ்சரம்." (எ-ம்); "கோல்வான்கொடித் தானை கொண்டெழுந்தான்" (எ-ம்); ‡‡ "அலைப்பான் பிறிதுயிரை யாக்க லுங் குற்றம்" (எ-ம்); "புணர்தரு செல்வந் தருபாக்குச் சென்றான்" (எ-ம்) :— முதலில்நான்கும் ஈற்றில் மூன்றும் வினைமுதல் கொண்டன.

"காந்தளஞ் சிலம்பிற் சிறுகுடி பசித்தெனக் - கடுங்கண் யானைக் கோடு நொடுத்துண்ணும் (எ-ம்); கோவாவாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு - பேஎநாறுந் தாழ் நீர்ப் பனிச்சுனை." (எ-ம்); உண்ணவந்தான் — "கோள்ளக் குறைபடாக் கூழுடை வியனகர்." (எ-ம்); மழைபெய்ய நெல்விளைந்தது - †† "மோப்பக்குழையு மனிச்ச முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" (எ - ம்); ††† "தாம் வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங் கௌவை யெடுக்கு மிவ்வூர்." (வேண்டின்) (எ-ம்); "காணியவாவாழிதோழி." (எ-ம்); "மாணிழை யரிவை காணிய வொருநாட் - பூணகமாகநின் புனைவினைநெடுந்தேர்" (எ-ம்); "பசலையுண்ணியர் வேண்டும்." (உண்ணியர்) (எ-ம்); கொற்கைச்சோழர் கொங்கர்ப் பணியியர் - பழையன்வேல் வாய்த்தன" (எ-ம்) :— இடையின்ஐந்தும் வினைமுதலும் பிறவுங் கொண்டன.

உண்டாலுவக்கும், உண்டாற்பசிதீரும் (உண்டால்); *† "விண்ணின்று பொய்ப்பின்" (நின்று); "விருந் தின்றி யுண்ட பகல்" (இன்றி) :— என இன என்றதனான் வருவனவும் வினையெச்சக்குறிப்பும் வினை முதலும் பிறவும் ஏற்றல்காண்க.

† திருக்குறள், செ. சகூஎ.
‡ நாலடியார், செ. ௩கூகூ.
‡‡ நான்மணிக்கடிகை, செ. உகூ.
†† திருக்குறள், செ. கூ0.
††† திருக்குறள், செ. ககடும்.
*† திருக்குறள், செ. கங.

நடந்து வந்தவன், - வருதல்; இடையிடுபு தொடுத்தவன்,-தொடுத்தல் (இடுபு) (எ-ம்); "காந்தளஞ் சிலம்பிற் சிறுகுடி பசித்தெனக் - கடுங்கண் யானைக்கோடு நொடுத்துண்டவன்." - உண்டல்;

"ஓவாவாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு பேஎநாறுவது"-நாறல்; உண்ணவந்தவன்,-வருதல்; மழைபெய்ய நெல்விளைவது; - விளைதல் :— என வினையாலணையும் பெயரும் தொழிற்பெயரும் வருவித்து, வினைமுதலும் வினைமுதலோடு பிறவும் ஏற்றல் காண்க. பிறவுமன்ன.

இச்சூத்திரத்துள் வினைமுதல்கொள்ளும் பிறவுமேற்கும் என்பதற்கு வினைமுதல் வினைகொள்ளும் பிறவினைகொள்ளுமெனப் பொருளுரைத்தாலென்னையெனின், அது பொருளாயின் "வினைமுதல் வினைகொளும் பிறவினை கொள்ளும்" எனக்கூறினும் யாப்பமையுமாதலின் அங்ஙனங்கூற வேண்டும். அவ்வாறு கூறாமையானும், வினைகொண்டு முடியுமென இதற்குக் கூறினரேல் முன்னர்க்கூறிய பெயரெச்சத்திற்கும் பெயர்கொண்டு முடியுமெனக்கூறல்வேண்டும். அவ்வாறு கூறாமையானும் பொதுவியலுள் ‡ "பெயர்வினையும்மை" என்னுஞ் சூத்திரத்தானேமுற்றுது குறைந்துநின்ற இப்பெயரெச்ச வினையெச்சங்கள் முதலியவாக இவ்வதிகாரத்துள் விதந்தும் விதவாதும்பரந்துகிடந்த எச்சங்களையெல்லாம் எடுத்து ஒன்பதும் ஒன்றும் எனத் தொகைதந்து தத்தம் எச்சங்கொள்ளுமெனக் கூறுதலானும், இங்ஙனம் வினைமுதற்பொருண்மையினையும் அஃதொழிந்த பிறபொருண்மையினையும் கொள்ளுமெனக் கூறலே நூலாசிரியர் கருத்தென்க.

அங்ஙனமாயின் இவ் விருவகை யெச்சங்களும் பெயரினையும் வினையினையுங் கொண்டு முடிந்துநிற்க உதாரணங்காட்டியதென்னையெனின், பெயரெச்சம் பெயரெஞ்ச நிற்றலும், வினையெச்சம் வினையெஞ்சநிற்றலும் வினைமுதல்கோடலும் பிறகோடலும் தோன்றுதற் பொருட்டன்றி, பெயரினையும் வினையினையுங் கொண்டு முடிதல் தோன்றுதற் பொருட்டன்றென்க.

இவ்வினையெச்சங்கள், நடந்து வந்தான், மழைபெய்ய நெல்விளைந்தது - எனக் காரணப்பொருட்டாயும்; நெல்விளையமழைபெய்தது - எனக் காரியப்பொருட்டாயும்; உண்ண வந்தான் - எனக் காரணகாரியமென்னும் இருபொருட்டாயும்; "கடிக்கமல முகங் காட்டக் கருநெய்தல் கண்காட்டும்." - எனக் காரணகாரியம் இரண்டுமின்றியும்; உழுதுபயன்கொண்டான் வேந்தன் - எனத் தலைமைபற்றியும்; உழுது பயன்கொண்டான் வறியன் - என அஃதின்மைபற்றியும் வருதல் காண்க.

---

‡ நன்னூல், பொதுவியல், சூ. ௩௬௦.

௩சரு. சினைவினை சினையோடு முதலோடுஞ் செறியும்.

இது சினைவினை முதலுடனும் முடியும் என்பது உணர்த்துகின்றது.

ப-ரை. சினை வினை - முதலில்நான்கும் ஈற்றின் மூன்றுமென்ற வினையெச்சங்கள் சினைவினையாயின் அவை, சினையொடு உம்-முன் வினைமுதல் கொள்ளுமென்ற விதியினாலே சினையுடனே யன்றி, முதலொடு உம்-முதலுடனும், செறியும் - முடியும். எ-று.

பொ-ரை. முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் என்றவினையெச்சங்கள் சினைவினையாயின் அவைவினைமுதல்கொள்ளுமென்றவிதியானே சினையொடுமுடிதலேயன்றி முதலுடனும்முடியும். அங்ஙனமுடியுமாயினுஞ்சினையொடு முடிதற்கு ஒற்றுமையுண்மையின் வினைமுதல்கொண்டதேயாம்.

[வ-று.] காலிற்றுவீழ்ந்தான், காலிறுபுவீழ்ந்தான், காலிறவீழ்ந்தான், காலிறாஉ வீழ்ந்தான், கண்வருவான் கதிரவற்றொழுதார், கண்டழைப்பான் கதிரவற்றொழுதார், கண்வருபாக்குக் கதிரவற்றொழுதார் (எ-ம்); மாடு காலிற்றுவீழ்ந்தது (எ-ம்) வரும். பிறவுமன்ன.

வி-பு. காலிற்று வீழ்ந்தான் என்புழி வீழ்தற்கு வினைமுதல் இம்முதற்பொருளாம். அஃதின்றிச் சினைப்பொருளாயின், கண் விழித்துப் பார்த்தான், செல்வமிக்குயர்ந்தான், கண்பெரியன், நாடுபெரியன், செல்வம் பெரியன் என்றாற்போல் ‡ "உயர்திணைதொடர்ந்த பொருண்முதலாறும்" என்னுஞ் சூத்திரத்தால் அமைவதாமென்க. பிறவுமன்ன.

௩சசு. சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை.

இது பிறவினை யெச்சவாய்பாடுகள் சொல்திரியினும் பொருள்திரியா வென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. சொல்-முதலில்நான்கும் ஈற்றின் மூன்றும் என்றவினையெச்சவாய்பாடுகளாக,வினைகுறை - பிறவினையெச்சவாய்பாடுகள், திரியின் உம் - வேறுபடினும், பொருள் - அவற்றின்பொருள்கள், திரியா - வேறுபடாவாம். எ-று.

பொ-ரை. முதலில்நான்கும் ஈற்றில் மூன்றும் வினைமுதல் கொள்ளுமென்ற வினையெச்சவாய்பாடுகளாகப் பிறவினையெச்ச வாய்பாடுகள் - திரியினும் அவற்றின்பொருள் திரியா. எ-று.

[வ-று.] ஞாயிறுபட்டுவந்தான், கோழிகூவிப் பொழுதுபுலர்ந்தது, "உரற்காலியானை யொடித்துண்டெஞ்சியயா மரநீழற் றுஞ்சுஞ்செந்நாயேற்றை" (எ-ம்); யான்கொள்வான் பொன்கொடுத்தார் (எ-ம்) வரும். பிறவுமன்ன.

‡ நன்னூல், சூ. ௩௭௭.

வி-பு. இவை செய என்னெச்சம் செய்து, செய்வான்எனத்திரிந்து நின்றும், அச் செய என்னெச்சம் முடிபேற்றும் நின்றன.

எனவே ஞாயிறுபட்டுவந்தான் என்பதற்கு, ஞாயிறுபடவந்தான் — எனப் பொருளுரைக்க வேண்டுமென்ப தாயிற்று: பிறவுமன்ன.

வினைத்துறை எனப் பொதுப்படக் கூறினமையான் வினையெச்சங்களுள் ஒன்றொன்றாய்த் திரிந்துவருவன பிறவுமுளவேல் அவையுங்கொள்க.

நசஎ. ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா.

இது -வினைக்குறிப்பிற்கு ஆவதோர் விதி உணர்த்துகின்றது.

ப-ரை. ஆக்கம் - ஆக்கத்தால்வருகின்ற ; வினை குறிப்பு-வினைக்குறிப்புச் சொல்லுகள், ஆக்கம் - ஆக்கச்சொல்லுகள், இன்றி - இல்லாமல், இயலா - வாராவாம். எ-று.

பொ-ரை. ஆக்கத்தால்வரும் வினைக்குறிப்புச்சொற்கள் ஆக்கச்சொல்லின்றி வாராவாம். எ-று.

வி-பு. வேற்றுமைப் புணர்ச்சிக்கு வேற்றுமை யுருபுகள் விரிந்துந் தொக்கும்அதனுடைமையாய் நின்றாற்போல ,ஆக்கவினைக்குறிப்பிற்கு ஆக்கச்சொல் விரிந்துந் தொக்கும் அதனுடைமையாய் நிற்றலின் ஆக்கமின்றியலா என்றார்.

[வ-று.] சாத்தன் நல்லனாயினான், சாத்தன் நல்லன்; கல்வியாற் பெரியனாயினன், கல்வியாற் பெரியன்; கற்று வல்லாராயினர், கற்று வல்லர் ; ‡ "குருதிபடிந்துண்ட காக முருவிழந்து-குக்கிற்புறத்தசிரல்வாய செங்கண்ண." என ஆக்கச்சொல்விரிந்துந் தொக்கும் வந்தன.

எனவே நல்லன் என்பது இயற்கைவினைக் குறிப்பாயின் விரிதல் தொகல் என்னும் இரண்டனுள் ஒருவாற்றானும் ஆக்கம் வேண்டாது சாத்தன் நல்லன் என்றே வருமென்பதாயிற்று.

இங்ஙனமாகவே வினைக்குறிப்பு ஆக்கவினைக்குறிப்பென்றும், இயற்கைவினைக் குறிப்பென்றும் இருவகைப்படுமெனவும், அவையிவ்வாறு நடக்குமெனவுங் கூறினாராயிற்று. வினையாயினும் ஆக்கத்தைநோக்கி இயற்கையெனப்பட்டது.

இச்சூத்திரத்திற்கு வினையெச்சங்கொண்டுமுடியும் ஆக்கவினைக்குறிப்பிற்கு ஆக்கச்சொல் விரிந்தேவருமென்றும், தொக்குவருவன செய்யுள் விகாரமென்றும் பொருள்கூறுவாரு முளர்.

---

‡ களவழி நாற்பது, சே. ரு.

வினையெச்சங்கொண்டுமுடியும் ஆக்கவினைக்குறிப்பென விதவாமையானும், ஆக்கவினைக்குறிப்பென்ற துணையானே வினையெச்சங்கொண்டு முடியும் வினைக்குறிப்பென்பது தாமே போதருமெனின், கல்வியாற் பெரியன் எனப்பிறவழியும் ஆக்கவினைக்குறிப்பு வருதலானும், அஃதயாண்டு வரினும் ஆக்கச்சொல்விரிந்தேனும், தொக்கேனும் வேண்டியே நிற்றலானும், இவர்கற்றுவல்லர் எனவழக்கின்கண்ணும் ஆக்கச்சொல் தொக்கு வருதலானும், ‡ "காரணமுதலா வாக்கம்பெற்றும்" என்னுஞ் சூத்திரம் மாறுகொளக்கூறலாய் முடியு மாதலினும், அது பொருந்தாதென்க.

௩௪௮. **பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற் - செல்லாதாகுஞ் செய்யுமென் முற்றே.**

இது செய்யும் என்னெச்சம் திணைபாலிடங்கட்குப் பொதுவாமென விதித்தலின் அவ்வெச்சத்தானாகிய செய்யும் என்னும் முற்றும் அவ்வாறு பொதுவாமெனப் போந்தவற்றுள் சில பாலிடங்களிற் செல்லாது இம்முற்றெனவிலக்குதலின் எய்தியதொருமருங்குமறுத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. செய்யும் என் முற்று - செய்யும் என்னும் முற்றானது, பல்லோர் படர்க்கை (இல்)-உயர்திணைப் பன்மைப்படர்க்கையிலும், முன்னிலை (இல்) - முன்னிலையிலும், தன்மை இல் - தன்மையிலும், செல்லாது ஆகும் - செல்லாது. எ-று.

பொ-ரை. உயர்திணைப் பன்மைப்படர்க்கையினும் முன்னிலையினும் தன்மையினும் செல்லாது செய்யும் என்னும் எச்சத்தானாகுஞ் செய்யும் என்னும் முற்று. எ-று.

வி-பு. "பல்லோ ரொழிந்த படர்க்கைக் குரித்துச்-செய்யுமென்னத் தெரித்திடு முற்றே." எனச் சூத்திரஞ்செய்யாது எய்தியதொருமருங்கு மறுத்தல் தோன்ற, பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மையிற் செல்லாதுஎன்றும், ஏனைமுற்றுக்கள்போல் தன்னியல்பில் நில்லாது எச்சத்தானாயது இம்முற்றென்பது தோன்ற ஆகுஞ்செய்யு மென்முற்று என்றுங் கூறினர். இப்பாலிடங்களை விலக்கவே ஒழிந்த படர்க்கை நாற்பாலினுஞ் செல்லுமென்பது பெற்றாம்.

[உ-ம்]. அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவையுண்ணும் எனவரும்.

௩௪௯. **யாரென் வினவினைக் குறிப்புயர் முப்பால்.**

இது திணைப்பொதுவன்றி பாற்பொதுவினையாமாறு உணர்த்துகின்றது.

---

‡ நன்னூல், சூ. ௪௦௫.

ப-ரை. வினு-வினுப்பொருளைத்தருகிற, யார் என் - யாரென்கிற, வினை குறிப்பு - வினைக்குறிப்புமுற்று, உயர் முப்பால் - உயர்திணை முப்பால்களுக்கும் பொதுவினையாம். எ-று.

பொ-ரை. வினுப்பொருண்மையைத் தரும் யார் என்னும் வினைக் குறிப்புமுற்று உயர்திணைமுப்பாற்கும் பொதுவினையாம். எ-று.

வி-பு. திணைப்பொதுமைக்கண் கூறியபொதுவினையென்பதனை ஈண்டும் வருஞ்சூத்திரத்தும் தந்துரைத்துக்கொள்க.

[வ-று.] அவன்யார், அவள்யார், அவர்யார் - எனவரும்.

"ஊதைகூட் டுண்ணு முகுபனியா மத்தெங்
கோதைகூட் டுண்ணியர்தான் யார்மன்—போதெல்லாந்
தாதோடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்
றூதோடு வாராத வண்டு."— என அஃறிணைக்கண்வருதலும்,

‡ "நானார் என் உள்ள மார்." எனயார் என்பது ஆர் எனமரீஇ வருதலும், புதியனபுகுதலாம் என்க.

நடுO. எவனென் வினுவினைக் குறிப்பிழி யிருபால்.

இது அஃறிணைப் பொதுவினையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. வினு - வினுப்பொருளைத்தருகிற, எவன் என் - எவனென்கிற, வினை குறிப்பு - வினைக்குறிப்புமுற்று, இழி இருபால் - அஃறிணை இருபாலுக்கும் பொதுவினையாம். எ-று.

பொ-ரை. வினுப்பொருண்மையைத்தரும் எவன் என்னும் வினைக் குறிப்புமுற்று அஃறிணையிருபாற்கும் பொதுவினையாம். எ-று.

[வ-று.] அஃது எவன், அவை எவன்-எனவரும். இஃது என் எனவும் என்னெனவும் மரீஇவருதல் புதியனபுகுதலாம்.

வி-பு. உயர்முப்பால் என்றும், இழியிருபால் என்றும் விதந்தமையின், யார் என்றும், எவன் என்றும் ஈண்டுப்போந்த சொற்கள், பெயர்க்கும் வினைக் குறிப்பிற்கும் பொதுவாகிய யாவர் என்னுஞ்சொல் யார், ஆர் என மரீஇய உயர்திணைப் பன்மைச்சொல்லும், இவ்வாறு, பெயர்க்கும் வினைக்குறிப்பிற்கும்பொதுவாகிய எவன் என்னும் உயர்திணை ஆண்பாற் சொல்லும் அல்லஎன்பது பெற்றும்.

---

‡ திருவாசகம், திருக்கோத்தும்பி, செ. உ.

நானார் எனத் தன்மையில்வரப் புதியன புகுதலாற் கூறினமையான் 'நீயாரை யென்னை இவ ணின்றநிலை யென்றுன்'— என முன்னிலையில்வரக் கம்பநாடர்கூறலானும் உணர்க.

நடுக. வினைமுற் றேவினை யெச்ச மாகலுங்-குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.

இது இருவகைமுற்றிற்கும் ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. வினைமுற்று ஏ - தெரிநிலைவினைமுற்றே, வினையெச்சம் ஆகல் உம் - வினையெச்சமாகிவருதலும், குறிப்பு முற்று (ஏ)- வினைக்குறிப்புமுற்றே, ஈரெச்சம் ஆகல் உம் - வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும்வருதலும், உள - உளவாம். எ-று.

பொ-ரை. வினைமுற்றே வினையெச்சமாகிவருதலும், வினைக்குறிப்பு முற்றே வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும் உளவாம்.

வி-பு. ஏகாரத்தைப் பின்னுங்கூட்டுக. குறைச்சொல்லாகாது பால் காட்டிநிற்றலின் முற்றே என்றும், வினையெச்சப் பயனிலையினையும் பெய ரெச்சப்பயனிலையினையும் அவாவிநிற்றலின் எச்சம் என்றும், இவை சிறு பான்மையாகலின் ஆகலும் என்றுங் கூறினர்.

[வ - று.] "காணன் கழிந்த வைகலு முண்டென் ஞெருநாள்." — "மோயினளுயிர்த்தகாலை." (மோயினள்)—"முகந்தனர் கொடுப்ப" — "விளிப்பது பயிலுங் குறுப்பர் துந்துபியொடு" — "எருவை நுண்டாது குடைவனவாடி":—எனப் படர்க்கை ஐம்பாலினும் ;

"பெயர்த்தனென் முயங்கயான்"— "மக்களு ளிரட்டையாய் மாறி னம்பிறந்தியாம்":—எனத்தன்மை ஒருமைப்பன்மையினும் ;

"சேர்ந்தனை சென்மோ பூந்தார்மார்ப." - "கருங்கோட் டின்னிய மியங்கினிர் கழிமின்" (இயக்கினிர்) :—என முன்னிலை ஒருமைப்பன்மை யினும்—வினைமுற்று வினையெச்சமாயின.

"வரிபுனைவில்லன் ஞெருகணை தெரிந்துகொண்டு." (வில்லன்) — "அளிநிலை பெறாஅ தமரிய முகத்தாள் - விளிநிலைகொள்ளாள்" - ‡"உச்சிக் கூப்பியகையினர் தற்புகழ்ந்து," — "விழுமீது கழிவதாயினும்"— "நில மிசைப்புரளுங் கையவெய்துயிர்த்து" :— எனப்படர்க்கை ஐம்பாலினும்;

‡"துணையிலேனஞ்சினேன் றுயருழந்திணையேன்." (நெஞ்சினேன்) - "நீர்வார்கண்ணேந்தொழுதுநிற் பழிச்சி." (கண்ணேம்):— எனத்தன்மை ஒருமைப்பன்மையினும் ;

"நீர்வார்கண்ணை நீயிவணொழிய."—"வெள்வேல்வலத்தினிர் பொரு டரல் வேட்கையினுள்ளினிர்":— என முன்னிலை ஒருமைப் பன்மை யினும்—வினைக்குறிப்பு முற்று வினையெச்சக்குறிப்பாயின.

‡ திருமுருகாற்றுப்படை.

"வெந்திறலினன் விறல்வழுதியொடு" — "அஞ்சாயல ளாயிழை முன்." (சாயலள்) — "கடற்றனையர் கழல்வேந்தனா." (தானையர்) — "பெருவரைமிசையது நெடுவெள்ளருவி." —"புன்றலோரமைய சுரனிறந்தோரே":—எனப்படர்க்கை ஐம்பாலினும்;

"பெருவேட்கை யேனெற்பிரிந்து." (வேட்கையேன்)—"கண்புனா காதலேமெம்முள்ளான்." (காதலேம்):—எனத்தன்மைஒருமைப்பன்மையினும்;

"உலங்கொ டோளினை யொருநின்னால்." (தோளினை) — "வினை வேட்கையிர் வீரர்வம்மின்.":—என முன்னிலைஒருமைப்பன்மையினும் — வினைக்குறிப்புமுற்று பெயரொச்சக்குறிப்பாயின.

இவற்றுள் வரும்பெயர்கள் முற்றுப்பயனிலை யாகாது பெயரொச்சப் பயனிலையாமாறுகாண்க.

இனி வினைமுற்றுக்கள் சொல்திரியினும் பொருள்திரியா வினையெச்சமாய்வருமாறு.—

‡"விண்ணிற் றூவியிட்டான் வந்துவீழ்ந்தன." (தூவி யிட்டான்) — ‡‡"பாயுமாரிபோற் பகழிசிந்தினு ராயர்மத்தெறி தயிரினாயினார்." (சிந்தினார்.) —

ª‡ "கானவ ரிரிய வில்வாய்க் கடுங்கணை தொடுத்த லோடு
மானினம் பெயர்த்ததாய ரார்த்தன ரணிந்த திண்டோ
டானொன்று முடங்கிற் றொன்று நிமிர்ந்தது சரம்பெய் மாரி
போனின்ற தென்ப மற்றைப் பொருவருஞ் சிலையி னார்க்கே." —

(ஆர்த்தனர்)—

ᵇ‡"செய்யோன் செழும்பொற் சரஞ்சென்றது சென்றதாவி":— எனவரும். பிறவுமன்ன.

இனி எண்ணின்கண்நின்ற எதிரதுதழீஇய எச்சவும்மை யானே உண்டான் சாத்தனார்க்குப்போனான் என்புழி உண்ட சாத்தனார்க்குப் போனான் - எனப்பொருள்படுதலின் வினைமுற்றுப் பெயரொச்சமாதலும் உளவெனவும்;

வெறுத்த ஞானி வீட்டை யடைந்தான், சாத்த னுழுதுவந்தான் (உழுது) — என்புழி வெறுத்தான்ஞானி, சாத்தன்உழுதான்: — எனப் பொருள்பட்டு ஈரொச்சம் முற்றாதல் உளவெனவும்;

---

‡ சிந்தாமணி, குணமாலையா ரிலம்பகம், செ. ௬௪.
‡‡ ஷை கோவிந்தையாரிலம்பகம், செ. ௧௩.
ª‡ ஷை ஷை செ. ௬௪.
ᵇ‡ சிந்தாமணி, மண்மகளிலம்பகம், செ. ௨௨௧.

† "பெறுவதுகொள்வாருங் கள்வருநேர்" என்புழி நேர் - நேர்வர் என முதனிலைத்தனிவினையும் வினைமுற்றாத லுளவெனவும்;

‡ "வரிப்புனைபந்து." — [a]‡ "அறுவேறுவகையின்" — [b]† "செய் தக்கவல்லசெயக்கெடும்." [b]‡ — [c]† மண்மாண்புனைபாவையற்று":—என் புழி வரிந்து, அற்று, செய்ய, மாட்சிமைப்பட என்றுபொருள்பட்டு முத னிலைத் தனிவினைகள் வினையெச்சமாதல் உளவெனவுங்கொள்க.

வினையியல், சூ - ௩௨.

முற்றிற்று.

---

† திருக்குறள், சே. ௮௧௩. ‡ திருமுருகாற்றுப்படை.

[b]† ஷை சே. ௪௬௬. [a]‡ ஷை

[b] ‡ சாவ என் எச்சத்திறுதி குன்றுமென்த் தொல்காப்பியர் முதலா யினோர் எடுத்தோதிய உபலக்கணத்தான் செய்தக்க, மண் மாண் புனைபா வையற்று,-என வருவனவும் அதுவென்றும்; நுண் மாணுழைபுலம், வரிப் புனை பந்து ஏனவருஞ் செய்து என் எச்சத்தீறும் வினைத் தொகைகளசய்க் குன்றிய பெயரொச்சத்தீறும் இவ்வாறே கொள்க என்றும்; இவை விவ ட்சாதீனய் என்றும் கூறுவர் பிரயோகவிவேகநூலார்.— திங்ஙுப்படலம், சூ. ௧௨.

[c]† திருக்குறள், சே. ௪௦௭.

மூன்றாவது

பொதுவியல்

௩௨௨. இருதிணை யாண்பெண்ணு ளொன்றனை யொழிக்கும் பெய ரும் வினையுங் குறிப்பி னானே.

இது முன்வந்த பெயர்க்கும் வினைக்கும் பின்வரும் இடைக்கும் உரிக்கும் பொதுவிலக்கணங்களைச் ¶ சிங்கநோக்காக இவ்வியலான் உணர்த்துவான் இடைநிறீஇக்கூறலின், இதுபெயர்க்கும் வினைக்கும் உரியதோர் இலக்கணமும் உணர்த்துகின்றது.

ப-ரை. இருதிணை - இருதிணையிலும், பெயர் உம் - ஆண்பால் பெண்பால்களுக்குப்பொதுவாகிய பெயர்ச்சொற்களும், வினை உம்- அப்படிப்பட்ட வினைச்சொற்களும், ஆண் பெண் உள் - அவ்வாண் பால் பெண்பால்களுள், ஒன்றனை - ஒருபாலை, ஒழிக்கும் - நீக்கும், குறிப்பினான் - குறிப்பினால். எ - று.

போ-ரை. உயர்திணை ஆண்பால் பெண்பால் என்னும் இருபாற்கும் பொதுவானபெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும், அஃறிணை ஆண்பால் பெண்பால் என்னும் இருபாற்கும் பொதுவான பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் அவ்விருபாலுள் ஒருபாலை ஒழிக்கும் குறிப்பினான். எ-று.

[வ-று.] ஆயிரமக்கள் தாவடிபோயினர் என்புழி மக்கள் என்னும் உயர்திணையிருபாற்கும் பொதுப்பெயரும், போயினர் என்னும் உயர்திணையிருபாற்கும் பொதுவினையும் தாவடி என்னுங் குறிப்பினால் பெண்பாலை ஒழித்தன.

¶ "சிங்கநோக்கம் என்று பெயர் வினை இடை உரி என்னும் நான்கிற்கும் இடையிலே பொதுவியலை வைத்து இம் முறைபிறழக் கூறுவாருமுண்டு. அது பெயர் வினை இரண்டிற்கும் பொதுமையெனப் பொருள்படுமன்றிப் பின் நிற்பனவற்றிற்கும் பொதுமை எனப் பொருள்படாமையானும், படினும் பெயர்வினை யிரண்டிற்கும் ஒருகூறு பொதுமை, மற்றொரு கூறு இடைஉரி இரண்டிற்கும்பொதுமை எனப் பொருள்பட்டு இடர்ப்பட நிற்குமாதலானும், "முன்னோர் நூலின்வழியேநன் னூற்பெயரின் வகுத்தனன்" என்பதற்குமாறுகொளக் கூறலாமாதலானும், நூலாசிரியர் முதலியோர் கருத்தன்றாதலானும், நான்முறையன்றாதலானும் அது பொருந்தாதென மறுக்க." என்பர். — இராமாநுசகவிராயர்.

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களுளர்—என்புழிமக்கள் என்னும் பொதுப்பெயரும், உளர் என்னும் பொதுவினைக்குறிப்பும், பொறையுயிர்த்தல் என்னுங் குறிப்பினான் உயர்திணை ஆண்பாலை ஒழித்தன.

இப்பெற்றங்கள் உழவொழிந்தன - என்புழி பெற்றங்கள் என்னும் அஃறிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப்பெயரும், ஒழிந்தன என்னும் அஃறிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுவினையும், உழ என்னுங்குறிப்பினான் பெண்பாலையொழித்தன.

இப் பெற்றங்கள்பால் சோரிந்தன என்புழிபெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும் சோரிந்தன என்னும் பொதுவினையும், பால் என்னுங் குறிப்பினானே ஆண்பாலையொழித்தன. பிறவுமன்ன.

நடுரு. பெயர்வினை யிடத்து னளரய வீற்றய - லாவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

இது பெயர்க்கும் வினைக்கும் செய்யுட்கண் ஆவதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப - ரை. பெயர் வினை இடத்து - பெயரிடத்தும் வினையிடத்தும், ன ள ர ய ஈற்று - னகர ளகர ரகர யகர வீற்றிற்கு, அயல் - அயலிலுள்ள, ஆ - இறுதிமுதல் ஆகாரம், ஓ ஆகலும் - ஓகாரமாதலும், செய்யுள்உள் - செய்யுளிடத்து, உரித்து உரித்தாம். எ-று.

பொ-ரை. பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் னகார ளகார ரகார யகார ஈற்றயல் நின்றவிகுதிமுதல் ஆகாரம் ஓகாரமாதலும் செய்யுளிடத்து உரித்தாம். எ-று.

[வ-று.] "வில்லோன் காலனகழலே." (வில்லன்)—"தோடியோள் மெல்லடி மேல்வருஞ் சிலம்பே" (தொடியள்) — நல்லோர் யார்கொலளியர்தாமே"—"பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கோடுத்தோய்." (கொடுத்தாய்) (எ-ம்);

"படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்." (படைத்தான்). "நல்லோண்மன்ற கூப்பெயர்த்தோளே." (நல்லாள்) "சென்றோ ரன்பிலர் தோழி." (சென்றார்) - "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப." (வந்தாய்) (எ-ம்) :—பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும்வந்தது

வி-பு. வினையாலணையும்பெயர்க்கண் அன்றி வினைக்கண்ணும் ஒரோவழி ஆ-ஓ. வாதலின் அதனையும் உடன்கூறினர். உம்மையை எதிர்மறையும்மையாக்கி வில்லோன், வில்லான் என ஒன்றேயாதலும் ஆகாமையும்

இன்னும் அவ்வும்மையானே சேக்கான்,வலினுன் எனமற்றென்றாகாமை யும், அதனை ஆக்கவும்மையாக்கி ‡ "பழமுதிர்சோலை மலைகிழவோனே" (கிழவன்) என ஆகாரமேயன்றி அகரமும் ஒகாரமாதலுங்கொள்க.

நடுசச. உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினுந் - திரியா தத்த மீற் றுருபி னென்ப.

இது வேற்றுமை உருபுகட்கும் வினைச்சொற்கட்கும் ஆவதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப - ரை. உருபு உம் - எட்டு வேற்றுமை யுருபுகளும், வினை உம் - மூவகைவினைச்சொற்களும். எதிர் மறுத்து - எதிர்மறுத்தல் செய்து, உரைப்பின் உம்-சொல்லுமிடத்தும், தம் தம் ஈறு (இன்) - தத்தமீற்றினின்றும், உருபின் - அவ்வுருபினின்றும், திரியா-வேறு படா, என்ப - என்றுசொல்லுவர்புலவர். எ - று.

பொ - ரை. எட்டுவேற்றுமை யுருபுகளும் மூவகை வினைச்சொற்களும் எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும் தத்தம் ஈற்றினின்றும் அவ்வவ்வுருபினின்றும் வேறுபடாவென்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. இன் உருபை ஈற்றென்பதன்கண்ணும் கூட்டி எதிர்நிரனிறை யாகப்பொருள்கொள்க. உருபின்கண் எதிர்மறுத்தல் அவற்றின்பயனிலை களையென்க.

[வ-று.] சாத்தன்வாரான், குடத்தைவனையான்,வாளாலெறியான், புல்லர்க்குநல்கான், நிலையினிழியான், பொருளினதின்மை, தீயர்கட்சாரான், சாத்தாசாயல் (எ-ம்);நடவான், நடவாத, நடவாது (எ-ம்)வரும்;

'சொற்றொறுமிற்றிதன் பெற்றி' என்னுஞ் சூத்திரத்தானே உண்மைக்குமறையாகிய இன்மையென்னும் பெயர்க்கண்ணும் ஈறுதிரியாமைகாண்க.

நடத்தல், நடவாமை என்றற்றொடக்கத்தன ஈறுதிரிந்தன வன்றோ வெனின், அவை தொழிற் பெயராதலின் திரிந்தனவெனக.

ஓடாக்குதிரை, அறுவறிவு, என்றற்றொடக்கத்தன ஓடாத, அறாத என்பனவற்றைக் குறைத்து வழங்கினவன்றி ஈறுவேறுபட்டன வல்ல வென்க.

ஓர்வினை நிகழ்வழி அவ்வினைக்குக் கருத்தாவும் செயப்படுபொருளும் முதலியவாகப் பெயர்ப்பொருளை வேற்றுமைசெய்து நின்றவுருபுகள் அவ்வினைநிகழாவழியும் அவ்வாறு நிற்றலானும், வினைவிகுதிகளும் அவ்வினை நிகழ்வழி முற்றின்கண்கருத்தாவையும் எச்சங்களிற் பெயரொழிபையும் வினையொழிபையும் தந்துநின்றாற்போல வினைநிகழாவழியும் நிற்றலானும் இங்ஙனங் கூறப்பட்டதென்க.

---

‡ திருமுருகாற்றுப்படை.

கூடுடு. உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினு-மோருதம் மெச்ச மீறுற முடியும்.

இது அடுக்கு உருபுகட்கும் வினைச்சொற்கட்கும் ஆவதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப - ரை. உருபு - வேற்றுமையுருபுகள், பல அடுக்கின் உம் - விரிந்துந் தொக்குந் தம்முள் விரவிப்பலவடுக்கிவரினும் வெவ்வேறு பல அடுக்கிவரினும், வினை-மூவகைவினைச்சொற்களும், வேறு (பல) அடுக்கின் உம் - வெவ்வேறுபல அடுக்கிவரினும், ஒரு தம் எச்சம்-தத்தமெச்சமொன்று, ஈறு - இறுதியில், உற - வர, முடியும் - அதனோடணைந்துமுடியும். எ - று.

பொ-ரை. வேற்றுமை யுருபுகள்விரிந்தும் தொக்கும் தம்முள்விரவிப் பலவடுக்கிவரினும் வெவ்வேறு பலவடுக்கிவரினும் மூவகைவினைச்சொற்களும் தம்முள்விரவியடுக்குந் தன்மையவன்றி வெவ்வேறு பலவடுக்கிவரினும் தத்தம் எச்சம் இறுதியிலொன்றுவர அதனோடணைந்தும் முடிவனவாம். எ - று.

வி-பு. பல என்பதனை வேறு என்பதனோடுங் கூட்டுக. இவ்விருவகையடுக்கும் படைபடை என்றாற்போல அடுக்கியவல்லவென்பார் பலவடுக்கினும் என்றார். வினைவேறுபலவடுக்கினும் என விதந்தாற்போல உருபிற்கு விதவாமையின் அவைவிரவியும் வெவ்வேறுபலவடுக்கும் என்பதுபெற்றாம்.

[வ-று.] சாத்தன் யானையது கோட்டை நுனிக்கட் பொருட்டுவாளாற்குறைத்தான் என்பன, உருபுகள் விரவிப் பலவடுக்கி, குறைத்தான் என்னும் ஒருவினை கொண்டன.

இவற்றுள் ஆறனுருபு அடுக்கன்று வினையதற்கு எச்சமன்றாதலானும் கோடு என்னும் பெயர்கொண்டமையானுமென்க. சாத்தன் என்னும் பெயர்வேற்றுமை குறைத்தற்கு வினைமுதலைக்காட்டவந்தது. அன்றி அடுக்கென்று கோடலு மொன்று.

சாத்தனையும் கொற்றனையும் தேவனையும் பூதனையும் வாழ்த்தினான் (எ-ம்); சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தேவனுக்கும் பூதனுக்கும் தந்தை (எ-ம்):— இரண்டாமுருபும் நான்காமுருபும் வேறு பலவடுக்கி வாழ்த்தினான் என்னும் ஒருவினையும், தந்தை என்னும் ஒருபெயரும் முறையே கொண்டன.

வாள்கைக் கொண்டான் (வாளை); அருள் அறமுடையான் (அருளால்) (எ-ம்):—உருபுதொக்கு அவ்வாறுவந்தன.

உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் சாத்தன்.—
வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய்
பொருதி புலம்புதி நீயுங்—கருதுங்காற்
பண்டினை யல்லையாற் பாழித்தோட் கோதையைக்
கண்டனையோ வாழி கடல்.—

"இளையள் மெல்லியள் மடந்தை."—"அரிய சேய பெருங்கான் யாறே." (எ-ம்):— வினைமுற்றும் குறிப்புமுற்றும் பெயரொச்சங்களோடு விரவாது வேறுபலவடுக்கி சாத்தன், நீ, மடந்தை, ஆறு என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

கற்ற கேட்ட பெரியோர் (எ-ம்); சிறிய பெரிய நிகர்மலர்க்கோதை (எ-ம்):— பெயரொச்சவினையும், குறிப்பும், வினைவினைக்குறிப்பும் முற்றோடு விரவாது வேறுபலவடுக்கிப் பெரியோர், மலர்க்கோதை என்னும் ஒருபெயர்முறையேகொண்டன.

கற்றுக்கேட்டறிந்தார் (எ-ம்); விருப்பின்றி வெறுப்பின்றி யிருந்தார் (இன்றி) (எ-ம்):— வினையெச்ச வினையும் குறிப்பும் வினையோடு முடியுமென விதந்த வினைமுற்றுக்களோடு விதவாதுவேறு பலவடுக்கி அறிந்தார், இருந்தார் என்னும் ஒருவினைமுறையேகொண்டன. பிறவுமன்ன.

‡ சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

என்னும் வினையெச்சங்கள் கருவிருந்தீன்று என்பதன்றி கருவிருந்து, தலைநிறுவி என முடியர்தாகலான் அவற்றுள் ஒன்றற்கொன்றுமுடிபாய்த் தொடர்தலானும்,

"நாளன்றுபோகிப் புள்ளிடைதட்பப்-பதனன்று புக்குத் திறனன்று மொழியினும் - வறிதுபெயர்குநரல்லர் நெறிகொள." :—என்னும் வினையெச்சக்குறிப்புகள் ஆங்காங்கு முடிதலானும், இவை அடுக்காகாவென்க.

௩௫௬. உருபு முற்றி ரெச்சங் கோளூம் - பெயர்வினை யிடைப் பிற வரலுமா மேற்பன.

இது மேல்கொண்டு முடியும் பெயர்வினைகட்கு இடைப்பிற வரல் உணர்த்துகின்றது.

ப - ரை. உருபு-வேற்றுமையுருபுகளும், முற்று-முற்றுக்களும், ஈரெச்சம் - பெயரொச்ச வினையெச்சங்களும், கொள்ளும்-கொண்டு

‡ சிந்தாமணி, நாமகளிலம்பகம், செ. உச.

முடியும், பெயர் வினை இடை-பெயர்க்கும் வினைக்கும் இடையே, பிற-பிறசொற்கள், வரல் உம் ஆம் - வருதலுமாம், ஏற்பன - அவ் விடத்திற்குப் பொருந்துவன. எ - று.

பொ-ள். வேற்றுமை யுருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங்கொண்டு முடியும்பெயர்க்கும் வினைக்கும் இடையே பிறசொற்கள் வருதலுமாம் ஆண்டைக்குப் பொருந்துவன. எ - று.

வி-பு. பிற எனப்பன்மை கூறினரேனும் "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே." என்பதனான் ஒருசொல் வருதலுங் கொள்க. உம்மை உருபும், முற்றீரெச்சங்களும், அவைகொள்ளும் பெயர் வினை மாத்திரையாய் நிற்றலேயன்றி என இறந்ததுதழீஇ நின்றது.

[வ-று.] சாத்தன் வயிறார உண்டான், அறத்தை அழகுபெறநச்செய் தான்,வாளான் மருவாரை மாயவெட்டினான் [இதனுள் மாய என்பதொன் றுமே இடைவந்தது, மருவாரை யென்பதற்றன்று; இவ்விரண்டனுருபும் வாளால் என்னும் மூன்றனுருபும் அடுக்காய் நிற்றலின்], தேவர்க்குச் செல்வம்வேண்டிச் சிறப்பெடுத்தான், மலையினின்று உருண்டுவீழ்ந்தான், சாத்தனது இந்நடக்கையானை, ஊர்க்கண் உயர்ந்த வொளிமாடம், சாத் தாவிரைந்தோடிவா (எ-ம்);வந்தான் அவ்வூருக்குப் போனசாத்தன்,வந்த அவ்வூர்ச்சாத்தன், வந்து சாத்தனிற்றைநாள் அவனூர்க்குப் போயினான் (எ-ம்) வரும். குறிப்புவினைமுதலிய பிறவுமன்ன.

"கருதலர்ச்சீறியகடுங்கோல் யானை."என்புழி சீறிய என்னும்பெய ரெச்சத்திற்கும் அதுகொண்ட யானை என்னும் பெயர்க்கும் இடையே கோல் என்னும் வினைத்தொகைச்சொல் இடைப்பிறவரலாய் வந்ததன்று. வினைத்தொகை காலங்கரந்தபெயரெச்சமாதலால் பெயரெச்சவினை இரண் டடுக்கி யானை என்னும் ஒருபெயர் கொண்டனவாமெனக. இவ்வாறே அடுக்காய்வந்தனவும் இடைப்பிறவந்தனவும் உய்த்துணர்ந்துகொள்க.

இனி ஏற்பன என்றமையான் "வல்லமெறிந்த நல்லிளங் கோசர் தந்தை-மல்லல் யானைப்பெருவழுதி."என்புழி வல்லமெறிதல் பெருவழுதி மேற்றே யெனின் நல்லிளங்கோசர் தந்தை என்பதனை இடைநிறுவின் ஏலாதாம், வல்லமெறிந்தநல்லிளங்கோசர் மேற்றாகப்பொருள் படுமாதலி னெனக.

௩௫௯. எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்.

இது மேல்பதங்கள் முடியும் பெயர்வினைகள் அவற்றிற் கீற்றினும் வரும் என்பது உணர்த்துகின்றது.

ப-ரை. எச்சம் - உருபுகளும்முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டு முடியுமெச்சமாகிய, பெயர் வினை - பெயரும்வினையும், ஈற்றின் உம்-அவற்றிற்கீற்றிலும், எய்தும்-வரும்.

பொ-ள். உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங்கொண்டு முடியும் எச்சமாகிய பெயரும்வினையும் அவற்றிற்கீற்றிலும்வரும். எ - று.

வி-பு. ஈற்றினும் என்னும் உம்மையான் முதலினும் வருதல் கொள்க.

[வ-று.] சாத்தன் வந்தான், மரத்தைக்குறைத்தான், சாத்தனால் வந்தான், சாத்தற்குக்கொடுத்தான், சாத்தனின் நீங்கினான், சாத்தனது ஆடை, சாத்தன்கட்சென்றான், சாத்தாவா (எ-ம்) ; வந்தான்சாத்தன்-வந்த சாத்தன், வந்துபோயினான் (எ-ம்) :—இறுதிக்கண்வந்தன.

வந்தான் சாத்தன், குறைத்தான் மரத்தை, வந்தான் சாத்தனால், கொடுத்தான்சாத்தற்கு, நீங்கினான்சாத்தனின், சென்றான் சாத்தன்கண், வாசாத்தா (எ-ம்) ; சாத்தன்வந்தான், போயினான்வந்து (எ-ம்) :— முதற்கண் வந்தன.

எய்துமீற்றின் என்றாற்போல முதற்கண்வருதலை யெடுத்தோதாது உம்மையாற்றழீஇக்கொண்டார், ஆறனுருபின் எச்சமும், எழனுருபின் எச்சப்பெயரும், பெயரெச்சத்தின் எச்சமும் முதற்கண்வாராவென்பதூஉம் ; ஏனையவரினும் இறுதிக்கண் வருதல்போல் சிறப்பினவல்லவென்பதூஉம் ; தோன்றுதற்கென்க.

எழுவாயுருபு வினைமுற்றுப்பயனிலையை இறுதிக்கண்கொண்டதூஉம், வினைமுற்றுப் பெயர்ப்பயனிலையை முதற்கண்கொண்டதூஉம், சாத்தன் வந்தான் எனவரும். தம்முள்வேற்றுமையாதோவெனின், கேட்போர்க்குச் சாத்தனிதுசெய்தான் - எனவினையையுணர்த்துவதூஉம் ; இதுசெய்தான் சாத்தன் - என வினைமுதலையுணர்த்துவதூஉம் ஆமென்க. வந்தான் சாத்தன் எனவருவனவும் அன்ன.

௩௫அ. ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.

இது நால்வகைச்சொற்கும் ஆவதோர் இலக்கணம்உணர்த்துகின்றது. மொழியெனப்பொதுப்படக்கூறினமையின் நால்வகைச்சொற்கும் என்பது பெற்றாம்.

ப - ரை. ஒரு மொழி - பெயர்வினை யிடையுரிகளுள்ஒருசொல், ஒழி - ஒழிந்துநின்ற, தன் - தன்னுடைய, இனம் - இனங்களை, கொளல் கு - கொண்டுமுடிதற்கு, உரித்து - உரித்தாகும். எ-று.

பொ - ரை. பெயர்வினை இடை உரி என்னும் நால்வகைச்சொற்களுள் ஒவ்வொன்று எஞ்சிநின்று அதனதன் இனங்களைக் கொள்ளுதற்கு உரித்தாம். எ - று.

[வ-று.] சோற்றை நனியுண்டான் என்றவழி கறியைநனிதின்றான் என்றற்றொடக்கத்தனவும்; பாக்கை நனிதின்றான் என்றவழி வெற்றிலையை நனிதின்றான், சுண்ணம்பை நனிதின்றான் என்பனவும்; நஞ்சுண்டான் சாவான் என்றவழி நஞ்சுண்டாள் சாவாள், நஞ்சுண்டது சாம், என்பனவும்; பார்ப்பான் கள்ளுண்ணான் என்றவழி பார்ப்பனி கள்ளுண்ணாள் என்பனவும், கூறாதே யமைந்துகிடத்தலின் இனங்களாய் எஞ்சிநின்றன.

இவற்றுள் சோற்றை என்னும் பெயர்ச்சொல்லும் உருபிடைச்சொல்லும் கறியை என்னும் பெயர்ச்சொல்லையும் உருபிடைச்சொல்லையும், நனியுண்டான் என்னும் உரிச்சொல்லும் வினைச்சொல்லும், நனிதின்றான் என்னும்உரிச்சொல்லையும் வினைச்சொல்லையும் கொள்ளுதற்குரியவாய் நிற்றல் காண்க. பிறவுமன்ன.

நூஙக. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கு-மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

இது பெயர்வினைகட்காவதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப - ரை. பொது—திணைபாலிடங்காலங்களுக்குப்பொதுவாகிய, பெயர் வினைகளின் - பெயர்வினைகளுடைய, பொதுமை-பொதுத் தன்மையை, நீக்கும் - நீக்கி யொன்றற்குரிமைசெய்யும், மேல் - மேலே, வரும் - வருகிற, சிறப்பு பெயர் வினை - சிறப்பாகியபெயர் வினைகள், தாம் ஏ - தாமே. எ - று.

பொ-ரை. திணைபாலிடங் காலங்கட்குப் பொதுவாகிய பெயர்வினைகளினுடைய பொதுத்தன்மையினை நீக்கி ஒன்றற்குரிமைசெய்யும் மேல் வருஞ் சிறப்புப்பெயர்வினைகள்தாமே. எ - று.

வி-பு. ஒன்றற் கிருமருங்கினையும் மேல் என்பவாகலின் சிறப்புப் பெயர்வினைமீண்டுவரினுங்கொள்க. தாமே என்னும்பிரிநிலை ஏகாரம் குறிப்பினன் உற்றுணர்ந்து இடர்ப்பட வேண்டாவென்னும் பொருள் தந்து நின்றது.

[வ-று.] சாத்தன் இவன், சாத்தன் இது (எ-ம்); சாத்தன் வந்தான், சாத்தன்வந்தது (எ-ம்.) :— பெயர்த் திணைப்பொதுமையினை சிறப்புப்பெயரும் வினையும் வந்துநீக்கின.

ஒருவர் என்னையர், ஒருவர் என்றயர் (எ-ம்); மரம் வளர்ந்தது, மரம்வளர்ந்தன (எ-ம்):— பெயர்ப்பாற் பொதுமையினை சிறப்புப்பெயரும் வினையும்வந்து நீக்கின.

அவர் எல்லாம் இருந்தார், யாம் எல்லாம் வருவம், நீவிர் எல்லாம் போமின்:—எனப்பெயரிடப் பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினை யும்வந்து நீக்கின.

வாழ்க அவன்,-அவள்,-அவர்,-அது - அவை,-யான்,-யாம்,-நீ, - நீர் (எ-ம்); உண்டுவந்தான், - வந்தாள், - வந்தார், - வந்தது,-வந்தன, -வந்தேன்,-வந்தேம்,-வந்தாய், - வந்தீர்,-வருகின்றன், - வருவான் (எ-ம்):— வினைத்திணைபாலிடங்காலப் பொதுமையினை சிறப்புப்பெயரும் வினையும் வந்துநீக்கின. பிறவுமன்ன.

உண்டு என்பது இறந்தகால வினையெச்சமாயினும் முக்காலவினைகளையுங்கொண்டு முடிதற்குரிய பொதுமையினை யுடைத்தாகலின் அதனை மேல்வருஞ் சிறப்புவினை நீக்கின.

நகூ0. பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை - யெதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பதுங் - குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்.

இது நால்வகைச் சொற்கு மாவதோர் இலக்கணம் உணர்த்தும்வழி சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதியும் சிலவற்றிற்கு எய்தாததெய்துவித்தலும் உணர்த்துகின்றது.

ப - ரை. பெயர் (சொல் ஒழிபு) - பெயரெச்சமும், வினை (சொல்ஒழிபு) - வினையெச்சமும், உம்மை (சொல் ஒழிபு) - உம்மைபெச்சமும், சொல் (சொல்ஒழிபு)- சொல்லெச்சமும், பிரிப்பு (சொல் ஒழிபு)-பிரிநிலையெச்சமும், என (சொல் ஒழிபு) - எனவெச்சமும், ஒழி இசை (சொல் ஒழிபு) - ஒழியிசை யெச்சமும், எதிர்மறை (சொல் ஒழிபு) - எதிர்மறையெச்சமும், இசை (சொல் ஒழிபு) - இசையெச்சமும், என்னும் - என்கிற, சொல் ஒழிபு - சொல்லெச்சங்கள், ஒன்பது உம் - ஒன்பதும், குறிப்பு (ஒழிபு)உம்-குறிப்பெச்சமும், தம் தம் - தம்முடைய தம்முடைய, எச்சம் - எச்சங்களை, கொள்ளும் - கொண்டுமுடியும். எ - று.

போ - ரை. பெயரெச்சமும் வினையெச்சமும் உம்மையெச்சமும் சொல்லெச்சமும் பிரிநிலையெச்சமும் எனவெச்சமும் ஒழியிசையெச்சமும்

எதிர்மறை யெச்சமும் இசையெச்சமுமாகிய சொல்லெச்சம் ஒன்பதும், குறிப்பெச்சம் ஒன்றும் தத்தம் எச்சங்களைக்கொள்ளும். ஏ-று.

வி-பு. சொல்லொழிபு என்பதனை முன்கூறிய ஒன்பதனேடும், அதனுள் ஒழிபு என்பதனை பின்கூறிய குறிப்பினேடும் கூட்டுக. குறிப்புச் சொல் ஒழிபு எனக் கூட்டியுரைத்தால் என்னையெனின் அது பின்னர் கூறுதும்.

எனவே எச்சங்கள், ¶சொல்லெச்சம், குறிப்பெச்சம் எனஇருவகைய வென்பதூஉம்; சொல்லெச்சம் ஒன்பது எனத்தொகைகூறினர் வகையுள்

¶ "சொல்லெச்சம் என்பது சொல்லியற் சொல்லெச்சமும்; செய்யுளியற் சொல்லெச்சமும் என இருவகைப்படுமென்றும், அவற்றுள்-சொல்லியற் சொல்லெச்சமாவது சொல் என்பதை எச்சமாகவுடைய என் எச்சம் என்றும்; அது சொல் என்னும் முதனிலையல்லது முன் பின் சொல் எஞ்சுதல் இன்றெனவும்; அதற்கு உதாரணம் - வினையெனப்படுவது - வினையென்று சொல்லப்படுவது, பெயரெனப்படுப -பெயரென்றுசொல்லப்படுவன (எ-ம்), செய்யுளியற்சொல்லெச்சம் என்பது - செய்யுளிடத்து முன்னகவாயினும், பின்னகவாயினும் ஒருசொல்மாத்திரம் எஞ்சிநிற்பதெனவும்; அதற்குதாரணம் — "எனக்கீந்த கல்கெழுகானவர் நல்குறூஉ மகண் - மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே" இதனுள் எனக்கீந்த என முன்னும்,—"கழநிரூஉ சேஎய்குன்றங் குருதிப்பூவின் குலைக் காந்தட்டே-ஆதலால், யாங் காந்தட் பூவாற் குறையிலம்" எனவும் வரும். இதனுள் ஆதலால் எனப் பின்னும் ஒருசொல் எச்சமாய் நின்றதென வும்; பொருள்விளங்க ஆசிரியர் தொல்காப்பியனர் — "சொல்லென் னெச்ச முன்னும் பின்னுஞ் - சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே"-எனக் கூறியதும்; குறிப்பெச்சம், இசையெச்சம் என்பன - குறிப்பின்கண் தோன்றிய எச்சமெனவும், இசையின்கண் தோன்றிய எச்சமெனவும் விரியுமென்றும்; மேற்கூறிய சொல்லெச்சத்துடன் இம்மூன்றும் முடிக்கும் சொல்லின்றி எச்சப்பொருளைத் தாமே விளக்குமென்றும்; குறிப்பெச்சம் - சொல்லியற் குறிப்பெச்சமும், செய்யுளியற் குறிப்பெச்சமும் என இருவகைப்படுமென்றும்; சொல்லியற் குறிப்பெச்சத்திற்கு உதாரணம் — கற்கறித்து நன்கட்டாய் எனின் தீங்கட்டாய் எனக் குறிப்பிற்றேன்றிய எச்சப்பொருளை அதுவே விளக்கிற்றென்றும்; செய்யுளியற் குறிப்பெச்சத்திற்கு உதாரணம்-"இளைதாக முண்மரங் கொல்க களையுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து"—என வரும் இக்குறளென்பதும்; இசையெச்சத்திற்கு உதாரணம் - வயிறு மொடுமொடுத்தது என்றல் இசையின் குறிப்பாகிய உண்ணவேண்டாம் என்னும் எச்சப்பொருளை அந்த இசையே விளக்கி நின்றதென்பதும்; இசை என்பது ஒலி எனவும் விளங்க 'அவைதாம் - தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்" எனக்கூறியதும்; இன்னும் இப்பத்து எச்சங்களையும் தொகுத்து "பிரிநிலை வினையே பெயரே யொழியிசை-யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே - குறிப்பே யிசையே யாயீரைந்து- நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி" எனக் கூறுதலும் உய்த்துணர்ந்து கொள்க." என்பர்.—இராமாநுசகவிராயர்

ஒன்றனையுஞ் சொல்லெச்சமென்றமையான், அவ்வகையுள் ஒன்றாகிய சொல்லெச்சமென்பது சொல்விகற்பங்களின்றி சொல் என்னுஞ் சொல் எஞ்சி நிற்பதென்பதூஉம் பெறும். * "சொல்லெனெச்ச முன்னும் பின்னுஞ்-சொல்லளவல்லதெஞ்சுதலின்றே."—என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரென்க. இவ்வாசிரியவசனத்திற்கு இப்பொருளன்றி வேறுபொருள்கூறுவாருமுளர். அதுநிற்க,

[வ-று.] செய்தசாத்தன், செய்கின்றசாத்தன், செய்யுஞ்சாத்தன்-(எ-ம்); நல்லசாத்தன் (எ-ம்):—பெயரொச்சங்கள் தம் எச்சமாகிய செய்பவனது. பெயர்கொண்டன. வினைக்கருவிமுதல் ஐந்தோடும் ஒட்டுக. வினைத்தொகைகளும் பெயரொச்சமா யடங்குதலின் அவையும் முற்றெச்சங்களும் அன்ன.

செய்துவந்தான், செய்துநல்லனாயினன், செய்துநல்லன், செய்துவந்தல் (எ-ம்); விருந்தின்றியுண்டபகல் (எ-ம்):— வினையெச்சங்கள் தம் எச்சமாகிய வினைவினைக்குறிப்பும் தொழிற்பெயரும் கொண்டன. காட்டாதொழிந்த வினையெச்சங்களும்,முற்றெச்சங்களும் அன்ன.

இவ்வெச்சத்திற்குமுடிபாகிய வினைக்குறிப்பு ஆக்கமோடு வருதலும், அதுதொகவருதலும், "ஆக்கவினைக்குறிப்பு" என்னுஞ் சூத்திரத்துள் அமைந்துகிடந்தன.

சாத்தனும் வந்தான்-என்னும் உம்மையெச்சம் முன்னர்கொற்றன் வந்தான் என தன்னெச்சம் கொண்டது.

‡ "மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக்கண்ணே - கடியேன்றார் கற்றறிந்தார்." (என்றார்); ‡‡ "இசையாவொருபொருளில்லென்றல் யார்க்கும் - வசை யன்று." (இல்லென்றல்):— என்பன சொல்லெச்சம். கடியேன்று சொன்னார், இல்லென்றுசொல்லுதல் என சொல் என்னும் தம்மெச்சம் கொண்டன. இவைபெயரொச்சம் வினையெச்சம் என்றாற்போல சொல் என்னும் எச்சத்தையுடைய இடைச்சொல்லை சொல்லெச்சம் என்றலின் ஆதபெயர். மேல்வரும் என என்னெச்சம் ஒழிந்தனவும் அன்ன.

சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் :— என்பனபிரிநிலையெச்சம். இவைபிறர்கொண்டிலர் எனத் தம்மெச்சம் கொண்டன. கோடற்றொழிலால் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறராதலின் பிரிநிலையென்க.

---

* தொல்காப்பியம், சொல், எச்சவியல், சூ. சரு.

‡ நாலடியார், செ. ருசு. ‡‡ நாலடியார், செ. கக.

கடல் ஒல்லெனவொலித்தது, நரம்புவிம்மெனவிசைத்தது, தலை ஒடியெனஇடித்தது :— என்பன எனவெச்சம். இவை தம்மெச்சமாகிய வினைகொண்டன. மிகவும் ஒலித்தது, மிகவும் இசைத்தது, மிகவும் இடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாமாதலின், இவ்வெனவெச்சம் விகுதிப்பொருள் தருவதோர் இடைச்சொல்லாமென்க.

† தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்-பெய்யெனப் பெய்யுமழை." என்பதனுள் எனவென்பது பெய்யெனச் சொல்ல என வினைப்பொருள் தருதலின் இடைச்சொல்லடியாகப்பிறந்த செய. என் எச்சமாய் முன்னர்ப்போந்த வினையெச்சத்துள் அடங்குமென்க.

கூரியதோர்வாண்மன், வருகதில்லம்ம, கொளலோ கொண்டான்— என்பன ஒழியிசையெச்சம். இவைமுறையே கொடிற்று, வந்தாலின்னதுசெய்வல், கொண்டுய்யப்போயினனல்லன் :—எனத் தம்மெச்சம் கொண்டன.

வாலுழரியன், யானேசெய்தேன் :—என்பன எதிர்மறையெச்சம். இவைமுறையானே வாராமைக்குழரியன், யான்செய்கிலன் :—எனத்தம் மெச்சம் கொண்டன.

இதுகாறும் வினையியலின் ஒழிபாகிய பெயரெச்ச வினையெச்ச முடிபும், இடையியலின் ஒழிபாகிய ஏனை அறுவகையெச்சமுடிபும் எடுத்து விதந்தார். இவ்வாறெடுத்து விதத்தற்கு வரையறைப் படாது வருஞ் சொல்லெச்சங்களை யெல்லாந் தொகுத்து இசையெச்சமென இறுதிக்கண் கூறினர். இசை என்பது சொல். இசையெச்சமெனப் பொதுப்படக்கூறினமையின், இவ்வெச்சமும் இதுகொள்வதும் பெயர் வினைஇடைஉரி யென்னும் நால்வகைச்சொல்லுள் ஒன்றும் பலவும் தனித்துந் தொடர்ந்தும் வருமென்பதுபெற்றாம். அவற்றுள் சில இசையெச்சங்கள் வருமாறு.—

†† "இணரெரிதோய்வன்ன வின்னாசெயினும்-புணரின் வெகுளாமை நன்று." என்புழி பிறவுயிர்க்கின்னாசெயின் அவை பிழையாது தமக்குவருதல்கருதி தம்மாட்டு அன்பும், பிறவுயிர்கண் மாட்டு அருளும், இன்னாசெய்தலான் மேன்மேல்வளரும் பிறப்பிறப்பின் அச்சமும், நம்மால்இன்னா செயப்பட்டாரை நாமடைந்து இரத்தல் கூடினுங்கூடும், அதனால் யார்மாட்டும் இன்னாசெய்யக்கடவமல்லம் என்னும் வருங்கால உணர்ச்சியும் இலராய், ஒருவர் தன்னாலாற்றல்கூடாத இன்னாதனவற்றைத் தன்கண் செய்தாராயினும் அவர்தமக்குவேண்டுவதோர்குறை முடித்தல் கருதி நாணாது தன்னையடைந்தாராயின், அவர்செய்த இன்னாமைகருதி அவரை வெகுளாது

† திருக்குறள், செ. ருரு.
†† திருக்குறள், செ. ௩௦அ.

அவற்றைமறந்து அவர் வேண்டுங்குறைமுடித்து, முன்செய்த இன்னாமை யால் அவர் கூசியொழுகுதல் தவிர்தற்குக் காரணமாகிய மெய்ப்பாடு முத லியன தன்கண்குறிப்பின்றி நிகழ, அவர்க்கினியனாகி யிருத்தல் தன்சால் புக்கு ஈன்றெனை நால்வகைச்சொற்களுள் வேண்டுவன வெல்லாந் தந்து அகலங்கூறவேண்டிநிற்பன இசையெச்சம் ஆமென்க. பிறவுமன்ன.

இனிக் குறிப்பெச்சங்களாவன ஒன்றொழி பொதுச்சொல் முதலிய குறிப்புச்சொற்களாம், குறிப்பினுணரப்படுவன முறையே யெஞ்சநிற்ற லின். அவை அவ்வெச்சங்கொள்ளுமாறு.—

"பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களுள" (மக்கள்) - என்புழி மக்கள் என்னும் பொதுப்பெயர் பெண்மக்கள் என பெண் என்னுஞ் சிறப்புப்பெயர்கொண்டது.

"துறுத்தாட்பூதம்." என்புழி தகரவல்லொற்று அதற்கினமாகிய மெல் லொற்றையும், "மைாயிதழ்புரையும்" என்புழி மைாயென்பது தா என் னும் முதலெழுத்தையுங்கொண்டன.

வாய்பூசிவருதும் என்பது எச்சில்கழித்து வருதும் என்பது கொண் டது.

புளித்தின்றாள் என்பது பழமாகிய புளியென பழம் என்பது கொண் டது.

பொற்றொடி என்பது பொற்றொடியை யுடையாள் என இரண்டா முருபும் அதன்பயனிலையுங்கொண்டது.

நல்லனிவன் என்பது பெயர்ப்பொருள்கொள்ளாது வினைக்குறிப்புப் பொருளோடு நல்லனாயினான் இவன் என ஆக்கங்கொண்டது.

‡ "அறத்தாறிதுவென வெள்ளைக்கிளவி." என்பது † "அறத்தாறிது வென வேண்டா சிவிகை - பொறுத்தானோ டூர்ந்தா னிடை."— என்பது கொண்டது.

"அலங்குளைப்புரவி யைவரொடுசினைஇ" (ஐவர்) - என்பது தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்பன கொண்டது.

†† "பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்-சாலமிகுத்துப்பெயின்." என்பதூஉம்; உண்ணாநின்றான் கறங்கறித்துழி, அட்டோன் முகம்நோக்கி

---

‡ காரிகை, உறுப்பியல், செ. கரு.

† திருக்குறள், செ. ௩௭.

†† ௸ செ. சஎரு.

நன்கட்டாய் என்பதூஉம்; மெலியராயினும் பலர்தொகின் வலியரையும் வெல்வர் என்பதனையும், நன்கட்டாயல்லை யென்பதனையுங் முறையே கொண்டன. பிறவுமன்ன.

இவை ஒன்றொழி பொதுச்சொல்முதலிய குறிப்பெச்சங்கள் தம் மெச்சங்கொண்டன. இதனைக் குறிப்புச் சொல்லெச்சம் என்றது குறிப் பெச்சம் என்றார், சொல்லேயன்றிப் பொருள்மாத்திரையும் 'எழுத்தும் எஞ்சவருவனவுங் உள்வாதலி னென்க. இப்பத்தெச்சங்கட்கும் வேறு பொருள் கூறுவாருமுளர். அவையெல்லாம் இசையெச்சமாயும் குறிப்பெச் சமாயும் அடங்குமாதலானும், பெயரெச்ச வினையெச்ச முதலியவற்றிற்கு ஆங்காங்கு முடிபுகூறுராயினர், ஈண்டெச்சங்களை யெல்லாம் தொகுத்துக் கூறும்வழி முடிபு கூறுராயின், கூறியது கூறல் என்னுங் குற்றமாம் ஆதலா னும் அது பொருந்தாதென்க.

௩௯௯. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை - முதலிய பொருளி னவற்றி னுருபிடை - யொழிய விரண்டு முதலாத் தொடர்ந் தொரு - மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்சொல்.

இது பெயர்க்கும் வினைக்கும் ஆவதோர் விதி உணர்த்துகின்றது.

ப-ரை. பெயரொடு - பெயர்ச்சொல்லோடு, பெயர் உம் - பெயர்ச்சொல்லும், (பெயரொடு) - பெயர்ச்சொல்லோடு, வினை உம் - வினைச்சொல்லும், வேற்றுமை முதலிய - பின்சொல்லப்படும் வேற்றுமைமுதலிய, பொருளின் - அறுவகைப்பொருட்புணர்ச்சிக் கண், அவற்றின் - அவற்றினுடைய, உருபு - உருபுகள், இடை - நடுவிலே, ஒழிய - தொக்குநிற்ப, இரண்டு முதலா - இரண்டுசொற் கள்முதலாக, தொடர்ந்து - பலசொற்கள் தொடர்ந்து, ஒருமொழி போல் - ஒருசொற்போல், நடப்பன - நடப்பனவை, தொகைநிலை தொடர் சொல் - தொகைநிலைத் தொடர்சொற்களாம். எ-று.

போ-ரை. பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும் பெயர்ச்சொல் லோடு வினைச்சொல்லும் வேற்றுமை வினைபண்பெனப் பின்னர்வகுத்துக் கூறும் அறுவகைப்பொருட் புணர்ச்சிக்கண் அவற்றினுருபுகள் இடையே தொக்கு நிற்ப இரண்டுமுதலிய பலசொற்கள் தொடர்ந்து ஒருமொழி போல் நடப்பன யாவை அவை தொகைநிலைத் தொடர்சொற்களாம். எ-று.

வி-பு. தொகை என்றும் பலபொருள் ஒருசொல். ஈண்டுருபு மறை தலை உணர்த்திநின்றது.

* "ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின் - மெய்யுருபு தொகா விறுதி யான." என்பவாகலின் வினையொடுவினைத்தொகை நிலைத்தொட

---

* தொல்காப்பியம் - சொல், வே - மயங்கியல், சூ. ௨௨.

ராகாமையின் அதனை யொழித்தும், நிலத்தைக்கடந்தான், நிலங்கடந்தான் என உருபு இடைவிரியின் பிளவுபட்டுத் தொக்கதேல் பிளவு படாதும் தொடருமாதலின் ஒருமொழிபோல் என்றுங் கூறினர்.

ஒருமொழிபோல் நடத்தலாவது - கொல்யானைவந்தது, நிலங்கடந்தான் சாத்தன் என இரண்டுமுதலிய பலசொற்றொடர்ந்து ஒரு பெயராயும் வினையாயும் நின்று தம்முடிபேற்றலெனப் பொருள்கூறின், அவ்வாறு தொகாநிலைத் தொடரும் கொன்றயானை வந்தது, நிலத்தைக்கடந்தான் சாத்தன்,—என நடக்குமாதலின் அது பொருந்தாதென்க.

நகஉ. வேற்றுமை வினைபண் புவமை யும்மை - யன்மொழி யெனவத் தொகையா றதும்.

இது மேல்வேற்றுமை முதலியவென்றார் அவை இவையென்பது உணர்த்துகின்றது.

பு-ரை. வேற்றுமை (தொகை) - வேற்றுமைத்தொகையும், வினை (தொகை)-வினைத்தொகையும், பண்பு (தொகை) - பண்புத்தொகையும், உவமை (தொகை) - உவமைத்தொகையும், உம்மை (தொகை) - உம்மைத்தொகையும், அன்மொழி (தொகை) - அன்மொழித்தொகையும், என - என்று, அ தொகை-முன்னேசொல்லப்பட்ட தொகைநிலைத்தொடர்மொழிகள், ஆறு ஆகும் - ஆறு வகைப்படும். எ-று.

பொ-ரை. வேற்றுமைத்தொகையும் வினைத்தொகையும் பண்புத்தொகையும் உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் அன்மொழித்தொகையும் என மேற்கூறிய தொகைநிலைத்தொடர்சொல் அறுவகைப்படும். எ-று.

நகங. இரண்டு முதலா விடையா றுருபும் - வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

இது நிறுத்தமுறையானே வேற்றுமைத் தொகையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. இடை - எழுவாய்க்கும் விளிக்கும் இடையே நிற்கிற, இரண்டு-இரண்டாவது,முதல் ஆம்-முதலாயிருக்கின்ற, ஆறு உருபு உம் - ஆறுவேற்றுமை யுருபுகளும், வெளி படல் இல்லது - தொக்க தொடர்மொழிகள், வேற்றுமை தொகை - வேற்றுமைத் தொகைகளாம். எ-று.

பொ-ரை. எழுவாய்க்கும் விளிக்கும் இடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறுவேற்றுமையுருபும் தொக்க தொடர்சொற்கள் வேற்றுமைத் தொகைகளாம். எ-று.

வி-பு. வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்பெயரோடு பெயரும் வினையுங்கூடியகூட்டத்தை வேற்றுமைத்தொகையென்றதன்றென்பார் ஆறுருபும் வெளிப்படல் இல்லதென்றார். ஏனைத்தொகைகளுமன்ன.

[வ-று.] நிலங்கடந்தான், தலைவணங்கினான், சாத்தன்மகன், ஊர் நீங்கினான், சாத்தன்கை, குன்றக்கூகை, யானைக்கோட்டுநுனி குறைத்தான் :—என ஆறுருபும் இடையே தொக்கவாறுகாண்க.

இடையே தொக்கதனைத் தொகைநிலைத் தொடரென்றமையானே கடந்தான் நிலம், இருந்தான்குன்றத்து-என இறுதிக்கண் தொக்குப்பிளவு பட்டு நின்றன தொகைநிலைத் தொடராகாவோவெனின், நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் - என்பனவற்றை ஒரோர்வழிமாறிக் கூறுதலின் பிளவு பட்டு நின்றனவன்றி அவையும் இடைக்கண் தொக்க தொகைநிலைத் தொடரேயாமெனக.

இனி ஆறுருபும் என்னும் முற்றும்மையை எச்சவும்மையாக்கி பொற்குடம் என ஒரோவழியுருபும் பொருளும் உடன்தொக்கதூஉம் வேற்றுமைத்தொகையெனக்கொள்க. அதுவிரிவுழி பொன்னாற் செய்தகுடம் எனவிரியும். பிறவுமன்ன.

நகூ௪. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

இது வினைத்தொகையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. காலம் - காலம்பற்றிப் புடைபெயர்கிற வினையுருபுகளும், கரந்த - தொக்க, பெயர் எச்சம் - பெயரெச்சவினைகள், வினைத்தொகை - வினைத்தொகைகளாம். எ-று.

பொ-ரை. காலம்பற்றிப் புடைபெயர் வினையுருபாகிய தம்மிறுதிகள் தொக்குநிற்பச்செய்வதாதி அறுபொருட் பெயராகிய தம்மெச்சங்கொண்ட பெயரெச்சங்கள் வினைத்தொகைகளாம். எ-று.

வி-பு. காலம் என்றது ஆகுபெயர். முதனிலை வினையுருபு தொகாது நிற்பப் புடைபெயர்ச்சி வினையுருபு தொக்கனவற்றை வினைத்தொகையெனப்படுமென்பார் காலங்காந்த என ஆகுபெயராற் கூறினார். புடைபெயர்ச்சி வினைகள்முதனிலையொழிந்த இறுதிகள் காலங்காட்டிநிற்றலின் அவ்வினைகட்கு அவை உருபாயின.

[வ-று.] நெருநல் அடுகளிறு, இன்று அடுகளிறு, நாளை அடுகளிறு, வெல்களம்,-தொழில்,-பொழுது,-கருவி,-எனவரும். இவைவிரிவுழி-நெருநல் அட்டகளிறு, இன்று அடாநின்ற களிறு, நாளை அடுங்களிறு - என விரியும்.

இவை முறையே இறந்தகால வினைத்தொகை, நிகழ்கால வினைத் தொகை, எதிர்கால வினைத்தொகை யெனப்படும். இஃதொவ்வொரு காலத்தையே பற்றாது முக்காலமும்பற்றி நெருநலும் அட்டகளிறு, இன்றும் அடாநின்றகளிறு - நாளையும் அடுங்களிறு-எனவிரியவரின் முக்காலவினைத் தொகை யெனப்படும்.

இங்ஙனம் காலவிகற்பம்பற்றிப் புடைபெயர்வினைகருதாது, அரிவாள், ஆவுரிஞ்சுதறி - என்றாற்போல, அடுகளிறு என்பது இத்தொழிற்குரியது இஃது என்னும் பொருள்படவருமாயின் வினைத்தொகைக் குறிப்பெனப்படுமென்க. இவ்வாறே ஏனை வினைத்தொகைகளையெல்லாம் உய்த்துணர்ந்துகொள்க.

இதற்கு வருமொழி பெயராதலின் இத்தொகை நிலையாயேதொடரும் இரண்டிறந்தமொழிகள் இலவென்க. அட்டதுகளிறு, அடாநின்றதுகளிறு, அடுவதுகளிறு-எனமுற்றுக்கள் இறுதிதொகுதலின் அடுகளிறு என வினைத்தொகையாயிற்றெனின், அடுகளிறிது, அடுகளிறுவந்தது எனப்பின்னுமோர் பெயர் வினைகளையேற்றலின் அவையன்றெனவும், அடு என்னும் முதனிலைவினையாகிய காரணத்தின்கண் முக்காலவினையாகிய காரியங்கள் தொக்குநிற்றலின் அடுகளிறுஎன வினைத்தொகையாயிற்றெனின், காரணத்தின்கண் காரியந் தொக்குநிற்றற்கு களிறு என்னும் முடிக்குஞ்சொல் வேண்டாமையின், அஃதொருமொழி இலக்கணமன்றி இங்ஙனம் அதிகரித்த தொடர்மொழி இலக்கணமன்மையின் அஃதன்றெனவும் விலக்கிப் பெயரெச்சத்து இறுதிதொக்கது ¶ வினைத்தொகையென்றார்.

௩௬௫. பண்பை விளக்கு மொழிதொக் கனவு - மொருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.

இது பண்புத்தொகையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. பண்பை - குணத்தோடு குணிக்குண்டாகிய ஒற்றுமை நயத்தை, விளக்கும் - விளக்குகிற, மொழி - ஆகியவென்னும் பண்புருபு, தொக்கன உம் - தொக்குநின்றவையும், ஒரு பொருட்கு - ஒருபொருளுக்கு, இரு பெயர் - பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாகிய இருபெயர்கள், வந்த உம் - வந்தவையும், குணத்தொகை - பண்புத்தொகைகளாம். எ-று.

¶ "ஆசிரியர் தொல்காப்பியர் "வினையின்றொகுதி காலத்தியலும்" எனக் கூறுகின்றுழிப் பெயரெச்சத்திறு தொக்கு மூன்றுகாலத்தும் நிகழ்வது என்பர்." எனக்கூறுவர்.—இராமாநுசகவிராயர்.

பொ-ரை. குணப்பெயரோடு குணிப்பெயர்புணருங்கால் அக்குணியோடு குணத்துக்குண்டாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்கு ஆண்டு வரும் ஆகிய என்னும் மொழியாகிய பண்பு உருபுதொக்கு நிற்பனவும், அப்பண்பு உருபு தொக்கு நிற்பப் பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாய் இருபொருட்கு இருபெயர்வந்தனவுமாகிய இவ்விரண்டும் பண்புத்தொகைகளாம். எ-று.

வி-பு. குணத்தொகை என்றமையான் ஒருபொருட்கு இருபெயர் வந்தனவற்றின்கண்ணும் பண்புருபு தொகுமென்பது பெற்றாம்.

[வ-று.] **செந்தாமரை, கருங்குவளை, வட்டக்கடல், சதுரப்பலகை, ஒருபொருள், இருபொருள், தீங்கனி, துவர்க்காய் (எ-ம்); ஆயன் சாத்தன், வேழக்கரும்பு, அகரமுதல, சகரக்கிளவி (எ-ம்); செந்நிறக்குவளை, கரும்புருவச்சிலை** (எ-ம்) வரும்.

இவை விரிவுழி **செம்மையாகிய** தாமரை, **ஆயனாகிய** சாத்தன், **செம்மையாகிய நிறமாகிய** குவளை, என விரியும். இவ்வாகிய என்னும் உருபின்கண் ஆக்கவினையின்மையின் இலக்கணையால் **செய்த** என்னும் வாய்பாட்டின்பாற் படுவதோர் வினையிடைச்சொல். **ஆயன்** என்னும் பொதுப்பெயர் **சாத்தன்** என்னுஞ் சிறப்புப்பெயரை விசேடித்தும், **வேழம்** என்னுஞ் சிறப்புப்பெயர் **கரும்பு** என்னும் பொதுப்பெயரை விசேடித்தும் வந்தன. பிறவுமன்ன.

முற்றெச்சமாகிய காலத்து முற்றுப்பொருளையொழித்து எச்சப்பொருளை உணர்த்திநின்றாற்போல **ஆயன், வேழம்** என்றற்றொடக்கத்து நிலைமொழிகள் பண்பிச்சொல்லாயினும் அப்பண்பிகளையொழித்துப் பொதுப்பண்பினையுஞ் சிறப்புப்பண்பினையும் உணர்த்தி வருமொழிக்கடையாய் நிற்றலின் அவையும் பண்புத்தொகையாயின.

ஆகிய என்பதன்று பண்பைவிளக்கு மொழியென்பது **மை** விகுதியென்றால் என்னையெனின், ஓர் மொழிக்கு உறுப்பாகிய விகுதியை மொழியென்றல் கூடாமையானும், **வட்டம், சதுரம்** முதலிய பண்பிற்கு அவ்விகுதியின்மையானும், **வட்டக்கடல்** என்புழி மகர ஈறுகெட்டுப்புணர்ந்தாற்போல **மை** ஈறுகெட்டுப் புணர்ந்ததென்பீது ஈறுபோதல் என்னுஞ் சூத்திரத்தாற் பெறுதலானும் அஃதன்றென்க.

செய்யதாமரை என்னும் எச்சவிறுதிதொக்கது இத்தொகையென்பாரும், **செய்யதுதாமரை** என்னும் முற்றிறுதிதொக்கது இத்தொகையென்பாருமுளர். இவையும் மொழியன்மையானும், **வட்டக்கடல்** முதலிய பண்புத்தொகைக்கு அவ்வெச்சவிறுதி விரித்தல்கூடாமையானும், அவ்வெச்சம் இறுதி தொக்கதேல் அதனை வினைத்தொகைக்குறிப்பென்றல் கூடுமன்றி, பண்புத்தொகை யென்றல் கூடாமையானும், முற்றிறுதி தொக்கதேல்

பண்புத்தொகையென்றல் கூடாமையேயன்றி, செந்தாமரையிது, செந்தாமரைவிரிந்தது என மேற்பெயர் வினையேற்றல் கூடாமையானும், அது பொருந்தாதென்க.

¶ இனி குணியோடு குணத்துக்குண்டாகிய ஒற்றுமை நயங்கருதாது ஒருபொருளைக் குணகுணியாகப்பிரித்து அவ்வேற்றுமை நயங்கருதி, செம்மையையுடைய தாமரை என விரிக்கின் இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகையாமென்க. பிறவுமன்ன.

நடுகூ. உவம வுருபில துவமத் தொகையே.

இது உவமத்தொகையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. உவம உருபு - வினை பயன் மெய்யுரு என்பனவற்றைப் பற்றிவருகிற உவமஉருபுகள், இலது - தொக்கதொடர்மொழிகள், உவம தொகை . உவமத்தொகைகளாம். எ-று,

---

¶ "இச்சூத்திரத்திற்கு இந்தஉரைகாரர் பொருள்நோக்கம் பற்றாது சொல்நோக்கம் பற்றியே உரையெழுதினர்; என்னெனின்,— செந்தாமரை என்புழி - செம்மைக்குணம் தாமரை என்னுங் குணியோடு ஒன்றுபட்டு நிற்பதல்லது வேறுபட்டு நில்லாமையின், செம்மையாகிய, தாமரை எனக் குணம்வேறு குணிவேறாகப் பிளவுபடப் பொருள் கூறுவது கூடாதென்றுகருதி, ஆசிரியர் தொல்காப்பியனார் "வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென் - றன்ன பிறவு மதன்குண நுதலி - யின்ன திதுவென வரூஉ மியற்கை - யென்ன கிளவியும் பண்பின் றொகையே." எனச் சூத்திரஞ் செய்தார். இதன் பொருளாவது,— இப்பல வேறுபட்ட பண்புகளில் அந்தந்தக் குணங்களைக்குறித்து இன்னகுணத்தையுடையது இது என வரும் எவ்வகைப்பட்ட சொற்களும், இவைபோல்வன பிறவும் பண்புத்தொகைச்சொற்களாமென்பது ஆதலால், செந்தாமரை என்புழி செய்யது - இன்னது, தாமரை-இது என்பதாயிற்று. ஆகவே, செய்யதாகிய தாமரையென்பதே செந்தாமரையெனப் பால்காட்டும் விகுதிகுன்றி முன்னின்ற மெய்திரிந்து முடிந்ததென்பது பொருத்த முடைத்தாயிற்றென்க. ஆண்டு ஆகிய என்பது தொகைப்பொருளை விரித்தற்கு, பெய்துரைத்த பெய்துரை-என்பதைசெந்தாமரை-செய்யதென்னுந்தாமரையெனப்பிற சொல்லால் விரித்தலா லுணர்க. வடநூலாரும் விரியாத்தொகைகளைப் பிறசொல்லால் விரிக்கப்படுமென்பர். அற்றாயின், வட்டப்பலகை, சதுரக்கல்—என்பன எப்பால்களைக் காட்டினவெனின் இங்ஙனம் வடிவுப்பண்பு பற்றிவருவனவற்றை ஐம்பாலறியாப் பண்புந்தொகை யென்றாராயினும் வட்டம், சதுரம் என்பனவும், பலகை, கல் என்பனவும், பால்பகா அஃறிணையாதலால் இவைபோல்வனவற்றை யெல்லாந் தொகுத்து "பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய" எனக் கூறினராதலால் அஃறிணை இருபாற்கும் பொதுமையவாய் நின்று பொருள்நோக்கத்தாற் பால் காட்டி நிற்குமென்க. வட்டமாகியது பலகை, வட்டமாகியன பலகைகள் என விரிப்பினும் அமையும். பிறவுமன்ன." என்பர்.—இராமாநுச கவிராயர்

பொ-ரை. வினைபயன் மெய்யுருவென்பன பற்றிவரும் உவமவுருபுகள் தொக்கதொடர்சொற்கள் உவமைத்தொகைகளாம். எ-று.

[வ-று.] புலிக்கொற்றன், மழைக்கை, துடியிடை, பொற்சுணங்கு (எ-ம்); குருவிகூப்பிட்டான்; சக்கரஞ்சுற்றிவந்தான் (எ-ம்); மரகதக்கிளிமொழி, இருண்மழைக்கை (எ-ம்) வரும். இவை விரிவழி புலியைப்போலுங் கொற்றன், குருவியைப்போலுங்கூப்பிட்டான், மாகதத்தைப்போலும் கிளியைப்போலும்மொழி என விரியும்.

வி-பு. இறுதிக்கண்காட்டிய இரண்டிறந்ததொடர் உவமைக்குவமையன்று, முன்னது உருவுவமையும் பின்னது பயனுவமையும் ஆதலினென்க.

இவை இரண்டாம்வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகையன்றோ உவமைத்தொகையென்றதென்னையெனின், செயப்படுபொருள் கருதிக்கூறியுவழி இரண்டாம்வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகையாகவும், உவமப்பொருள் கருதிக் கூறியவழி அதனையே உவமத்தொகையாகவுங் கொள்ளப்படுமென்க.

நஙஎ. போலப் புரைய வொப்ப வுறழ-மானக் கடுப்ப வியைய வேய்ப்ப-நேரநிகர வன்ன வின்ன-வென்பவும் பிறவு முவமத் துருபே.

இது உவமவுருபு இயற்சொல்மாத்திரையாய் நில்லாது திரிசொல்லாற் பலவாதலின் அவை இவை என உணர்த்துகின்றது.

ப-ரை. போல—நிகர- இப்போலமுதலாகிய செயவெனெச்சம் பத்தும், அன்ன இன்ன என்பவும் - அன்ன இன்ன என்கிற பெயரெச்சக்குறிப்பிரண்டும், பிற உம்-இவைபோல்வனபிறவும், உவமத்து உருபு-உவமவுருபகளாம். எ-று.

பொ-ரை. போல என்பதுமுதலிய செயவெனெச்சம் பத்தும், அன்ன இன்ன என்னும் பெயரொச்சக்குறிப்பு இரண்டும், இவைபோல்வன பிறவும் உவமவுருபுகளாம். எ-று.

வி-பு. இன்ன என்பது அருகியன்றி வாராமையின் பின்கூறினர். பிற என்றமையானே போலப்புரைய என்றற்றொடக்கத்து வினையடியாகப் பிறத்தற்குரிய ஏனை வினையெச்சவிகற்பங்களும் பெயரொச்சவிகற்பங்களும், பொருவ, ஏற்ப, அனைய என்றற்றொடக்கத்தனவுங்கொள்க.

[வ-று.] குருவிபோலக்கூப்பிட்டான், குருவிபுரையக்கூப்பிட்டான் புலியன்ன கொற்றன்:—எனப்பெயரொடு வினைபுணருங்கால் வினையெச்ச உருபுகள் அனைத்தினையும், பெயரொடு பெயர்புணருங்கால் பெயரொச்ச உருபுகளனைத்தினையும் விரித்துக்கொள்க.

பெயரொடு பெயர்புணரினும், புலியைப்போலப்பாயுஞ் சாத்தன், மழையைப்போலக்கொடுக்குங்கை, துடியைப்போலச்சுருங்கிய இடை, பொன்னைப்போலவிளங்கிய சுணங்கு:—என வினையெச்ச உருபுவிரிந் தல்லது நால்வகை உவமையும் விளங்காமையின் அவ்வுருபை முன்ன ரெடுத்து விதந்தாரென்க.

நகூஅ. எண்ண லெடுத்தன் முகத்த னீட்ட - லெனுநான் களவையு ளும்மில தத்தொகை.

இது உம்மைத்தொகையாமாறு உணர்த்துகின்றது.

ப்-ரை. எண்ணல் - எண்ணலளவையும், எடுத்தல் - எடுத்த லளவையும், முகத்தல் - முகத்தலளவையும், நீட்டல் - நீட்டலள வையும், எனும் - என்கிற, நான்கு அளவை உள் - நான்களவைப் பெயர்களுள், உம் இலது - உம்மையாகிய உருபு தொக்குநிற்பவை, அ தொகை - அவ்வும்மைத்தொகைகளாம். எ-று.

பொ-ரை. எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்ட லளவை யென்னும் நால்வகை யளவைகளாற் பொருள்களை யளக்குங் கால்தொடரும் அவ்வளவைப்பெயர்களுள் உம்மையாகியவுருபுதொக்கு நிற் பன உம்மைத்தொகைகளாம். எ-று.

வி-பு. எண்ணலளவையான் அளத்தலேயன்றி அவ்வளவையை எடுத் தல் முதலிய கருவியின்பாற்படுத்து அளத்தலின் ¶ அளவை நான்கென்ற தன்றி எண்ணலளவையே அளவையாதலின் அதனை முன்கூறப்பட்டது.

[வ-று.] கபிலபாணர், இராப்பகல், புலிவிற்கெண்டை, அறுபத்து மூவர், ஆயிரத் தைஞ்ஞூற் றைம்பத்தொன்றேசாலே யரைக்கா லரை மாகாணி முந்திரிகை (எ-ம்); கழஞ்சேகால், கழஞ்சரையே யரைமா வரைக்காணி முந்திரிகை (எ-ம்); நாழியாழாக்கு, கலனே முக்குறுணி, நாழி யாழாக்கே முச்செவிடு (எ-ம்); சாணரை, சாணரையேயரைக்கால் (எ-ம்) வரும்.

இவை விரிவுழி கபிலனும் பரணனும், இராவும் பகலும், புலியும் வில்லுங் கெண்டையும், அறுபதின்மரும்மூவரும்-எனவிரியும். பிறவுமன்ன.

¶ இனி ஆசிரியர் தொல்காப்பியர் 'இருபெயர் பலபெயர்' என்னுஞ் சூத்திரத்தில் அறுவகையாக உம்மைத்தொகையைக்கூறி இருப்ப, இந்நூ லாசிரியர் "நான்களவையுளும் மிலதத்தொகை" என்றல் மாறுகொளக் கூறலன்றோவெனின், அவர் எண்ணலளவையை — இருபெயர், பலபெ யர், எண்ணியற்பெயர், எண்ணின்பெயர் என நான்காகவகுத்தும், முகத்த லளவை, நீட்டலளவை என்னும் இரண்டனையும் அளவின் பெயர் எனத் தொகுத்தும் கூறலால் அன்றென்க." என்பர்.— இராமாநுசகவிராயர்.

இவற்றுள் அறுபது என்பது எண்ணலளவையாய்த்தொடராது என்ணூறழ்ச்சியாய்த் தொடர்ந்தமையின் உம்மைத்தொகையன்று பண்புத்தொகையாமென்க.

கபிலபரணர் என்பது எண்ணுப்பெயராகிய தென்னையெனின், கபிலபரணர் இருவருமேவந்தார் எனத் தொகை பெறுதலினென்க.இவைபோல்வனபிறவுமன்ன.

கபிலபரணர்ப்பரவினன் எனவரூம்வழி கபிலனையும் பரணனையும் பரவினன் என வேற்றுமையுருபும் உடன் விரியுமாலோவெனின், பரவினன் என்னும் வருமொழிநோக்கி வேற்றுமைத்தொகையாகவும், கபில பரணர் என்னும் நிலைமொழி இரண்டனையும்நோக்கி உம்மைத்தொகையாகவும் கொள்ளப்படுமென்க.

இவ்வும்மை இடையினும் இறுதியினும் ஒருங்குதொகுமென்பார், அதிகரித்தமுறையானே, இடைக்கண்தொகும் வேற்றுமைத்தொகைமுதலிய நான்கிற்கும் இடையேதொகுமென்ற பொதுவிதி மாற்றி, இறுதிக்கண் தொகுமெனக்கூறும் அன்மொழித்தொகைக்கும் இடையேஇத்தொகையை வைத்தாரென்க. எண்ணிடைச்சொற்கள் உம்மையேயன்றிப் பிறவுமுளவேனும் அஃதியற்சொல்லாதலின் உம்மைத் தொகையெனப்பட்டது.

௩௬௯. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

இது அன்மொழித் தொகையாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஐந்தொகை மொழி மேல் - வேற்றுமைத் தொகைமுதலிய ஐவகைத்தொகை நிலைத்தொடர் மொழிகளுக்கும் புறத்து, பிற - அவையல்லாத பிறமொழிகளாகிய உருபுகள், தொகல் - தொக்குவருவன, அன்மொழி-அன்மொழித்தொகைகளாம். எ-று.

பொ-ரை. வேற்றுமைத்தொகைமுதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகட்கும் புறத்து அவையல்லாத பிறமொழிகளாகிய உருபுகள் தொகுதல் ¶ அன்மொழித்தொகையாம். எ-று.

¶ "இனி அன்மொழித்தொகை யென்பதற்குப்பொருள்-குறிக்கப்படுபொருளுக்கு அல்லாதமொழி அன்மொழி எனவும், அப்பொருள் தொக்கு நிற்றலின் தொகை எனவுங்கொண்டு, குறிக்கப்படுபொருளுக்கு அல்லாத மொழியில் அப்பொருள் தொக்குநிற்பதென்பதே சிறந்துகாட்டிற்றுப் போலும். என்னையெனின், அஃறிணை—அன்மையாயதிணை, அல்வழி - அல்லாதவழி என்றாற்போல, அன்மொழி என்றவிடத்தும் எதிர்மறுத்தே நின்று பிறிதுபொருளுணர்த்த வேண்டு மாதலினென்க. இனிப் பயனிலைக்கு அல்லாதமொழி அன்மொழி யெனவும், அப்பயனிலைக்குரிய பொருள் அதனிற்றொக்கு நிற்றலின் தொகையெனவுங் கொண்டு அன்மொழித்தொகை யெனப்பட்டதெனினும் அமையும்." என்பர்.—இராமாநுசகவிராயர்.

வி-பு. மேல் என்றமையான் "அவற்றினுருபிடையொழிய" என்ற பொதுவிதியை விலக்கினுரொன்பது பெற்றாம்.

[வ-று.] பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றலி, கிளிக்குடி, கீழ்வயிற்றுக்கழலை (எ-ம்); தாழ்குழல், கருங்குழல், துடியிடை, தகரஞாழல் (எ-ம்); தகரஞாழன்முலை (எ-ம்) வரும்.

இவை விரிவுழி பூவையுடைய குழலினை யுடையாள், பொன்னாலாகிய தொடியினையுடையாள், கவித்த இலக்கணஞ் சொன்னநூல், பொன்னினாகிய தாலியினையுடையாள், கிளியதுகுடியிருக்குமூர், கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலைபோல்வான்(எ-ம்); தாழ்ந்தகுழலினையுடையாள், கருமையாகிய குழலினையுடையாள், துடியன்ன இடையினையுடையாள், தகரமும் ஞாழலும் விராய்ச்சமைந்தசாந்து (எ-ம்); தகரமும் ஞாழலும் விராய்ச்சமைந்த சாந்தையணிந்த முலையினையுடையாள் (எ-ம்):- 2 விரியும்.

இனி இரண்டிறந்தமொழிகள் அறுவகைத்தொகையும் விரவித்தொகுமாறு "திகழ்செவ்வான் மதித்திருமுகப்பூங்குழல்" எனவரும். இவை விரிவுழி-திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் மதிபோலுந்திருமுகத்தினையும் பூவையுடைய குழலினையும் உடையாள் எனவிரியும்.

௩௭௦. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி - யெனு நான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.

இது தொகைநிலைத் தொடர்சொற்கள் ஒன்றுபடத் தொடர்ந்தனவேனும் அப்பொருளும் ஒன்றுபடத்தொடராது பிளவுபட்டு ஓரிடத்துச் சிறவாது நிற்குமென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. முன் மொழி - முன்சொல்லும், பின் மொழி - பின் சொல்லும், பல மொழி - பலசொற்களும், புற மொழி - புறத்து வருகிறசொல்லும், எனும் நான்கு இடத்து உம்-என்கிற நான்கிடத்திலொன்றிலே, தொகை பொருள்-தொகைநிலைத் தொடர்ப்பொருள், சிறக்கும் - சிறந்துநிற்கும். எ-று.

பொ-ரை. தொகை நிலைத் தொடர்மொழிகளின் முன்மொழிக்கண்ணேனும், பின்மொழிக்கண்ணேனும், அனைத்து மொழிக்கண்ணேனும், அனைத்துமொழிக்கும் புறமொழிக்கண்ணேனும் சிறந்துநிற்கும் தொகைநிலைத்தொடர்ப்பொருள். எ-று.

வி-பு. இவ்விடங்களில் சிறக்கும் எனவே ஏனையிடங்களில் சிறவாது நிற்குமென்பது பெற்றாம். தன்னியல்பு இறவாமல் பன்மொழி என்றார்.

[வ-று.] குடமீ வனைந்தான், குழிசி வனைந்தான், வேங்கைப்பூ, சண்பகப்பூ (சண்பகம்), முள்மரம், முள்ளின் மரம், விரிபூ, குவிபூ, செந்தாமரை (செம்மை), வெண்டாமரை (வெண்மை), வேற்கண் (வேல்), கயற்கண்(கயல்):—என்பனவற்றுள் குடம் முதலிய முன்மொழிகள் இனம் விலக்கிநிற்றலின் அம்முன்மொழிக்கண் பொருள் சிறந்தும், வனைந்தான் முதலிய பின்மொழிக்கண் சிறப்பின்றியும் நின்றன.

நிலம் உழுதான்,கண் இமை,நீர்க்குவளை, முள்தாள் தாமரை, சுடுதீ, செஞ்ஞாயிறு, தாய்தலையன்பன் :—என்பனவற்றுள் நிலம்முதலிய முன்மொழிகளினமும் இனத்தை விலக்குதலுமின்றி வாராநின்றமையின், அம்முன்மொழிக்கண்பொருள் சிறப்பின்றியும்,உழுதான் முதலிய பின்மொழிக்கண் பொருள் சிறந்தும் நின்றன.

உழுதான் என்றதுணையானே நிலத்தை என்பது தாமேபோதருமாதலின் பின்மொழிக்கண் சிறந்தனவாயின. ஏனையவுமன்ன.

கபிலபரணர், புலிவிற்கெண்டை என்றற்றொடக்கத்து உம்மைத்தொகைகள் அனைத்துமொழிக்கண்ணும் பொருள்சிறந்தன.

பூந்துழல், தாழ்குழல் என்றற்றொடக்கத்து அன்மொழித் தொகைகள் அனைத்துமொழிக்கண்ணும் பொருள் சிறப்பின்றி அனைத்து மொழிக்கும் புறமொழிக்கண் பொருள் சிறந்து நின்றன.

தொகைநிலைத்தொடர்கள் உருபு தொகுதலின் சொல்லாற் பிளவுபடாதும் பொருளாற் பிளவுபட்டும் இவ்வாறு வருமெனவே, தொகாநிலைத்தொடர்கள் உருபுதொகாமையின்,இவ்விருதிறத்தானும் பிளவுபட்டுப் புறமொழியொழிந்த மூன்றிடத்தும் இவ்வாறு பொருள் சிறந்து நிற்குமென்பது தாமேபோதருமென்க. அவையும் இவ்வாறே காண்க.

அங்ஙனமாயின் தொகைநிலை தொகாநிலை இரண்டற்கும் இறுதிக்கண் இவ்விலக்கணங்கூறாது ஈண்டுக்கூறிய தென்னையெனின் புறமொழிக்கண் பொருள் சிறந்த தொகாநிலைத் தொடர்க்கின்மையினென்க.

இனி முன்மொழி பின்மொழிகளுள் பொருள் சிறந்தனவற்றிற்கு ஒருவர்க்கொருவர் மலைந்து பொருள் கூறுவாருமுளர். அம்மலைவு அவர் காட்டும் உதாரணங்களுட்காண்க.

௩௭௩. வல்லோற்று வரினே யிடத்தொகை யாகு - மெல்லோற்று வரினே பெயர்த்தொகை யாகும்.

இது இடத்தின்கண் தொக்க தொகையோ பெயரின்கண் தொக்க தொகையோ என்று ஐயுறற்பாலனவற்றுள் சிலவற்றைத் துணிதற்கு ஆவதோர் குறி உணர்த்துகின்றது.

ப-ரை. வல் ஒற்று - வல்லொற்றானது, வரின் - இடையேவந்தால், இடத்தொகை ஆகும் - இடத்தின்கண்ணே தொக்கதொகையாகும், மெல் ஒற்று - மெல்லொற்றானது, வரின் - இடையேவந்தால், பெயர் தொகை ஆகும் - பெயரின்கண்ணே தொக்கதொகையாகும். எ-று.

பொ-ரை. வல்லொற்று இடையேவந்துழி இடத்தின்கண் தொக்கதொகையாம்; மெல்லொற்று இடையே வந்துழி பெயரின்கண் தொக்கதொகையாம். எ-று.

வி-பு. மேல்லோற்று அருகி வருதலின் பின்கூறினர்.

[வ-று.] வடுகக்கண்ணன், வடுகங் கண்ணன்; கன்னடக்கொற்றன், கன்னடங் கொற்றன்; துளுவச்சாத்தன், துளுவஞ்சாத்தன் - என வரும். பிறவுமன்ன.

இவை விரிவுழி வல்லொற்றுவரின் வடுகநாட்டிற் பிறந்த கண்ணன் (எ-ம்); மெல்லொற்றுவரின் வடுகனாகிய கண்ணன் (எ-ம்) விரியும்.

வடுகன் என்பது தந்தை பெயராய் மெல்லொற்றுவரின் வடுகற்கு மகனாகிய கண்ணன் என விரியும். ஏனையவுமன்ன.

வல்லொற்றுவரின் மெல்லொற்று வரின் என்றமையான் இயல்பினும் விதியினுநின்ற உயிரீற்றுமொழிமுன் வல்லினமுதன்மொழிவந்து இடத்தொகையும் பெயர்த்தொகையுமாய் ஐயுறநிற்கின் இக்குறியால் துணியப்படுமென்பதூஉம்; வடுகநாதன், வடுகவணிகன், வடுகவரசன் எனவரின் சொல்லுவான் குறிப்பானன்றி இவ்வாறு துணியப்படாவென்பதூஉம் தாமே போதருமென்க.

நஎஉ. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

இது உம்மைத்தொகைக்கு ஆவதோர்விதி உணர்த்துகின்றது.

ப-ரை. உயர்திணை - உயர்திணையொருமையில்வருகிற, உம்மை தொகை - உம்மைத்தொகைகளானவை, பலர் ஈறு ஏ - ரவ்வொற்றும் கள்ளுமாகிய பலர்பால்விகுதியை யுடையனவேயாம்.

பொ - ரை. உயர்திணை யொருமைப் பாலின்கண் வரும் உம்மைத்தொகைகள் ரவ்வீறுங் கள்ளீறுமாகிய பலரீற்றனவேயாம். எ-று.

வி-பு. பலரீறே என்றமையான் ஒருமைப்பாலென்பது பெற்றாம்.

[வ-று.] கபிலபரணர், கல்லாடமாமூலர், சேரசோழபாண்டியர், தேவன்றேவிகள், பார்ப்பார்பார்ப்பனிகள், வில்லிவாளிகள் - என வரும்.

இவ்வொருமைகள் இத்துணையொன்னும் பொருள்பட நிற்றலின்பல வீற்றவாயின. னகர ஈறு இடையேகெடுதல் "சிலவிகாரமா முயர்திணை" என்பதனானும், இறுதிக்கண் கெடுதல் இதனுள் பலவீறே என்பதனானுங் கொள்க. பலவீறே என்னுந் தேற்றத்தான் அஃறிணையொருமை உம்மைத் தொகைகளும் பொதுவொருமை உம்மைத்தொகைகளும் தத்தம் பன்மை யீற்றனவேயாமென்னும் நியதியவல்லவென்றாராயிற்று. அவைவருமாறு.—

உண்மையின்மைகள், உண்மையின்மை; நன்மைதீமைகள், நன்மைதீமை; இராப்பகல்கள், இராப்பகல்; நிலநீர்தீகாற்றகாயங்கள், நிலநீர்தீகாற்றாகாயம் (எ-ம்); தந்தைதாயர், தந்தைதாய்கள்; தந்தைதாய்; சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்திகள், சாத்தன் சாத்தி. (எ-ம்) :— பன்மையீற்றானும் இயல்பாய ஒருமையீற்றானும் வந்தன.

இயல்பாகிய ஒருமையிற்றான் வந்தனவேல் உம்மைத்தொகையுன்றி கபிலர்பாணன்இருவரும் வந்தார் என்றாற்போல, செவ்வெண்ணும், பிற வெனின், பலமொழிகளையுந் திரட்டி ஒருபிண்டமாகக்கூறியவழி உம்மைத் தொகையாகவும், பிளவுபடக்கூறிய வழிச் செவ்வெண்ணாகவும் கொள்ளப்படுமென்க.

நளஎ. தொக்குழி மயங்குந விரண்டு முதலே - யேழெல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

இது தொகைநிலைத் தொடர்ச்சொற்கள் உருபுதொக்கு நின்றமையின் சில் பொருளால் மயங்குமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. தொக்க உழி - வேற்றுமையுருபு முதலாகிய வுருபுகள் தொக்கு நின்றவழி, மயங்குந - பொருள்களினாலே மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள், இரண்டு முதல் - இரண்டு முதலும், ஏழ் எல்லை - ஏழீறுமாகிய, பொருளின் - பொருள்களால், மயங்கும் - மயங்கும், என்ப - என்றுசொல்லுவர்புலவர்.

பொ-ரை. வேற்றுமையுருபு முதலிய உருபுகள் தொக்குநின்ற வழி பொருள்களான் மயங்கும் இயல்பினவாகிய தொடர்ச்சொற்கள் இரண்டு முதல் ஏழீறாகிய பொருள்களான் மயங்குமென்று சொல்லுவர் புலவர்.

வி-பு. தொக்குழி எனவே தொகாவிடத்தும் மயங்காவென்பதூஉம், மயங்குவன மயங்குமெனவே மயங்கும் இயல்பில்லன மயங்காவென்பதூஉம், பொருளெனப் பொதுப்படக்கூறினமையின் தொகைநிலைப்பொருளானும் தொகைநிலைத் தொடர்ச்சொல் மயங்குமென்பதூஉம் பெற்றாம்.

[வ-று.] தெய்வவணக்கம், தாழ்குழல் என்பன,— தெய்வத்தைவணங்கும்வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம்; — தாழ்ந்தகுழல், தாழ்ந்தகுழ

லினை யுடையாள் :-என இருபொருளால் மயங்கிய ஒருதொடர்த் தொகைச் சொல்.

தற்சேர்ந்தார், கடிப்பகை :—என்பன தன்னைச்சேர்ந்தார், தன்னேடு சேர்ந்தார், தன்கட்சேர்ந்தார்;-கடிக்குப்பகை, கடியினதுபகை, கடியாகிய பகை:—என மூன்றுபொருளால் மயங்கிய ஒருதொடர்த் தொகைச்சொல்.

சொல் இலக்கணம் என்பது சொல்லினது இலக்கணம், சொற்கு இலக்கணம், சொல்லின்கண் இலக்கணம், சொல் இலக்கணம் சொன்ன நூல் :—என நான்குபொருளான் மயங்கிய ஒருதொடர்த் தொகைச்சொல்.

பொன்மணி என்பது பொன்னுகியமணி, பொன்னுகியமணி, பொன்னின்கண் மணி, பொன்னேடுசேர்ந்தமணி, பொன்னும்மணியும்:—எனஐந்து பொருளான்மயங்கிய ஒருதொடர்த்தொகைச்சொல்.

மாவேலிஎன்பது மரத்தைக்காக்கும்வேலி, மரத்துக்குவேலி, மரத்தினதுவேலி, மரத்தின்புறத்துவேலி, மரத்தானுகியவேலி,மரயாகியவேலி :-என ஆறுபொருளான்மயங்கிய ஒருதொடர்த் தொகைச்சொல்.

சொற்பொருள் (சொல்) என்பது சொல்லானறியப்படும் பொருள், சொல் லினதுபொருள்,சொற் குப்பொருள்,சொல்லின்கட்பொருள், சொல் லும் பொருளும், சொல்லாகியபொருள், சொல்லானது பொருள் :—என ஏழுபொருளான்மயங்கிய ஒருதொடர்த்தொகைச்சொல்.

சொல்லானது பொருள்என்றது தொகாநிலைப்பொருளாகிய எழுவாய். சொல்லானறியப்படும்பொருள்,சொல்லினறியப்படும் பொருள்:—எனமூன்ருவதனேடு ஐந்தாவதும் விரிப்பாருமுளர். அவை யிரண்டற்கும் ஏதுப்பொருளொன்றேயாதலின் அது வேற்றுப்பொருளான் மயங்கிய தன்றென்க.

‡ "வாளைமீனுள்ள தலைப்படல்" என்பது வாளை மீனையுள்ளதலைப் படல், வாளைமீனுள்ள லைத்தலைப்படல்—என இரண்டாவதும் எழுவாயு மாகிய இருபொருளான்மயங்கிய பலதொடர்த் தொகைச்சொல்.

புலிகொல்யானை, குறங்கெறிவிளங்காய் என்பனபுலியைக்கொன்ற யானை, புலியானதுகொன்றயானை,புலியாற் கொல்லப்பட்ட யானை ;—குரங்கையெறிந்த விளங்காய், குரங்கானதெறிந்தவிளங்காய், குரங்கா லெறியப்பட்டவிளங்காய்:—என இரண்டாவதும் எழுவாயும் மூன்ருவது மாகிய மூன்றுபொருளான் மயங்கிய பலதொடர்த்தொகைச்சொல். பிறவு மன்ன.

---

‡ திரிகடுகம், செ. எ.

இவ்வாறு செம்பொருள் கொள்ளாது வலிந்து பொருள் கொள்ளப் புகின் எழெல்லை யென்னும் வரையறையில் நில்லாது பலவாமாதலின் அது தொன்னெறியன் றென்பார் என்ப என்றார்.

இனி அலர்முல்லை என்னும் வினைத்தொகைமுதலியன மயங்காதன வாம். அலராயுடைய முல்லை-எனமயங்கு மாலோவெனின், அலர் என்பது வினைத்தொகைக்கண் வினையாயும், வேற்றுமைத்தொகைக்கண் பெயராயும் சொல்வேறுபட்டமையின் அது பொருள்ளான்மயங்கியதன்றென்க.

௩௭௪. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொரு - ளாறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.

இது நால்வகைச்சொற்கும் ஆவதோர் விதி உணர்த்துகின்றது.

ப-ரை. முற்று - வினைமுற்றும், ஈரெச்சம் - பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய் - எழுவாயும், விளி - விளியும் ஆகிய, பொருள் - ஐவகைப் பொருள்களிலேபெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும், ஆறு உருபு - வேற்றுமைப் பொருள்களில் அவற்றினுருபுகளாகியஇரண்டாவதுமுதலாகியஆறுருபுகளும்விரிந்துநிற்கப் பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும, இடை - இடைச்சொற் புணர்ச்சியும், உரி - உரிச்சொற்புணர்ச்சியும், அடுக்கு - அடுக்குப் புணர்ச்சியுமாகிய,இவை - இவ்வொன்பதும்,தொகா நிலை - தொகா நிலைத்தொடர் மொழிகளாம். எ - று.

பொ - ரை. முற்றும் பெயரொச்சமும் வினை யெச்சமும் எழுவாயும் விளியுமாகிய ஐவகைப்பொருளின்கண் பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், வேற்றுமைப்பொருளின்கண் அவற்றின் உருபாகிய இரண்டாவது முதலிய ஆறும் இடையே விரிந்துநிற்ப பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், ஏனை இடைச்சொற் புணர்ச்சியும், உரிச்சொற்புணர்ச்சியும், ஒருசொல்லடுக்கிவரும்புணர்ச்சியுமாகிய ஒன்பதும் தொகாநிலைத் தொடராம்.

வி-பு. தொகாநிலை என்றமையான் காலங் கரவாத பெயரொச்சம் கண்டுகொள்க.

[வ-று.] உண்டான் சாத்தன், குழையன் கொற்றன், உண்ட சாத்தன், நல்லசாத்தன், உண்டுவந்தான், உழுதன்றிஉண்ணான், சாத்தன் வந்தான், கோற்றகொள், குடத்தைவனைந்தான், வாளால் எறிந்தான், இரப்போர்க்கு ஈந்தான், மலையின் இழிந்தான், சாத்தனது கை, மணியின்கண் ஒளி, அதுகோல் தோழிகாமநோயே, நனிபேதையே நயனில் கூற்றம், பாம்புபாம்பு :—என முறையே காண்க.

வேற்றுமைத் தொகையும் வினைத்தொகையும் விரிந்தவழி வேற்றுமைத்தொகாநிலையும், பெயரெச்சத் தொகாநிலையுமாம் என்றார். ஏனைநான்கு தொகையும் விரிந்தவழி தொகாநிலை ஒன்பதனுள் எவையாம் பிறவெனின், பண்புத்தொகையும் உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தவழி இடைச்சொற் புணர்ச்சியும், அன்மொழித்தொகை விரிந்தவழி வேற்றுமைத் தொகாநிலை முதலேற்பனவுமாம் என்க.

௩௭௫. திணையே பாலிடம் பொழுது வினாவிறை - மாபா மேழ மயங்கினும் வழுவே.

இது வழுவறிந்தல்லது அவற்றைக்களைதல் கூடாமையின் அவை யிவையென உணர்த்துகின்றது.

ப-ரை. திணை - இருதிணையும், பால்-ஐம்பாலும், இடம் - மூவிடமும், பொழுது - முக்காலமும், வினா - வினாவும், இறை - விடையும், மரபு - பலவகைமரபுகளும், ஆம் - ஆகிய, ஏழும் - ஏழும், மயங்கின் - தன் தன்வழிமயங்கின், வழு ஆம் - வழுவாம். எ-று.

பொ-ரை. திணைமுதலாக மரபு ஈறாகவரும் ஏழும் தத்தம் நெறிமயங்கின்வழுவாம். எ-று.

வி-பு., திணை முதலிய அனைத்தும் மரபாமாயினும் இங்ஙனம் விதவா தொழிந்தனவற்றை மரபெனக்கொள்க வென்பார் அதனை இறுதிக்கண் கூறினார்.

[வ-று.] அவன்வந்தது என்பது திணைவழு. அவன்வந்தாள் என்பது பால்வழு. யான்வந்தான் என்பது இடவழு. நாளைவந்தான் என்பது காலவழு.

கறக்கின்ற எருமை பாலோசினையோ; ஒருவிரல்காட்டி சிறிதோ பெரிதோ என்பன வினாவழு.

கடம்பூர்க்குவழியாது எனின் இடம் பூணியேன் ஆவின்கன்றன்று; கருவூர்க்குவழியாது எனின் பருநால்பன்னிருதொடி என்பன இடைவழு.

யானைமேய்ப்பானை இடையன், ஆடுமேய்ப்பானைப்பாகன், யானைச்சாணி, எருமையிலத்தி என்பன மரபுவழு. இவ்வாறே இவ்வெழுவகை வழுவிகற்பங்களெல்லாம் உணர்ந்து கொள்க.

௩௭௬. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினு - மெய்தெரி பொருண் மே லன்மையும் விளம்புப.

இது திணையொடு வினாவிடையும் பாலொடு வினாவிடையும் வழுவாது காத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. திணை ஐயம் - திணை ஐயத்தையும், பால் (ஐயம்) - பாலையத்தையும், அ அ பொதுவின் உம் - அதனதன் பொதுச்சொல்

லாலும், மெய் தெரி பொருள் மேல்- துணிந்தபொருண்மேல், அன்மை உம் - அல்லாத தன்மையைவைத்தும், விளம்புப - சொல்லுவர்புலவர். எ-று.

போ-ளா. திணை ஐயத்தினை அவற்றின்பொதுச்சொல்லானும், பால் ஐயத்தினை அவற்றின் பொதுச்சொல்லானும் துணிந்தபொருண்மேல் அல்லாத தன்மையினை வைத்துங்கூறுவர் புலவர். எ-று.

[வ - று.] குற்றியோமகனே என்றித் திணை ஐயந்தோன்றிய வழி குற்றியோமகனோ அங்ஙனந் தோன்றநின்றது, தோன்றநின்றான் எனச் சிறப்புச்சொல்லால் கூறின்திணைவழுவும் வினாவழுவுமாம் ; அவையொழித்து குற்றியோமகனோ அங்ஙனந் தோன்றநின்றவுரு எனப்பொதுச் சொல்லாற் கூறுக. உரு என்பது பொதுச்சொல்லாய் வழாநிலையாயதென்னையெனின் குற்றிக்கும் மகனுக்கும் உரு பொதுப்படநின்றமையின் என்க.

ஆண்மகனே, பெண்மகளோ - என உயர்திணைப்பால் ஐயந்தோன்றியவழி ஆண்மகனே, பெண்மகளோ அங்ஙனந் தோன்ற நின்றான், தோன்றநின்றாள் எனச்சிறப்புச்சொல்லாற்கூறின் பால்வழுவும் வினாவழுவுமாம் ; அவையொழித்து ஆண்மகனே, பெண்மகளோ அங்ஙனந் தோன்றநின்றார் எனப்பொதுச்சொல்லாற் கூறுக. தோன்ற நின்றார் என்பது பொதுச்சொல்லாய் வழாநிலையாயதென்னையெனின் ஆண் பெண் இரண்டல்லது பலர்பாலென வேறொன்றின்றி அவ்விருபாற்கும் பொதுமையினிற்றலினென்க.

ஒன்றே பலவோ என அஃறிணைப்பால் ஐயந்தோன்றியவழி ஒன்றே பலவோ இச்செய்புக்கது, புக்கன எனச்சிறப்புச்சொல்லாற்கூறின் பால் வழுவும் வினாவழுவுமாம் ; அவையொழித்து ஒன்றே பலவோ இச்செய்புக்கபெற்றம் எனப் பொதுச்சொல்லாற் கூறுக.

வி-பு. இனி மெய்தெரித்தபொருள்குற்றியெனின் மகனன்று (எ-ம்) ; மகன் எனின் குற்றியல்லன்(எ-ம்); ஆண்மகன்எனின் பெண்மகளல்லன் (எ-ம்) ; பெண்மகள் எனின் ஆண்மகனல்லள் (எ-ம்) கூறுக.

மகனன்றுகுற்றியெனக்கூறின் குற்றியோமகனோஎன வினாவினார்க்கு மகனன்றுஎனின் அமையும் ; குற்றியென மேல்வைத்துக் கூறல்வேண்டாகூறலாம். மகனன்று என்பதனை மகனினன்று என ஐந்தாம் வேற்றுமைப்புணர்ச்சி யென்பாருமுளர். அதுபோல் வரும் நீயல்லன்என்பதும் அங்ஙனம் விரித்தல் கூடாமையின் அல்வழிப்புணர்ச்சியுள் எடுத்துவிதந்த பதினொன்கின் புறத்ததாய் அடங்கும் என்க. ஏனைமூன்றுகாட்டும் அன்ன.

மெய்தெரியாப்பொருண்மேல் அல்லாத் தன்மையினைவைத்து மகனல்லன்குற்றியெனின், குற்றி யென்னும் பயனிலைக்கு எழுவாய்தந்து மக

னல்லன் அவ்வுருதுற்றி யெனக் கூறல்வேண்டும்; அங்ஙனங்கூறவேசோற் பல்குதல் என்னும் விடைவழுவாம். அவ்வழுவாராது மெய்தெரி பொருண் மேல் அன்மையும் விளம்புப என்றார்.

௩௭௭. உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறு-மதனொடு சார்த்தி னத்திணை முடிபின.

இது திணைவழு வமைப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. உயர்திணை - உயர்திணையை, தொடர்ந்த - பற்றிய, பொருள் முதல் ஆறு உம் - பொருளாதியாறும், அதனொடு - அவ்வுயர்திணையோடு, சார்த்தின் - சேர்த்துமுடிக்கின், அ திணை முடிபின - அவ்வுயர்திணை முடிபினவாம். எ-று.

பொ-ரை. உயர்திணையைத் தொடர்ந்த அஃறிணைப்பொருளாகிய ஆறும் உயர்திணையோடுசார்த்திமுடிப்பின் உயர்திணைமுடிபினவாம். எ-று.

வி-பு. தொடர்தலாவது அஃறிணைப் பொருளாதியாறும் உயர்திணைக்குக் கிழமைப்பொருள்களாய் நிற்றல். சார்த்தலாவது உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயினையும் உடன்முடித்தல். உயர்திணை தொடர்ந்த பொருள்முதலாறு என்றமையின் பொருள் என்பது உயர்திணைப்பொருளன்று என்பதாம்.

[வ-று.] நம்பிபொன் பெரியன்,-நாடு பெரியன்,-வாணாள்பெரியன் -மூக்குக்கூரியன்,-குடிமை நல்லன்,-நடைகடியன் என வரும்.

'சொற்றொறு மிற்றிதன்பெற்றி' என்பதனானே கிணறுநீர் ஊறிற்று, மாடுகோடு கூரிது என அஃறிணையோடு சார்த்தின் அஃறிணை முடிபினவாதலுங்கொள்க.

சார்த்தின் எனவே சார்த்தாவிடின் வழாநிலையாய்ப் பொன்பெரிது, மூக்குக்கூரிது எனத்தம்முடிபு கொள்ளுமென்க.

பொன் என்னும் அஃறிணை எழுவாய் நம்பி என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகியபெரியன்என்னும் உயர்திணை வினைக்குறிப்பைக் கொண்டு முடிதலின், வழுவாய்த் தொடர்புண்மை கருதி சார்த்தி முடிதலின் அமைதியாயிற்றென்க.

பொன்னினது பெருமையையுடையன் எனஆறனுருபு விரித்து வழாநிலை யென்றால் என்னையெனின், வேற்றுமைப்புணர்ச்சிக்குரிய எழுத்துச் சந்தியின்மையின் அது பொருந்தாதென்க. பிறவுமன்ன.

௩௭௮. திணைப்பால் பொருள்பல விரவின சிறப்பினு - மிகவினு மிழிபினு மொருமுடி பினவே.

இது திணைபால் மரபு வழுவமைப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. திணை - திணைகளும், பால் - பால்களும், விரவின - கலந்துநின்றனவாகிய, பொருள் பல - வேறுவினைப் பலபொருள்களும், சிறப்பின் உம் - சிறப்பினாலும், மிகவின் உம் - மிகுதியினாலும், இழிபின் உம் - இழிவினாலும், ஒரு முடிபின - ஒரு முடிபினவாகும். எ-று.

போ-ரை. திணையும் பாலும் வேறுவினைப் பல பொருள்களும் விரவி நின்றவழி அவை பலவும் ஒரு முடிபினவாம். சிறப்பினானும் மிகுதியினானும் இழிபினானும். எ-று.

[வ-று.]

[a]‡ "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்."—எனவும்,

[b]‡ "பழியஞ்சான் வாழும் பசுவு மழிவின்றிக்
கொண்ட வருந்தவம் விட்டானுங்—கொண்டிருந்
தில்லஞ்சி வாழு மெருது மிவர்மூவர்
நெல்லுண்ட நெஞ்சிற்கோர் நோய்."—எனவும்,

இவை திணைவிரவிச் சிறப்பினான் உயர்திணை முடிபேற்றன. இழிந்தோரை எண்ணியபின் அதனுள் சிறப்பு என்னையெனின், பசு, விட்டான், எருது என்னும் மூன்றனுள் விட்டான் என்பது உயர்திணை யாண் சிறப்பு. பசு, எருது என்பன உயர்திணைப்பொருளவேனும் அஃறிணையாக உருவகப்படுத்தினமையின் இங்ஙனம் அமைக்கப்பட்டன.

[c]‡ "தன்பான் மனையா ளயலான்றலைக் கண்டு பின்னு
மின்பா லடிசிற் கிவர்கின்றகைப் பேடி போலா
நன்பாற் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர் பார்ப்பா
ரொன்பாரை யோம்பே னெனின்யானவ னாகு வென்றான்." எனவும்,

[d]‡ "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தார் குழவி யெனுமிவர்கட்-காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்-போற்றி யெனப் படுவார்."-எனவும்:— இவை திணைவிரவி மிகுதியினான் உயர்திணை முடி பேற்றன.

---

[a]‡ நாலடியார், சே. கருக.

[b]‡ திரிகடுகம், சே. எகூ.

[c]‡ சிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், சே. ருரு.

[d]‡ ஆசாரக்கோவை, சே. கூரு.

"நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய - வசைபட வாழ்ந்தோர் பல்கொல் -, புரையினற் பனுவலுநல் வேதத் தருஞ்சீர்த்திப் - பெருங் கண்ணுறை நெய்ம்மலி யாகுதி பொங்கப் - பன்மாண் வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி - யூபநட்ட வியன்களம்பலகொல் - யாபல கொல்லோ பெரும." :—என இவை சிறப்பினான் அஃறிணை முடிபேற்றன.

‡"எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தெய்வ - முச்சந்தலை யோ டிவையென்ப யாவருந்-திட்பத்தாற் றீண்டாப்பொருள்."—இவை மிகுதியினான் அஃறிணை முடிபேற்றன.

"வடக ரிவாளர் வான்கரு நாடர் - சுடுகாடு பே யெருமை என் றிவை யாறுங்-குறுகா ரறிவுடையார்." (எ-ம்) ;—" மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா."(எ-ம்) :—இவை இழிபினான் அஃறிணை முடிபேற்றன.

பன்மையொருமுடிபின என்றது ஒருமுடிபின என வாளாகூறினமை யின்,

"யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித், தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்."—எனத்திணைவிரவிச் சிறப்பினான் ஆண்பான் முடிபேற்றலும்,

‡‡"தொல்லை நால்வகைத் தோழருந் தூமணி நெடுந்தேர்
மல்லற் றம்பியு மாமனு மதுவிரி கமழ்தார்ச்
செல்வன் றந்தையுஞ் செழுநக ரொடுவள நாடும்
வல்லைத் தோக்கது வளங்கெழு கோயிலு ளொருங்கே."—என திணை விரவிச் சிறப்பினான் ஒருமைமுடிபேற்றலுங் கொள்க.

‡‡‡"நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்." — என ஆண்பாலும் பெண்பாலும் விரவிச்சிறப்பினான் ஒரு முடிபேற்றன.

'சொற்றொறு மிற்றிதன் பெற்றி' என்பதனானே விரவா தெண்ணித் தோழனுந்தானும் வந்தான், தோழியுந் தானும்வந்தாள் என முடிதலுங் கொள்க.

கறியுஞ்சோறு முண்டான், மாலையுமுடியுங் கவித்தான், துஞ்சமழுங் குடையுங் கவித்தான், சாந்தமு முலையுந் தழுவினான் :—என வேறுவினைப் பல்பொருள் விரவிச் சிறப்பினான் ஒருமுடிபேற்றன. பிறவுமன்ன.

---

‡ ஆசாரக்கோவை, செ. கூ.

‡‡ சிந்தாமணி, பூமகளிலம்பகம், செ. ௩ச.

‡‡‡ திருவாசகம், திருக்கோத்தும்பி, செ. கரு.

இங்ஙனம் இறுதிக்கண்கூறிய மரபு வழுவமைதி 'வேறுவினைப் பல்பொருடழுவிய பொதுச்சொலும்' என்னுஞ் சூத்திரத்தோடு மாறுகொளக்கூறலாம் பிறவெனின், சிறப்புமுதலிய கருதாது ஒத்தநிலைமையின் எண்ணியவழிமுடியும் மரபு அங்ஙனங் கூறுதலின் அது மாறுகொளுக்கூறல் அன்றென்க.

"பாணன் பறையன் கடம்பன் றுடியனேன் - றந்நான்கல்லது குடியுமில்லை"—என உயர்திணை யெண்ணி அஃறிணைமுடிபினவாய வழூஉ ஆண்டமைக்கப்படுமெனின், குடியென்பதனை பாணன் முதல் நான்கோடுங் கூட்டி உரைக்கப்படுதலின் வழாநிலையாமென்க.

இனிப் பால்விரவி ஒருமுடிபு ஏற்பனவற்றிற்கு ஒருவன் கோல்லோ பலர்கோல்லோ இச்சேய்புக்கார் என உதாரணங்காட்டின், "ஐயந்திணைபா லவ்வப்பொதுவினும்" என்பதனான் வந்தன வன்றி ஈண்டைக்காகாமையானும் இங்ஙனங்காட்டிய இலக்கியங்கட்கு இலக்கண மின்மையானும் அது காட்டான் றென்க.

௩௭௯. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினு - மிழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே.

இது திணைபால் வழூஉமைப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. பால் - பாலும், திணை - திணையும், உவப்பின் உம் - மகிழ்ச்சியினாலும், உயர்வின் உம் - மேன்மையினாலும், சிறப்பின் உம் - சிறப்பினாலும், செறலின் உம் - கோபத்தினாலும், இழிப்பின் உம் - பழிப்பினாலும், இழுக்கின் உம் - வழூஉவிவரினும், இயல்பு - இயல்பாம். எ-று.

பொ-ரை. உவப்புமுதலிய ஐந்தினும் பாலுந்திணையும் வழூஉவி வரினும் இயல்பாம். எ-று.

வி-பு. பாலைமுன் கூறினார் அவ்வழுவமைதி பயின்று வருதலின். இழுக்கினும் என்னும் உம்மை உவப்பு முதலியவற்றின் இழுக்கியே வருமென்னும் நியதியவல்ல என்னும் பொருள்தந்து நின்றது.

[வ-று.] தன்புதல்வனை என்னம்மைவந்தாள் என்பது உவப்பின் ஆண்பால் பெண்பாலாயிற்று.

ஒருவனை அவர்வந்தார் என்பது உயர்வின் ஒருமைப்பால் பலர்பாலாயிற்று.

‡ ".தாதாய் மூவே ழுலகுக்குந் தாயே." என்பதுசிறப்பினான் ஆண்பால்பெண்பாலாயிற்று.

‡ திருவாசகம், புணர்ச்சிப்பத்து, சே. கூ.

†"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந் - தேரான்பிற னில்புகல்." என்பது சேறலின் பலர்பால் ஒருமைப்பாலாயிற்று.

பெண்வழிச் செல்வானைநோக்கி இவன்பெண் என்பது இழிவின் ஆண்பால் பெண்பாலாயிற்று.

ஓராவினை என்னம்மைவந்தாள் என்பது உவப்பின் அஃறிணை உயர் திணையாயிற்று.

"செந்தார்ப்பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை - தந்தாரோ நந் தா ரொன்னின்னுயிர்." என்பது உயர்வின் அஃறிணை உயர்திணையாயிற்று.

†† "தம்பொரு ளென்பதம் மக்கள்." என்பது சிறப்பின் உயர்திணை அஃறிணையாயிற்று.

††† "ஏவவுஞ் செய்கலான் றான்றேரானவ்வுயிர் - போஒ மளவு மோர்நோய்." என்பது சேறலின் உயர்திணை அஃறிணையாயிற்று.

நீமரனுடைமை என்பது இழிப்பின் உயர்திணை அஃறிணையாயிற்று. பிறவுமன்ன.

'சொற்றொறு மிற்றிதன்பெற்றி' என்பதனானே புதல்வனை அப்பன் வந்தான் என்றும், புதல்வியை அம்மைவந்தாள் என்றும் வரும் மரபுவழு வமைதிகளுங்கொள்க. இவ்வழுவமைதி உருவக உவமைகளின் வழுவி அமைவன வொழியக்கொள்க.

௩அ௦. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையு - மோரிடம் பிறவிடந் தழுவலு முளவே.

இது முற்கூறிய உவப்புமுதலிய காரணத்தானன்றி அமைந்தபால் வழுவமைப்பும் அவ்வாறமைந்த இடவழுவமைப்பும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒருமையின் - ஒருமைப்பாலில், பன்மை உம் - பன்மைப்பாற்சொல்லையும், பன்மையின் - பன்மைப்பாலில், ஒருமை உம் - ஒருமைப்பாற்சொல்லையும், ஓர் இடம் - ஓரிடத்தில், பிற விடம் - பிறவிடச்சொல்லையும், தழுவல் உம் - தழுவிக்கூறுதல் களும், உள - உளவாம். எ-று.

போ-ரை. ஒருமைப்பாலின்கண் பன்மைச்சொல்லைத் தழுவிக்கூறு தலும், பன்மைப் பாலின்கண் ஒருமைச்சொல்லைத் தழுவிக்கூறுதலும், ஓரி டத்தின்கண் பிறவிடச்சொல்லைத் தழுவிக் கூறுதலும் உளவாம். எ-று.

---

† திருக்குறள், செ. கசச.
†† ஷை செ. சுரு.
††† ஷை செ. அசஅ.

[வ-று.] வெயிலெல்லாம் மறைத்தது மேகம், இக்குளத்து நீரெல்லாங்கொண் டெய்த்தானிவன்(எ-ம்); இரண்டுகண்ணுஞ் சிவந்தது. † "இருநோக்கிவளுண்கணுள்ளது" (எ-ம்):—அஃறிணைக்கண் ஒருமையிற்பன்மையும் பன்மையினொருமையும் வந்தன.

"அஃதை தந்தை அண்ணல் யானை அடுபோர்ச்சோழியர்." (எ-ம்); "புலையனெறிந்த பூசற்றண்ணுமையேவலிளையர் தாய் வயிறுகரிப்ப" (எ-ம்):—உயர்திணை யொருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும் வந்தன.

"சாத்தன்றாய் இவை செய்வலோ."—"கல்வியனென்னும்வல்லான் சிறுஅரொல்வேனல்லதுய்வாயர்குதல்": — என்பது தன்மையின்கண் படர்க்கைவந்தது.

‡ "திண்பொரு ளெய்தலாகுந் தெவ்வரைச் செருக்கலாகும்
நண்பொடு பெண்டீர் மக்கள் யாவையு நண்ணலாகும்
ஒண்பொரு ளாவதையா வுடன்பிறப் பாக்கலாகா
எம்பியை யீங்குப்பெற்றே னென்னெனக் கரியதென்றாள்."—என்பது முன்னிலைக்கண் படர்க்கை வந்தது.

நீயோ அவனோ யாரிது செய்தார், யானோ அவனோ யாரிதுசெய்தார், நீயோ யானோ யாரிதுசெய்தார், நீயோ அவனோ யானோ யாரிது செய்தார்:—என விரவி ஒரிடத்தின்கண் பிறவிடம் வருதலுங்கொள்க. பிறவுமன்ன.

வி-பு. ஒருபாற்பொருளை மற்றொருபாற் சொல்லானும் ஓரிடப்பொருளைமற்றோரிடச் சொல்லானுங் கூறுதலின் வழுவாய் அவைசான்றோர்க்கு ஒப்பமுடிந்தமையின் அமைதியாயின.

"ஒருவீ ரொருவீ ரொப்பினிர் கழிமின்"—யானெம்மூர் புகுவன்:— என்பன ஒருமையில் பன்மைவந்த வழுவமைதியெனின், ஒருவீ ரொருவீ ரொப்பினைகழிவையெனின் வழுநிலை யாகவேண்டும்; அங்ஙனமாகாமையின் "ஒருவனொன்ப துயரிருபாற்றாய்" என்னுஞ் சூத்திரத்துள் 'ஒருமொழியொழிதன் னினங்கொளற்குரித்தே' என்பதனான் அமைந்தவழாநிலையாம்.

யானெம்மூர் புகுவன் என்புழிதன்கிளையினைத் தன்னொடுபடுத்து எம்மூரொன்றுணர்தலின் வழாநிலையாம். இத்தொடக்கத்து வழாநிலைகளை இவ்வழுவமைதியாக உதாரணங்கூறுவார் கூற்றை யெல்லாம் உய்த்துணர்ந்துகளைக.

---

† திருக்குறள், செ. ௧௧௦௧.
‡ சிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், செ. ௨௦௪.

௩அக. தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை-யெழுவா யிர ண்டு மெஞ்சிய வேற்கும்.

இது இடம்வழுவற்க எனக்காத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. தரல் வரல் கொடை செலல் - தரல் என்பதுமுதலிய, இந்நான்கு சொற்களையும், படர்க்கை - படர்க்கையானது, சாரும்- அடையும், எழுவாய் இரண்டு உம்-இவற்றுள் முதலிற்சொல்லப்பட்ட தரல்வரல் என்கிற இரண்டுசொற்களையும், எஞ்சிய-ஒழிந்ததன்மை முன்னிலைகள், ஏற்கும் - ஏற்றுவரும், எ-று.

பொ-ரை. இந்நால்வகைச் சொற்களையும் படர்க்கைசாரும்; இவற் றுள் முதற்கண் நின்ற தரல் வரல் என்னும் இருவகைச் சொற்களையும் தன்மை முன்னிலைகளேற்கும். எ-று.

வி-பு. தரல், வரல், கொடை, செலல் என்பன அப்பகுதிகளை உணர்த்தி நின்றன.

[வ-று.] அவனுக்குத்தந்தான், அவன்பால்வந்தான், அவனுக்குக் கொடுத்தான், அவன்பாற்சென்றான் :— எனப் படர்க்கையினும்; எனக் குத் தந்தான்; என்பால்வந்தான் :— எனத்தன்மையினும்; நினக்குத் தந் தான், நின்பால்வந்தான்:—எனமுன்னிலையினும் வந்தன.

இப்பகுதியிற்பிறந்த ஏனை வினை விகற்பங்களோடும் தொழிற் பெய ரோடும் இவ்வாறே ஒட்டுக.

இவைபடர்க்கை இவைதன்மை முன்னிலை யென்னாது சாரும்,ஏற்கும் என்றமையான், ¶ இடவிகுதிகள்போல் இவை இடப்பகுதிகளாகாது அவ் விடங்கட்கு இயைந்தமரபினவாமென்பதூஉம்; தரல்,வரல்என்னும் இரண் டனையும் தன்மைமுன்னிலைக்குங் கூட்டினமையின் படர்க்கைக்கே சிறந் தன கொடை, செலல் என்னும் இரண்டுமென்பதூஉம்; ஏனைத் தரலும் வரலும் அத்துணைச் சிறப்பினவல்லவென்பதூஉம்; இந்நெறிமயங்கி எனக் குக்கொடுத்தான், என்பாற்சென்றான், நினக்குக்கொடுத்தான், நின்பாற் சென்றான் :— எனவரின் முன்னர்க்கூறிய இடவழுவமைதியின்பாற்படு மென்பதூஉம் பெற்றாம்.

படர்க்கைக்குப் பின்னைய இரண்டுஞ் சிறந்து முன்னைய இரண்டும் அத்துணைச் சிறப்பின்றியும் வருதல்காட்டிய உதாரணங்களுட் காண்க.

¶ "ஈங்கு-இங்கு முதலியன தன்மை முன்னிலை கட்கும், ஆங்கு-அங்கு முதலியனவும், போதல்-புகுதல் முதலியனவும் படர்க்கைக்குரிய எனவும் கொள்க." என்பர்.—இராமாநுசகவிராயர்.

௩அ௨. இறப்பேதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே.

இது முன்னர் வழு உணர்த்துஞ் சூத்திரத்துள் முதற்கண் நின்ற திணைபாலிடங்களின் பெயரும் முறையும் தொகையும் பெயரியலுட்போந்தமையின், அவற்றை யொழித்து இறுதிக்கண்நின்ற காலமுதல் நான்கினையும் உணர்த்தினல்லது அவற்றின்வழுவும் வழாநிலையும் வழுவமைதியும் தோன்றாமையின், அவற்றுள் காலத்தின்பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகின்றது.

பிறிதோர் இலக்கணங் கூறிய முகத்தான் முன்னர் விளங்கிக்கிடந்த காலவிகற்பங்களை ஈண்டுத் தொகுத்துணர்த்தினமையின் இது முடிந்தது முடித்தல் என்னும் உத்திக்கினம்.

ப-ரை. இறப்பு - இறந்தகாலமும், எதிர்வு - எதிர்காலமும், நிகழ்வு - நிகழ்காலமும், என - என்று, காலம் - காலமானது, மூன்று - மூன்றாம். எ-று.

போ-ரை. முன்னர்க்கூறிய காலம் இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலமும் என மூன்றாம்.

வி-பு. யாதொரு பொருளும் தோன்றுமளவிற் றோன்றி, வளருமளவில் வளர்ந்து,முதிருமளவில் முதிர்ந்து, அழியுமளவில் அழியுமன்றி, உயிர்கள் வேண்டியவாறு ஆகாமையின், அவற்றை அவ்வளவின் அவ்வாறியற்றுவது காலமெனவும், அதனுலியலும் பொருள்களின் தொழில் இறந்ததும் எதிர்வதும் நிகழ்வதுமாதலின்,அவ்வாறு இயற்றுங்காலமும்மூன்றுகூறதாமெனவும்உய்த்துணர்தலின் இங்ஙனமுணராது காலம் இன்றெனவும், நிகழ்காலம் ஒன்றுமே யெனவும், இறந்தகாலம் எதிர்காலம் இரண்டுமே யெனவுங் கூறுவார் கூற்றை விலக்கிக் காலம் மூன்றேயென்றார்.

இதன்திறம் இன்னும் விரித்துரைப்பிற் பெருகும். நிகழ்காலம் போல வெள்ளிடைப் பொருளன்றி இறந்தகாலம் எதிர்காலம் இரண்டும் மறைபொருளாய் நிற்றலின் இறப்பு நிகழ்வு என்னுது இறப்பேதிர்வு என்றார்.

௩அ௩. முக்காலத்தினு மொத்தியல் பொருளைச் - செப்புவர் நிகழுங்காலத் தானே.

இது காலவழுவமைப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. முக்காலத்தின் உம் - மூன்றுகாலங்களிலும், ஒத்து - தமதுதொழில்இடையறுதொத்து, இயல் - நிகழுகின்ற, பொருளை - பொருள்களை, நிகழும் காலத்தான் - நிகழ்காலத்தினல், செப்புவர் - சொல்லுவர் புலவர். எ-று.

போ-ரை. தன்தொழில் இடையறாது முக்காலத்தினும் ஒருதன்மைய வாய் இயலும் பொருள்களை நிகழ்காலத்தாற் கூறுவர் புலவர். எ-று.

[வ-று.] அவனியைத் தாங்கிய அரசர் இருக்கின்றார், நினக்குத் துணை யான் இருக்கின்றேன், எனக்குத் துணை நீயிருக்கின்றாய், தெய்வமிருக், கிறது, நிலங்கிடக்கிறது, மலைநிற்கிறது, யாறொழுகுகிறது என வரும்.

வி-பு. இதற்குச் செய்யும் என்னும் முற்றை உதாரணங்காட்டுவாரு முளர்: அது பல்லோர் படர்க்கை முன்னிலைதன்மையாகவரும் முக்காலத் தினும் ஒத்தியல் பொருட்கு இயையாமையானும், அவ்வழக்கு இன்மை யானும் அதுபொருந்தாதென்க.

யாறொழுகும், தீச்சுடும் என வழங்குமாலோவெனின், அது ஒழுகுந் தன்மையையுடையது, சுடுந்தன்மையையுடையது என்னும் பொருட்டாய் நிற்றலின், ‡ "இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்." என்னுஞ் சூத் திரத்தின் பாற்படுமென்க. யாறொழுகுவது, தீச்சுடுவது என்பதும் அது.

௩௮௪. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும் - பிறழவும் பெறூஉமக் காலம மேற்புழி.

இது கால்வழுவமைப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. விரைவின் உம் - விரைவினாலும், மிகவின் உம் - மிகு தியினாலும், தெளிவின் உம் - தெளிவினாலும், இயல்பின் உம் - இம் மூன்று காரணங்களுமின்றி இயல்பினாலும், முக்காலம் உம் - மூன் றுகாலங்களும், பிறழ உம் பெறும் - ஒன்று மற்றொன்றாகச் சொல் லப்படவும் பெறும், ஏற்ப உழி - ஏற்குமிடத்து. எ-று.

போ-ரை. விரைவு மிகுதி தெளிவு என்னும் மூன்று காரணத்தி னும் இக்காரணமின்றியும் முக்காலங்களையும் ஒன்றையொன்றாகக் கூறப் படும் ஏற்குமிடத்து. எ-று.

வி-பு. காரணமின்றி என்பார் இயல்பினும் என்றும், பிறழ்தல் ஒருதலை அன்றென்பார் பிறழவும் என்றும், விரைவுமுதலிய நான்கினும் தனித்தனி முக்காலங்களும் முறையே பிறழாவென்பார் ஏற்புழி என்றும் கூறினார்.

[வ-று.] சோறுவேவாநிற்ப அஃதுண்டுபோதற்பொருட்டாக இருந் தோனொருவனைப் புறத்துநின்றானொருவன் இருவரும் போகவேண்டுங் குறையுடைமையின், இன்னும் உண்டிலையோ? என்றால் உண்டே னுண் டேன் என்னும்; உண்ணாநின்றானும், உண்டே னுண்டேன் என்னும்:— இவை விரைவின் எதிர்காலமும், நிகழ்காலமும் இறந்தகாலமாயின.

‡ நன்னூல், சூ. ௪௦௪.

அக்காட்டிற் புகிற்கூறை கோட்பட்டான், கள்வான்நினையிற் கையறுப்புண்டான் :—இது மிகுதியின் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று. கூறை கோட்படுதலும் கையறுப்புண்ணுதலும் தவறினுந் தவறுமாதலின் இது மிகுதியாயிற்று.

அறஞ்செயிற் சுவர்க்கம் புக்கான், எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்தது :—இது தெளிவினன் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று.

உரையளவையானும் காட்சியளவையானும் இவற்றிற்கிவை காரணமாகத் தெளிந்தமையின் இது தெளிவாயிற்று.

யாம் பண்டு விளையாடுவதிக்கா, யாம்பண்டு விளையாடுகிறதிக்கா:—இதுகாரணமின்றி இயல்பினன் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று. பிறவுமன்ன.

இவ்வுதாரணங்களுள் சிலவற்றை மாறிக்காட்டுவாருமுளர். அவை பொருந்தாமை அப்பொருள்களாலுணர்க.

உழுது வருக, உண்டு வருக என்புழி உழுது, உண்டு என்பனவற்றையும், இயல்பின் எதிர்காலம் இறந்தகாலமாய் மயங்கினவென்பாருமுளர். வருதலை நோக்குங்கால் அவை இறந்தகாலமே யாதலின் வழாநிலையாமென்க.

௩அ௫. அறிவறி யாமை யையுறல் கோளல்கோடை - யேவ றரும் வினு வாறு மிழுக்கார்.

இது வினவின் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகின்றது.

ப-ரை. அறிவு - அறிதலும், அறியாமை - அறியாமையும், ஐயுறல் - சந்தேகித்தலும், கொளல் - கொள்ளுதலும், கொடை - கொடுத்தலும், ஏவல் - ஏவுதலும், தரும் - தருதலால் வருகிற, வினு - வினுக்கள், ஆறு உம் - ஆறனையும், இழுக்கார் - களையாது கொள்வர் புலவர். எ-று.

பொ-ரை. அறிவுமுதலியன தருதலான்வரும் வினு ஆறனையுங் களையாது கொள்வர் புலவர். எ-று.

[வ-று.] ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது? என்பது அறிவினு. மாணாக்கன் அவ்வாறுகூறுவது அறியாவினு.குற்றியோ மகனோ? என்பது ஐயவினு. பொன்னுள்ளவோ? மணியுள்ளவோ? என்பன கோளல் வினு. சாத்தற்காடையில்லையோ? என்பது கோடைவினு. சாத்தாவுண்டாயோ? என்பது ஏவல்வினு.

வி-பு. இவற்றுள் அறிவும் அறியாமையும் இவ்விரண்டும் விரவிய ஐயமும் அன்றிவினாவைத் தருவது ஒன்றின்மையின் அவற்றை முன்கூறி, ஏனையவும் அவற்றின்கண் அடங்குமேனுங் கோளல், கோடை, ஏவல் என்னும் பொருள்விசேடத்தான் வேறுவிதந்து பின்கூறி மூன்றாகற் பாலனவற்றை ஆறாகக் கூறுதல் தொன்றுதொடுநெறி' யென்பார் ஆறு மிழக்கார் என்றுங் கூறினர்.

"அறியான் வினாவ லறிவொப்புக்காண்ட - லையமறுத்தீ லவனறிவு தான்கோடன் - மெய்யவற்குக் காட்டலோரைடவகை வினாவே." என்னும் ஒருசார் ஆசிரியர் கூற்றினுள்ளும், பின்னைய இரண்டும் முன்னைய மூன் றனுள் அடங்குமென்பது தோன்ற அவற்றை முற்கூறுதல் காண்க.

௩அ௬. சுட்டு மறைநே ரேவல் வினாத - லுற்ற துரைத்த லுறுவது கூறலினமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி - நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

இது இறையின் பெயரும் முறையும் தொகையும் வழுவமைதியும் உணர்த்துகின்றது.

ப-ரை. சுட்டு - சுட்டும், மறை - எதிர்மறுத்தலும், நேர் - உடன் படலும், ஏவல் - ஏவுதலும், வினாதல் - எதிர்வினவுதலும், உற்றது உரைத்தல் - உற்றதைச்சொல்லுதலும், உறுவது கூறல் - உறுவதைச்சொல்லுதலும், இனம் மொழி - இனத்தைச் சொல்லுதலும், எனும் - என்கிற, எண் இறை உள் - இவ்வெட்டு விடைகளுள், இறுதி - ஈற்றில், நிலவிய - விளங்கிய, ஐந்து உம் - ஐந்தும், அ பொருண்மையின் - அவ்விடைப்பொருளைத் தருதலினாலே, நேர்ப- விடைகளாகவே தழுவிக்கொள்ளுவர் புலவர். எ-று.

பொ-ரை. இவ்விறை எட்டனுள் முன்னைய மூன்றும் செவ்வன் இறையாம்; பின்னைய ஐந்தும் இறைப்பொருள் பயத்தலின் இறையாகத் தழீஇக்கொள்வர் புலவர். எ-று.

வி-பு. எனவே இறையாவது செவ்வன் இறையும், இறைபயப்பதும் என இருகூற்றதாமென்க.

[வ-று.] வஞ்சிக்கு வழியாது? என்றவழி இது என்றும்; மாவீழ் நொச்சி என்பதற்குப் பொருள்யாது? என்றவழி வண்டுவீழ்ந்து தேனுண் ணும்நொச்சிப்பூ-என்றுங் கருதிக்கூறுந் தொடக்கத்தனவெல்லாஞ்சுட்டு.

சாத்தா இது செய்வாயோ? என்றவழி செய்யேன். என்பதுமறை. செய்வேன் என்பது நேர். நீசெய் என்பது ஏவல். செய்வேனோ?

என்பது வினாதல். இவ்வோகார இடைச்சொற்கு எதிர்மறை முதலிய பொருள்விலக்கி ஆற்றலான் வினாப்பொருளே கொள்க.

உடம்பு நொந்தது, நோவாநின்றது, என்பன உற்றதுரைத்தல், நோவாநின்றது என்பது நிகழ்காலமாயினும் நோவு எழுந்த காலங்கருதி உற்றதுரைத்தலாயிற்று. உடம்புநோம் என்பது உறுவதுகூறல். மற்றையது செய்வேன் என்பது இனமொழி.

இறைபயப்பனவற்றுள் வினா, எதிர்வினாதல் ஒன்று நேர்தற்பொருளை யும், ஏனைய நான்கும் மறைப்பொருளையும் பயத்தல் காண்க.

இறை பயப்பனவற்றை நிலவிய என விசேடித்தமையின் நிலவா தனவுஞ் சிலவுள எனப் பொருளுரைத்து செய்வேனோ? என எதிர்மறை ஓகாரமாயும், யானோசெய்வேன்? என சிறப்போகாரமாயும் நின்று செய்யேன் என்னும் இறைப்பொருள் பயந்துவருதலும், பிறவும்; கங்கையாடிப் போந்தேனோநகூறை என வினா இல்வழி இறை நிகழ்தலுங்கொள்க.

௩அஎ. வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

இது வினாவும் செப்பும் முதல்சினை ஒற்றுமைகருதி வழுவக்கூறின் அமையாவெனக் காத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. வினாவின் உம் - வினாவுதற்கண்ணும், செப்பின் உம் - விடைகொடுத்தற்கண்ணும், சினை - சினையும், முதல் - முதலும், விரவா - ஒற்றுமை கருதிமயங்கச் சொல்லப்படாவாம். எ-று.

பொ-ரை. வினாவுதற் கண்ணும் செப்புதற்கண்ணும் சினைமுதல்கள் ¶ ஒற்றுமை கருதி மயங்கக்கூறப்படா. எ-று.

¶ "ஒன்றினமுடித்தல் என்பதனால் - ஒப்புமைகருதாது மாறுபடக் கூறும் பொருளிலும் ஒப்புமைப்பொருளிலும் வினாவிடைகள் நிகழுங்கால், முதல் சினைகள்விரவாமல் அவ்வப்பொருள்களுக்கு அவ்வப்பொருள் வர வேண்டுமெனவுங்கொள்க. அவை வருமாறு,—இவள் கண்ணின் இவள் கண்பெரியவோ? எம்மரசனில் நும்மரசன் நீதிசெய்வானோ?-இவள்கண்ணின் இவள்கண்பெரிய.-எம்மரசனில் நும்மரசன் நீதிசெய்வான். இவள் கண்களைக்காட்டிலும் என வருதலால் மாறுபடக்கூறும் பொருளாயிற்று: இவள் கண்ணொக்குமோ இவள் கண்? எம்மரசனை யொப்பானோ நும்மரசன்?-இவள் கண்ணொக்கும் இவள் கண்.-எம்மரசனை யொப்பான் நும்மரசன்.-இவை ஒப்புமைப்பொருள்,என வரும்.பிறவுமன்ன. தன்னின்முடித்தல் என்பதினால் எண்ணுங்காலும், பவளமும் முத்தும் பொன்னும் என இனமொத்தனவே எண்ணுக எனவும், முத்துங் குறுக்கத்தியுங் கானங்கோழியும் பொன்னும் என்எண்ணலாகா தெனவுங்கொள்க." என்பர்.— இராமாநுசகவிராயர்.

[வ-று.] கண்பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ? சாத்தன் நல்லனோ கொற்றன்நல்லனோ? (எ-ம்):—இவ்வாறு வினாவினார்க்கு,-கண்பிறழ்ந்தது, -கயல்பிறழ்ந்தது; - சாத்தன்நல்லன், - கொற்றன்நல்லன் (எ-ம்) வரும். பிறவுமன்ன.

வி-பு. எனவே கண்பிறழ்ந்ததோ? எனச் சினையை வினவுவான் அதனையொழித்து அதனையுடையாளைக்கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ? என வினவுதலும், இவள் பிறழ்ந்தாள்-எனச் செப்புதலும், இவ்வாறு முதலைவினவுவானும் செப்புவானும் அதனையொழித்துச் சினையை வினவுதலுஞ் செப்புதலும் வழுவாம்என்பதாயிற்று.

இங்ஙனமாயின் குயிலோ கிளவி? என வினவுவான் குயிலிசையைக் குயிலோ? என்று வினவுதல் வழுவாம். பிறவெனின் அவ்வாறு கூறுவான் குயிலைக்கருதாது அதன்இசையையே கருதிக்கூறுதலானும், குயிலிசையோ கிளவி? என இசை என்னுஞ்சொல் எஞ்சிநிற்றலானும் இத்தொடக்கத்தன வழுவாகாவென்க.

௩அ௮. எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர் - செப்பினர ப்படிச் செப்புதன்மரபே.

இது மரபாமாறு உணர்த்துகின்றது.

ப-ரை., எ பொருள் - யாதொருபொருளை, எ சொலின் - யாதொருசொல்லால், எ ஆறு - யாதொருவழியால், உயர்ந்தோர் - அறிவுடையோர்கள், செப்பினர் - சொன்னார்களோ, அ படி - அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியால், செப்புதல் - சொல்லுதல், மரபு - மரபாம். ஏ-று.

பொ-ரை. யாதொருபொருளை யாதொருசொல்லால் யாதொருநெறியால் அறிவுடையோர் சொன்னார்களோ அப்பொருளை அச்சொல்லால் அந்நெறியால் சொல்லுதல் மரபாம். எ-று.

வி-பு. எவ்வாறு என்றதொருபொருளைப் பலசொல்லானும் பல பொருளை ஒருசொல்லானுங் கூறுதல் முதலியவற்றையென்க. அவற்றுள் சில வருமாறு,—

கரிணாக்குட்டி, யானைக்குட்டி (எ-ம்); யானைக்கன்று, பசுவின்கன்று, மான்கன்று (எ-ம்) வரும். பிறவுமன்ன.

இவ்வாறன்றிப் பசுவின்குட்டி, கரிணாக்கன்று எனக்கூறின் வழுவாமாதலின், சான்றோர் வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் பயின்றுவரும் மரபறிந்துகொள்க.

௩௪௯. வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்-வேற வற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

இது பொதுவினை மரபு உணர்த்துகின்றது.

ப-ரை. வேறு வினை - வெவ்வேறு வினைகளுக்குரிய, பல் பொருள் - பலபொருள்களையும், தழுவிய - ஒருசேரத் தழுவிய, பொதுச் சொல் உம் - ஒரு பொதுச்சொல்லும், வேறு அவற்று - அவற்றின் சிறப்புச் சொற்களாக, எண் உம் - எண்ணிநிற்கிற பலசொற்களும், ஓர் பொது வினை - எல்லாவற்றிற்கும் உரியதோர்பொதுவினையை, வேண்டும் - கொண்டுமுடியும் எ-று.

போ-ரை. வெவ்வேறு வினைகட்குரிய பலபொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கும் ஓர் பொதுச்சொல்லும், அவற்றின் சிறப்புச் சொற்களாய் எண்ணிநிற்கும் பலசொல்லும் ஒன்றற்குரிய சிறப்பு வினை வேண்டாது எல்லாவற்றிற்கும் உரியதோர் பொதுவினை வேண்டுவனவாம். எ-று.

[வ-று.] அடிசில் என்பது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன வற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாகலான் அதனை அயின்றார், மிசைந்தார் என்க.

அணி என்பது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவன வற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலின் அதனை அணிந்தார், தாங்கினார் என்க.

இயம் என்பது கொட்டுவன, ஊதுவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல்லாதலின் அதனை இயம்பினார், படுத்தார் என்க.

படை என்பது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலின் அதனை வழங்கினார், தொட்டார் என்க.

இனி எண்ணிய வழியும் சிலநாள் சோறும், சிலநாள் இடியும், சில நாள் பாலும், சிலநாள் நீரும், சிலநாள் சருகும் அயின்றார், மிசைந்தார் என்க.

கறியுஞ்சோறும்உண்டான் என எண்ணி, கறியோடுவிராயசோற்றை உண்டான்-என்னும் பொருட்டாய்ச் சிறப்பின் ஒருமுடிபேற்பனவற்றிற் கும் இவற்றிற்கும் வேற்றுமை உணர்க.

குழையும் நெடுநாணும் அணிந்தார், பறையும் குழலும் இயம்பினார், வாளும் வேலும் வழங்கினார் என்க. பிறவுமன்ன.

௩௫௦. வினைசார் பினமிட மேவி விளங்காப் - பலபொரு ளொரு சொற் பணிப்பர்சிறப் பெடுத்தே.

இது சிறப்புவினை மரபு உணர்த்துகின்றது.

ப-ரை. வினை - வினையும், சார்பு - சார்பும், இனம் - இனமும், இடம் - இடமும், மேவி - பொருந்தி, விளங்கா - விளங்காத, பல பொருள் ஒரு சொல் - பலபொருளொரு சொல்லை, சிறப்பு எடுத்து - சிறப்புச் சொல்லோடுகூட்டி, பணிப்பர் - சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. குறித்த பொருளை விளக்கும் வினையினையும், சார்பும் இனமும் இடமும் முதலிய பெயரினையும், பலபொருளொருசொல் பொருந்தி விளங்கிக்கிடந்ததேல் அதனைவாளாகூறி அவ்வினை பெயர்களைப் பொருந் தாமையால் விளங்காது கிடந்ததனைச் சிறப்போடு கூட்டிக் கூறுவர் புலவர். எ-று.

வி-பு. பாக்கு வெற்றிலை தின்றான் என்றால் சுண்ணம்புங் கற்பூரமும் உடன்தின்றான் என்பது தழீஇக் கோடல்போல், சார்பு இனம் இடமெனச் சிறந்தன எடுத்தோதி ஏனைய பெயர்களையுந்தழீஇக் கோடலின் முதலிய வென்றும். அன்றி இனத்தென்றறிபொருளென்னக் கூறுதலும் ஒன்று. மேவி என்னும் வினையெச்சம் விளங்கா என்பதன்கண் முதனிலையோடு முடிந்தது.

[வ-று.] மா என்பது மாமரத்திற்கும், வண்டிற்கும், ஒருசார் விலங்கிற்கும், திருவிற்கும் பொதுவான பலபொருளொருசொல். இப்பொருள் களுள்—மாப்பூத்தது, - காய்த்தது, - என்ற துணையானே மா என்பது வினையான் விளங்கிற்று.

மா வீழ்நொச்சி மணிக்குரல் ஊழ்த்தீது - என்றதுணையானே வண்டு என்பது சார்பான் விளங்கிற்று.

சேனை யானை தேர் மாச்சதுரங்கம் என்றதுணையானே குதிரை என்பது இனத்தான் விளங்கிற்று. "சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனனே இதனுள் சேனை என்பது யானை முதலிய மூன்றுறுப்பினையும் ஒழித்துக் காலாள் மேற்சேறலும் இவ்விதியின்பாற் படுத்துக.

மா மறுத்த மலர்மார்பு - என்றதுணையானே திரு என்பது இடத்தான் விளங்கிற்று. இவைவாளா கூறப்பட்டன.

இனி மாவேறினான், மா யாது ?-என்ற வழி குறித்தபொருள்விளங் காமையின், விளங்குதற்பொருட்டு பாய்மா ஏறினான், மாமரத்தின்கண் ஏறினான், பாய்மா யாது ? மாமரம் யாது ?-எனச்சிறப்போடு கூட்டிக் கூறுக. பிறவுமன்ன.

௩௯௪. எழுத்திய றிரியாப் பொருடெரி புணர்மொழி - யிசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

இது தொடர்மொழிகள் இசைவேறுபாட்டால் துணியப்படு மென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. எழுத்து - எழுத்தினது, இயல் - தன்மை, திரியா - வேறுபடாமல், பொருள் திரி - பொருள்வேறுபட்டு நிற்கிற, புணர் மொழி - தொடர்மொழிகள், இசை திரி பால்-குறிக்கப்பட்டசொற் களின்இறுதியும்முதலுந்தோன்ற இசையறுத்துச் சொல்லுகிறவேறு பாட்டால், தெளிவு எய்தும் - துணிவுண்டாகும், என்ப - என்று சொல்லுவர் புலவர். எ-று.

பொ-ரை. எழுத்தினது இயல்பு வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுறநிற்குந் தொடர்மொழிகள் அங்ஙனங் குறித் துக் கூறுஞ்சொற்கள் இறுதியும் முதலும்தோன்ற இசையறுத்துக்கூறும் வேறுபாட்டால் துணியப்படுமென்று சொல்லுவர் புலவர். எ-று.

வி-பு. எனவே அவ்வாறு இசையறுத்துக் கூறுதல் மாபு என்ப தாயிற்று.

[வ-று.] செம்பொன் + பதின் + தொடி = செம் பொன் பதின் தொடி, செம்பு + ஒன்பதின்தொடி = செம் பொன் பதின்தொடி ;

நாகன் + தேவன் + போத்து = நாகன் றேவன் போத்து, நாகன்றே + வன்போத்து = நாகன்றே வன்போத்து ;

தாமரை + கணியார் = தாமரைக்கணியார், தாம் + அரைக்கு + அணி யார் = தாமரைக்கணியார் ;

குன்று + ஏறு + மா = குன்றேறு மா, குன்று + ஏறு + ஆமா = குன் றேறுமா ;

குறு + பரம்பு = குறும் பரம்பு, குறும்பர் + அம்பு = குறும்பரம்பு ;

ஆறு + கழா = ஆற்றுக்கழா, ஆற்று + கழா = ஆற்றுக்கழா ;

செம் + பருத்தி = செம்பருத்தி, செம்பு + அருத்தி = செம்பருத்தி :— என்றற் றொடக்கத்தனவற்றை அவ்வாறு இசையறுத்து உச்சரித்துக் காண்க.

௩௯௨. ஒருபொருண் மேற்பலபெயர்வரி னிறுதி - யொருவினை கொடுப்ப தனியு மோரோவழி.

இது மரபுவழுவற்க வெனக் காத்தலும் அதன் வழுவமைப்பும் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒரு பொருள் மேல் - ஒருபொருளின் மேலே, பல பெயர் - பலபெயர்கள், வரின் - வருமாயின், இறுதி - இறுதியில்,

ஒரு வினை - ஒருமுடிக்குஞ்சொல்லை, கொடுப்ப - பொருளொன்றே யென்பது தோன்றக்கொடுத்துக்கூறுவர், ஒரோவழி - ஒருபொருளாகுகை தவறுதவிடத்தே, தனியும் - பெயர்தோறும், கொடுப்ப - கொடுத்துங் கூறுவர். எ-று.

பொ-ள. ஒருபொருண்மேல் பலபெயர் வருமாயின் பொருளொன்றே யென்பதுதோன்ற இறுதிக்கண் ஒருவினைகொடுத்துக் கூறுவர். ஒருபொருளாதல் தவறுதவழிப் பெயர்தோறுங் கொடுத்துக்கூறுவர் புலவர்.

வி-பு. ஒருபொருட்கு ஒருமுடிபென்பார் ஒருவினைகொடுப்ப என்றாரன்றி ஒருபெயர்கொடுத்தலை யொழித்தார் அல்லவொன்க.

[வ-று.] ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான் (எ-ம்) ; பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி இவன் (எ-ம்) ;—

‡ "குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட் செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் டியான்போய் வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை நண்ணும் பளிக்கறையே."(எ-ம்);

‡‡ "பொருப்பர்க்கி யாமொன்று மாட்டேம் புகலப் புகலெமக்காம்
விருப்பர்க்கி யாவர்க்கு மேலர்க்கு மேல்வரு மூரெரித்த
நெருப்பர்க்கு நீடம் பலவருக் கன்பர் குலநிலத்துக்
கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற தின்றிக் கடிப்புனமே."(எ-ம்) :-

இவை இறுதிக்கண் ஒருவினையும் பெயருங் கொடுக்கப்பட்டன.

இனிப்பெயர் தோறுங்கொடுக்குமாறு :—

"மின்றோய் வரைகொன்ற வேலோன் புகுதுக
வின்றேன் கமழ்தார் இயக்கன் புகுதுக
வென்றேன் புகுதுக வேலோன் புகுதுக
வென்றே நகர மெதிர்கொண் டதுவே."—எனவரும். பிறவுமன்ன.

௩௯௩. திணைநிலஞ்சாதி குடியே யுடைமை-குணந்தொழில் ¶கல்வி-சிறப்பாம் பெயரோ - டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே.

இது மரபுவழுவற்கவெனக்காத்தலும் அதன்வழுவமைப்பும் உணர்த்துகின்றது.

---

‡ திருக்கோவையார், செ. ௩௦.
‡‡ ஷை செ. ௧௪௩.

¶ "கல்விசிறப்பாம் பெயரோடு என்புழி கல்வி முதலிய சிறப்புப் பெயருடனே எனக்கொண்டு,முதலிய என்றது தவம்,ஆள்வினை, உறுப்பு முதலியவும் பிறவும் தழுவுதற்கு எனப்பொருள்விரித்து, அவைவருமாறு, முனிவன் அகத்தியன், படைத்தலைவன் சாத்தன், முடவன் முருகன், குருடன் கொற்றன் எனக்காண்க." என்பர்.—இராமாநுசகவிராயர்.

ப-ரை. திணை - ‡ ஐந்திணையும், நிலம் - தேசமும், சாதி - குலமும், குடி - குடியும், உடைமை - உடைமையும், குணம் - குணமும், தொழில் - தொழிலும், கல்வி - வித்தையும் ஆகிய இவற்றைப்பற்றிவருகிற, சிறப்பு ஆம் பெயரோடு - சிறப்புப்பெயரோடு, இயற்பெயர் - இயற்பெயரை, ஏற்றிடின் - ஒருபொருள் ஒருசேர ஏற்குமாயின், பின் வரல் - அவ்வியற்பெயர் பின்வருதல், சிறப்பு - சிறந்தமரபாம். எ-று.

போ-ரை. திணைமுதலாகக் கல்வியீறாக விதந்தன முதலிய பற்றி வருஞ்சிறப்புப் பெயருடனே இயற்பெயரை ஒருபொருள் ஒருங்கேற்குமாயின் அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்தமரபாம். எ-று.

வி-ரை. ஏற்றற்கு வினைமுதல் ஒருபொருள் என்பது மேலைச்சூத்திரத்தாற் பெற்றும். சிறப்பே என்றமையான் முன்வரும் என்பதூஉம், அது வழுவமைதி என்பதூஉம் பெற்றும்.

[வ-று.] குன்றவன்கோற்றன், அரிவாளன் அழகன், பார்ப்பான் பாராயணன், ஊர்கிழான் ஓணன், பொன்னன் பொறையன், கரியன் கம்பன், நாடகநம்பி - ஆசிரியன் அமிழ்தன் எனவரும். இவை இயற்பெயர் பின் வந்தன.

இனிக்கோற்றன் குன்றவன், அழகன் அரிவாளன் - எனமுறையே இயற்பெயர் முன்னும் வருதல்காண்க.

இன்னும் இயற்பெயர்முன்னும் வருங்கால், வெண்கோற்றப் படைத்தலைவன், வெள்ளேறக்காவிதி:—என இறுதிவிகாரமாய் வருதலுங்காண்க. பிறவுமன்ன.

நூ௩௯௪. படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப் - பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கு - மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.

இது சில பெயரணைந்துவரும் சுட்டுப்பெயர் மரபு உணர்த்துகின்றது.

ப-ரை. படர்க்கை - படர்க்கையிடத்தையுடைய, முப்பெயரோடு - உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் விரவுப்பெயர் என்கிற மூவகைப்பெயர்களோடு, சுட்டு பெயர் - சுட்டுப்பெயர், அணையின் - சேரின், பின் வரும் - அச்சுட்டுப்பெயர் பின்வரும், வினை எனின் - அவ்விடத்தே வினையாகியமுடிக்குஞ் சொல்வருமாயின்,

‡ ஐந்திணை என்றது-முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்றவற்றை.

பெயர்க்கு - அம்முடிக்குஞ்சொல் இல்லையாயின் அப்பெயர்க்கு, எங்கும்-பின்னும் முன்னும், மருவும் - வரும், வழக்கு இடை - இம் மரபு வழக்கத்திடத்திலாம், செய்யுட்கு-செய்யுளிடத்தே, ஏற்புழி-நியுதியின்றிவேண்டியவாறே வரப்பெறும். ஏ-று.

போ-ரை. படர்க்கை யிடத்தவாகிய உயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் விரவுப்பெயர் என்னும் மூவகைப்பெயரோடு சுட்டுப்பெயர்சாரின் அச்சுட்டுப்பெயர் மூவகைப்பெயர்க்கும் பின்வரும்; அவ்வழி வினைநிகழ் வழியெனின் வினைநிகழ்ச்சியின்றேல் அப்பெயர்க்குப் பின்னும் முன்னும் வரும்; இம்மரபு வழக்கின்கண்ணவாம் செய்யுட்கண்ணேயெனின் நியதி யின்றி வேண்டியவாறே வரப்பெறும். எ-று.

[வ-று.] நம்பிவந்தான் அவற்குச் சோறிடுக,—எருதுவந்தது அதற்குப் புல்லிடுக,—சாத்தன் தெய்வம் அவற்குப் பலியிடுக,—சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக,—என வினைநிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன. வந்தான் நம்பி அவற்குச் சோறிடுக :—எனவும் முறையேயொட்டுக.

வி-பு. இவற்றுள் சாத்தன் தெய்வம் என்புழி வினையின்றிப் பெயர் வந்ததாலோவெனின், படர்க்கைமுப்பெயருந் தனித்து நில்லாது பெயர் வினைகளைக்கொண்டு முடிந்தும் பெயர்வினைக்கட்குப் பயனிலையாயும் புடை பெயரும் புடைபெயர்ச்சியை வினையென்றும், அப்புடைபெயர்ச்சி உள் வழி, சுட்டுப்பெயர்வரின் பின்வருமென்றும் கூறினாரன்றி இவ்வினையை வினையென்றார் அல்லரென்க.

மைந்தன் பிறந்தான் அதனால் தந்தையுவக்கும் - என்புழி அது என் னுஞ் சுட்டு மைந்தனைஅணைந்ததில்லை யாலோவெனின், அவன் தற்கிழமை யாகிய பிறத்தலை யணைதலின் அவனை யணைந்ததேயாமென்க; அன்றி "சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்னுஞ் சூத்திரத்தான் அமைத்தலும் ஒன்று.

நம்பி அவன், அவன் நம்பி -எனப்பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட் டுப்பெயர்வந்தன. ஏனைப்பெயர்களோடும் ஒட்டுக.

பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர்வருதல் மரபாமன்றே, இதனை வழுவற்கவெனக்காத்தல் எவ்வழுவாராமைகருதியெனின், சுட்டுப் பெயர்பின்வரும் வினையெனில் எனக் கூறினமையின் வினை இல்வழி சுட் டுப்பெயர் படர்க்கை முப்பெயர்க்கும் பின்வருமோ முன்வருமோ இருமருங் கும் வருமோ வாராதொழியுமோயாங்ஙனம் ஆங்கொல் என்னும் ஐயமறுத் தற்குக் கூறினாரன்றி இதுவழுவற்கவெனக் காத்தாரல்லர். அக்கருத்து சுட்டுப்பெயர்பின்வரும் வினையெனில் என்றதற்கே கொள்க.

அதனை அவ்வாறு காத்தல் எவ்வழுவாராமை கருதியெனின், நம்பி வந்தான் அவற்குச் சோறிடுக-என்பான் அவற்குச்சோறிடுகநம்பிவந்தான்-என்றேனும், அவன் வந்தான் நம்பிக்குச் சோறிடுக - என்றேனுஞ் சுட்டுப் பெயரை முன்வைத்துக்கூறின், அஃது ஒருபொருண்மேல்இருபெயர்வந்த தாகாது, நம்பிவேறுஅவன்வேறாய்முடியும்அவ்வழுவாராமைகருதியென்க. இனிச்செய்யுட்கேற்புழி வருமாறு,—

"அவிளணங்கு நோய்செய்தா ளாழியாய்வேலன் (அவன்)
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி—முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியி லென்னைகொல்
பின்னை யதன்கண் விளைவு."—எனவரும். செய்யுட்கண்பின்வருதல் வழுவற்க எனக்காத்தலும் இப்பாட்டின்கண் முன்வருதல் வழுவமைதியு மாமென்க. பிறவுமன்ன.

நஉ. அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொ லிரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்.

இது சில அடுக்குமுறை உணர்த்துகின்றது.

ப-ரை. அசை நிலை-அசை நிலைக்கும், பொருள்நிலை - விரைவு வெகுளி உவகை அச்சம் அவலம் முதலாகிய பொருணிலைக்கும், இசை நிறைக்கு - இசைநிறைக்கும், ஒரு சொல் - ஒருமொழி, இரண்டு - இரண்டும், மூன்று - மூன்றும், நான்கு - நான்குமாகிய எல்லை - அளவும், முறை - முறையாக, அடுக்கும்-அடுக்கும். எ-று.

பொ-ரை. அசை நிலைக்கும், விரைவு வெகுளிஉவகை அச்சம் அவலம் முதலிய பொருணிலைக்கும், இசைநிறைக்கும் ஒரு சொல் இரண்டு மூன்று நான்களவு முறையே அடுக்கும். எ-று.

வி-பு. எனவே அசைநிலைக்கு இரண்டும், பொருணிலைக்கு இரண்டும் மூன்றும், இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கும் என்ப தாயிற்று.

[வ-று.] ஒக்கும் ஒக்கும், அன்றே அன்றே என்பன அசைநிலை. உண்டேன் உண்டேன், போ போ போ என்பன விரைவு. எய் எய், எறி எறி எறி என்பன வெகுளி. வருகவருக, ‡போலிக போலிகபோலிக என்பன உவகை. பாம்பு பாம்பு, தீ தீ தீ என்பன அச்சம். உய்யேன் உய்யேன், வாழேன் வாழேன் வாழேன் என்பன அவலம். — இவைமுதலியன பொருணிலை.

‡ திருவாய்மொழி, ௬உ-ம் பத்து, சே. க.

"ஏஎ யம்பன் மொழிந்தன ளாயே." "நல்குமே நல்குமே நல்குமே நாமகள்." "பாடுகோ பாடுகோ பாடுகோ.":— என்பன இசைநிறை. பிறவுமன்ன.

ஒருசொல்லைப் பலகாற் கூறுதல் வழுவாயினும் இவ்விடத்து ஆமென்றல் வழுவமைதியும்,இதற்கு இவ்வெல்லை இறவாதென்றல் வழுவற்க எனக் காத்தலும் ஆமென்க.

நுகூகூ. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

இது மரபு வழுவற்க எனக்காத்தல் உணர்த்துகின்றது.

ப்-ரை. இரட்டைகிளவி - இரட்டைச்சொற்கள்,இரட்டின்-அவ்விரட்டிப்பின், பிரிந்து-நீங்கி, இசையா-தனித்து ஒலியாவாம் எ-று.

போ-ரை. இரட்டைச்சொற்கள் அவ்விரட்டிப்பின் பிரிந்து தனித்து ஒலியா. எ-று.

வி-பு. எனவே வலிந்துபிரித்துக்கூறின் பொருள்படாதென்பதூஉம், இரட்டித்துக் கூறுதலே மரபு என்பதூஉம் ஆயிற்று.

[வ-று.] "சலசலமும்மதம்பொழிய."— ‡'கலகல கூஉந்துணையல்லால்' "துறுதுறு நடந்துஞ் சிறுகைநீட்டியும்."—‡‡'வற்றிய வோலை கலகலக்கும்' "துடிதுடித்துத் துள்ளி வரும்" எனவரும்.

துடி துடித்து என்புழி பின்னையது பிரிந்திசைக்குமேனும் முன்னையது பிரிந்திசையாமையின் இரட்டைச்சொல்லேயாமென்க. ¶ பிறவுமன்ன.

நுகூஎ. ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்.

இது ஒருபொருட் பலபெயர் மரபு உணர்த்துகின்றது.

ப-ரை. ஒரு பொருள் - ஒரு பொருளின்மேல், பல பெயர்-பல பெயர்சொல்லும்போது, பிரிவு இல - அப்பொருளினின்றும் பிரிதலில்லாதனவற்றை, வரையார் - நீக்காதுகொள்வார் புலவர். எ-று.

---

‡ நாலடியார், செ. கசுO.

‡‡ ஷை செ. உருகூ.

¶ இனி சுருசுருத்தது என இசைபற்றியும், கோறுகோறுத்தார் எனக் குறிப்புப்பற்றியும், கறுகறுத்தது எனப்பண்புப்பற்றியும், இரட்டித்துப் பிரியாது நின்றன" என்றும் ; "குறுத்தகுறுத்தது என ஒருசொல்முழுவதும் இருமுறைவாராமையால் அடுக்கல்ல" என்றும் ; "இவைமக்கள் இரட்டை,விலங்கிரட்டையும்போல ஆகாமல் இலையிரட்டையும், பூவிரட்டையும் போல ஒன்றுபட்டும், வேறுபட்டும் நின்றன" என்றுங் கூறுவர்.—இராமாநுசகவிராயர்.

போ-ளா. ஒருபொருள்மேல் பல பெயர்கூறுங்கால் அப்பொருளினின்றும் பிரிதலில்லாதனவற்றை நீக்காது கூறுவர் புலவர், எ-று.

வி-பு. என்வே பிரிவுள்ளனவற்றைக்கூறர் என்பதாயிற்று.

[வ-று.] ஆசிரியன்பேநர்கிழான் சாத்தன் வந்தான், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான்:—என்பன பிரிவிலவாய்ப் பலபெயரும் ஒருபொருண்மேற்சென்று கேட்போர்க்குக் கூறுவோன் கருதியபொருள் விளக்கிநின்றன.

"வையைக் கிழவன் வயங்குதார் மாணகலந்
தையலாய் நீயின்று நல்கினை நல்காயேற்
கூடலார் கோவோடு நீயும் படுதியே
நாடறியக் கவ்வை யொருங்கு." (எ-ம்);—

"கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்
வைகலு மேறும் வயக்களிறே—கைதொழுவல்
காலேக வண்ணனைக் கண்ணுரக் காணவெஞ்
சாலேகஞ் சார நட." (எ-ம்):—சுட்டின் பொருளவாய் வரும்பெயரோடு தொக்க ஒருபொருட் பலபெயர்களும் அன்ன.

பிரிவு என்றதற்கு இவ்வாறு பொருள்கூறாது, "கொய்தளிர்த்தண்டலை" என்னும் பாட்டினுள் காலேகவண்ணம் சேந்தனுக்கும் பிறர்க்கும் உண்டாதலைப் பிரிவென்றுகருதி இதுவழு என்பாருமுளர். காலேகவண்ணம் பொதுவியல்புஅன்றிச்சேந்தனிற் பிரிந்ததன்றாதலானும், சேந்தனைக் களிற்றின்மேற் செய்மைக்கண் வரக்கண்டாள் அவனைக் கண்ணுரக்காண வேண்டும் பெருவேட்கைதந்தது அவனது காலேகவண்ணம் என்பாள் அவ்வாறு கூறவேண்டுமாதலானும், இது சான்றோர் இலக்கியமாதலானும் அது பொருளன்றென்க.

இனிப்பிரிவுளதாய் வழுவியதுயாதோவெனின், "பகைமியல்பாயிலி படைக்கைமறவன்." எனவரின் பகையியல்பாயிலியைப் படைக்கைமறவன் என்றல் கூடாமையின் பிரிந்து வழுவாம் என்க. பிறவுமன்ன.

நகூஅ. ஒருபொருட் பன்மொழி சிறப்பினின்வழா.

இது (ஒருபொருட்பலசொல்) மரபு வழுவமைப்பு உணர்த்துகின்றது.

ப-ளா. ஒரு பொருள் - ஒருபொருளைக்குறித்து வருகிற, பல மொழி - பலசொற்கள், சிறப்பினின் - சிறந்துநிற்கையால், வழா- அவைவழுவென்று நீக்கப்படாவாம். எ-று.

போ-ளா. ஒரு பொருளைக்குறித்துவரும் பலசொற்கள் அவ்வாறு வருதற்கு ஓர் காரணமின்றேனும் சிறந்து நிற்றலின் அவை வழுவென்று நீக்கப்படா. எ-று.

வி-பு. சிறந்து நிற்றல்-ரேவிக்குச்சோல் இன்பந்தோன்ற நிற்றல். சிறப்பினின் என்றமையால் காரணமின்றி வந்தன என்பதுபெற்றும்.

[வ-று.] "மீமிசை ஞாயிறு கடற்பாய்ந்தாங்கு."- "புனிற்றிளங் கன்று"—"நாகிளங் கமுகு"-"அடுபசியுழந்தநின் னிரும்பேரொக்கல்"- "உயர்ந்தோங்கு பெருவரை"—‡"குழிந்தாழ்ந்த கண்ணவாய்த்தோன்றி" எனவரும். பிறவுமன்ன.

இனிச்சிறப்பினின் என்றதற்கு அப்பொருளைச்சிறப்பித்தலின் எனப் பொருள் கூறுவாருமுளர். அச்சொற்கு அப்பொருள் இயையாமையானும், அக்காரணத்தான் வந்தனவேல் ஈண்டு ஒருபொருட் பன்மொழியாய் வரும்பெயர்கள் ஒருபொருட் பலபெயருள் அடங்குமாதலானும், மீமிசை என்றால் மேலென்றே பொருளன்றி விசேடித்ததோர் சிறப்பின்மை யானும், உண்டேல் அஃது இஃதென விதந்து கூறுவாராதலானும் அது பொருளன்றென்க.

௩௧௯. இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள் - வினைப் படுத் துரைப்பி னும்மை வேண்டும்.

இது (முற்றும்மைவேண்டி நிற்கும்பொருள்) மரபு வழூவற்க எனக் காத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. இனைத்து என்று-இவ்வளவினதென்று, அறி பொருள்- அளவறியப்படுகிற பொருளும், உலகின் இலா பொருள் - எக்காலத் தும் எவ்விடத்தும் இல்லாதபொருளும், வினைபடுத்து உரைப்பின்- வினைப்படுத்துச் சொல்லும்போது, உம்மை - முற்றும்மையை, வேண்டும் - வேண்டிநிற்கும். எ-று.

போ-ரை. இத்துணைத்தென்று வரையறை யுணரப்படும்பொருளும், எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாதபொருளும், அவற்றை வினைப்படுத் துக்கூறுங்கால் முற்றும்மைவேண்டிநிற்கும். எ-று.

வி-பு. பொருள் என வேறுவிதந்தமையின் உலகு என்றது ஒழிந்த கால மனைத்தினையும் இடமனைத்தினையும் என்பதூஉம், இனைத்தென்றறி பொருள் என்றமையானும், உலகு எனக்காலமனைத்தினையும் இடமனைத் தினையுங்கூறுதலானும், உம்மை என்றது முற்றும்மையை என்பதூஉம் பெற்றும்.

[வ-று.] தமிழ்நாட்டு மூவேந்தரும்வந்தார், உலக மூன்றினையும்ஒருங் குணர்ந்தான், நின்கண்வைத்தபொருள் நூற்றினையும் அவ்விருவருக்குங்

‡ நாலடியார், செ. ௪௯.

கொடு, இறைவற்குக் கண்மூன்றும்முச்சுடர், இறைவற்கு உடைபோர்வை இரண்டும்தோல் :—என் இனத்தென்றறிபொருள் வினைப்படுத்துரைப் பின் உம்மை வேண்டிநின்றன.

இவற்றுள் முச்சுடர்,தோல் :—என்பன பெயரானோவெனின், ஈண்டு வினைமியன்றதூஉம், "சுட்டுப்பெயர் பின்வரும் வினையெனில்" என்றது போலும்.

பவளக்கோட்டு நீலயானை என்றும் இல்லை, முயற்கோடாகாயப்பூ என்றும் இல்லை,மண்ணிற் படம் என்றும் இல்லை, நூலிற்கடம் என்றும் இல்லை, ஒளிமுன் இருள் என்றும் இல்லை :—என உலகின் இல்லாத பொருள்வினைப்படுத்துரைப்பின் உம்மைவேண்டி நின்றன. எவ்விடத்தும் இல்லை எனவும் ஒட்டுக.

உம்மைவரும் என்னாது உம்மைவேண்டும் என்றமையான், அஃது இசையெச்சமாய் நிற்க அதனைவேண்டுவனவாய் "வன்பறழ்க்குமரி யிரு தோடோழர்பற்ற." (இருதோள்),-" எருமை நாற்காலீர்க்கீழவ்வே." (நாற் கால்) (எ-ம்); மண்ணிற் படம் இல்லை,நூலிற் கடம் இல்லை, ஒளிமுன் இருள் இல்லை (எ-ம்) வரும். இவ்வில்பொருளின்கண் காலப்பெயர் இடப்பெயர் களும் உடன் எஞ்சிநின்றன. இவ்வாறுவருதல் கருதாது செய்யுள் விகார மாக உம்மைதொக்கது என்பாருமுளர்.

உலகினில்லாப் பொருளுள் பொருள்போல் காலத்தோடுபட்ட தன்று என்பது தோன்ற என்றுமில்லை என்னாது, காலத்தோடு பட்டதுபோல வைத்து, பவளக்கோட்டு நீலயானை பண்டும் இல்லை - என எச்சவும்மை தந்து உதாரணங்காட்டுவார், அது யானை நடத்தினும் இல்லை சூழிசியினும் இல்லை என்றதுபோலுமென்க.

இரட்டுற மொழிதலான் உலகின்கண் நிலையில்பொருள் வினைப்படுத் துரைப்பின் எச்சவும்மை வேண்டுமெனவும்பொருளுரைத்துக்கொள்க.— அவைவருமாறு,- செல்வமும் நில்லாது, செல்வமும் பொய் - எனவரும். செல்வம்நில்லாது,செல்வம்பொய்:—என எச்சவும்மைகொடாது வாளா கூறின் இளமை,யாக்கை முதலியன நிலைபெறுமெனவும், மெய்ப்பொருள் எனவும் பொருள்படுமென்க. உம்மைவேண்டும் என்றதனால் செல்வம் நில்லாது, செல்வம் பொய் :—என உம்மையெஞ்சி நிற்றலுங்கொள்க.

௪௦௦. செயப்படு பொருளைச் செய்தது போலத் - தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

இது (செயப்படுபொருள் கருத்தாவாகவரும்) மரபு வழுவமைப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. செய படு பொருளை - செயப்படுபொருளை, செய்தது போல - வினைமுதலைப்போலவைத்து, தொழில் பட - அதன்மேல் அவ்வினைமுதல் வினையேற்றி, கிளத்தல் உம்-சொல்லுதலும், வழக்கினுள் - வழக்கினிடத்து, உரித்து - உரித்தாம். ஏ-று.

பொ-ரை. செயப்படுபொருளைக் கருத்தாவைப்போலவைத்து அதன் மேல் வினைமுதல் வினையேற்றிக்கூறுதலும் வழக்கின்கண் உரித்தாம். எ-று.

[வ-று.] இம்மாடு யான்கொண்டது, இச்சோறு யான் கொடுத்தது, இவ்வெழுத்தாணி யான் எழுதியது எனவரும்.

வி-பு. உம்மையால் கருமத்தைக்கருத்தாவாக இவ்வாறு கூறுதலே யன்றி, கருவி, நிலம், செயல், காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலும் அமையும் என்பது பெற்றும். அவை வருமாறு,—.

இவ்வெழுத்தாணி யான் எழுதியது, இவ்வீடு யான் இருந்தது, இத்தொழில் யான்செய்தது, இந்நாள் யான் பிறந்தது எனவரும். இனி இல்லம்மெழுகிற்று, எழுத்தாணியெழுதிற்று:—என உதாரணங் காட்டுவாருமுளர். இல்லம்மெழுகிற்று என்பதோர் வழக்கின்மையானும், நடத்த நடந்த தேரினைப்போல, ஒருவனெழுத எழுதியது எழுத்தாணியாதலின் அது அதன்தொழிலேயன்றி ஒருவன் தொழிலன்றாதலானும், அவை காட்டாகாவென்க.

உ௦௧. பொருண்முத லாறு மடைசேர் மொழியின-முள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்.

இது உலகவழக்கு செய்யுள்வழக்கின்கண் அடைசேர் மொழிகள் இனமுள்ளவும் இல்லவுமாமென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. பொருள் முதல் - பொருளாதி, ஆறு ஆம் - ஆறாகிய, அடை சேர் - அடைகளடுத்துவருகிற, மொழி - மொழிகள், இனம் உள்ள உம் - இனமுள்ளவையேயா மன்றி, இல்ல உம் ஆம் - இனமில்லாதவையுமாம், இரு வழக்கின் உம் - உலக வழக்கினுள்ளுஞ் செய்யுள் வழக்கினுள்ளும். எ-று.

பொ-ரை. பொருளாதி ஆறாகிய அடைகளடுத்து வருமொழிகள் இனமுள்ளனவேயாமன்றி இனமில்லனவுமாம், உலகவழக்கினுள்ளும் செய்யுள்வழக்கினுள்ளும். எ-று.

வி-பு. உள்ளவும் என்னும் உயர்வு சிறப்பும்மையும், இல்லவும் என்னும் இழிவு சிறப்பும்மையும் எண்ணி நின்றன.

[வ-று.] நெய்க்குடம், துளநெல், கார்த்திகை விளக்கு, பூமரம், செந்தாமரை, குறுங்கூலி (எ-ம்.);

உப்பளம்,ஊர்மன்று, நாளநும்பு, இலைமரம்,செம்போத்து, தோய் தயிர் (எ-ம்):—வழக்கின்கண் இனமுள்ளனவும் இல்லனவும் வந்தன.

† "பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்."-‡"கான்யாற் றடை கரை"-"மூந்நாட்பிறையின் முனியாது வளர்ந்தது" - [a]‡ "கலவமாமயி லெருத்திற் கடிமலரவிழ்ந்தனகாயா." -சிறுகோட்டுப் பெரும்பழந்தூங்கி யாங்கிவள்"- "ஆடுபாம்பேனப்புடை யகன்றவல்குன்மேல்" (எ-ம்);

[b]‡ "பொற்கோட்டிமயமும் பொதியமும்போன்றே."-*"வடவேங்க டந்தென்குமரி"-"வேனிற்கோங்கின் பூம்பொதுட்டன்ன"-"சிறகர்வண்டு செவ்வழிபாட"-"செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும் வெண்டிங்களுள் வெயில் வேண்டினும்"-"முழங்குகட லோதமழ்கிப்போக"(ஓதல்) (எ-ம்):- செய்யுட்கண் இனமுள்ளனவும் இல்லனவும் வந்தன.

இனமுள்ளனவற்றை வாளாகூறின் குறித்தபொருள் தோன்றாமை யின் அடைகொடுத்துவிநந்துகூறுகவெனவும்,இனமில்லனவற்றிற்குஅடை கொடுத்துக் கூறுதல் மிகையாமாயினும் அமையுமெனவும், பொருள்போந் தமையின் முன்னையது வழுவற்கவெனக் காத்தலும், பின்னையது வழு வமைப்புமாமென்க.

ஆசிரியர் தொல்காப்பியனார் ** தொல்காப்பியம் 'இன்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை - வழக்காறல்ல செய்யுளாறே." என்றமை யின் பொருள்முதல் ஆறுமடையென்றும், இருவழக்கினுமென்றும், இவ் வமைதியும் பயின்று வருமென்பது தோன்ற உள்ளவும் இல்லவுமாமென இனமுள்ளனவற்றோடும் ஒருங்கெண்ணியும் கூறினாரென்க.

சா௨. அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்.

இது மரபு வழுவற்கவெனக் காத்தல் உணர்த்துகின்றது, பொருந்து வனகொள்கவென்பார் ஆண்டுறின் என்றமையான்.

ப-ரை. அடைமொழி-முன்சொல்லப்பட்ட அடைசேர்மொழி இனம் அல்லது உம் - இனத்தைத்தருவதன்றி இனமல்லாததை

---

† திருக்குறள், செ. கூகங.   ‡ இனியவைநாற்பது,செ. ரு.
[a]‡ சிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், செ. உ.
[b]‡‡ . ஷை குணமாலையாரிலம்பகம், செ. கரு௭.
* தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம்.
** ஷை கிளவியாக்கம், சூ, க௮.

யும், தரும் - கொடுக்கும், ஆண்டு - அவ்விடத்திற்கு, உரின் - பொருந்துமாயின். எ-று.

போ-ா. மேற்கூறிய அடைசேர்மொழி இனத்தைத்தருதலேயன்றி அதனோடு இனமல்லதனையுந் தரும் அவ்விடத்திற்குப் பொருந்துமாயின்.

[வ-று.] பாவஞ் செய்தால் நரகம் புகும் என்ற துணையானே, "புண்ணியஞ் செய்தான் சுவர்க்கம் புகும்—என இனத்தைத் தருதலேயன்றி அவன் இதுசெய்யின் இதுவரும் என்னும் அறிவிலி என்னும் இனமல்லதனையுந் தந்தது.

மேலைச்சேரிச் சேவலலைத்தது - என்றதுணையானே, கீழைச்சேரிச் சேவலலைப்புண்டது—என இனத்தைத் தருதலேயன்றி அச்சேவலுடையார்க்கு வெற்றியாயிற்று என்னும் இனமல்லதனையுந் தந்தது.

வி-பு. இனி இரட்டுறமொழிதலான் இனமல்லதுந் தருமென்பதற்கு இனத்தைத்தருதலையொழித்து இனமல்லதனையுந் தருமெனவும் பொருளுரைத்துக்கொள்க. அவை வருமாறு,—

சுமந்தான் வீழ்ந்தான் என்றால், சுமவாதான் வீழ்ந்தானல்லன் என்னுங்கருத்து சொல்லுவார்க்கின்றாதலின் அவ்வினத்தை யொழித்து சுமையும்வீழ்ந்தது என்னும் இனமல்லதனையுந்தந்தது.

காலையெழுந்து கருமத்திற் செல்வான் கோழிகூவிற்று என்றால், ஏனைப்புட்கள்கூவுகில என்னுங்கருத்து அவற்கின்றாதலின் அவ்வினத்தை யொழித்து, பொழுதுபுலர்ந்தது என்னும் இனமல்லதனைத் தந்தது.

பெய்முகிலனையான் என்றால், கைம்மாறு கருதாத பெருங்கொடையாளன் என்னும் இனமல்லதனை இனமல்லதாகிய அடைமொழிதந்தது. இவ்வடைகொடாது முகிலனையான் என வாளாகூறினும் இக்கொடைப் பொருள் தருமாலோவெனின், அவ்வாறுகூறின் முகில்வண்ணன் எனவும் பொருள்படுமாதலின், அதனையொழித்துக் கொடைப்பொருட்கு உரிமை செய்தது அவ்வடையேயாமென்க. பிறவுமன்ன. ஆண்டுரின் என்றமையான் இவ்வாறு பொருந்துவனகொள்க.

௩௦௩. அடைசினை முதன்முறை யடைதலு மீரடை - முதலோ டாதலும் வழக்கிய லீரடை - சினையோடு செறிதலு மயங்கலுஞ் செயுட்கே.

இது (வழக்குசெய்யுள்நடை) மரபு வழுவற்கவெனக்காத்தலும் அம்மரபு வழுவமைப்பும் உணர்த்துகின்றது.

ப-ரை. அடை - ஓரடையும், சினை - ஒருசினையும், முதல்-ஒரு முதலும், முறை அடைதல் உம் - ஒன்றையொன்று விசேடித்து

வருதலும், ஈரடை - இரண்டடை, முதலொடு ஆதல் உம் - முதலை விசேடித்துவருதலும், வழக்கு இயல் - வழக்குநடையாம், ஈரடை - இரண்டடை, சினையொடு செறிதல் உம் - சினையை விசேடித்து வருதலும், மயங்கல் உம் - இவ்வரம்பு கடந்துவருதலும், செய்யுட்கு - செய்யுள் நடையாகும். எ-று.

பொ-ளா. மேற்கூறிய அடை முதல் சினைகளை அடுத்துவருங்கால் ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றையொன்றுவிசேடித்துவருதலும் இரண்டடைமுதலை விசேடித்து வருதலும் வழக்குநடையாம்; இரண்டடை சினையை விசேடித்துவருதலும் இவ்வரம்பு இறந்துவருதலுஞ் செய்யுள் நடையாம். எ-று.

வி-பு. ஈரடை முதலோ டாதலும் என்றமையான் முறையென்றது ஒன்றையொன்று விசேடித்து வருவதென்பதூஉம், அங்ஙனம் வரவே அடைமுதலை சினைபல வாராது ஒவ்வொன்று வருமென்பதூஉம் பெற்றாம்.

[வ-று.] வேங்கை முருகன், நிலப்பூ நெரிஞ்சில், கார்த்திகைப்பூக் கொடி, பழக்குலைவாழை, செங்கால்நாரை, முழங்குதிரைக்கடல் (எ-ம்); மனைச்சிறுகிணறு, சிறுகருங்காக்கை (எ-ம்) :—வழக்கின்கண் வந்தன.

“சிறுபைந் தூவியிற் செயிரறச் செய்த.”—“கருநெடுங் கண்டருங் காம நோயே.” (எ-ம்); “பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை.” (எ-ம்) :—செய்யுட்கண் வந்தன. பிறவுமன்ன.

இவற்றுள் அடைசினை முதல் முறையடைதலொன்றும் வழுவற்க எனக்காத்தலும் ஏனையமூன்றும் அவ்வாறுநில்லாமையின் வழுவமைதியுமா மென்க.

“கவிசெந்தாழைக் குவிபுறத்திருந்த - செவிசேர் சேவலும் பொருவலும் வெருவாவாய்வீன் காக்கையுங் கூகையுங் கூடி.” என வருவன. கோம்புகூர்மாடு, மடல்விரிதாழை என்றாற்போல வருதலின்,- “உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்” என்னுஞ் சூத்திரத்துள் அஃறிணையொடு சார்த்தின் அஃறிணை முடிபினவாமென அமைத்து அதன் பாற்படுமென்க.

௩௦௪. * இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

இது (இயற்கைப்பொருள் இத்தன்மைத்தென்னும் குறிப்பு) மரபு வழுவமைப்பு உணர்த்துகின்றது.

ப-ளா. இயற்கை பொருளை - இயற்கைப்பொருள் செயற்கைப் பொருள் என்கிற இருவகைப்பொருள்களுள் இயற்கைப்பொருளை, இற்று என - இத்தன்மைத்தென்று, கிளத்தல் - சொல்லுக. எ-று.

---

* தொல்காப்பியம், சொல், கிளவியாக்கம், சூ. ௧௯.

போ-ரை. இயற்கைப்பொருள் செயற்கைப்பொருளென இருவகைப் படும் பொருள்களுள் இயற்கைப்பொருளை இத்தன்மைத்தென்று கூறுக.

வி-பு. இயற்கை என்பது விகாரம். செயற்கை என்பது அவிகாரம்.

[வ-று.] மெய்யுள்ளது, பொய்யில்லது, நிலம்வலிது, நீர்தண்ணிது, தீவெய்து, மயிர்கரியது, பயிர்பசியது, எனவரும்.

நிலம், நீர் முதலிய பூதங்கள் மாயையின் விகாரமென்பதைநோக்கின் செயற்கைப்பொருளாயினும், பூதத்தின் விகாரங்களைநோக்கின் இயற்கைப் பொருளாமென்க. இயற்கைப்பொருளையிற்றுஎன்னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துக் கூறுதலின் இது வழுவமைதியாயிற்று. இது கருதாது இவ்வாறுகூறுதல் மரபு என்பாருமுளர்.

அது நிற்க,— வளியுளருந் தன்மைத்து, உயிருணருந் தன்மைத்து என்றோது, வளியுளரும், உயிருணரும் (எ-ம்) உதாரணங் காட்டுவர். வளி யின்கண்ணும் உயிரின்கண்ணும் உளர்தலும், உணர்தலுமாகிய செயல் நிகழ்ந்த துணையானே அவற்றிற்கு அவை செயற்கையாமன்றி இயற்கை யாகாமையானும், அவ்வாறு கூறுதற்கோர் விதியின்மையானும், அவை பொருந்தாவென்க.

௩௦௫. காரண முதலா வாக்கம் பெற்றுங் - காரண மின்றி யாக்கம் பெற்று - மாக்க மின்றிக் காரண மடுத்து - மிருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.

இது (காரணச்சொற்களை ஆக்கச்சொல் முறையே பெறும் செயும் பொருள்) மரபுவழுவற்க எனக் காத்தலும், அம் மரபு வழுவமைப்பும் உணர்த்துகின்றது.

ப-ரை. செயும் பொருள் - செயற்கைப்பொருள், காரணம்—காரணச்சொல், முதலா - முதல்வர, ஆக்கம் - ஆக்கச்சொல், பெற்றும் - பின்வரப்பெற்றும், காரணம் -காரணச்சொல், இன்றி-தொக்குநிற்க, ஆக்கம் - ஆக்கச்சொல், பெற்றும் - வரப்பெற்றும், ஆக்கம் - ஆக்கச்சொல், இன்றி - தொக்குநிற்க, காரணம் - காரணச்சொல், அடுத்தும் - வரப்பெற்றும், இருமை உம் - அவ்விரண்டும், இன்றி உம் - தொக்குநிற்கவும், இயலும் - நடக்கும். எ-று.

பொ-ரை. முதல்துணை நிமித்தங்களாற்செய்யும்பொருளாகிய செயற் கைப்பொருளைக் கூறுங்கால் காரணச்சொல் முன்வர ஆக்கச்சொல் பின் வரப்பெற்றும், காரணச்சொல் தொக்குநிற்ப ஆக்கச்சொல்வரப்பெற்றும், ஆக்கச்சொல் தொக்குநிற்பக் காரணச்சொல்வரப்பெற்றும், இவ்விருவகைச் சொல்லும் தொக்குநிற்கவும் நடக்கும். எ-று.

வி-பு. காரணச்சொல்லும் ஆக்கச்சொல்லும் யாண்டுவரினும் அந் நிலைக்களத்துத்தந்து பொருளுணாக்கப் படுதலின் காரணமுதலா என்முர்.

[வ-று.] கடுவுங் கைபிழி எண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல வாயின - எருப்பெய்திளங்களைகட்டு நீர்கால்யாத் தமையான் பயிர்நல்ல வாயின (எ-ம்) ; மயிர்நல்லவாயின, பயிர்நல்லவாயின(எ-ம்); கடுவுங்கைபி ழியெண்ணெயும் பெற்றமையான்மயிர் நல்ல,எருப்பெய்திளங்களை கட்டு நீர்கால்யாத்தமையாற் பயிர் நல்ல (எ-ம்) ; மயிர் நல்ல, பயிர் நல்ல(எ-ம்) வரும்.

" பல்லார்தோ டோய்ந்து வருதலாற் பாய்புன
னல்வய லூரநின் றார்புலால்—புல்லெருக்க (தார்)
மாசின் மணிப்பூணெம் மைந்தன் மலைந்தமையாற்
காதற்றாய் நாறு மெமக்கு."— எனப்பரத்தையிற் பிரிந்த தலைவனைப் புலந்தும், அவன்செய்த தீங்கினைத் தன் இனியமுகத்தால் தணிக்கும் புதல் வனை யுவந்தும்,ஒன்று ஒன்றாகாதனவற்றை ஆயினபோற்கூறும்வழி ஆக் கச்சொல் தொகவருதலும் அதன்பாற் படுத்துக. பிறவுமன்ன. காரண முதலா ஆக்கம் பெறுதல் ஒன்றும் வழுவற்க எனக்காத்தலும், ஏனைய மூன்றும் வழுவமைதியும் ஆமென்க.

சoகூ. தம்பா லில்ல தில்லெனி னினனா - யுள்ளது கூறி மாற்றியு முள்ளது - சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

இது (வினாவிடைச் சொற்சுருக்க) மரபு வழுவற்கவெனக் காத்தல் உணர்த்துகின்றது.

ப-ரை. தம்பால் - தம்மிடத்து, இல்லது - இல்லாதபொருளை, இல் எனின் - இல்லையெனின், இனன் ஆய் - வினவப்பட்டதற்கு இனமாய், உள்ளது - இருக்கின்றபொருளை, கூறி-சொல்லி, மாற்றி உம் - அச்சொல்லைக்கொண்டு அதனை இல்லையென்றும், உள்ளது-, இருக்கிறபொருளாயின்,சுட்டி உம் - இவ்வளவுண்டென்றும்,உரைப் பர் - சொல்லுவர், சொல் சுருங்குதற்கு உ வினவும் விடையுமாகிய சொற்கள்சுருங்குதற்பொருட்டு. எ-று.

போ-ரை. ஒருவன் வினவியது தம்பக்கல் இல்லையாயின் அதனை யில்லையென்னல் உறின், அவன் வினவியதற்கு இனமாய், தம்பக்கல் உள் ளதனைக்கூறி, அக்கூற்றானே அதனை இல்லையென்றும், உள்ளதாயின் இத் துணையுண்டென்றுங் கூறுவர் புலவர், வினவுதலுஞ்செப்புதலுமாகிய சொற் கள் சுருங்குதற்பொருட்டு. எ-று.

வி-பு. குன்றக்கூறல் முதலிய குற்றங்கள் நீக்கிச் சுருங்கச்சொல்லல் முதலிய அழகோடுகூறுதல் வழக்கிற்கும் வேண்டுமென்பார், சொற்சுருங் குதற்கே என்றார்.

[வ-று.] பயறுண்டோ வணிகீரோ என்றார்க்கு அஃதின்றென்பார் உழுந்துண்டு, உழுந்துந்துவரையுமுண்டு என்க. இவ்வினமொழிகள் பய றில்லை என்னும் இறைபயக்கு நிற்றலின் இனமுள்ளதுகூறி மாற்றியும் என்றார். அஃதுண்டென்பார் இத்துணையுண்டு என்க.

நூறு விற்கும் பட்டாடையுண்டோ? என்றார்க்கு அஃதின்றென்பார் ஐம்பதுவிற்குங் கோசிகம் உண்டு என்க. அஃதுண்டென்பார் ஐம்பது விற்பதுண்டு என்க. பிறவுமன்ன.

இவ்வாறன்றி உழுந்தல்லதில்லை இத்துணைப்பயறுள எனு உதார ணங் காட்டுவாருமுளர். அவை சொற்சுருங்குதற்கே என்பதனோடு மாறு பட்டு மிகைபடக்கூறல் என்னுங் குற்றமாமென்க.

சஎ. ஈதா கொடுவெனு மூன்று முறையே-யிழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

இது சில இரப்புச்சொற்களின் மரபு உணர்த்துகின்றது.

ப-ரை. ஈதா கொடு எனும்-ஈ தா கொடு என்கிற, மூன்று உம்-மூன்றுசொற்களும், முறையே - முறையாக, இழிந்தோன் - இழிந்த வனும், ஒப்போன் - ஒப்பவனும், மிக்கோன் - உயர்ந்தவனும், இர ப்பு உரை - இரத்தற்கு வருகிற சொற்களாகும். எ-று.

பொ-ரை. ஈ என்பது இழிந்தோன் உயர்ந்தோன்மாட்டு இரக்குஞ் சொல்லாம்; தா என்பது ஒப்போன் ஒப்போன் மாட்டு இரக்குஞ் சொல் லாம், கொடு என்பது உயர்ந்தோன் இழிந்தோன்மாட்டு இரக்குஞ்சொல் லாம். எ-று.

[வ-று.] தந்தையீ, தோழதா, மைந்தகொடு என வரும். பிறவழி வரும் ஒப்பு உயர்வு தாழ்வினும் இவ்வாறே ஒட்டுக.

வி-பு. வழங்கு, வீசு, நல்கு என்றற் றொடக்கத்து இரப்புரைகள் போலாது ஈவோர்க்கும் ஏற்போர்க்கும் ஒப்பு உயர்வு தாழ்வுகளை ஈ, தா, கொடு என்ற துணையானே உணர்த்தி நிற்றலின் இவற்றை இனைத்தென் றறிபொருளாகக் கூறினார்.

அருள், அளி என்னும் இரப்புரைகள் ஈவோர்க்கு உயர்வும், ஏற் போர்க்கு இழிவும் உணர்த்தினவாலோவெனின், அவை கருணைக்குரிய சொற்குறிப்பினான் இரத்தற்பொருளை யுணர்த்தி நின்றனவன்றி இரப்புரை யல்லவென்க. இம்மரபு மயங்கிவருவன உளவேல் புதியனபுகுதலும் வழு வல என்றதனாற்படுத்துக.

சoஅ. * முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

இது குறிப்பினால் பொருளைவிளக்கும் சொல் மரபு வழுவமைப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. முன்னத்தின் - குறிப்பினால், உணரும் - பொருளறியப் படுகிற, கிளவி உம் - சொற்களும், உள - சிலவுளவாம். எ-று.

பொ-ரை. வெளிப்படையானன்றிக் குறிப்பால் பொருள் உணரப் படுஞ் சொற்களும் சிலவுளவாம். எ-று.

வி-பு. அவையாவன,— ஒன்மொழி பொதுச்சொல் முதல்சொல்லு வான் குறிப்பீருக விதந்தன முதலியவாம். செவியெல்லாஞ் சாலச் செம்பொ னணியுஞ் செல்வத்தினர் - என்பார் செஞ்செவியர் என்றும், குற்றமற்றமரபினர் என்பார் வெள்ளொக்கலர் என்றும், பெருவாழ்க்கை யினர் என்பார் குழைகொண்டு கோழியெறியு மவர்வாழ்க்கை என்றும் கூறும் சொல்லுவான் குறிப்பொன்றுமே உதாரணங் காட்டுவாருமுளர். அங்ஙனமாயின் ஏனையகுறிப்பிற் பொருள்தரு மொழி யல்லவாம் என்க. கேட்போர் இடர்ப்படாது வெளிப்படையிற் கூறுதல் மரபாதலின் இது வழுவமைதியாயிற்று.

சoகூ. கேட்குந போலவுங் கிளக்குந போலவு-மியங்குந போலவு மியற்றுந போலவு-மஃறிணை மருங்கினு மறையப் படுமே.

இது அஃறிணைப்பொருளை உயர்திணைப்பொருள்போல் வைத்துக் கூறும் மரபு வழுவமைப்பு உணர்த்துகின்றது.

ப-ரை. கேட்குந போல உம் - கேளாதவைகளைக் கேட்பவை கள்போலவும், கிளக்குந போல உம் - சொல்லாவவைகளைச் சொல் பவைகள்போலவும், இயங்குந போல உம் - நடவாதவைகளை நடப் பவைகள்போலவும், இயற்றுந போல உம் - செய்யாதவைகளைச் செய்பவைகள்போலவும், அஃறிணை மருங்கின் உம் - அஃறிணை யிடத்தும், அறைய படும் - சொல்லப்படும். எ-று.

பொ-ரை. கேளாதனவற்றைக் கேட்குவனபோலவும், சொல்லாதன வற்றைச் சொல்லுவன போலவும், நடவாதனவற்றை நடப்பனபோலவும், இத்தொழில்களல்லன பிறசெய்யாதனவற்றைச் செய்வன போலவும், அஃறிணையிடத்துஞ் சொல்லப்படும். எ-று.

வி-பு. முன்னையபோல விதவாது இறுதிக்கண் இயற்றுந எனப் பொதுப்படக் கூறினமையின் இத்தொழில் அல்லன பிற என்னுஞ்சொல் எஞ்சி நின்றன.

---

* தொல்காப்பியம், சொல், எச்சவியல், சூ. கூ.

[வ-று.] †"நன்னீராவாழி அனிச்சமே"—"இரவெலா நின்றயால் ஈர்ங்கதிர்த்திங்காள்" (நின்றாய்) (எ-ம்) ;—††"பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்."—‡"மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலுந்-தேய்தலு முடைமையைத் திங்கள் செப்புமால்" (செப்பும்) (எ-ம்) ; இவ்வழி இவ்வூர்க்குப்போம், — இவ்வரசன் ஆணை எங்குஞ் செல்லும் (எ-ம்) ; [a]†"தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்-றன்னெஞ்சே தன்னைச் சுடும்." (நெஞ்சே)

‡‡'வண்சிறைப் பவளச் செவ்வாய்ப் பெடையன மடமை கூர்ந்து
தண்கய நீருட்கண்ட தன்னிழல் பிறிதென் றெண்ணிக்
கண்டனன் கள்வமற்றுன் காதலி தன்னை நீக்கிப்
பண்டைய மல்லம் வேண்டா படுக்கவென் றூடிற்றன்றே.' (ஊடிற்று)

"கருவிரற் செம்முக வெண்பற் சூன்மந்தி
பருவிரலாற் பைஞ்சுனைநீர் தூவிப்—பெருவரைமேற்
றேன்றேவர்க் கீயு மலைநாட வாரலோ (ஈயும்)
வான்றேவர் கொட்கும் வழி." (எ-ம்) முறையே காண்க.

அஃறிணை மருங்கினும் என்ற உம்மையான் உயர்திணைமருங்கினும் இவ்வாறு சொல்லப்படுதல் புலம்பல் முதலியவற்றுட் காண்க.

சசo. உருவக வுவமையிற் றிணைசினை முதல்கள் - பிறழ்தலும் பிறவும் பேணினர் கோளலே.

இது தம்முள் மயங்குவன இவை என்று உணர்த்துகின்றது

ப-ரை. உருவக உவமையில் - உருவகத்திலும் உவமையிலும், திணை - இருதிணைகளும், சினை - சினைகளும், முதல்கள் - முதல்களும், பிறழ்தல் உம் - தம்முள்ளே மயங்குதலும், பிற உம் - இவ்வியலுட் சொல்லாதொழிந்தவையும், பேணினர் கோளல் - பாதுகாத்துக்கொள்க. எ-று.

போ-ரை. உருவகத்தின்கண்ணும் உவமைக்கண்ணும் இருதிணைதம்முள் மயங்குதலுஞ் சினைமுதல் தம்முள் மயங்குதலும் இவ்வியலுட் சொல்லாதொழிந்தனவும் போற்றிக்கொள்க. எ-று.

[வ-று.]

"மன்னர் மடங்கல் மறையவர்சொன் மாலை
யன்ன நடையினார்க் காரமுதந்—துன்னும் (ஆரமுதம்)

---

† திருக்குறள், செ. கககக. †† திருக்குறள், செ. எ0கூ.
[a]† ஷை செ. உகூந. ‡ சிந்தாமணி, முத்திலம்பகம், செ. நநச.
‡‡ சிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், செ. கூஎ.

பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப்பூம் பைந்தா
ரொரிசினவேற் றானையெங் கோ."— என்பன உயர்திணை அஃறிணை யோடு மயங்கின.

‡ "தாழிருந் தடக்கையு மருப்புந் தம்பியாத்
தோழர்தன் றன்களாச் சொரியு மும்மதம் (தாள்கள்)
ஆழ்கடற் சுற்றமா வழன்று சீவக (சுற்றம்)
வேழியர் போதக மினத்தொ டேற்றதே."(போதகம்) — என்பன உயர்திணை அஃறிணையோடும் முதல்சினையோடும் மயங்கின.

முகமதி என்பது சினைமுதலோடு மயங்கிற்று.

‡‡ "அகழ்கிடங் கந்துகி லார்ந்த பாம்புரி (கிடங்கு)
புகழ்தரு மேகலை ஞாயில் பூண்முலை
திகழ்மணிக் கோபுரந் திங்கள் வாண்முகஞ்
சிகழிகை நெடுங்கொடி செல்விக் கென்பவே." (செல்விக்கு) — இஃது அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.—இவ்வு உருவகம்.

"கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாண்
மங்கலங் கூற மலிவெய்திக்—கங்கையாள்
பூம்புன லாகந் தழீஇனான் போரடுதோள்
வேம்பார் தெரியலெம் வேந்து."—

† "இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமேன்னு நல்லா ணகும்." (இலம்), (நகும்)—

[a]‡ "வருந்தி யின்றாண் மறந்தொழிந்தாள் வளர்த்தாள்சொற் கேட்டில்கடிந்தாண்-முருந்தின் காறுங் கூழையை முனிவார்நின்னை யெனமுனிவார்-பொருந்திற் றென்று விதுவென்னாய் பொன்று மளித்தி யுயி ரொன்னாய்-திருந்து சோலைக்கருங்குயிலே சிலம்ப விருந்து கூவுதியால்."—என் றற்றொடக்கத்தனவு மன்ன.

[b]‡ "மல்லன் மலையனைய மாதவனை வைதுரைக்கும்" என்பது உயர் திணையோடு அஃறிணை மயங்கிற்று.

[c]‡ "கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே" என்பது அஃறிணை யோடு உயர்திணை மயங்கிற்று.

---

‡ சிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், சே. உஅ௬.
‡‡ ௸ கேமசரியாரிலம்பகம், சே. ௯௯.
† திருக்குறள், சே. ௧0௪0.
[a]‡ சிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம். சே. ௧0௫.
[b]‡ ௸ முத்தியிலம்பகம், சே. ௧௧௧.
[c]‡ ௸ நாமகளிலம்பகம், சே. உ௪.

கயற்கண் என்பது சினைமுதலோடு மயங்கிற்று. தளிர்மேனி என்பது முதல்சினையோடு மயங்கிற்று. பிறவு மன்ன.

‡ "தருமன் றண்ணளி யாற்றன தீகையால் (அளி), (ஈகை)
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே (உயிர்மாற்றல்)
அருமை யாலழ கிற்கணை யைந்துடைத் (அழகு)
திரும கன்றிரு மாநில மன்னனே."—

"இந்திர குமரன்போல விறைமக னிருந்து காண்க." — என்றற்றொடக்கத்தனவாய் மயங்காதுவருதல் மரபாமாதலின் இது வழுவமைதியாயிற்று.

இனிப் பிறவும் என்றதனால் உருவக உவமைக்கண் இவன்பாரதி, இவள்பாரதியனையான் எனப் பால்மயங்கக் கூறுதலும்; கயலினது பிறழ்ச்சிபோலுங் கண்ணினது பிறழ்ச்சியென்பார் கயற்கண் என்று சொல்லின் முடிவின் அப்பொருள் முடியாது எஞ்சக் கூறுதலும், பிறவுந்துள்ளும் இவ்வாறு எஞ்சக்கூறுதலும், செங்கோல், கொடுங்கோல், வீரக்கழல், சினவேல் என ஒருபொருட் டன்மையை மற்றொரு பொருள்மேல்வைத்துக் கூறுதலும், ஈந்தான் என்பார் அருளினான் என ஒருவினையை மற்றொருவினையாற் கூறுதலும், "அடிவண்ண மல்லா லலங்குதார்க் கோதை முடிவண்ணங் கண்டறியா வேந்து." — "துஞ்சாக்கண்ண வடபுலத்தரசே.":—என உயர்திணை அஃறிணையாகக் கூறுதலும் இவைபோல்வன பிறவும் வழுவமைதியாகக் கொள்க.

சகக. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண் - டாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட் - டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.

இது நால்வகைச் சொற்களானும் செய்யும் செய்யுள் கொள்ளும் பொருள்கோளின் பெயரும் தொகையும் உணர்த்துகின்றது.

ப-ரை. யாற்றுநீர் - யாற்றுநீர்ப் பொருள்கோளும், மொழிமாற்று - மொழிமாற்றுப் பொருள்கோளும், நிரல் நிறை - நிரனிறைப் பொருள்கோளும், தாப்பிசை - தாப்பிசைப் பொருள்கோளும், அளைமறி பாப்பு - அளைமறி பாப்புப் பொருள்கோளும், கொண்டு கூட்டு - கொண்டுகூட்டுப் பொருள்கோளும், அடிமறி மாற்று - அடிமறிமாற்றுப் பொருள்கோளும்,என-என்று, பொருள்கோள் - பொருள்கோள், எட்டு - எட்டாம். எ-று.

பொ-ரை. யாற்றுநீர்ப் பொருள்கோளும், மொழிமாற்றுப் பொருள்கோளும், நிரனிறைப் பொருள்கோளும், விற்பூட்டுப் பொருள்கோளும்,

‡ சிந்தாமணி, நாமகளிலம்பகம், செ. கஙஙு.

தாப்பிசைப் பொருள்கோளும், அளைமறிபாப்புப் பொருள்கோளும், கொண்டுகூட்டுப் பொருள்கோளும், அடிமறிமாற்றுப் பொருள்கோளும் எனப் பொருள்கோள் ஏட்டாம். எ-று.

வி-பு. இவற்றுள் தாப்பிசை என்பதற்கு ஊசல்போல் இடைநின்று இருமருங்குஞ் செல்லுஞ்சொல் என்பது பொருள். தாம்பு என்பது ஊசல். அஃது அளைமறிபாம்பு என்பது பாப்பு என நின்றாற்போல வலிந்து நின்றது. ஏனையவும் காரணக்குறியாதல் காண்க.

சகஉ. மற்றைய நோக்கா தடிதோறும் வான்பொரு - ளற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே.

இது நிறுத்த முறையானே யாற்றுநீர்ப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. மற்றைய நோக்காது - மொழிமாற்று முதலியவைபோலப் பிறழ்ந்துசொல்ல வேண்டாமல், அடிதொறும் - அடிதோறும், அற்று அற்று ஒழுகும் அஃது - யாற்றுநீ ரொழுக்குப்போல நெறிப்பட்டு அற்றற் றொழுகுவதாகிய, வான் பொருள் - சிறந்த பொருள்கோள், யாற்று புனல் - யாற்றுநீர்ப் பொருள் கோளாம், எ-று.

பொ-ரை. மொழிமாற்று முதலியபோல் பிறழ்ந்து செலவேண்டாது யாற்றுப்புன லொழுக்குப்போல் நெறிப்பட்டு அடிதோறும் வான்பொருள் அற்றற்றொழுகும் அப்பொருள்கோள் யாற்றுநீர்ப் பொருள்கோளாம்.

வி-பு. இடையறு தொடரும் யாற்றுநீ ரொழுக்கு உவமையாதலின், அடிதொறும் வான்பொரு ளற்றற் றொழுகுதலாவது மொழிமாற்று முதலியபோல் பிறழ்ந்து செல்லுஞ் செலவற்று ஆங்காங்கு அமைந்து ஒழுகுதலாமன்றி அடிதோறும் பொருள்முடித லன்றாம் என்க.

அங்ஙனமாயின் ஆங்காங்கு எனப் பொதுப்படக்கூறாது அடிதோறும் என்றது என்னையெனின் அவ்வாறே கூறுவார் ஓர் இலக்கியைமேல் வைத்துக்கூறினரென்க.

[வ-று.]

‡ "சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போன்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே." —என வரும்.

இப்பாட்டினுள் சொல் என்னும் எழுவாயினை முதலெடுத்து அதன் தொழிலாகிய வினையெச்சங்கள் ஒன்றனை யொன்று கொள்ள இடையே

‡ சிந்தாமணி, நாமகளிலம்பகம், செ. உச.

முறைநிறீஇ காய்ந்த என்னும் பயனிலையை இறுதிக்கண் தந்து முடித்த மையின் இப்பொருளொழுகுதல் யாற்றுநீரொழுக்குப் போறல் காண்க.

இதற்கு இவ்வாறன்றி ஏனையடிகளைநோக்காது அடிதோறும் பொருள் முடித்து வருவது யாற்றுநீர்ப் பொருள்கோள் எனப் பொருளுரைத்து,

‡ "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்
கொலைப்பாலுங் குற்றமே யாம்."-என உதாரணங்காட்டுவாருமுளர்.

யாற்றுநீரொழுக்குக்குஇடையறுதல்இன்மையானும்,அந்நேல்அதனை ஒழுக்கென்றல் கூடாமையானும், அஃது உவமையன்றாம். ஒவ்வோரடி ஒழுகுதற்கு உவமையாயிற்றெனின் பாட்டுமுழுவதும் இடையறாது ஒழு கிப் பயின்றுவரும் பொருள்கோள் மொழிமாற்று முதலியவற்றுள் இடங் காண்டலின் துன்றக்கூறலாம்,இங்ஙனமாதலின் அது பொருளன்றாம். அவர் காட்டிய உதாரணம் அடிமறிமாற்றின் பாற்படுமென்க. அப்பொருள் கோளின் விகற்பம் அச்சூத்திரத்துள் தோன்றக் கூறுதும்.

இதனை வான்பொருள் என்றார்,இது நெறிப்பட்டு வருதலானும், பயி ன்று வருதலானும், மொழிமாற்று முதலியவற்த செய்யுட்கண்ணும் விராய் வருதலானுமென்க.

சகங. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை - மாற்றியோ ரடியுள் வழங்கல்மொழி மாற்றே.

இது மொழிமாற்றுப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. ஏற்ற பொருளுக்கு - ஏற்ற இரண்டு பயனிலைகளுக்கு, இயையும் மொழிகளை - பொருந்து மொழிகளை, மாற்றி - ஏலாத பயனிலைகளுக்குத் தனித்தனிக் கூட்டி, ஓரடியுள் - ஓரடியுள்ளே, வழங்கல்-சொல்லுவது, மொழி மாற்று-மொழி மாற்றுப் பொருள் கோளாம். எ-று.

பொ-ரை. இரண்டுமொழியும் அவைகொள்ளும் இரண்டு பயனிலையு மாய் வரக்கூறுவார் அந்நான்கனுள் ஏற்ற பயனிலைகட்கு இயையுமொழிக ளைத் தனித்தனிக் கூட்டிக் கூறாது ஏலாத பயனிலைகட்கு இயையாத மொழிகளைத் தனித்தனிக்கூட்டி ஓரடியுள்ளே கூறும் பொருள்கோள் மொழிமாற்றுப் பொருள்கோளாம். எ-று.

வி-பு. ஒன்றற்கொன்று பொருந்தியுதென்பார் ஏற்ற பொருளுக் கியையுமொழி என்றார்.மொழிமாற்று என்பது தனக்குள்ளதைக்கொடுத்

‡ நான்மணிக்கடிகை,செ. உகு.

துப் பிறர்க்குள்ளதை வாங்கும் பண்டமாற்றுப்போறலின், இரண்டுமொழி யும் அவைகொள்ளும் இரண்டு பயனிலையும் வந்தல்லது மொழிமாற்றுதல் கூடாமையின் அத்தொகை தந்து கூறினும்.

[வ-று.] "சுரை யாழ வம்மி மிதப்ப வரையனைய - யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப - கானக நாடன் சுனை." என வரும். இதனுள் ஆழ என்னும் பயனிலைக்குஇயைந்த அம்மி என்னும் மொழியினை மிதப்ப என்னும் பயனிலைக்கும்,மிதப்ப என்னும்பயனிலைக்கு இயைந்த சுரை என்னும் மொழியினை ஆழ என்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறும்; நீந்து என்னும் பயனிலைக்கு இயைந்த முயல் என்னும் மொழியினை நிலை என்னும் பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக்கு இயைந்த யானை என்னும் மொழியினை நீந்து என்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறுங் காண்க.

"ஆலத்துமேல குவளை குளத்துள - வாலி னெடிய குரங்கு." என ஈரடி முதலியவற்றுட் கூறின், சேய்மைக்கண்ணவாய் மொழிமாற்றென்பது தோன்றாமையின், அஃது இலக்கணம் அன்றென விலக்கி அண்மைக் கண் கூறுவதே மொழிமாற்று என்பார் ஓரடியுள் என்றார். ஆலத்து மேல என்பது ஓரடியுள் வாராமையின் கொண்டுகூட்டு என்பாருமுளர். அது மொழிமாற்றிற்கும் கொண்டுகூட்டிற்கும் வேற்றுமையுணரார் கூற்று மென்க. அவர்இச்சூத்திரத்திற்குமொழிமாற்றொடு பொருந்தாது கொண்டு கூட்டொடு பொருந்தப் பொருள்கூறி சுரையாழ என்னும் உதாரணங் காட்டுவர்.

சகசச. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்-வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினு - நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே.

இது நிரல் நிறைப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. பெயர் உம் வினை உம் ஆம் சொல்லை உம் - பெயரும் வினையுமாகிய சொற்களையும், பொருளை உம் - அவைகொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும்; வேறு - வேறாக, நிரல் நிறீஇ - வரிசையாகநிறுத்தி, முறையின் உம் - முறையாகவேனும், எதிரின் உம் - எதிராகவேனும், நேரும் - இதற்கிது பயனிலையென்பது படக்கூறும், பொருள்கோள் - பொருள்கோள், நெறி - நெறிப் பட்ட, நிரல் நிறை - நிரனிறைப் பொருள் கோளாம். எ-று.

பொ-ரை. பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவைகொள்ளும் பெயரும் வினையுமாகிய, பயனிலைகளையும் வேறு வேறு நிரையாகநிறுத்தி

முறையாயேனும் எதிராயேனும் இதற்கிது பயனிலையென்பதுபடக்கூறும் பொருள்கோள் நெறிப்பட்ட நிரனிறைப் பொருள்கோளாம். எ-று.

[வ-று.]

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்தமுகம் வாய்முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
கொடிவினளே வஞ்சி மகள்." — இது பெயர்ச்சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய்நின்ற முறைநிரனிறை.

"காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீயான்
மண்ணமிர்த மங்கையர்தோள் மாற்றார் யேற்றார்க்கு
நண்ணிய வாய பொருள்."—இது வினைப்பயனிலைகளும் பெயர்ச் சொற்களுமாய் நின்ற முறைநிரனிறை.

"களிறுங்கந்தும்போல - நளிகடற்கூம்புங் கலனுந்தோன்றுந்-தோன் றன்மறந்தோர் துறைகெழுநாட்டே."—இது பெயர்ச்சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய்நின்ற எதிர்நிரனிறை.

"ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமா
னின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."—இது பெயர்ச்சொற்களும் வினைப்பய னிலைகளுமாய்நின்ற எதிர்நிரனிறை. பிறவுமன்ன.

வி-பு. மேலைச் சூத்திரத்துள் மொழி என்றும், இச்சூத்திரத்துள் சொல் என்றும் கூறிய நிறுத்தசொல்லும், அதுகொள்ளும் பயனிலையெனி னும் பொருளெனினும் ஒக்கும் குறித்துவரு கிளவியுமன்றி அவ்வழிவேற் றுமையுருபுகளும், பிறசொற்களும் உடன்வருமாலோவெனின், சாத்தன் வந்தான் என்றால் அவன் ஆடை அணி முதலியனவும் உடன்வருதல் கூறா தேயமைதல்போலு மென்க.

"சொற்றொறு மிற்றிதன் பெற்றியென்பதனோனே" —

"காமவிதி கண்முக மென்மருங்குற் செய்யவாய்
தோமி றுகடினி சொல்லமிர்தங்—தேமலர்க்
காந்தள் குரும்பை கனக மடவாள்கை
யேந்திளங் கொங்கை யெழில்."—எனவரும் எழுத்துநிரனிறையும்,—

"வெண்பா முதலாக வேதிய ராதியா
பண்பால் வகுத்த வருணமா—மொண்பா

வினங்கட்கு மிவ்வாறே யென்றுரைப்பர் தொன்னூன்
மனந்திட்பக் கற்றோர் மகிழ்ந்து."-எனத்தோதுந்துக்கூறும் நிரனிறை முதலியவுங்கொள்க.

"அம்ம் பவள்வரி நெடுங்கண்ணாய் வஞ்சிக்
கொம்ம் பவள்கொடி மருங்குல் கோங்கி
னரும்ம் பவண்முலை யொக்குமே யொக்குங்
கரும்ம் பவள்வாயிற் சொல்."—என்னும் யாற்றுநீர்ப் பொருள்கோளை மயக்கநிரனிறை யென்பாருமுளர்.

இது சொல்லையும் பொருளையும் தனித்தனி நிறீஇக்கூறியதன்றி நிரனிறையாக நிறீஇக்கூறுமையின் நிரனிறையன்றென்பார்நெறியே என்றூர்.

சஎரு. எழுவா யிறுதி நிலைமொழி தம்முட் - பொருணோக் குடையது பூட்டுவிற் லாகும்.

இது பூட்டுவிற் பொருள்கோள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. எழுவாய் - செய்யுள்முதலினும், இறுதி - இறுதியிலும், நிலை-இருக்கின்ற, மொழி - மொழிகள், தம்முள்-தமக்குள், பொருள் நோக்கு உடையது - பொருளை நோக்குதலுடைய பொருள்கோள், பூட்டு வில் ஆகும் - பூட்டுவிற் பொருள்கோளாம், எ-று.

பொ-ரை. செய்யுட்கண் முதலினும் ஈற்றினும் நிற்கும் மொழிகள் தம்முள் பொருள்நோக்கமுடைய பொருள்கோள் பூட்டுவிற் பொருள் கோளாம், எ-று.

வி-பு. செய்யுட்கெல்லாம் முதலினும் ஈற்றினும் என்னுமையின் அதனகத்து எங்ஙனம் இவ்வாறுவரினுமாமென்க.

[வ-று.]

"திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத
ரிறந்து படிற்பெரிதா மேத—முறந்தையர்கோன்
றண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு."—எனவரும். பிறவுமன்ன.

சஎசு. இடைநிலை மொழியே யேனையி ரிடத்து - நடந்து பொருளை நண்ணுத றப்பிசை.

இது தாப்பிசைப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. இடை நிலை மொழி-நடுவிலுள்ளமொழி, ஏனை ஈரிடத்தும் - ஒழிந்தமுதலினும் ஈற்றிலும், நடந்து - சென்று, பொருளை-

பொருளை, நண்ணுதல் - கூடும்பொருள்கோள், தாப்பிசை - தாப்பிசைப்பொருள்கோளாம். எ-று.

போ-ரை. இடைநிற்கும் மொழியொழிந்த முதலினும் ஈற்றினுஞ் சென்று பொருளைக்கூடும் பொருள்கோள் தாப்பிசைப் பொருள்கோளாம்.

[வ-று.] † "உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண - வண்ணாத்தல் செய்யா தளறு." எனவரும்.

சகஎ. செய்யு ளிறுதி மொழியிடை முதலினு - மெய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.

இது அளைமறி பாப்புப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. செய்யுள் - செய்யுளில், இறுதி மொழி - இறுதியிலுள்ள சொல், இடை முதலின் உம் - இடையிலும் முதலிலும், எய்திய பொருள் கோள் - சென்றபொருள்கோள், அளைமறி பாப்பு - அளைமறிபாப்புப் பொருள்கோளாம். எ-று.

போ-ரை. செய்யுட்கண் ஈற்றினின்ற சொல் இடையினும் முதலினும் சென்றபொருள்கோள் அளைமறி பாப்புப் பொருள்கோளாம். எ-று.

[வ-று.]

"தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டேன்றித் தளர்வார் தாமுஞ் - சூழ்ந்த வினையாக்கை சுடவிழிந்து நாற்கதியிற் சுழல்வார்தாமு - மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும் - வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே."— எனவரும். இருமருங்கினையும் இறுதியெனஅமையுமாதலின் 'வாழ்ந்தபொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே' என்னுஞ்சொற்களை அம்மருங்குவைத்துச் செய்யுளாக்கினும் இப்பொருள்கோளாம் என்க.

சகஅ. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை- யேற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே

இது கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. யாப்பு அடி - செய்யுளடிகள், பலவின் உம் - பலவற்றினும், கோப்பு உடை - கோக்கப்படுதலையுடைய, மொழிகளை - சொற்களை, ஏற்புழி - எடுத்தபொருளுக் கேற்றவிடத்து, இசைப்பது - கூட்டும்பொருள்கோள், கொண்டு கூட்டு - கொண்டுகூட்டுப்பொருள்கோளாம். எ-று.

---

† திருக்குறள், சே. உருரு.

போ-ை. செய்யுளடிபலவினும் இயல்பாகிய யாற்றுநீர்ப் பொருளுக் கேலாது கோத்துக்கிடந்த மொழிகளை யெடுத்து அப்பொருளுக்கு ஏற்ற விடத்துக்குக் கூட்டும்பொருள்கோள்கொண்டுகூட்டுப்பொருள்கோளாம்.

வி-பு. இயல்பாகிய யாற்றுநீர்ப்பொருள்கோளில் பிறழ்ந்து வருவன வற்றை மொழிமாற்று முதலியவாகப் பகுத்தமையின் அப்பொருளுக்கு ஏற்றவிடத்தென்றும்.

[வ-று.]

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்." — எனவரும். இதனுள் 'வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தலையுடையாள் மாமேனிமேல் தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட கோழிவெண்முட்டையுடைத்தன்ன பசலைதணிவாம்' எனக்கொண்டுகூட்டுக. உருவகவுவமையில் திணை வினை முதல்கள் என்பதனை முதல்வினையென முறைநிறீஇப் பொருள் கொள்வதுமது.

சகக. ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும் - யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை - மாட்சியு மாற வடியவு மடிமறி.

இது அடிமறிமாற்றுப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துகின்றது.

ப-ை. ஏற்புழி - பொருளுக்கேற்குமிடத்து, எடுத்து - எடுத்து, உடன் கூட்டு உறும்-நீங்காது கூட்டுகிற, அடிய உம்-அடியை யுடையவையும், யாப்பு ஈறு இடை முதல் - (யாதானுமோரடியை) அச்செய்யுளின் இறுதி நடு முதல்களில் யாதானுமோரிடத்து, ஆக்கின் உம் - எடுத்துக்கூட்டினும், பொருள் இசை மாட்சி உம் - பொருளோடு இசைமாட்சியும் பொருண்மாட்சியும், மாறு - வேறு படாத, அடிய உம் - அடியையுடையவையும், அடி மறி - அடிமறி மாற்றுப்பொருள்கோளாம். எ-று.

போ-ை. பொருளுக்கேற்குமிடத்து எடுத்துநீங்காதுகூட்டும் அடியினையுடையவும், யாதானும் ஓரடியை யெடுத்து அச்செய்யுட்கண் முதலிடையீறுகளின் யாதானுமோரிடத்துக் கூட்டினும் பொருளோடு ஓசை மாட்சியும் ஓசையொழியப் பொருண்மாட்சியும் வேறுபடாத அடியினையுடையவுமாகிய பொருள்கோள் அடிமறிமாற்றுப் பொருள்கோளாம். எ-று.

வி-பு. மாட்சி - நெறிப்பட்டொழுகல். ஏற்புழி யெடுத்துக்கூட்டுதல் இருவகையடிமறிமாற்றிற்கும் பொருந்துமாயினும் அவ்வடிகள் மாற்றுதற்

கமைந்து நீங்கும், இவ்வடிகள் நீங்கா என்பார்உடன் என்றும், ஓசையொழியப் பொருண்மாட்சி மாத்திரையும் மாறவடியவும் என்றார், பொருளிசை மாட்சியும் என உம்மைதந்துகூறினர்.

[வ-று.]

‡ "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்." — என்பதனுள் 'கொடுத்துத் தான் றுய்ப்பினு மீண்டுங்காலீண்டும் விடுக்கும் வினையுலந்தக்கால், இடுக்குற்றுப்பற்றினு நில்லாது செல்வம்; இஃதறியார் நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந்துடையார்'—என அடிகளை ஏற்புழியெடுத்துக்கூட்டுக.

"மாறுக் காதலர் மலைமறந் தனரே
யாறுக் கட்பனி வரலா னாவே
வேறு மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே."—என்பதனுள் யாதானும் ஓரடியை யெடுத்து யாதானும் ஓரிடத்துக்கூட்டி உச்சரித்துப்பொருளும் ஓசையும் வேறுபடாமைகாண்க.

‡‡ "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்
கொலைப்பாலுங் குற்றமே யாம்." — என்பதனுள் ஈற்றடி ஒழிந்த மூன்றடியுள் யாதானும் ஒன்றையெடுத்து யாதானும் ஓரிடத்துக் கூட்டி உச்சரித்துப் பொருளும் ஓசையும் வேறுபடாமையும், ஈற்றடியையெடுத்து யாதானும் ஓரிடத்துக்கூட்டி உச்சரித்து வேறுபட்டுப் பொருள்வேறுபடாமையுங்காண்க.

செய்யுளடி பலவினையுந்தொகுத்துக் கூறாது, மூன்றும் ஒன்றுமாகப் பிரித்த தென்னையெனின், எண்வகைப்பட்ட பொருள்கோளும் அவற்றின் விகற்பங்களுமாய பொருள்கோள்களுள் ஒன்று ஒருசெய்யுள் முழுவதூஉம் அமைந்துகிடக்கவேண்டுமென்னும் யாப்புறவின்றி,ஒன்றும் பலவும் அமைந்துகிடத்தலினென்க.அவ்வாறு அமைந்துகிடத்தல் அவ்வப்பொருள் கோட்குக் காட்டிய செய்யுட்கண்ணும் பிற செய்யுட்கண்ணும் கண்டுகொள்க.

---

‡ நாலடியார், செ. கூ.

‡‡ நான்மணிக்கடிகை, செ. உகூ.

அடிமறித்தலன்றி மாற்றுதல் ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடிய வும் என்றதற்கின்றும்; அங்ஙனமாக அதனையும் அடிமறிமாற்றென்றதெ ன்னையெனின், மறித்தற்குரிய கொண்டுகூட்டோடும், மறித்தற்கும் மாற் றுதற்கும் உரிய அடிமறிமாற்றோடும் சார். அதனை முதற்கண் கூறி அடி யாக மறித்தலுடைமையின், அடிமறிமாற்றின்பாற்படுத்து, சில உறுப்புக் குறைந்தாரையும் மக்களென்றாற்போல, அதற்கும் அடிமறிமாற்றெனப் பெயர்தந்து கூறினாரென்க.

செய்யுட்குரிய பொருள்கோளை ஈண்டுக்கூறிய தென்னையெனின், செய்யுட்கு தொடர் என்னுங் காரணக்குறிபோந்தது மொழிதொடர்ந்த தாலன்றே, அங்ஙனமாதலின் இதுவுந் தொடர்மொழியின் இலக்கணமே யாமென்க.

பொதுவியல், சூ. கூஅ.

முற்றிற்று.

நான்காவது

இ டை யி ய ல்.

சஉ0. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுக-டத்தம் பொருள
வினைந் நிறை யசைநிலை - குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்-
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத் - தொன்றும் பலவும்வந்
தொன்றுவ திடைச்சொல்.

இது இடையுரியடுத்து நான்குமாமென நிறுத்தமுறையானே இடைச்சொல்லிலக்கணம் இவ்வியலான் உணர்த்துவான் தொடங்கி அவை இந்நிலைய இவ்வியல்பினவென அவற்றின் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. வேற்றுமை (உருபுகள்) - ஐ முதலிய வேற்றுமையுருபுகளும், வினை (உருபுகள்) - விகுதிமுதலிய வினையுருபுகளும், சாரியை (உருபுகள்) - அன் ஆன் முதலிய சாரியையுருபுகளும், ஒப்பு உருபுகள் - போல புரைய முதலிய உவமையுருபுகளும், தம் தம் பொருள - தத்தமக்குரிய பொருளை யுணர்த்திவருபவையும், இசை நிறை - செய்யுளிசை நிறைத்துவருபவையும், அசை நிலை-அசைத்தலே பொருளாக நிற்பவையும், குறிப்பு - இவைபோலாது குறிப்பினால் வருபவையும், என் - என்கிற, எண் பகுதியின் - எட்டுவகையினையுடையனவாய், தனித்து இயல் இன்றி-தனித்துநடத்தல்லாமல், பெயரின் உம் - பெயரினுள்ளும், வினையின் உம் - வினையினுள்ளும், பின் முன் - அவற்றின் பின்னும் முன்னுமாகிய, ஓரிடத்து - ஆறனு ளோரிடத்து, ஒன்று உம் - ஒன்றாயினும், பல உம்-பலவாயினும் - வந்து - வந்து, ஒன்றுவது - ஒன்றுபட்டு நடக்குந் தன்மையது, இடைச்சொல் - இடைச்சொல்லாகும். எ-று.

போ-ரை. எழுவாயுருபுமுதலிய எட்டுவேற்றுமையுருபுகளுள் பெயரும் பெயரது விகாரமுமாகிய எழுவாயும் விளியும் ஒழித்தொழிந்த ஐ முதலிய ஆறுருபுகளும்,பகுதி விகுதி இடைநிலையென்னுந் தெரிநிலையுங் குறிப்புமாகிய வினை உருபுகளுள் முதனிலைத் தனிவினைப்பெயரும், பொருளாதி அறுவகைப்பெயருமாகிய பகுதியொழித்தொழிந்த விகுதிமுதலிய வினையுருபுகளும்,அன் ஆன் முதலிய சாரியையுருபுகளும், போல புரையமுதலிய உவம உருபுகளும்,பிறவாறு தத்தமக்குரிய பொருளையுணர்த்தி வருவனவும்,

வேறுபொருளின்றிச் செய்யுளிசை நிறைத்தலே பொருளாக வருவனவும், அசைத்தலே பொருளாக நிற்பனவும், வெளிப்படையின்வரும் இவை போலாது குறிப்பின் வருவனவும் என்னும் எட்டுவகையினை யுடையவாய், தனித்து நடத்தலின்றிப் பெயரினகத்தும் வினையினகத்தும், அவற்றின் புறமாகிய பின்னும் முன்னும் இவ்விடங்களாறனுள் ஓரிடத்து ஒன்றேனும் பலவேனும் வந்து, அப்பெயர்வினைகட்கு அகத்துறுப்பாயும் புறத்துறுப்பாயும் ஒன்றுபட்டு நடக்குந்தன்மையது இடைச்சொல்லாம். எ-று.

வி-பு தெரிநிலைவினை இடைநிலைபோல, ஏனைஇடைநிலை சாரியைகட்கு வேறுபொருளின்றேனும் பெயர்வினைகட்கு இன்றியமையாது வருதலே பெரும்பாலவாதலின், அவற்றின் பொருளே பொருளென்பது கருதி, இசைநிறை அசைநிலைகளைச் சாரவையாது முதற்கண்வைத்தானென்க. பெயரினும் வினையினும் என்ற உம்மையைப் பின் முன் என்பனவற்றோடுங் கூட்டுக. இச்சொற்கள் முற்கூறிய பெயர்ச்சொல் வினைச்சொற்களு மாகாது அவற்றின் வேறுமாகாது இடை நிகரனவாய்நிற்றலின்இடைச்சொல்லெனக் காரணக்குறி பெற்றன. இது பாலைத்திணை, நடுவுநிலைத்திணை எனப் பெயர் பெற்றதுபோலுமென்க.

அற்றேல் பாலைத்திணை, நடுவு நிலைத்திணை யென்றாயவாறு என்னை யெனின், ஆசிரியர் தொல்காப்பியர் * "நடுவு நிலைத்திணையே நண்பகல் வேனிலொடு - முடிவு நிலைமருங்கின் முன்னிய நெறித்தே." எனக் கூறிய வழி அங்ஙனம் நடுவுநிலைத்திணை யென்னுஞ் சொல்லே அதன்காரணம் இனிதுவிளக்கி நிற்றலான், அது நடுவுநிற்றல் காரணத்தால்பெற்றபெய ரென்பது பெற்றாம்.

இன்னும் அவ்வாசிரியர் ஏனை நாற்றிணையும் முறையானே கூறி இறுதிக்கண் ஓதுதலான், இஃது அவற்றின் வேறென்பது விளங்குதலானும், எஞ்சநின்றது பாலையேயாதலானும், ** "நடுவணைந்திணை நடுவணதொழியப், படுதிணைவையம் பாத்தியபண்பே." என நிலம்பகுத்தோதுங்கால் நடுவணதெனக் குறியிட்டமையானும், அங்ஙனம் பகுக்கப்படும் நிலங்களு மாகாது அவற்றின் வேறுமாகாது தனக்குரியநிலம் நடுநிகர்த்ததாய் நிற்றல்பற்றி நடுவுநிலைத்திணையெனக் குறியீடுபெற்றதெனக் கொள்க. இன்னம் இதன்திறம்விரிக்கிற் பெருகும்.

அதுநிற்க, இனி இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல்லெனக் காரணக்குறி போந்ததூஉமன்றி, தனித்து நடத்தலின்றிப் பெயர்வினைகளிடமாக நடத்தலின் இடைச்சொல்லெனக்காரணக்குறி போந்ததெனி

* தொல்காப்பியம், பொருள். அகத்திணையியல், சூ. கூ.
** ௸ ௸ ௸ சூ. ௨.

னும்அமையும். அது முதல்நூலின்வழியாக நடக்கும்நூலை அங்ஙனங்கூறாது வழிநூலென்றாற்போல, பெயர்வினைகளிடமாக நடக்குஞ்சொல்லை அங்ஙனங் கூறாது இடைச்சொல்லெனப்பட்டது. அங்ஙனமாயின் இடம் என இயற்சொல்லாற் கூறாது, இடை எனத் திரிசொல்லாற்கூறிய தென்னை யெனின், இயற்சொல்லாற் கூறின் இடப்பொருளையுணர்த்துஞ் சொல்லெனப்பொருள்படுமாதலின் அதனோடு இதற்கு வேற்றுமை தோன்றற் கென்க. எண்வகையுள்தோன்றாதொழிந்தன வருஞ்சூத்திரங்களானுணர்க.

[வ-று.] நம்பியை (ஐ), நம்பியால் (ஆல்), நம்பிக்கு (கு) :— என்புழி பெயரின் புறத்துறுப்பாய் ஐயுருபு முதலிய இடைச்சொல் ஒன்று வந்தன.

தச்சன் (அன்), தச்சிச்சி (இ,ச்,ச்,இ),முடியினன்(இன்,அன்):—என்புழி பெயரின்அகத்துறுப்பாய் விகுதி, இடைநிலை, சாரியை இடைச்சொற்கள் பலவந்தன. வினைக்குறிப்பின்அகத்துறுப்பாய்ப் பல வருவனவுமன்ன.

நடந்தான்,(த்=ந்,த்,ஆன்)நடந்தனன்(த்=ந்,த்,அன்,அன்):—என்புழி தெரிநிலைவினையின் அகத்துறுப்பாய் விகுதி, இடைநிலை, சாரியை இடைச்சொற்கள் பல வந்தன.

அவன்,எவன்,ஏனோன்,ஏனையோன் (எ-ம்) ; போல, புரைய (எ-ம்) ; சாத்தன் எனப்பான், சாத்தன் ஆயினன் (எ-ம்) :— இடைச்சொல் அடியாகப் பிறந்த பெயராயும்,வினையாயும்,வினை இலக்கணையாயும் நிற்றலின் இவற்றின் பகுதி விகுதி முதலியவுமன்ன.

அதுமன், அதுமற்றம்ம (எ-ம்); கோன்னோர், "ஓஒ வுவம னுறழ் வின்றி." (எ-ம்) :—பெயரின் புறத்துறுப்பாய் பின்னும் முன்னும் ஒன்றும் பலவும் வந்தன.

வருகதில், வருகதில் லம்ம (எ-ம்) ; ஒஒ தந்தார், "ஏஏ யம்பன் மொழிந்தன ளாயே" (எ-ம்) :—தெரிநிலைவினையின் புறத்துறுப்பாய் பின்னும் முன்னும் ஒன்றும் பலவும் வந்தன. பிறவுமன்ன.

இவற்றுள் சில ஒரோவழி விகாரப்பட்டு மன், கோன் எனற்பாலன மன்னை, கோன்னை என வருவனவும் உள ; அவையெல்லாம் "புதியன புகுதலும் வழுவல" என்பதன்பாற்படுத்துக.

சஉக. தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப் - பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை - பிரிப்புக் கழிவாக்க மின்னன விடைப்பொருள்.

இது மேல் தத்தம் பொருளவென்றார், அப்பொருளாவன இவை யென்பது உணர்த்துகின்றது.

ப-ரை. தெரிநிலை - தெரிநிலையும், தேற்றம் - தெளிவும், ஐயம் - சந்தேகமும், முற்று - முற்றும், எண் - எண்ணும், சிறப்பு - சிறப்

பும், எதிர்மறை - எதிர்மறையும், எச்சம் - எச்சமும், வினு - வினுவும், விழைவு - விருப்பமும், ஒழி இசை — ஒழிந்தசொல்லும், பிரிப்பு - பிரிநிலையும், கழிவு - கழிவும், ஆக்கம் - ஆக்கமும், இன்னன- இவைபோல்வன பிறவும், இடை-தத்தம் பொருளவென்ற இடைச்சொற்களுடைய, பொருள் - பொருள்களாம். எ-று.

போழிப்பு. தெரிநிலை முதலாக விதந்த பதினுன்கும் இவைபோல்வன பிறவும் மேல் தத்தம் பொருளவென்ற இடைச்சொற்பொருள்களாம்.

வி-பு. இன்னன என்றதனுற் சில வருமாறு,—

அக்கொற்றன், எக்கொற்றன் :—என்பன சுட்டுப் பொருளும் வினுப் பொருளும் தந்தன.

நக்கீரர், நப்பாலத்தனர் :— என்புழி நகர இடைச்சொல் சிறப்புப் பொருள் தந்தது.

‡ "அ ஆ விழந்தானென் றெண்ணப்படும்."—" ஆ அ வளிய வலவன் றன் பார்ப்பினேடு."—‡‡ "அந்தோ விசயைபட்டனள்."—" அரக்காம்பலுறும்வா யம்மருங்குற் கன்னே-பரற்கான மாற்றின கொல்லோ." :-என்புழி அ ஆ, ஆ, அந்தோ, அன்னே என்னும் இடைச்சொற்கள், இரங்குதற் பொருள் தந்தன. இவற்றிற்கு அதிசயப்பொருளும் உள.

† "அறிதோ றறியாமை கண்டற்றால்"— "செறிதோறுஞ் சேயிழை" என்புழி தோறு, தோறு என்னும் இடைச்சொற்கள் இடப்பன்மைப் பொருள்தந்தன.

இனிச்செய்வான், இனி எம்மெல்லை - என்புழி இனி என்னும் இடைச்சொல் காலப்பொருளும் இடப்பொருளும் முறையே தந்தது. பிறவும் இவ்வாறு தனித்துநடக்கும் பெயர்வினையாகாது வருவன வெல்லாங் கொள்க.

௪௨௨. பிரிநிலை வினுவெண் ணீற்றசை தேற்ற - மீசைநிறை யெனவா றேகா ரம்மே.

இது வேற்றுமையுருபு முதலிய நான்கும் மேலே சொல்லப்பட்டமையின் அவற்றை யொழித்து ஏனையவற்றை உணர்த்துவான் தொடங்கி அவற்றுள் ஏகார இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. பிரிநிலை - பிரிநிலையும், வினு - வினுவும், எண் - எண்ணும், ஈறு அசை-ஈற்றிலசைத்தலும், தேற்றம் - தெளிவும், இசை

‡ நாலடியார், செ. ௬.

‡‡ சிந்தாமணி, நாமகளிலம்பகம், செ. உஅ௩.

† திருக்குறள், செ. ௧௧௦.

நிறை - இசைநிறைத்தலும், என - என்று, ஆறு - ஆறுபொருளைத் தரும், ஏகாரம் - ஏகாரஇடைச்சொல். எ-று.

பொ-ள். தெரிநிலைமுதலிய பதினொன்றும் அவைபோல்வன பிறவுமாகிய பொருள்களுள்ளும் இசைநிறைத்தல் அசைத்தல் குறிப்பென்னும் மூன்றுபொருள்களுள்ளும் பிரிநிலைமுதலிய ஆறு பொருள்களையுந் தரும் ஏகாரஇடைச்சொல். எ-று.

[வ-று.] அவனே கொண்டான் (ஏ) - என்பது ஓர் குழுவினின்றும் ஒருவனைப் பிரித்துநிற்றலின் பிரிநிலை.

இவ்வேகாரம் அவனோகொண்டான்-என்னும் பொருள்பட வினவி நிற்பின் வினா.

நிலனே நீரே தீயே வளியே - என்பது நிலனும் நீரும் தீயும் வளியும் என்னும் பொருள்பட எண்ணி நிற்றலின் எண்.

"கடல்போற் ருேன்றல் காடிறந் தோரே" (ஏ) - என்பது சொல் லிறுதிக்கண் அசைத்தற்பொருள் தருதலின் ஈற்றசை

இவ்வேகாரஅசைநிலைமுதற்கண்வாராதென்பார் ஈற்றசை யென்றார்.

அவனேகொண்டான்-என்பது துணிதற்பொருள் தரின் தேற்றம்.

இத்தேற்றப்பொருள் பிரிநிலைக்கண்ணே யுளதாதலின், இப்பொருளை வேறெடுத்துக்கூறுதல் ஏனையபோல் சிறப்புடைத்தன் றென்பார், இதனைப்பொருள்சிறப்பில்லா ஈற்றசைக்கும் இசைநிறைக்கும் இடையே கூறினார்.

¶ "ஏஏ யிவளொருத்தி பேடியோ வென்றார்." (ஏ)-என்பது இசை நிறைத்தற் பொருள் தருதலின் இசைநிறை.

அவனே கொண்டான் (ஏ)-என்பது ஒரோவழி அவன்கோள்கிலன்-என எதிர்மறைப்பொருள்தரின், அது செம்பொருளன்றி வலிந்துகொளப் படுதலின் புதியனபுகுதலும் வழுவல என்பதன்பாற்படுத்துக.

௪௨௩. ஒழியிசை வினச்சிறப் பெதிர்மறை தெரிநிலை - கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.

இது ஓகார இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒழி இசை - ஒழியிசையும், வினா - வினாவும், சிறப்பு-சிறப்பும், எதிர்மறை - எதிர்மறையும், தெரிநிலை - தெரிநிலையும்,

---

¶ "ஏஏ இவளொருத்தி பேடியோ என்றது 'ஏஏ சிசிசெய்ல் லேந்து மிகழ்ச்சி' யென்பது நிகண்டாதலால் இசைநிறைத்தலன்றி இகழ்ச்சிப் பொருள்பட நிற்றலும் புதியன புகுதலும் வழுவல என்பதனாற்கொள்க." என்பர்— இராமாநுசகவிராயர்.

சிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், செ. கசூ௦.

கழிவு - கழிவும், அசைநிலை - அசைநிலையும், பிரிப்பு - பிரிநிலையும், என-என்று, எட்டு - எட்டுப்பொருளைத்தரும், ஓ - ஓகார இடைச்சொல். எ-று.

போ—ா. ¶ ஒழியிசை முதலிய எட்டுப் பொருளையுந் தரும் ஓகார இடைச்சொல். எ-று.

[வ-று.] கொளலோ கொண்டான் (ஓ) - என்பது கொண்டுய்யப் போயினனல்லன் என்றற் றொடக்கத்து ஒழிந்தசொற்களைத் தருதலின் ஒழியிசை.

குற்றியோ ? மகனோ ? (ஓ)-என்பது வினா.

சிறப்பு - உயர்வுசிறப்பு, இழிவு சிறப்பு என இருவகைத்து. ஓஓபெரியன் என்பது உயர்வுசிறப்பு; ஓஓகொடியன் என்பது இழிவுசிறப்பு.

அவனோ கொண்டான் - என்பது கொண்டிலன் என்னும் பொருள் தந்தவழி எதிர்மறை. அலியைநோக்கி, ஆணோ அதுவுமன்று பெண்ணோ அதுவுமன்று-என்பது அத்தன்மை இன்மைதெரிந்தவழி நிற்றலின் தெரிநிலை.

உறுதி உணராது கெட்டாரை, ஓஓதமக்கோருறுதி யுணராரோ - (ஓ) என்பது கழிவிரக்கப்பொருள்தருதலின் கழிவு.

"காணியவம்மினோ கங்குலதுநிலையே" (ஓ)-என்பது அசைநிலை.

அவனோ கொண்டான் (ஓ) -என்பது பலருள் நின்று ஒருவனைப்பிரித்தமை கருதியவழி பிரிநிலை. இப்பொருள் எதிர்மறைக்கண்ணே யுளதாதலின் அசைநிலையின்பின் வைத்தார்.

௪௨௪. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினு-மெனவெனு மொழிவரு மென்று மற்றே.

இது என எனவும் என்று எனவும் வரும் இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ா. வினை - வினையும், பெயர் - பெயரும், குறிப்பு - குறிப்பும், இசை - இசையும், எண் - எண்ணும், பண்பு - பண்புமாகிய, ஆறின் உம் - ஆறுபொருளிலும், என எனும் மொழி - என என்னும் இடைச்சொல், வரும் - சேர்ந்துவரும், என்று உம் - என்று என்னும் இடைச்சொல்லும், அற்று-அப்படியே ஆறுபொருளிலும் வரும். எ-று.

¶ "மொழிந்தபொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்றி முடித்தல் என்பதினால் பத்தோ பதினொன்றோ என வரும் ஐயமும், 'வெண்ணெயோ விதுரனிட்டவிருந்தையோ வேலைசூழ்ந்த, மண்ணையோ வுண்டுமுன்னாள் வருபசி தீர்ந்த மாயோன்' என எண்ணி நிற்றலுங் கொள்க; பிறவுமன்ன."என்பர் —இராமாநுசகவிராயர்.

போ-ள். வினைப்பொருள் முதலிய ஆறுபொருளினும் என என்னும் இடைச்சொல்வரும்; என்று என்னும் இடைச்சொல்லும் அவ்வாறு வரும். எ-று.

[வ-று] கொள்ளெனக் கொண்டான், மைந்தன் பிறந்தானெனத் தந்தையுவந்தான்-என்பது வினை.

ஊரெனப் படுவ துறையூர்—†"அழுக்கா றெனவொரு பாவி"—என்பது பெயர்.

விண்ணென விசைத்தது, "பொள்ளென வாங்கே புறம் வேரார்"—என்பது குறிப்பு.

ஒல்லென வொலித்தது—"நிலையருங் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்தது."—என்பது இசை.

நிலனென நீரெனத் தீயென வளியென வரும் பூதநான்குமுருவம்—என்பது எண்.

வெள்ளென விளர்த்தது, மெல்லென நடந்தது.— என்பது பண்பு.

வி-பு. இங்ஙனம் எண்ணுப்பொருட்குக் காட்டிய பெயர்கள் தனித்து நில்லாது எண்ணி அளவைப் பண்புப்பொருளுணர்த்தலின் அப்பொருள் முதற்கண் நிறீஇய பெயர்ப்பொருளன்றெனக. என்றும் என்பதனையுங் கொள்ளென்றுகொண்டான் எனமுறையே இயையுமாறு ஒட்டுக.

சுட்டுப்பெயர் வினைப்பெயர்கட்குத் தமக்கென ஓர் பொருளின்றிச் சுட்டவும் வினவவும்படும் பொருளாதி ஆறுபெயர்ப்பொருளே பொருளாகவருதல்போல, இவ்விரண்டிடைச்சொற்கும் தமக்கென ஓர் பொருளின்றி,வினைமுதலியவாய் இங்ஙனம்விதந்து அவற்றின் பொருளேபொருளாகவருமென்பார், ஆறுபொருளையுந்தரும் என்னாது ஆறினும்வரும் என்றார்.

சஉடு. எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை — தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே.

இது உம்மை இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. எதிர்மறை - எதிர்மறையும், சிறப்பு - சிறப்பும், ஐயம் - ஐயமும், எச்சம் - எச்சமும், முற்று - முற்றும், அளவை - அளவையும், தெரிநிலை - தெரிநிலையும், ஆக்கம் - ஆக்கமுமாகிய, எட்டு - எட்டுப்பொருளைத்தரும், உம்மை - உம்மையிடைச்சொல். எ-று.

போ-ள். எதிர்மறை முதலிய எட்டுப் பொருளையுந் தரும் உம்மையிடைச்சொல். எ-று.

† திருக்குறள், சே. கசுஅ.

[வ-று.] கோற்றன்வருதற்கும்உரியன் என்பது எதிர்மறை.

குறவரும் மருளுங்குன்று,இவ்வூர்ப்பூசையும் புலால்தின்னாது,— என்பது உயர்வுசிறப்பு.

பார்ப்பானுங் கள்ளுண்டான், புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை-என்பது இழிவுசிறப்பு.

வி-டி. பூசையும் புலால்தின்னாது-என்பதனை இழிவுசிறப்பு என்பாரு முளர்.அங்ஙனமாயின் ஒருபொருளினதுஉயர்வைச்சிறப்பித்தல் இழிவைச் சிறப்பித்தல் எனப் பொருள்படாது உயர்ந்த பொருளான் மற்றொன்றைச் சிறப்பித்தலெனப் பொருள்படும். அவ்வாறு பொருள்படின் ஒகாரப் பொருளாய்வரும் உயர்வுசிறப்பிற்கும் இழிவு சிறப்பிற்கும் ஆகாமையின் அது பொருந்தாதென்க.

இனி இவ்வும்மைப்பொருளைக் குன்றம் முதலியவற்றிற் கொள்ளாது குறவர்முதலியவற்றிற்கொண்டு,பூசையும் என்பதனை இழிவுசிறப்பும்மை எனக்கோடலும் ஒன்று. இங்ஙனம் இழிவுசிறப்பென்பதற்கு இழிவி னுட் சிறந்த இழிவெனப் பொருள்கூறுக. உயர்வுசிறப்பும் அது.

பூசைக்குப் புலால் தின்னுதல் இழிபும் தின்னாமை சிறப்புமாகப் பொருள்கொளின், குறவர்க்கு மருளுதல் சிறப்பாகவேண்டு மாதலின் அது பொருந்தாதென்க.

[வ-று.] பத்தாயினும் எட்டாயினும் கொடு—என்பது ஐயம்.

சாத்தனும் வந்தான்-என்பது கொற்றன்வந்ததன்றி யெனப்பொருள் படின், இறந்ததுதழீஇய எச்சவும்மை; கொற்றனும் வருவானெனப் பொருள்படின், எதிரதுதழீஇய எச்சவும்மை.

தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார், எல்லாரும் வந்தார் - என்பது முற்றும்மை.

சாத்தனும், கொற்றனும், தேவனும், பூதனும் வந்தார்-என்பது எண்ணும்மை.

ஆணும் அன்று பெண்ணும் அன்று—என்பது தெரிநிலையும்மை. தெரிநிலை ஒகாரம்போல் பொருளுணாத்துக்கொள்க.

நெடியனும் ஆயினன்,பாலும் ஆயிற்று-என்புழி அவனே வலியனும் ஆயினன், அதுவே மருந்தும் ஆயிற்று - எனப்,பொருள்படின் ஆக்க வும்மை. ¶

¶ "இனி மொழிந்தபொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை யும் முட்டின்றி முடித்தல் என்னும் உத்தியால், எச்ச வும்மையும் எதிர்மறை

சஉசு. முற்றும்மை யோரோவழி யெச்சமு மாகும்.

இது முற்றும்மைக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. முற்று உம்மை - முற்றும்மையானது, ஒரோ வழி - ஒரோவிடத்தே, எச்சம் உம் ஆகும் - எச்சவும்மையுமாகும். எ-று.

பொ-ரை. முற்றும்மை ஒரோவிடங்களின் எச்சவும்மையுமாம். எ-று.

[வ-று.] ஆறும் தருவது வினையே-என்புழி ஐந்துந்தருவது வினையே என்றும்; எல்லாநும் இது செய்யார் என்புழி சிலரிதுசெய்வார் என்றும்; முற்றும்மைப்பொருளும், எச்சவும்மைப்பொருளும் ஒருங்குவருதல் காண்க. இங்ஙனந் தருதலின் எச்சமும் என இறந்ததுதழீஇய எச்சவும்மையாற் கூறினர்.

சஉஎ. செவ்வே ணீற்றதா மெச்ச வும்மை.

இது எச்சவும்மைக்கு ஆவதோர் விதி உணர்த்துகின்றது.

ப-ரை. எச்சம் உம்மை - எச்சவும்மையானது, செவ்வெண் - செவ்வெண்ணிலே வருமாயின், ஈற்றது ஆம் - ஈற்றிலே வரும்.

பொ-ரை. எச்சம்வுமை செவ்வெண்ணின்கண் வருமாயின் ஈற்றின் கண் வரும். எ-று.

[வ-று.] "செய்பவன் கருவிநிலஞ் செயல் காலஞ் செய்பொருளுந் தருந் திறத்தது வினையே."— என்புழி இவற்றுள் சிலவுந் தருந்திறத்தது வினையேயெனவும்; கல்வி செல்வ மொழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர் - என்புழி இவற்றுள் சிலபெறுவாருமுளர் எனவும் பொருள்படுதல் காண்க.

சஉஅ. பெயர்ச்செவ் வெண்ணே யென்ற வெனவெண் - ணுன் குந் தொகைபெறு மும்மையென் றெனவோ - டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும்.

இது முன்னமொடுத்து விதந்ததும் விதவாததும் வரும் சில எண்ணிடைச்சொற்கட்கு ஆவதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

யும்மையும், எச்சவும்மையும் முற்றும்மையும் எதிர்மறையும்மையும் தம்முள் மயங்கி நிற்குமெனவுங் கொள்க. அவை வருமாறு:—சாத்தனும்வந்தான் இனிக் கொற்றன் வரினும் வரும்-எனின் சாத்தனும் கொற்றனும் என்ற எச்சவும்மைகள் வரினும் என்ற எதிர்மறையும்மையோடும், வடுகரசரும் வந்தார் இனித் தமிழ்நாட்டு மூவேந்தரும் வரினும் வருவர்—எனின் வடுகரசரும் என்றஎச்சவும்மையோடு மூவேந்தரும் என்றமுற்றும்மைதொடர்ந்து, வரினும் என்ற எதிர்மறையும்மையோடு மயங்கி நிற்றலுங் காண்க. பிறவு மன்ன." என்பர்—இராமாநுசகவிராயர்.

ப-ரை. பெயர் செவ்வெண் - பெயரிடத்தே எண்ணிடைச்சொல் தொக்குவருகிற செவ்வெண்ணும், ஏ (எண்) - ஏகார எண்ணும், என்று (எண்) - என்று எண்ணும், எனு எண் - எனுவெண்ணுமாகிய,நான்கு உம் - நான்கெண்களும், தொகை - தொகையை, பெறும் - பெற்று நடக்கும், உம்மை (எண்) - உம்மையெண்ணும், என்று (எண்) - என்றெண்ணும்,என (எண்) - எனவெண்ணும்,ஒடு (எண்) - ஒடுவெண்ணும் ஆகிய இந்நான்கெண்ணும், அஃது இன்றி உம் - தொகைபெறாமலும், இயலும் - நடக்கும், எ-று.

பொ-ரை. பெயர்களினிடையே எண்ணிடைச்சொல் தொக்குநிற்ப வரும் செவ்வெண்ணும், பெயரோடு தொகாதுவரும் ஏகார எண்ணும், என்று எண்ணும், எனு எண்ணுமாகிய நான்கும் தொகைபெற்று நடக்கும். உம்மை எண்ணும், என்று எண்ணும்,என எண்ணும், ஒடு எண்ணுமாகிய இந்நான்கெண்ணும் தொகைபெற்றும் பெறாதும் நடக்கும், எ-று.

வி-பு. பெயரோன் என்னாது செவ்வெண்ணின்றதனால் அஃது எண்ணிடைச்சொற்றொக்க தொகைநிலையென்பதூஉம், அங்ஙனமாதலின் அதனையும் ஏகாரமுதலியஎண்ணிடைச்சொற்களோடு,உடன்கூறப்பட்டதென்பதூஉம் பெற்றாம்.

[வ-று.] சாத்தன் கொற்றன் தேவன் பூதன் நால்வரும் வந்தார்— எனப் பெயர்களினிடையே தொக்குவரும் உம்மை எண்ணும் ;—

சாத்தனே கொற்றனே தேவனே பூதனே நால்வரும் வந்தார்-எனப் பெயர்களினிடையே தொகாதுவரும்—ஏகார எண்ணும் ;—

சாத்தனென்று கொற்றனென்று தேவனென்று பூதனென்று நால்வரும் வந்தார்—என என்று எண்ணும் ;—

சாத்தனெனுக் கொற்றனெனுத் தேவனெனுப் பூதனெனு நால்வரும் வந்தார்—என எனு எண்ணும் :—தொகைபெற்றே வந்தன.

வி-பு. பெயர்ச்செவ்வெண் தொகை பெறுதற்கு இச்சூத்திரத்தைக் காட்டினும் அமையும். இவை வழக்கிடத்து ஒரோவழித் தொகைபெறாதுவரின் இசையெச்சமாகவும்,செய்யுட்கண் தொகைபெறாதுவரின் தொகுக்கும்வழித் தொகுத்தலாயமையின் அவ்விகாரமாகவும், அன்றேல் இசையெச்சமாகவும் கொள்க.

[வ-று.] சாத்தனும் கொற்றனும் தேவனும் பூதனும் நால்வரும் வந்தார்— எனப் பெயர்களினிடையே உம்மை எண்ணும் ;—

சாத்தனென்று கொற்றனென்று தேவனென்று பூதனென்று நால்வருளர் - என என்று எண்ணும் ;—

சாத்தனெனக் கொற்றனெனத் தேவனெனப் பூதனென நால்வருளர்.—என என எண்ணும்;—

சாத்தனேடு கொற்றனேடு தேவனேடு பூதனேடு நால்வர் இவன் மைந்தர்.—என ஒடு எண்ணும்:— இவை பெயர்களினிடையே தொகை பெருது வந்தன.

¶ சாத்தனும் கொற்றனும் தேவனும் பூதனும் வந்தார்—எனச் செவ்வெண்ணும்;—

நிலனென்று நீரென்று தீயென்று காற்றென் றளவறுகாய மென்றாகிய உலகம்.—என என்று எண்ணும்;—

நிலனென நீரெனத் தீயெனக் காற்றென வளவறுகாய மெனவாகிய உலகம்.—என என எண்ணும்;—

நிலனேடு நீரோடு தீயோடு காற்றேடளவறு காயமோடாகிய உலகம்.—என ஒடு எண்ணும்:—இவை தொகைபெற்றும் பெருதும் வந்தன.

சஉகூ. என்று மெனவு மொடுவு மோரோவழி - நின்றும் பிரிந் தெண் பொருடொறு நேரும்.

இது என்று, ஒடு என்னும் எண்ணிடைச்சொற்களுக்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

ப-ரை. என்று உம் - என்றென்பதும், என உம் - எனஎன்பதும், ஒடு உம் - ஒடு என்பதும், ஒரோவழி நின்றும் - பொருளோடு நிற்றலேயன்றி ஓரிடத்திலே நின்றும், பிரிந்து - பிரிந்து, எண் - எண்ணப்படுகின்ற, பொருள் தொறும் - பொருள்தோறும், நேரும் - பொருந்தும். எ-று.

¶ "இனி ஒன்றினமுடித்தல் என்பதினல் இவ்வெட்டுவகை யெண்களுள் ஏகார எண் மற்ற எண்களினிடை நிற்பினும் பிறநிற்பினும் பல எண்வந்தனவென்று குற்றமெனல் கூடாவாம். அவை பலவும் எண்ணுப்பொருளொன்றையே குறித்துநிற்றலினெனக்கொள்க. அவை வருமாறு,—மலைநிலம்பூவே துலாக்கோலென் றின்னர் (எ-ம்), தோற்றமிசையே நாற்றஞ்சுவையே யுறலோடாங்கைம் புலனெனமொழிப:— இவை பெயர்ச்செவ்வெண் நின்று ஏகாரஎண்ணை இடையிலேகொண்டன. மாத்திரை யெழுத்தியலசைவகை யெனு எ-து. செவ்வெண்நின்றுஎனஎண்ணை இடையிலேகொண்டது. யாத்தசீரே யடியாப்பெனுஅ எ-து. ஏகார எண் செவ்வெண்ணையும், என எண்ணையும் இடையிலே கொண்டது. ஒழிந்த எண்களும் இவ்வாறு வருதல்காண்க. இவ்வெண்ணிடைச் சொற்களுள் ஒடு - ஒடு எனக் குறுகிவருமெனவும், அதற்கு இச்சூத்திரமும் வருஞ்சூத்திரமுமே உதாரணமெனவுங்காண்க." என்பர்— இராமாநுசகவிராயர்.

போ-ரை. இம்மூன்றெண்ணும் எண்ணும் பொருளோடு நிற்றலேயன்றி ஓரிடத்து நின்றும் பிரிந்தும் எண்ணும் பொருள்தோறும் பொருந்தும். எ-று.

[வ - று.] †"வினை பகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்-றீயெச்சம் போலத் தெறும்." (என்று) — ††"பகை பாவ மச்சம் பழியென நான்கு-மிகவாவா மில்லிறப்பான் கண்." (என) — †††"பொருள் கருவி காலம் வினையிடனோ டைந்து மிருடீர வெண்ணிச் செயல்." (ஒடு)-எனவரும்.

எண்ணும் பொருள்தோறும் தனித்தனிநிற்றலினும் ஒரோவழிநின்று பிரிதல் இம்மூன்றெண்ணிற்கும் அமைந்துகிடந்தன ஆதலின் ஈண்டுக்கூறப்பட்டன.

எனவே ஏனை எண்கட்கு எண்ணும்பொருள்தோறும் நிற்கும் நிலையே சிறந்தன என்பதூஉம், ஒரோவழி நின்று பிரிதல் வலிந்துகொளற்பாலன என்பதூஉம், அவை ஈண்டமையாது தீபகம்என்னும் அணியிலக்கணத்தின் பாற் படுமென்பதூஉம் பெற்றாம்.

சஙஂ. வினையோடு வரினுமெண் ணினைய வேற்பன.

இது மேல் பெயரோடுவந்த எண்ணிடைச்சொற்கள் வினையோடும் வருமாறு உணர்த்துகின்றது.

ப-ரை. எண்-எண்ணிடைச்சொற்கள், வினையொடு வரின் உம். வினையோடு வந்தாலும், இனைய - பெயரொடு வரும்போது சொல்லப்பட்ட இவ்விலக்கணங்களை யெல்லாம், ஏற்பன - ஏற்கும்.எ-று.

போ-ரை. எண்ணிடைச்சொற்கள் வினையோடு வரினும் மேற்பெயரோடு வந்தாற்போலும் ஏற்பன. எ-று.

வி-பு. ஏற்பன எனவே வினையோடு ஏலா எண் வருதலும், தொகை பெறுதலும் இல்லையென்க.

[வ-று.] "மண்டில மழுங்க மலைநிறங் கிளர - வண்டின மலர்பரந் தூதமிசையே - கண்டற் கானங் குருகின் மொலிப்ப." — என்பது செவ்வெண்.

கற்றுங் கேட்டுங் கற்பனைகடந்தான்.—என்பது உம்மை எண்.

உண்ணவென்று உடுக்கவென்று பூசவென்று முடிக்கவென்று வந்தான்.—என்பது என்று எண்.

---

† திருக்குறள், செ. ௬௭௪. †† திருக்குறள், செ. ௧௪௬.
††† ௸ செ. ௬௭௫.

உண்ணவேன உடுக்கவேனப் பூசவேன முடிக்கவேன வந்தான்.— என்பது எனா என்.

உண்ண வுடுக்கப் பூச முடிக்கவேன்று வந்தான்.— உண்ண வுடுக்கப் பூச முடிக்க வேனவந்தான்.—

" நன்னிதி பெருக நாடொறும் வாழ்கவேன் - றுன்னுமிவ் வேட்கை யொழிந்தன ரிலரோ." — என்பன என்றும், எனவும் ஒரோவழி நின்றும் பிரிந்தன. பிறவற்றுள்ளும் எம்பன வந்தவழிக்காண்க.

சாத்தன்வந்தான் நோற்றன்வந்தான் இருவரும்வந்தமையாற் கலியாணம்பொலிந்தது.—என வினைச்செவ்வெண் தொகைபெற்றது என்பாருமுளர். தொகைச்சொற் பெயராதலின் அது உவகைப் பெயர்களோடு பொருந்தி இருபெயரொட்டாமன்றி வினையொடு பொருந்தாமையானும், இங்ஙனம் இருவர் என்னுந் தொகை சாத்தன் கோற்றனாகிய இருவரெனப் பெயர்த்தொகையாதலானும் அதுபொருந்தாதென்க.

சஙஈ. விழைவே கால மொழியிசை தில்லே.

இது தில் என்னும் இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. விழைவு - ஆசையும், காலம் - காலமும், ஒழி இசை- ஒழிந்தசொல்லும் ஆகிய மூன்று பொருளையுந் தரும், தில் - தில்லென்னும் இடைச்சொல். எ-று.

போ - ரை. இம்மூன்றுபொருளையுந் தரும் தில் என்னும் இடைச்சொல். எ-று.

[வ-று.] " வார்ந்தி லங்கு வையெயிற்றுச் சின்மொழி - யரிவையைப் பெறுக தில்லம்ம யானே." — என்பது பெறுதல் வேட்கையை உணர்த்தலின் விழைவு.

" பெற்றாங் கறிகதில் லம்ம விவ்வூரே." — என்பது பெற்றகாலத்து அறிகவெனக் காலத்தை யுணர்த்தலின் காலம்.

" வருகதில் லம்மவெஞ் சேரி சேர." — என்பது வந்தாலொன்று செய்வல் என்னுஞ் சொல்லொழிந்து நிற்றலின் ஒழியிசை.

சஙஉ. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங் - கழிவு மிகுதி நிலைபே றாகும்.

இது மன் என்னும் இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. மன் - மன்னென்னும் இடைச்சொல், அசை நிலை - அசைத்துநிற்றற்பொருளிலும், ஒழி இசை - ஒழிந்தசொற் பொருளிலும், ஆக்கம் - ஆக்கப்பொருளிலும், கழிவு - கழிதற்பொருளிலும்,

மிகுதி - மிகுதிப்பொருளினும், நிலைபேறு - நிலைபெறுதற்பொருளினும், ஆகும் - வரும்: எ-று.

போ-னா. இவ்வாறு பொருளையுந் தரும் மன் என்னும் இடைச்சொல். எ-று.

[வி-று.] "அதுமற் கொண்கன் றேரே." (மன்) — என்பது அசைநிலை.

"கூறியதோர் வாண்மன்." — என்புழி அதனாற்கருந்தாதறத்துணித்தது என்னும் சொல்லொழிய நின்றமையின் ஒழியிசை.

கொடியன்மன்- என்புழி அவனே வலியனுமாயினான் எனப்பொருள் தருதலின் ஆக்கம்.

"சிறியகட் பெறினே யெமக்கீயுமன்னே." — என்புழி இப்பொழுது அவனிறத்தலின் எமக்கீதல்கழிந்தது எனப் பொருள்தருதலின் கழிதல்.

"எந்தை யெமக்கருளு மன்." — என்புழி மிகுதியும் அருளும் எனப் பொருள்தருதலின் மிகுதி.

"மன்னா வுலகத்து மன்னியது புரிமே." — என்புழி இவ்விடைச்சொலடியாகப் பிறந்த வினையுள் மன் என்பது நிலையினை யுணர்த்தினமையின் நிலைபேறு.

சஙங. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

இது மற்று என்னும் இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. மற்று - மற்றென்னும் இடைச்சொல், வினைமாற்று - வினைமாற்றுப்பொருளையும், அசை நிலை - அசைத்துநிற்றற் பொருளையும், பிறிது எனும் - பிறிதுபொருளையுந் தரும். எ-று.

போ-ரை. இம்மூன்றுபொருளையுந் தரும் மற்று என்னும் இடைச்சொல். எ-று.

[வ-று.] ‡"மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது." (மற்று)— என்பது விரைந்தறிவாம் என்னும்வினையையொழித்து விரையாதறிவாம் என்னும் வினையைத் தந்து நின்றமையின் வினைமாற்று.

"மற்றடிகள் கண்டருளிச் செய்ய மலரடிக்கீழ்" (மற்று)— என்பது அசைநிலை.

† "ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான்முந் துறும்." (மற்று)—என்பதுஊழ லல்லதொன்று என்னும் பொருள் தந்தமையின் பிறிது

‡ நாலடியார், செ. கக. † திருக்குறள், செ. ௩அ௦.

சஅசு. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

இது மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. மற்றையது என்பது - மற்றையதென்னும் பொருளாகிய வினைமாற்றும் பிறிதும், சுட்டியதற்கு - குறிக்கப்பட்டதற்கு, இனம் - இனமாகிய வினைமாற்றும் பிறிதுமாம். எ-று.

பொ-ரை. மேற்கூறியமற்றுஎன்னும் இடைச்சொல் பொருள் மூன்றனுள் மற்றையதென்னும் பொருளாகிய வினைமாற்றும் பிறிதும், அங்ஙனங் கருதி அதற்கினமாகிய வினைமாற்றும், இனமாகிய பிறிதுமாமன்றி, வேறுவினைமாற்றும் வேறுபிறிதுமல்லவாம். எ-று.

வி-பு. மேற்காட்டிய உதாரணத்துள் நல்வினையை விரைந்தறிவாம் எனக் கருதியதற்கு விரையாதறிவாம் எனவும், ஊழ் ஒன்றேனக் கருதியதற்கு ஊழல்லது ஒன்றெனவும் இனம்வந்தவாறுகாண்க.

வேறுபிறிதாவது என்னையெனின், இரண்டுமணி யுளவழியொன்று கண்டான் மற்றொன்று காணவேண்டும் - என்றானாகின் மற்றொன்று என்பது அதற்கினமாகியது ஓர் மணியெனப் பொருள்கொள்ளாது, ஆடை, அணி யெனப் பொருள்கோடலென்க. வினைமாற்றும் இவ்வாறே காண்க.

மேலைச்சூத்திரத்துள் வினைமாற்று எனவும் பிறிது எனவும் பொதுப்படக்கூறினமையின், இச்சூத்திரத்தால் புறனடை கொடுத்துக் காத்தாரென்க. இச்சூத்திரத்திற்கு இவ்வாறன்றி மற்றையது என்பதனை ஓர் இடைச்சொல்லாக வைத்து, அச்சொல் அங்ஙனங் கருதிய பொருட்கு இனமாகிய பொருளைத்தருமெனப் பொருள்கூறுவாருமுளர்.

மற்றையது என்பது இடைச்சொலடியாகப்பிறந்தபெயரும் வினைக்குறிப்புமாமாதலானும், விகுதியோடு கூறினாரேனும்பகுதிப்பட்ட மற்றை என்னும் ஐகார ஈற்றிடைச்சொற்கு இப்பொருள் கூறினாரெனின், மன், மன்னை, தோன், கோன்னையென நின்றாற்போல, மற்று, மற்றையென இறுதிவிகாரமாய் நின்றதன்றி இதற்கெனவேறு பொருளின்மையானும், அதனோடு இதற்கு வேற்றுமை இஃதினத்தையே தருதலெனப் பொருள் கொளின், மற்று என்பது இனத்தையும் இனமல்லதையும் தருமெனப் பொருள்படுமாதலானும்,எல்லாவற்றானும் இனமாயுள்ளதே வினைமாற்றும் பிறிதுமாய் வருமன்றி இனமல்லது ஒருவாற்றானும் வாராமையானும் அது பொருந்தாதென்க.

சஅரு. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.

இது கொல் என்னும் இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. கொல்-கொல்லென்னும் இடைச்சொல்லானது, ஐயம்-ஐயப்பொருளிலும், அசைநிலை - அசைநிலைப்பொருளிலும்வருகிற; கூற்று - இடைச்சொல்லாம். எ-று.

போ-ரை. கொல் என்பதுஇவ்விரண்டுபொருளையும் தருஞ்சொல்லாம்.

[வ-று.] இவ்வுரு குற்றி கொல் மகன் கொல் - என்பது குற்றியோ மகனோ என்னும் பொருள்படவருதலின் ஐயம்.

"பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர் வருவர்கொல் வயங்கிழாய்." — என்பது அசைநிலை.

சஙகூ. ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.

இது ஒடுஎனவும் தெய்ய எனவும் வரும் இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. ஒடு உம் தெய்ய உம்-ஒடு தெய்ய என்கிற இரண்டும், இசை நிறை - இசைநிறைத்தற் பொருளைத்தருகிற, மொழி-சொற்க ளாம். எ-று.

போ-ரை. இவ்விரண்டும் இசைநிறைத்தற்பொருளைத் தருஞ்சொற்க ளாம். எ-று.

[வ-று.] "முதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர் - விதைக்குறுவட் டிற் போதோடு பொதுள." [ஒடு] (எ-ம்); "சொல்லேன் றெய்ய நின் னொடு பெயர்த்தே." [தெய்ய] (எ-ம்) வரும்.

சஙஎ. அந்தில் ஆங்க அசைநிலை யிடப்பொரு ளவ்வே.

இது அந்தில் எனவும், ஆங்க எனவும், வரும் இடைச்சொல் இலக் கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. அந்தில் - அந்திலென்பதும், ஆங்கு - ஆங்கென்பதும், அசை நிலை - அசைநிலைப்பொருளையும், இடம் பொருள் - இடப் பொருளையுந் தருவனவாம். எ-று.

போ-ரை. இவ்விரண்டு இடைச்சொல்லும் அசைநிலைப் பொருள வாயும் இடப்பொருளவாயும் வரும். எ-று.

[வ-று.] "அந்திற் கழலினன் கச்சினன்." (அந்தில்)—என்பதுஅசை நிலை.

"வருமே - சேயிழை யந்திற் கொழுநற் காணிய" (அந்தில்) — என் பது அவ்விடத்து என்னும் பொருள் தருதலின் இடம்.

"ஆங்கத் திறனல்ல யாங்கழற." (ஆங்க) — என்பது அசைநிலை; இதனுள் ஆங்க என்னும் அசைநிலை, ஆங்க எனஇறுதிவிகாரமாய் நின்றது.

‡ "ஆங்காங்காயினுமாக." (ஆங்கு, ஆங்கு) என்பது இடம்.

சுகூஅ. அம்ம வுரையசை கேண்மினென் றதும்.

இது அம்ம என்னும் இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. அம்ம - அம்ம என்பது, உரை அசை - உரையசைப் பொருளைத்தருவதும், கேண்மின் என்று - ஒன்றுசொல்லுவேன் கேண்மின் என்கிற ஏவற்பொருளைத்தருவதும், ஆகும் - ஆகும்.

பொ-ரை. அம்ம என்பது உரையசைப்பொருளைத்தரும், ஒன்றுசொல்வன் கேண்மின் என்னும் ஏவற்பொருளைத்தரும் வரும். எ-று.

[வ-று.] "அதுமற்றம்ம."— என்பது உரையசை. இது செய்யுட்கண் வரினும் அச்செய்யுளின் பொருட்டன்றித் தானடைந்த சொல்லின்பொருட்டுவருதலின் உரையசையாயிற்று.

"அம்மவாழிதோழி." — என்பது ஒன்று சொல்வன்கேண் என்னும் ஏவற்பொருள்தந்தது.

சுகூ. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

இது மா என்னும் இடைச்சொல் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. மா என் கிளவி - மாவென்னுஞ்சொல், வியங்கோள் - வியங்கோளிடத்துவருகிற, அசைச்சொல் - அசைச்சொல்லாகும்

பொ-ரை. மா என்னும் சொல் வியங்கோளின்கண் வரும் அசைச் சொல்லாம். எ-று.

[வ-று,] "மாயக்கடவுட்குயர்கமாவலனே."—"உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே."— எனவரும்.

சுச்0. மியாயிக மோமதி யத்தை யித்தை - வாழிய மாளவீ யாழ முன் னிலையசை.

இது மியா முதலிய இடைச்சொற்களின் இலக்கணம் உணர்த்து கின்றது.

ப-ரை. மியா--யாழ -. மியா இக மோ மதி அத்தை இத்தை வாழிய மாள ஈ யாழ என்கிற பத்திடைச்சொற்களும், முன்னிலை- முன்னிலையிடத்துவருகிற, அசை - அசைச்சொற்களாம். எ-று.

பொ-ரை. இங்ஙனங்கூறிய பத்திடைச் சொற்களும் முன்னிலைக்கண் வரும் அசைநிலைகளாம். எ-று.

[வ-று.] "சிலையின் செழுந்தழையன் சென்மியா வென்று – மலையக லான் வாடி வரும்" (எ-ம்) ; —

‡ திருமுருகாற்றுப்படை.

"தண்டுறையூர காணிகவெனவே." [இக] (எ-ம்);—
‡ "காமஞ்செப்பாதுகண்டது மொழிமோ." (எ-ம்);—
"சென்மதி பெரும." (எ-ம்);—
"மெல்லியற்குருமக ளுள்ளிச்செல்வத்தை." [அத்தை] (எ-ம்);—
a‡ "வேய்நரல் விடரக நீயொன்று பாடித்தை." [இத்தை] (எ-ம்);—
"காணியவாவாழிய மலைச்சாரல்." (எ-ம்);—
"சிறுது - தவிர்ந்தீகமாளநின் பரிசிலருய்ம்மார்." (எ-ம்);—
"சென்றீ பெருமநிற் றகைக்குநர்யாரோ." [ஈ] (எ-ம்);—
"நீயே-செய்வினைமருங்கிற் செலவயர்ந்தியாழ" (எ-ம்):— முறையே காண்க.

சசுக. யாகா பிறபிறக் கரோபோ மாதிதஞ் - சின்குரை யோரும் போலு மிருந்திட் - டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.

இது யாமுதலிய இடைச்சொற்களின் இலக்கணம் உணர்த்துகின்றது.

ப-ரை. யா-நின்று - யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும் சின் குரை ஒரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று என்கிற இருபதிடைச்சொற்களும், அசைமொழி - எல்லாவிடங்களிலும் வருகிற அசைச்சொற்களாம். எ-று.

போ-ரை. இவ்விருபது இடைச்சொல்லும் முன்னையபோலாது எல்லாவிடத்தினும் எல்லாச்சொல்லினும் வரும் அசைச்சொல்லாம். எ-று.

வி-பு. விதவாமையின் எல்லாவிடத்தினும் எல்லாச்சொல்லினும் வருமென்பது பெற்றாம்.

[வ-று.] ‡‡ "வாழ்கநின் கழலடி மைந்த வென்னவே-தோழியா சுவாத்தம் போத வீங்கிதென்." (எ-ம்);—

b‡ "அறநிழலெனக்கொண்டாய் நின்குடையக் குடைப்-புறநிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா." (எ-ம்);—

c‡ "மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோ- ராயனை யல்ல பிற." (எ-ம்);—

"பிறக்கீதனுட் செல்லான் பெருந்தவம் பட்டான்" [பிறக்கு] (எ-ம்);

d‡ "நோதகவிருங்குயிலாலுமரோ." [அரோ] (எ-ம்);—

"எரியி னன்ன செந்தலை யன்றில் - பிரியின் வாழாதென்போ." (எ-ம்);—

‡ குறுந்தொகை, சே. க.
‡‡ சிந்தாமணி, குணமாலையாரிலம்பகம், சே. களக.
a‡ குறிஞ்சிக்கலி, சே. ச.
b‡ மருதக்கலி, சே. நச.
c‡ முல்லைக்கலி, சே. அ.
d‡ பாலைக்கலி, சே. நஉ.

"விளிந்தன் றுமாதோதெளிந்தவெங் கண்ணே." [மாது] (எ-ம்);—
"காண்டிகுமல்லமோ கொண்க." [இகும்] (எ-ம்);—
"ஈங்கா கியவா லென் றிசின்." (எ-ம்);—
"அதுபெறலருங்குரைத்தே." (எ-ம்);—
† "அஞ்சுவதோருமறனே" [ஒரும்] (எ-ம்);—
"வடுவென்றகண்ணாய் வருந்தினை போலும்." (எ-ம்);—
"ஓராற்று லென்கண் ணிமைபொருந்த வந்நிலையே
கூரார்வேன் மாறனென்கைப் பற்ற—வோரா
நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன் [இருந்து]
கனவு மிழந்தொழிந்த வாறு." (எ-ம்);—
"நெஞ்சம் பிளந்திட்டு." [இட்டு] (எ-ம்);—
‡ "தேவாதி தேவனவன் சேவடி சேர்துமன்றே." [அன்று] (எ-ம்);
†† "பணியுமா மென்றும் பெருமை சிறுமை-யணியுமாந் தன்னை வியந்து" [ஆம்] (எ-ம்);— நீர்தாம் (எ-ம்);— நீதான் (எ-ம்);—

"யான்பிறனளியின் வாழ்வா னாசைப்பட்டிருக் கின்றேன்." [கின்று] என்புழி ஆசைப்பட்டேன் என்பது பொருளாதலின் கின்று என்பது நிகழ்கால இடைநிலையன்று. (எ-ம்);—

"அழலடைந்த மன்றத் தரந்தையராய் நின்றார் - நிழலடைந்தே நின்னையடைந்த." [நின்று] (எ-ம்):—முறையே காண்க. பிறவுமன்ன.

இடையியல், சூ. உஉ.
முற்றிற்று.

† திருக்குறள், சே. ருகூகூ. ‡ சிந்தாமணி, பதிகம், சே. க.
†† ஷை சே. கூஎஅ.

ஐந்தாவது

உரியியல்

சசஅ. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி - யொருகுணம் பல குணந் தழுவிப் பெயர்வினை - யொருவா செய்யுட் குரியன வுரிச் சொல்.

இது நிறுத்த முறையானே உரிச்சொல் இலக்கணம் உணர்த்து கின்றது.

ப-ரை. பல் வகை - இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பல வேறு வகைப்பட்ட, பண்பும் - பண்புகளையும், பகர் பெயர் ஆகி - உணர்த்துகிற பெயராகி, ஒரு குணம் - ஒருகுணத்தையும், பல குணம் - பலகுணங்களையும், தழுவி - உணர்த்துவனவாய், பெயர் வினை - பெயர்வினைகளைவிட்டு, ஒருவா - நீங்காவாய், செய்யுட்கு - செய்யுளுக்கு, உரியன - உரியனவாய்ப் பொருளுரிமை பூண்டு நிற்பவை, உரி சொல் - உரிச்சொற்களாம். எ-று

பொ-ரை. பண்புகள் குணப்பண்பும் தொழிற்பண்புமாகிய இரண் டனு ளடங்குமாயினும், இசைகுறிப்பு பண்பெனப் பலவேறுவகைப்படுத லின், பலவேறுவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அங் ஙனம் உணர்த்துழி ஒருசொல் ஒருகுணத்தை உணர்த்துவனவும் பலகுண த்தை உணர்த்துவனவுமாய் ஏனைப் பெயர்வினைகளை விட்டுநீங்காவாய், செய்யுட் குரியனவாய், பொருட்கு உரிமைபூண்டு வருவன உரிச்சொல் லாம். எ-று.

வி-பு. இவ்வாறு வருதல் மேற்காட்டும் உதாரணங்களுள் காண்க. இவையும் பண்புப்பெயராயினும் ஏனைப் பெயர்வினைகளைவிட்டு நீங்காமை யின் வேறோதப்பட்டன வென்பதூஉம், செய்யுட்குரியனவாய்ப் பொருட் குரிமை பூண்டனவாதலின் இவற்றிற்கு உரிச்சொல்லெனக் காரணக்குறி போந்ததென்பதூஉம், இவற்றின் இலக்கணங் கூறியமுகத்தான் உணர்த் தியவாறு காண்க.

இசை - ஓசை. குறிப்பு - மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு- பொறியாலுணரப்படுங் குணம். இவற்றையடக்கி நின்றகுணமும் தொழி லும் பொருளெனவும் படுமாதலின், இவற்றையுணர்த்தும் உரிச்சொல்லும் பெயர்ச்சொல்லெனப் படுமாதலின் **பல்வகைப்பண்பும் பகர்பெயராகி** என்றார்.

சசரு. உயிருயி ரல்லதாம் பொருட்குணம் பண்பே.

இது மேல் பண்பு என்றார் அஃது இஃதென உணர்த்துகின்றது.

ப-ரை. உயிர் - உயிராகிய பொருளும், உயிர் அல்லது - உயிரல்லாதபொருளும், ஆம் - ஆகிய, பொருள்-பொருள்களினுடைய, குணம் - குணங்கள், பண்பு - பண்புகளாகும். எ-று.

பொ-ரை. உயிராகிய பொருளும் உயிரல்லாத பொருளுமென இருவகையுள் அடங்கும் உலகத்துப்பொருள்களின் குணங்கள் பண்பாம்.

வி-பு. கடவுள்பொருளை யொழித்தார் அதற்கோர் குணமின்மையானும், உண்டேல் சுட்டப்பட்டு உலகப்பொருளா மாதலானு மென்க.

சசச. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளி - னொன்று முதலாக் கீழ்க் கொண்டுமே லுணர்தலி-னோரறி வாதியா வுயிரைந் தாகும்.

இது மேல் உயிராகிய பொருளென்றார் அவை இவையெனத் தொகுத்து உணர்த்துகின்றது.

ப-ரை. மெய் - மெய்யும், நா - நாவும், மூக்கு - நாசியும், நாட்டம் - கண்ணும், செவிகளின் - காதும் ஆகிய ஐம்பொறிகளாலும், ஒன்று முதலா - மெய்யாற்பரிசத்தையுணரும் உணர்ச்சியொன்று முதலாக, கீழ் கொண்டு—கீழ்ப்போனவுணர்ச்சியுங்கொண்டு, மேல்-இரதம் கந்தம் உருவம் சத்தம் எனமேல்வரும் புலன்களை, உணர்தலின் - ஒன்றொன்றாக வுணர்தலின், ஓரறிவு ஆதியா - ஓரறிவுயிர் முதலாக, ஐந்து ஆகும்-ஐந்துவகையாகும், உயிர்-அவ்வுயிர். எ-று.

பொ-ரை. இங்ஙனம் மெய்ம்முதலாகக் கூறிய ஐம்பொறிகளானும் பரிசம் இரதம் கந்தம் உருவம் சத்தமென்னும் ஐம்புலனையும் உணருங்கால் மெய்யாற் பரிசத்தை யுணரும் உணர்ச்சி ஒன்று முதலாகக் கீழ்ப்போன வுணர்ச்சியுங்கொண்டு மேல்வரும் புலன்களை ஒன்றோடொன்றாக வுணர்தலின் ஓரறிவுயிர் முதலாக ஐந்தாம் அவ்வுயிர். எ-று.

சசரு. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.

இது மேற்கூறிய உயிரைந்தனுள் ஓரறிவுயிர் இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. புல் - புல்லும், மரம் - மரமும், முதல - முதலியவை, உற்று அறியும் - மெய்யாற்பரிசித்துப் பரிசத்தையறிகிற, ஓரறிவு உயிர் - ஓரறி வுயிர்களாம். எ-று.

பொ-ரை. புல்லும் மரமும் முதலியன மெய்யாற்பரிசித்து பரிசத்தையறியும் ஓரறிவுயிர்களாம். எ-று,

சசசு. முரணந் தாதிநா வறிவோ டீ ரறிவுயிர்.

இது ஈரறிவுயிர் இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. முரண் - இப்பியும், நந்து - சங்கும், ஆதி-முதலியவை, நா அறிவொடு - கீழ்ப்போன மெய்யறிவேயன்றி நாவா லிரதத்தை யும் அறிகிற, ஈரறிவு உயிர் - ஈரறிவுயிர்களாம். எ-று.

பொ-ரை. இப்பியும் சங்கும் முதலியன கீழ்ப்போன மெய்யறிவே யன்றி நாவால் இரதத்தை யறியும் அறிவோடு ஈரறிவுயிர்களாம். எ-று.

சசஎ. சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.

இது மூவறிவுயிர் இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. சிதல் - கறையானும், எறும்பு - எறும்பும், ஆதி - முதலியவை, மூக்கு அறிவின் - கீழ்ப்போன இரண்டறிவுகளேயன்றி மூக் கீாற் கந்தத்தையும் அறிகிற அறிவோடு, மூவறிவு உயிர் - மூவறி வுயிர்களாம் எ-று.

பொ-ரை. கறையானும் எறும்பும் முதலியன கீழ்ப்போன இரண்டறி வுகளே யன்றி மூக்காற்கந்தத்தை யறியுமறிவினோடு மூவறி வுயிர்களாம்.

வி-பு. மேல் ஒடுவை ஈண்டும் வருவித்துக்கொள்க.

சசஅ. தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்.

இது நாலறிவுயிர் இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. தும்பி - தும்பியும், வண்டு - வண்டும், ஆதி - முதலிய வை, கண் அறிவின் - கீழ்ப்போன மூன்றறிவுகளேயன்றிக் கண் ணால் உருவத்தையும் அறிகிற அறிவோடு, நாலறிவு உயிர் - நாலறி வுயிர்களாம். எ-று.

பொ-ரை. தும்பியும் வண்டும் முதலியன கீழ்ப்போன மூன்றறிவே யன்றிக் கண்ணால் உருவத்தை அறியும் அறிவினோடு நாலறிவுயிர்களாம்.

சசகூ. வானவர் மக்க ணரகர் விலங்குபுள்-ளாதிசெவி யறிவோ டையறி வுயிரே.

இது ஐயறிவுயிர் இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. வானவர்-தேவரும், மக்கள் - மனிதரும், நரகர் - நரக ரும், விலங்கு - மிருகங்களும், புள் - பறவைகளும், ஆதி - முத லியவை, செவி அறிவோடு - கீழ்ப்போன நாலறிவுகளேயன்றிச் செவியாற் சத்தத்தையும் அறிகிற அறிவோடு, ஐயறிவு உயிர்-ஐயறி வுயிர்களாம். எ-று.

போ-ரை. வானவரும் மக்களும் நரகரும் விலங்கும் புள்ளும் முதலியன கீழ்ப்போன நாலறிவேயன்றிச் செவியால் சத்தத்தை யறியும் அறிவினோடு ஐயறிவுயிர்களாம். எ-று.

வி-பு. சித்துப்பொருள் சடப்பொருள் என்பாரும் உயிருயிரல்லதாம் பொருளெனக் கூறியவாறும், சித்தாகிய உயிரறிவு சடமாகிய உடலொடு கூடியவழியன்றி நிகழாமையானும், அந்நிகழ்ச்சிகண்டல்லது உயிருண்டென்பதூஉம், அதற்கோர் அறிவுண்டென்பதூஉம் தோன்றாமையானும், உயிரைப்பிரித்தோதாது உடலொடுகூட்டிப் புல்,மரம் முதலவென முறையேகூறியவாறும், அவ்வுயிரறிவு உடலோடுகூடி நிகழ்வழி ஐம்பொறியானும் ஐந்தாய் நிகழ்வதனை அறிவெனக் கூறியவாறும்,இவ் வைம்பொறியும் எல்லா உடற்கண்ணும் ஒருங்கு நில்லாது இங்ஙனங்கூறிய முறையே நின்று அறிவை நிகழ்த்தலின் உயிர்கள் பலவாயினும் அறியும்வகையான் உயர்ந்தெனக் கூறியவாறுங் காண்க.

ஆசிரியர் தொல்காப்பியர் "மக்கடாமே யாறறிவுயிரே." எனக் கூறியிருக்க, மக்கள் முதலியோரை ஐயறி வுயிரெனக்கூறல்மாறுகோளெக் கூறலாம் பிறவெனின்,மக்கள் முதலியோர் மனவறிவோடு ஆறறி வுயிரென்பது,நோக்கியன்றே முன்னர் "மக்க டேவர் நரக ருயர்திணை" எனக் கூறிப்போந்ததூஉ மாதலின், இங்ஙனம் ஐம்புலன்மாத்திரையே நுகரும் அறிவுடைய மக்கள் முதலியோரை விலங்கு முதலியவற்றோடு எண்ணி ஐயறிவுயிரெனக் கூறினரென உய்த்துணர்ந்துகொள்க.

சஉ௦. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த-வுடன்முத லனைத்து முயிரல் பொருளே.

இது உயிர் அல் பொருளாவன இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. உணர்வு இயல் ஆம் - அறிவுமயமாகிய, உயிர் ஒன்றும் ஒழித்த -உயிரொன்றுமே யன்றி, உடல் முதல் - உடம்புமுதலாகிய, அனைத்து உம் - உலகத்துப் பொருள்களெல்லாம், உயிர் அல் பொருள் - உயிரல்லாத பொருள்களாம். எ-று.

போ-ரை. அறிவுமயமாம் உயிரொன்றுமே யன்றி அவ் வுடம்புமுதலிய வுலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம். எ-று.

வி-பு. முன்னர் உயிர்மாத்திரையே கூறுவார் உடம்பொடு கூட்டிக் கூறினரன்றி உடம்பையும் உளப்படுத்தி உயிர்ப்பொருளென்றாரல்லரென்பது இதனானுணர்க.

சஉக. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும் - வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.

இது மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. ஒற்றுமை நயத்தின் - எவ்வுயிர் எவ்வுடம்பை யெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கிற ஒற்றுமை நயங்கருதியவழி; ஒன்று என - ஒன்றுபோல, தோன்றின் உம் - தோன்றுமாயினும், வேற்றுமை நயத்தின் - உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கிற வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி, உடல் உயிர்-அவ்வுடலும் உயிரும், வேறு - வேறாம். எ-று.

பொ-ரை. பசு உடம்பெடுத்தழி தன் கன்றினுக்கிரங்கி நன்கிழைத்த உயிர் அவ்வுடம்புநீங்கிப் புலியுடம்பெடுத்தழி இரங்காது அக்கன்றினுக்கே தீங்கிழைக்கு மாதலின், எவ்வுயிர் எவ்வுடம்பெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய்நிற்கும் ஒற்றுமை நயங்கருதியவழி ஒன்றுபோற் றோன்றுமாயினும் உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி, அவ்விரண்டும் தம்முள் வேறாமாதலின் உயிரோடு கூடிநிற்ற காலத்தும் அவ்வுடம்பினை உயிரல் பொருளென்றும். எ-று.

சஉ. அறிவரு ளாசை யச்ச மான - நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மைய-னினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி - துணி வழுக் காறன் பெளிமை யெய்த்த - றுன்ப மின்ப மிளமை மூப்பிகல் - வென்றி பொச்சாப் பூக்கமறமத - மறவி யினைய வுடல்கோ ளுயிர்க் குணம்.

இது உயிரின் குணமென்றார் அவை இவையென உணர்த்துகின்றது.

ப-ரை. அறிவு—மறவி-அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி என்கிற முப்பத்திரண்டும், இனைய - இவைபோல்வன பிறவும், உடல் கொள் - உடம்போடுகூடிய,உயிர் குணம் - உயிர்களினுடைய குணங்களாம். எ-று.

பொ-ரை. அறிவு முதலிய முப்பத்திரண்டும் இவைபோல்வன பிறவும் உடலோடுகூடிய உயிர்க்குணங்களாம். எ-று.

வி-பு. உடலோடு கூடாவழி உயிர்க்குணங்கள் தோன்றாவென்பார் உடல்கோ ளுயிர்க்குணம் என்றார். பின் வருவதும் அது.

சஉங. துய்த்த றுஞ்ச றெழுத லணித - லுய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்.

இது உயிரின் தொழிற்குணம் உணர்த்துகின்றது.

ப-ரை. துய்த்தல்—உய்த்தல் - துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் என்கிற ஐந்தும், ஆதி - இவைபோல்வன பிறவும், உடல் உயிர் - உடம்போடுகூடிய உயிரினுடைய, தொழில் குணம் - தொழிற்குணங்களாம். எ-று.

போ-ரை. ஐம்புலனையும் நுகர்தல் முதலிய இவ்வைந்தும் இவை போல்வன பிறவும் உடலோடுகூடிய உயிரின் தொழிற்குணங்களாம்.

சடுச. பல்வகை வடிவிரு நாற்ற மைவண்ண-மறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.

இது உயிரல்லாத பொருள்களின் குணம் உணர்த்துகின்றது.

ப-ரை. பல் வகை வடிவு - வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் இவை முதலாகிய பலவகை வடிவுகளும், இருநாற்றம்-நற்கந்தம் துர்க்கந்தம் என்கிற இருநாற்றங்களும், ஐ வண்ணம் - வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்கிற ஐந்து வண்ணங்களும், அறு சுவை - கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்கிற அறுசுவைகளும், ஊறு எட்டு - வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்ம்மை சீர்மை இழுமெனல் சருச்சரை என்கிற எட்டூறுகளும், உயிர் அல் பொருள் - உயிரல்லாத பொருள்களினுடைய, குணம் - குணங்களாம். எ-று.

போ-ரை. வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் முதலிய பலவகைவடிவும், நற்கந்தம் துர்க்கந்தம் என்னும் இருநாற்றமும், வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்னும் ஐந்துவண்ணமும், கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்னும் ஆறிரதமும், வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்ம்மை சீர்மை இழுமெனல் சருச்சரை என்னும் எட்டூறும் உயிரல்லாதபொருள்களின் குணங்களாம். எ-று.

சடுரு. தோன்றன் மீறைதல் வளர்தல் சுருங்க னீங்க லடைத னடுங்க லிசைத்த - லீத லின்னன விருபொருட் டொழிற்குணம்.

இது உயிரல்பொருட்கே யுரிய தொழிற்குணம் அருகிக்கிடத்தலின் அதனை யொழித்து அவ்விருபொருட்கும் பொதுவான தொழிற்குணம் உணர்த்துகின்றது.

ப-ரை. தோன்றல் — ஈதல் - தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்கிற ஒன்பதும், இன்னன - இவைபோல்வன பிறவும், இருபொருள் - உயிர்ப்பொருளும் உயிரல் பொருளும் ஆகிய இரண்டற்கும் பொதுவாகிய, தொழில் குணம் - தொழிற்குணங்களாம். எ-று.

போ-ரை. தோன்றல் முதலிய ஒன்பதும் இவைபோல்வன பிறவும், உயிர்ப்பொருள் உயிரல்பொருள் என்னும் இரண்டற்கும் பொதுவான தொழிற்குணங்களாம். எ-று.

[வ-று.] உயிர்தோன்றி மறைந்தது, உடல்தோன்றி மறைந்தது, நெருப்புத்தோன்றி மறைந்தது என் இத்தொடக்கத்தன வெல்லாம் இருபொருட்கும் பொதுவாகிய தொழிற்குணமாதல் காண்க.

சஙுசு. சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

இது பல்வகைப் பண்பென்றார், அவை இவையென இதுகாறும் உணர்த்தி அப் பண்புகளுள் ஒருகுணம் பலகுணம் தழுவிவருமென்னும் உரிச்சொற்கள் இவையென உணர்த்துவான்தொடங்கி அவற்றுள் ஒருகுணந் தழுவிய உரிச்சொலும் உணர்த்துகின்றது.

ப-ரை. சால—கழி - சால என்பது முதலாகிய இவ்வாறுரிச் சொற்களும், மிகல் - மிகுதியாகிய ஒருகுணத்தை யுணர்த்துகிற உரிச்சொற்களாம். எ-று.

போ-ரை. சால என்பது முதல் கழி என்பது ஈருகக்கூறிய ஆறுரிச் சொல்லும் மிகுதியாகிய ஒருகுணத்தையுணர்த்துஞ் சொற்களாம். எ-று.

[வ-று.] பருவந்து சாலப் பல்கொலென் றெண்ணி."

" உறுவளி துரக்கு முயர்சினை மாவின்."

" தவச்சேய் நாட்டா ராயினும்."

" நனி பேதையே நயனில் கூற்றம்."

" பொறைநில்லா நோய்கூர்ப் புல்லென் றிசினே."

" காமங் கழி கண்ணோட்டம்."—என முறையே காண்க.

இவற்றுள் சால என்பது சால் என்னும் உரிப்பெயரடியாகப் பிறந்த வினையெச்சக் குறிப்பு.

சாலப்பலவாம் என ஆம் என்னும் வினைப்பயனிலை தொக்கு நின்றது.

இப் பண்படிகளை நோக்கிப் "பல்வகைப் பண்பும் பலபெயராகி" என்றார். சால் எனப் பண்படியாகச் சூத்திரஞ் செய்யாது சால என வினையெச்சக் குறிப்பாகச் சூத்திரஞ்செய்தல் அவ் வுரிப்பெயரடியாக வினைவிகற்பங்களெல்லாம் பிறக்குமென்பது தோன்ற உடம்பொடுபுணர்த்தலா மென்க. அவையெல்லாம் வந்தவழிக்காண்க.

சஙுஎ. கடியென் கிளவி காப்பே கூர்மை - விரையே விளக்க மச்சஞ் சிறப்பே - விரைவே மிகுதி புதுமை யார்த்தல் - வரைவே மன்றல் கரிப்பி னெதம்.

இது பல்குணந்தழுவிய உரிச்சொல்லுள் ஒன்று உணர்த்துகின்றது.

ப-ரை. கடி என் கிளவி - கடியென்னும் உரிச்சொல், காப்பு - காவலும், கூர்மை-கூர்மையும், விரை-வாசனையும், விளக்கம்-விளக்கமும், அச்சம் - அச்சமும், சிறப்பு - சிறப்பும், விரைவு - விரைவும், மிகுதி - மிகுதியும், புதுமை-புதுமையும், ஆர்த்தல் - ஒலித்தலும், வரைவு - நீக்கலும், மன்றல்-மணமும், கரிப்பின் - கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும், ஆகும்-வரும். எ-று.

போ-ரை. கடி என்னும் உரிச்சொல் காப்புமுதலிய பதின்மூன்று குணத்தையும் உணர்த்தும். எ-று.

[வ-று.] "ஒண்சுடர் நல்லிருங் கடிநகர்" (எ-து) காப்பு.

"கடிநுனைப்பகழி" (எ-து) கூர்மை.

"கடிமாலைசூடி" (எ-து) நாற்றம்.

"கண்ணாடியன்ன கடிமார்பன்" (எ-து) விளக்கம்.

"கடியர மகளிர்க்கே கைவிளக்காகி" (எ-து) அச்சம்.

"கடிமாமிசைப்பூத்துக் கம்புளோ டன்னமார்க்கும்." (எ-து) சிறப்பு.

"எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்." (எ-து) விரைவு.

"கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்" (எ-து) மிகுதி. இது புதிதுண்கடவுள் என்றுமாம்.

"கடிமுரசு" (எ-து) ஆர்த்தல்.

‡ "கடித்துக் கரும்பினைக் கண்ட கரநூறி" (எ-து) வரைவு.

"கடிவினை முடிகினி" (எ-து) மன்றல்.

"கடிமிளகுதின்ற கல்லாமந்தி" (எ-து) கரிப்பு.

சுடுஅ. மாற்ற நுவற்சிசெப் புரைகரை நோடியிசை-கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பறை-பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.

இது (சொல் என்னும்) ஒரு குணந்தழுவிய உரிச்சொல்லுள் சில உணர்த்துகின்றது.

ப-ரை. மாற்றம் — இயம்பல் - மாற்றமுதலாகிய பதினாறும், சொல் - சொல்லென்னும் ஒரு குணத்தை யுணர்த்துகிற உரிச்சொற்களாம். எ-று.

---

‡ நாலடியார், செ. கருகூ.

[சாலவுறுதவ என்பதனைச் சாரவையாது ஈண்டுக்கூறினர், இவை ஒலிப்பண்பை யுணர்த்தி வினைப் பெயர்வினைகளை ஒருவாது நடத்தலின் அத்துணைச் சிறப்பினவன்றி ஒரோவழி யொருவியும் நடக்குமென்பது தோன்றற்கென்க.]

பொ-ரை. மாற்றம் முதல் இயம்பல் ஈருகக்கூறிய பதினறுஞ் சொல் என்னும் ஓர் குணத்தையுணர்த்தும் உரிச்சொற்களாம். எ-று.

[வ-று.] "கோவலர்வாய் மாற்ற முணர்ந்து" [மாற்றம்]

‡"இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல" [நுவற்சி]

‡‡ "தெருண்டா ரவை செப்ப லுற்றேன் [செப்பு]

† "உரைப்பாருரைப்பவை யெல்லாம்" [உரை]

* "அறங்கரைநாவி னான்மறை முற்றிய" [கரை]

"அஞ்சொற்பெரும்பணைத் தோளாயிழையாடா னேடியும்" [நொடி]

"நசையுநர்க்கடையா நன்பெருவாயி லிசையெனப்புக்கு" [இசை]

"உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை" [கூற்று]

"புகன்ற வன்றியும் பூமிசை வருமே" [புகறல்]

‡‡‡ "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ." [மொழி]

"கிளக்கும் பாணகேளினி" [கிளவி]

"மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்" [விளம்பு]

"அறிவனை தடிதொழு தறைதவனேண்ணே" [அறை]

"ஒருவன்செய்ந்நன்றி கொன்றோர்க் குய்தியில்லென வறம்பாடின்றே" [பாட்டு]

"வார்த்தை பகர்குற்றேன்" [பகர்ச்சி]

"இடிபோல வியம்பினனே." [இயம்பல்]—என முறையே காண்க.

சுடுகூ. முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை - யிரக்கழுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை - கனைசிலை சும்மை கவ்வை கம்பலை - யரவ மார்ப்போ டின்னன வோசை.

இது ஓசை யென்னும் ஒருபொருளை யுணர்த்தும் உரிச்சொற்கள் இவையென உணர்த்துகின்றது.

---

‡ திருமுருகாற்றுப்படை.   * தொல்காப்பியம், பாயிரம்.

‡‡ சிந்தாமணி, பதிகம், செ. க. ‡‡‡ குறுந்தொகை, செ. உ.

† திருக்குறள், செ. உகஉ.

ப-ரை. முழக்கு—போடு-முழக்குமுதலாகியஇருபத்திரண்டும், இன்னன - இவைபோல்வன பிறவும், ஓசை - ஓசையென்னும் ஒருபொருளையுணர்த்தும் உரிச்சொற்களாம். எ-று.

பேர்-ரை. முழக்கு முதலிய இருபத்திரண்டும் இவைபோல்வன பிறவும் ஓசையென்னும் ஒருகுணத்தையுணர்த்தும் உரிச்சொற்களாம். எ-று.

[வ-று.] "முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ" [முழக்கு]
"குடிஞை யிரட்டுங் கோடுயர் நெடுவரை." [இரட்டு]
"ஒல்லென வொலிக்கு மொலிபுன லூரற்கு." [ஒலி]
"கலிகெழு மூதூர்"—"பறையிசை யருவி" [இசை]
"தோறுவைத்தல்" [துவை] —"பிளிறுவார் முரசம்"
"இரைத்து மஞ்சிறைப் பறவைகள்." [இரை]
"இரங்கு முரசினம்" [இரக்கு]
"இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்" [அழுங்கு]
"காலைமுரச மதியம்ப" [இயம்பல்]
"இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கை."
"துளிறு முரசங் குணில் பாய"
"களிறு கலித்த திருங்கார்" [அதிர்] —"துரைபுனற்கன்னி"
"கனைகடற் சேர்ப்ப"
"சிலைத்தார் முரசங்கறங்க."
‡ "தள்ளாத சும்மைமிகு தக்கண நாடுநண்ணி"
"கவ்வைநீர்வேலி"
‡‡ "விளைக்கம்பலை மனைச்சிலம்பவும்"
"அறைகட லரவத்தானை" [அரவம்]
"ஆர்த்தபல் வியக்குழாம்"[ஆர்ப்பு] —என முறையே காண்க.

சகூ0. இன்ன திதனுழி யின்னண மியலு - மென்றிசை நூலுட் குணதணிப் பெயர்கள் - சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா - நல் லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

இது இவ்வியலுக்கு ஓர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. இன்னது பெயர்வினை யிடையுரிகளில் இன்னசொல், இன்ன உழி. — தன்மைமுன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச்

‡ சிந்தாமணி, பதிகம், செ. கரு. ‡‡ பட்டினப்பாலை.

செய்யுள்களினும் இவ்விடத்தே,இன்ன அணம்-இவ்விலக்கணமுள்ள தாய், இயலும்: என்று - நடக்குமென்று, இசை - சொல்லக்கடவ்தாகிய, நூலுள் - இந்நூலுள், குணம் குணி பெயர்கள்-குணப்பெயர்களையும் குணிப்பெயர்களையும், சொல்லாம் - வேண்டியமட்டுஞ் சொல்வதன்றி விரித்துச் சொல்லக்கடவ மல்லம், பரத்தலின் - விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம் வருமாதலின், நல்லோர் - அவற்றைக் கண்டறியவேண்டிய நல்லோர், பிங்கல முதலா - பிங்கலந்தை திவாகரமுதலிய நூல்களில், உரிச்சொல் இல் - உரிச்சொற் றொகுதியுள், நயந்தனர் கொளல் - விரும்பிக் கொள்க. எ-று.

போ-ரை. பெயர்வினை யிடையுரி யென்னும் நால்வகைச்சொல்லும் இன்னசொல் தன்மை முன்னிலை படர்க்கையென்னும் மூன்றிடத்தினும், வழக்குச் செய்யுளென்னும் இரண்டிடத்தினும், இவ்விடத்தில் இவ்விலக்கணத்ததாய் நடக்குமென்று சொல்லக்கடவதாகிய இந்நூலுள், அவ்விலக்கணங் காட்டுதற்கு வேண்டிய மாத்திரையே கூறுவதன்றி, உரிச்சொல்லாகிய குணப்பெயரையும் ஏனைக் குணப்பெயரையும் நிகண்டினுள் கூறினாற்போல விரித்துக்கூறக் கடவமல்லம்; விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம் வருமாதலின், அவற்றினைக் கண்டறியவேண்டினோர் இவ்விலக்கணமறிதற்கு முன்னரோ ஏனைப் புலவராற் கூறப்பட்ட பிங்கலந்தை திவாகரம் சூடாமணி முதலிய நூல்களுள் வருக்கும் உரிச்சொற் றொகுதியுள் விரும்பிக்கொள்க. எ-று.

வி-பு. இவ்விலக்கணம் அறிதற்கு முன்னரோ நிகண்டறிகவென்றும், அறியும்முறை அதுவாதலான். இவ்வியலுள் சால என்பது முதல் ஆர்ப்பு என்பதீறாக நாற்பத்தைந் துரிச்சொலெடுத்துச் சுருங்கச் சொல்லுதல் சொல்லியவுணர்த்தும் நூலுள் சொற்றொகுதிகளை விரிக்கின் மற்றொன்று விரித்தலாமென வுணரார் குன்றக்கூறலாம் என்பராதலின், அது பரிகரித்தற்கு இச்சூத்திரத்தாற் புறனடை கூறினர்.

இங்ஙனங் கூறவே பெயரியலுள் பெயர்த்தொகுதியினையும், வினையியலுள் வினைத்தொகுதியினையும், இடையியலுள் இடைத்தொகுதியினையும் விரியாது அவ்விலக்கணங்காட்டுதற்கு வேண்டிய மாத்திரையே கூறுதற்கும் இதுவே புறனடையாமென்க.

பெயரியல் என்பது பெயரிலக்கணம். பெயர்த்தொகுதி என்பது பெயர்க்கூட்டம். ஏனையவுமன்ன.

கூட்டம் எனினும் நிகண்டு எனினும் ஒக்கும். இலக்கணங் கூறு நூலுள் நிகண்டினையுமுடன்கூறாது அதனை வேறோர் நூலாக்கக் கூறுதல் தமிழுள்ளேயன்றி ஆரியமுதலியவற்றுள்ளுங் காண்க.

சசூக. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து - முற்ற மொழிதறின் முடிவில வாதலிற் - சொற்றவற் றியலான் மற்றைய பிறவும் - தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

இது இவ்வதிகாரத்திற்கு ஓர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. சொல்தொறும் - சொற்றோறும், இற்று - இத்தன்மைத்து, இதன் பெற்றி என்று - இதனிலக்கணமென்று, அனைத்தும் - முழுதும், முற்ற - நிறைவுற, மொழிகுஉறின் - சொல்லப்புகுந்தால், முடிவு இல - முடிவிலவாம், ஆதலின் - ஆதலால், சொற்ற அவற்று-எடுத்துச்சொல்லப்பட்ட சொற்களுடைய, இயலான்-இலக்கணங்களைக் கொண்டு, மற்றைய பிற உம் - சொல்லப்படாதவற்றின் இலக்கணங்களையும், தெற்றென உணர்தல் - ஒப்புமை கருதி இதுவும் அதுவென உணர்தல், தெள்ளியோர் - நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது, திறன் - கடனும். எ-று.

போ-ரை. சொற்றொறும் இத்தன்மைத்து இதனிலக்கணமென்று முற்ற மொழியப்புகின் வரம்பிலவாமாதலின், எடுத்துக்கூறிய சொற்களின் இலக்கணங்களைக்கொண்டு சொல்லாதனவற்றின் இலக்கணங்களையும் ஒப்புமைகருதி இதுவும் அதுவென முற்றவிளங்க வுணர்தல் நூலோதித்தெளிதற்குரிய மாணாக்கர் திறனும். எ-று.

வி-பு. இவற்றிற்குதாரணம் முன்னரோவந்துழி வந்துழிக் காட்டினும், ஆங்காங்குணர்க.

சசூஉ. பழையன கழிதலும் புதியன புகுதலும் - வழுவல கால வகையி னானே.

இது இந்நூலிற்கு ஓர் புறனடை உணர்த்துகின்றது.

ப-ரை. பழையன கழிதல் உம்-முற்காலத்துள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து இறத்தலும், புதியன புகுதல் உம் - முற்காலத்து இல்லன சில பிற்காலத்து இலக்கணமாதலும், வழு அல - குற்றமல்லவாம், கால வகையினான் - காலவேற்றுமை யதுவாகலால்.

போ-ள். முற்காலத்துள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து இறத்தலும், முற்காலத்தில்லன சில பிற்காலத்து இலக்கணமாய் வருதலும் குற்றமல்லவாம், காலவேற்றுமையதுவாகலான். எ-று.

வி-பு. இவற்றிற்கும் உதாரணம் முன்னர் வந்துழி வந்துழிக் காட்டி னும் ஆங்காங்குணர்க.

உரியியல் சூ. ௩௨.
முற்றிற்று.
இரண்டாவது - சொல்லதிகாரம் முற்றிற்று.

கட்டளைக் கலித்துறை.

இருதிணை மூவிட நான்மொழி யைம்பா லறுதொகையே
ழுருவமு மெட்டுரு பொன்பான் றொகாநிலை யாய்ந்தவெச்சீ
மொருபது கோளெட்டு முப்பொழு தீரிட மோரியல்பாய்
வருமொழி மூன்று முணரச்சொல் வண்மை வருந்திருவே.

நன்னூல் விருத்தியுரை
முற்றுப்பெற்றது.

பூவடு வண்டுறைப் பொழில்சுலாம் பொன்னிநாட்
டாவடு துறைச்சிவ ஞான வடிகள்
சேவடி பரவுதூஉஞ் சித்திபெறற் பொருட்டே.

நன்னூற் சூத்திர

முதற்குறிப் பகராதி.

குறிப்பு.	பக்கம்.
அ	
அஆஈற்ற ...	ஙகங
அஆஉஊ ...	எக
அஆஎஒவ் ...	எக
அஇஉம்முதற் ...	சஅ
அஐமுதலிடை ...	அ௦
அகமுனர் ...	கஅஉ
அசைநிலை ...	ஙங௦
அடிநாவ ...	ருரு
அடைசினை ...	ஙஙஎ
அடைமொழி ...	ஙஙசு
அண்ணநுனிநாநனி ...	ருசு
அண்ணநுனிநாவருட ...	ருசு
அண்பல்லடி ...	ருரு
அண்பன்முத ...	ருசு
அண்மையினி ...	உஙங
அதுமுன்வ ...	கசசு
அதுவே, இயற் ...	உஙஅ
அத்தினகர ...	உக௦
அந்திலாங் ...	சங௦
அம்மவுரை ...	சஙக
அம்மாமென் ...	ஙகசு
அம்முதலீரா ...	சஎ
அம்முனிகரம் ...	அஉ
அரிதிற்பெயக் ...	ங௦
அர்ஆர்பவ்வூ ...	ஙகக
அல்வழிஇஐ ...	கசக
அவ்வழியாமா ...	கஙஅ
அவற்றுண், முதலின ...	ஙஙக
அவற்றுண், முயற்சி ...	ருச
அவற்றுள், அஇஉஎ ...	சஅ
அவற்றுள், எழுவா ...	உசுங
அவற்றுள், ஏழாமு ...	க௦எ
அவற்றுள், ஒன்றே ...	உருரு
அவற்றுள், கிளையெ ...	உசசு
அவற்றுள், வினையின் ...	கஉ
அவைதாம், முற்றும் ...	ங௦எ
அவ்வழி, ஆவியிடை, ...	ருச
அவ்வினையாள ...	ஙரு
அழலினீங்கா ...	ஙரு
அளக்கல்லாகா ...	உஅ
அள்ளாளிறுமொ ...	ஙகக
அறம்பொருளி ...	கச
அறிவருளாசை ...	சஙஅ
அறிவறியாமை ...	ஙஅ௦
அன் ஆன் அள் ...	ஙஎ
அன்றி இன்றி ...	கஙங
அன்னமாவே ...	ஙஉ
அன்றுனிறு ...	ஙக௦
அன்றுனின்னல ...	உ௦ங
ஆ	
ஆஈஊஏ ...	சஅ
ஆக்கவினைக் ...	ஙஙரு
ஆக்கியோன் ...	ஙசு
ஆசானுரைத் ...	ஙரு
ஆண்பெண்பல ...	உஉச
ஆண்மைபெண்மை ...	உருச
ஆநின்றுகின்று ...	ஙங
ஆமாகோனவ் ...	உ௦எ
ஆமுன்பகர ...	கசஉ
ஆயிரமுகத்தா ...	ஙங
ஆய்தக்கிட ...	ருஎ
ஆவிஞணநம ...	எஉ
ஆவியரழ ...	கஉங
ஆவியுமொற் ...	சுங
ஆறனுருபு ...	உசுஅ
ஆறனொரு ...	உஎங
ஆற்றொழுக் ...	உக

குறிப்பு.	பக்கம்.
இ	
இசைவ்...	ருச
இ௬ஜவழி...	கஉச
இ௨ஊவோ...	உகூக
இசைகெடின்...	ருகூ
இடுகுறிகாரணப்...	சகூ
இடுகுறிகாரணமர...	உசச
இடைச்சொல்...	கரூச
இடைத்தொட...	கசஎ
இடைநிலை...	சக0
இடையினம்...	சகூ
இடையிஞன்...	க0ரு
இடையுரி...	ககூஎ
இணைந்தியல்...	க0கூ
இதற்கிதுசா...	உக0
இதற்கிதுமுடி...	உககூ
இம்முப்பெயர்...	உஅஎ
இயல்பினும்...	கஉகூ
இயல்பின்வி...	உகரு
இயல்பெழு...	கூகூ
இயற்கைப்...	ருகூஅ
இரட்டைக்கிள...	ருகூக
இரண்டாவத...	உஎஉ
இரண்டுமுதலா...	ருருரு
இரண்டுமூன்...	ககூக
இருதிணையாண்...	ருசக
இருவர்நூற்கு...	கரு
இர்ஈரீற்ற...	ரூஉக
இலக்கணமுடை...	உஉகூ
இலக்கியங்கண்...	ருஅ
இல்லெனினின்மை...	ககூஉ
இறப்பெதிர்...	ருஎஅ
இனைத்தென்...	ருகூரு
இன்னதின்னு...	சசரு
ஈ	
ஈதலியல்...	ருக
ஈதாகொடு...	ச0க
ஈமுங்,கம்மு...	கஅஉ
ஈறுபோத...	கூக
ஈற்றியா...	கஉஉ
உ	
உஊஒஓஔ...	ருரு
உஊஒஓவல...	எ0
உடன்மேலுயிர்...	ககூ௭
உணர்வியலா...	சகூஎ
உயர்திணைதொ...	ருஎக
உயர்திணைமி...	ருகூரு
உயிருமுடம்பு...	ச[illegible]
உயிருயிரல்...	சருரு
உயிர்மவிலா...	அகூ
உயிர்மெய்யா...	சரு
உயிர்மெய்யிர...	சரு
உயிர்வரினு...	[illegible]
உரத்தின்...	உகூ
உரிவரினுழி...	கச0
உருபின்முடி...	ககூகூ
உருபுப்லவடு...	ருசச
உருபுமுற்றீ...	ருசரு
உருபும்வினை...	ருசரு
உருவக்வுவமை...	ச0ரு
உவப்பினு...	ருஎச
உவமவுருபில...	ருருகூ
எ	
எகரவினைமுச்...	கஉகூ
எச்சப்பெயர்...	ருசகூ
எடுத்தல்...	ருஎ
எட்டனுடம்...	கருகூ
எட்டனுருபே...	உஅகூ
எண்ணலெடு...	ருகூக
எண்ணிறை...	கருரு
எண்பெயர்...	சரு
எண்மூவெழுத்...	ககஎ
எதிர்மறை...	சஉக
எப்பொரு...	ருஅரு
எயாமுதலு...	[illegible]கூ
எல்லாமென்ப...	உ0ச
எல்லாருமெ...	உ0ரு
எல்லையின்னு...	ரு00
எவனென்...	ருருஎ

குறிப்பு. பக்கம்.

எழுத்தியற்றிரி ௩௮௫
எழுத்தே ௮௪
எழுவகை... ... ... ௧௪
எழுவாயிரு ௪௧௦
என்றுமென. ௪௨௫

ஏ

ஏழனுருபு ௩௮௨
ஏற்குமெவ் ௨௯௫
ஏற்புழியெடுத் ௪௧௨
ஏற்றபொரு ௪௦௪

ஐ

ஐஔஇஉச் ௪௩
ஐகான்யவ்வ ௮௧
ஐந்தனொற் ௧௫௫
ஐந்தாவதனு ௨௭௮
ஐந்தொகை ௩௯௨
ஐயந்திணை ௩௯௬
ஐயந்திரப்... ... ... ௨௮
ஐயாயிகரவீற் ௩௧௬
ஐயான்குச்செம் ௨௧௬
ஐயிறுபொதுப் ௨௮௮
ஐயீற்றுடைக் ௧௫௦

ஒ

ஒடுவுந்தெய்ய ௪௩௦
ஒருகுறிகேட்போ... ... .. ௩௪
ஒருசார்னவ்வீ... ... ... ௨௮௮
ஒருநெறியின் ௨௦
ஒருபஃதாதி... ... ... ௧௫௬
ஒருபுணர்க்... ... ... ௧௧௯
ஒருபொருட்பல் ௩௧௬
ஒருபொருட்பன் ௩௧௨
ஒருபொருண் ௩௪௯
ஒருபொருள்குறித்த ௨௪௧
ஒருமையிற்ப... ... ... ௩௭௫
ஒருமொழிதொ... ... ... ௨௨௦
ஒருமொழிமூவ ௧௧௯
ஒருமொழிபொரு ௨௨௧
ஒருமொழியொழி... ... ௩௪௭
ஒருவனொன்பது... ... ... ௨௯௦

ஒருவனொருத்தியல் ௧௬௬
ஒருவனொருத்திப்பெ... ... ௨௯௦
ஒருவன்முதலே ௩௬
ஒழியிசைவினைச் ௪௧௬
ஒற்றுமை ௪௩௭
ஒற்றுயிர்... ... ... ௨௦௦
ஒன்பதொழித்த ௧௯௨
ஒன்பானொடு ௧௫௯
ஒன்றன்புள்ளி ௧௫௪
ஒன்றுமுதலீரை ௧௯௦
ஒன்றுமுதலெட்... ... ... ௨௦௮
ஒன்றேபலவெ... ... ... ௨௨௫
ஒன்றொழிபொது ௨௩௩

க

கஙவுஞ்சஞவும்... ... ... ௫௫
கசதபவொழித்த... ... ... ௭௪
கடியென்கிளவி ௪௪௦
கண்காற்கடை ௨௮௪
கயவொடுரவ் ௩௨௧
கருத்துப்பதப் ௨௫
களிமடிமானி... ... ... ௩௨

கா

காரணமுதலா ௩௩௩
காலங்கரந்த ௩௫௯
காலங்களனே ௩௯

கி

கிளந்தகிளை ௨௪௬
கிளைமுதலாகக் ௨௪௮

கீ

கீழின்முன்வன்மை ... ௧௮௫

கு

குடதுறுவென் ௩௧௫
குயினூன்வேற் ௧௭௭
குலனருடெய்வங் ௨௭
குறியதன்கீழா ௧௩௩
குறியதன்முன்ன ௫௮
குறிலணைவில்லா... ... ...௧௭௧
குறில்செறியா... ... ... ௩௮௭

குறிப்பு.	பக்கம்.
குறில்வழிலள்	௧௮௭
குற்றுயிரளபி	௭௨
குன்றக்கூறன்	௧௫
கே	
கேட்குஉபோ	௪0௨
கொ	
கொல்லேயைய	௪௨௯
கோ	
கோடன்மரபே	௩௩
ங	
ஙஞணநமன	௬௧
ஙம்முன்கவ்வாம்	௭௫
சா	
சாதிகுழூஉப்	௧௭௨
சாலவுறுதவ	௪௪0
சாவவென்மொழி	௧௩௬
சி	
சிதைவெறும்பாதி	௪௩௬
சில்வகையெழு	௨0
சிறப்பினுமின	௫0
சினைவினைசினை	௩௩௪
சு	
சுட்டியாவெகர	௭௧
சுட்டின்முன்	௨0௯
சுட்டுமறைநே	௩௮௧
சுட்டுவகரமூ	௧௩௪
சுருங்கச்சொல்	௧௬
சுவைப்புளி	௧௪௧
சூ	
சூத்திரத்துட்	௨௫
சே	
செந்தமிழாகி	௨௪0
செந்தமிழ்நிலஞ்	௨௪௨
செம்மைசிறுமை	௯௧
செயப்படுபொரு	௩௯௪
செய்கெனொரு	௩௧௮
செய்தசெய்கின்ற	௩௨௬
செய்துசெய்பு	௩௩0
செய்பவன்கரு	௩0௨
செய்யியவெ	௧௩௨
செய்யுமெனெச்ச	௩௨௩
செய்யுளிறுதி	௪௧௧
செய்யென்வினை	௯௫
செல்வெணீற்ற	௪௨௩
சொ	
சொற்றிரியினும்	௩௩௯
சொற்றொருமிற்	௪௪௫
ஞ	
ஞணநமலவளன	௧௬௮
ஞன்முன்றம்மினம்	௭௬
ட	
டறமுன்கசப	௭௬
ண	
ணனமுன்னின	௭௬
ணனமுன்னும்	௬௬
ணனவல்லின	௧௭0
த	
தடறவொற்றின்	௯௬
தத்தம்பகாப்	௬0
தமிழ்வ்வுறவும்	௧௮௪
தம்பாவில்ல	௪00
தம்பெயர்மொ	௭௯
தரல்வரல்	௩௭௭
தற்சுட்டளபொ	௬௫
தனிக்குறின்	௧௬௭
தன்மகனுசான்	௩௧
தன்மைமுன்னிலைப	௨௧௯
தன்மைமுன்னிலைவி	௩௧௪
தன்மையானுன்	௨௫௭
தன்னாசிரியன்	௩௮
தன்னென்னென	௧௭௧
தன்னெழி	௧௮
தா	
தாளமுயந்சி	௫0
தானேதரக்	௩0

குறிப்பு. பக்கம்.

தான்யாஞனி ௨௫௯
தான்தாம்நாமுதல் ௨௦௬

தி

திசையொடுதிசை ௧௫௧
திணைநிலஞ்சாதி ௩௮௭
திணைபால்பொ ௩௬௪
திணையேபாலிடம் ௩௬௯

து

துடியிவண்டாதி ௪௩௬
துய்த்தறுஞ்ச ௪௩௮
துறுடுக்குற்றி ௩௧௨

தெ

தெங்குநீண்டற் ௧௫௨
தெரிநிலைதேற்ற ௪௧௭
தெரிவரும்பெரு ௨௭
தெவ்வென்மொழி ௧௬௫

தே

தேன்மொழி ௧௭௫

தொ

தொகுத்தல்விரி ௩௭
தொக்குழிமயங்குந ௩௬௬
தொல்லைவடிவின ௬௭
தொழிலுங்கால் ௩௨௯

தோ

தோன்றறிரிதல் ௧௧௪
தோன்றன்மறை ௪௩௯
தோன்றுதோற்றி ௩௮

ந

நடவாமடிசீ ௯௩
நவ்விறுதொழிற் ௧௭௦

நா

நான்கன்மெய்யே ௧௫௫
நான்காவதற்குரு ௨௭௬

நி

நிறையுயிர்முயற் ௫௩
நின்றநெறியே ௭௩

நீ

நீயிர்நீவிர்நா ௨௬௯

நு

நுதலிப்புகுத ௧௬
நுந்தம், எம்நம் ௧௮௧
நுவ்வொடுவினு ௨௯௪

நூ

நூலினியல்பே ௧௦
நூலேநுவல்வோ ௫
நூல்பயிலியல்பே ௩௪
நூற்பொருள்வழக் ௧௯

நெ

நெடிலோடாய்த ௬௩
நெடிலேர்டுயிர்த் ௧௫௮
நெல்லுஞ்செல்லுங் ௬௩

நே

நேரினமணியை ௧௯

ப

பகரப்பதமேழும் ௮௭
பகுதிவிகுதியிடை ௮௯
பகுப்பாற்பயனற் ௮௭
பஞ்சிதன்சொல் ௨௬
படர்க்கைமுப் ௩௮௮
படர்க்கைவினைமுற் ... ௨௨௬
பண்பைவிளக்கு ௩௫௭
பதமுன்விகுதி ௨௦௧
பல்சிலவெனுமிவை ௧௩௬
பல்லோர்படர்க்கை ... ௩௩௬
பல்வகைத்தாதுவி ௨௩௨
பல்வகைப்பண்பும் ... ௪௩௪
பல்வகையுதவி ௩௦
பல்வகைவடிவிரு ௪௩௯
பவ்வமூவிடத்தைம் ... ௧௦௦
பவ்வீநீமீமுன்னரல் ௧௪௩
பழையனகழிதலும் ௪௫
பனைமுன்கொடி ௧௬௫
பன்னீருயிருங் ௭௦

பா

பாடங்கருத்தே ௨௩
பாயிரம்பொதுச் ௯
பால்பகாவஃறிணை ௨௫௨
பிண்டந்தொகை ௨௧

குறிப்பு. — பக்கம்.

பி

பிரிநிலைவினையே ௪௧௮

பு

புள்ளியுமிரு ௨௧௫
புள்ளிவிட்டவ் ௫௭
புள்ளும்வள்ளும் ௧௧௩
புன்மரமுதல்வற் ௪௩௫

பூ

பூப்பெயர்முன் ௧௬௩
பூமலியசோகின் ௪௨

பெ

பெண்மைவிட் ௨௨௫
பெயரும்வினையு ௪௦௮
பெயரோ ஐபால் ௨௬௭
பெயரொடுபெய ௩௫௪
பெயர்ச்செவ்வெ ௪௨௩
பெயர்வழித்தம் ௧௧௯
பெயர்வினையிடத் ௩௪௨
பெயர்வினையும் ௩௪௯
பெய்தமுறையன்றிப் ௨௯

பொ

பொதுப்பெயருயர் ௯௧௯
பொதுப்பெயர்வி ௩௪௮
பொதுவியல்பாறை ௩௦௮
பொதுவெழுத்தா ௨௪௩
பொருண்முதலாறு ௩௩௫
பொருண்முதலாறினு ௩௦௪
பொருண்முதலாறோ ௨௬௧
பொருளிடங்காலஞ் ௮௮

போ

போலப்புரைய ௩௬௦

ம

மகரவிறுதியஃறிணை ௮௦
மக்கடேவர்நரகரு ௨௨௩
மங்கலமாகியின்றி ௨௮
மம்முன்பயவ ௭௬
மரப்பெயர்முன்ன ௧௩௧
மரமல்லெகின் ௧௭௬
மலர்தலையுலகின் ௯
மவ்வீறொற்றழிந் ௧௮௦
மற்றையதென்பது ௪௨௯
மற்றையநோக்கா ... ... ௪௦…
மன்னுடைமன்ற ... ... ௩…
மன்னேயசைநிலை ... ... ௪௨…

மா

மாடக்குச்சித்திர ... ... ௩…
மாவென்கிளவி ... ... ௪௩…
மாற்றருவற்சி ... ... ௪௪…

மி

மியாயிகமோ ... ... ௪…
மின்பின்பன்கன் ... ... ௧௭…

மீ

மீசீழித்தழறப் ... ... ௫…
மீன்றவ்வொடு ... ... ௧௭…

மு

முகவுரைபதிக ... ... ௯…
முக்காலத்தினு ... ... ௩௭…
முக்காற்கேட் ... ... ௩…
முச்சகரமுற்று ... ... ௨௧௧…
முதலிருநான்கா ... ... ௧௫௮…
முதலிவைசினை ... ... ௨௯௫…
முதலையையுறிற் ... ... ௨௯௫…
முதல்வழிசார் ௧௧
முதற்பெயர்நான்கு ௨௫௩
முதநூல்கருத்த ... ... ௩௭…
முரணந்தாதிரா ௪௩௯
முழக்கிரட்டொலி ௪௪௨
முற்றொச்சமெழு ௩௬௮
முற்றும்மையொ ௪௨
முன்மொழியின் ௩௯
முன்னத்தினுணருங் ... ... ௪௦…
முன்னரவ்வொடு ... ... ௨௫…
முன்னிலைகூடிய ... ... ௩௧…
முன்னிலைமுன்ன ... ... ௩௨…
முன்னோர்நூலின் ... ... ௧…
முன்னோர்மொழி ... ... ௧…

மூ

மூன்றனுருப்ப ... ... ௧௫…
மூன்றுவதனுரு ... ... ௨௭…
மூன்றுறுபெண் ... ... ௧௪…
மூன்றுயிரளபிற ... ... ௯…

குறிப்பு. பக்கம்.

மே

மெய்களகரமு அ௨
மெய்ந்நாலுக்கு ... ...சகூரு
மெய்யுயிர்முதலீ க௧௦
மெல்லினங் ... ... சகூ
மென்றொடர் ... ... கசகூ

மே

மேற்பல்விதமுற ... ... ருசா

மொ

மொழிகுணமின் ... ... உகூ
மொழிமுதற் ... ... சரு
மொழியாய்த் ... ... அரு

ய

யகரம்வரக்குற ... ... சாஉ
யரழமுன்னர்க்கச ... ... கஅரு
யரழமுன்னர்மொ ... ... எஎ
யரழவொற்றின் ... ... எஅ

யா

யாகாபிறபிற ... ... சரூஉ
யாதனுருபிற் ... ...உகூஎ
யாப்படிபலவினுங் ... ... சகக
யாவொன்வினவினை ... ...ருருசா
…றுநீர்மொழி ... ... ச௦ரு

ர

ரவ்விற்கம்முதலா க௦அ
ரவ்வீற்றுயர் ... ... உகூக
ரழவல்லனதம்முற் ... ... எஎ

ல

லகாரவீற்றுயர் ... ... உகூஉ
லளமுன்கசபவய ... ... எஎ
லளமெய்திரிந்த ... ... எஅ
லளவிறுதொழிற் ... ... கஅகூ
லளவீற்றஃறிணை ... ... உகூரு
லளவீற்றியைபி ... ... சாஎ
ளளவேற்றுமை ... ... கஅசா

வ

வலித்தன்மெலி ... ... ககரு
வல்லினங்கசட ... ...சகூ
வல்லேதொழிற் ... ... சகூ௦
வல்லொற்றுவரி ... ... ருகூச
வவ்விறுசுட்டி உ௦அ
வன்றொடரல்லன ... கசகூ

வா

வாழியவென்பத ... ... கருரு
வானவர்மக்க ... ... சரூசா

வி

விகாரமனை ... ... ககச
விகுதிபதஞ்சா ... ...உகக
வினாவினுமிக ... ... ருசாகூ
விழைவேகால ... ... சஉஎ
விளம்பியபகுதி ... ... கூசா
வினைச்சுட்டுட ... ...உரு௦
வினவினுஞ்செப் ... ... கூஅஉ
வினைசார்பின ... ...ருஅச
வினைபெயர்கு சஉ௦
வினைமாற்ற ... ...சஉஅ
வினைமுற்றே ... ... ருருஅ
வினையின்பெ ... ...உருஅ
வினையொடுவரி ... ... சஉகூ

வே

வேறில்லையுண் ... ...கூஉச
வேறுவினைப்பல் ... ... ருஅச
வேற்றுமைமப் ... ... கஅக
வேற்றுமையா ... ... கூசாச
வேற்றுமையைம் ... ... ககக
வேற்றுமைவினைசா ... சகரு
வேற்றுமைவினைடன் ... ருருரு

ள

ளஃகானுயர் ... ... உகூ௦

ற

றவ்வொடுகர க௦௦
றனழஎஒவ் கக௦

ன

னஃகான்கிளை ... ... கஎரு
னலமுன்றனவும் ... ககூரு
னவ்வீற்றுயர் ... ... உகூஉ

நன்னூற் சூத்திர முதற்குறிப் பகராதி

முற்றிற்று.